Sri

Srīmatē Rāmānujāya namaha

Bagavat Vishayam

TIRUVĀYMOḺI

ĪṬṬIN TAMIḺĀKKAM

VOLUME - IX (Hymns 883 - 992)

by

VIDWAN

B. R. PURUSHOTHAMA NAIDU

Lecturer in Tamil

UNIVERSITY OF MADRAS.

UNIVERSITY OF MADRAS

1958.

T
1856

1856

MADRAS UNIVERSITY TAMIL DEPARTMENT

PUBLICATION No. 18 - 9.

General Editor :

DR. R. P. SETHU PILLAI, B.A., B.L., D. LITT.,

Professor of Tamil

UNIVERSITY OF MADRAS.

TIRUVĀYMOḺI

ĪṬṬIN TAMIḺĀKKAM

VOLUME - IX (Hymns 883 - 992.)

Printed at
RATHNAM PRESS,
Madras-1.

Sri

Srīmatē Rāmānujāya namaha

Bagavat Vishayam

TIRUVĀYMOḺI

ĪṬṬIN TAMIḺĀKKAM

VOLUME - IX (Hymns 883 - 992)

by

VIDWAN

B. R. PURUSHOTHAMA NAIDU

Lecturer in Tamil

UNIVERSITY OF MADRAS.

UNIVERSITY OF MADRAS

1958.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பகவத் விஷயம்

திருவாய்மொழி

பகுதி - 9. (ஒன்பதாம் பத்து)

ஈட்டின் தமிழாக்கம்

சென்னை
சருவகலாசாலைத் தமிழ் லெக்சரர்
வித்வான்
பு. ரா. புருஷோத்தம நாயடு
ஆக்கியது.

சென்னைச் சருவகலாசாலை

1958

ஸ்ரீ:

மாறன் மலரடி வாழ்க

இப் புத்தகத்தில் அடங்கியவை

—: (o) :—

1. முகவுரை ...
2. திருவாய்மொழி ஒன்பதாம்பத்தின் மூலமும் ஈட்டின் தமிழாக்கமும் ... 1 - 322
3. முதல் திருவாய்மொழி .... 1 - 34
4. இரண்டாந் திருவாய்மொழி ... 35 - 72
5. மூன்றாந் திருவாய்மொழி ... 73 - 100
6 நான்காந் திருவாய்மொழி ... 101 - 129
7. ஐந்தாந் திருவாய்மொழி ... 130 - 158
8 ஆறாந் திருவாய்மொழி ... 159 - 189
9. ஏழாந் திருவாய்மொழி ... 190 - 221
10. எட்டாந் திருவாய்மொழி ... 222 - 242
11. ஒன்பதாந் திருவாய்மொழி ... 243 - 292
12. பத்தாந் திருவாய்மொழி ... 293 - 322
13. பிற்சேர்க்கை I செய்யுள் முதற்குறிப்பகராதி .... 323 - 324
14. பிற்சேர்க்கை II ஐதிஹ்யங்கள் ... 325 - 327
15. பிற்சேர்க்கை III உரைநயங்கள் ... 327
16. பிற்சேர்க்கை IV உவமைகள் ... 328 - 332

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க.

முன்னுரை

தவம் செய்வதும் தழல்வேள்வி முடிப்பதும் தம்மை ஒறுத்து
எவன்செய்யும்; மெய்யன் குருகைப்பிரான் எம்மை இன்னம் ஒரு
பவம் செய்கை மாற்றிய பண்டிதன் வண்தமிழ்ப் பாவும் உண்டே
அவம் செய்கை மாற்றச் செவிஉண்டு நாஉண்டு அறிவும் உண்டே.

(கம்ப நாடர்)

பேராளன் பேரோதும் பெரியீர்!

முறையே, தமிழ் மறையாகிய திருவாய்மொழியின் ஒன்பதாம் பத்து 'ஈட்டின் தமிழ் ஆக்கம்' ஆழ்வார் திருவருளால் வெளிவருகின்றது. முன்னைய பத்துக்களை ஏற்று ஆதரித்த தமிழ் உலகம் இதனையும் ஏற்று அடியேற்கு ஊக்கம் அளிக்கும் என்பது அடியேன் துணிவு.

இவ் உரையை எழுதி வந்த காலத்தும் பதிப்பித்த காலத்தும் ஆங்காங்கு வேண்டிய உதவிகளைச் செய்து வந்த பெரியார்கட்கும் அன்பர்கட்கும் அடியேனது நன்றி உரித்தாகுக.

இந் நூலைச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் அச்சிடுதற்குக் காரணராய் இருந்த சொல்லின் செல்வர், தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். R. P. சேதுப்பிள்ளை B.A.,B.L., அவர்கட்கும், தொடர்ச்சியாக வெளியிட்டு உதவி வரும் சென்னைப் பல்கலைக்கழக அதிகாரிகட்கும் என்றென்றும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

குற்றம் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

இங்ஙனம்,

சென்னை,
13-3-1958

B. R. புருஷோத்தம நாயுடு.

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க.

—: (o) :—

திருவாய்மொழி

ஒன்பதாம் பத்து

முதல் திருவாய்மொழி— "கொண்டபெண்டிர்"

முன்னுரை

ஈடு:—முதற்பத்தால், பகவத் கைங்கரியம் புருஷார்த்தம் என்று அறுதியிட்டார்; இரண்டாம் பத்தால், அந்தக் கைங்கரியத்தில் களை அறுத்தார்; மூன்றும் பத்தால், களை அறுக்கப்பட்ட அந்தக் கைங்கரியமானது பாகவத சேஷத்வ பரியந்தமான பகவத் கைங்கரியம் என்றார்; நான்காம் பத்தால், இப்படிப்பட்ட கைங்கரியத்திற்கு விரோதிகள் ஐஸ்வரிய கைவல்யங்கள் என்றார்; ஐந்தாம் பத்தால், அந்த விரோதிகளைப் போக்குவானும் அவனே என்றார்; ஆறும் பத்தால், விரோதிகளை அழிக்கும் தன்மையனான சர்வேஸ்வரன் திருவடிகளிலே சரணம் புக்கார்; ஏழாம் பத்தால், இப்படிப் பெரிய பிராட்டியார் முன்னிலையாகச் சரணம் புக்க இடத்திலும் தக்தபட நியாயம் போலே சம்சாரம் தொடருகிற படியைக் கண்டு நோவு பட்டார்; எட்டாம் பத்தால், இப்படிப் பிரபந்நராய் இருக்கச்செய்தே தக்தபட நியாயம் போலே நம்மை விடாமல் தொடருகிறது, நம்முடைய ஆத்மாவிலும் ஆத்மாவோடு சம்பந்தப்பட்ட பொருள்களிலும் நசை அறுதபடியாலே என்று பார்த்து, அவற்றில் ஒரு நசை இல்லை என்றார்; 'இப்படி, நசை அற்ற பின்பும் பாதுகாவாமல் ஒழிவான் என்?' என்று ஐயங்கொள்ள, 'நான் நாராயணன், எல்லா ஆற்றலோடும் கூடினவன், உம்முடைய விருப்பங்கள் அனைத்தையும் செய்து முடிக்கிறோம்' என்று அருளிச்செய்ய, அவனுடைய சீலகுணத்தில் ஆழங்கால்படுகிறார் இந்த ஒன்பதாம் பத்தில்.

[1]"மேல் திருவாய்மொழியிலே, பாகவதர்களுக்கு அடிமைப் பட்டிருத்தலை எல்லையாகவுடைய, தனக்கு மேல் ஒன்று இல்லாததான பேற்றினை, யாதொரு தடையும் இல்லாதபடி அவன் காட்டிக் கொடுக்க, மிக்க பிரீதியோடே, காட்டிக் கொடுத்த அந்தப் பேர் உபகாரத்தைக் கூறிக்கொண்டு "சயமே அடிமை தலைநின்றார்" என்றும், "நீக்கம் இல்லா அடியார்" என்றும், "கோதில் அடியார்" என்றும் பாகவதரை விரும்பினாராய் நின்றார். [2] **ஆப்பான் திருவழுந்தூர் அரையர்**, தாம் ஆசிரியராக அடைந்ததும், திருவாய்மொழி கேட்டதும், ஆழ்வானோடே அன்றோ. "சயமே அடிமை தலைநின்றார்" என்றது, ஸ்ரீ பரதாழ்வான் போல்வாரை; "நீக்கம் இல்லா அடியார்" என்றது, இளையபெருமாள் போல்வாரை; "கோதில் அடியார்" என்றது, ஸ்ரீ சத்துருக்நாழ்வான் போல்வாரைக் காணும் என்று **ஆழ்வான்** பணித்தாராகப் பணிப்பர். [3]"இப்படிப்பட்ட பாகவதர்களுக்கு அடிமைப்பட்டிருத்தலாகிற பேற்றின் எல்லையை நமக்குத் தந்த சர்வேஸ்வரனே இயல்பாக உள்ள பந்து, அல்லாதார் அடங்கலும் ஒரு காரணம் பற்றி வந்த பந்துக்கள். அவனே இயல்பாகவே அமைந்த நல்எண்ணத்தையுடையவன், அல்லாதார் பக்கல் தோன்றுகிற நல் எண்ணம், ஒரு காரணத்தைப் பற்றித் தோன்றுகிற நல்எண்ணமாகும்; என்று [4]பிராப்பிய ஆபாசங்களைத் தவிர்த்து [5]அவனே

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இத் திருவாய்மொழிக்கும் இயைபு அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி மேல் திருவாய்மொழியிற் கூறிய பொருளை அநுவதிக்கிறார் 'மேல் திருவாய்மொழியிலே' என்று தொடங்கி. "சயமே அடிமை தலை நின்றார்", "நீக்கமில்லா அடியார்", "கோதில் அடியார்" என்பன, மேல் திருவாய்மொழியில் 2, 10, 9 ஆம் பாசுரங்கள்.

2. மேல் திருவாய்மொழியில் பத்தாம் பாசுரத்தில் சொன்ன பொருளை அநுவதித்து அதற்கு ஆப்த சம்வாதம் காட்டுகிறார் 'ஆப்பான் திருவழுந்தூர் அரையர்' என்று தொடங்கி. ஆழ்வான் - கூரத்தாழ்வான்.

3. இத் திருவாய்மொழியிற் கூறப்பட்ட பொருளைச் சுருங்க அருளிச்செய்கிறார் 'இப்படிப்பட்ட' என்று தொடங்கி.

4. மேலே 'அல்லாதார் அடங்கலும் ஒரு காரணம் பற்றி வந்த பந்துக்கள்' என்றதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'பிராப்பிய ஆபாசங்களைத் தவிர்த்து' என்று. பிராப்பிய ஆபாசங்கள்-அடையத்தக்க பொருளைப் போன்று தோன்றுகின்ற போலிப் பொருள்கள். பிராப்பியம் - அடையத்தக்கது; பேறு. ஆபாசம் - போலிப் பொருள்கள்.

5. 'சர்வேஸ்வரனே இயல்பாக உள்ள பந்து' என்றதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'அவனே பிராப்பியன்' என்று. பிராப்பியன் - அடையத்தக்கவன்.

பிராப்பியன் என்றும், [1]பிராபக ஆபாசங்களைக் கழித்து [2]அவனே பிராபகன் என்றும் அறுதியிட்டுப் பிறந்த லாபத்தால் உண்டான உவகையாலே மக்களைக் குறித்து, "நீங்கள் ஒரு காரணம் பற்றி வந்த பந்துக்களான மற்றையோரை விடுத்து, இயல்பாகவே உள்ள பந்துவான அவனையே பற்றி உஜ்ஜீவிக்கப் பாருங்கோள்" என்று பரோபதேசத்திலே மூளுகிறார்.

[3]"உலகங்களில் இருக்கிற எல்லா உயிர்கட்கும் திருமகள் கேள்வனே தந்தையும் தாயுமாக இருக்கிறார்; ஓ ஆடவர் ஏறே! காப்பவரான அவரையே உபாயமாகச் சென்று அடைமின்" என்பது பாரதம். [4]"அவ்யய: பிதா - மற்றையோர் தாய் தமப்பன் என்று பேராய் நாலு நாட்கள் இருந்து மணற்கொட்டகம் போலே கழிந்து போவார்கள்; அங்ஙன் அன்றிக்கே, அழியாதே என்றும் ஒக்கக் காப்பாற்றும் தமப்பன் அவனே ஆயிற்று. தனக்கு நலத்தைக் கூறிய விபீடணனை [5]"அரக்கர் குலத்திற்குக் குறையை விளைவித்த உன்னை விடுகிறேன்" என்று புறப்படவிட்டான் அன்றோ இராவணன்; அவன் தம்பியை ஒழியச் செல்லாது என்றார் அன்றோ பெரு

1. 'அல்லாதார் பக்கல் தோன்றுகிற நல் எண்ணம் ஒரு காரணத்தைப் பற்றித் தோன்றுகிற நல் எண்ணமாகும்' என்றதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'பிராபக ஆபாசங்களைக் கழித்து' என்று. பிராபகம் - பேற்றினை அடைதற்குரிய வழி.

2. மேலே 'இயல்பாகவே அமைந்த நல் எண்ணத்தை யுடையவன்' என்றதனால் போந்த பொருளை அருளிச்செய்கிறார் 'அவனே பிராபகன்' என்று. பிராபகன் - பேற்றினை அடைதற்குரிய வழியாக இருப்பவன்.

3. இறைவன் ஒருவனே இயல்பாகவே அமைந்த (காரணம் பற்றாத) பந்து என்பதற்கும், மற்றை எல்லாரும் ஒரு காரணம் பற்றி வந்த பந்துக்கள் என்பதற்கும் பிரமாணங்களும், அநுஷ்டானங்களும் காட்டுகிறார் 'உலகங்களில்' என்று தொடங்கி.

ஸர்வேஷாம் ஏவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ:
கச்சத்வம் ஏநம் ஶரணம் ஶரண்யம் புருஷர்ஷபா:

என்பது பாரதம்.

4. "பூதாநாம் ய: அவ்யய: பிதா"

என்பது, பாரதம் ஸஹஸ்ரநாம அத். 'அவ்யய: பிதா' என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'மற்றையோர்' என்று தொடங்கி.

5. அநயஸ்து ஏவம் விதம் ப்ரூயாத் வாக்யம் ஏதத் நிஶாசர
அஸ்மிந் முகூர்த்தே நபவேத் த்வாம் து திக் குலபாம்ஸநம்.

என்பது, ஸ்ரீராமா. யுத். 16: 15

மாள். பெற்ற தமப்பன் பகையாக அவனிலும் அண்ணியனாய் வந்து உதவினான் அன்றோ பிரஹ்லாதனுக்கு. மஹாராஜர் தமையனாலே நோவுபட, தனிமையிலே வந்து உதவினார் அன்றோ பெருமாள். மாதா பிதாக்கள் கைவிட்ட ஜயந்தனுக்கு, பிரஹ்மாஸ்திரத்தைத் தொடுத்தவர் தாமே அன்றோ புகல் ஆனார். [1]"அந்தக் காகாசுரன், தமப்பனாலும் முனிவர்களாலும் தேவர்களாலும் விடப்பட்டவனாய், மூன்று உலகங்களிலும் நன்றாகத் திரிந்து அந்தப் பெருமாளையே சரணமாக அடைந்தான்" என்கிறபடியே. ஸ: - நீரிலே புக்கு அழுந்துவாரைப்போலே தாரகர் ஆனவரே பாதகராய் அம்பு தொடுக்கும்படி சூழ்த்துக்கொடு நின்ற அவன். மற்றைய பதங்கட்கு முன்பு கூறியது போன்று கொள்க.

திரௌபதி, தர்மத்திலே தலை நின்றவர்களான கணவன்மார் ஐவரும் வெறுந்தறையைக் கீறிக்கொண்டு இருக்க, அவர்களை ஒழிய, சேயனான கிருஷ்ணனையே நினைக்க, "அவள் ஆபத்தை அடைந்தவளாய் நம்மை நினைக்க, நாம் உதவப் பெற்றிலோம்" என்று [2]"திரௌபதியானவள், தூரத்திலே இருக்கிற என்னைக் கோவிந்தா என்று அழைத்து அழுதாள் என்பது யாது ஒன்று உண்டோ, அது, வட்டிக்கு வட்டி ஏறின கடன் போன்று என் மனத்தினின்றும் நீங்கவில்லை" என்று புண்பட்டான் அவன் அன்றோ. [3]அருச்சுனன் "என் காரியங்களை என்னால் செய்து கோடல் அரிது" என்று சோகிக்க, "உன்னைத் தொற்றி வருவது

---

1. ஸ பித்ராச பரித்யக்த: ஸுரைஶ்ச ஸ மஹர்ஷிபி:
த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத:.

என்பது, ஸ்ரீராமா. சுந். 38 : 33. இந்தச் சுலோகத்திலே உள்ள 'ஸ:' என்பதற்கு மாத்திரம் பொருள் அருளிச்செய்கிறார் 'நீரிலே' என்று தொடங்கி. 'மற்றைய பதங்கட்கு முன்பு கூறியது போன்று கொள்க' என்றது, "பயிலும் சுடரொளி" என்ற திருவாய்மொழியில் "நம்பனை" என்ற பாசுரத்தின் வியாக்கியானத்திலே கூறி இருத்தலைப் போன்று கொள்க என்றபடி.

2. கோவிந்தேதி யத் ஆக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம்
ருணம் ப்ரவ்ருத்தம் இவ மே ஹ்ருதயாத் ந அபஸர்பதி.
என்பது, பாரதம், உத்யோகபர். 58 : 22.

3. மற்றையோர் இரக்ஷகர் அல்லர்; நாராயணனே இரக்ஷகன் என்றார் இதுகாறும். இனி, மற்றைய உபாயங்களும் உபாயம் அன்று, அவனே உபாயம் என்கிறார் 'அருச்சுனன்' என்று தொடங்கி. அவனே உபாயம் என்றது, இத் திருவாய்மொழியில் வருகிற "சிறற வேண்டா சிந்திப்பே அமையும்" என்ற திருப்பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி.

ஒன்று பேற்றுக்கு உடலாம் அன்றே அன்றோ, உனக்குச் சோகிக்க வேண்டுவது? உன்னுடைய எல்லாப் பாரங்களையும் நம் தலையிலே போகட்டு, நாமே கடவோம் என்று இரு; உன்னுடைய பகைக் கூட்டத்தை எல்லாம் நாமே போக்கித் தருகிறோம்" என்றான் அன்றோ.

இப்படிகளாலே, "அவனே நிருபாதிக பந்து; அவனையே பற்றப் பாருங்கோள்" என்று தாம் அறுதியிட்ட அர்த்தத்தைத் தம்மைப் பற்றினார்க்குத் தஞ்சமாக உபதேசித்தருளுவதாகப் பரோபதேசத்திலே மூளுகிறார்.

883.

கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் சுற்றத்தவர் பிறரும்
கண்டதோடு பட்டது அல்லால் காதல் மற்று யாதும் இல்லை
எண்திசையும் கீழும் மேலும் முற்றவும் உண்ட பிரான்
தொண்டரோமாய் உய்யல் அல்லால் இல்லை கண்டீர்
[துணையே.

பொழிப்புரை :— மணம் செய்துகொள்ளப்பட்ட பெண்களும் மக்களும் உறவினர்களும் தாயாதிகளும் நட்பினர்களும் ஆகிய அனைவரும், கையில் பொருள் உண்டாகக் கண்டபோது அன்புள்ளவர்களாகக் காணப்படுவார்கள்; அது இல்லாதபோது அன்புள்ளவர்களாக இருப்பது இல்லை; ஆதலால், பத்துத் திசைகளிலும் உள்ள எல்லாப் பொருள்களையும் பிரளயகாலத்தில் உண்டு காப்பாற்றிய உபகாரகனாகிய எம்பெருமானுக்கு அடியாராகி உஜ்ஜீவியுங்கோள்; இன்றேல், பொருந்திய துணை வேறு ஒன்றும் இல்லை என்கிறார்.

விசேடக்குறிப்பு :— கொண்ட - மனத்திலே அன்புள்ளவர்களாகக் கொள்ளப்பட்ட என்றலுமாம். எண்திசையும் கீழும் மேலும் - பத்துத் திசைகள்.

இத் திருவாய்மொழி, அறுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஈடு :—முதற்பாட்டு. [1] ஒரு காரணம் பற்றி வந்த மனைவி புத்திரர்கள் முதலானவர்களால் ஒரு பிரயோஜனம் இல்லை; இயல்பாகவே பந்துவாய் இராநின்ற சர்வேஸ்வரனே ஆபத்

1. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

துக்குத் துணைவன்; அவனையே பற்றி உஜ்ஜீவியுங்கோள்; வேறு துணை இல்லை என்கிறார்.

கொண்ட பெண்டிர் - [1]தான் தன் மனத்திலே உறவாக நினைத்திருக்கும் மனைவி. அன்றிக்கே, ஒரு காரணம் இல்லாமல் வந்தவள் அன்றிக்கே, பொருள் முதலான காரணங்களால் கொள்ளப்பட்ட மனைவி என்னுதல். அன்றிக்கே, தாய் தந்தையர்களைச் செங்கற்சீரை கட்ட விட்டு, தான் ஈட்டிய செல்வம் முழுதினையும் கொடுக்கும்படி தஞ்சமாக நெஞ்சிலே கொண்ட மனைவி என்னுதல். அன்றிக்கே, ஆசாரியனும், பரம்பொருளும், செல்வமும் முதலானவைகள் எல்லாம் இவளே ஆகக் கொண்ட பெண்டிர் என்னுதல்; என்றது, இவள் இருப்பதனால் அல்லவா எல்லாம் என்று இருக்கையைத் தெரிவித்தபடி. இனி, 'கொண்ட' என்பதனை 'மக்கள்' முதலாயினார்க்கும் கூட்டிப் பொருள் கோடலுமாம். பந்துக்களாகத் தான் நினைத்திருக்கும் மக்கள் முதலாயினார் என்றபடி. மக்கள் - அப்படிப்பட்ட அவளுடைய இளமையை அழிய மாறிப் பெறும் பிள்ளைகள். உற்றார் - தனக்கும் ஒத்தவர்கள் என்று ஆதரித்த சம்பந்திகள். சுற்றத்தவர் - அவர்கள் மதிக்கும்படியான தாயாதிகள். பிறரும் - மற்றையோரும்: [2]முன்பு சொன்னவர்களுக்கும், இவர்களைக் காட்டிலும் வாசி பெரிது இன்று என்றபடி. அன்றிக்கே, பிறரும் - நட்பினர் பணியாட்கள் முதலாயினர் என்றுமாம்.

கண்டதோடு பட்டது அல்லால் - இவனைக் கண்டபோது சிநேகிக்குமது ஒழிய என்னுதல்; கையிலே பொருள் கண்டபோது அதனை நோக்கிச் சிநேகிக்குமது ஒழிய என்னுதல். காதல் மற்று யாதும் இல்லை - பிரயோஜனம் கண்டபோது உடன்படுமது ஒழிய, வேறு வகையில் சிறிதும் சிநேகமுடையர் அல்லர் என்னுதல்; [3]காணாதபோது மெய்யான அன்பு சிறி

1. "கொண்ட பெண்டிர்" என்பதற்கு நான்கு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'தான் தன்' என்று தொடங்கி. செங்கல் சீரை கட்ட விட்டு - பிச்சை எடுக்கும்படி விட்டு என்றபடி. செங்கல் சீரை - காஷாய வஸ்திரம்.

2. "பிறரும்" என்று மற்றையோரையும் எடுப்பான் என்? என்னும் வினாவிற்கு விடையாக 'முன்பு சொன்னவர்களுக்கும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

3. 'மற்றுக் காதல் யாதும் இல்லை' என்று பிரித்துக் கூட்டிப் பொருள் அருளிச்செய்கிறார் 'காணாதபோது' என்று தொடங்கி. மற்று-காணாத போது.

தும் இல்லை என்னுதல். 'மற்று' என்பது, காணாத போதினைக் காட்டுமோ? எனின், கண்டதற்கு மறுதலை, காணாதபோது அன்றே. காதல் மற்று - அன்பும், அதற்கு மறுதலையான வெறுப்பும் இல்லை என்னுதல். அன்பும், அதற்கு அடியான உறவும் இல்லை என்னுதல். எண்திசையும் கீழும் மேலும் முற்றவும் உண்ட பிரான்-பத்துத் திக்குகளிலும் உண்டான எல்லா ஆத்மாக்களையும் [1]பிரிகதிர்ப்படாமே திருவயிற்றிலே வைத்துக் காப்பாற்றிய உபகாரத்தையுடையவன். [2]இவற்றின் பக்கல் ஒன்றும் இல்லாத அன்று ரக்ஷிக்குமவன். [3]பிரளயம் தோன்றிய நிலையில் காப்பதற்குச் சாதனமும் இல்லை, வேண்டுகோளும் இல்லை அன்றே: [4]பாதுகாப்பதற்குத் தான் அறிந்த ஆபத்தும் சம்பந்தமும் அன்றே வேண்டுவது. [5] அப்போது விலக்குகைக்கு ஒரு சாதனம் இல்லையே. பிரான் - உபகார சீலன் ஆனவன்.

தொண்டரோமாய் உய்யல் அல்லால் - [6] அவனுக்கு நம்மதாய் இருப்பது ஒன்று கொடுக்க வேண்டுவது இல்லை, அடியோமாய்ப் பிழைத்துப் போமது ஒழிய. [7]அடிமை சொரூபமான பின்பு அதனை இழக்கையாவது, அழிதலே அன்றே. விதி முகத்தால் அன்றிக்கே, மறை முகத்தாலும் இவ் அர்த்தத்தை அறுதியிடுகிறார் மேல்: இல்லை கண்டீர் துணையே -

---

1. "முற்றவும்" என்ற சொல்லின் பொருள் 'பிரிகதிர்ப்படாமே' என்பது. பிரிகதிர்ப்படாமே - தப்பாமே.

2. "முற்றவும் உண்டபிரான்" என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'இவற்றின்' என்று தொடங்கி.

3. அப்போது ஒன்றும் இல்லையோ? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'பிரளயம்' என்று தொடங்கி. சாதனம் - பக்தி. வேண்டுகோள் - பிரபத்தி.

4. ஒன்றும் இல்லாவிட்டால் காக்கும்படி என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பாதுகாப்பதற்கு' என்று தொடங்கி.

5. சம்பந்தம் நித்தியமாக இருக்கப் பிறவிப் பெருங்கடலில் நின்றும் பாதுகாவாது இருப்பான் என்? என்னும் வினாவிற்கு விடையாக 'அப்போது' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். அப்ரதிஷேதம் காணாமையாலே காத்திலன் என்றபடி. அப்போது - பிரளயம் கொண்ட நிலையில்.

6. அவன் உபகாரசீலன் ஆனால், நாமும் சில பச்சை இடவேண்டுமோ? என்னும் வினாவிற்கு விடையாக 'அவனுக்கு' என்று தொடங்கி அருளிச் செய்கிறார்.

7. "தொண்டரோமாய் உய்யல் அல்லால்" என்கிறது என்? சேஷத்வ ஞானம் இல்லாதபோது உய்வு பெறுதல் இல்லையோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அடிமை' என்று தொடங்கி.

ஆபத்திற்கு வேறு ஒரு பற்றுக்கோடு உண்டாய் இருக்க, இவனைப் பற்றச் சொல்லுகிறேன் அல்லேன்; அவனைப் பற்றிச் சொரூபம் பெறுதல், இல்லையாகில் இல்லையாமித்தனை. (1)

884.

துணையும் சார்வும் ஆகுவார் போல் சுற்றத்தவர் பிறரும்
அணைய வந்த ஆக்கம் உண்டேல் அட்டைகள் போல்
[சுவைப்பர்
கணை ஒன்றாலே ஏழ் மரமும் எய்த எம் கார் முகிலைப்
புணை என்று உய்யப் போகல் அல்லால் இல்லை கண்டீர் பொருளே.

பொ - ரை :—தாயாதிகளும் மற்றையோரும் துணையாயும் சார்வாயும் இருப்பவர்கள் போலக் காட்டி, சேர்ந்திருக்கின்ற செல்வம் இருக்குமேயானால் அட்டைகளைப் போன்று ஈரம் அறச் சுவைத்துவிடுவார்கள்; ஒரு பாணத்தினால் மராமரங்கள் ஏழனையும் தொளைசெய்த காளமேகம் போன்ற எம்பெருமானைத் தஞ்சமாகப் பற்றி உஜ்ஜீவித்துப் போமின்; அவ்வாறு இன்றி வேறு சிலரைப் பற்றினால் ஒரு பயனும் இல்லை என்கிறார்.

வி - கு :—சுற்றத்தவர் பிறரும் ஆகுவார்போல் ஆக்கம் உண்டேல் அட்டைகள் போல் சுவைப்பர்; ஆதலால்,எம் கார்முகிலைப் புணை என்று உய்யப் போகல் அல்லால் பொருள் இல்லை என்க. பொருள் - பயன்.

ஈடு :—இரண்டாம் பாட்டு. [1] உபகாரகரைப் போலே இருந்து தம் தம் காரியங்களையே தலைக்கட்ட நினைக்கும் நம்பத் தகாதவர்களை ஒழிய, காரணம் இல்லாமலே இயல்பாகவே நம்பிக்கையை விளைக்குமவனாய் ஆபத்திற்குத் துணைவன் ஆனவனைப் பற்றுமின்; அங்ஙனம் பற்றுமது அன்றிப் பயன் இல்லை என்கிறார்.

துணையும் சார்வும் - [2] துணையாகையாவது, [3] "துக்கமும் சுகமும் நம் இருவர்க்கும் ஒன்றே" என்கிறபடியே, இன்ப

1. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. துணைக்கும் சார்வுக்கும் வேற்றுமை அருளிச்செய்கிறார் 'துணை யாகையாவது' என்று தொடங்கி.

3. "த்வம் வயஸ்யஃ அஸி ஹ்ருத்யஃ மேஹி ஏகம் துக்கம் ஸுகம் ச நௌ
ஸுக்ரீவஃ ராகவம் வாக்யம் இதி உவாச ப்ரஹ்ருஷ்டவத்"
என்பது. ஸ்ரீராமா. கிஷ். 5 : 35.

துன்பங்களை ஒக்க அநுபவித்தல். சார்வுஆகையாவது, போக்கடி அற்ற நிலையில், தாங்களே புகலிடமாதல். [1] பாண்டவர்களுடைய வனவாசத்தில் தனிமையிலே முகங்காட்டியும், திரௌபதியை மீட்டுக்கொண்டு போகிறபோது [2]"கிருஷ்ணன் பலராமருடன் அந்தக் குயவனுடைய தொழிற்சாலைக்குச் சென்றான்" என்கிறபடியே, பாண்டவர்கள் தங்கின பணிக்கொட்டிலிலே சென்று முகங்காட்டிக் கூடக் கிடந்து கதறியும் துணையாயும், பகதத்தன் விட்ட வேலை அருச்சுனனைத் தள்ளித் தன் மார்பிலே ஏற்றுப் புகலாயும் போந்த கிருஷ்ணனைப் போலே இருக்கை. ஆகுவார் போல் - தாங்கள் உறவினர்கள் அல்லாதாரைப் போன்று கடக்க நிற்பதும் செய்யாதே "இரக்ஷகர்" என்று மயங்கும்படி சேர்ந்திருப்பார்கள். சுற்றத்தவர் பிறரும் - தாயாதிகளும் மற்றும் உள்ளாரும். அணைய வந்த ஆக்கம் உண்டேல் - கைக்கு எட்டின செல்வம் உண்டாகில். என்றது, இவன் பக்கலிலே தங்களுக்குப் பிரயோஜனம் உண்டாம் என்று தோற்றி இருக்கில் என்னுதல். அன்றிக்கே, தங்கள் பக்கல் ஒரு பிரயோஜனம் இவனுக்கு உண்டு என்று தோற்றி இருக்குமாகில் என்னுதல் என்றபடி.

அட்டைகள் போல் சுவைப்பர் - இரத்தத்தை அடியோடு வாங்காநிற்கச் செய்தே, இவனுக்கு நன்மை செய்தனவாய் அன்றோ இவை இருப்பன; அப்படியே, உபகாரம் கொண்டாராய்க் கொள்ளாதே, நன்மை செய்கிறார்களாய்க் கொண்டு பிழைப்பர்கள். என்றது, "உன்னிடத்தில் செல்வம் கிடக்கில் வாங்கிக் கொள்வர்கள், அவற்றை என்மேலே ஏறிட்டு வை" என்று அவனுக்கு நன்மை செய்கிறார்களாய் ஆயிற்றுப் பேசுவது என்றபடி.

கணை ஒன்றாலே........கார் முகிலை - [3] "ஒரு சிறந்த வில்லினால் ஏழு மராமரங்களையும் அருகில் இருந்த மலையையும்

1. துணையும் சார்வும் ஆகை சர்வேஶ்வரனுக்கே உள்ளது என்று திருவுள்ளம்பற்றி, அப்படித் துணையும் சார்வுமாகக் கண்ட இடம் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பாண்டவர்களுடைய' என்று தொடங்கி.

2. வ்ருஷ்ணி ப்ரவீரஸ்து குருப்ரவீராந் ஆஶங்கமாநஃ ஸஹரௌஹிணேயஃ
ஜகாம தாம் பார்க்கவ கர்மஶாலாம் யத்ர ஆஸதே-தே புருஷப்ரவீராஃ.
என்பது, பாரதம் சம்பவபர்வம்.

3. பிபேத ச புநஃ ஸாலாந் ஸப்த ஏகேந மஹேஷுணா
கிரிம் ரஸாதலம் சைவ ஜநயந் ப்ரத்யயம் ததா.
என்பது, ஸ்ரீராமா. பா. 1 : 66.

பாதாளத்தையும் பிளந்தார்" என்கிறபடியே, கைக்கு எட்டிற்று ஓர் அம்பாலே, மஹாராஜர் தனியருமாய், வெறுவியருமாய், தமையன் பகையுமாய், மனித சஞ்சாரம் இல்லாத தனிக் காட்டிலே இருக்க, பெருமாளையும் இளையபெருமாளையும் தூரத்திலே கண்டு "வாலி வரவிட்டவர்கள்" என்று அஞ்சி ஓடித் திருவடியை வரவிட்டு அறிவித்த பின்பு, "நாம் உம்முடைய காரியம் செய்ய வல்லோம்" என்று மழுவேந்திக் கொடுத்தும் அவர் காரியம் செய்தார் அன்றோ. ஏழ் மரமும் எய்த -[1] ஒன்று இரண்டாலே மகாராஜருடைய ஐயத்தைத் தீர்க்கலாய் இருக்க, ஏழு மராமரத்தையும் எய்த. எம் கார் முகிலை -'எம்' என்று அடியார்களையும் சேர்த்துச் சொல்லுகிறார். அன்றிக்கே, தனித்தன்மைப் பன்மையாய், மஹாராஜர்க்குச் செய்தது தமக்குச் செய்ததாக நினைத்திருக்கிறபடியாலே யாதல். பரம உதாரன் ஆதலின் 'கார் முகில்' என்கிறார். அவன்படி இதுவாகில் நாம் அவனுக்குச் செய்ய வேண்டுவது என்? என்னில், புணை என்று உய்யப் போகல் அல்லால்-[2] இடவேண்டுவது ஒரு பச்சை இல்லை; ஒரு வார்த்தை மாத்திரம் அமையும். "என் காரியம் உனக்கே பொறுப்பு" என்ற ஒரு வார்த்தையே அவனுக்கு நேர வேண்டுவது. இல்லை கண்டீர் பொருளே - புறம்பு ஒருவரைப் பற்றினால் ஒரு பிரயோஜனமும் இல்லை. என்றது, புறம்பே சிலரைப் பற்றுகையிலே துக்கப்படச் சிலர் உண்டத்தனை; பயன் தரத் தக்கது ஒன்று இல்லை என்றபடி. (2)

885.

பொருள் கை உண்டாய்ச் செல்லக் காணில்
போற்றி என்று ஏற்று எழுவர்
இருள்கொள் துன்பத்து இன்மை காணில்
என்னே! என்பாரும் இல்லை
மருள்கொள் செய்கை அசுரர் மங்க
வட மதுரைப் பிறந்தாற்கு
அருள்கொள் ஆளாய் உய்யல் அல்லால்
இல்லை கண்டீர் அரணே.

---

1. "ஏழ் மரமும்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'ஒன்று' என்று தொடங்கி.

2. "என்று" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இடவேண்டுவது' என்று தொடங்கி. பச்சை - காணிக்கை; அல்லது, கைம்மாறு.

பொ - ரை:—கையிலே பொருள் இருப்பதைக் கண்டால் வணக்கம் என்று கூறி, யாதாயினும் ஒன்றனைப் பெற்றுக்கொண்டு அகன்று போவர்; அறிவின்மையையும் துன்பத்தையும் உண்டாக்குகின்ற வறுமையைக் கண்டால் அந்தோ! என்று இரங்குவாரும் இல்லை; ஆதலால், கண்டவர் அனைவரும் கலங்கும்படியான தொழில்களைச் செய்கின்ற அசுரர்கள் அழியும்படியாக வட மதுரையிலே அவதரித்த ஸ்ரீகண்ண பிரானுக்கு, அருளைப் பெறுதற்குரிய அடியவர்களாகி உஜ்ஜீவித்தலே நலம்; அங்ஙனம் இன்றேல், பாதுகாவல் வேறு இல்லை என்கிறார்.

வி - கு:—உண்டாய்ச் செல்ல: ஒரு சொல். இருக்க என்பது பொருள். போற்றி என்பதனை, இகரவீற்று வியங்கோள் என்பர் நச்சினார்க்கினியர். அரண் இல்லை கண்டீர் என்று மாற்றுக.

ஈடு:—மூன்றாம் பாட்டு. [1] அவனை ஒழிந்தவர்கள், பயன் உள்ளபோது பந்துக்களாய்க் கொண்டாடுவார்கள்; ஆபத்து வந்தகாலத்தில் ஏன் என்றுகூடப் பார்க்கமாட்டார்கள்; ஆனபின்பு, காரணம் இல்லாமலே ஆபத்துக்குத் துணைவனாக இருக்கிற ஸ்ரீ கிருஷ்ணனுடைய திருஅருளுக்குப் பாத்திரமாகுங்கோள்; அவனை ஒழியக் காப்பவர் வேறு இலர் என்கிறார்.

பொருள் கை உண்டாய்ச்செல்லக் காணில் - [2] இவன் தான் சிலவற்றை அவிழ்ப்பது முடிவது சேமிப்பதாகப் போரா நிற்குமன்றே. பொருளானது கையிலே உண்டாய்ப் போரக் காணில். போற்றி என்று - [3] பிறருடைய நலத்தையே விரும்புகின்றவர்களைப் போன்று வார்த்தை சொல்லுவர். என்றது, உனக்கு இன்னமும் கிழிச்சீரை பெருகவேண்டும் என்பர்கள் என்றபடி. [4] 'நம்முடைய நலத்தையே தனக்குப் பிரயோஜனமாகக் கொண்டிருப்பான் ஒருவன் உண்டாவதே!' என்று குளிரநோக்குவானே! இனி, இவன் நமக்குக் கண்ணறமாட்

1. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. காண்கைக்குக் காரணம் யாது? என்ன, 'இவன்தான்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. "போற்றி" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'பிறருடைய' என்று தொடங்கி. 'குரவர்க்குக் காப்புக்களைக் குறித்துப் போற்றி என்றல் மரபு' என்பது அடியார்க்கு நல்லார் உரை.

4. "ஏற்று எழுவர்" என்பதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'நம்முடைய' என்று தொடங்கி. கண்ணறமாட்டான் - அருள் அற்றவன் ஆகமாட்டான். கண் - கிருபை.

டான் என்று அறிந்தவாறே, ஏற்று எழுவர்-இடல் ஆகாதோ போக என்று ஏற்றுக் கொண்டு எழுந்திருப்பார்கள். இருள் கொள் துன்பத்து இன்மை காணில்-அறிவின்மையை விளைப் பதாய், துக்கத்திற்குக் காரணமாய் இருக்கிற வறுமையைக் காணில். என்னே என்பாரும் இல்லை - ஐயோ என்பாரும் இல்லை. [1] **பிள்ளை திருநறையூர் அரையர்**, "ஒருவனுக்கு இட்டு ஒருவன் வெறுவியன் ஆவது; அவனாலே பொருளைப் பெற்ற வன் இவனை 'என்' என்னுதல், இவனுடைய வீட்டிலே வந்து ஒரு நாள் கால் கழுவிப் போதல் செய்ய, அவ்வளவாலே, 'இன்னான் இன்னானுக்கு உறவினன் ஆவன் அன்றோ?'என்று இவ்வளவு கொண்டு ஜீவிக்க இருந்தால், அவ்வளவும் செய் வார் இலர்" என்று பணிப்பர்.

மருள் கொள் செய்கை அசுரர் மங்க வட மதுரைப் பிறந் தாற்கு-பொருள் கை உண்டாய்ச் செல்லக் காணாத அன்றும் அடியார்களுடைய ஆபத்தைப் போக்குகைக்காக, கருமங் கட்குக் கட்டுப்படாதவனான தான் வந்து அவதரித்து உதவு வான் ஒருவன் உளன் என்கிறார்: மக்கள் மனத்திலே இருள் குடி புகுரும்படியான செயல்களையுடைய அசுரக்கூட்டம் முடி யும்படி, ஒருவர் விரும்பாதிருக்கவும் தானே வந்து அவதரித் துக் காப்பாற்றுமவனுக்கு. அவனுக்கு நாம் செய்யவேண்டு வது என்? என்னில், அருள்கொள் ஆளாய் உய்யல் அல்லால்- திருவருளைப் பெறுதற்குப் பாத்திரமான அடியவர்களாய்க் கொண்டு உஜ்ஜீவிக்கில் அல்லது; அவன் செய்யும் அருளை விலக்காது ஒழியுமத்தனையே வேண்டுவது; [2] தன் அருள் கொள்வாரை 'உதாரர்' என்னுமவன் அன்றோ அவன். [3] இவன் பக்கல் இதற்கு மேற்படக் கொள்ளலாவது இல்லை; [4] அவனுக்கும் இதற்குமேல் செய்யவேண்டுவது இல்லை; எல்லாம்

---

1. "என்னே" என்பதற்கு, என்? என்பாரும் இலர் என்று வேறும் ஒரு பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, அதற்குச் சம்வாதம் காட்டு கிறார் 'பிள்ளை திருநறையூர் அரையர்' என்று தொடங்கி.

2. விலக்காது இருந்தால் அவர்களை உயர்வாக நினைத்திருப்பானோ இறைவன்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தன் அருள்' என்று தொடங்கி. "உதாரா:" என்பது, ஸ்ரீ கீதை. 7: 18.

3. விலக்காத மாத்திரத்தில் இவனை "உதாரன்" என்னக் கூடுமோ? என்ன, 'இவன் பக்கல்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. அவன் அப்படி இருந்தாலும் அவன் பெருமைக்குத் தகுதியாக ஏதாவது இவன் இடவேண்டாவோ? என்ன, 'அவனுக்கும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

நிறைந்தவன் ஆகையாலே; [1]சம்பந்தமோ இயல்பாகவே அமைந்ததாக இருந்தது; இவன் புகுர நின்ற இடம் உண்டாகில், தன்பேருக நினைத்திருக்குமவனுய் இருந்தான்; இனி, விலக்காமை அன்றே வேண்டுவது.

இல்லை கண்டீர் அரணே - பாதுகாவலாவது [2] இது ஒன்றுமே; அல்லாதன எல்லாம் கேட்டோடே தலைக்கட்டுமத்தனை. சிறு குழந்தை [3] 'குன்றிச்சூடு' என்று நெருப்பிலே கைவைக்குமாறு போலே இருப்பது ஒன்றே அன்றே, புறம்பு இவன் பாதுகாவலாக நினைத்திருக்கும் இவை. [4]"செல்வம்உள்ளவனைச் செல்வத்தில் விருப்பத்தாலே விருப்பத்தோடு எங்ஙனம் புகழ்கிறுனே அங்ஙனமே உலகத்தைப் படைத்தவனைப் புகழ்ந்தால் எவன் பிறவிக்கட்டில் நின்றும் விடுபடமாட்டான்" என்கிறபடியே, செல்வத்தின்மேல் உள்ள ஆசையாலே செல்வம் உள்ளவனைத் துதித்துப் போந்த வாசனையாலே மிக உயர்வாகத் துதியாநிற்கும். இப்படித் துதிக்கிறது உதாரனையோ? என்னில், 'தநவந்தம்' - ஓர் பற்றையை என்றபடி; அவன் பக்கல் நெகிழ்ச்சி இல்லை. ஆகில், அவனைத் துதிக்கும்படி தூண்டியவர்கள் யார்? என்னில், 'தந இச்சயா' - செல்வத்தின் மேல் உள்ள ஆசையே. எல்லாவற்றையுமுடையவனுய், இவன் அளவு அன்றிக்கே இருக்கிற அவன் பக்கலிலே இந்த ஆசையைச் செலுத்தினுல், பிறர் கீழே இருந்து துதிக்கவேண்டும்படி இவனை வையான். (3)

---

1. ஒன்றும் இல்லாத இவன் பக்கலிலே, இவன் விலக்காமை மாத்திரம் கொண்டு திருவருள்புரிதற்குக்காரணத்தை அருளிச்செய்கிறுர் 'சம்பந்தமோ' என்று தொடங்கி.

2. இது - அருள் கொள் ஆள் ஆகை.

3. குன்றிச் சூடு - குன்று மணியின் உச்சி.

4. விலக்காமை மாத்திரம் கொண்டு அவன் காப்பாற்றுவான் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறுர் 'செல்வமுள்ளவனை' என்று தொடங்கி.

> ஆதரேண யதாஸ்தௌதி தநவந்தம் தந இச்சயா
> ததாசேத் விஶ்வகர்த்தாரம் கோ ந முச்யேத பந்தநாத்.

என்பது பிரமாணம். இச் சுலோகத்திலே உள்ள "ஆதரேண" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறுர் 'செல்வத்தின்' என்று தொடங்கி. சுலோகத்தின் பின் அடிக்குக் கருத்து அருளிச்செய்கிறுர் 'எல்லாவற்றையும்' என்று தொடங்கி. 'இவன் அளவன்றிக்கே இருக்கிற அவன் பக்கலிலே' என்றது, மனத்திலே நெகிழ்ச்சியுடையவனுக இருக்கிற இறைவன் பக்கலிலே என்றபடி. 'இவன்' என்றது, "தனவந்தம்" என்றதனுல் குறிக்கப்பட்டவனை.

886.

அரணம் ஆவர் அற்ற காலைக்கு
என்று என்று அமைக்கப்பட்டார்
இரணம் கொண்ட தெப்பர் ஆவர்
இன்றிஇட்டாலும் அஃதே
வருணித்து என்னே ! வட மதுரைப்
பிறந்தவன் வண் புகழே
சரண் என்று உய்யப் போகல் அல்லால்
இல்லை கண்டீர் சதிரே.

பொ - ரை :—செல்வம் நீங்கி வறியர் ஆகுங்காலத்தில் நமக்குப் புகல் ஆவர் என்று நினைத்து, (செல்வம் உள்ள காலத்திலே) செல்வம் முதலியவைகளாலே வசப்படுத்திக் கொள்ளப்பட்டவர்கள், கடனைத் திரும்பப் பெற்றவர்கள் போன்று ஓர் உதவியும் செய்யமாட்டாத அல்பர் ஆவார்கள் ; நம்மால் செல்வம் முதலியன கொடுக்கப்படாவிட்டாலும் உதவி செய்யமாட்டாத அந்த அல்பரே ஆவர் ; ஆதலால், நன்றி கெட்டவர்களைப் பற்றிப் பேசுவதால் பயன் யாது ? வட மதுரையின் கண்ணே வந்து அவதரித்த கண்ணபிரானுடைய சீரிய கல்யாண குணங்களே நமக்குத் தஞ்சம் என்று நினைத்தும் கூறியும் உய்ந்து போமின் ; அங்ஙனம் போமது ஒழிய வேறு சதிர் இல்லை.

வி - கு :—அற்ற காலைக்கு அரணம் ஆவர் என்று மாற்றுக. இரணம் - ருணம் - கடன். தெப்பர் - தப்ரர் என்றதன் திரிபு ; அல்பர் என்றபடி. இன்றி இட்டாலும் : ஒருசொல். சதிர் - பயன்.

ஈடு :—நாலாம் பாட்டு. [1] சிலரை ஆபத்திற்குத் துணை ஆவர் என்று செல்வம் முதலியவற்றைக் கொடுத்துப் பலநாள் அடைந்தாலும், ஆபத்து வந்தவாறே கண்ணற்றுப் பராமுகம் செய்வார்கள் ; ஆதலால், ஒருவித காரணமும் இல்லாமலே வந்து அவதரித்து ஆபத்திற்குத் துணை ஆனவனே பற்றத் தக்கவன் என்கிறார்.

அற்ற காலைக்கு அரணம் ஆவர் என்று என்று அமைக்கப் பட்டார்-கைம் முதல் அற்ற காலைக்குக் காப்பாற்றுவான் ஒருவன் வேண்டும் என்று பல காலும் நினைந்து, தனக்கு [2] இயற்றிஉள்ள காலத்திலே பச்சை இட்டு அவர்களை அடைந்து,

1. பின் மூன்று அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. இயற்றி - ஆற்றல், தகுதி, உயர்வு.

தனக்கு ஆபத்துக் காலத்தில் உதவுமவர்களாகச் சமைத்து வைக்கப்பட்டவர்கள். இப்படிச் செல்வம் முதலியவைகளாலே வசீகரிக்கப்பட்டவர்கள் ஆபத்துக்காலத்தில் உதவும்படி என்? என்னில், இரணம் கொண்ட தெப்பர் ஆவர் - [1] இவன் இட்ட பச்சையை இவன் ஒன்று செய்தானாக நினைத்திருக்கை அன்றியே, தங்களுக்குக் கிடைக்க வேண்டியதை வாங்கினாராய், [2] இவனுக்கு இயற்றி இன்மையால் பச்சை இடாத நாள்களிலும் 'நமக்கு இட்டிலன்' என்று வெறுத்து, இப்படிக் கொடுத்ததை வாங்கினாரைப் போன்று புல்லியராம் படியை உடையர் ஆவர். தெப்பர் - தப்ரர்; சப்ரர் என்றபடி. இன்றியிட்டாலும் அஃதே-[3]பச்சை இட்டுப் பற்றுவிட்டாலும் ஆபத்து வந்தால் கைவிடுவாரைக் கிடைக்கும். [4] ஆபத்து வந்தால் கைவிடுவார்க்குப் பச்சை இட்டு அவர்களைப் பற்ற வேண்டர்வே. அன்றிக்கே, இப்படியே இப் பச்சை இட்டவன், 'நம்மைப் பாதுகாக்குமவன்' என்று உபசரியாநிற்கச்செய்தே, நடுவே, அவன் இறப்பது; அப்போதும் [5] மேலே கூறிய அதுவே பலிதமாமித்தனை என்னுதல்.

வருணித்து என்னே - உபகாரம் செய்தவர்களுக்கு அபகாரம் செய்வார் படியை நினைந்து வெறுத்து, '**வருணித்து என்னே**' என்கிறார். [6] இளையபெருமாள் கைகேயியின் தன்மையை நினைந்து, [7] "தன் காரியத்திலே நோக்குள்ளவளும் எப்

---

1. இரணம் கொண்ட விதத்தை விளக்குகிறார் 'இவன் இட்ட' என்று தொடங்கி.

2. "தெப்பர் ஆவர்" என்றதனை விளக்குகிறார் 'இவனுக்கு' என்று தொடங்கி.

3. "இன்றி இட்டாலும்" என்பதற்கு, பச்சை இடாவிட்டாலும், அல்லது முடிந்துவிட்டாலும் என்று இருவகையாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'பச்சை இட்டுப் பற்றுவிட்டாலும்' என்று தொடங்கியும், 'அன்றிக்கே' என்று தொடங்கியும். "அஃதே" என்றது, இரணம் கொண்ட தெப்பராவர் என்ற அதுவே என்றபடி.

4. இது சொல்லுவதற்குப் பயன் யாது? என்ன, 'ஆபத்து வந்தால்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. "அஃதே" என்ற சொல்லின் விவரணம் 'மேலே கூறிய அதுவே பலிதமாமித்தனை' என்பது.

6. இப்படி வெறுத்த பேர் உண்டோ? என்ன, 'இளையபெருமாள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

7. ஆத்மகாமா ஸதாசண்டீ க்ரோதநா ப்ராஜ்ஞ மாநிநீ
அரோகாசாபி மே மாதா கைகேயீ கிம் உவாச ச.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 71 : 10.

போதும் கொடிய தன்மையுடையவளும் கோபமுள்ளவளும் தனக்கு எல்லாம் தெரியும் என்று எண்ணிக்கொண்டிருப்பவளுமான என் தாயான கைகேயி!" என்று ஸ்ரீபரதாழ்வான் சொன்னாற்போலே சிலவற்றைச் சொல்ல, வாராய் பிள்ளாய்! நீதான் இவை எல்லாம் சொல்லுகிறது நடுவில் ஆய்ச்சியையே; [1]"அப்பா! உன்னுடைய நடுத்தாயாரான கைகேயியானவள் எவ்விதத்திலும் நிந்திக்கத் தக்கவள் அல்லள்" என்கிறபடியே, ஒரு படியாலும் நீ அவளை இவ் வார்த்தை சொல்லக் கடவை அல்லை. "தாமேவ - வேண்டுமாகில் கைகண்ட மருந்தைச் செய்யப் பாராய். இக்ஷ்வாகு நாதஸ்ய பரதஸ்ய - ஐயரோ பொகட்டு முடிந்து போனார்; நாம் பொகட்டுப் போந்த இராச்சியத்தை இக் குடியின் மரியாதை குலையாத படியாக நோக்கிக் கொண்டு கிடந்த பிள்ளை பரதன் அன்றோ இக்குடிக்கு நாதன். பரதஸ்ய கதாம் குரு - நாக்கிலே நீர் வரும்படியான வார்த்தை சொல்லப் பாராய்" என்றார் பெருமாள்.

[2] ஆக, உபகாரம் செய்தவர்கள் விஷயத்திலே அபகாரமாக நினைத்திருப்பார் தன்மையை நினைந்து, பயன் இல்லாத இந்தக் கதையைக் கிடந்து வர்ணிக்கிற இத்தால் பயன் என்? பச்சை இட்டு அமையாத அன்றும் விரும்புகிற காலத்திலே வந்து உதவுவான் ஒருவன் உண்டு; அவனைப் பற்றிப் பிழைத்துப் போகப் பாருங்கோள்! என்கிறார் மேல்: வட மதுரைப் பிறந்தவன் வண் புகழே சரண் என்று உய்யப்போகல் அல்லால் - ஒருவர் விரும்பாதிருக்கச் செய்தே, இவற்றைப் பாதுகாத்தற் பொருட்டுத் தானே வந்து ஸ்ரீ மதுரையிலே அவதரித்தவனுடைய, ஒரு வித காரணமும் இல்லாமலே உபகாரமாய் இருக்கின்ற சௌசீல்யம், சௌலப்யம் முதலான கல்யாண குணங்களே நமக்குப் புகலிடம் என்று பிழைத்துப் போதல் ஒழிய. இல்லை கண்டீர் சதிரே - [3]நெற்றி பெருத்துப் பயன் ஒன்றும் இன்றிக்கே இருக்கும் என்னுமது இளிம்பு

---

1. ந தேம்பா மத்ய மாதாத கர்ஹிதவ்யா கதஞ்சந
தாமேவ இக்ஷ்வாகு நாதஸ்ய பரதஸ்ய கதாம் குரு.
என்பது, ஸ்ரீராமா. ஆரண். 16: 37.

2. "வருணித்து என்னே" என்றதற்கு, மேலே கூறிய பொருளை அநுவதித்துக் கொண்டு, மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'ஆக' என்று தொடங்கியும், 'பட்சையிட்டு அமையாத' என்று தொடங்கியும்.

3. நெற்றி - பிரயாசை, முயற்சி.

அன்றோ ; நெற்றி சிறிதாய்ப் பயன் கனக்கப் பெறுமது அன்றோ சதிராவது. [1] இங்கு, நெற்றி - ‘நமః’ என்றல்; பயன் - ‘சமன் கொள் வீடு’ அன்றோ. (4)

887.

சதுரம் என்று தம்மைத் தாமே
சம்மதித்து இன்மொழியார்
மதுர போகம் துற்றவரே வைகி
மற்று ஒன்று உறுவர்
அதிர்கொள் செய்கை அசுரர் மங்க
வட மதுரைப் பிறந்தாற்கு
எதிர்கொள் ஆளாய் உய்யல் அல்லால்
இல்லை கண்டீர் இன்பமே.

பொ - ரை :—சதிரை உடையோம் என்று தங்களைத் தாங்களே இசைந்து, இனிய வார்த்தைகளைப் பேசுகின்ற மகளிரிடத்தில் இனிய இன்பங்களை அநுபவித்தவர்களே, அவ் இனிய போகம் அவர்களை விட்டுக் கழிய, (நீங்க என்றபடி) வேறு ஒரு துன்பத்தை அடைவார்கள் ; ஆதலால், கண்டார் அஞ்சத்தக்க காரியங்களையே செய்கின்ற அசுரர் அழியும்படி வடமதுரையிலே அவதரித்தவனான கண்ணபிரானுக்கு, எதிர்கொள்ளுகின்ற அடியவர்களாகிப் பிழைத்துப்போமதுவே இன்பமாவது, அதனை ஒழிய வேறு இன்பம் இல்லை என்றவாறு.

வி - கு :—சம்மதித்துத் துற்றவர் எனக் கூட்டுக. துற்றவர் - அநுபவித்தவர். வைகி உறுவர் என்க. வைகி - வைக ; செயவென் எச்சத் திரிபு. வைகுதல் - கழிதல்.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [2] தங்களைப் பெறுவிடில் தரிக்க மாட்டாதபடி சிநேகத்தை உடையவர்களான பெண்களாலே, ஆபத்து வந்த காலத்தில் இகழப்படுவர் ; ஆனபின்பு ஒரே தன்மையான சிநேகத்தையுடைய இறைவனைப் பற்றுவது ஒழியச் சுகம் வேறு இல்லை என்கிறார்.

---

1. நன்று ; பகவத் விஷயத்தில் முயற்சி சிறியதாய், பலன் கனத்ததாய் இருக்குமோ ? என்ன, ‘இங்கு’ என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார். நமః - நான் எனக்கு உரியவன் அல்லன்.

2. பின் மூன்று அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

சதுரம் என்று - சதிராக வாழாநின்றோம் என்று. தம்மைத் தாமே சம்மதித்து - தங்களைத் தாங்களே இசைந்து. [1]'நாம் சதிரர், நாம் சதிரர்' என்றாயிற்று எல்லாரும் ஒக்கத் தங்கள் தங்களை நினைத்திருப்பது. [2]சிறிது இயற்றியை உடையனாய் இருக்குமவன், ஒருவனைப் பார்த்து "அங்கே நம்மைச் 'சதிரன்' என்று நினைப்பிட்டுக் கொடு வா: நாம் அதிலே மேலெழுத்து இட்டுத் தர" என்னும்; அவைக்குப் பொருத்தம் இல்லாத இச் செயலுக்குத் துணை செய்வார் கிடையாரே; தானே அன்றோ இருக்கின்றான். இன்மொழியார் - இனிய பேச்சையுடையவர்களாய் இருந்துள்ளவர்களுடைய. அகவாய் மயிர்க்கத்தியாய் இருக்கச்செய்தேயும் அன்பு கலந்த இனிய வார்த்தைகளாலே வசீகரிக்க வல்லவர்கள் ஆதலின் 'இன்மொழியார்' என்கிறார்.

மதுர போகம் துற்றவர் - இனிய இன்பத்தை அவர்களுடனே நெருங்க அநுபவித்தவர்கள். வைகி மற்று ஒன்று உறுவர் - [3]இன்பத்தை அநுபவிப்பதற்குத் தகுதியான யௌவனமும், அதற்குக் கைம்முதலான செல்வமும் போமே; பின்னையும் ஆசை மாறாதே; அவ் அவ் இடங்களில் போய் இருக்கும்; வருவார்க்கும் விரோதியாய். முற்பட, மனிச்சிலே நாலிரண்டு பண்ணை 'போகலாகாதோ' என்பர்களே; 'போகிறோம், போகிறோம்' என்று இருக்குமே, போகாதே; பின்னை வெள்ளாட்டியை இட்டுப் பரிபவிப்பர்கள்; அதற்கும் போகானே; பின்னை ஆணையிட்டு எழுப்பிப் பார்ப்பார்கள், அதற்கும் எழுந்திரான்; பின்னைக் காலைப் பற்றி இழுப்பர்கள்: இவன் தூணைக் கட்டிக்கொள்ளும்; இப்படியால் அவர்களாலே சிறுமை உறுவார்கள்; [4]பலம் கிடைக்கும் வேளையில் பிறக்கும்

---

1. "தம்மைத் தாமே" என்ற பன்மைக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'நாம் சதிரர்' என்று தொடங்கி.

2. சம்மதிக்கும் வகையை அருளிச்செய்கிறார் 'சிறிது இயற்றியை' என்று தொடங்கி. இயற்றி - செல்வத்தாலாய உயர்வு. 'இருக்குமவன்' என்பதனைப் பின்னே வருகின்ற 'என்னும்' என்ற முற்றோடு கூட்டுக. "தாமே" என்ற ஏகாரத்தின் பொருளை விளக்குகிறார் 'அவைக்குப் பொருத்தம்' என்று தொடங்கி.

3. "மற்றொன்று உறுவர்" உறும் வகையை விவரிக்கிறார் 'இன்பத்தை' என்று தொடங்கி. மனிச்சிலே - மனிதத் தன்மைக்குச் சேர; பெருமையோடே என்றபடி. பண்ணை - தடவை.

4. "மற்று" என்கிறது என்? இன்னது என்ன ஒண்ணாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பலம் கிடைக்கும் வேளையில்' என்று தொடங்கி.

சிறுமையை நினைந்து வெறுத்து, அதனைத் தம் திருவாயால் அருளிச்செய்ய மாட்டாமையால் 'மற்றொன்று' என்கிறார்.

அங்ஙன் அன்றிக்கே, பலம் கிடைக்கும் வேளையில் நன்மையோடே தலைக்கட்டும் விஷயத்தைப் பற்றிப் பிழைத்துப் போகப் பாருங்கோள் என்கிறார் மேல்: அதிர் கொள் செய்கை அசுரர்மங்க வடமதுரைப் பிறந்தாற்கு-மனிதர்களுடைய மனங்கள் அதிரும்படியான செயல்களையுடைய அசுரக்கூட்டம் முடியும்படி வட மதுரையிலே வந்து திருவவதரித்தவற்கு. எதிர்கொள் ஆளாய் உய்யல் அல்லால்-எதிர்முகமாதலையுடைய அடியாராய் உய்யுமது ஒழிய. [1] அவனுக்கு நாம் செய்யவேண்டுவது இது, அவன் தானே மேல் விழாநின்றால், முகத்தை மாற வைக்காது ஒழிகையே வேண்டுவது.

[2] அந்யத் பூர்ணாத்-பாண்டவர்களிடத்தில் அன்புள்ளவனை கிருஷ்ணன் வாராநின்றான்; அவனுக்கு நாட்டையும் கொடுத்து, பொன்னையும் கொடுத்து, நமக்கு ஆக்கிக் கொள்ளுவோம் என்பது போன்ற வார்த்தைகள் சிலவற்றைத் திருதராஷ்டிரன் சொல்ல; என்றது, இவற்றாலே அவனைப் [3] படையறுத்துக் கொள்ளுவோம் என்ன என்றபடி. [4] அவன் தான் நெஞ்சாலே நினைப்பது ஒன்றாய், வாயாலே பேசுவது ஒன்றாய் அன்றோ இருப்பது; இதனை அறிந்த சஞ்சயன், வருகிறவன் அங்ஙன் ஒத்தவன் அல்லன்காண்; அவனுக்கு வேண்டுவது இவ்வளவு என்கிறான்: [5] தான் குடிக்கும் தண்ணீரைக் குடத்திலே இட்டுக் குளிரவைக்கக் கடவனே; அதனை அவன் வரு

---

1. உய்ந்து போவதற்கு எதிர்கொள் ஆள் ஆதல் மாத்திரம் போதியதாமோ? என்ன, 'அவனுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். அதனை விவரணம் செய்கிறார் 'அவன் தானே' என்று தொடங்கி.

2. எதிர்முகம் ஆதலே அவனுக்குப் போதியதாம் என்பதற்குப் பிரமாணமும் அதற்குப் பொருளும் அருளிச்செய்கிறார் 'அந்யத்' என்று தொடங்கி.

அந்யத் பூர்ணாத் அபாம் கும்பாத் அந்யத் பாதாவநேஜநாத்
அந்யத் குசலஸம்ப்ரஸ்நாத் நசேச்சதி ஜநார்த்தந:

என்பது, பாரதம் உத்யோகபர். 89 : 13.

3. படை அறுத்தல் = பிரித்தல்; தன்வசமாக்கிக் கோடல்.

4. செல்வம் முதலானவற்றைக் கொடுத்துத் தன்வசமாக்கிக் கோடல் வஞ்சனை ஆகுமோ? என்ன, 'அவன்தான்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "விரகினுக்கு ஓர் வீடு போல்வான்" என்றார் வில்லிபுத்தூராழ்வார். (சூதுபோர்ச் சருக்.)

5. அவனுக்கு வேண்டுவது, எதிர்முகமாதலே என்பதனைப் பதங்களிலே ஏறிட்டுக் காட்டுகிறார் 'தான் குடிக்கும்' என்று தொடங்கி.

கிற வழியிலே வாசலிலே வைக்க அமையும். [1] தன் இல்லத்தில் விருந்து வந்து புகுந்தால் கால் கழுவுவதாகச் சாமாந்ய சாஸ்திரம் விதித்தது, அதற்கு மேற்பட அவனை வேற்றுமைக்குச் சிறப்பாக ஒன்றும் செய்ய வேண்டுவது இல்லை; அர்க்ய பாதாவநே ஜநாத் - அந்தக் குடத்தில் நீரைக்கொண்டு அவன் திருவடிகளை விளக்க அமையும்; மற்று வேண்டா. அந்யத் குஶல ஸம்ப்ரஶ்நாத்-நெடுந்தூரம் வந்தவனை [2]"நடந்த கால்கள் நொந்தவோ?" என்னத் தக்கதே அன்றோ. நசேச்சதி - [3] உண்டவனுக்கு உண்ணப்போகாதே அன்றோ; அப்படியே இவன் முயற்சி மாத்திரத்திலேயே அவனுக்கு வயிறு நிறையும்; [4] ஆனபின்னர் இவன் செய்யுமவை அடைய அவனுக்கு மிகையாக இருக்கும்.

இல்லை கண்டீர் இன்பமே - [5] துன்பங்களிலே சிலவற்றை இன்பம் என்று மயங்குகின்ற இத்துணையே ஒழிய இன்பத்தைத் தரவல்லதாய் இருப்பது ஒன்று இல்லை. [6] உயிர்க்கழுவிலே இருக்கிறவனுக்குத் தண்ணீர் வேட்கையும் பிறந்து, தண்ணீரும் குடித்து, தண்ணீர் வேட்கையும் தணிந்தால் பிறக்கும் இன்பம் போலே இருப்பது ஒன்றே அன்றோ, மனிதர்களுக்குக் கலவியால் பிறக்கும் இன்பமாகிறது.[7] ஆடுகிற பாம்பின் நிழலிலே ஒதுங்கி, 'அது அள்ளிக்கொள்ளும்' என்று அறியாமல் 'வெயிலைத் தப்பப் பெற்றோம்' என்று மகிழ்ந்திருப்பாரைப் போலே அன்றோ, விஷய அநுபவங்களால் களித்திருக்கிற இருப்பு ஒருவனுக்கு. (5)

---

1. சுலோகத்திலே உள்ள "பாதாவநேஜநாத்" என்பதற்கு, அவதாரிகை அருளிச்செய்கிறார் 'தன் இல்லத்தில்' என்று தொடங்கி.

2. "நடந்த கால்கள்" திருச்சந்தவிருத்தம், செய். 61.

3. "இச்சதி" என்பதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'உண்டவனுக்கு' என்று தொடங்கி.

4. அங்ஙனமாயின் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆனபின்னர்' என்று தொடங்கி.

5. இன்பங்களும் சில உளவாக இருக்க, "இல்லை" என்கிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'துன்பங்களிலே' என்று தொடங்கி.

6. சிற்றின்ப சுகம், இன்பம் என்று மயங்குகிற மயக்கமே ஒழிய இயற்கையில் துன்பமே என்கிறார் 'உயிர்க்கழுவிலே' என்று தொடங்கி.

7. மேலும், சிற்றின்பம் கேட்டினைத் தருவதும்ஆம் என்கிறார் 'ஆடுகிற' என்று தொடங்கி.

888.

இல்லை கண்டீர் இன்பம் அந்தோ!
உள்ளது நினையாதே
தொல்லையார்கள் எத்தனைவர்
தோன்றிக் கழிந்து ஒழிந்தார்?
மல்லை மூதூர் வட மதுரைப்
பிறந்தவன் வண்புகழே
சொல்லி உய்யப் போகல் அல்லால்
மற்றொன்று இல்லை சுருக்கே.

பொ - ரை:—இவ் உலகத்தில் இன்பம் என்பது சிறிதும் இல்லை; அந்தோ! நிலை நின்ற பேற்றினை நினையாமல், பழங்காலத்தில் இருந்தவர்கள் எத்தனைபேர் பிறந்து இறந்து ஒரு பயனும் இன்றிக் கழிந்தார்கள்? ஆதலால், பழைய நகரமாகிய வளப்பம் பொருந்திய வட மதுரையிலே வந்து அவதரித்த கண்ணபிரானுடைய சீரிய கல்யாண குணங்களையே சொல்லி உய்ந்துபோதலை ஒழிய, சுருங்கச் சொல்லலாவது வேறு ஒன்று இல்லை என்கிறார்.

வி - கு:—சுருக்கு மற்றொன்று இல்லை என்க. உய்யப்போகல் ஒரு சொல்.

ஈடு:—ஆறும் பாட்டு. [1] எல்லை இல்லாத பேரின்பமான பேற்றினைஉணராமல் முன்புள்ளார் பலர் முடிந்து போனார்கள்; ஆதலால், அப்படியே நீங்களும் அழிந்து போகாமல், அடியார்கட்காக அவதரித்துப் பாதுகாக்குமவனையே பற்றி உய்யுங்கோள்; அதனை ஒழிய, ஆத்மாவுக்கு நன்மை இல்லை என்கிறார்.

இன்பம் இல்லை கண்டீர் - [2] "உலகம் எல்லாம் துக்க மயமானது" எனப்படுகிற இவ் உலகத்தில், கெடுவீர்காள்! இன்பம் சிறிதும் இல்லை கண்டீர்கோள். அந்தோ-[3] அநுபவிக்கின்றவர்

1. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "ஸர்வம் துக்க மயம் ஜகத்"

3. "அந்தோ" என்கிறவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'அநுபவிக்கின்றவர்களான' என்று தொடங்கி.

களான உங்களுக்கு நான் உபதேசிக்கவேண்டுவதே! [1]காட்சி அநுபவமும் பயன் இல்லாததாய் இருக்க உபதேசிக்கிறார் அன்றோ. உள்ளது நினையாதே - உண்டான பேற்றினை நினையாமல். என்றது, இன்பமயமாய் என்றும் உள்ளதாய் இருப்பது பகவத் விஷயம் என்று நினையாமல் என்றபடி. அன்றிக்கே, [2]உண்டான இல்லாமையை நினையாமல் என்று மேலே கூட்டலுமாம். தொல்லையார்கள் எத்தனைவர் தோன்றிக் கழிந்து ஒழிந்தார் - பழையராய் இருப்பார் எத்தனைபேர், பிறப்பானது இறப்போடே கூட்ட, நடுவுள்ள நாட்கள் பேற்றுக்கு உடல் அன்றிக்கே கழிந்துபோனர். என்றது, [3]சில பூண்டுகள் உண்டாய், தோன்றின இடம் தன்னிலே நின்று தீய்ந்து போவன உள அன்றோ; அப்படியே என்றபடி.

மல்லை மூதூர் வடமதுரை - நிறைவையுடையதாய், அவனுக்கு என்றும் ஒக்கக் கலவிருக்கையாய்ப் போருகிற சித்தாஶ்ரமமாய், ஸ்ரீ வாமனன் எழுந்தருளி இருந்தும், ஸ்ரீ சத்ருக்நாழ்வான் படைவீடு செய்தும், ஸ்ரீ கிருஷ்ணன் வந்து அவதரித்தும், இப்படிப் பகவானுடைய சம்பந்தம் மாறாதே போருகிற தேசமாதலின் 'மல்லை' என்கிறார். மல்லை - நிறைவு. பழையதாய் வருகிற ஊராதலின் 'மூதூர்' என்கிறார். பிறந்தவன் வண் புகழே - அங்கே வந்து அவதரித்தவனுடைய சீரிய புகழையே. சொல்லி உய்யப் போகல் அல்லால் - வாயாலே சொல்லிப் பிழைத்துப் போமது ஒழிய. மற்று ஒன்று இல்லை சுருக்கே -

---

1. நன்று; துக்கம் என்பது பிரத்யக்ஷமாக இருக்க, உபதேசிக்கிறது என்? என்ன, 'காட்சி அநுபவமும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார். பரமகிருபையாலே உபதேசிக்கிறார் என்றபடி. "வம்மின், விரோதம், ஈனச்சொல், எவ் உயிர்க்கும், அறிய, என்று அடைவு கெட அதபஸ்கர்க்கு உபதேசிக்கிறது, ஞாலத்தார் பந்தபுத்தியும் அநர்த்தம் கண்டு ஆற்றாமையும் மிக்க கிருபையுமிறே. தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும் இவர்க்கும் இவர் அடிபணிந்தவர்க்குமே இவை உள்ளது." என்ற ஆசாரியஹ்ருதயம், சூத். 54, 56. இங்குக் கருதல்தகும்.

2. 'உண்டான இல்லாமையை' என்றது, சத்தியமான இல்லாமை; அதாவது, சம்சாரத்தினுடைய உண்மைத்தன்மை - இன்பம் இல்லை என்னுமது என்றபடி. இந்த இரண்டாவது கருத்தில், "இன்பம் இல்லை கண்டீர்" என்றது உள்ளது; அதனை நினையாதே என்பது பொருள்.

3. தோன்றிக் கழிந்தொழிதலுக்கு எடுத்துக்காட்டு, 'சில பூண்டுகள்' என்று தொடங்கும் வாக்கியம்.

புறம்பே நின்று பரக்கக் [1]காடுகைக்கலாவதுண்டு இத்தனை போக்கி, சுருங்க ஒரு பாசுரத்தாலே சொல்லலாவது இல்லை. (6)

889.

மற்றொன்று இல்லை சுருங்கச் சொன்னோம்
மா நிலத்து எவ் உயிர்க்கும்
சிற்ற வேண்டா சிந்திப்பே அமையும்
கண்டீர்கள் அந்தோ!
குற்றம் அன்று எங்கள் பெற்றத் தாயன்
வட மதுரைப் பிறந்தான்
குற்றம் இல் சீர் கற்று வைகல்
வாழ்தல் கண்டீர் குணமே.

பொ - ரை :—இதனைப் போன்றது ஒரு சீரிய உபாயம் வேறு ஒன்று இல்லை; சுருங்கச் சொல்லுகிறோம்: வேறு வழிகளைத் தேடித் திரிந்து அலைய வேண்டா; பெரிய இவ் உலகத்திலே உள்ள எல்லா உயிர்கட்கும் இறைவனைப் பற்றிச் சிந்தித்தலாகிய இது ஒன்றே போதியதாம்; ஆதலால், வடமதுரைப் பிறந்தானாகிய எங்கள் கோபால கிருஷ்ணனுடைய குற்றம் இல்லாத கல்யாண குணங்களை நாள்தோறும் சொல்லிக்கொண்டு வாழ்தலே குணமாகும்; இவ்வாறு சொல்லிக்கொண்டு வாழ்தல் குற்றம் ஆகாது.

வி - கு :—சிற்றல் - சிதறுதல்; அலைந்து திரிதல். குற்றம் இல் சீர் வைகல் கற்று வாழ்தல் குணம்; அவ்வாறு கற்று வாழ்தல் குற்றம் அன்று என்று கூட்டிச் சில சொற்கள் பெய்து முடிக்க. பெற்றத்து ஆயன் என்றும், பெற்றம் தாயன் என்றும் பிரித்தல் தகும். பெற்றம்-பசுக்கள்.

ஈடு :—ஏழாம் பாட்டு. [2]பகவானைப் பற்றுதல் மிக மிக எளியது, இனிமை வாய்ந்தது என்று அருளிச்செய்கிறார்.

---

1. காடுகைக்கையாவது, வாய் கைக்கும்படி வர்ணித்தல்; வாய்க்குக் கேடாகச் சொல்லுதல் என்றபடி.

2. "சிற்றவேண்டா, சிந்திப்பே அமையும், குற்றம் அன்று" என்பனவற்றைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

மற்று ஒன்று இல்லை -[1] இதனோடு ஒக்க வேறு எண்ண லாவது இல்லை என்னுதல். அன்றிக்கே, இப்போது இதனைச் சொல்லி வேறு ஒருபோது வேறு ஒன்றைச் சொல்லுகிறான் என்று இருக்க வேண்டா என்னுதல். [2]சுருங்கச் சொன்னோம்- இதனைப் பரப்பு அறச் சொன்னோம். அன்றிக்கே, நினைவிற்கு விஷயம் ஆகாதபடி சொல்லுகை அன்றிக்கே, உளம் கொள்ளும்படி தெளிவாகச் சொன்னோம் என்னுதல். மா நிலத்து - இதற்கு அதிகாரிகள் இந்த உலகத்திலே. இவ் அர்த்தத்திற்கு அண்ணியார் பரமபதத்தில் உள்ளாராயினும், உபதேசத்துக்கு அதிகாரிகள் இவ் உலகத்தில் உள்ளவர்களே என்பார் 'மா நிலத்து' என்கிறார். எவ் உயிர்க்கும் - குறித்த ஒரு சிலர்க்கு மாத்திரம் உரியது அன்று; எல்லாருக்கும் உரியது. சிற்ற வேண்டா - வருந்த வேண்டா. சிற்றுதல் - சிதறுதலாய், பரக்க வேண்டா என்கை. என்றது, வேறு ஒரு செய்கை வேண்டா என்றபடி.

சிந்திப்பே அமையும் கண்டீர்கள்-வார்த்தைகள் வேண்டா; நினைப்பே அமையும் கண்டீர்கோள். என்றது, அவனைப் பற்றிப் பேசுதல் வணங்குதல் வேண்டா என்பார் 'சிந்திப்பே' எனப் பிரிநிலை ஏகாரம் கொடுத்து ஓதுகிறார். அந்தோ-நல்ல பொருள்கள் கிட்ட இருக்கச் செய்தேயும், அது கைவிடுகைக்கு உடலாவதே! என்கிறார். குற்றம் அன்று-[3]மேலே கூறிய நன்மைகள் ஒன்றும் இல்லையேயாகிலும், இது சொன்னாலும் உங்கள் தலையில் முந்தற முன்னம் இடிவிழாது.[4]"காலை மாலை நடுப்பகல் என்

1. 'இதனோடு ஒக்க' என்றது, "சிந்திப்பே அமையும்" என்றதனோடு ஒக்க என்றபடி. "மற்று ஒன்று இல்லை" என்றதற்கு இரண்டு கருத்து அருளிச்செய்கிறார்; ஒன்று, சிந்தித்தலோடு ஒக்க எண்ணலாவது ஓர் உபாயம் வேறு இல்லை என்பது. நினைவே போதியதாம் என்றபடி. என் வார்த்தையை நம்பத்தக்க வார்த்தையாக எண்ணுங்கோள் என்பது இரண்டாவதற்குக் கருத்து. இக்கருத்தையே 'இப்போது இதனைச் சொல்லி' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. "சுருங்கச் சொன்னோம்" என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார்; ஒன்று, சொற் சுருக்கம்; மற்றொன்று, பொருட் சுருக்கம்.

3. 'மேலே கூறிய நன்மைகள்' என்றது, மேலே உள்ள ஆறு திருப்பாசுரங்களிலும், இத் திருப்பாசுரத்திலும் கூறிய பொருள்களைத் திருவுள்ளம் பற்றி.

4. "குற்றம் அன்று" என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'காலை மாலை' என்று தொடங்கி.

" ப்ராத: தேவேதி க்ருஷ்ணேதி கோவிந்தேதி ச ஜல்பதாம்
மத்யாஹ்நே ச அபராஹ்ணே ச ய: அவஸாத: ஸ: உச்யதாம்."

என்பது, பிரமாணம்.

னும் மூன்றுவேளையிலும் தேவா என்றும், கிருஷ்ணா என்றும், கோவிந்தா என்றும் சொல்லுகிறவர்களுக்கு யாதேனும் குறை உண்டோ? இருந்தால் கூறுங்கள்" என்றார் பிறரும். அன்றிக்கே, [1] இவ் உபாயத்துக்குப் பலம் இல்லையானாலும் இது தானே பிரயோஜனம் போரும் என்னுதல்.

எங்கள் பெற்றத்து ஆயன் வட மதுரைப் பிறந்தான் - [2]வந்து பிறப்பதற்கு முன்னே பெற்றத்து ஆயன் போலே காணும்; வந்து அவதரிப்பதாக நினைப்பிட்டதில் புரை அற்று இருக்கிறபடி. அடியார்கட்காக வட மதுரைப் பிறந்தானை பசுமேய்க்கும் ஆயன் என்னுதல். அடியார்கட்காகப் பசு மேய்க்கும் ஆயன் ஆவான் ஆக வட மதுரைப் பிறந்தான் என்னுதல். குற்றம் இல் சீர் கற்று - குற்றங்கட்கு எல்லாம் எதிர்த்தட்டான கல்யாண குணங்களைக் கற்று என்னுதல். அன்றிக்கே, [3] பிறப்பிலும் செயல்களிலும் புரை அற்று இருக்கும் கல்யாண குணங்களைக் கற்று என்னுதல். "நான் தேவன் அல்லன், கந்தருவன் அல்லன், யக்ஷன் அல்லன், அசுரன் அல்லன், உங்கள் பந்துவாய்ப் பிறந்தவன் ஆதலால், வேறு நினைவு வேண்டாம்" என்றான் ஸ்ரீ கண்ணபிரான். வைகல் வாழ்தல் கண்டீர் குணமே - [4] கற்பது ஒரு காலாய், பின்பு வாழ்ச்சி நித்தியமாய் இருக்குமாயிற்று; [5] இது ஒன்றுமே குணம்; இது ஒழிந்தன அடையத் தக்கவை அல்ல. (7)

---

1. "குற்றம் அன்று" என்பதற்கு இரண்டாவதாக வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'இவ் உபாயத்துக்கு' என்று தொடங்கி.

2. "பெற்றத்தாயன்-பிறந்தான்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'வந்து' என்று தொடங்கி. இதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'வந்து அவதரிப்பதாக' என்று தொடங்கி.

3. இரண்டாவது பொருளில் "சீர்" என்பது, குணங்களின் காரியமான செயல்களைச் சொல்லுகிறது. 'பிறப்பில் புரை அற்று இருக்கும்' என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'நான் தேவன் அல்லன்' என்று தொடங்கி.

நாஹம் தேவோ ந கந்தர்வோ ந யக்ஷோ நச தாநவ:
அஹம்வோ பாந்தவோ ஜாதோ நைதத் சிந்த்யம் அதோந்யதா.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 13: 13.

4. "கற்று வைகல் வாழ்தல்" என்ற பதச்சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கற்பது' என்று தொடங்கி. ஒருகால் - ஒரு தடவை.

5. "வாழ்தல் கண்டீர் குணமே" என்ற ஏகாரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இது ஒன்றுமே' என்று தொடங்கி.

890.

வாழ்தல் கண்டீர் குணம் இது; அந்தோ! மாயவன் அடி பரவிப்
போழ்து போக உள்ளகிற்கும் புன்மை இலாதவர்க்கு
வாழ் துணையா வட மதுரைப் பிறந்தவன் வண் புகழே
வீழ் துணையாப் போம் இதனில் யாதும் இல்லை மிக்கதே.

பொ - ரை :—மேல் பாசுரத்தில் கூறியபடி வாழ்தலாகிற இது அன்றோ குணமாவது ; ஐயோ ! மாயவனாகிய இறைவனுடைய திருவடிகளைத் துதித்துக் காலத்தைக் கழிக்க நினைக்கக் கூடியவர்களான பெரியோர்களுடைய வாழ்ச்சிக்குத் துணை ஆவதற்காக வட மதுரையிலே வந்து திருவவதரித்தவனுடைய வளவிய புகழையே ஆசைப்படும் துணையாகக் கொண்டு வாழ்வதே மேலான வாழ்வாம்; இவ் வாழ்வினைக் காட்டிலும் மேம்பட்ட வாழ்வு யாது ஒன்றும் இல்லை என்றவாறு.

வி - கு :—வாழ்தல் இது குணம் கண்டீர் என்று மாற்றுக. புன்மை இலாதவர்க்குத் துணையாகப் பிறந்தவன் என்க. இதனில் மிக்கது யாதும் இல்லை என்று மாற்றுக. வீழ்தல் - விரும்புதல்.

ஈடு :—எட்டாம் பாட்டு. [1]அவதாரத்திற்குக் காரணத்தைச் சொல்லி, பாதுகாப்பவனாக அவனையே பற்றுமது ஒழிய, வேறு சீரியதாய் உள்ள ஒரு பற்றுக்கோடு இல்லை என்கிறார்.

[2]வாழ்தல் கண்டீர் குணம் இது - அவன் குணங்களை நினைந்து வாழும்இதுவே கண்டீர் பொருத்தமாவது. அந்தோ - [3]கரும்பு தின்னக் கூலி கொடுப்பாரைப் போலே, இவர்களை யான் இரக்க வேண்டுவதே ! என்றது, வாழ்ச்சி உங்களதாக இருக்க, இரந்து திரிவேன் நான் ஆவதே ! என்றபடி. மாயவன் அடி பரவிப் போழ்து போக உள்ளகிற்கும் புன்மை இலாத

---

1. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "வாழ்தல் கண்டீர் குணம்" என்றது, அநுவாதம்.

3. அவன் குணாநுபவத்தின் இனிமையைச் சொல்லி "அந்தோ" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'கரும்பு தின்ன' என்று தொடங்கி.

"கரும்பு அயிறற்குக் கூலி போலத் தாம் இன்புறுதற்கு
உலகம் இன்புறுதல் பிறவாற்றான் இன்மையின் அதனையே
காமுறுவர் என்று கூறினார்"

என்பது, பரிமேலழகர் உரை. திருக்குறள், 399.

"கரும்புஅயிலக், கூலிகொடுக்கும் குலத்தோன்றல்"

என்பது, திருவெங்கை உலா.

வர்க்கு - அழகு சீலம் முதலியவைகளால் ஆச்சரியப்படத் தக்க வனாக இருந்துள்ள இறைவனுடைய குணங்களுக்குத் தோற்ற வர்களாய், பிரீதியாலே அவன் திருவடிகளை முறை இன்றிக்கே ஏத்தி, அதனாலே போதுபோக்குதலைச் செய்வதாக அறுதி இட்டுள்ள நன்மையையுடையவர்கள், சீரியர்கள். என்றது, [1]வேறு பயன்களைக் கருதாத ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு என்றபடி. [2]தெரித்து எழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போதுபோக்குமவர்கள் என்றவாறு. [3]'இந்த மாயவன் அடி பரவுகையைச் சூது சதுரங்கங்களைப் போன்று காலத்தைக் கழிப்பதற்கு வழியாகக் கொள்ளுகின்ற புன்மை இல்லாதவர்கள்' என்று பட்டர் அருளிச் செய்வர். வாழ் துணையா வட மதுரைப் பிறந்தவன் - அவர்கள் தன் குணங்களை அநுபவித்து வாழ்க்கைக்குத் துணையாக வடமதுரையில் வந்து அவதரித்தவனுடைய. [4]புன்மை உடையவர்களும் அகப்படக் கழித்து அதுவே போதுபோக்காக நின்ற பின்பு, முதலிலே அது குடிபுகுராதவனுக்கு அடியார்களுடைய சேர்க்கை ஒழிய வேறு பயன் இல்லை அன்றோ.

[5]அவதாரத்துக்குப் பயன் "சாதுக்களைப் பாதுகாப்பதற்காகவும்" என்றே அன்றோ இருப்பது. வண்புகழே வீழ் துணையாப் போம் இதனில்-அவனுடைய கல்யாண குணங்களையே ஆசைப்படும் துணையாகப் பற்றும் இது போக்கி. [6]வீழ் துணை-ஆசைப்

---

1. 'சீரியர்கள்' என்றதனை விவரிக்கிறார் 'வேறு பயன்களை' என்று தொடங்கி.

2. அதனைப் பிரமாண மூலமாக விளக்குகிறார் 'தெரித்து' என்று தொடங்கி. இது, நான்முகன் திருவந்தாதி 63-ஆம் பாசுரம்.

3. பட்டர் நிர்வாகத்தில், போழ்து போக உள்ளுதல் புன்மை; அது இல்லாதவர்களுக்கு என்றபடி. என்றது, போதுபோக்குவதற்காக உள்ளாமல், போகரூபமாக உள்ளுகின்றவர்கள் என்றபடி. புன்மை - தீங்கு.

4. வாழ் துணை ஆகைக்கோ அவன் வந்து பிறந்தது? என்ன, 'புன்மை உடையவர்களும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். கழித்து - புன்மை போகச்செய்து.

5. அடியார்களைப் பாதுகாப்பதுவே அவதாரத்துக்குப் பயன் என்னுமதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'அவதாரத்துக்கு' என்று தொடங்கி.

பரித்ராணாய ஸாதூநாம் விநாஶாய ச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே.

என்பது, ஸ்ரீ கீதை. 4 : 8.

6 வீழ்தல் - விரும்புதல்; இதற்கு மேற்கோள் காட்டுகிறார் 'தாம் வீழ்வார்' என்று தொடங்கி. இது, திருக்குறள், 1191.

படும் துணை. "தாம் வீழ்வார் தம் வீழப் பெற்றவர்" என்னக் கடவது அன்றோ ஆசையோடு கூடியவரை. இதனில் - இதைக் காட்டிலும். யாதும் இல்லை மிக்கதே - இதனில் மேலாக இருப்பது ஒன்று உண்டானால் அன்றோ, 'இதில் நின்று' என்ன வேண்டும்; இதற்கு மேலாய் இருப்பது ஒன்றும் இல்லை. (8)

891.

யாதும் இல்லை மிக்கு அதனில் என்று என்று அது கருதிக்
காதுசெய்வான் கூதைசெய்து கடைமுறை வாழ்க்கையும்போம்
மா துகிலின் கொடிக் கொள் மாடம் வடமதுரைப் பிறந்த
தாது சேர் தோள் கண்ணன் அல்லால் இல்லை கண்டீர்
சரணே.

பொ - ரை :—பகவானுக்கு வேறுபட்டதாய் இருப்பது ஒரு விஷயத்தைப் பற்றிக்கொண்டு, அதனைக் காட்டிலும் மேம்பட்டதாய் இருப்பது ஒரு விஷயம் வேறு இல்லை என்று அதனையே காக்கும் கடவுளாக நினைத்து, காதுகளின் தொளையைப் பெருக்கப் புக்கு மூளி ஆக்கிக் கொள்வதைப் போன்று, தண்ணிய முறையையுடைய வாழ்க்கையையும் இழந்து விடுவர்; பெரிய துகிற்கொடிகள் கட்டப்பட்டிருக்கின்ற மாடங்களையுடைய வட மதுரையின்கண் அவதரித்த மாலை அணிந்த தோள்களையுடைய கண்ணபிரானை அல்லாமல் பாதுகாக்கக் கூடிய பொருள் வேறு ஒன்றும் இல்லை.

வி - கு:—அதனில் மிக்கு யாதும் இல்லை என்று மாற்றிக் கூட்டுக. கருதி (அதற்கு வேண்டிய காரியங்கள் சிலவற்றைச் செய்ய) கடைமுறை வாழ்க்கையும் போம் எனச் சில சொற்களை இடையே பெய்து கருதி என்னும் எச்சத்தை, கருதிச் செய்யப் போம் என முடிக்க. அது கருதி - அந்த அந்தத் தெய்வங்களையே காக்கும் கடவுளாக நினைத்து. கூதை - மூளி. பிறந்த கண்ணன் என்க.

ஈடு :—ஒன்பதாம் பாட்டு. [1] இவனை ஒழிய வேறு ஒன்றனை இரக்ஷகம் என்று பற்றினவர்கள், பண்டு நின்ற நிலையும் கெட்டு அழிந்து போவார்கள்; ஆன பின்பு, இவன் அல்லது சரணம் இல்லை என்கிறார். அன்றிக்கே, கைவல்யமாகிற பேற்றினைச் சொல்லுகிறார் என்னலும் ஆம்.

யாதும் இல்லை மிக்கு அதனில் என்று என்று அது கருதி- பகவானுக்கு வேறுபட்டதாய் இருப்பது ஒன்றனைப் பற்றி,

---

1. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். கைவல்யம் - ஆத்ம அநுபவம்.

'இது ஒழிய நமக்குப் பாதுகாவலாய் இருப்பது வேறு ஒன்று இல்லை' என்று சொல்லி, அதனையே, பாதுகாக்கும் பொருளாக நினைத்து. என்றது, [1] "செல்வத்தைக் கொடுப்பதிலும் ஆபத்துக்களைப் போக்குவதிலும் அந்தப் புருஷோத்தமனை விட ஆற்றல் உடையவனாக வேறு ஒருவனும் காணப்படுகிறான் இலன்" என்னும் நினைவினை அதிலே பண்ணி என்றபடி. காது செய்வான் கூதை செய்து - காதினைப் பெருக்கப் புக்குப் பண்டுள்ள நிலையினையும் கெடுத்துக் கூதை ஆக்கினாற் போலே. கடைமுறை வாழ்க்கையும் போம் - துண்ணிதான முறைமையாலே வாழக்கடவ வாழ்வு உண்டு - சம்சாரத்திலே [2] பசலும் குட்டியுமாய் அளாய் குளாயாப் போருமது: அதுவும் கூடக் கெடுமித்தனை. என்றது, ஆபத்தில் [3] அது பாதுகாவலாக மாட்டாது; அதன் பக்கலிலே தன் பாரத்தை எல்லாம் விட்டவனாய் இருக்கையாலே, தான் செய்துகொள்ளும் அத்தனையும் இழக்கும் என்றபடி.

மா துகிலின் கொடி கொள் மாடம் வட மதுரைப் பிறந்த- [4] கம்சன் வாழ்கிறானாய், அலங்காரமாகக் கட்டின கொடியைக் கிருஷ்ணனுடைய அவதாரத்துக்கு என்றே நினைத்திருக்கிறார் ஆயிற்று இவர். [5] சிசுபாலன் திருமணத்துக்கு உடலாகச் செய்த சடங்குகள் அடையத் தனக்கு உடலாகச் செய்ததாக நினைத்துக் கைப்பிடித்தான் அன்றோ ஸ்ரீ கிருஷ்ணன். தாது சேர் தோள் கண்ணன் - வைஜயந்தி தொடக்கமான மாலைகளாலே அலங்கரிக்கப்பட்ட திருத் தோள்களையுடையவன்.

---

1. பகவானையே நம்பி இருப்பவர்கள், 'விருப்பம் இன்மையை நீக்கி விரும்பியவற்றைக் கொடுத்துப் பாதுகாப்பதற்குச் சர்வேஸ்வரனை ஒழிய வேறு ஒரு சக்திமான் இலன்' என்று நினைக்கும் நினைவினை, இவர்கள் மற்றைத் தேவர்களிடத்தில் செய்வர்கள் என்கிறார் 'செல்வத்தை' என்று தொடங்கி.

ந ஸம்பதாம் ஸமாஹாரே விபதாம் விநிவர்த்தநே
ஸமர்த்தோ த்ருஶ்யதே கஶ்சித் தம் விநா புருஷோத்தமம்.

என்பது, பிரமாணம்.

2. பசலும் குட்டியுமாய் - குஞ்சும் குழந்தையுமாய். பசல் - பையன்; குட்டி - பெண் குழந்தை. அளாய் குளாய் - களிப்பின் காரியம்.

3. அது - இவனைப் பாதுகாக்கும் தெய்வமாக இவன் நினைத்திருக்கும் மற்றைத் தெய்வம்.

4. "கொடிக்கொள் மாடம்" என்று கூறிய பின் "பிறந்த" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'கம்சன்' என்று தொடங்கி.

5. இப்படிப் பிறர்க்காகச் செய்தது அவனுக்கு ஆன இடம் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சிசுபாலன்' என்று தொடங்கி.

என்றது, வேறு ஒரு பயன்தான் வேண்டா என்றபடி. அல்லால் இல்லை கண்டீர் சரணே - அவனை ஒழியப் பாதுகாக்கக் கூடியதாக உள்ள வேறு ஒரு பொருள் இல்லை காணுங்கோள்.

கைவல்ய பரமானபோது முதல் இரண்டு அடிகட்கு, 'இவ் ஆத்ம அநுபவ சுகத்துக்கு மேற்பட்டு இருப்பது ஒன்று இல்லை' என்று, அவ்வருகே பகவானை அநுபவிக்கிற சுகம் உண்டேயாகிலும், [1] அதனையே புத்தி பண்ணி, காது பெருக்கப் புக்கவன் அதனைப் பல காலும் அறுத்துவைத்து முன்-புத்தை நிலையையும் கூடக் கெடுக்குமாறு போலே, பகவானை அடைவதற்குத் தகுந்ததான இவ் உலகத்திலே சிற்றின்பத்தை அநுபவித்திருக்கும் [2] அதனையும் இழக்கும்; ஆன பின்பு, அறப் பெரியனை கிருஷ்ணனே அடையத் தக்க மேலானவன் என்று பொருள் கொள்க. (9)

892.

கண்ணன் அல்லால் இல்லைகண்டீர் சரண் அது நிற்க வந்து
மண்ணின் பாரம் நீக்குதற்கே வட மதுரைப் பிறந்தான்
திண்ணமாநும் உடைமை உண்டேல் அவன் அடி சேர்த்து உய்ம்மினோ
எண்ணவேண்டா நும்மது ஆதும் அவன் அன்றி மற்று இல்லையே.

பொ-ரை ;—கண்ணபிரானாகிய அவன் அன்றிப் புகல் ஆவார் வேறு ஒருவரும் இலர் என்னும் அந்த உண்மை நிலைநிற்பதற்காகவும், பூபாரத்தைப் போக்குவதற்காகவும் வந்து வட மதுரையிலே அவதரித்தான்; ஆன பின்னர், மானிடர்காள்! உங்களுடையதாக நினைத்திருக்கிற பொருள் உளதாகில், உறுதியாக அதனை அவன் திருவடிகளிலே சேர்த்து உய்ந்து போமின்; வேறு ஒன்றும் ஆலோசிக்க வேண்டா; உங்களுடையதாக நீங்கள் நினைத்திருக்கும் எல்லாப் பொருள்களும் அவனுடையதே ஆகும்; அங்ஙனம் அன்றி இதற்கு மாறாக ஒன்றும் இல்லை.

---

1. அதனையே - அந்த ஆத்ம அநுபவத்தையே.

2. 'அதனையும்' என்ற உம்மை, பகவானுடைய அநுபவத்தைத் தழுவுகிறது. கைவல்யபரமாக அருளிச்செய்யும் பொருளில், "சரண்" என்பதற்குப் பெறத் தக்க பேறு என்பது பொருள்.

வி-கு:—"பாரம் நீக்குதற்கே" என்றதிலுள்ள ஏகாரத்தைப் பிரித்து, "அது நிற்க" என்ற இடத்துக் கூட்டி, "சரண் அது நிற்கவே (அதற்கு உறுப்பாக) பாரம் நீக்குதற்கு வந்து பிறந்தான் என்று பொருள் கூறுக. அது - அந்த உண்மை. அன்றிக்கே, நிற்கவும் நீக்குதற்கும் வந்து பிறந்தான் என்னலுமாம்.

ஈடு:—பத்தாம் பாட்டு. [1] தானே புகலிடம் என்னும் உண்மையை நிலை நிறுத்துவதற்காக அவதரித்த ஸ்ரீ கிருஷ்ணன் திருவடிகளைப் பற்றுமினே என்கிறார்.

கண்ணன் அல்லால் சரண் இல்லை கண்டீர் - கிருஷ்ணனை ஒழியப் புகலிடம் ஆவார் வேறு இலர். அது நிற்க - இவ் உண்மைப் பொருள் நிலை நிற்கைக்காகவும். மண்ணின் பாரம் நீக்குதற்கு-அதற்கு உறுப்பாகப் பூ பாரத்தைப் போக்குகைக்காகவும். வந்து வட மதுரைப் பிறந்தான்-வட மதுரையில் திருவவதாரம் செய்தான். நும் உடைமை உண்டேல் - ஆனபின்பு, நீங்களும் உங்கள் உடைமை என்று நினைத்திருந்தன உண்டாகில். 'உண்டேல்' என்றது, தம் நினைவால் இல்லை; அவர்களுடைய [2] அந்யதாஞானத்தால் உண்டான நினைவால் வந்தன உண்டாகில் என்றபடி. அவன் அடி திண்ணமா சேர்த்து உய்ம்மின் - அவன் திருவடிகளிலே அடிமை என்ற நினைவோடு கடுகத் திண்ணமாகச் சேர்த்துங்கோள்! எண்ணவேண்டா - 'இது தான் அவனதோ, நம்மதோ' என்று விசாரிக்க வேண்டா; நும்மது ஆதும் அவன் - உங்களோடு உங்கள் உடைமையோடு வாசி அற அவனுக்கே உரிமை. மற்று இல்லை - வேறு இல்லை.

அன்றிக்கே, ஈற்றடிக்கு, உங்களுடைய பாரத்தில் நீங்கள் செய்யவேண்டுமவை அனைத்தும் உங்கள் தலையிலே கிடக்கின்றன அல்ல; எல்லாம் அவன் பக்கலிலே கிடக்கின்றன என்று பொருள் கூறலும் ஒன்று. பலம் கிடைப்பதற்குத் தகுந்த சாதனங்களும் அவனை ஒழிய இல்லை ஆதலின் 'மற்று இல்லை' என்கிறார். [3] சமிதைபாதி, சாவித்திரி பாதியாக நீங்களும் ஒரு

---

1. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. அந்யதா ஞானமாவது, வேறு தெய்வங்கட்குத் தம்மை அடிமையாக நினைத்திருக்கும் அறிவு.

3. இரண்டாம் பத்து, ஈட்டின் தமிழாக்கம் 177-ஆம் பக்கம் குறிப்புக் காண்க.

தலை கூட்டுப்பட வேண்டுவது இல்லை என்பதனை உணர்த்து தலின் 'இல்லையே' என்பதன்கண் ஏகாரம் பிரிநிலையின் கண் வந்தது. (10)

893.

ஆதும் இல்லை மற்று அவனில் என்று அதுவே துணிந்து
தாது சேர் தோள் கண்ணனைக் குருகூர்ச் சடகோபன் சொன்ன
தீது இலாத ஒண்தமிழ்கள் இவை ஆயிரத்துள் இப்பத்தும்
ஓத வல்ல பிராக்கள் நம்மை ஆளுடையார்கள் பண்டே.

பொ - ரை :—கண்ணபிரானைக் காட்டிலும் துணை ஆகும் பொருள் வேறு ஒன்றும் இல்லை என்னுமதனையே துணிந்து, மாலைகளால் அலங் கரிக்கப்பட்ட தோள்களையுடைய கண்ணபிரானை, திருக்குருகூரில் அவ தரித்த ஸ்ரீ சடகோபரால் அருளிச்செய்யப்பட்ட குற்றம் இல்லாத ஒள்ளிய ஆயிரம் தமிழ்ப் பாசுரங்களுள் இப் பத்துப் பாசுரங்களையும் பொருள் உணர்வோடு கற்க வல்ல உபகாரகர்கள், முன்பே நம்மை அடிமைகொண்ட பெரியோர்கள் ஆவர்.

வி - கு :—சடகோபன் துணிந்து சொன்ன பத்து என்க. பிரான் கள் : பிராக்கள். பிரான் - உபகாரகன்.

ஈடு:—முடிவில்,[1] "அறநெறியை விட்டு விலகாததாய் இருக் கிற, நம் இருவருடைய இந்தச் சம்வாதத்தை எவன் படிக்கின் றானோ, அவனால், ஞானமான வேள்வியால் நான் ஆராதிக்கப் பட்டவன் ஆகிறேன் என்பது என் எண்ணம்" என்று அவன் அருளிச்செய்தாற் போலே, இத் திருவாய்மொழியினைக் கற்ப கள் எனக்குப் பிரியத்தைச் செய்கின்றவர்கள் ஆவார்கள் என் கிறார்.

அவனில் மற்று ஆதும் இல்லை என்று அதுவே துணிந்து- அவனை ஒழிய வேறு அடையப்படும் பொருளும் அடைதற் குரிய வழியும் இல்லை என்று துணிந்து. இவர்க்கு இப்படி இந் தத் துணிவினைக் கொடுத்தார் யார்? எனின், வேறு ஒருவர் உளரோ? அவனுடைய தோளும் தோள்மாலையும் அன்றோ? என்கிறார் மேல் : தாது சேர் தோள் கண்ணனை - அவனுடைய பெருவனப்பு ஆயிற்று, இவரை இப்படித் துணியப் பண்

1. "ஓதவல்ல பிராக்கள் நம்மை ஆள் உடையார்கள் பண்டே" என்ப தனைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

ணிற்று. தீது இலாத - தீது இலாமையாவது, பகவானுடைய சம்பந்தம் இல்லாத சரிதங்கள் இதில் கூறப்படாமல் இருத்தல். ஒண் தமிழ்கள் - ஒண்மையாவது, உள் உண்டான அர்த்த விசேடங்களை எல்லாம் வெளியிட்டுக் கொடுக்கவற்றாய் இருக்கை. அன்றிக்கே, குற்றம் இல்லாதவையாய், பல குணங்களையுடைத்தாய் இருத்தல் என்றுமாம். ஓத வல்ல பிராக்கள் - இப் பத்தினைக் கற்க வல்ல உபகாரகர். இவ் உலக வாழ்க்கையின் தன்மையும், சர்வேஸ்வரனுடைய பிராப்பிய பிராபகங்களின் தன்மையும் அன்றோ இத் திருவாய்மொழியிற் சொல்லப்பட்டன; இதனைக் கற்கவே, தீய வழியைத் தவிர்ந்து நல்வழி போகத் தொடங்குவர்கள். இதற்கு மேற்பட இவர்கள் இவர்க்குச் செய்யும் உபகாரம் இல்லை அன்றோ.

நம்மை ஆளுடையார்கள் பண்டே - ஒரு பிறவியிலே இதனைக் கற்கைக்குத் தகுதியான அதிகாரத்தை உடையராய் இருப்பார்களாகில், அவர்கள் பண்டே நமக்குத் தலைவர் ஆவர். [1] "அத்யேஷ்யதே - எவன் படிப்பானோ அவன்" என்கிற படியே, இதனைக் கற்பதற்குத் தகுதியான தன்மை உள்ள பிறவி தொடங்கி நமக்குத் தலைவர். (11)

—: o :—

1. "பண்டே நம்மை ஆள் உடையார்கள்" என்பதனைப் பிரமாண முகத்தாலே உறுதிப்படுத்துகிறார் "அத்யேஷ்யதே" என்று.

அத்யேஷ்யதே ச ய இமம் தர்ம்யம் ஸம்வாதம் ஆவயோ:
ஜ்ஞாநயஜ்ஞேந தேந அஹம் இஷ்ட: ஸ்யாம் இதி மே மதி:.

என்பது, ஸ்ரீ கீதை. 16 : 70. என்றது, 'நம் இருவருடைய சம்வாதரூபமான இந்தக் கீதையை எவன் படிப்பானோ அவன் எனக்குப் பிரியமானவன்' என்று கூறிய இடத்தில், படிக்கிறவன் என்று நிகழ்காலத்தால் கூறாது படிப்பவன் என்று எதிர்காலத்தால் கூறியதனால், படிப்பதற்குத் தகுதியுள்ளவர்கள் என்ற பொருள் கிடைப்பதைப் போன்று, இங்கும் "ஓதவல்ல பிராக்கள்" என்றதனால் திருவாய்மொழியை ஓதுவதற்குத் தகுதியுள்ளவர்கள் என்ற பொருள் போதரும். போதரவே, தகுதி என்பது படிப்பதற்கு முன்னரே இருப்பது ஒன்று ஆகையாலே, அத் தகுதியை நோக்கித் திருவாய்மொழியைப் படிப்பதற்கு முன்னரே நம்மை அடிமைகொண்டவர்கள் என்பார் "நம்மை ஆளுடையார்கள் பண்டே" என்கிறார் என்றபடி. "தவமும் தவமுடையார்க்கு ஆகும்" என்ற திருக்குறளும் ஈண்டுச் சிந்தித்தல் தகும்.

திருவாய்மொழி நூற்றந்தாதி

கொண்டபெண்டிர் தாம்முதலாக் கூறும் உற்றார் கன்மத்தால்
அண்டினவர் என்றே அவரை விட்டுத்—தொண்டருடன்
சேர்க்கும் திருமாலைச் சேரும் என்றான் ; ஆர்க்கும், இதம்
பார்க்கும் புகழ் மாறன் பண்டு.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

இரண்டாம் திருவாய்மொழி "பண்டைநாள்"

முன்னுரை

ஈடு:—[1] மேல் திருவாய்மொழியிலே, 'அவனை ஒழிந்தார் அடங்கலும் ஒரு காரணம் பற்றி வந்த உறவினர்கள்; அவன் ஒருவனுமே ஒரு காரணமும் பற்றாமல் இயல்பாகவே அமைந்த உறவினன்' என்றார்; ஒரு காரணமும் பற்றாமல் இயல்பாகவே அமைந்த உறவினன் ஆனால் பின்னை உறவினனுக்கு உரிய காரியங்களைச் செய்யாதிருக்க முடியாதே அன்றோ. ஆகலால், ஒரு காரணமும் பற்றாமல் இயல்பாகவே அமைந்த உறவினன் ஆன சர்வேஸ்வரன் திருக்கண்வளர்ந்தருளுகிற திருப்புளிங்குடியிலே எல்லாவித கைங்கரியங்களையும் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டு இவர் சென்று கிட்டினார்; கிட்டின இடத்தில், இவரை என் என்னுதல், திருக்கண்களாலே குளிர நோக்குதல், ஒரு வார்த்தை சொல்லுதல் செய்யக் கண்டிலர்; காணாமையாலே மிகவும் துன்புற்றவர் ஆனார்; அத் துன்பம் அவன் உளன் ஆகத் தீருமே அன்றோ. அதற்கு மேலேயும் ஒன்று உண்டாயிற்று; அது என்? எனின், [2] 'திருமேனி அலசும்படி பலகாலமாக ஒரே தன்மையாகத் திருக்கண்வளர்கின்றான்: என் வருகிறதோ?' என்ற ஓர் அச்சம் உண்டாயிற்று. [3] மேலே, "ஆரா அமுதே" என்ற திருவாய்மொழியிலே, 'என் துன்பத்தினைத் தீர்க்கின்றிலன்' என்று இன்னாதானார்; இங்கே 'என் துன்பத்தினையும், தன் துன்பத்தினையும் தீர்க்கின்றிலன்' என்று இன்னாதாகிறார்.

---

1. மேல் திருவாய்மொழியிற் கூறிய பொருளை அநுவதித்துக்கொண்டு இத் திருவாய்மொழிக்கு இயைபு அருளிச்செய்கிறார் 'மேல் திருவாய்மொழியிலே' என்று தொடங்கி.

2. இங்கு, திருவிளையாடற் புராணத்துள் 'கான்மாறி ஆடிய திருவிளையாடலை' அறிதல் தகும். இத் திருவாய்மொழியில் வருகின்ற "திருஉடம்பு அசைய", "எத்தனைகாலம் கிடத்தி" என வருகின்ற பாசுரப் பகுதிகளைத் திருவுள்ளம்பற்றி, 'திருமேனி அலசும்படி பலகாலமாக ஒரே தன்மையாக' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். அலசும்படி = வருந்தும்படி.

3. "ஆரா அமுதே" என்ற திருவாய்மொழியிலும் இப்படியே அன்றோ விரும்பியது; அதற்கும் இதற்கும் வேற்றுமை யாது? என்ன, 'மேலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

[1] ஆக, "கொடியார் மாடம் கோளூரகத்தும் புளிங்குடியும் மடியாது இன்னே" என்ற அதுவே தலைஎடுத்து, பெரிய ஆற்றாமையோடே, [2] 'என்னுடைய துன்பம் எல்லாம் தீரும்படி திருக்கண்களாலே குளிர நோக்கியருளவேண்டும்; என் தலை மேலே திருவடிகளை வைத்தருளவேண்டும்; தேவரும் பிராட்டிமாரும் கூட எழுந்தருளியிருக்கும் இருப்பை எனக்குக் காட்டியருளவேண்டும்;[3] சஞ்சயன் பெற்ற பேற்றில் எனக்குக் குறைய ஒண்ணாது' என்கிறார். "எந்த இடத்திலே ஸ்ரீ கிருஷ்ணனும் அருச்சுனனும், திரௌபதியும் கோபத்தன்மையுள்ள சத்தியபாமையும் இருக்கிறார்களோ" என்று சொல்லுகிறபடியே, அவ் இருப்பிலே அன்றோ அவனை அழைத்துக் காட்சி கொடுத்தது. என்றது, [4] இப்படி, 'சஞ்சயன் வந்தான்' என்று அறிவிக்க, 'நமக்கு நல்லான் ஒருவன்; உகவாதார்க்கும் இவ் இருப்பைப் போய்ச் சொல்லுவான் ஒருவன்; அநுகூலனான இவனுக்கு விளைநீர் அடைத்தோம் ஆகிறோம்: உகவாதார் மண் உண்ணும்படி காரியம் பார்த்தோம் ஆகிறோம்; புகுரவிடுங்கோள்' என்று உள்ளே அழைப்பித்துக் காட்சி கொடுத்

---

1. நன்று; தன் துன்பத்தினைத் தீர்க்காமை "அங்கும் இங்கும்" என்ற திருவாய்மொழியில் அருளிச்செய்தாரே? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆக' என்று தொடங்கி. என்றது, அதனுடைய அநுபாஷணம் இத் திருவாய்மொழி என்றபடி. அநுபாஷணம் - மீண்டும் கூறுதல். 'பெரிய ஆற்றாமையோடே' என்றதனை, மேலே வருகின்ற 'விண்ணப்பம் செய்து' என்றதனோடு கூட்டுக. 'ஆற்றாமையோடே விண்ணப்பம் செய்து' என்றபடி.

2. இத் திருவாய்மொழியில் வருகின்ற "தாமரைக் கண்களால் நோக்காய்", "பாத பங்கயமே தலைக்கணியாய்", "உன் தாமரை மங்கையும் நீயும்" என்பன போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றி 'என்னுடைய துன்பமெல்லாம்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

3. நீர் இப்படி விரும்புவதற்கு, நாம் முன்பு யாருக்குக் காட்சி அளித்தோம்? என்ன, 'சஞ்சயன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். அவன் பெற்ற பேற்றினை அருளிச்செய்கிறார் 'எந்த இடத்திலே' என்று தொடங்கி.

"யத்ர க்ருஷ்ணௌ ச க்ருஷ்ணா ச ஸத்யபாமா ச பாமிநீ"

என்பது, பாரதம் உத்யோகபர்வம்.

4. மேற்காட்டிய சுலோகத்திற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி. விளை நீர் அடைத்தல் - விளையும்படி ஒரு காலே தண்ணீரைத் தேக்குதல்.

தான் என்றபடி. [1] "அவர்கள் வீற்றிருந்த அந்த இடத்திற்கு அபிமன்யுவும் சென்றான் இல்லை; இரட்டையர்களான நகுல சகாதேவர்களும் போனார்கள் இல்லை" என்கிறபடியே, தாயும் தமப்பனும் சேர இருந்த இடத்தில் குழந்தைகளுக்குச் சென்று கிட்டவொண்ணாமை இல்லை அன்றோ; அவர்களுக்கும் சென்று கிட்ட ஒண்ணாதபடி ஆயிற்று எழுந்தருளியிருக்கிற இருப்பு; அவ் இருப்பிலே அன்றோ அவனை அழைத்துக் காட்சி கொடுத்தது.

அப்படியே, 'தேவரும் பிராட்டிமாரும் எழுந்தருளியிருக்கும் இருப்பை எனக்குக் காட்டவேண்டும்: [2] என்னைக் கண்ட காட்சியிலே வேறுபட்டவனாய் என் முன்னே நாலடி உலாவியருளவேண்டும்; அநுகூலரைக் கண்டால் பிறக்கும் புன்முறுவல் காணவேண்டும்; ஒரு வார்த்தை அருளிச்செய்ய வேண்டும்' என்று இங்ஙனே [3] தாமும் அவனும் அறிந்ததாகத் திருவாசலைத் திருக்காப்புக் கொண்டு தனி இடத்திலே தம்முடைய எண்ணங்களை எல்லாம் விண்ணப்பம் செய்து, 'இவற்றை இப்போதே பெறவேண்டும்' என்று விரைகிறார்.

[4] இறைவனுக்கும் உயிர்கட்கும் உள்ள சம்பந்தத்தை அநுபவித்தார் மேல் திருவாய்மொழியில்; சம்பந்தத்தின் பலத்தை ஆசைப்பட்டு விரும்புகிறார் இத் திருவாய்மொழியில்.

---

1. அப்படி அருளப்பாடு இடும்படி ஒருவர்க்கும் கிட்ட ஒண்ணாததாய் இருந்ததோ, அவர்கள் இருந்த இடம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவர்கள்' என்று தொடங்கி.

"நச அபிமந்யு: நயமௌ தம் தேஸம் அபிஜக்மது:"

என்பது, பாரதம் உத்யோகபர்வம்.

2. "பவளம்போல் கனிவாய் சிவப்ப நீ காணவாராய்" என்ற பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'என்னைக் கண்ட' என்று தொடங்கியும், "தவழ் கதிர் முறுவல் செய்து" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அநுகூலரை' என்று தொடங்கியும், "கூவுதல் வருதல் செய்யாய்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'ஒரு வார்த்தை' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

3. இச் செயல்கள் உலகத்தில் நடப்பன அல்ல ஆதலின், 'தாமும் அவனும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். இப்பொருள், இத் திருவாய்மொழியில் வருகின்ற "கொடுவினையேனும்" என்ற ஒருமையாலும், இருவருமான சேர்த்தியைச் சொல்லுகிற "தாமரை மங்கையும் நீயும்" என்ற பன்மையாலும் கிடைக்கிறது.

4. இதுகாறும் கூறியவற்றால் பலிக்கும் பொருளை அருளிச்செய்கிறார் 'இறைவனுக்கும்' என்று தொடங்கி.

894.

பண்டை நாளாலே நின் திருஅருளும்
பங்கயத்தாள் திருஅருளும்
கொண்டு நின்கோயில் சீய்த்துப் பல்படிகால்
குடிகுடி வழிவந்து ஆள்செய்யும்
தொண்டரோர்க்கு அருளிச் சோதி வாய் திறந்து உன்
தாமரைக் கண்களால் நோக்காய்;
தெண்திரைப் பொருநல் தண்பணை சூழ்ந்த
திருப் புளிங்குடிக் கிடந்தானே!

பொ-ரை:—தெளிந்த அலைகள் பொருந்திய தாமிரபரணியை யுடைய, குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த திருப்புளிங்குடி என்னும் திவ்விய தேசத்தில் சயனித்திருப்பவனே! உனது திருஅருளையும் பெரிய பிராட்டியார் திருஅருளையும் ஆதிகாலம் தொடங்கியே உடையோமாய்க் கொண்டு, உனது திருக்கோயிலைத் திருஅலகிடுதல் முதலிய தொண்டுகளைச் செய்து, தொன்று தொட்டு வம்ச பரம்பரையாக வந்து அடிமை செய்கின்ற அடியவர்களாகிய எங்களுக்குத் திருஅருள் செய்து, பிரகாசம் பொருந்திய திருவாயைத் திறந்து வார்த்தைகளைப் பேசி, உனது தாமரைக் கண்களால் நோக்கியருளவேண்டும் என்கிறார்.

வி-கு:—திருப்புளிங்குடிக் கிடந்தானே! ஆட்செய்யும் தொண்டரோர்க்கு அருளி வாய்திறந்து கண்களால் நோக்காய் என்க. பண்டை நாளாலே கொண்டு சீய்த்து வழிவந்து ஆட்செய்யும் தொண்டரோர்க்கு என்க.

இத் திருவாய்மொழி எழுசீர்க் கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஈடு:—முதற்பாட்டு. [1]வேறு கதி இல்லாத அடியோங்களைக் குறித்து ஒரு வார்த்தை அருளிச்செய்து, விடாய் கெடும்படி குளிர நோக்கி அருளவேண்டும் என்கிறார்.

பண்டை நாளாலே நின் திரு அருளும் - பல நாட்களாகச் செய்து போந்த உன் திரு அருளையும். என்றது, நீ நேற்று இன்று செய்து போந்த கிருஷியின் பலமோ இது? எதிர் சூழல்

1. "குடி குடி வழி வந்து ஆட்செய்யும் தொண்டரோர்க்கு, சோதிவாய் திறந்து உன் தாமரைக் கண்களால் நோக்காய்" என்பனவற்றைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

புக்குப் பல நாள் பட்ட கிலேசத்தின் பலம் அன்றோ இந்தக் கைங்கரியம் என்றபடி. [1] நெடுநாள் கிருஷியைச் செய்து பல வேளையில் கைவிடவோ? என்கிறார். பங்கயத்தாள் திரு அருளும் கொண்டு - அவன் அருளுக்குக் காரணமான பெரிய பிராட்டியார் திரு அருளையும் கொண்டு. [2] அவனுடைய அருளின் சுவாதந்திரியத்தைத் தவிர்க்கும் அருள். [3] காதல் காரணமாக வந்த பாரதந்திரியமே அன்றோ சுவாதந்திரியத்தைத் தவிர்ப்பது. என்றது, அவன் அருளின் சுவாதந்திரியத்தின் வாசனையைத் தவிர்க்குமவள் அருளும்படியாக அன்றோ வந்தது; ஆதலால், அவள் அருள் அவன் சுவாதந்திரியத்தைப் பின் செல்லாதபடி செய்யுமாயிற்று என்றபடி.

நன்று; அங்ஙனமாயின், [4] 'அவனுடைய பாரதந்திரியம் அவள் காதல் காரணமாக வந்தது அன்றோ? அது நிலை நிற்குமோ? சுவாதந்திரியமே அன்றோ அவனுக்கு இயற்கை? அதற்கு நாம் அஞ்சவேண்டாவோ?' எனின், அஞ்ச வேண்டா; அவள் அருகே இருக்கச் சுவாதந்திரியம் நிலை நிற்காது. ஆகையால் அன்றோ, துவயத்தில் முன் வாக்கியத்தால் அவள் புருஷகாரமாகப் பற்றுகிறது. இனி, பண்டை நாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் என்பதற்கு, [5] "என் அடியார் அது செய்யார்" என்னும் உன் திரு அருளையும், [6] "குற்றம் செய்யாதவர் யாவர்" என்னும் அவள்

---

1. ஆனல் என்? என்ன, 'நெடுநாள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. இவளுடைய அருள் அவனுடைய அருளுக்குக் காரணமாதல் யாங்ஙனம்? என்ன, 'அவனுடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. சுவாதந்திரியத்தைத் தவிர்க்கும் வழி யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'காதல்' என்று தொடங்கி.

4. ஆயின், காதல் காரணமாக வந்த பாரதந்திரியமான காரியம், ஒரு காரணம் பற்றி வந்தது அன்றோ? ஆதலால், சுவாதந்திரியமே அன்றோ நிலை நிற்பது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கி. என்றது, அவளுடைய காதல் நித்தியமாகையாலே அக் காதலின் காரியமான பாரதந்திரியமும் நித்தியம் என்றபடி.

5. பெரியாழ்வார் திருமொழி, 4. 9 : 2.

6. பாபாநாம்வா ஶுபாநாம்வா வதார்ஹாணாம் ப்லவங்கம
கார்யம் கருணம் ஆர்யேண நகஶ்சிந்நாபராத்யதி.

என்பது, ஸ்ரீராமா. யுத். 116 : 44.

திரு அருளையும் பெற்று என்றலுமாம். அன்றிக்கே, [1]"கொல்லத் தக்கவனாக இருந்தும் பேரருளால் அந்தக் காகாசுரனைக் காப்பாற்றினார்" என்கிறபடியே, கிருபைக்குப் பரதந்திரப் பட்டவனான உன்னுடைய திரு அருளையும், அந்தப் பாரதந்திரியத்துக்குக் காரணமான அவள் திரு அருளையும் பெற்று என்றலுமாம்.

நின் கோயில் சீய்த்து - [2]உகந்தருளின நிலங்களிலே, அவனுக்கே உரிய திரு அலகிடுதல் முதலிய தொண்டுகளைச் செய்து. [3]தந்தாமுடைய புண்ணிய விசேடத்தாலே பகவானுடைய திரு அருளைப் பெற்றவர்கள், தம் தம் இல்லங்களைப் பேணுவர்கள்; பிராட்டி புருஷகாரமாகப் பகவானுடைய திரு அருளைப் பெற்றவர்கள், உகந்தருளின நிலங்களைப் பேணி நிற்பர்கள்.[4]"ஒரு தொழிலையும் செய்யாதானாய்ப் பகவான் எழுந்தருளியிருக்கின்ற கோயில்களிலே வசிக்கக் கடவன்; கோயில்களில் வாசம் செய்துகொண்டு தினமும் தனது ஆற்றலுக்கு ஏற்பப் பகவானுக்குப் பணிகளைச் செய்யக்கடவன்" என்கிறபடியே, [5]ஒரு துரும்பும் நறுக்கேன் என்னுமவர்களுக்கும், அவன் உகந்தருளின நிலத்தைப் பற்றிக் கிடக்கவேண்டும். [6]சரீர சம்பந்தம் அற்றால் பெறவேண்டும் என்று ஆசைப்படு

---

1. ஸதம் நிபதிதம் பூமௌ ஶரண்ய: ஶரணாகதம்
வதார்ஹமபி காகுத்ஸ்த: க்ருபயா பர்யபாலயத்.

என்பது, ஸ்ரீராமா. சுந். 38 : 34.

2. மற்றைய கைங்கரியங்களும் இருக்க, திரு அலகிடுதலை விசேடித்து அருளிச்செய்கையாலே, எல்லாக் கைங்கரியங்களிலும் சிறந்தது இதுவே என்கிறார் 'உகந்தருளின' என்று தொடங்கி.

3. மற்றையோர் தத்தம் வீடுகளைப் பேணாநிற்க, இவர்கள் உகந்தருளின நிலங்களை (திவ்யதேசங்கள்) ப் பேணுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தந்தாமுடைய' என்று தொடங்கி.

4. தன் முயற்சி இன்றி அவன் அருளையே பார்த்திருக்கும் ஒருவன் இவற்றைப் பேணுவான் என்? என்ன, பேணவேண்டும் என்பதற்குப் பிரமாணம் அருளிச்செய்கிறார் 'ஒரு தொழிலையும்' என்று தொடங்கி.

நகிஞ்சித் அபி குர்வாண: விஷ்ணோ: ஆயதநே வஸேத்
விஷ்ண்வாலயே வஸந்நித்யம் குர்யாத் தத்கர்ம ஶக்தித:.

என்பது, ஸ்ரீ விஷ்ணு தர்மம்.

5. மேலே காட்டிய சுலோகத்திற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'ஒரு துரும்பும்' என்று தொடங்கி.

6. ஆமின், அடிமை சித்திப்பது சரீரம் கழிந்த பின்னரே அன்றோ? என்ன, 'சரீர சம்பந்தம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

கிற அடிமையை, இச் சரீரத்தோடு இருக்கும்போதே கிடைக்குமாகில் விடானே அன்றோ. [1]"வயல் அணி அனந்தபுரம், கடைத்தலை சீய்க்கப் பெற்றால் கடுவினை களையலாமே" என்றாரே அன்றோ. [2] பேற்றினை அடையவே, பேற்றிற்குத் தடைகளாக உள்ளனவற்றைப் போக்கலாம் என்பதாயிற்று. [3] **திருக்கண்ணமங்கையாண்டான்,** திருக்கண்ணமங்கை என்னும் திவ்விய தேசத்திலே ஒரு திருமகிழ் அடியிலே இருந்து, சருகைத் திரு அலகிடாநிற்க, கூட வாசித்து நாஸ்திகனாய் இருப்பான் ஒருவன், 'பகவான் உபாயம், நாம் வேறு பயன்களைக் கருதாதவர்கள், இப்போது செய்யும் இப் பணிக்குப் பயன் என்?' என்ன, திரு அலகு இட்ட இடத்தையும் இடாத இடத்தையும் காட்டி, 'இவ்விடமும் அவ்விடமும் இருந்தபடி கண்டாய்க்கு ஒரு பயன் இல்லை என்று தோற்றி இருந்ததோ?' என்றான்.

பல்படிகால் - இதுதான் இன்று தொடங்கி வந்தது ஒன்றோ? நீ திருஅருள் செய்யப் புக்க அன்று தொடங்கி வந்தது அன்றோ? குடிகுடி - உற்றார் உறவினர்களோடு. வழி வந்து - சாஸ்திரங்களிற் சொல்லுகிற முறை தப்பாதபடி வந்து. ஆள்செய்யும் தொண்டரோர்க்கு அருளி - அடிமை செய்கிற அடியோங்கள்பக்கல் திருஅருள் செய்து. சோதிவாய் திறந்து- பூ அலருமாறு போலே ஆயிற்று, திருவாய் திறந்து வார்த்தை அருளிச்செய்யும்போது திருமுகத்தில் பிறக்கும் செவ்வி. [4]"என்னைப் பார்த்து அக்குரூரனே! என்று அருளிச்செய்

1. இச் சரீரத்தோடு இருக்கும்போதே கைங்கரியம் வேண்டப்பட வேண்டியது தானே? என்ன, 'வயல் அணி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இது, திருவாய்மொழி, 10. 2 : 7.

2. கடைத்தலை சீய்த்தல் விரோதிகளைப் போக்குவதற்குச் சாதனமாகத் தோற்றுகிறதே? என்ன, 'பேற்றினை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, விரோதி போதல் தன்னடையே வருவது என்றபடி.

3. வேறு உபாயங்களைச் செய்யாதவனுக்கு, உகந்தருளின நிலங்களில் கைங்கரியம் சாதனகோடியில் சேராது, அக் கைங்கரியமே பிரயோஜனம் என்கைக்குச் சம்வாதம் காட்டுகிறார் 'திருக் கண்ணமங்கையாண்டான்' என்று தொடங்கி. நாஸ்திகன் - பேற்றின் தன்மை அறியாதவன்.

4. அவனுடைய வார்த்தை உத்தேசியமானால் வாய்திறந்து என்னுமல், "சோதிவாய் திறந்து" என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச் செய்கிறார் 'என்னை' என்று தொடங்கி.

யஃ அநந்தஃ ப்ருதிவீம் தத்தே ஶேகரஸ்திதி ஸமஸ்திதாம்
ஸஃ அவதீர்ணஃ ஜகத்யர்த்தே மாம் அக்ரூர இதிவக்ஷ்யதி.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5 : 17 : 12.

வார்" என்கிறபடியே, வார்த்தை அளவிலே ஆயிற்று, அக்குரூரன் அநுபவித்தது; அந்தக் காலத்தில் திருமுகச் செவ்வியும் உத்தேசியமாய் இருக்கிறதாயிற்று இவர்க்கு. உன் தாமரைக் கண்களால் நோக்காய் - [1] வார்த்தையிலே தோற்றாத அன்பும் நோக்கிலே அநுபவிக்கும்படி குளிர நோக்கி அருள வேண்டும்; என்றது, வார்த்தை அருளிச்செய்யப்புக்கு விக்கிலும் குறையும் திருக்கண்களாலே தலைக்கட்டி அருளவேண்டும் என்றபடி. [2] "அழியாதவனே! மறுபடியும் காட்சியைத் தருதலால் என்னைக் காப்பாற்றி அருளவேண்டும்" என்னுமாறு போலே.

[3]**பிள்ளை தேவப்பெருமாள் அரையர்**, 'உன் தாமரைக் கண்களால் நோக்காய், நோக்காய்' என்று பலகாலும் சொல்ல, **ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர்** எழுந்திருந்து 'பிள்ளாய்! நீ இங்ஙனே எம்பெருமான் - திருவுள்ளம் புண்படும்படி பலகாலும் நிர்ப்பந்திக்கிறது என்? அழகிய மிடற்றைத் தந்தாராகில், நல்ல பாட்டைத் தந்தாராகில், பிள்ளைகளையும் செல்வத்தையும் தந்தாராகில் என்செய்யாதாராக நீர் இங்ஙனே கிடந்து படுகிறது?' என்று அருளிச்செய்தாராம். தெண்திரைப் பொருநல் தண் பணை சூழ்ந்த திருப்புளிங்குடிக் கிடந்தானே - [4]திருமேனியில் மிருதுத்தன்மைக்குத் தகுதியான தண்ணீர் நிறைந்திருக்கிற திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளப்பெற்றது. தெளிந்த அலைகளையுடைய திருப்பொருநலோடே சேர்ந்து அழகிய நீர்நிலம் சூழ்ந்த திருப்புளிங்குடியிலே திருக்கண் வளர்கின்றமை உண்டு; இது செய்த அம்சம். உன் தாமரைக்

---

1. "சோதி வாய் திறந்து" என்றதனையும் கூட்டிக்கொண்டு, "உன் தாமரைக் கண்களால் நோக்காய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வார்த்தையிலே' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'வார்த்தை' என்று தொடங்கி.

2. இப்படி வேண்டிக்கொண்டவர்கள் உளரோ? என்ன, 'அழியாதவனே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

தேவ ப்ரபந்நார்த்திஹர ப்ரஸாதம் குரு கேஸவ
அவலோகந தாநேந பூயோ மாம் பாலய அவ்யய.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 1. 20: 19. இது பிரஹ்லாதன் கூற்று.

3. பிராசங்கிகமாக, 'பிள்ளை தேவப்பெருமாள் அரையர்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

4. "தெண்திரை" என்ற அடைமொழிக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'திருமேனியில்' என்று தொடங்கி. மேலே கூறிய அதனை விவரணம் செய்கிறார் 'தெளிந்த' என்று தொடங்கி.

கண்களால் நோக்காய்-[1] செய்த அம்சத்துக்கு நன்றி உள்ளவனாகவும், செய்யவேண்டும் அம்சத்துக்குப் பிரார்த்திக்கவும் வேண்டும் அன்றோ அதிகாரிக்கு. (1)

895.

[2] குடிக்கிடந்து ஆக்கம் செய்து நின் தீர்த்த
அடிமைக் குற்றேவல் செய்து உன்பொன்
அடிக் கடவாதே வழி வருகின்ற
அடியரோர்க்கு அருளி நீ ஒருநாள்
படிக்கு அளவாக நிமிர்த்த நின்பாத
பங்கயமே தலைக்கு அணியாய்
கொடிக்கொள் பொன்மதிள் சூழ் குளிர் வயல் சோலைத்
திருப்புளிங்குடிக் கிடந்தானே.

பொ-ரை :—கொடிகள் கட்டிய அழகிய மதில்கள் சூழ்ந்த குளிர்ந்த வயல்களையும் சோலைகளையுமுடைய திருப்புளிங்குடி என்னும் திவ்விய தேசத்தில் திருக்கண் வளர்கின்றவனே! குல மரியாதையிலே நின்று அதற்குரியதான நலன்களைப் பெருக்கி, இதர விஷயங்களில் ருசியைப் போக்கின உன் விஷயமான அந்தரங்கத் தொண்டுகளைச் செய்து, உன் அழகிய திருவடிகளை விட்டு நீங்காமல் பரம்பரையாய் வருகின்ற அடியோங்களுக்குத் திருவருள் செய்து, நீ முன்பு ஒரு காலத்தில் இந்தப் பூமியை அளக்கவேண்டி அதற்குத் தகுதியாக நிமிர்த்த நின்திருவடித் தாமரையையே என் தலைக்கு அலங்காரமாம்படி செய்தருளவேண்டும் என்கிறார்.

வி-கு :—கிடந்து செய்து ஏவல்செய்து கடவாதே வருகின்ற அடியரோர் என்க. கிடந்தானே! அருளித் தலைக்கு அணியாய் என்க.

ஈடு :—இரண்டாம்பாட்டு. [3] எல்லார்க்கும் சுலபமான உன் திருவடிகளை என் தலையில் வைத்தருள வேண்டும் என்கிறார்.

---

1. தமக்காகத் திருப்புளிங்குடியிலே எழுந்தருளி இருக்க, "நோக்காய்" என்று பிரார்த்திக்க வேண்டுமோ? என்ன, 'செய்த அம்சத்துக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. "தேவத்வமும் நிந்தையானவனுக்கு ஒளிவரும் ஜநிகள் போலே ப்ரஹ்ம ஜந்மமும் இழுக்கு என்பதற்குப் பண்டைநாளில் பிறவி உண்ணூட்டுத் தேசிறே", "ஜநக தசரத வசுதேவ குலங்களுக்கு மூத்த பெண்ணும் நடுவில் பிள்ளையும் கடைக் குட்டியும் போலே இவரும் பிறந்து புகழும் ஆக்கமும் ஆக்கி அஞ்சிறையும் அறுத்தார்" என்பன ஈண்டு நினைவு கூர்க. ஆசார்ய ஹ்ருதயம், சூத். 81, 82.

3. "படிக்கு அளவாக நிமிர்த்த நின்பாத பங்கயமே தலைக்கு அணியாய்" என்பதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

குடிக்கிடந்து - குடிக்குத் தகுதியாக ஒழுகி. என்றது, [1]குல மரியாதைதப்பாதபடி ஒழுகுதலைத் தெரிவித்தபடி. [2]'இக்ஷ்வாகு குலத்தோரில், தமையன் இருக்கத் தம்பிமாரில் முடி சூடி அறிவார் இலர்' என்றான் அன்றோ ஸ்ரீ பரதாழ்வான். ஆக்கம் செய்து - குடியில் [3] பண்டு இல்லாத நன்மைகளை உண்டாக்கி; [4]"பரதன் சடைமுடியுடையவனாய் அழுக்கு அடைந்த தேகத்தையுடையவனாய் உன்வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்; உன் பாதுகைகளை முன்னிட்டுக்கொண்டு இராச்சியபாரம் செய்து வருகிறான்; எல்லோரும் சௌக்கியமாக இருக்கிறார்கள்" என்றும், [5]"ஜடைகளை அணிந்தவனும் மரவுரி தரித்தவனும் கை கூப்பினவனும் பூமியில் விழுந்தவனும் பார்க்க முடியாதவனுமான பரதனை, ஸ்ரீராமன் எவ்வாறு யுகத்தின் முடிவில் சூரியனைக் காண்பார்களோ அவ்வாறு கண்டான்" என்றும், [6] "நஹி தே ராஜபுத்ரம் தம் - அருகே இருக்கச்செய்தேயும் இவனைச் சூழ இருக்கிற நகரமக்கள் இவனை அநுபவிக்கையில் நசை அற்றார்கள்; அதற்கு அடி என்? என்னில், ராஜபுத்ரம் - பெருமாள் பேர நின்ற அநந்தரம் முடிந்தவன்

---

1. குலமரியாதை தப்பாதபடி ஒழுகுதலாவது, இறைவனுக்கு அடிமையாக இருக்கும் தன்மைக்குத் தகுதியாக, அவன் காக்கினும் காக்காவிடினும் அவன் கை பார்த்திருத்தல்.

2. இப்படி ஒழுகினவர்கள் உளரோ? என்ன, 'இக்ஷ்வாகு குலத்தோரில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. பண்டு இல்லாத நன்மைகளாவன, அன்பினால் பரவசப்பட்ட தன்மையால் வந்த வேறுபாடுகள்.

4. இப்படி நன்மை உண்டாக்கினவர்கள் உளரோ? என்ன, 'பரதன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

பங்க திக்தஸ்து ஜடிலஃ பரதஃ த்வாம் ப்ரதீக்ஷதே
பாதுகே தே புரஸ்க்ருத்ய ஸர்வஞ்ச குஸலம் க்ருஹே.

என்பது, ஸ்ரீராமா. யுத். 127 : 5.

5. ஜடிலம் சீரவஸநம் ப்ராஞ்ஜலிம் பதிதம் புவி
ததர்ஸ ராமோ துர்தர்ஸம் யுகாந்தே பாஸ்கரம் யதா.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 100 : 1.

6. நஹிதே ராஜபுத்ரம் தம் காஷாயாம்பர தாரிணம்
பரிபோக்தும் வ்யவஸ்யந்தி பௌராவை தர்மவத்ஸலம்.

என்பது, ஸ்ரீராமா. யுத். 70 : 4. இந்தச் சுலோகத்துக்குப் பிண்டப்பொருள் வருமாறு: "அந்நகரத்து மக்கள், தருமத்தில் மிக்க ஆசையுடையவனும் சக்கரவர்த்தியின் பிள்ளையுமான அந்தப் பரதாழ்வானைக் காவி உடை தரித்திருப்பவனைக் காண்பதற்கு எண்ணவில்லை" என்பது.

மகன் அன்றோ? இவனேதான் நமக்காக இருக்கப் புகுகிறான் என்று இருந்தார்கள். தர்ம வத்ஸலம்-இதற்கும் அந்தச் சக்கரவர்த்தியோடு ஒப்பான்; தர்மத்துக்காகத் தன்னை அழிய மாறினான் அன்றோ அவன்'' என்றும் வருவன காண்க.

[1]ஏபிஸ்ச ஸசிவைஸ் ஸார்த்தம் - தான் ஒருவனுமே போக அமைந்திருக்க, துன்பம்உற்ற பலரையும் கொண்டு போனான்; அதற்கு அடி, 'நாம் ஒருவனுமே அன்றிக்கே, பலர் கண்ணநீரைக் கண்டால் மீளாரோ' என்னுமதனைப் பற்ற. போர் செய்யப் போவாரைப் போலே யானை குதிரை அகப்படத் திரட்டிக் கொடுபோனான் ஆயிற்று; பிரிவில் ஆற்றாமைக்குத் தன்னில் குறைந்தார் ஒருவரும் இலர் ஆயிற்று அங்குள்ள சேனைகளில். ஸிரஸா யாசிதோ மயா-நான் தலையால் இரந்த காரியத்தையும் மறுப்பரோ? [2]"தலையாலே வணங்கின அந்தப் பரதாழ்வானுடைய வார்த்தையை என்னால் நிறைவேற்றப்படவில்லை'' என்றார் அன்றோ பெருமாளும். என்றது, அவனும் தனக்கு அடுக்கும்படி செய்தான், நாமும் நமக்கு அடுக்கும்படி செய்தோம் என்றார் என்றபடி. 'அவன் தலையாலே இரந்த காரியத்தை மறுத்துப் போந்தோம்' என்றே அன்றோ அவர் திருவுள்ளம் புண்பட்டது. ப்ராது: - [3]"உடன்பிறந்தவன் தன்னுடைய சரீரம்'' என்கிறபடியே, அவர் தம் திருமேனியாக அன்றோ என்னை நினைத்திருப்பது? [4]சுலோகத்தில் உள்ள மற்றைப் பதங்கட்கு முன்பு உரைத்ததைப் போன்று உரைத்துக் கொள்க. இப்படி இக்குடியில் இல்லாத ஏற்றங்களையும் செய்து.

பண்டு இல்லாத நன்மைகளைச் செய்தமைக்கு, மற்றும் ஓர் பிரமாணம் காட்டுகிறார் 'ஏபிஃ' என்று தொடங்கி.

1. ஏபிஃச ஸசிவைஃ ஸார்த்தம் ஸிரஸா யாசிதோ மயா
ப்ராதுஃ ஸிஷ்யஸ்ய தாஸஸ்ய ப்ரஸாதம் கர்த்தும் அர்ஹஸி.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 101 : 12.

2. மாம் நிவர்த்தயிதும் யஃ அஸௌ சித்ரகூடம் உபாகதஃ
ஸிரஸா யாசதஃ தஸ்ய வசநம் ந க்ருதம் மயா.

என்பது, ஸ்ரீராமா. யுத். 24 : 19. இச் சுலோகத்துக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவனும்' என்று தொடங்கி. 'நமக்கு அடுக்கும்படி' என்றது, நம்முடைய குணம் இன்மைக்குத் தகுதியாக என்றபடி. விவரணம் செய்கிறார் 'அவன் தலையாலே' என்று தொடங்கி.

3. ஆசார்யோ ப்ரஹ்மணோ மூர்த்திஃ பிதா மூர்த்திஃ ப்ரஜாபதேஃ
மாதா ப்ருதிவ்யா மூர்த்திஸ்து ப்ராதா ஸ்வாமூர்த்திராத்மநஃ.

என்பது, மனுதர்ம சாஸ்திரம்.

4. முதல் பத்து அவதாரிகை 'திருமகள்கேள்வன் மூன்று' பக். 55, 56-இல் காண்க.

என்றது, 'மூத்தார் இருக்க இளையார் முடிசூடக் கடவது அன்று' என்று போந்த இத்தனை முன்பு; ஆற்றாமையும் கண்ணும் கண்ணீருமாய், சடையும் புனைந்து வல்கலையும் உடுத்திருந்தார் இலர் அன்றோ [1],முன்பு இவனை ஒழிய.

நின் தீர்த்த அடிமைக் குற்றேவல் செய்து-[2] தன்னுடைய இனிமையாலே மற்றைப் பேறுகளில் நசை அறுக்க வல்ல அடிமைகளில் அந்தரங்கமான அடிமைகளைச் செய்து. உன் பொன் அடிக் கடவாதே - முன்பு பெரிய ஆற்றாமையோடே ஸ்ரீ வசிஷ்டபகவான் தொடக்கமானாரைப் புருஷகாரமாகக் கொண்டு மீட்பதாகச் சென்றவன், 'நாம் ஐயர் சொன்ன காரியத்தைச் செய்தோமாய் நிறம்பெறலாவது, நீர் பதினால்ஆண்டு இராச்சியத்திலே இருக்கில் காணும்' என்ன, தன் ஆசையால் நிர்ப்பந்திக்குமதுவும் இன்றிக்கே, [3] "அப்போது ஆனந்தம் அடைந்தவனாய் சத்ருக்நாழ்வானோடு கூடினவனாய்த் தேரில் ஏறினான்" என்கிறபடியே, உவகையனாய் மீண்டான் அன்றோ: அப்படியே, [4]உன்னுடைய ஆணையை மீறாமல். உன் திருவடிகளுக்குத் தப்பாமல். அன்றிக்கே, உன்னுடைய விரும்பத்தக்கதான திருவடிகளை அல்லது அறியாதே என்னுதல். அதாவது, வேறு பயன் ஒன்றையும் கருதாதவராய் இருத்தல் என்றபடி.

வழி வருகின்ற அடியரோர்க்கு அருளி - [5] அடிமை முறை தப்பாதே போருகிற வேறு கதி இல்லாத எங்களுக்குத் திரு அருள் செய்து. நீ ஒருநாள் படிக்கு அளவாக நிமிர்த்த நின்

---

1. 'முன்பு இவனை ஒழிய' என்றதன் பின்பு, 'அப்படியே இவரும் பேற்றினை அடைவதில் உள்ள விரைவாலே, பிரபந்நகுலத்தில் முன் இல்லாத "கண்ணநீர் கைகளால் இறைக்கும்", "மண்ணை இருந்து துழாவி" என்பன போன்றவைகளால் சொல்லப்பட்ட அழுவது தொழுவதான செயல்களாலே அதிசயத்தை உண்டாக்கினவர்' என்பனவாகச் சிலவற்றைக் கூட்டி முடிவு காண்க.

2. தீர்த்த அடிமையாவது, உனக்கே அற்றுத் தீரச் செய்கிற அடிமை என்று திருவுள்ளம்பற்றி, அதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'தன்னுடைய' என்று தொடங்கி.

3. தத: ப்ரஹ்ருஷ்டோ பரத: தம் பாதுகே க்ருத்வா ததா
ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்ட: ஶத்ருக்நேந ஸமந்வித:.
என்பது, ஸ்ரீராமா. அயோத். 112: 25.

4. 'உன்னுடைய ஆணையை மீறாமல்' என்றது, இறைவனுக்குத் தம்மைக்கொண்டு திருவாய்மொழி பாடுவிக்கத் திருவுள்ளமானால், அதுகாறும் உண்டாகும் தக்கத்தைப் பொறுத்துக் கொண்டு இருந்து என்றபடி. 'உன் திருவடிகளைத் தப்பாமல்' என்பது பதப் பொருள்.

5. வழி வருதலை விளக்குகிறார் 'அடிமை முறை' என்று தொடங்கி.

பாத பங்கயம் - அங்ஙனம் திருஅருள் புரியும் தன்மை ஒரு நாளிலேயாய்ப் பின்பு வற்றுமதோ? என்கிறார். தடை இல்லாமல் இருப்பதற்கு மேற்பட ருசி வேண்டற்பாலதோ? என்பார் 'படிக்கு' என்கிறார். பூமியை [1]விளாக்குலைகொள்ள விஞ்ச வளருமதிலும் அரிதுபோலே காணும், பூமிக்கு அளவாகத் திருவடிகளைக் [2]குசை தாங்கின அருமையும் என்பார் 'படிக்கு அளவாக நிமிர்த்த' என்கிறார். அன்றிக்கே, [3]உனக்கு அரியது ஒன்றாய் நான் வருந்துகிறேனோ? என்னுதல். இத்தனை அன்றோ செய்யவேண்டுவது என்கிறார் மேல்: நின்பாத பங்கயம் - [4]ஒரு செவ்விப் பூவினைக் கொண்டு காணும் காடும் ஓடையும் அளந்து கொண்டது. [5]ஏதேனுமாகக் கொள்ள நினைத்த காரியத்துக்கு அளவாக்கும் இத்தனையாய் இருந்ததே அன்றோ; பூமிக்கு அளவாக்கின திருவடிகளை என் தலைக்கு அளவு ஆக்கலாகாதோ? [6]"கோலம் ஆம் என் சென்னிக்கு" என்று இருப்பார் தலையிலே வைக்கலாகாதோ? என்றது, [7]"தேவரீருடைய அப்போது அலர்ந்த செவ்வித் தாமரை போன்ற இரண்டு திருவடிகளும் என் தலையை எப்போது அலங்காரம் செய்யப் போகிறது" என்கிறார். ஆக, குணாகுண நிரூபணம் பண்ணாதே எல்லார் தலைகளிலும் வைத்த திருவடிகளை, ஆசையுடைய என் தலையிலும் வைக்கலாகாதோ? என்கிறார் என்றபடி.

---

1. விளாக்கொள்ளுகை-பரத்தல். குலை-கரை. கபளீகரித்தல் என்றபடி.

2. குசை தாங்குதல் - கடிவாளத்தை இழுத்துப் பிடித்தல்.

3. "படிக்கு அளவாக நிமிர்த்த" என்றதற்கு, வேறும் ஒரு வகையில் கருத்து அருளிச்செய்கிறார் 'உனக்கு' என்று தொடங்கி.

4. "பங்கயம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஒரு செவ்விப் பூவினை' என்று தொடங்கி.

5. பூமிக்கு அளவாக நிமிர்த்த திருவடிகளை உம்முடைய தலைக்கு அளவாக்கப் போமோ? என்ன, 'ஏதேனும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. "அணியாய்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'கோலம் ஆம்' என்று தொடங்கி. இது, திருவாய். 4. 3; 6.

7. திருவடி வேண்டிக் கோடற்பாலது என்கைக்கும், திருவடிகள் அலங்காரம் என்கைக்கும் பிரமாணம் காட்டுகிறார் 'தேவரீருடைய' என்று தொடங்கி.

> கதா புந: ஸங்க ரதாங்க கல்பக
> த்வஜாரவிந்த அங்குஸ வஜ்ரலாஞ்சநம்,
> த்ரிவிக்ரம த்வத்சரணாம்புஜ த்வயம்
> மதீய மூர்த்தாநம் அலங்கரிஷ்யதி,

என்பது, தோத்திரத்திரம், 31.

கொடிக் கொள் பொன் மதிள் சூழ் குளிர் வயல் சோலைத் திருப்புளிங்குடிக் கிடந்தானே - [1] "அந்தச் சீதையானவள் ஸ்ரீராம நாமத்தைக் கேட்டதனால் துன்பம் நீங்கினவளாய், ஸ்ரீராமனுடைய உண்மையில் ஐயத்தால் ஒரு துன்பத்தையுடையவளாய்ச் சரத்காலத்தில் மேகங்களால் மறைக்கப்பட்ட சந்திரனையுடைய இரவினைப் போலே இருந்தாள்" என்கிறபடியே, பெருமாள் உளரோ? இலரோ? என்ற ஐயத்தாலேயும் ஒரு சோகம் உண்டு, பிரிவு ஆற்றாமையாலே படுகிறதும் ஒரு சோகம் உண்டு பிராட்டிக்கு; அவற்றுள், திருவடியைக் கண்ட பின்பு ஒன்று தீர்ந்ததே அன்றோ: அப்படியே, காவலோடு கூடிய தாய்ச் சிரமத்தைப் போக்கக் கூடியதான தேசத்திலே திருக்கண் வளரப்பெற்றதனால், "என் வருகிறதோ?" என்கிற அச்சம் தீர்ந்தது. இனி என்னை அங்கீகரிக்குமதுவே குறை; அக்குறையும் தீர்த்தருள வேண்டும் என்கிறார். (2)

896.

கிடந்த நாள் கிடந்தாய் எத்தனை காலம்
கிடத்தி, உன் திரு உடம்பு அசைய!
தொடர்ந்து குற்றேவல் செய்து தொல் அடிமை
வழி வரும் தொண்டரோர்க்கு அருளித்
தடம்கொள் தாமரைக்கண் விழித்து நீ எழுந்து உன்
தாமரை மங்கையும் நீயும்
இடம்கொள் மூஉலகும் தொழ இருந்தருளாய்;
திருப்புளிங்குடிக் கிடந்தானே!

பொ - ரை:— திருப்புளிங்குடி என்னும் திவ்விய தேசத்தில் திருக்கண் வளர்கின்றவனே! இங்குத் திருக்கண்வளர்வதற்குத் தொடங்கின காலம் முதற்கொண்டு ஒரே தன்மையாகத் திருக்கண் வளர்கின்றாய்;

1, திருமதிளைச் சொன்னதற்கும், "தலைக்கணியாய்" என்று கூறியதற்கும் திருஷ்டாந்தம் கூறி, பாவம் அருளிச்செய்கிறார் 'அந்தச் சீதையானவள்' என்று தொடங்கி.

ஸா ராமஸங்கீர்த்தந வீதஶோகா ராமஸ்ய ஶோகேந ஸமாந ஶோகா
ஶரந்முகே ஸாம்புத ஶேஷ சந்த்ரா நிஶேவ வைதேஹஸுதா பபூவ.

என்றது, ஸ்ரீராமா. சுந். 36 : 17.

சுலோகத்தில் "வீதஶோகா" என்னுமிற்க, "ஸமாந ஶோகா" என்றது, சேரும்படி என்? என்ன, 'பெருமாள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "ராம ஸங்கீர்த்தந வீத ஶோகா" என்கையாலே, பெருமாள் உளரோ? இலரோ? என்ற ஐயத்தால் உளதாய சோகம் போயிற்று என்றபடி.

உன் திருமேனி வருந்தும்படி இன்னம் எத்தனை காலம் சயனித்திருப் பாய்? வழி வழியாகத் தொண்டுகளைச் செய்து, பழைமையான அடிமை வழியிலே சேர்ந்திருக்கின்ற தொண்டர்களாகிய எங்களுக்குத் திரு அருள் செய்து, பரந்த தாமரை போன்ற திருக் கண்களை விழித்து, நீ எழுந்து, உன் தேவியோடு, விசாலமான மூன்று உலகங்களும் தொழும்படியாக வீற்றிருக்க வேண்டும்.

வி - கு :—உன் திரு உடம்பு அசையக் கிடத்தி என மாற்றுக. புளிங்குடிக் கிடந்தானே! அருளி இருந்தருளாய் என்க. விழித்து எழுந்து தொழ இருந்தருளாய் என்க.

ஈடு :—மூன்றாம் பாட்டு. [1] திரு உடம்பு வருந்த ஒருபடியே திருக்கண்வளர்ந்தருளாதே, அடியோமுக்காகப் பிராட்டியும் நீயும் எழுந்தருளவேண்டும் என்கிறார்.

கிடந்த நாள் கிடந்தாய்-[2]"கிடந்ததோர் கிடக்கை" என்று கிடை அழகு காணவேண்டும் என்று ஆசைப்பட்டு இருப்பான் ஒருவனுக்காக, ஆசைப்பட்ட அன்று தொடங்கிக் கண்வளர்ந் தருளினாய். எத்தனை காலம் கிடத்தி - இனி ஒருவன் வந்து [3]"கிடந்தவாறு எழுந்திருந்து பேசு" என்னுமளவும் கிடக்கும் இத்தனை அன்றோ. [4]எல்லாச் செயல்களும் "பக்தர்களுக் காகவே" என்று இருக்கை தவிராது அன்றோ. உன் திரு உடம்பு அசைய-மிருதுத் தன்மையையுடைய திருமேனி அசை யும்படி. என்றது, விரும்புகிறவர்களையே பார்க்குமித்தனையோ, உன் தன்மையையும் பார்க்க வேண்டாவோ? என்றபடி. தொடர்ந்து குற்றேவல் செய்து-[5]"இந் நிலையில் செய்ய அடுப்பது

1. "உன் திரு உடம்பு அசைய எத்தனை காலம் கிடத்தி, தாமரை மங்கையும் நீயும் இருந்தருளாய்" என்ற பதங்களைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. திருமாலை, 23. ஆசைப்பட்டிருப்பான் ஒருவன் - தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

3. திருச்சந்தவிருத்தம், 61. 'இனி ஒருவன் வந்து' என்றது, திரு மழிசைப் பிரானை.

4. கிடக்கை இருக்கை எல்லாம் அடியார்கள் இட்ட வழக்காக இருக் குமோ? என்ன, 'எல்லாச் செயல்களும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

நதேரூபம் நசாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம்
ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாஶஸே.

என்பது, ஜிதந்தா ஸ்தோத்திரம், 5.

5. "தொடர்ந்து" என்ற அடைமொழிக்குக் கருத்து அருளிச்செய் கிறார் 'இந்நிலையில்' என்று தொடங்கி.

இது, இந் நிலையில் செய்ய அடுப்பது இது' என்று உணர்த்தி, அந்தரங்கமான தொண்டுகளைச் செய்து. என்றது, [1]பெருமாள், தமக்கு வேண்டிய காரியங்களில் நோக்கு இல்லாமலே இருந்த போதும் 'இவ் அடிமையைக் கொண்டருளவேண்டும், இவ் அடிமையைக் கொண்டருளவேண்டும்' என்று அவ் அவ் காலந் தோறும் [2] "என்னை நியமித்தருளவேண்டும், என்னை நியமித் தருளவேண்டும்" என்று வடிம்பு இட்டு அடிமை செய்தாற் போலே, அந்தரங்கமான தொண்டுகளைச் செய்து என்றபடி.

தொல் அடிமை-[3]ஆத்மாவுக்கு இயற்கையாகவே அமைந்த அடிமை ஆகையாலே பழையதாகப் போருகிற அடிமை. [4] "எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் எல்லா நிலை களிலும் தானுகவே உண்டாகும் கைங்கரியங்கள் வெளிப்பட வேண்டும்" என்னக்கடவது அன்றோ. வழி வரும் தொண்ட ரோர்க்கு அருளி - அடிமை முறை தப்பாமே போருகிற, வேறு கதி இல்லாத எங்களுக்குத் திருவருள்செய்து. இம் மூன்று பாசுரங்களிலும் தம்முடைய வம்ச பரம்பரையின் பெருமை யைச் சொன்னுற்போலே அன்றோ இருக்கிறது; அது அன்று இங்குச் சொல்லுகிறது; 'ஒருவர்க்கேயாய் இருப்பாரை முகம் பார்ப்பார் வேறு ஒருவர் இலர்' என்று தம்முடைய [5]அநந்ய கதித்வத்தைச் சொல்லுகிருர். தடம் கொள் தாமரைக் கண் விழித்து-[6]பொய்கையைக் கண்செறி இட்ட தாமரை போலே, இடமுடைத்தான திருக்கண்களாலே குளிரநோக்கி. நீ எழுந்து-

---

1. அதனைத் திருஷ்டாந்தத்தோடு விவரணம் செய்கிருர் 'பெருமாள்' என்று தொடங்கி.

2. பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷஶதம் ஸ்திதே
ஸ்வயந்து ருசிரே தேஶே க்ரியதாம் இதிமாம்வத.
என்பது, ஸ்ரீராமா. ஆரண். 15 ; 7.

3. அடிமையில் தொன்மை யாது? என்ன, 'ஆத்மாவுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

4. அடிமை இயற்கையாகவே அமைந்திருப்பதற்குப் பிரமாணம் காட்டு கிருர் 'எல்லாக்காலங்களிலும்' என்று தொடங்கி.
அகாரார்த்தாயைவ ஸ்வம் அஹம்அத மஹ்யம் ந நிவஹாஃ
நராணும் நித்யாநாம் அயநம் இதி நாராயணபதம்
யம் ஆஹ அஸ்மை காலம் ஸகலம் அபி ஸர்வத்ர ஸகலாஸு
அவஸ்தாஸு ஆவிஸ்யுஃ மம ஸஹஜ கைங்கர்ய விதய:.
என்பது, அஷ்டஸ்லோகீ.

5. அநந்ய கதித்வம் - வேறு கதி இல்லாமை.

6. "தாமரை" என்ற ஒருமையிலே நோக்காக, பாவம் அருளிச்செய் கிருர் 'பொய்கையை' என்று தொடங்கி. கண்செறியிட்ட - மறைத்த.

நீ எழுந்திருந்து. [1]“சீரிய சிங்கம் அறிவுற்று” என்கிறபடியே, உணர்ந்தருளும் போதை அழகு காண வேண்டும்.

உன் தாமரை மங்கையும் நீயும்-[2]‘பகவத் விஷயத்தில் முதலடி இடுவார் பிராட்டி புருஷகாரமாகப் பற்றவேண்டும்’ என்னு மதனாலே, “பங்கயத்தாள் திருவருள்” என்றார் மேல்; அடிமை செய்யுமிடத்திலும் இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்வதாகச் சொல்லிப் போருமதனைப் பற்றச்சொல்லுகிறார்இங்கு. இடம்கொள் மூஉலகும்-இடமுடைத்தான எல்லா உலகங்களில் உள்ளார்களும். தொழ இருந்தருளாய் - வேறு பிரயோஜனத்தைக் கருதாதவர்களைப் போலே முறையிலே தொழ நீ இருக்கும் இருப்பை நான் கண்டு அநுபவிக்க வேண்டும். திருப்புளிங்குடிக் கிடந்தானே - [3]நீ சுலபனான பின்பு, எல்லாம் செய்தருள வேண்டும். என்றது, விரும்பியனவற்றை எல்லாம் செய்தருளக் கடவதானால், அவற்றில் ஒரு சில செய்தால், குறையும் செய்து தலைக்கட்ட வேண்டாவோ? திருப்புளிங்குடிக் கிடந்தானே! இருந்தருளாய் - [4]சாய்ந்தருளின அழகு காட்டினாய்; இருந்தருளின போதை அழகையும் காட்டி அருளாய்! (3)

897.

புளிங்குடிக் கிடந்து வரகுண மங்கை
இருந்து வைகுந்தத்துள் நின்று
தெளிந்த என் சிந்தை அகம் கழியாதே
என்னை ஆள்வாய் எனக்கு அருளி
நளிர்ந்த சீர் உலகம் மூன்றுடன் வியப்ப
நாங்கள் கூத்து ஆடி நின்று ஆர்ப்பப்
பளிங்கு நீர் முகிலின் பவளம்போல் கனி வாய்
சிவப்ப நீ காண வாராயே.

---

1. “நீ எழுந்து” என்கைக்கு, எழுந்திருக்குமது அழகாய் இருக்குமோ? என்ன, ‘சீரிய’ என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இது, திருப்பாவை.

2. மேல் பாசுரத்தில் “பங்கயத்தாள்” என்று கூறியவர், மீண்டும் “தாமரை மங்கை” என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் ‘பகவத் விஷயத்தில்’ என்று தொடங்கி.

3. “திருப்புளிங்குடிக் கிடந்தானே! இருந்தருளாய்” என்று கூட்டிக் கருத்து அருளிச்செய்கிறார் ‘நீ சுலபனான பின்பு’ என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் ‘விரும்பியனவற்றை எல்லாம்’ என்று தொடங்கி.

4. “கிடந்தானே! இருந்தருளாய்” என்று கூட்டி, இதுகாறும் கூறிய விஷயத்தைச் சுருக்கமாகக் காட்டுகிறார் ‘சாய்ந்தருளின’ என்று தொடங்கி.

பொ - ரை :— திருப்புளிங்குடியிலே திருக்கண்வளர்ந்தும், வரகுணமங்கையிலே வீற்றிருந்தும், ஸ்ரீ வைகுண்டத்திலே நின்றருளியும், தெளிந்திருக்கின்ற என் மனத்தின்கண் பிரியாமல் இருந்து என்னை ஆள்கின்றவனே! எனக்குத் திருஅருள் புரிந்து, குளிர்ந்த உன் கல்யாண குணத்தை மூன்று உலகங்களும் ஒரு சேர ஆச்சரியப்படும்படியாகவும், நாங்களும் கூத்து ஆடி நின்று ஆனந்தத்தாலே ஆரவாரிக்கும்படியாகவும், தெளிந்த தண்ணீரை முகந்துள்ள காளமேகத்திலே பவளக்கொடி படர்ந்தாற் போன்று கனிந்த திருவாயானது சிவந்து தோன்றும்படி நாங்கள் காண நீ வரவேண்டும்.

வி - கு :— எனக்கு அருள நீ வாராய் என முடிக்க. 'அருளி' செயவெனெச்சத்திரிபு. அருளி - அருள. களிர்ந்த சீரை உலகம் மூன்று உடன் வியப்ப, நாங்கள் நின்று ஆர்ப்ப, பவளம்போல் கனிவாய் சிவப்ப நீ வாராய் என்க.

ஈடு :— நாலாம் பாட்டு. [1]திருப்பதிகளிலே எழுந்தருளியிருப்பவனாய் என்னை இவ்வளவு ஆக்கினாற்போலே, மேலும் எனது விருப்பத்தைச் செய்தருளவேண்டும் என்கிறார்.

புளிங்குடிக் கிடந்து வரகுணமங்கை இருந்து வைகுந்தத்துள் நின்று - திருப்புளிங்குடியிலே "கிடந்ததோர் கிடக்கை" என்னும் அழகினைக்காட்டியும், வரகுணமங்கையிலே [3]"பிரான் இருந்தமை காட்டினீர்" என்னும் இருப்பின் அழகினைக் காட்டியும், ஸ்ரீ வைகுண்டத்திலே [4]"நிலையார நின்றான்" என்னும் நிலையின் அழகினைக் காட்டியும் அன்றோ என்னைப் புகுர நிறுத்திற்று? இவை எல்லாம் நான் இரந்ததற்காகவோ நீ செய்தது? தெளிந்த என் சிந்தை அகம் கழியாதே - 'தெளிந்த சிந்தை' என்னும் இவ்விடத்தில், [5]பட்டர், திருநாராயணபுரத்

---

1. முன் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். இவ்வளவாக்குகை - இத்தகைய பக்தியை விளைக்கை.

2. "கிடந்ததோர் கிடக்கை" என்பது, திருமாலை.

3. "பிரான் இருந்தமை காட்டினீர்" என்பது, திருவாய்மொழி.

4. "நிலையாரநின்றான்" என்பது, திருவாய்மொழி.

5. "தெளிந்த" என்றதற்கு, எத்துணைத் துக்கங்கள் வந்தாலும் கலங்காத என்று பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, அதற்கு ஐதிஹ்யம் காட்டுகிறார் 'பட்டர்' என்று தொடங்கி. 'திருநாராயணபுரத்தில் வெறுப்பிலே' என்றது, எம்பெருமான் திருமேனிக்கும் அழிவு வந்து, பிள்ளை திருநறையூர் அரையரும் திருநாட்டுக்கு எழுந்தருளினதால் வந்த துக்கத்தைக் குறித்தபடி. எலும்பு உரமுடைய - வலிமையையுடைய; ஆற்றலையுடைய. எலி எலும்பன் - வலிமை இல்லாதவன்: சிறிய பலத்தையுடையவன்.

தில் வெறுப்பிலே, 'தேவர் சுவாதந்திரியம் எல்லாம் காட்டினு லும் பின்னையும் பண்ணின நம்பிக்கையில் குலைத்தல் இன் றிக்கே இருக்கும்படி எலும்பு உரமுடைய **எம்பெருமானர்** போல்வார் பக்கல் செய்யுமதனை, எலி எலும்பனை அடியேன் பக்கலிலும் செய்வதோ? என்றது,[1] "மஹாவிஸ்வாஸ பூர்வகம்- மிகப் பெரிய நம்பிக்கை முன்னாக" என்கிறபடியே, ஏதேனும் ஒன்று வந்தாலும் '**இங்குத்தைக்கு வருவதாய் வந்தது ஒன்று அன்று; இதற்கு அடி, நம்முடைய பாவம்**' என்று பண்ணின நம்பிக்கை குலையாதார் விஷயத்திலே செய்யுமதனை, இது தானே காரணமாக நெஞ்சு நெகிழும்படி இளநெஞ்சர் பக்கலி லும் அதனைச் செய்யக் கடவதோ?' என்றாராம் என்றபடி. அன்றிக்கே, [2]'தண்ணியன்' என்று அகலாதபடி "கண்கள் சிவந்து" என்ற திருவாய்மொழியில் என் மனத்தினைத் தெளி வித்தும் அதனைக் கைவிடாதே எப்பொழுதும் எழுந்தருளி யிருந்து என்னுதல்.

[3]என்னை ஆள்வாய் - என்னை, 'தண்ணியன்' என்று அகல வும் ஒட்டாதே, பிரிவாற்றாமையால் முடியவும் ஒட்டாதே, குண ஞானத்தாலே தரிப்பித்துக்கொண்டு போந்தாய். எனக்கு அருளி - புறம்பு போகாதபடி வளைத்து, நீயும் காப்பாற்ற விட் டால் எங்ஙனே தரிக்கும்படி? நளிர்ந்த சீர் - நினைத்தவர்கள் மனம் குளிரும்படியான சீலகுணத்தை. என்றது, '**ஆழ்வார் விரும்பியதைச் செய்தருளினன்**' என்ற கல்யாண குணத்தை என்றபடி. உலகம் மூன்று உடன் வியப்ப - [4] விலக்ஷணரோடு அல்லாதாரோடு வாசி அற எல்லாரும் ஒக்க அநுபவித்து ஆச்சரியப்படும்படியாக. நாங்கள் கூத்தாடி நின்று ஆர்ப்ப - நாங்கள் ஆச்சரியப்படும் அளவு அன்றிக்கே, வேறுபட்டவர் கள் ஆகும்படி. [5] இவர்க்கு ஆச்சரியப்படக் காலம் இல்லை ஆயிற்று.

பளிங்கு நீர் முகிலின் பவளம் போல் கனி வாய் சிவப்ப - தெளிந்த நீரை முகக்கையாலே காணுதற்கு இனியதான மேக

---

1. மேற்கூறியதை விவரணம் செய்கிறார் 'மஹா விஸ்வாஸம்' என்று தொடங்கி.

2. "தெளித்த" என்பதற்கு, வேறும் ஒரு பொருள் அருளிச்செய் கிறார் 'தண்ணியன்' என்று தொடங்கி.

3. ஆளும் பிரகாரத்தை அருளிச்செய்கிறார் 'என்னை' என்று தொடங்கி.

4. 'விலக்ஷணர்' என்றது, தேவர்களை. 'அல்லாதார்' என்றது, மக்களை.

5. இவர்க்கு ஆச்சரியப்பட வேண்டாவோ? என்ன, 'இவர்க்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

மானது பவளத்தைப் பூத்தாற்போலே ஆயிற்று, திரு அதரத்தில் பழுப்பு இருப்பது. [1] இவர் கூத்தாடி நின்று ஆர்த்தலைக் கண்டு அவன் செய்யும் புன்சிரிப்பு இருக்கிறபடி. நீ காண வாராய்-என் எதிரே உன் அழகு காண வரவேண்டும். [2] அவன் கூத்து இருக்கிறபடி. [3] அவன் மாறி மாறி இடும் அடி, வல்லார் ஆடினாற் போலே காணும் இருப்பது. [4] பிள்ளை அழகிய மணவாள அரையரை, பெருமாள் ஒருநாள் அருளப்பாடிட்டு, 'நாம் இங்ஙனே நடக்கிறோம்; அதற்கு ஈடாக நீ ஆடிக்காண்!' என்ன, 'தம்பிரானே! அந் நடைக்கு ஈடாக என்னால் ஆடப் போமோ? [5] "கானகம்படி உலாவி உலாவி" என்கிறபடியே, தேவருடைய குழல் ஓசையைக் கேட்டவாறே, பாடல் தவிர்ந்தார்கள்! தேவர் இயல்பாகவே நடக்கிற நடைக்குப் பயிற்சியின் பலத்தால் உண்டான தங்கள் ஆடல் தவிர்ந்தார்கள்; [6] குரக்குக் கைகொடு கூழ்துழாவி அடியேன் தேவர் திருமுன்னே ஆட வல்லேனோ? என்றாராம். (4)

898.

பவளம்போல் கனி வாய் சிவப்ப நீ காண
வந்து நின் பல் நிலா முத்தம்
தவழ் கதிர் முறுவல் செய்து நின் திருக்கண்
தாமரை தயங்க நின்றருளாய்
பவள நன் படர்க்கீழ்ச் சங்கு உறை பொருநல்
தண் திருப்புளிங்குடிக் கிடந்தாய்!
கவள மாக் களிற்றின் இடர் கெடத் தடத்துக்
காய் சினப் பறவை ஊர்ந்தானே!

---

1. "நாங்கள் கூத்தாடி நின்று ஆர்ப்ப" என்றதன்பின், "கனிவாய் சிவப்ப" என்று கூறியதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவர் கூத்தாடி' என்று தொடங்கி.

2. "நாங்கள் கூத்தாடி நின்று ஆர்ப்ப நீ வாராய்" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'அவன் கூத்து இருக்கிறபடி' என்று.

3. அவன் வருவது கூத்து ஆகுமோ? என்ன, 'அவன் மாறி மாறி' என்று தொடங்கி அதற்கு விடை அருச்செய்கிறார்.

4. அவன் நடத்தல் கூத்து என்பதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'பிள்ளை அழகிய மணவாள அரையரை' என்று தொடங்கி. 'பெருமாள்' என்றது, திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை.

5. அவன் நடைக்கு ஈடாக ஆடப் போகாது என்பதற்கு மேற்கோளும், அம்மேற்கோள் பாசுரத்திற்குப் பொருளும் அருளிச்செய்கிறார் 'கானகம்' என்று தொடங்கி. இது, பெரியாழ்வார் திருமொழி, 3. 6: 4.

6. குரக்குக்கை - குரக்கு வலித்த கை. குரக்கு - குரக்குவாதம்.

பொ - ரை :—நல்ல பவளங்களினது கொடியின் கீழே சங்குகள் தங்கி இருக்கின்ற தாமிரபரணியையுடைய குளிர்ந்த திருப்புளிங்குடியிலே திருக்கண்வளர்கின்றவனே! கவளத்தை உண்ணுகின்ற பெரிய யானையினது துன்பம் கெடும்படி அந்தத் தடாகத்தின் அருகே கோபிக்கின்ற சீற்றத்தையுடைய கருடப்பறவையை நடத்திக்கொண்டு சென்றவனே! நீ, பவளம்போன்ற கனிந்த திரு அதரமானது செந்நிறத்தோடு தோன்ற, உன் திருக்கண்களாகிய தாமரை விளங்கித் தோன்ற, நினது பல்லாகிய வெள்ளிய முத்துக்களின் ஒளி தவழும்படியாகப் புன்முறுவல் செய்துகொண்டு வந்து நான் காணும்படி நின்றருளவேண்டும்.

வி - கு :—பறவை ஊர்ந்தானே! வாய் சிவப்ப, தாமரை தயங்க, முறுவல் செய்து வந்து காண நின்றருளாய் எனக் கூட்டுக.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [1]ஸ்ரீ கஜேந்திராழ்வானுக்கு வந்து தோற்றினாற் போலே வந்து தோற்றியருளவேண்டும் என்கிறார்.

பவளம்போல் கனி வாய் சிவப்ப நீ காண வந்து-[2]"மௌனமாக இருக்குமவன், விருப்பம் இல்லாதிருக்குமவன்" என்கிறபடியே, ஒன்றுக்கும் உன் தன்மையில் வேறுபடாத நீ, அநுகூலர்களைக் கண்ட காட்சியாலே அகவாயில் அன்பு தோன்ற தன்மைகள் வேறுபட்டவனாய்ப் புன்முறுவல் செய்து நிற்கும் படியைக் காண வரவேண்டும். நின் பல் நிலா முத்தம்-ஒளியையுடைய பல்லாகிற முத்துக்களின் வரிசை, கதிர் தவழ் முறுவல் செய்து - ஒளி உள் அடங்காமல் புறம்பே தவழும்படி புன்முறுவல் செய்து. அன்றிக்கே, நின் பல் [3]நிலாக் கதிர் முத்தம் தவழ் முறுவல் செய்து என்று பிரித்துக் கூட்டி, நின் பல்லினுடைய மிக்க ஒளியானது திரு அதரத்திலே தவழும்படி முறுவல் செய்து என்னுதல். என்றது, திரு அதரத்தினின்றும் மிக்க ஒளி புறப்படும்படி ஒளிசெய்து என்றபடி. முத்தம்-திருஅதரம். நின் திருக்கண் தாமரை தயங்க நின்றருளாய் - திருக்கண்களினுடைய புன்புறுவல் இருக்கிறபடி. தயங்குகையாவது, அப்போது பிறந்த ஒளி ஆதல்; கடல் சலித்தாற் போலேஅசைந்து

---

1. நான்காம் அடியைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "அவாக்யநாதர:" என்பது, சுருதி.

3. இரண்டாவது பொருளில் "நிலாக்கதிர்" என்பது, ஒரு பொருட் பன்மொழி; "குழிந்தாழ்ந்த கண்" என்பது போன்று. மிக்க ஒளி என்பது பொருள்.

வருகிறபடியைச் சொல்லிற்றுதல். காண வந்து நின்றருளாய்-முந்துற நாலடி வந்து, பின்னை அதுவும் மாட்டாதே செயல் அற்றவனாய் நிற்கும் நிலையைக் காணவேண்டும்.

நல் பவளம் படர்க்கீழ்ச் சங்கு உறை பொருநல் தண் புளிங்குடிக் கிடந்தானே-நல்ல பவளத்தூறுகளின் கீழே சங்குகள் கேடு அற்று வசிக்கிற திருப்பொருநலை உடைத்தாய், சிரமத்தை நீக்கக் கூடியதான திருப்புளிங்குடியிலே திருக்கண் வளர்கிறவனே! படர் - தூறு. என்றது, அவ் ஊரிலே உள்ள பொருள்களுக்கு, தீங்கு செய்வார்கட்கு அஞ்சி வசிக்குமது இல்லை ஆயிற்று என்றபடி. [1] அத் தேசத்தின் தன்மை இதுவாக இருக்க, 'எனக்கு நீ கிடைப்பாயோ? கிடையாயோ?' என்று நான் அஞ்சும்படி இருக்கிறது என்? என்கிறார் என்றபடி. கவளம் மா களிற்றின்-கவளம் கொண்டிருப்பதான பெரிய யானையினது. 'கவளம் கொண்ட' என்றது, மதத்தால் இன்புற்ற யானை என்றபடி. இதனால், இதற்கு முன்பு இடர்பட்டு அறியாத யானை என்பதனைத் தெரிவித்தவாறு. இடர் கெட - [2]"வாராய் என் ஆர் இடரை நீக்காய்" என்கிறபடியே, தன் வாயால் "ஆர் இடர்" என்னும்படி அன்றோ பட்ட இடரின் கனம். [3]"ஆனையின் துயரம்" என்று நெஞ்சு உளுக்கும்படி அன்றோ பட்டது. தடத்து - [4]தன் நிலம் அல்லாத பொய்கையிலே மிகச் சிறிய பொருளின் (முதலை) கையிலே அகப்பட்டு மாற்று வினை செய்வதற்கு இடம் இன்றிக்கே இருக்கும்படியான ஆபத்துப் போகும்படியாக. தடம் என்று கரைக்கும், பொய்கைக்கும் பெயர். காய் சினம் பறவை ஊர்ந்தானே -

---

1. ஊரை வர்ணிப்பவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'அத்தேசத்தின்' என்று தொடங்கி.

2. மேலே "மா" என்பதனைக் களிற்றுக்கு அடைமொழி ஆக்கிப் பொருள் அருளிச்செய்தார்; இங்கு இடருக்கு அடைமொழியாக்கிப் பொருள் அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, பொருளும், அதற்கு மேற்கோளும் அருளிச்செய்கிறார் 'வாராய்' என்று தொடங்கி. இது, சிறிய திருமடல். 50.

3. அதற்கே மற்றும் ஒரு பிரமாணம் காட்டுகிறார் 'ஆனையின்' என்று தொடங்கி. இது, பெரிய திருமொழி, 2. 3: 9. நெஞ்சுளுக்கும்படி - நெஞ்சு ஈடுபடும்படி.

4. "தடத்து" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தன் நிலம்' என்று தொடங்கி.

நெடும்புனலுள் வெல்லும் முதலை; அடும், புனலின்
நீங்கின் அதனைப் பிற.

என்ற திருக்குறள் இங்கு ஒருபுடை ஒப்பு நோக்கலாகும்.

பகைவர்களைக் காயும் சினத்தையுடைய பெரியதிருவடியை, [1] அவன் வேகம் பொறாமை அவனை நடத்திக்கொண்டு வந்து தோற்றிற்றிலையோ? [2] அவ் யானையின் நிலை காண் என்நிலை! அதற்குத் தோற்றினாற்போலே என் முன்னே வந்து தோற்றியருள வேண்டும். (5)

899.

[3]காய் சினப் பறவை ஊர்ந்து பொன் மலையின்
மீமிசைக் கார் முகில் போல்
மா சின மாலி மாலிமான் என்று அங்கு
அவர் படக் கனன்று முன் நின்ற
காய் சின வேந்தே! கதிர் முடியானே!
கலி வயல் திருப்புளிங்குடியாய்!
காய் சின ஆழி சங்கு வாள் வில் தண்டு
ஏந்தி எம் இடர் கடிவானே!

பொ-ரை:—மகாமேருமலையின் மேலே தங்கி இருக்கின்ற நீர் உண்ட கரிய மேகம் போன்று, பகைவர்களைக் கோபிக்கின்ற கருடப் பறவையை ஏறி நடத்தி, மிக்க சினத்தையுடைய மாலி என்ன, சுமாலி என்ன ஆகிய அவர்கள் அவ் இலங்கையிலே இறக்கும்படி முன் நின்ற காய்சின வேந்தே! கதிர் முடியானே! செழித்த வயல் சூழ்ந்த திருப்புளிங்குடியாய்! காய்கின்ற சீற்றத்தையுடைய சக்கரமும் சங்கும் வாளும் வில்லும் தண்டும் ஆகிய ஐந்து ஆயுதங்களையும் ஏந்திக்கொண்டு வந்து எம் துன்பத்தை நீக்குகின்றவனே! திருக்கண் தாமரை தயங்க நின்றருளாய்.

---

1. "விடமுடை அரவின் உடல் உயிர் உருங்குவணம்
அவன், மடிமேல் வலந்தது பாம்பு"

என்ற பரிபாட்ற் பகுதியையும், (பரிபாடல், 4, 42-43.)

"இன்னும் அது கடவுட்கொடி என்பது தோன்ற 'அவன்' என உயர் திணையாற் கூறினார்" என்ற அதன் உரையையும் ஈண்டு நோக்குக. திருவாய்மொழி, முதற் பத்து ஈட்டின் தமிழாக்கம், பக். 251 காண்க. (78-ஆம் பாசுர வியாக்.)

2. "இடர்கெட" என்றதற்கு, பாவம் 'அவ் யானையின்' என்று தொடங்கும் வாக்கியம். "ஊர்ந்தானே" என்றதற்கு, பாவம், 'அதற்கு' என்று தொடங்கும் வாக்கியம்.

3. கருமுகில் தாமரைக் காடு பூத்து நீடு
இருசுடர் இருபுறத்து ஏந்தி ஏடு அவிழ்த்
திருவொடும் பொலிய ஓர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோல் கலுழன்மேல் வந்து தோன்றினான்.

என்ற கம்பராமாயணச் செய்யுள், ஈண்டு ஒப்பு நோக்கல் தகும்.

வி-கு:—'காய் சின வேந்து' அத் திவ்ய தேசத்து இறைவன் திருப்பெயர். 'தயங்க நின்றருளாய்' என்ற மேல் பாசுரத்திலுள்ள வினையை இதற்கும் கொணர்ந்து கூட்டுக.

ஈடு:— ஆறும்பாட்டு. [1] நீர் விரும்பினவற்றைச் செய்ய ஒண்ணாதபடி தடைகள் பிரபலமாக அன்றோ இருக்கின்றன? என்ன, மாலி, சுமாலி, மால்யவான் என்னும் இவர்களைக் காட்டிலும் வலியவோ என் விரோதிகள்? என்கிறார்.

காய் சினம் பறவை ஊர்ந்து - [2] பகைவர்களிடத்து உனக்குக் கண்ணோடிலும் கண்ணற்று அழியச் செய்யும் பெரிய திருவடியை நடத்தி. பொன்மலையின் மீமிசைக் கார் முகில் போல் - அப்பொழுது இருக்கும்படி. மேருவைக் [3] கினிய காளமேகம் படிந்தாற் போலே ஆயிற்று இருப்பது. இப்போது இது சொல்லுகிறது, பெரிய திருவடிமுதுகில் இருப்பைக் காண்கைக்காக. மா சின மாலி - பெரிய சினத்தையுடையனாய்க் கொண்டு வந்த மாலி. [4] மாலிமான்-மஹானான மாலி; சுமாலி என்றபடி. என்ற அவர் அங்கு பட - என்கிறவர்கள் அங்கே முடியும் படியாக. கனன்று முன் நின்ற - சீறி அவர்கள் முன்னே நின்ற. வடிவைக் கண்டபோதே எதிரிகள் முடியும்படியாக அன்றோ வீரம் இருப்பது; ஆதலின் 'முன் நின்ற' என்கிறார். காய் சின வேந்தே - திருநாமம். காயும் சினத்தையுடைய நிர்வாஹகனே! என்றபடி. கதிர் முடியானே - விளங்குகின்ற திருமுடியையுடையவனே! என்றது, நீ பாதுகாப்பதற்கு முடிசூடி இருக்க, நான் இழக்கவோ? என்கிறார் என்றபடி. கலி வயல் திருப்புளிங்குடியாய் - நிறைந்த வயல்களையுடைய திருப்புளிங்குடியிலே திருக்கண்வளர்ந்தருளுகிறவனே! நீ சேய்மையில் உள்ளவனாய்த்தான் நான் இழக்கிறேனோ? என்பார் '**திருப்புளிங்குடியாய்**' என்கிறார். காய் சினம் ஆழி சங்கு வாள் வில் தண்டு

---

1. இரண்டாம் அடியைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. 'பகைவர்களிடத்து' என்றது முதல் 'அழியச் செய்யும்' என்றது முடிய, "காய்சினம்" என்ற அடைமொழியின் கருத்து.

3. கினிய - கபளீகரிக்க.

4. மாலி சுமாலியைக் கூறியது, மால்யவானுக்கும் உபலக்ஷணம். சுமாலியும் மாலியவானும் ஓடிப் போகையாலே, "அவர்பட" என்றது, அவர்களுடைய வீரம் ஒளி இவைகளின் வதத்தைத் தெரிவித்தபடி. வீரம் அற்றவர்களாய், ஒளி அற்றவர்களாய்ப் பயந்து ஓடினமையைத் தெரிவித்தவாறு.

ஏந்தி [1]எம் இடர் கடிவானே - காயும் சினத்தையுடைய திரு ஆழி முதலான திவ்விய ஆயுதங்களைத் தரித்தது அடியார்களுடைய ஆபத்தைப் போக்குகைக்காக அன்றோ? "எம் இடர் கடிவானே! திருக்கண் தாமரை தயங்க நின்றருளாய்" என்று மேல் பாசுரத்தோடே கூட்டி வினை முடிக்க. (6)

900

எம் இடர் கடிந்து இங்கு என்னை ஆள்வானே!
இமையவர் தமக்கும் ஆங்கு அனையாய்!
செம் மடல் மலரும் தாமரைப் பழனத்
தண் திருப்புளிங்குடிக் கிடந்தாய்!
[2]நம்முடை அடியர் கவ்வை கண்டு உகந்து
நாம் களித்து உளம் நலம் கூர
இம் மட உலகர் காண நீ ஒருநாள்
இருந்திடாய் எங்கள் கண்முகப்பே.

பொ - ரை :—என்னுடைய பிறவித் துன்பத்தைப் போக்கி, இந்த உலகத்திலேயே என்னை ஆள்கின்றவனே! பிரமன் முதலான தேவர்களையும் அப்படியே ஆள்கின்றவனே! சிவந்த இதழ்கள் மலர்கின்ற தாமரைகள் நிறைந்த வயல்களால் சூழப்பட்ட குளிர்ந்த திருப்புளிங்குடியில் திருக்கண்வளர்கின்றவனே! உன்னுடைய அடியார்கள் உன்னை அநுபவித்து மகிழ்கின்ற ஆரவாரத்தைக் கண்டு நாங்கள் மகிழ்ந்து களித்து மனத்திலே பக்தியானது மேன்மேல் என மிக்கு வளர எங்களுடைய கண் முன்னிலையில், அறியாமை பொருந்திய இந்த உலக மக்கள் காணும்படி ஒருநாள் வீற்றிருந்தருளவேண்டும்.

வி - கு :—கண்டு உகந்து களித்து நலம் கூர கண்முகப்பு ஒருநாள் இருந்திடாய் என்று கூட்டுக. இம் மட உலகர் காண இருந்திடாய் என்க. [1] 'நம்முடை அடியர்' என்ற இடத்தில் 'நம்' என்பது ஈண்டு முன்னிலைக்கண் வந்தது.

ஈடு :—ஏழாம்பாட்டு. [3] வலி அற்றவர்களோடு வலிமிக்கவர்களோடு வாசி அறக் காப்பவனான நீ, நாங்கள் வாழும்படி கண் எதிரே ஒருநாள் இருக்கவேண்டும் என்கிறார்.

---

1. "எம்" என்ற சொல், ஈண்டு, பொதுவிலே அடியார்களைக் கூறுகின்றது.
2. ஈண்டு, திருவாய்மொழி முதற்பத்தின் 29-ஆம் திருப்பாசுரத்தின் விசேடக் குறிப்பினை நோக்குக.
3. "என்னை ஆள்வானே! இமையவர் தமக்கும் ஆங்கனையாய்! எங்கள் கண்முகப்பே இருந்திடாய்" என்பனவற்றைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

எம் இடர் கடிந்து இங்கு என்னை ஆள்வானே - எங்களுடைய பிறவியின் காரணமாக வந்த எல்லாத் துக்கங்களையும் போக்கி, [1] பகவானுடைய ஞானத்துக்கு அடைவு இல்லாத இந்த உலகத்திலே என்னை அடிமை கொள்ளுகின்றவனே! இமையவர் தமக்கும் ஆங்கு அனையாய் - [2] ஒரு கைம் முதலும் இல்லாத எங்களுக்கு அன்றிக்கே, "ஈஸ்வரோஹம் - நான் ஈஸ்வரன்" என்று இருக்கின்ற பிரமன் சிவன் முதலாயினோர்கட்கும் அங்கு அப்படி நிர்வாஹகன் ஆனவனே! செம் மடல் மலரும் தாமரைப் பழனம் - சிவந்த மடல் மலராநின்றுள்ள தாமரைகள் பொருந்திய நீர்நிலங்களையுடைய. தண் திருப்புளிங்குடிக் கிடந்தாய் - சிரமத்தைப் போக்குகிற திருப்புளிங்குடியில் திருக்கண்வளர்கின்றவனே! என்றது, [3] உள்ளும் புறம்பும் எல்லாம் தாமரையாகவே இருக்கின்றன என்றபடி.

நம்முடை அடியர் கவ்வை கண்டு உகந்து - [4] உன் அடியார் உன்னை அநுபவிக்கிற ஆரவாரத்தைக்கண்டு நாங்கள்உகந்து. நாம் களித்து உளம் நலம் கூர - அந்த உகப்புத் தலைமண்டை

1. "இங்கு" என்ற சொல்லுக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பகவானுடைய' என்று தொடங்கி.

2. இமையவர்க்கும் என்னாமல், "இமையவர் தமக்கும்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஒரு கைம்முதலும்' என்று தொடங்கி. ஆங்கு - அந்த உலகங்களிலும். அனையாய் - அப்படிப்பட்டவனே!

3. "செம் மடல் மலரும் தாமரை" என்று புறத்திலே தாமரையைச் சொல்லி, "கிடந்தாய்" என்று அவனைச் சொன்னதற்கு, பாவம் அருளிச் செய்கிறார் 'உள்ளும் புறம்பும்' என்று தொடங்கி. 'உள்ளே தாமரை' என்றது, இறைவனுடைய திரு அவயவங்களை. இங்கு,

> கரை பொருது ஒழுகும் காவிரி ஆறே ;
> ஆற்றிடைக் கிடப்பது ஓர் ஐந்தலை அரவே ;
> அரவம் சுமப்பது ஓர் அஞ்சன மலையே ;
> அம்மலை பூத்தது ஓர் அரவிந்த வனமே ;
> அரவிந்த மலர்தொறும் அதிசயம் உளவே ;
> ....
> ....
> உவப்புடன் ஒருகால் நோக்கிப்
> பவக் கடல் கடக்கும் பரிசு பண்ணினவே.

என்ற திவ்விய கவியின் கவிச்சித்திரம் கண்முன் நிற்கின்றது. திரு அரங்கக் கலம்பகம். 73.

4. 'உன் அடியார்' என்றது, திருப்புளிங்குடியில் ஸ்ரீ வைஷ்ணவர்களை.

இட்டு, மனத்திலே சிநேகமானது மேன்மேல் என மிக்கு வர. இம் மட உலகர் காண - இந்த உலகத்தில் அறிவுகேடராய், இடக்கை வலக்கை அறியாத மனிதர்களும் கண்களாலே காணும்படியாக. நீ ஒருநாள் இருந்திடாய் எங்கள் கண் முகப்பே - எங்கள் கண் வட்டத்திலே ஒருநாள் இருந்தருள வேண்டும். என்றது, நித்தியசூரிகள் எப்பொழுதும் பார்த்துக் கொண்டே இருப்பதற்கு விஷயமான நீ, ஒருநாள் எங்கள் கண்களுக்கும் விஷயமாய் இருந்தால் ஆகாதோ? என்கிறார் என்றபடி. உன்னுடைய காட்சி, அதிகாரத்தையுடைய ஒரு சிலர்க்கேயாய் இருக்கவேண்டுமோ? என்பார் '**எங்கள் கண் முகப்பே**' என்கிறார். (7)

901.

எங்கள் கண்முகப்பே உலகர்கள் எல்லாம்
இணை அடி தொழுது எழுது இறைஞ்சித்
தங்கள் அன்பு ஆரத் தமது சொல் வலத்தால்
தலைத்தலைச் சிறந்து பூசிப்பத்
திங்கள்சேர் மாடம் திருப் புளிங்குடியாய்!
திரு வைகுந்தத்துள்ளாய்! தேவா!
இங்கண் மா ஞாலத்து இதனுளும் ஒருநாள்
இருந்திடாய் வீற்று இடம் கொண்டே.

பொ - ரை:—சந்திரன் வந்து தங்கும்படி உயர்ந்திருக்கின்ற மாடங்களையுடைய திருப்புளிங்குடியில் சயனித்திருக்கின்றவனே! திரு வைகுந்தத்து நின்ற திருக்கோலமாய் எழுந்தருளிஇருப்பவனே! தேவனே! எங்கள் கண் முன்னே, உலகத்தினர் எல்லாரும் இரண்டு திருவடிகளையும் தொழுவதும் எழுவதுமாய் இருந்து வணங்கித் தங்களுடைய பக்திக்குத் தகுதியாக ஒவ்வொருவரும் தாம் தாம் சொல்லக் கூடிய அளவிலே அவர் அவர்கள் மேல்விழுந்து துதித்து மிகவும் கொண்டாட, இடத்தையுடைய பெரிய இந்த உலகத்திலே இந்தத் திருப்புளிங்குடியிலும் இடம் கொண்டு உனது மேன்மை தோன்ற ஒரு நாளாவது இருந்தருளவேண்டும்.

வி - கு:—எங்கள் கண்முகப்பே இடம் கொண்டு வீற்று இருந்திடாய் என்று கூட்டுக. உலகர்கள் இறைஞ்சிப் பூசிப்ப இருந்திடாய் என்க. இனி, பூசிப்பத் திருப்புளிங்குடியில் நிற்பவனே! என்று கூட்டலுமாம்.

ஈடு :—எட்டாம் பாட்டு. [1] பரமபதத்திலே அன்றோ வீற்றிருத்தலின் அழகு காட்டலாவது என்ன? அவ் இருப்பின் அழகினை நாங்கள் காணத் திருப்புளிங்குடியிலே ஒருநாள் இருந்தருள வேண்டும் என்கிறார்.

எங்கள் கண்முகப்பே இருந்திடாய் - எங்கள் கண்முகப்பே இருக்கவேண்டும். அது செய்யுமிடத்து, உலகர்கள் எல்லாம் இணை அடி தொழுது எழுது இறைஞ்சி - உலகத்துள்ளார் அடங்க, திருவடிகளில் உண்டான சேர்த்தி அழகு கண்டு திருவடிகளிலே விழுவது எழுவதாய்க் கொண்டு வணங்கி. தங்கள் அன்பு ஆர - தங்கள் பக்தி மிக்கு வர. தமது சொல் வலத்தால் - தமது ஆற்றலுக்குத் தகுதியான சொற்களாலே என்னுதல். அன்றிக்கே, தாம் தாம் சொல்ல வல்ல அளவுகளாலே என்னுதல்.[2] "அந்தப் புராண புருஷனைப் பற்றி நான் அறிந்த அளவு சொல்லுகிறேன்" என்பது ஸ்ரீ நாராயணீயம். [3] அதாவது, 'நூறு பிராயம் புகுவீர், பொன்னாலே பூணுநூல்

1. ஈற்றடியைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'தாம் தாம் சொல்ல வல்ல அளவுகளாலே' என்ற பொருளுக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'அந்தப் புராண புருஷனை' என்று தொடங்கி.

"யதாஜ்ஞானம் து வக்ஷ்யாமி புருஷம் தம் ஸநாதநம்"
என்பது, ஸ்ரீ நாராயணீயம்.

"மூவேழ் உலகமும் உலகினுள் மன்பதும்
மாயோய்! நின் வயின் பரந்தவை உரைத்தேம்;
மாயா வாய் மொழி உரைதர வலந்து"

என்ற பகுதியும், 'சித்தமாகிய வேதம், தேவரும் மூஎழ் உலகுகளும் உயிர்ப் பன்மையும் நின்கண் தோன்றியவாறு அறிந்து கூறும்; சிற்றறிவினேமாகிய யாம் அவற்றுள் சிலவற்றை முறை பிறழக் கூறுவதல்லது அவ்வாறு எல்லாம் கூறுதற்கு உரியம் அல்லம் என்பார் வலந்துரைத்தேம் என்றார்' என்ற அதன் உரையும் ஈண்டு ஒப்பு நோக்கல் தகும். (பரிபாடல், 3. 9-11.)

3. அறிந்த அறிந்த அளவுகளிலே சொல்லுகையாவது யாது? என்ன, ஐதிஹ்யம் மூலமாக அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அதாவது' என்று தொடங்கி.

வங்கிப்புரத்து நம்பி, பெருமாளைச் சேவிக்க எழுந்தருளி, ஆய்ச்சிகள் அருகில் நின்றுகொண்டு சேவிக்க, அதனை ஆண்டான் கண்டருளி, 'பிராப்பியமான ஸ்ரீ வைஷ்ணவ கூட்டம் இருக்க, இங்குச் சேர்ந்து நின்று பெருமாளைச் சேவிக்காமல், அவர்கள் அருகில் நின்றுகொண்டு பெருமாளைச் சேவிப்பான் என்?' என்ன, 'நாம் சிறிது ஞானவான்களாக இருப்போம்: இவர்கள் அறிவு ஒன்றும் இல்லாத ஆய்ச்சியர்கள் ஆகையாலே, ஈஶ்வரனுடைய கடாக்ஷம் இவர்களிடத்திலே பள்ளமடையாய் இருக்கும் காணும் என்று அங்கே இருந்தேன்' என்ன, 'அவர்கள் சொன்னது யாது? தேவரீர் அருளிச்செய்தது

இடுவீர், பழம் உண்பீர், பால் உண்பீர்' என்பன போன்று சொல்லுகை. வங்கிப்புரத்து நம்பி 'விஜயஸ்வ - வெற்றி உண்டாக' என்ன, ஆண்டான் சொன்ன வார்த்தையை நினைவு கூர்வது. தலைத் தலைச் சிறந்து பூசிப்ப - ஒருவர்க்கு ஒருவர் மேல் விழுந்து மிகவும் துதித்துக் கொண்டாட. திங்கள் சேர் மாடம் திருப்புளிங்குடியாய்-[1] இங்கும் அங்கும் திரிந்துகொண்டே இருக்கிற சந்திரனுக்குத் திரிந்து வருகையால் உண்டான இளைப்பு எல்லாம் ஆறும்படியாய் இருக்குமாயிற்று மாடங்களினுடைய ஒக்கம்; அத் திவ்வியதேசத்திலே எழுந்தருளி இருப்பவனே! திருவைகுந்தத்து உள்ளாய்-அவ்வளவே அன்றிக்கே, திரு வைகுந்தத்திலே நின்றருளுகின்றவனே! தேவா - [2] பரமபதத்திற்காட்டில் இவ் உலகத்தில் நிலையால் வந்த புகர்.

இங்கண் மா ஞாலத்து இதனுளும் ஒருநாள் இருந்திடாய்- இந்தப் பெரிய பூமியிலே, திருப்புளிங்குடியிலேயும் ஒருநாள் இருந்தருளவேண்டும். இருக்குமிடத்தில், வீற்று இடம் கொண்டு- பரமபதத்தில் இருக்குமாறு போலே, உன்னுடைய வேறுபாடு தோற்ற இருக்கவேண்டும். 'இதனுளும்' என்பதற்குக் கருத்து என்? என்னில், சாய்ந்தருளின அழகு கண்டோமுக்கு, இவன் இருந்தால் எங்ஙனே இருக்கிறதோ? என்றும், இப்படி இருக்கிறவன் தான் நின்றால் எங்ஙனே இருக்கிறதோ? என்றும், இங்ஙனே சில விருப்பங்கள் பிறக்கும் அன்றோ இவர்களுக்கு; [3] அது வேறு ஒரு படி அன்றோ நமக்கு. [4] இவை எல்லாம்

யாது?' என்ன, 'பால் உண்பீர், பழம் உண்பீர்; பொன்னாலே பூணூல் இடுவீர்; நூறு பிராயம் புகுவீர்; அழுத்த இரட்டை உடுப்பீர்' என்று அவர்கள் கூறினார்கள்; 'விஜயஸ்வ, விஜயீபவ' என்று நான் கூறினேன் என்று நம்பி அருளிச்செய்ய, 'அங்கே சென்றும் முரட்டு சம்ஸ்கிருதம் விட்டீர் இல்லையே, எங்கே இருந்தாலும் நாம் நாம் காணும், இங்கே எழுந்தருளீர்' என்று ஆண்டான் அருளிச்செய்த வார்த்தையை நினைப்பித்தபடி.

1. திங்கள் சேர்கைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'இங்கும் அங்கும்' என்று தொடங்கி.

2. "தேவா" என்பதற்கு, 'திவுகிரீடா' என்ற தாதுவிலே பொருள் அருளிச்செய்கிறார் 'பரமபதத்தில்' என்று தொடங்கி. தேவன் - ஒளியையுடையவன்.

3. அங்ஙனம் நமக்கு விருப்பம் பிறக்கவில்லையே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அது' என்று தொடங்கி.

4. 'வேறு ஒருபடி' என்றதனை விவரிக்கிறார் 'இவை எல்லாம்' என்று தொடங்கி.

நரகத்திற்குக் காரணமான விஷயங்களிலே உண்டு; பகவத் விஷயத்தில் தெரியாது.[1]செய்த எல்லாம் பரிதாகையும், அதற்கு மேலே வேறு சில செயல்களிலே ஆசைப்படுகையும் எல்லாம் நமக்கு இவ் உலக விஷயங்களிலே உண்டாய் இருக்கும். இப்படி இருக்குமோ என்று அறியுமித்தனை. (8)

902.

வீற்று இடம்கொண்டு வியன் கொள் மா ஞாலத்து
இதனுளும் இருந்திடாய் அடியோம்
போற்றி ஓவாதே கண் இணை குளிரப்
புது மலர் ஆகத்தைப் பருகச்
சேற்று இள வாளை செந்நெலூடு உகளும்
செழும் பணைத் திருப்புளிங்குடியாய்!
கூற்றமாய் அசுரர் குலமுதல் அரிந்த
கொடு வினைப் படைகள் வல்லானே!

பொ-ரை:—சேற்று நிலத்திலே தங்கி இருக்கின்ற வாளை மீன்கள் செந்நெற் பயிர்களின் மத்தியிலே துள்ளிக் குதிக்கின்ற வளப்பத்தை யுடைய வயல்கள் சூழ்ந்த திருப்புளிங்குடியில் சயனித்திருப்பவனே! அசுரர் குலத்திற்குக் கூற்றமாய் அவர்கள் குலத்தை அடியோடு வேர் அறுத்த கொடிய காரியங்களைச் செய்கின்ற படைகளில் வல்லவனே! அடியோங்களாகிய யாங்கள் துதித்து, இடைவிடாமல் இரண்டு கண்களும் குளிரும்படி, அப்பொழுது மலர்ந்த மலர்போன்ற திருமேனியை அநுபவித்தற்கு, பரப்பைக் கொண்டுள்ள பெரிய இவ் உலகத்திலே இந்தத் திருப்புளிங்குடியிலும் உன்னுடைய பெருமை எல்லாம் தோன்றும்படி ஒரு நாளாவது இருந்தருள வேண்டும்.

வி-கு:—படைகள் வல்லானே! அடியோம் ஓவாதே போற்றிக் கண் இணை குளிரும்படி ஆகத்தைப் பருக, இதனுளும் இருந்திடாய் என்க.

ஈடு:—ஒன்பதாம் பாட்டு. [2]இவ் இருப்பில் வாசி அறியாத இவ் உலகத்தாருக்கு நடுவில் இருக்கிறது என்? என்னில், ருசியுடைய நாங்கள் கண்டு அநுபவிக்க என்கிறார்.

---

1. 'இவை எல்லாம்' என்று தொடங்கி அருளிச்செய்ததை விவரிக்கிறார் 'செய்த எல்லாம்' என்று தொடங்கி. பரிதாகை-ஸ்தூலமாக இருத்தல். என்றது, போதாமல் இருக்கும் என்றபடி.

2. முதல் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

வீற்று இடம்கொண்டு - சேஷியாக இருக்கும் தன்மையால் வந்த வேறுபாடு தோன்றும்படி. வியன் கொள் மா ஞாலத்து இதனுளும் இருந்திடாய் - [1] அகன்றதான பெரிய மண்ணுலகமான இதிலேயும் இருந்திடாய். உன்னைக்கொண்டு ஒரு காரியம் இல்லாத இப் பூ உலகத்திலும் என்பார் 'ஞாலத்து இதனுளும்' என்கிறார். அன்றிக்கே, இதனுளும் இருந்திடாய் என்பதற்கு, இந்தத் திருப்புளிங்குடியாகிற திருப்பதியிலேயும் இருந்திடாய் என்னுதல். பரமபதத்திலே உன்னை ஒழியச் செல்லாமையுடையார் முன்னே இருந்தாய் என்னும் இது போருமோ? என்பார் 'ஞாலத்து இதனுளும் இருந்திடாய்' என்கிறார். சாய்ந்தருளினபோது இருக்கும் இருப்பின் அழகை அநுபவிப்பித்தருளிற்று; இனி, இருந்தால் இருக்கும் அழகையும் அநுபவிப்பித்தருள வேண்டும் என்பார் 'இதனுளும்' என்று உம்மை கொடுத்து ஓதுகின்றார். "நமக்கு [2] இவை எல்லாம் இங்கே காணலாம் அன்றோ: சாய்ந்தருளின அழகு, பெரிய பெருமாள் பக்கலிலே காணலாம்; நின்றருளின அழகு, நம்பெருமாள்பக்கலிலே காணலாம்; இருப்பில் உண்டான அழகு, பெரிய பிராட்டியார் பக்கலிலே காணலாம்" என்று பட்டர் அருளிச்செய்வர்.

நாம் இங்கு இருக்க, நீர் பெறப் புகுகிற பேறு யாது? என்ன, அருளிச்செய்கிறார் மேல்: அடியோம் - அவ் இருப்புப் படி விட, அதுவே ஜீவநமாக இருக்கிற நாங்கள். போற்றி - இவ் இருப்பு இங்ஙனே நித்தியமாகச் செல்லவேண்டும் என்று மங்களாசாசனம் செய்து. ஓவாதே - உச்சிவீடு விடாதே. கண் இணை குளிர - காணப் பெறுமையாலே கமர்பிளந்து கிடந்த

1. "இதனுளும்" என்பதற்கு இருவகையில் பொருள் அருளிச்செய்கிறார். ஒன்று, மா ஞாலமான இந்தப் பூமியிலும் என்பது; இதனை அருளிச்செய்கிறார் 'அகன்றதான' என்று தொடங்கி. இப் பூ உலகத்தின் தன்மையை விளக்குகிறார் 'உன்னைக் கொண்டு' என்று தொடங்கி. மற்றொன்று, மா ஞாலத்திலே இந்தத் திருப்புளிங்குடியிலே என்பது; இதனை அருளிச்செய்கிறார் 'இந்தத் திருப்புளிங்குடியாகிற' என்று தொடங்கி. இப்பொருளில், "இதனுளும்" என்ற உம்மைக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'சாய்ந்தருளினபோது' என்று தொடங்கி.

2. 'இவை எல்லாம்' என்றது, கிடையின் அழகும், இருப்பின் அழகும், நிலையின் அழகும் என்னும் இவற்றை. 'இங்கே காணலாம்' என்றது, திருவரங்கம் பெரிய கோயிலிலே காணலாம் என்றபடி.

கண்கள், விடாய் எல்லாம் தீர்ந்து குளிரும்படியாக. புது மலர் ஆகத்தைப் பருக - செவ்விப்பூப் போலே இருக்கிற திருமேனியை அநுபவிக்கும்படியாக. என்றது, மலர்ந்த மலர் போன்ற மிருதுவான வடிவினை, [1] "திருக் கண்களால் பருகுவார் போலக் குளிரக் கடாக்ஷித்து வார்த்தை அருளிச்செய்தார்" என்கிறபடியே, எப்பொழுதும் அநுபவிக்கப் பெறுகையைத் தெரிவித்தபடி.

சேறு இள வாளை செந்நெலூடு உகளும் செழும் பணைத் திருப்புளிங்குடியாய் - செந்நெலின் நடுவே சேற்றிலே, இருபத்தைந்து வயதினையுடையரான முக்தர்களைப் போலே இருக்கிற வாளைகள் களித்துத் துள்ளாநிற்கின்ற அழகிய நீர் நிலத்தையுடைய திருப்புளிங்குடியாய்! பணை - மருத நிலமுமாம். இதனால், அவ் ஊரில் உள்ள பொருள்கள் அடைய விரும்பினவற்றைப் பெற்ற காரணத்தாலே களித்து வாழும்படியான ஊர் என்பதனைத் தெரிவித்தபடி. கூற்றமாய் அசுரர் குலம் முதல் அரிந்த கொடு வினைப் படைகள் வல்லானே - பகைவர்களுக்குக் கூற்றமாக இருக்கின்ற திவ்விய ஆயுதங்களைத் தரித்துக் கொண்டு இருக்கிறவனே என்னுதல்; அன்றிக்கே, 'கூற்றமாய் அசுரர் குலம் முதல் அரிந்த' என்பதனை இறைவனுக்கு அடையாக்கி, பகைவர்களுக்குக் கூற்றமாய்க் கொண்டு அவர்களுடைய குலத்தை முதலிலே அரிந்து பொகடுமவனாய், அதற்குக் கருவியாகக் கொடிய தொழில்களையுடைய திவ்விய ஆயுதங்களையுடையனாய் இருக்கிறவன் என்னுதல். [2] இப்போது இது சொல்லுகிறது, இதற்கு முன்பு, தம்முடைய விரோதிகளைப் போக்கினபடிக்கு எடுத்துக்காட்டு என்னுதல்; உனக்கு என்ன குறை உண்டாய் இழக்கிறேன் என்னுதல். (9)

---

1. தஸ்ய தத்வசநம் ஶ்ருத்வா ராமோ வசநம் அப்ரவீத்
வசஸா ஸாந்தயித்வா ஏநம் லோசநாப்யாம் பிபந்நிவ.
என்பது, ஸ்ரீராமா. யுத். 21 : 6.

2. "கூற்றமாய் அசுரர் குலம் முதல் அரிந்த கொடு வினைப் படைகள் வல்லானே!" என்று கூறுகின்றவருடைய மனோபாவத்தை இரண்டு வகையாக அருளிச்செய்கிறார் 'இப்போது' என்று தொடங்கி. 'உனக்கு என்ன குறை உண்டாய்' என்றது, விரோதிகளைப் போக்குவதற்குக் கருவிகள் இல்லாமையாலோ, ஆற்றல் இல்லாமையாலோ இழக்கிறேன்? என்கிறார் என்றபடி.

903.

கொடு வினைப் படைகள் வல்லையாய் அமரர்க்கு
இடர் கெட அசுரர்கட்கு இடர் செய்
கடு வினை நஞ்சே! என்னுடை அமுதே!
கலிவயல் திருப்புளிங்குடியாய்!
வடிவு இணை இல்லா மலர்மகள் மற்றை
நிலமகள் பிடிக்கும் மெல் அடியைக்
கொடுவினையேனும் பிடிக்க நீ ஒரு நாள்
கூவுதல் வருதல் செய்யாயே.

பொ - ரை :—பகைவர்களுக்குக் கொடிய தொழிலைச் செய்கின்ற ஆயுதங்களில் வல்லவனாய், தேவர்கட்குத் துன்பம் கெடும்படி, அசுரர்கட்குத் துன்பத்தைச் செய்யுமிடத்தில் விரைவில் முடிக்க வல்ல நஞ்சு ஆக இருப்பவனே! என்னுடைய அமுதமே! செழித்த வயல்கள் சூழ்ந்த திருப்புளிங்குடியாய்! வடிவழகில் ஒப்பு இல்லாத பெரிய பிராட்டியாரும் அதைப் போன்ற பூமிப்பிராட்டியாரும் பிடிக்கும் மெல்லிய திருவடிகளை, கொடிய வினைகளையுடையேனாகிய யானும் பிடிக்கும்படி நீ ஒருநாள் என்னை அழைத்தல், அன்றி நீ வருதல் செய்ய வேண்டும்.

வி - கு :—இடர் கெட இடர் செய் நஞ்சே! என்க. ஒருநாள் கூவுதல் செய்யாய்; அன்றி, வருதல் செய்யாய் என்க. செய்யாய்: விதிவினை.

ஈடு :—பத்தாம் பாட்டு. [1] எல்லை இல்லாத இனிமையையுடையதான உன் திருவடிகளிலே நானும் வந்து அடிமை செய்யும்படி, என்னை அங்கே அழைத்தல், அல்லது நீ இங்கே வருதல் செய்யவேண்டும் என்கிறார்.

கொடு வினைப் படைகள் வல்லையாய் - உனக்கு அடியவர்களாக இருந்தும், பகைமை கொண்டவர்கள்பக்கல் [2] நீரிலே நெருப்பு எழுந்தாற் போன்று சீறி, ஆயுதம் எடுக்க வல்லையாய். என்றது, 'சிலரை அழியச் செய்ய' என்றால், ஆற்றல் இல்லாத

1. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. வரம்பில் ஆற்றலையுடைய இறைவனை, 'ஆற்றலிலே குறைந்தவன்' என்னும் பொருள்பட "வல்லையாய்" என்பான் என்? என்ன, 'நீரிலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

வனாக இருக்கையைத் தெரிவித்தபடி. [1]"இராவணன் தானே ஆகிலும் இவனை அழைத்துக்கொண்டு வாரும்" என்னுமவன் அன்றோ. [2]கடலை அணைசெய்து, ஊரை முற்றுகை இட்டு, பின்னை அங்கதப் பெருமாளையும் புகவிட்டு, கையிலே வந்து அகப்பட்டவனை, "இராக்ஷஸேஸ்வரனான இராவணனே! போரில் அடிபட்ட நீ போ என்று அநுமதி தருகிறேன்; இலங்கைக்குள் சென்று சிரமத்தைப்போக்கிக்கொண்டு வில்லோடும் தேரோடும் கூடினவனாய் மீண்டும் வா; அப்போது தேரில் இருக்கிற நீ என் வலிமையைப் பார்ப்பாய்" என்று தப்பவிட்டது, 'இன்னம் ஒருகால் அநுகூலிப்பானோ?' என்று; 'நான் முடிந்தே போமித்தனை' என்று அதிலே முதிர நின்ற பின்பு, கண்ணும் கண்ணீருமாய் அன்றோ நின்று கொன்றது. [3] இவர்

---

1. இறைவன் அப்படி இருப்பவனோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இராவணன் தானேயாகிலும்' என்று தொடங்கி.

ஆநய ஏநம் ஹரிஶ்ரேஷ்ட தத்தம் அஸ்ய அபயம் மயா
விபீஷணோ வா ஸுக்ரீவ யதிவா ராவணஃ ஸ்வயம்.

என்பது, ஸ்ரீராமா. யுத். 18 : 34.

2. ஆயின், பின் அவனைக் கொல்லுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கடலை' என்று தொடங்கி.

கச்ச அநுஜாநாமி ரணார்த்திதஸ்த்வம் ப்ரவிஶ்ய
ராத்ரிம் சர ராஜ லங்காம்
ஆஶ்வஸ்ய நிர்யாஹி ரதீ ஸதந்வீ
ததாபலம் த்ரக்ஷ்யஸி மே ரதஸ்தஃ

என்பது, ஸ்ரீராமா. யுத். 59 : 144.

இச் சுலோகத்தின் கருத்தோடு, கம்பராமாயணம் முதற் போர்ப் படலம், 251-முதல் 256-முடிய உள்ள செய்யுட்களை ஒப்பு நோக்குக.

ஆளையா உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை; இன்று போய்ப் போர்க்கு
நாளை வா என நல்கினன்; நாகு இளம் கமுகின்
வாளை தாவுறு கோசலை நாடுடை வள்ளல்.

என்பது, அவற்றுள் ஒரு செய்யுள்.

"ஊராண்மை - உபகாரியாந்தன்மை; அஃதாவது, இலங்கையர் வேந்தன் போரிடைத் தன்தானை முழுதும் படத் தமியனாய் அகப்பட்டானது நிலைமை நோக்கி அயோத்தியர் இறை மேற்செல்லாது 'இன்று போய் நாளை நின் தானையொடு வா' என விட்டாற் போல்வது" என்பது, பரிமேலழகர் உரை. குறள், 773.

3. "கொடுமையும் செம்மையும் வெம்மையும் தண்மையும்
உள்வழி உடையை; இல்வழி இலையே;
போற்றார் உயிரினும் போற்றுநர் உயிரினும்
மாற்றே மாற்றல் இலையே; நினக்கு
மாற்றோரும் இலர்; கேளிரும் இலர் எனும்

கள் செய்யும் தீய செயலாலே அழியச் செய்யுமித்தனை போக்கி, தானாக அழியச் செய்ய மாட்டான் ஆயிற்று.

அமரர்க்கு இடர் கெட அசுரர்கட்கு இடர் செய் - அசுரர்களாலே தேவர்களுக்கு உண்டான துன்பம் தீரும்படி, அசுரர்களுக்குத் துன்பத்தை விளைக்கும். கடு வினை நஞ்சே - [1]அப்போதே சடக்கென முடிக்க வற்றாய், மாற்றும் மருந்து இல்லாத நஞ்சு ஆனவனே! என்னுடை அமுதே - [2]அந் நஞ்சு தானே இவர்க்கு அமுதமாய் இருக்கிறபடி. தமக்கு அமுது தேவர்களுடைய உப்புச்சாறு அன்று என்பார் 'என்னுடை அமுதே' என்கிறார். கலி வயல் திருப்புளிங்குடியாய் - இவ் அமுதினைப் பெறுதற்குக் கடல் கடைதல், சுவர்க்கத்துக்குப் போதல் செய்யவேண்டா; திருப்புளிங்குடியிலே அண்மையிலே இருக்கிறது இவ் அமுதம் என்கிறார். கலிவயல்-நிறைந்த வயல்.

வடிவு இணை இல்லா மலர்மகள் - வடிவில் வந்தால் ஒப்பு இன்றிக்கே இருக்கும். என்றது, பகவானும் ஒப்பு ஆகான் என்றபடி. [3]"பெருமாளுக்கு, கறுத்த கண்களையுடையவளான இந்தப் பிராட்டியும் தகுந்தவர்" என்கிறபடியே, ஏற்றமாயே நின்றது அன்றோ. மற்றை நில மகள் - இந்த விதமான ஏற்றத்தையுடைய பூமிப் பிராட்டியும். பிடிக்கும் மெல் அடியை - [4]அவர்களும் திருவடிகளைப் பிடிக்கப் புக்கால், பூத் தொடுவாரைப் போலே 'கன்றி விடுமோ' என்று கூசித் தொட வேண்டும்படி ஆயிற்று மிருதுத்தன்மை இருப்பது; அப்படிப்பட்ட திருவடிகளை. கொடு வினையேனும் பிடிக்க - [5]"கண்கள்

வேற்றுமை இன்று; அது போற்றுநர்ப் பெறினே."
என்பது, பரிபாடல். 4, 50–55.

1. "கடு" என்ற சொல்லின் பொருளை இரண்டுவகையில் விளக்குகிறார் 'அப்போதே' என்று தொடங்கி.

2. அசுரகூட்டத்துக்குக் கூற்றமாய் இருக்கும் இருப்பு, தமக்கு இனிமையாய் இருக்கின்றது என்பது, 'அந் நஞ்சுதானே' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து.

3. ஒப்பு ஆகாமைக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'பெருமாளுக்கு' என்று தொடங்கி.

துல்ய ஸீல வயோவ்ருத்தாம் துல்யாபிஜந லக்ஷணாம்
ராகவஃ அர்ஹதி வைதேஹீம் தம் ச இயம் அஸிதேக்ஷணா.
என்பது. ஸ்ரீராமா. சுந். 16: 5.

4. "மெல் அடி" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவர்களும்' என்று தொடங்கி.

5. "கொடுவினையேன்" என்றதனால், தம்முடைய தண்மையைக் கூறுகின்றாரோ? என்ன, அன்று என்கிறார் 'கண்கள்' என்று தொடங்கி.

சிவந்து" என்ற திருவாய்மொழிக்குப் பின்பு இவர்க்குத் தாம் தாழ்ந்தவர் என்னும் நினைவு இல்லை அன்றோ. [1] அவர்களும் அண்மையில் இருப்பாராய், சம்பந்தமும் உண்டாய் இருக்க, நான் இழந்திருப்பதே! என்று, 'பாவியேன்' என்பாரைப் போன்று, '**கொடு வினையேன்**' என்கிறார். நீ ஒரு நாள் கூவுதல் வருதல் செய்யாய் - எல்லை இல்லாத இனியனாய் அண்மையில் இருப்பவனான நீ சொரூபத்தை நோக்குகைக்கு ஒருநாள் அங்கே அழைத்தல், இங்கே வருதல் செய்தருளவேண்டும். [2] முற்பட 'வருதல்' என்றிலராயிற்று, அச்சேர்க்கையைக் குலைக்க ஒண்ணாது என்னுமதனாலே. [3] விருப்பமுடையார் பக்கல் அவனைத் தனியே விட்டிரார்கள் அன்றோ, அதனால், கூடக் கொடு வருவார்கள் என்னுமதனைப் பற்றச் சொல்லுகிறார். (10)

904.

கூவுதல் வருதல் செய்திடாய் என்று
குரை கடல் கடைந்தவன் தன்னை
மேவி நன்கு அமர்ந்த வியன் புனல் பொருநல்
வழுதிநாடன் சடகோபன்
நா இயல் பாடல் ஆயிரத்துள்ளும்
இவையும் ஓர் பத்தும் வல்லார்கள்
ஓவுதல் இன்றி உலகம் மூன்று அளந்தான்
அடிஇணை உள்ளத்து ஓர்வாரே.

பொ - ரை :—ஒலிக்கின்ற திருப்பாற்கடலைக் கடைந்தவனான இறைவனைக் குறித்து அங்கே அழைத்துக்கொள்ள வேண்டும்; இன்றேல், இங்கே நான் இருக்குமிடத்திற்கு வருதல் செய்யவேண்டும் என்று விரும்பி நன்றாகத் தரித்த, பரந்த தண்ணீர் நிறைந்த தாமிரபரணியையுடைய திருவழுதி நாட்டினையுடையவரான ஸ்ரீ சடகோபருடைய நாக்கின் தொழிலால் ஆய பாசுரங்கள் ஆயிரத்துள்ளும் ஒப்

1. ஆயின், "கொடுவினையேன்" என்றதன் பொருள்தான் யாதோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவர்களும்' என்று தொடங்கி.

2. வருதலை முற்கூறாது, கூவுதலை முற்கூறியதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'முற்பட' என்று தொடங்கி.

3. வருதலைப் பிற்படக் கூறின், அச்சேர்க்கை குலையாதோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'விருப்பமுடையார்' என்று தொடங்கி.

பற்ற இந்தப் பத்துப் பாசுரங்களையும் வல்லவர்கள், ஒரு பொருளும் ஒழியாமல் உலகம் மூன்றனையும் அளந்தவனான இறைவனுடைய இரண்டு திருவடிகளையும் மனத்தாலே நினைக்கப் பெறுவர்கள்.

வி - கு :—நன்கு அமர்ந்த வழுதிநாடன் என்றும், ஓவுதல் இன்றி அளந்தான் என்றும், வல்லார்கள் ஓர்வார்கள் என்றும் கூட்டுக. ஓவுதல் இன்றி ஓர்வார் என்று கூட்டினும் ஆம்.

ஈடு :—முடிவில், [1] இத் திருவாய்மொழி கற்றார், அவனை எப்பொழுதும் நினைக்கப் பெறுவர் என்கிறார்.

குரை கடல் கடைந்தவன் தன்னைக் கூவுதல் வருதல் செய்திடாய் என்று - குரை கடல் கடைந்தவன் தன்னைக் கூவுதல் வருதல் செய்திடாய் என்றாயிற்று இவர் சொல்லிற்று. [2] முறை கெடவும் ஆம், முறையிலே ஆகவும் ஆம், காணுமித்தனையே வேண்டுவது. குரை கடல் கடைந்தவன் தன்னை - [3] இந்த விருப்பம் இல்லாதார்க்கும் உடம்பு நோவக் கடல் கடைந்து அமுதம் கொடுக்குமவனை ஆயிற்று இவர் விரும்பியது. மேவி நன்கு அமர்ந்த - [4] இந்தத் தன்மையின் நினைவாலே பொருந்திக் கால் தரையிலே பாவினார் ஆயிற்று. வியன் புனல் பொருநல் வழுதி நாடன் சடகோபன் - பரந்த புனல் நிறைந்த திருப்பொருநலை யுடைய திருவழுதி நாட்டிற்குத் தலைவரான ஆழ்வார். நா இயல் பாடல் ஆயிரத்துள்ளும் இவையும் ஓர் பத்தும் வல்லார்கள் - மனத்தின் துணையும் இன்றிக்கே ஆயிற்றுச் சொல்லிற்று. அங்ஙனம் சொன்ன ஆயிரம் பாசுரங்களுள் இந்தப் பத்துப் பாசுரங்களையும் வல்லவர்கள்.

உலகம் மூன்று அளந்தான் அடியிணை உள்ளத்து ஓவுதல் இன்றி ஓர்வார் - அடியார்கட்குச் சுலபனானவனுடைய திருவடிகளை மனத்திலே எப்பொழுதும் அநுபவிக்கப் பெறுவர்.

---

1. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. வருதலை முற்கூறாது, கூவுதலை முற்கூறியதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'முறை கெடவும் ஆம்' என்று தொடங்கி. உடைமை இருந்த இடத்தே உடையவன் வந்து கைப்பிடித்துக் கொண்டு போதல் தக்கது ஆகையாலே, வருதல் முறை; மனைவியை ஆள் இட்டு அழைத்தல் முறைகேடு ஆனவாறு போன்று, கூவுகையும் முறைகேடு.

3. "குரை கடல் கடைந்தவன் தன்னை" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இந்த விருப்பம்' என்று தொடங்கி.

4. 'இந்தத் தன்மையின் நினைவாலே' என்றது, கூவுதல் வருதல் செய்யாய் என்ற நினைவினாலே என்றபடி.

[1] இத்தனைபோதும், இவர்தாம் 'இவற்றைப் பெற வேண்டும்' என்னும் ஆசையோடே, 'திருக்கண்களாலே குளிர நோக்கி அருளவேண்டும், திருவடிகளைத் தலைமேலே வைத்தருளவேண்டும், தேவரீர் எழுந்தருளிஇருக்கும் இருப்பைக் காணவேண்டும், நாய்ச்சிமாரும் தேவரீருமாக இருக்கும்படி காணவேண்டும், உலாவும்படி காணவேண்டும், புன்முறுவல் இருக்கும்படி காணவேண்டும்' என்று ஆசைப்பட்ட இவர்க்கு அப்போதே கிடையாமையாலே, 'இவற்றைப் பெறவேண்டும்' என்னும் எண்ணம்தானே பேறு ஆகத் தோற்றிற்று; இதனைக் கற்றவர்களுக்கும் இந்த எண்ணம் மாறுமலே முடியச் செல்லும் என்கிறூர். [2] "உன்னை அடைந்திருக்கிற என்னுடைய எண்ணமானது கெடாமல் இருந்ததே ஆனல், அதனல் எல்லாக் காலத்திலும் விரும்பியனவற்றை எல்லாம் பெற்றவனுக இருக்கிறேன்" என்கிறபடியே. (11)

—: o :—

திருவாய்மொழி நூற்றந்தாதி

பண்டே உறவான பரனைப் புளிங்குடிக்கே
கண்டு எனக்கு எல்லா உறவின்காரியமும் — தண்டற நீ
செய்தருள் என்றே இரந்த சீர்மாறன் தாள் இணையை
உய்துணை என்று உள்ளமே ஓர்.

—: o :—

ஆழ்வார் எம்பெருமானர் சீயர் திருவடிகளே அரண்.

---

1. இது கற்றூர்க்குப் பேற்றினைப் பலமாகச் சொல்லாது, மனோரதத்தைப் பலமாகச் சொல்லுவான் என்? என்ன, 'இத்தனைபோதும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறூர்.

2. மனோரதம் பலம் ஆகுமோ? என்ன, ஆகும் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறூர் 'உன்னை' என்று தொடங்கி.

> தார்க்கதாவபி ஜாதாயாம் த்வத்கதோ மே மனோரதஃ
> யதி நாஸம் நவிந்தேத தாவதாஸ்மி க்ருதீ ஸதா.

என்பது, ஜிதந்தா ஸ்தோத்திரம்.

மூன்றாம் திருவாய்மொழி—“ ஓராயிரம் ”

முன்னுரை

ஈடு :—[1] “ நீர் இங்ஙனே விரும்பிக் கேட்க வேண்டுமோ? நம்முடைய குடல் தொடக்கை அறியீரோ?” என்ன, அதனை நினைந்தும் சொல்லியும் இனியர் ஆகிறார். [2] “ கூவுதல் வருதல் செய்யாய் ” என்று வேண்டிக்கொண்டார் மேல்; “யார் வேண்டிக் கொள்ளவேண்டியதனை யார் வேண்டிக் கொள்ளுகிறார்? உம்முடைய லாபத்துக்கு நாம் வேண்டிக்கொள்ள வேண்டும்படி அன்றோ உம்மோடு நமக்கு உண்டான இரத்த சம்பந்தம்? ஆனபின்பு, நீர் விரும்பியவை அனைத்தையும் செய்யக் கடவோம்; நீர் வெறுக்க வேண்டா” என்று சமாதானம் செய்தான்; இவரும் சமாதானத்தை அடைந்தார். [3] “ மையல் ஏற்றி மயக்க உன் முகம் மாய மந்திரம்தான் கொலோ ” என்னக் கடவது அன்றோ; [4] ஸ்ரீ கௌசலையார், “ ஒரே பிள்ளையையுடையளான நான் உம்மைப் பிரிந்து தனி இருக்கமாட்டேன்: கூட வருவேனித்தனை”என்று பின் தொடர, புரிந்து பார்த்து “அம்மையே! நீர் என்னைப் பின் தொடர்கிற இடம் தர்மத்திற்குக் குறைவு வரும் காண் ” என்று முகத்தைப் பார்த்து ஒரு வார்த்தைஅருளிச்செய்ய, மீட்பதற்குப் போன இவள் மங்களாசாசனம் செய்து மீண்டாளே அன்றோ; இப்படி அன்றோ அவனுடைய [5] பார்வைகளும் வார்த்தைகளும் இருக்கும்படி. அவன் ஒரு வார்த்தை சொன்னால் பின்னை அவன் வழியே போகவேண்டும்படியாய் அன்றோ இருப்பது.

---

1. “ நாராயணன் நங்கள் பிரான் அவனே ” என்றதனைத் திருவுள்ளம்பற்றி மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் உள்ள இயைபினைச் சுருங்க அருளிச்செய்கிறார்.

2. அதனையே விவரணம் செய்கிறார் ‘ கூவுதல் ’ என்று தொடங்கி. மேலே ‘ குடல் தொடக்கு ’ என்றதன் விவரணம், ஈண்டு ‘இரத்த சம்பந்தம்’ என்பது.

3. ஒரு வார்த்தையைக் கூறிய அளவில் சமாதானத்தை அடைந்தவராதல் கூடுமோ? என்ன, ‘ மையல் ’ என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இது, நாய்ச்சியார் திருமொழி, 2 : 4.

4. அவனுடைய சொற்கள் மனத்தினைக் கவரக்கூடியவை என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் ‘ ஸ்ரீ கௌசலையார் ’ என்று தொடங்கி.

5. ‘ பார்வைகளும் ’ என்றது, “ மையல் ஏற்றி ” என்று மேலே காட்டிய திருப்பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி.

[1]ஆக, அவன் நாராயணனாய் இருக்கிற இருப்பை நினைந்தார்; அந்நாராயண மந்திரத்தினுடைய பொருளை ஆராய என்று இழிந்தவாறே, ஒரு பொருளுக்கும் தன்னுடைய பேறு இழவுகட்கு வேண்டிக் கொள்ளுதற்குத் தனக்குச் சம்பந்தம் இல்லாமலே இருந்தது; இப்படி இருக்கிறவன் தம் பக்கலிலே விசேட கடாக்ஷம் செய்தபடியையும், இந் நாராயண மந்திரத்தின் அர்த்தத்துக்கு எல்லையான அவன் [2]சீல குணத்தையும் நினைந்தார்; நினைந்தவாறே "இப்படிச் சீலகுணமுடையவனை இப்போதே காணவேண்டும்" என்னும் விருப்பம் பிறந்தது; [3]அதில் தமக்கு அவன் இருந்த இடத்தளவும் கால்நடை தாராத படிக்கு ஈடாக ஆயிற்று, அவனுடைய சீலம் முதலான குணங்களில் ஈடுபட்டுத் தாம் துவக்கு உண்டபடி. [4]இனித்தான், இவர் போனாலும் ஒரு கைங்கரியத்தைச் செய்கை மிகையாம்படி இருப்பான் ஒருவனாய் இருந்தான் அவன்; இவர்தாம், ஒன்று செய்து அநுபவிக்க வல்லவர் அன்றிக்கே இருந்தார்: அவ

1. இத் திருவாய்மொழியிற் கூறப்பட்ட பொருளை விளக்கமாக அருளிச்செய்து, இவர் சமாதானத்தை அடைந்தவரானபடியை விவரணம் செய்கிறார் 'ஆக' என்று தொடங்கி.

இத் திருவாய்மொழியில் வருகிற முதல் பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றி 'நாராயணனாய்' என்று தொடங்கியும், இரண்டாம் பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி 'ஒரு பொருளுக்கும்' என்று தொடங்கியும், "அறிந்தனமே", "நங்கள் பிரான்" என்பனவற்றைத் திருவுள்ளம்பற்றி 'விசேட கடாக்ஷம் செய்தபடியையும்' என்றும் அருளிச்செய்கிறார்.

2. "கடைவதும் கடலுள் அமுதம்" என்ற பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றிச் 'சீல குணத்தை' என்றும், "என் மனம் ஏகம் எண்ணும்" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'இப்போதே காணவேண்டும்' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

3. விருப்பம் பிறந்தால் அவன் இருந்த இடத்தே போக ஒண்ணாதோ? என்ன, 'அதில் தமக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "நின்ற வேங்கடம்" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'அவன் இருந்த இடத்தளவும்' என்கிறார். "தேவர்கள் கைதொழுவார்கள்" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'கால்நடை தாராதபடி' என்கிறார். "சீலம் எல்லை இலான்" என்ற பகுதியைத் திருவுள்ளம்பற்றிச் 'சீலம் முதலான' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

4. "எழுதும் என்னும் இது மிகை" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'இனித்தான்' என்று தொடங்கியும், "தழுவுமாறு அறியேன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'இவர்தாம்' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

னுடைய சீல குணங்களிலே கால் தாழ்ந்திருக்குமவர் ஆகையாலே. [1] இப்படிப் பட்டவனுடைய சீல குணத்தின் மிகுதியையே சொல்லித் தலைக்கட்டுகிறது இத் திருவாய்மொழி.

[2] அன்றிக்கே, "கண்கள் சிவந்து" என்ற திருவாய்மொழியிலே பிரணவத்தின் அர்த்தத்தை அருளிச்செய்தார்; அத் திருவாய்மொழியில் [3] முதல் இரண்டரைப் பாசுரங்களாலே அகாரத்தின் பொருளினை அருளிச்செய்து, [4] மேல் ஒன்றரைப் பாசுரங்களாலே நான்காம் வேற்றுமையின் பொருளையும் உகாரத்தின் பொருளையும் மகாரத்தின் பொருளையும் அருளிச்செய்தார்; நன்று; இது அடிமையாம் தன்மை, இது அவனுக்கே உரிமையாம் தன்மை, இது அவற்றுக்கு இடமாய் இருக்கிற ஆத்மா என்று பிரித்துச் சொல்லாமல், மகாரத்தின் பொருளாக இருக்கின்ற ஆத்மாவோடு கூட்டியே அருளிச்செய்தது என்? எனின், அவற்றைத் தனித் தனியே பிரித்து அருளிச்

---

1. "சீலம் எல்லை இலான் அடிமேல்" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'இப்படிப்பட்டவனுடைய' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. வேறும் ஒரு வகையில் இயைபு அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. "கண்கள் சிவந்து" என்ற திருவாய்மொழி முதல் இத் திருவாய்மொழி முடிய உள்ள அர்த்த விசேடங்களை எல்லாம் திருமந்திரார்த்தத்திலே ஏறிட்டுக் காட்டுகிறார். முதலில் அருளிச்செய்த இயைபுக்கும், இரண்டாவதாகக் காட்டும் இயைபுக்கும் இதுவே வேறுபாடு.

3 'முதல் இரண்டரைப் பாசுரங்களாலே அகாரத்தின் பொருளினை அருளிச்செய்து' என்றது, "கண்கள் சிவந்து" என்ற திருவாய்மொழியில் முதற் பாசுரத்தாலே இறைவனுடைய திருமேனியின் சிறப்பினையும், இரண்டாம் பாசுரத்தாலே திருமேனிக்கு ஆதாரமான திவ்விய ஆத்ம சொரூபத்தின் சிறப்பினையும் அருளிச்செய்கையாலே, புணர்ந்துகெட்ட நான்காம் வேற்றுமையையுடைய அகாரத்தில் சொல் ஆற்றலால் வந்த சேஷியாம் தன்மையாலும் பொருள்ஆற்றலால் கிடைத்த திருமகள் கேள்வனான தன்மையாலும் கிடைத்த புருஷார்த்தத்தையும், மேல் அரைப் பாசுரத்தாலே, "அவனது அருளால்" என்று, (அவ - ரக்ஷணே) அவ என்ற பகுதியின் அடியாகப் பிறந்த அகாரத்தின் பொருளான ரக்ஷகனாந் தன்மையாலும் இயல்பான அகாரத்தின் பொருளான காரணனாம் தன்மையாலும் கிடைத்த உபாயமாகும் தன்மையையும் அருளிச்செய்கையாலே முதல் இரண்டரைப் பாசுரங்களால் அகாரத்தின் பொருளினை அருளிச்செய்தார் என்றபடி.

4. 'மேல் ஒன்றரைப் பாசுரங்களாலே, நான்காம் வேற்றுமையின் பொருளையும் உகாரத்தின் பொருளையும் மகாரத்தின் பொருளையும் அருளிச்செய்தார்' என்றது, "இறவேறி" என்றதனால், ஆத்ம சொரூபம் தனக்கே அடிமை என்னுமிடத்தைக் காட்டித் தந்தான் என்கையாலே, அகாரத்தில் புணர்ந்து கெட்ட

செய்யாதது, நான்காம் வேற்றுமையின் அர்த்தமும் உகாரத்தின் அர்த்தமும் ஆத்மாவை விட்டுப் பிரிந்து தனித்து இராமையாலே கூட அருளிச்செய்தார் என்க. அதற்குமேல் நான்கு பாசுரங்களாலே மகாரத்தால் சொல்லப்படுகின்ற ஆத்மாவினுடைய ஞான ஆனந்தங்கள் முதலியவற்றின் சிறப்பினை அருளிச்செய்தார்; மேல் இரண்டு பாசுரங்களாலே இம் முறையிலே பிரணவத்தின் அர்த்தத்தை நினையாத வேதத்திற்குப் புறம்பான புறச்சமயத்தாரையும் அகச்சமயத்தாராகிய குத்ருஷ்டிகளையும் மறுத்தார். ஆக, "கண்கள் சிவந்து" என்ற திருவாய்மொழியாலே பிரணவத்தின் அர்த்தத்தை அருளிச்செய்து, மேல், "கருமாணிக்க மலை", "நெடுமாற்கு அடிமை" என்னும் இரண்டு திருவாய்மொழிகளாலும் "நமஃ" என்றதன் அர்த்தத்தை அருளிச்செய்தார்.

[1] எங்ஙனே? எனின், சொல்லால் கிடைக்கின்ற பொருளும், பொருளால் கிடைக்கின்ற பொருளும் என்னும் இரண்டு வகையான பொருள்களும் கூறப்படும் "நமஃ" என்ற சொல்லிற்கு. அவற்றுள், சொல்லால் கிடைக்கும் பொருளைக் "கருமாணிக்க மலை" என்ற திருவாய்மொழியில் அருளிச்செய்து, பொருளால் கிடைக்கும் பொருளை, "நெடுமாற்கு அடிமை" என்ற திருவாய்மொழியிலே அருளிச்செய்தார். "நமஃ" என்பதன் சொற்பொருள், 'நான் எனக்கு உரியேன் அல்லேன்' என்பதே அன்றோ. [2] ஒரு கன்னி ஆனால் ஒருவனுக்கேயாய் இருக்கையும் தான் தனக்கு உரியள் அன்றிக்கே, இருக்கை

நான்காம் வேற்றுமையின் பொருளான அடிமைத் தன்மையையும், "யானும் தானாய் ஒழிந்தான்" என்று சமாந அதிகரணமாக (ஒற்றுமைப்படுத்திக் கூறியதனால்) அருளிச்செய்கையாலே, பிரணவத்தில் நடுவில் எழுத்தான உகாரத்தின் பொருளான (பிறர்க்கு அன்றித் தனக்கே அடிமையாக இருக்கும் தன்மையையும்) அநந்யார்ஹ சேஷத்துவத்தையும், "தேனும் பாலும் கன்னலும் அமுதும் ஆகித் தித்தித்து" என்றதனால், பிரணவத்தில் மூன்றாவது எழுத்தான மகாரத்தின் பொருளான ஆத்மாவினுடைய (மந - ஜ்ஞாநே) மந என்ற பகுதியால் கிடைக்கும் ஞான ஆனந்தங்களோடு கூடி இருக்கையால் வந்த இனிமையையும் அருளிச்செய்கையாலே, நான்காம் வேற்றுமையின் பொருளையும் உகாரத்தின் பொருளையும் மகாரத்தின் பொருளையும் அருளிச்செய்தார் என்றபடி.

1. அருளிச்செய்தவாறு யாங்ஙனம்? என, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எங்ஙனே? எனின்' என்று தொடங்கி.

2. நமஃ என்கிற சொல்லால் கிடைக்கும் பொருள், 'கருமாணிக்கமலை' என்ற திருவாய்மொழியில் எப்படிக் கிடைக்கிறது? என்ன, 'ஒரு கன்னி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

யும் அன்றே சொரூபம்; அதனை அருளிச்செய்தார் "கரு மாணிக்க மலை" என்ற திருவாய்மொழியில். பொருள் ஆற்ற லால் கிடைக்கும் பொருள், அவன் அடியார்கட்கு அடிமைப் பட்டிருத்தல்; அதனை அருளிச்செய்தார் "நெடுமாற்கு அடிமை" என்ற திருவாய்மொழியில். அதற்குமேல் "கொண்ட பெண்டிர்" என்ற திருவாய்மொழியாலே [1] நாராயண மந்திரத் தின் பொருளை அருளிச்செய்தார். யாங்ஙனம்? எனின், நாரா யண பதத்துக்குப் பொருள், ஸ்வாமித்வம் வாத்சல்யம் உபா யத்வம் உபேயத்வம் வியாபகத்வம் என்னும் இவை முதலான வைகள் அன்றே. அதற்குமேல் "பண்டை நாளால்" என்ற திருவாய்மொழியாலே [2] "ஆய" என்னும் நான்காம் வேற்றுமை யின் அர்த்தத்தை அருளிச்செய்தார்; நான்காம் வேற்றுமைக் குப் பொருள், கைங்கரியத்தைப் பிரார்த்தித்தலே அன்றே.

[3] பிரணவத்தின் பொருளும், நமஃ என்ற சொல்லின் பொருளும், எங்கும் பரந்திருத்தலும், பரந்திராமையும், வாசுதேவன் விஷ்ணு என்னும் வியாபக மந்திரங்களிலும் உண்டு; அதில், தாம் ஆதரித்தருளியது திரு எட்டெழுத்தே

---

1. நாராயண பதத்திற்குப் பொருள் கூறும்போது அன்மொழித் தொகையாகவும், வேற்றுமைத் தொகையாகவும் பொருள் கூறுவர்; வேற்று மைத் தொகையால் பொருள் கூறும்போது, ஸ்வாமித்வம் பெறப்படும். அன் மொழித் தொகையால் பொருள் கூறும்போது, வியாபகத்வமும் வாத்சல்யமும் பெறப்படும். அயந சப்தத்திற்குக் கூறப்படும் இருவகைப் பொருள்களாலும் உபாயத்வமும் உபேயத்வமும் பெறப்படும். இருவகைப் பொருளாவன, எல் லாப் பொருள்களுக்கும் தான் இருப்பிடமாக உள்ளவன்; எல்லாப் பொருள்களை யும் இருப்பிடமாக உடையவன் என்பனவாம். "கொண்ட பெண்டிர்" என்ற திருவாய்மொழியிலே வருகின்ற "நம்மது ஆதும் அவன் அன்றி மற்று இல்லை", "தொண்டரோமாய்" என்பன போன்ற பாசுரப் பகுதிகளால் ஸ்வாமித்வத்தையும், "வண்புகழே", "கணை ஒன்றாலே ஏழ் மரமும் எய்த" என்பனவற்றால் அடியார்கள் இருந்த இடத்தே சென்று காரியம் செய்து கொடுத்தற்குக் காரணமான வாத்சல்யத்தையும், "கண்ணன் அல்லால் இல்லை கண்டீர்" என்றதனால் உபாயத்வத்தையும், "குற்றம் இல் சீர் கற்று வைகல் வாழ்தல் கண்டீர் குணமே" என்றதனால் உபேயத்வத்தையும் அருளிச்செய் திருத்தல் காண்க. "நம்மது ஆதும் அவன் அன்றி மற்று இல்லை" என்பதில் வியாபகத்வமும் போதரும்.

2. நான்காம் வேற்றுமையின் பொருளை அருளிச்செய்தவாறு யாங்ங னம்? என்ன, 'ஆய என்னும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார். கைங்கரியத்தை வேண்டுதல் அத் திருவாய்மொழியில் வெளிப் படையாகக் காணலாம்.

3. இத் திருவாய்மொழியில் நாராயணன் என்னும் திருப் பெயரை அருளிச்செய்வான் என்? என்ன, 'பிரணவத்தின் பொருளும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

என்னுமதனை, "ஓராயிரமாய்" என்னும் இத் திருவாய்மொழியிலே அருளிச்செய்கிறார். இங்ஙனம் நடுவில் திருவீதிப்பிள்ளை அருளிச்செய்வர்.

905.

ஓர் ஆயிரமாய் உலகு ஏழ் அளிக்கும்
பேர் ஆயிரம் கொண்டது ஓர் பீடு உடையன்
கார் ஆயின காள நல் மேனியினன்
நாராயணன் நங்கள் பிரான் அவனே.

பொ-ரை:—ஒவ்வொரு திருப்பெயரே ஆயிரம் முகமாக நின்று ஏழ் உலகங்களையும் பாதுகாக்க வல்லதாக இருக்கும்; அப்படிப்பட்ட திருப்பெயர்கள் ஆயிரமுடையன் ஆகையாலே ஒப்பற்ற பெருமையையுடையவன்; காளமேகம் போன்ற கரிய அழகிய திருமேனியினையுடையவன்; நாராயணன் என்னும் திருப்பெயரையுடையவன்; அவனே நமக்கு உபகாரகன் ஆவான் என்கிறார்.

வி-கு:—பீடுடையனும் மேனியினனுமான நாராயணன் அவனே நங்கள் பிரான் என்க. பிரான் - உபகாரகன்.

இத் திருவாய்மொழி, கலிவிருத்தம்.

ஈடு:—முதற்பாட்டு. [1] "அவன் நாராயணன் அன்றோ? நம் விருப்பத்தை முடித்தல் நிச்சயம்" என்று தம் திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார்.

ஓர் ஆயிரமாய் அளிக்கும் - ஒவ்வொரு திருப்பெயரே ஆயிரம் முகத்தாலே காக்க வல்லதாய் இருக்கும். [2] "நிறைந்த செல்வம் என்ன, வீரியம் என்ன, கீர்த்தி என்ன, சம்பத்து

---

1. "நாராயணன் நங்கள் பிரான் அவனே" என்றதனை நோக்கி, நாராயணன் என்ற சொல்லால் கிடைக்கும் பொருளையும், அதன் கருத்துரையால் கிடைக்கும் பொருளையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். நாலாம் பாசுரத்தில் உள்ள "மனமே" என்ற சொல்லைத் திருவுள்ளம்பற்றி ஈண்டுத் 'திருவுள்ளத்தைக் குறித்து' என்கிறார்.

2. 'ஆயிரம் முகத்தாலே காக்க' என்றதனை விவரணம் செய்கிறார் 'நிறைந்த செல்வம்' என்று தொடங்கி. பகவான் என்ற திருப்பெயரைக் கூறினால், அச் சொல்லின் பொருளான செல்வம் முதலானவற்றை எல்லாம் கொடுக்கும் என்றபடி. ஐச்வரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறுக்கும் 'பகம்' என்னும் பெயர் உண்மையால், பகவான் என்பதற்கு, இவ்வாறு குணங்களையும் உடையோன் என்பது பொருள். "ஆதி பகவன் முதற்றே உலகு" என்ற திருக்குறளையும் ஈண்டு நினைவு கூர்க.

ஐஶ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஶஸ꞉ ஶ்ரிய꞉
ஜ்ஞாந வைராக்யயோ꞉ சைவ ஷண்ணாம் பக இதீரணா.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 6. 5: 74.

என்ன, ஞானம் என்ன, வைராக்கியம் என்ன ஆகிய இவை ஆறுக்கும் பகம் என்று பெயர்" என்கிற நிருக்தி பேதத்தாலே பல வகையாகக் காக்க வல்லதாய் அன்றே இருப்பது. உலகு-காக்குமிடத்து ஒவ்வொருவராக அன்றிக்கே உலகம் முழுதினையும் காப்பாற்றும். ஏழ் - அதிலும் ஓர் உலகம் மாத்திரம் அன்றிக்கே, எல்லா உலகங்களையும் பாதுகாக்கும். [1] அடியார் ஒருவரைக் காப்பாற்றுமது உண்டு அன்றே அவனுக்கு; திருப்பெயர்கள் பாதுகாப்பது அங்ஙன் அன்று என்றபடி. அளிக்கும்-இவை செய்த பாவங்களைப் பார்த்துத் [2] "தள்ளுகிறேன்" என்பதும் ஒரு காலத்தில் உண்டு அவனுக்கு; அளிக்குமது ஒன்றுமே ஆயிற்று இவற்றுக்கு இயல்பு. பேர் - [3]காப்பதற்கு ஒருபேர் காணும் வேண்டுவது. [4] அப்படிப்பட்ட திருப்பெயர்களைத்தான் எத்தனை உடையன் என்னில்? ஆயிரம் கொண்டது ஓர் பீடு உடையன் - [5] "தேவன் திருப்பெயர்கள் ஆயிரம் உடையவன்" என்னுமாறு போலே. [6]பல பசுக்களை உடையன் என்னுமாறு போன்று. [7]எல்லார்க்கும் உணவு அளிக்க நினைத்தவர்கள் சோறும் தண்ணீரும் குறை அறுத்துக் கொண்டு இருக்குமாறு போலே, உலகத்தைப் பாதுகாக்க நினைத்த ஈஸ்வரனுக்கு, அதற்குத் தகுதியாக ஆயிரம் திருப்பெயர்கள் உண்டாய் இருக்குமாயிற்று.

---

1. இறைவன் காப்பதற்கும் திருப்பெயர்கள் காப்பதற்கும் உள்ள வேறுபாட்டினைக் காட்டுகிறார் 'அடியார்' என்று தொடங்கி.

2. தாநஹம் த்விஷத꞉ க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்
 க்ஷிபாமி அஜஸ்ரம் அஸுபாந் ஆஸுரீஷ்வேவ யோநிஷு.

என்பது, ஸ்ரீ கீதை. 16 : 19.

3. "பேர்" என்ற ஒருமையைக் கடாக்ஷித்துக் 'காப்பதற்கு' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். 'பேர்காணும்' என்பதற்கு, வியாஜம் காணும் என்பது, வேறும் ஒரு பொருள்.

4. 'அப்படிப்பட்ட' என்றது, ஒரு பெயரே ஆயிரம் முகமாகக் காக்க வல்லதான என்றபடி.

5. ஸஹஸ்ராக்ஷ꞉ ஸஹஸ்ராஸ்ய꞉ ஸஹஸ்ர சரணோ விபு꞉
 ஸஹஸ்ரபாஹு꞉ ஸர்வஜ்ஞ꞉ தேவோ நாம ஸஹஸ்ரவாந்.

என்பது, பாரதம்.

6. 'காப்பதற்காகப் பல திருநாமங்களை யுடையவன்' என்பதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'பல பசுக்களை' என்று தொடங்கி.

7. ஒரு திருப்பெயரே போதியதாமே? பல திருப் பெயர்கள் எற்றிற்கு? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எல்லார்க்கும்' என்று தொடங்கி.

[1]புத்திரன் இறக்க அதனாலே வருந்திய **கோயிலாய்த்தான்,** **பட்டர்** திருவடிகளிலே வந்து தன் சோகமெல்லாம் தோற்ற விழுந்து கிடக்க, அவர் அருளிச்செய்த வார்த்தையை நினைப்பது. ஆயிரம் திருப்பெயர்களையுடையன் ஆகையால் வந்த பெருமையை உடையவன். [2]அவைதாம் கரைகட்டாக் காவிரி போன்று பரந்திருந்தால், அவற்றை எல்லாம் ஒருமுகம் செய்து அநுபவிப்பதற்குத் தக்கதான வடிவையுடையனாய் இருக்கும் என்கிறார் மேல்: காளம் காராயின நல் மேனியினன் - [3]கார் என்றே இருக்கிறார் ஆயிற்று; முற்றுருவகம் இருக்கிறபடி. கறுத்திருந்துள்ள காளமேகம் போலே இருப்பதாய், [4]அது தானும் பெருக்காற்றில் இழிவார் ஒரு தெப்பம் தேடி இழியுமாறு போலே, ஒன்றைச் சொல்லும்போது உபமானம் முன்னாக அல்லது சொல்ல ஒண்ணாமையாலே சொன்ன இத்தனை போக்கி, திருமேனியைப் பார்த்தால் உபமானம் இல்லாததாய் ஆயிற்று இருப்பது. இப்படி இருப்பதனை உடையவன் தான் யார்? என்ன, **நாராயணன்** என்கிறார் மேல்:

நாராயணன் - [5]ஞானம் சக்தி முதலானவைகளும் குணங்களாக இருக்கச் செய்தே, ஞானத்வம் ஆனந்தத்வம் அமலத்வம் முதலானவைகள் சொரூபத்திற்கு நிரூபகமாய் இருக்கும்

---

1. திருநாமம் தஞ்சமாக இருக்கும் என்பதற்கு ஐதிஹ்யம் காட்டுகிறார் 'புத்திரன்' என்று தொடங்கி. கோயில் ஆய்த்தான் என்பவர்,தன் குமாரனுக்குப் பட்டர் திருப்பெயரைச் சாற்றினார்; அந்தப் புத்திரன் இறக்க, அவர் பட்டர் சந்நிதியிலே வந்து துக்கப்பட, "நீ 'நம்முடைய திருப்பெயர் சாற்றின பிள்ளை இறந்தான்' என்று அன்றோ துக்கப்படுகிறாய்; அதற்குத் துக்கப்பட வேண்டா; அந்தப் பெயரையுடைய நாம் இருந்தோமே" என்று, பட்டர் தம்மைப்போலே ஒரு விக்கிரஹத்தை எறி அருளப்பண்ணி அவருக்குக் கொடுத்தருளினார் என்பது சரிதம். 'கோயில் ஆய்த்தான்' என்பவர், பட்டர் அடியார்களுள் ஒருவர்.

2. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'அவைதாம்' என்று தொடங்கி.

3. கார் போன்ற என்னாது, "காராயின" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'கார் என்றே' என்று தொடங்கி.

4. "நல்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அது தானும்' என்று தொடங்கி. "நல்" என்பது, உபமானம் இன்மையைக் குறிக்க வந்தது என்றபடி.

5. மற்றைத் திருப் பெயர்கள் இருக்க, நாராயணன் என்னும் இத் திருப்பெயரை அருளிச்செய்யக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஞானம்' என்று தொடங்கி. என்றது, ஞானம் சக்தி முதலானவைகளும் குணங்களாக இருக்கச்செய்தேயும்,ஞானத்வம் ஆனந்தத்வம்

அன்றோ; அப்படியே, 'பேர் ஆயிரம் கொண்டது ஓர் பீடு உடையன்' என்றவன் ஆகிறான் யார்? என்ன, 'இன்னான்' என்று விசேடிக்கிற இடத்திலே, 'நாராயணன்' என்கையாலே, நிரூபகமாய்ப் புக்கது அன்றோ இது. [1] ஆயிரம் திருநாமங்களைச் சொல்லி, அவற்றிலே மூன்றனைப் பிரதானமாக எடுத்தது வியாபக மந்திரங்கள் ஆகையாலே; அவற்றிலே இரண்டனை மற்றையவற்றோடு ஒக்கச் சொல்லலாம்படி ஆயிற்று இதற்கு உண்டான முதன்மை. [2] "அந்தணர்மாட்டு அந்தி வைத்த மந்திரத்தை" என்றும், [3] "நின் திரு எட்டெழுத்தும் கற்று நான் உற்றதும்" என்றும், [4] "நாராயணா என்னும் நாமம்" என்றும், [5] "நமோ நாராயணம்" என்றும் இவை அன்றோ திருமங்கைமன்னன்படி; நம்மாழ்வாரும், [6] "வண்புகழ் நாரணன்" என்று தொடங்கி, திருவாய்மொழி முடிய அருளிச் செய்ததும் இதுவாய் இருக்கும் அன்றோ. [7] **வேதங்களும், ஆழ்வார்களும், நம் ஆசாரியர்களும்** எல்லாம் சென்ற வழி இது

முதலானவைகள் சொரூபத்தை நிரூபிக்கின்றவைகளாய், ஞானம் சக்தி முதலானவைகள் நிரூபிக்கப்பட்ட சொரூபத்திற்கு விசேடணங்களாய் இருப்பன போன்று, நாராயணன் என்னும் இதுவும், திருப் பெயர்களிலே ஒன்றாக இருக்கச்செய்தே, இத் திருப்பெயர் இறைவனுடைய சொரூபத்தை நிரூபித்துக் காட்டுகையாலே பிரதானமாய், இத் திருப்பெயராலே நிரூபிக்கப்பட்ட வஸ்துவினுடைய குணங்களுக்கும் செயல்களுக்கும் மற்றைத் திருநாமங்கள் வாசகமாக இருத்தலைத் தெரிவித்தபடி.

1. இத் திருப்பெயர் பிரதானம் ஆன படி என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆயிரம்' என்று தொடங்கி. 'அவற்றிலே மூன்றனை' என்றது, நாராயணன், வாசுதேவன், விஷ்ணு என்னும் இம்மூன்று திருப்பெயர்களையும். 'பிரதானமாக எடுத்தது' என்றது, விஷ்ணுகாயத்திரியிலே பிரதானமாக எடுத்தது என்றபடி. அதிலே, 'நாராயணாய' என்று முற்பட எடுத்தமையைத் திருவுள்ளம்பற்றி 'இதற்கு உண்டான முதன்மை' என்கிறார்.

2. வேதங்களே அன்றி ஆழ்வார்களும் விரும்பி இருப்பர்கள் என்கிறார் 'அந்தணர் மாட்டு' என்று தொடங்கி. இது, திருநெடுந்தாண்டகம், 4.

3. இது, பெரிய திருமொழி, 8. 10: 3.

4. இது, பெரிய திருமொழி, 1. 1: 1.

5. இது, பெரிய திருமொழி, 6. 10: 1.

6. இது, திருவாய்மொழி, 1. 2: 10.

7. மேற் கூறியவற்றை எல்லாம் முடிக்கிறார் 'வேதங்களும்' என்று தொடங்கி. 'நம் ஆசாரியர்களும் எல்லாம்' என்றது, தம்மை அடைந்தவர்கட்குத் திருமந்திரத்தையே உபதேசித்துப் போருகையாலே,

ஆயிற்று. [1] நாமும் எல்லாம் இப்போதும் அதனை ஆதரித்தால் ஒரு குற்றம் இல்லை அன்றோ; [2] மற்றை இரண்டு திருப்பெயர்களையும் சூத்திரர் முதலாயினரும் மற்றையாரும் விரும்புவதனால் அன்றோ நாம் அவற்றைத் தவிர்ந்தது. [3] நம் ஆசாரியர்கள் சென்ற வழியை அன்றோ நாம் ஆதரிக்க வேண்டுவது. நங்கள் பிரான் அவனே - நம்மைக் காப்பாற்றுகின்றவனான உபகாரகன் அவனே. "கூவுதல் வருதல் செய்திடாய்" என்று நம் பேற்றுக்கு நாம் பிரார்த்திக்க நமக்கு உரிமை இல்லை என்கிறது 'அவனே' என்கிற ஏகாரத்தால். (1)

906.

அவனே அகல் ஞாலம் படைத்துஇடந்தான்
அவனே அஃது உண்டு உமிழ்ந்தான் அளந்தான்
அவனே அவனும் அவனும் அவனும்
அவனே மற்று எல்லாமும் அறிந்தனமே.

பொ - ரை :—அகன்ற உலகத்தை எல்லாம் படைத்தவனும் பிரளயத்திலே முழுகி உலகத்தை இடந்து எடுத்தவனும் அவனே யாவன்; அவ் உலகத்தை எல்லாம் உண்டவனும் உமிழ்ந்தவனும் அளந்தவனும் அவனே யாவன்; பிரமனும் சிவனும் இந்திரனும் அவனே யாவன்;

---

1. அவர்கள் அங்ஙனம் சென்றார்களேயாகிலும், நாம் இதனையும் அவற்றையும் ஒரு சேர விரும்பினால் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நாமும்' என்று தொடங்கி.

2. ஆயின், அவ் இரு திருப்பெயர்களையும் தவிர்வது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மற்றை இரண்டு' என்று தொடங்கி. 'சூத்திரர்' என்றது, சைவர்களை; 'முதலாயினர்' என்றது, வைசிய க்ஷத்திரியர்களை. 'மற்றையார்' என்றது, அத்வைதிகளை. 'விரும்புவதனால்' என்றது, விஷ்ணு வாசுதேவன் என்னும் இரண்டு திருப் பெயர்களையும் மற்றைய தெய்வங்கள் பரமாகவும் பொருள் கூறுதவனால் என்றபடி. நாராயண பதம், ணத்வம் பாதிக்கையாலே, அங்ஙனம் பொருள் கூறிச் சேர்க்க முடியாமை காண்க. "பகவத் மந்திரங்கள்தான் அநேகங்கள்", "அவைதான் வியாபகங்கள் என்றும் அவ்யாபகங்கள் என்றும் இரண்டு வர்க்கம்","அவ்யாபகங்களில் வியாபகங்கள் மூன்றும் ச்ரேஷ்டங்கள்", "இவை மூன்றிலும் வைத்துக்கொண்டு பெரிய திருமந்த்ரம் பிரதாநம்", "மற்றையவை இரண்டுக்கும் அசிஷ்ட பரிக்ரஹமும் அபூர்த்தியும் உண்டு", "இத்தை வேதங்களும், ரிஷிகளும், ஆழ்வார்களும் ஆசாரியர்களும் விரும்பினார்கள்" என்னும் முமுக்ஷுப்படி ஸ்ரீ சூக்திகள் இங்குக் கருதத் தகும்.

3. ஆயினும், அவையும் பகவானுடைய திருப்பெயர்கள் அல்லவோ? அவற்றை விரும்பினால் என்? என்ன, 'நம் ஆசாரியர்கள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

மற்றும் உள்ள எல்லாப் பொருள்களும் அவனே யாவன்; இவ் உண்மையை யாம் அறிந்தோம் என்றவாறு.

வி - கு :—'அவனே' என்பது, மேல் திருப்பாசுரத்தில் கூறிய நாராயணன் என்னும் பெயரைச் சுட்டுகிறது. 'அறிந்தனம்' என்பதற்கு, நாம் என்னும் எழுவாயை வருவிக்கவும்.

ஈடு :—இரண்டாம் பாட்டு. [1] மேலே சொல்லப்பட்ட நாராயணன் என்னும் திருப்பெயரின் பொருளை அருளிச்செய்கிறார்.

அகல் ஞாலம் படைத்து இடந்தான் அவனே - அகன்ற பூமியை உண்டாக்கி, பிரளயம்கொண்ட பூமியை மஹாவராஹமாய் எடுத்தானும் அவனே. 'அவனே' என்ற ஏகாரத்தால் படைத்தல் முதலான காரியங்களில் வேறு துணைக் காரணம் இன்மையைச் சொல்லுகிறது. அஃது உண்டு உமிழ்ந்தான் அளந்தான் அவனே - பிரளயம் கொள்ளாதபடி பூமியை எடுத்து வயிற்றிலே வைத்து, வெளிநாடு காண உமிழ்ந்து, மஹாபலியால் கவர்ந்து கொள்ளப்பட, எல்லை நடந்து மீட்டுக்கொண்டான் அவனே. 'அவனே' என்ற ஏகாரத்தால், ஆபத்திற்குத் துணையாதல் முதலான காப்பாற்றுதல் தொழிலிலும் வேறு துணை இன்மையைத் தெரிவித்தவாறு. அவனும் அவனும் அவனும் அவனே - பிரமனும் சிவனும் இந்திரனும் ஆகிய இவர்களுடைய சொரூபம் ரக்ஷணம் நிற்றல் இருத்தல் முதலான செயல்கள் அவன் இட்ட வழக்கு. [2] "அவனே பிரமனும், அவனே சிவனும், அவனே இந்திரனும்" என்கிற பிரசித்தியைப் பற்றச் சொல்லுகிறார். என்றது, அவன், அவன், அவன் என்றே போருகிறார் என்றபடி. அவனே

1. நாராயணன் என்னும் சொல்லுக்குப் பொருள், "நாராஜ் ஜாதாநி தத்த்வாநி - பொருள்கள் எல்லாம் பிறப்பதற்கு இடமானவன் நரன்" என்று காரணனாக இருக்கும் தன்மையும், அந்தரியாமியாக இருப்பதனால் பலித்த இரக்ஷகனாக இருக்கும் தன்மையும், அந்தரியாமித்துவமும் ஆகையாலே அம் மூன்று பொருள்களையும் இத் திருப்பாசுரத்தில் அருளிச்செய்கிறார் என்று அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "அவனும் அவனும் அவனும் அவனே" என்றால் பிரமனையும் சிவனையும் இந்திரனையும் சொல்லுமாறு யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவனே' என்று தொடங்கி.

ஸ ப்ரஹ்மா ஸ ஶிவஃ ஸ இந்த்ரஃ"

என்பது, நாராயண அநுவாகம், 6 : 11.

[1] மற்று எல்லாமும் - "அவனே, உயர்ந்தவனும் விகாரம் இல்லாதவனும் கர்மங்கட்கு வசப்படாதவனுமான முக்தன்" என்கிறபடியே, பிரதானரோடு பிரதானம் இல்லாதாரோடு வேற்றுமை இல்லாதபடி அறிவுடைப்பொருள்களும் அறிவில் பொருள்களும் அவனுக்கு வசப்பட்டவையேயாம். அறிந்தனம்- பிரமன் முதலாயினோர் "நானே ஈஸ்வரன்" என்று இருக்கையும், அவர்களைப் பற்றுகின்றவர்களுமாய்ச் செல்லாநிற்க, நீர் 'அவனே' என்றது என்கொண்டு? என்னில், மயர்வற மதிநலம் அருளப்பெற்ற காரணத்தால் நாம் அறிந்தவர் ஆனோம்; அதனாலே சொல்லுகிறோம் என்கிறார். ஆக, இரண்டு பாசுரங்களாலும், திருமந்திரத்தையும், அதன் பொருளையும் அருளிச் செய்தாராய் நின்றார். (2)

907.

அறிந்தன வேத அரும் பொருள் நூல்கள்
அறிந்தன கொள்க அரும் பொருள் ஆதல்
அறிந்தனர் எல்லாம் அரியை வணங்கி
அறிந்தனர் நோய்கள் அறுக்கும் மருந்தே.

பொ - ரை :— உண்மைப் பொருளை அறிந்தவையாய் இருக்கின்ற வேதங்களினுடைய அரிய பொருள்களை எல்லாம் அறுதியிட்டுக் கூறுகின்ற இதிகாசங்களும் புராணங்களும் 'இறைவன் அறிதற்கு அரிய பொருள் ஆவன்' என்று இவ்வளவே அறிந்தனவாக அவற்றைக் கொள்ளுதல் தகும். எல்லாவற்றையும் அறிந்தவர்களான ஞானிகளும் சர்வேஸ்வரனை அடைந்து, பிறவித் துன்பத்தைப் போக்க வல்ல மருந்தாகவே அவனை அறிந்தார்கள்; அவனுடைய இனிமையில் அவர்களும் ஈடுபட்டிலர்; யாம் எல்லாமும் அவனே என்று அறிந்தனம் என்கிறார்.

வி - கு :— வேத அரும்பொருள் நூல்கள் அரும் பொருள் ஆதல் அறிந்தன கொள்க என்றும், எல்லாம் அறிந்தனர் அரியை வணங்கி அவனை நோய்கள் அறுக்கும் மருந்தாக அறிந்தனர் என்றும் கூட்டுக. மேல் திருப்பாசுரத்தின் ஈற்றடியை, இத் திருப்பாசுரத்தின் ஈற்றில் கொணர்ந்து கூட்டிப் பொருள் முடிவு காண்க.

---

1. "மற்று" என்ற சொல், "அக்ஷரம்" என்ற சொல்லுக்குப் பொருளான முக்த ஆத்மாக்களைச் சொல்லுகிறது.

"ஸ: அக்ஷர: பரம: ஸ்வராட்" என்பது, உபநிடதம்.

ஈடு :—மூன்றும் பாட்டு. [1] வேதங்களும் வேதார்த்தங்களை அறிந்த முனிவர்களும் அறிந்த அளவு அன்றிக்கே, நான் அவனை முழுதும் அறியும்படி எனக்குத் திருவருள் புரிந்தான் என்று இனியர் ஆகிறார்.

அறிந்தன வேதம் அரும்பொருள் நூல்கள் - [2] அறிதற்கு அரிய பொருள்களை அறிந்தனவாய் இருக்கிற வேதங்களாகிற சாஸ்திரங்கள். [3] அன்றிக்கே, அறிந்தனவாய் இருக்கிற வேதங்களில் அறிதற்கு அரிய பொருள்களை அறுதியிட்டுத் தரும் பிரஹ்மசூத்திரம், இதிகாசம், புராணங்கள் முதலானவைகள் என்னுதல். [4] அரும்பொருள் ஆதல் அறிந்தன கொள்க - 'அறிதற்கு அரியன்' என்னும் இவ்வளவே அறிந்தனவாகக் கொள்ள அமையும். [5] "வேதவாக்குக்கள் அறியமுடியாமல் எந்த ஆனந்த குணத்தினின்றும் மீண்டனவோ" என்றும், "அறியப்படாதது என்றிருப்பவன் எவனோ அவனுக்கு அறியப்பட்டது, அறிந்தேன் என்று இருப்பார்க்கு அறியப்படாதது" என்னும் இவ்வளவே அறிந்தது. எல்லாம் அறிந்தனர்-மற்றையவற்றை அறிந்தாராய் இருக்கின்ற பராசரர், வியாசர், வால்மீகி முதலான இருடிகளும். அரியை வணங்கி - எல்லாத் துக்கங்களையும் போக்குகின்றவனை அடைந்து. நோய்கள் அறுக்கும்

1. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். 'நான் அவனை முழுதும் அறியும்படி எனக்குத் திருவருள் புரிந்தான் என்று இனியர் ஆகிறார்' என்பது, பொருள் ஆற்றலால் போந்த பொருள்.

2. "அரும்பொருள் அறிந்தன வேத நூல்கள்" என்று கொண்டு கூட்டிப் பொருள் அருளிச்செய்கிறார் 'அறிதற்கு' என்று தொடங்கி.

3. சர்வேஸ்வரனை அறிந்தனவாய் இருக்கிற வேதங்களில் அரும்பொருளை விளக்கிக் கூறும் பிரஹ்மசூத்திரம் முதலான நூல்கள் என்பது இரண்டாவது பொருளுக்குக் கருத்து.

4. "அரும்பொருளாதல் அறிந்தன கொள்க" என்று தம் திருவுள்ளத்தை நோக்கி அருளிச்செய்கிறார்.

5. அங்ஙனம் கூறுதற்குப் பிரமாணங்களைக் காட்டுகிறார் 'வேதவாக்குக்கள்' என்று தொடங்கி.

"யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ
ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வான் நபிபேதி குதஸ்சநேதி".

என்பது, தைத்திரீய. 9 : 1.

"யஸ்யாமதம் தஸ்யமதம் அவிஜ்ஞாதம் விஜாநதாம்".

என்பது, கௌஷீதகி உபநிடதம்.

மருந்து அறிந்தனர் - [1] "சம்சாரமாகிற பாம்பினல் கடிக்கப் பட்டவர்களாகிச் செயல்அற்று இருக்கும் மக்கள் கிருஷ்ணன் என்னும் மந்திரத்தைக் கேட்டவுடன் விடுபட்டவர்கள் ஆகிரூர்கள்" என்கிறபடியே, "பிறவித் துன்பத்திற்கு மருந்து" என்னும் இவ்வளவே அறிந்தார்கள். [2] அவனுடைய இனிமையில் இழிந்திலர்கள்; அன்றிக்கே, [3] வேறு ஒன்றையும் விரும்பாத அவனுடைய உபாயபாவத்தில் இழிந்திலர்கள் என்னுதல். (3)

908.

மருந்தே நங்கள் போக மகிழ்ச்சிக்கு என்று
பெரும் தேவர் குழாங்கள் பிதற்றும் பிரான்
கரும் தேவன் எம்மான் கண்ணன் விண்ணுலகம்
தரும் தேவனைச் சோரேல் கண்டாய் மனமே!

பொ - ரை:—உன்னை அநுபவித்தலால் வரும் எங்கள் ஆனந்தத்திற்கு மருந்தாக இருப்பவனே! என்று நித்தியசூரிகள் அலற்றுகின்ற உபகாரகனும், கரிய நிறத்தையுடைய தேவனும், எம்மானும், கண்ண பிரானும், பரமபதத்தைக் கொடுக்கிற தேவபிரானுமாகிற எம்பெருமானை, மனமே! நழுவவிடாதே காண் என்கிறூர்.

வி - கு:—பெரும் தேவர் - நித்திய சூரிகள். மனமே சோரேல் என்க.

ஈடு:—நாலாம் பாட்டு. [4] நித்திய சூரிகளுக்கு இனியனுய் வைத்து, கிருஷ்ணனுய் வந்து அவதரித்து, நம்மையும் அவர்கள் நடுவே வைப்பானுக இருக்கிறவனை விடாதே காண்! என்று திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறூர்.

---

1. ஸம்ஸார ஸர்ப்ப ஸந்தஷ்ட நஷ்ட சேஷ்ட ஏக பேஷஜம்
க்ருஷ்ணேதி வைஷ்ணவம் மந்த்ரம் ஶ்ருத்வா முக்தோபவேத் நர꞉.
என்பது, பிரமாணம்.

2. நோய்கள் அறுக்கும் மருந்தாக அறிந்தார்களாகில், மற்று அறியாதது யாது? என்ன, 'அவனுடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறூர்.

3. என்றது, "வணங்கி நோய்கள் அறுக்கும் மருந்தானமையை அறிந்தார்கள்" என்கையாலே, ஸாபேக்ஷோபாயம் என்று அறிந்தார்கள் இத்தனை ஒழிய, அவனே நிரபேக்ஷோபாயம் என்று அறிந்திலர்கள் என்றபடி.

4. "பெரும் தேவர் குழாங்கள் பிதற்றும் பிரான் கண்ணன் விண்ணுலகம் தரும் தேவனைச் சோரேல் கண்டாய் மனமே!" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறூர்.

நங்கள் [1]போக மகிழ்ச்சிக்கு மருந்தே என்று-உன்னுடைய அநுபவத்தால் எங்களுக்கு வரும் ஆனந்தத்தைமேலும்மேலும் வளர்க்கின்றவனே! என்று. இப்படிச் சொல்லுகிறவர்கள் தாம் யார்? என்னில், பெரும் தேவர் - சம்சாரத்தின் சம்பந்தம் சிறிதும் இல்லாதவரான நித்தியசூரிகள். குழாங்கள்-அவர்கள், [2]கிண்ணகத்தில் இழிவாரைப் போலே திரள் திரளாக ஆயிற்று இழிவது. பிதற்றும்-[3]ஜன்னி சுரம் பிடித்தவர்களைப் போன்று பலவாறாகக் கூப்பிடாநிற்பர்கள். பிரான் - அவர்களுக்குத் தன்னை அநுபவிக்கக் கொடுக்கும் உபகாரகன். கரும் தேவன் - காளமேகம் போன்ற கரிய திவ்வியமான வடிவையுடையவன். எம்மான் - [4]அவ் வடிவினைக் காட்டி என்னை எழுதிக்கொண்டவன். என்றது, நித்தியசூரிகளுக்குப் படி விடும் வடிவினைக் கண்டீர் எனக்கு உபகரித்தது! என்றபடி. கண்ணன் - [5]தன் நிலை குலையாமல் நின்று உபகரிக்கை அன்றிக்கே, அவதரித்து வந்து உபகரிக்குமவன். விண் உலகம் தரும் தேவனை - பரமபதத்தைத் தருவானாக இருக்கிற சர்வேஸ்வரனை. சோரேல் கண்டாய் மனமே - [6]அவனை உடம்பு வெளுக்கப் பண்ணாதே காண், நெஞ்சே! [7]இவன் விடுகையாவது, அவனுக்கு இழவு போலே காணும். [8]அவன் செய்த கிருஷி பலித்தது இல்லையாமே; இல்லையாகில், [9]உலகிற்கு வேறுபட்ட அவனுடைய

---

1. "போக மகிழ்ச்சிக்கு மருந்தே" என்பதனைப் "பசிக்கு மருந்து" என்பது போன்று கொள்க.

2. "குழாங்கள்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கிண்ணகத்தில்' என்று தொடங்கி. கிண்ணகம் - வெள்ளப்பெருக்கு.

3. "பிதற்றும்" என்றதற்கு, பாவம் 'ஜன்னி சுரம்' என்று தொடங்கும் வாக்கியம்.

4. "பெரும் தேவர் குழாங்கள் பிதற்றும் கருந்தேவன்" என்றதனை அடுத்து "எம்மான்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அவ் வடிவினை' என்று தொடங்கி. படி - சிலேடை.

5. "எம்மான்" என்றதனைச் சாரக் "கண்ணன்" என்றதனை வைத்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தன் நிலை' என்று தொடங்கி.

6. "கருந்தேவனை" என்ற பதத்தைக் கடாக்ஷித்து, பாவம் அருளிச்செய்கிறார் 'அவனை' என்று தொடங்கி.

7. இவர் நெஞ்சு சோர்ந்தால் அவன் உடம்பு வெளுக்க வேண்டுமோ? என்ன, 'இவன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

8. இழவினைக் காட்டுகிறார் 'அவன் செய்த' என்று தொடங்கி.

9. உலகிற்கு வேறுபட்ட சிறப்பினையுடைய அவனை விடக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'உலகிற்கு' என்று தொடங்கி.

சிறப்பினை நினையாதே, 'சுலபன்' என்று காற்கடைக் கொள்ளாதே காண்! (4)

909.

மனமே! உன்னை வல்வினையேன் இரந்து
கனமே சொல்லினேன்; இது சோரேல் கண்டாய்!
புனம் மேவிய பூந் தண் துழாய் அலங்கல்
இனம் ஏதும் இலானை அடைவதுமே.

பொ - ரை:—மனமே! வல்வினையேனாகிய யான் உன்னை இரந்து உறுதியாகச் சொல்லுகிறேன்; இதனை நழுவவிடாதே காண்! புனத்திலே பொருந்தி இருக்கிற அழகிய குளிர்ந்த திருத்துழாய் மாலையைத் தரித்த ஒப்பு ஒரு சிறிதும் இல்லாதவனை அடைவோம் என்னும் இதனை நழுவவிடாதே காண் என்கிறார்.

வி - கு:—இரந்து சொல்லினேன்; இனம் ஏதும் இலானை அடைவதும் இது சோரேல் கண்டாய் என்க. சொல்லினேன்: கால வழுவமைதி; தெளிவின் கண் வந்தது.

ஈடு:—ஐந்தாம் பாட்டு. [1] மனமே! அவனை விடாதேகாண் என்றார் மேல்; அவ் வார்த்தையை ஓலக்க வார்த்தையாக நினைத்திராதே காண் என்கிறார் இப் பாசுரத்தில்.

மனமே உன்னை-[2] மோக்ஷத்திற்குக் காரணமாய் முற்பட்டு நிற்கிற உன்னை அன்றோ, பிற்பாடரைச் சொல்லுமாறுபோலே இருக்க நான் சொல்லுகிறது? [3]பகவானிடத்தில் பக்தி உனக்கு இயல்பாகவே இருக்க, என் செல்லாமையாலே சொல்லுகிறேன் அத்தனை அன்றோ. என்றது, உன்னை இரக்கவேண்டும் என்று இரக்கிறேன் அல்லேன்; என் ஆசை மிகுதியாலே இரக்கிறேனித்தனை என்றபடி. "முந்துற்ற நெஞ்சே! இயற்றுவாய் எம்மொடு நீ கூடி" என்று நானும் காற்கட்ட வேண்டும்படி. அநுப

1. மேல் திருப்பாசுரத்திலும் இத் திருப்பாசுரத்திலும் "சோரேல் கண்டாய்" என்று வந்திருப்பது, கூறியது கூறல் ஆகாமைக்குக் காரணம் காட்டி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "உன்னை" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'மோக்ஷத்திற்கு' என்று தொடங்கி.

3. ஆயின், சொல்லுவது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பகவானிடத்தில்' என்று தொடங்கி.

4. மனம் முற்பட்டு நிற்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'முந்துற்ற' என்று. இது, பெரிய திருவந்தாதி, 1.

வத்திலே முற்பட்டு நிற்கிற உன்னை. வல் வினையேன்-[1]பகவானை அடைவதை முறையிலே அடைவோம் என்று இராதபடி பாவத்தைச் செய்தேன். உன்னை இரக்க வேண்டி இரக்கிறேன் அல்லேன், என் ஆசைமிகுதியாலே இரக்கிறேன் அத்தனை. இரந்து கனமே சொல்லினேன்-உன்னைக் கால் பிடித்து உறுதியாகச் சொன்னேன். [2]இரந்து சொல்லுகைக்கு மணக்கால் நம்பியோடு ஒப்பர்களாணும். [3]கனம்-பொன். உனக்கு மிக மேலான பொருளைச் சொன்னேன் என்கை. இது சோரேல் கண்டாய் - இனி, நானே "பகவானிடத்தில் பக்தி கூடாது; இதனைத் தவிர வேண்டும்" என்று சொன்னாலும் நீ இதனை நெகிழ விடாதே காண்; [4]"சாயால் கரியானை" என்கிறபடியே.

[5]எதனைத் தான் நீர் இப்படிச் சோரேல் என்று சொல்லுகிறது? என்ன, புனம் மேவிய பூந் தண் துழாய் அலங்கல் - எல்லை இல்லாத இனியனானவனைப் பற்றுதலைச் சோரேல் என்கிறேன் என்கிறார். புனத்திலே மேவி இருப்பதான அழகையுடைய திருத்துழாய் மாலையை உடையவன் ஆகையாலே ஒப்பு இன்றிக்கே இருக்கிறவனை. [6]அத் தோள் மாலையை உடையவனாகை அன்றோ அறப் பெரியன் ஆகையாவது. [7]ஒரு திருமுளைத்

1. வல்வினையை விளக்குகிறார் 'பகவானை' என்று தொடங்கி.

2. இரந்து சொல்ல வேண்டுமோ? என்ன, 'இரந்து சொல்லுகைக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். மணக்கால் நம்பி - ஸ்ரீ ஆளவந்தாருடைய ஆசாரியர்.

3. "கனமே சொல்லினேன்" என்பதற்கு இரண்டாவது பொருள், 'கனம்' என்று தொடங்கும் வாக்கியம். என்றது, கனம் என்பதற்குப் பொன் என்பது பொருள்; அது, மேலானது என்ற பொருளைக் காட்டுகிறபடியால், சீரிய பொருளைச் சொன்னேன் என்கிறார் என்றவாறு.

4. பகவானிடத்தில் பக்தி கூடாது என்று கூறினாரோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சாயால்' என்று தொடங்கி. இது, பெரிய திருவந்தாதி, 14.

5. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'எதனைத் தான்' என்று தொடங்கி.

6. திருத்துழாய் மாலையினை உடையனாய் இருந்தால் ஒப்பு இன்றிக்கே இருக்கவேண்டுமோ? என்ன, 'அத் தோள்மாலையை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

7. பிராசங்கிகமாக (இடைப்பிறவரல்) 'ஒரு திருமுளைத் திருநாளிலே' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். 'திருமுளைத் திருநாள்' என்றது, பிரஹ்மோத்சவத்தினை. கையார் சக்கரம் - ஆழ்வார் திருநாள். புறப்பட்டருளினபடி - சேனை முதலியார் புறப்பட்டருளினபடி. சேனை முதலியார் புறப்பாட்டைப் பெருமாள் புறப்பாடாகத் திருவுள்ளம்பற்றினார் என்றபடி. 'அருளிச்செய்தார்' என்றது, நஞ்சீயரை.

திருநாளில் இப் பாட்டை அருளிச்செய்து, முன்னுள் "கையார் சக்கரத்து"க்குப் புறப்பட்டருளினபடி திருவுள்ளத்தில் கிடக்க, 'புனம் மேவிய பூந் தண் துழாய் அலங்கல் இனம் ஏதும் இலான் ஆகையாவது, நேற்றுப் புறப்பட்டருளினபடி அன்றோ' என்று அருளிச்செய்தார். அடைவது சொல்லினேன்; இது சோரேல் கண்டாய் என்று கூட்டி வினை முடிக்க. அன்றிக்கே, எதனை நீர் சொல்லுகிறது? என்ன, இனம் ஏதும் இலானை அடைவது என்று முற்றாக முடிக்கவுமாம். (5)

910.

அடைவதும் அணி ஆர் மலர்மங்கை தோள்;
மிடைவதும் அசுரர்க்கு வெம்போர்களே?
கடைவதும் கடலுள் அமுதம்; என் மனம்
உடைவதும் அவர்க்கே ஒருங்காகவே.

பொ - ரை:—அழகு பொருந்திய பெரிய பிராட்டியாருடைய தோள்களைச் சேர்வதும், அசுரர்கள் காரணமாகச் செய்யப்படும் கொடிய போரிலே நெருங்குவதும், கடலிலே அமுதம் உண்டாகும்படியாக அக்கடலைக் கடைவதுமான அச்செயல்களையுடைய அவர்க்கே என்னுடைய மனமானது ஒரு சேர உருக்குலையாநின்றது என்கிறார்.

வி - கு:—உடைவதும் - உடையாநிற்பதும் ஆகும்; உருக்குலையாநின்றது என்றபடி.

ஈடு:—ஆறும்பாட்டு. [1]தம்முடைய உபதேசம் பலித்து, இவ் விஷயத்திலே திருவுள்ளம் உருக்குலையாநின்றது என்று இனியர் ஆகிறார்.

அணிஆர் மலர்மங்கை தோள் அடைவதும் - மிகவும் அழகியதான பெரிய பிராட்டியார் திருத்தோளோடே கலப்பதும். '**அடைவதும் தோள்**' என்றதனால், அவன்தான் உலகமே உருவமாக இருக்கும் வடிவினைக் கொண்டு இழிந்தாலும் தோளுக்கு அவ்வருகு போகமாட்டான் என்பதனைத் தெரிவித்தபடி. அன்றிக்கே, [2]'அணி ஆர்' என்பதனை மலர் மங்

1. "என்மனம் உடைவதும் அவற்கே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. முதற் பொருளில் "அணியார்" என்பது தோளுக்கு அடைமொழி.

கைக்கு அடையாக்கி, [1]"மார்வத்து மாலை" என்கிறபடியே, திருமார்வுக்கு எல்லாம் தானே ஆபரணமாகப் போரும்படியாக இருப்பாளாய், இனிமையாலே குறைவற்று இருக்கிறவள் தோளோடே ஆயிற்று அணைவது என்று பொருள் கூறலுமாம். அசுரர்க்கு வெம் போர்களே மிடைவதும்-இதனால்,அவள் தோளை அணைவதற்கு இடும் பச்சையைத் தெரிவித்தபடி. [2]"கணவனை நன்றாகத் தழுவிக் கொண்டாள்" என்கிறபடியே அன்றோ அவள் அணைப்பது. [3]அடியார்களுடைய பகைவர்களுக்கு வெம் போர்களே நெருங்கச் செய்வதும் என்னுதல்; அன்றிக்கே, அவர்களை முடிக்கும் விரகினையே எண்ணுநிற்கும் என்னுதல். கடைவதும் கடலுள் அமுதம் - [4]வேறு பிரயோஜனங்களை விரும்புகிற தேவர்கள் அமுதத்தைப் பெறுவதற்காகக் கடைவதும் என்னுதல்; பெரிய பிராட்டியாரைப் பெறுதல் நிமித்தம் கடையும்படியைச் சொல்லுகிறது என்னுதல். [5]அவளோடு கலத்தலைச் சொல்லிற்று; அதற்கு இடும் பச்சை சொல்லிற்று; அவளைப் பெறுகைக்கு முயற்சி செய்தபடி சொல்லிற்று. இவர் திருவுள்ளம் உடைகுலைப் படுகைக்குக் காரணங்கள் இவை. என் மனம் ஒருங்காக அவற்கே உடைவதும் - என்மனம் ஒரு மடைப்பட உடைகுலைப்படாநிற்பதும் இந்த விதமான செயல்களையுடையவனுக்கே.

---

1. 'மார்வத்துமாலை' என்பது திருவாய்மொழி, 10. 10: 2.

2. பகைவர்களைக் கொல்லுவது அணைவதற்குப் பச்சை ஆகுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கணவனை' என்று தொடங்கி. பச்சை - காணிக்கைப் பொருள்.

தம் த்ருஷ்ட்வா ஶத்ரு ஹந்தாரம் மஹர்ஷீணும் ஸுகாவஹம்
பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே.

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 30 : 39.

3. "மிடைதல்" என்பதற்கு இருபொருள். அவற்றை முறையே அருளிச்செய்கிறார் 'அடியார்களுடைய' என்று தொடங்கி. மிடைதல் - நெருங்குதல்; எண்ணுதல்.

4. மேல் இரண்டு அடிகளிலும் கூறிய பொருளுக்கு ஏற்ப, "கடைவதும் கடலுள் அமுதம்" என்பதற்கு, இருவகையாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'வேறு பிரயோஜனங்களை' என்று தொடங்கி. தேவர்களுக்கு என்பது வியாஜமாத்திரமாய்ப் பிராட்டியைப் பெறுகைக்காகக் கடைந்தான் என்பது இரண்டாவது பொருளின் கருத்து.

5. "கடைவதும் கடலுள் அமுதம்" என்பதற்குக் கூறிய இரண்டாவது பொருளுக்கு ஏற்ப, மூன்று அடிகளிலும் கூறியவற்றை எல்லாம் முடித்துக் காட்டுகிறார் 'அவளோடு' என்று தொடங்கி.

[1] அவன் பனிக்கடலைக் கடைய, இவர் மனக்கடல் உடையப் புக்கது. [2] விரகராய் இருப்பார், கோழைகளாய் இருப்பாரிடத்தில் பொருளை வாங்க நினைத்தால், முந்துற மிடுக்கராய் இருப்பாரை நெருக்கி வாங்கவே, இவர்கள் தாங்களே கொடு சென்று கொடுப்பார்கள் அன்றோ; அப்படியே, அவனும் மிகப் பெரியதான கடலை உலக்கை விடுநகம் இட்டு நெருக்கி அதன் நல் உயிரை வாங்க, இவருடைய திருவுள்ளம் உடையத் தொடங்கிற்று. (6)

911.

ஆகம் சேர் நரசிங்கமது ஆகி ஓர்
ஆகம் வள் உகிரால் பிளந்தான் உறை
மாகம் வைகுந்தம் காண்பதற்கு என் மனம்
ஏகம் எண்ணும் இராப் பகல் இன்றியே.

பொ - ரை :—மனிதவடிவும் சிங்கவடிவும் பொருந்திய சரீரத்தை உடையவனாகி, ஒப்பற்ற இரணியனுடைய மார்பினைக் கூரிய நகங்களால் பிளந்தவனான எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற பரம ஆகாசமான ஸ்ரீவைகுண்டத்தைக் காண்பதற்கு என் மனம் இரவு பகல் என்னும் வேறுபாடு இல்லாமல் ஒரே தன்மையதாக எண்ணுகிற்கின்றது என்கிறார்.

வி - கு :—நரசிங்கம் சேர் ஆகமது ஆகி என்று பிரித்துக் கூட்டுக. மா-கம் - பெரிய ஆகாசம், பரமாகாசம்; பரமபதம். இராப்பகல் இன்றி எண்ணும் என்க.

ஈடு :—ஏழாம்பாட்டு. [3] அவன் நித்தியவாசம் செய்கிற பரமபதத்தைச் சென்று காணவேண்டும் என்னுநின்றது என் நெஞ்சு என்கிறார்.

---

1. "கடைவதும் கடல்" என்றதனோடு "என் மனம் உடைவதும்" என்றதனையும் கூட்டி ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'அவன்' என்று தொடங்கி.

2. அவன் பனிக்கடலைக் கடைந்தால் இவர் மனக்கடல் உடைவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'விரகராய்' என்று தொடங்கி. உலக்கை விடு நகம் இட்டு - உலக்கையாலே கிட்டி கட்டி. 'நல் உயிர்' என்றது, அமுதத்தை.

3. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

ஆகம் சேர் நரசிங்கமது ஆகி - [1]நரவடிவும் சிங்கவடிவும் சேர்ப்பாலும் கண்டசர்க்கரையும் போலே பொருந்திய நரசிங்கமாய். அன்றிக்கே, நரசிங்கத்தினுடைய வடிவு இவர் நெஞ்சிலே சேர்ந்தபடி என்னுதல்; என்றது, [2]"இராகவனுடைய பர்ணங்களை நினைத்துக்கொண்டு" என்கிறபடியே, மறக்க ஒண்ணாதபடி திருவுள்ளத்திலே சேர்ந்த படியைச் சொன்னவாறு. அன்றிக்கே, இரண்டு வடிவுகளையும் சேர்த்துக் கொடு வந்து தோன்றின போது இவர் மனத்திற்கு இனியதாய்ச் சேர்ந்திருந்த படியைச் சொன்னவாறுமாம். ஓர் ஆகம்-ஒப்பற்றதான முரட்டு உடம்பு. வள் உகிரால் - கூரிய நகத்தால். அன்றிக்கே, வளர்ந்த நகத்தால் என்னுதல். பிளந்தான் உறை - வருத்தம் இன்றியே கிழித்துப் பொகட்டவன் நித்தியவாசம் செய்கிற. மா கம் வைகுந்தம் காண்பதற்கு - அந் நரசிங்கம் வசிக்கிற முழஞ்சு காண ஆயிற்று ஆசைப்படுகிறது. மா கம் - [3]"பரமாகாஶம்" என்னக்கடவது அன்றோ. என் மனம் ஏகம் எண்ணும் - என்னுடைய மனமானது, எப்போதும் ஒக்க உச்சிவீடு விடாதே இதனையே எண்ணாநின்றது. இராப் பகல் இன்றி - [4]இரவில் ஒரு காரியமும், பகலில் ஒரு காரியமுமாய் அன்றோ உலகத்தார்க்கு இருப்பது; இவர்க்கு எல்லாக் காலங்களிலும் இதுவே ஆயிற்று; [5]"நான் அங்கு இராகவனுடைய திருமாளிகையில் பன்னிரண்டு ஆண்டுகள் முடிய மனிதர்களுக்குரிய இன்பங்களை அநுபவித்தேன்" என்று பிராட்டி திரு

---

1. "ஆகம்" என்பதற்கு இருபொருள். ஒன்று, இறைவனுடைய திருமேனி. மற்றொன்று, ஆழ்வாருடைய திருவுள்ளம். இவ் இரு பொருள்களையும் முறையே அருளிச்செய்கிறார் 'நரவடிவும்' என்றும், 'அன்றிக்கே' என்றும் தொடங்கி.

2. ப்ரஹ்மதண்ட ப்ரகாசாநாம் வித்யுத் ஸத்ருஶ வர்ச்சஸாம்
ஸ்மரந் ராகவ பாணாநாம் விவ்யதே ராக்ஷஸேஶ்வர:.

என்பது, ஸ்ரீராமா. யுத். 60 : 3.

3. "மாகம்" என்பது, பரமபதத்தைக் காட்டுவதற்கு மேற்கோள், 'பரமாகாஶம்' என்பது.

4. நாள்தோறும் என்னாமல், "இராப் பகல்" என்று விசேடித்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இரவில்' என்று தொடங்கி.

5. திருநகரியை விட்டுப் பரமபதத்தை எண்ணுகிறது என்? என்ன, ஒரு திருஷ்டாந்தத்தோடு அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நான்' என்று தொடங்கி.

ஸமா த்வாதஶ தத்ர அஹம் ராகவஸ்ய நிவேஶநே
புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வ காம ஸம்ருத்திநீ.

என்பது, ஸ்ரீராமா. சுந். 33 : 17.

வயோத்தியையை நினைத்தாற் போலே ஆயிற்று, இவர் திருவுள்ளத்திற்குப் பரமபதம் சொந்த தேசமாக இருக்கிறபடி. (7)

912.

இன்றிப் போக இருவினையும் கெடுத்து
ஒன்றி யாக்கை புகாமை உய்யக் கொள்வான்
[1]நின்ற வேங்கடம் நீள் நிலத்து உள்ளது
சென்று தேவர்கள் கைதொழுவார்களே.

பொ-ரை:—நல்வினை தீவினைகள் என்னும் இரண்டும் வாசனையோடு இல்லாமற் போகும்படி அவற்றைக் கெடுத்து, அசித்தோடு பொருந்தி வேறு ஒரு சரீரத்தை எடுக்காதவாறு செய்வதற்கு வந்து நிற்கின்ற திருவேங்கடம் நீண்ட இவ் உலகத்திலேயே உள்ளது; அதனால் பெற்றது என்? அங்கே சென்று கைகூப்பி வணங்குமவர்கள் தாம் புண்ணியம் புரிந்தோர் ஆவர் என்றவாறு.

வி-கு:—போகக் கெடுத்துப் புகாமை உய்யக் கொள்வதற்கு நின்ற வேங்கடம் என்க. கொள்வான்: வினையெச்சம், பெயராகக் கோடலுமாம். சென்று கைதொழுவார்கள் தேவர்கள் என்க.

ஈடு:—எட்டாம் பாட்டு. [2] இச் சரீர சம்பந்தம் அற்றால் சென்று அநுபவிக்கும் பரமபதம் வேண்டுமோ? இச் சரீரத்தோடே இருந்துகொண்டு அநுபவிக்கத் தகுந்த திருமலை இம் மண்ணுலகில் உள்ளது அன்றோ? ஆனாலும், நமக்குத் திருமலையோடு பரமபதத்தோடு வாசி அற்றதே அன்றோ! என்கிறார்.

இரு வினையும் இன்றிப் போகக் கெடுத்து-நல்வினை தீவினைகளான கருமங்களானவை வாசனையோடே போகும்படி செய்து. [3] தானே போக்கிக் கொள்ளப் பார்க்கும் அன்றே

---

1. வெறிகொள் அறை அருவி வேங்கடத்துச் செல்லின்
நெறிகொள் படிவத்தோய் நீயும்—பொறிகட்கு
இருள் ஈயும் ஞாலத்து இடர்எல்லாம் நீங்க
அருள் ஈயும் ஆழியவன். (புறப்பொருள் வெண்பாமாலை.)
"நீனிலங் கடந்த நெடுமுடி அண்ணலை நோக்கி
உலகம் தவம் செய்து வீடுபெற்ற மலை" (தொல்காப்பியம் எழுத்து. பாயிரம், நச். உரை.) என்பன ஈண்டு ஒப்பு நோக்கல் தகும்.

2. பின் இரண்டு அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. இருவினைகளும் வாசனையோடு அழிதல் கூடுமோ? என்ன, 'தானே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

அன்றோ சிறிது கிடக்கப் போவது. ஒன்றி யாக்கை புகாமை - [1] பின்னையும் ருசி வாசனைகள் கிடக்குமாகில் அசித் தத்துவத்தோடு சென்று கலசி, வேறு ஒரு சரீரத்தை அடைந்து, அதனால் வரும் துயரங்களை அநுபவிக்க வேண்டி வரும் அன்றோ; அது செய்யாமை. உய்யக் கொள்வான் நின்ற வேங்கடம் - [2] "உயிர் அளிப்பான்" என்கிறபடியே, எல்லாரையும் காப்பாற்றுவதற்காகக் காலத்தை எதிர்நோக்கினவனைக்கொண்டு நிற்கிற திருமலை. நீள் நிலத்து உள்ளது - சிறப்புப் பொருந்திய பூமியில் உள்ளது. திருமலையை யுடைத்தாகையாலே உளதாய பெருமையை நோக்கி [3] 'நீள்நிலம்' என்கிறார். [4] அத்தால் பெற்றது என்? சென்று கைதொழுவார்கள் தேவர்கள் - அவ்வளவு தூரம் கால்நடை தந்து போகவல்லார் புண்ணியம் மிக்கோர் அன்றோ; [5] "ஸ்ரீராமபிரானுடைய அழகு பொருந்திய குண்டலங்களோடு கூடின திருமுகத்தைப் பதினைந்தாவது ஆண்டில் மீண்டும் எவர்கள் பார்ப்பார்களோ அவர்கள் மனிதர்கள் அல்லர்; அவர்கள் தேவர்கள்" என்னுமாறு போலே, [6] அவனுடைய சீலம் முதலான குணங்களை நினைத்துச் சொல்லுகிறார். [7] அன்பினாலே மூடப்பட்டார்க்கு அவ் உலகத்தோடு இவ் உலகத்தோடு வாசி அற்றதே அன்றோ, எட்டாமைக்கு. (8)

---

1. "ஒன்றி யாக்கை புகாமை" என்று விசேடித்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'பின்னையும்' என்று தொடங்கி. 'ருசி வாசனை' என்றது, பிரகிருதியினுடைய ருசி வாசனை என்றபடி.

2. திருவிருத்தம். 1.

3. "நீள்" என்பது, ஈண்டுப் பெருமையின் மேற்று.

4. அண்மையில் இருந்தாலும் சென்று சேவிப்பதற்குத் தமக்குச் சக்தி இல்லையே என்பார் 'அத்தால் பெற்றது என்?' என்கிறார்.

5. சென்று சேவிக்கின்றவர்களைப் 'புண்ணியம் புரிந்தோர்' என்று கூறிய பேர் உளரோ? என்ன, 'ஸ்ரீராமபிரானுடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

நதே மநுஷ்யா தேவா: தே யே சாரு ஶுப குண்டலம்
முகம் த்ரக்ஷ்யந்தி ராமஸ்ய வர்ஷே பஞ்சதஶே புந:

என்பது, ஸ்ரீராமா. அயோத். 64 : 69.

இது, தசரத சக்கரவர்த்தி கூற்று.

6. சென்று சேர்தற்கு வலி அற்றவராதற்குக் காரணம் என்? என்ன, 'அவனுடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

7. நன்று; பரமபதம் போன்று திருமலையும் எட்டாத நிலமோ? என்ன, 'அன்பினாலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

913.

தொழுது மா மலர் நீர் சுடர் தூபம் கொண்டு
எழுதும் என்னும் இது மிகை ஆதலின்
பழுது இல் தொல் புகழ்ப் பாம்பணைப் பள்ளியாய் !
தழுவுமாறு அறியேன் ; உன தாள்களே.

பொ - ரை :—சிறந்த பூக்களையும் தண்ணீரையும் தீப தூபங்களையும் கொண்டு அடிமை செய்து உஜ்ஜீவிப்போம் என்னும் இதுவும் உனது திருவுள்ளத்தால் மிகை ஆதலின், குற்றம் இல்லாத இயல்பான புகழை யுடைய பாம்பணையில் அறிதுயில் செய்கின்றவனே! உன் திருவடிகளில் அடிமை செய்யும் விரகு அறியேன் என்கிறார்.

வி-கு :—பள்ளியாய்! மலர் நீர் சுடர் தூபம் கொண்டு தொழுது எழுதும் என்னும் இது மிகை ஆதலின், உன தாள்களைத் தழுவுமாறு அறியேன் என்க. எழுதல் - பிறவிப் பெருங்கடலில் நின்றும் கரை ஏறுதல். "தொழுது எழு" என்றார் முதல் முன்னர்.

ஈடு:—ஒன்பதாம் பாட்டு.[1] இப்படிச் சுலபனான உன் திருவடிகளிலே கிட்டப்பெற்றாலும் அடையவேண்டும் என்று நினைத்த அளவிலேயே அதனைக் கொண்டு பேருவகையன் ஆகின்ற உன் சீலகுணத்தை நினைத்து, யாதாயினும் ஓர் அடிமை செய்வதற்கு இயலாதவனாக இருக்கிறேன் என்கிறார். [2] அன்றிக்கே, "இங்ஙனே ஒரு மூன்று திருப் பாசுரங்களால் தம்முடைய தகுதி இல்லாமையைச் சொல்லுகிறார்" என்பாரும் உளர். அது இல்லை அன்றோ "கண்கள் சிவந்து" என்ற திருவாய்மொழி பாடிய பின்பு இவர்க்கு. அன்றிக்கே, "இத்தலையாலே ஒன்றனை விரும்பிப் பெறுதல் மிகையாம்படி இருக்கிறவனுடைய உபாயத்தின் தன்மையைச் சொல்லுகிறார்" என்பாரும் உளர்.[3] இவை எல்லாம் அல்ல; "அவன் திருமுன்னர் முறையாக அடிமை செய்ய ஒண்ணாதபடி அழிக்கும் அவனுடைய சீலகுணத்தைச் சொல்லுகிறது" என்று நம் **உடையவர்கள்** அருளிச்செய்வர்கள்.

---

1. "தொழுது எழுதும் என்னும் இது மிகை ஆதலின், தழுவுமாறு அறியேன்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "தொழுது எழுதும்" என்றதிலே நோக்காக, வேறு வகையாகக் கூறுகின்ற இரண்டு கருத்துக்களை அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. 'மூன்று திருப் பாசுரங்களாலே' என்றது, எட்டு ஒன்பது பத்தாம் பாசுரங்களை.

3. முதலிலே அருளிச்செய்த அவதாரிகையை விவரணம் செய்கிறார் 'இவை எல்லாம்' என்று தொடங்கி.

மா மலர் நீர் சுடர் தூபம் கொண்டு தொழுது எழுதும் என்னும் இது மிகை - சிறந்த பூக்கள் முதலான சாதனங்களைக் கொண்டு அடிமை செய்து உஜ்ஜீவிப்போம் என்றால், இது மிகையாம்படி அன்றோ உன்னுடைய சீலகுணம் இருப்பது. [1]"நிறைந்திருக்கிற தண்ணீரையுடைய பூரண கும்பத்தைக் காட்டிலும் வேறு ஒன்றனையும் அவன் விரும்புவதில்லை" என்னப் படுமவன் அன்றோ அவன். ஆதலின் - இப்படிச் சீல குணத்தாலே மேம்பட்டவன் ஆகையாலே. பழுது இல் தொல் புகழ்ப் பாம்பு அணைப் பள்ளியாய் - "வருந்தி அரிதில் ஆராதிக்கத் தக்கவன்" என்கிற குற்றம் இன்றிக்கே, இயல்பாகவே அமைந்த எளிதில் ஆராதிக்கத்தக்க தன்மையையுடையையாய், [2]அதற்கு அடியாகத் திருவனந்தாழ்வானோடே கலந்திருப்பவனே! உன தாள்கள் தழுவுமாறு அறியேன் - உன் திருவடிகளை அணையும் விரகு அறிகிலேன். [3]வலி இல்லாமையாலே முதலிலே கிட்டுதல் அரிது; கிட்டினாலும் சீலத்தின் மேன்மையை நினைத்தால் ஓர் அடிமை செய்ய இயலாதவனாக இருக்கிறேன். (9)

914.

[4]தாள தாமரையான் உனது உந்தியான்
வாள் கொள் நீள் மழுவாளி உன் ஆகத்தான்
ஆளராய்த் தொழுவாரும் அமரர்கள்
நாளும் என் புகழ்கோ உன சீலமே ?

பொ - ரை :—நாளத்தையுடைய தாமரையிலே பிறந்த பிரமன் உன் திருவுந்தித் தாமரையிலே உள்ளவன் ஆவான்; ஒளி பொருந்திய நீண்ட மழுவை ஏந்திய சிவன் உன் திருமேனியில் ஒருபகுதியில் இருக்

1. இறைவன் எளிதில் ஆராதிக்கத் தக்கவன் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'நிறைந்திருக்கிற' என்று தொடங்கி.

அந்யத் பூர்ணாத் அபாம் கும்பாத் அந்யத் பாதாவநேஜநாத்
அந்யத் குஶல ஸம்ப்ரஶ்நாத் நசேச்சதி ஜநார்த்தநः.

என்பது, பாரதம் உத்யோகபர்வம், 87 : 13.

இது, சஞ்சயன் கூற்று.

2. அதற்கு அடியாக - எளிதில் ஆராதிக்கத் தக்கவன் என்பதற்கு அடியாக. இதனால், அன்பு சிறிது இருந்தாலும் திருவனந்தாழ்வான் அங்கீகரிப்பிப்பான் என்றபடி.

3. விரகு அறியாமைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'வலி' என்று தொடங்கி.

4. இத்திருப்பாசுரக் கருத்தோடு, திருவரங்கக் கலம்பகம் "போனகம் பதினாலு புவனம்" என்ற 32-ஆம் பாசுரம் ஒருபுடை ஒப்புமை யுடைத்தாம்.

கிறன்; அடியவர்களாகித் தொழுது வணங்குகின்றவர்களும் தேவர்கள் ஆவார்; காலம் எல்லாம் புகழ்ந்தாலும் உன் சீலகுணத்தை என்ன என்று புகழ்வேன்? என்கிறார்.

வி - கு :—மழுவாளி - சிவன். நாளும் உன சீலம் என் புகழ்கோ என்க. புகழ்கோ என்பதில் ஓகாரம்: எதிர்மறை.

ஈடு :—பத்தாம் பாட்டு. [1] அடிமையின் இனிமையை அறியாத பிரமன் முதலாயினர்கட்கும் பற்றப்படுமவனாய் இருக்கிற உன்னுடைய சீலம் என்னால் புகழ்ந்து முடிக்க ஒண்ணாது என்கிறார்.

தாள தாமரையான் உனது உந்தியான் - தாமரைப் பூவினைப் பிறப்பிடமாகவுடைய பிரமன், உன் திருநாபியைப் பற்றி வாழ்கின்றான். தாமரைப் பூவிலே பிறந்தோம் நாம் என்னும் செருக்கினையுடையவனுக்கு அன்றோ உடம்பினைக் கொடுத்தது என்கிறார். வாள் கொள் நீள் மழுவாளி உன் ஆகத்தான் - ஒளியையுடைத்தாய், [2]தொடங்கின காரியத்தை முடிய நடத்தவற்றான மழுவினையுடைய சிவன் உன் திருமேனியில் ஓர் இடத்தைப் பற்றிக்கொண்டு வாழாநின்றான். [3] வேறு ஒருவரையும் அடைக்கலமாகப் பற்றாமையைத் தெரிவிக்கிற தொடை ஒத்த துளவமும் கூடையுமாய்ப் புகுந்திருக்கிறான் அல்லனே. ஆளராய்த் தொழுவாரும் அமரர்கள் - அடியாராய் அடைகின்றவர்களும் தேவர்கள். [4] நித்தியசூரிகள் செய்யும் அடிமையை அன்றோ மரணம் இல்லாத ஒப்புமையாலே '**நாங்களும் ஈஶ்வரர்கள்**' என்று இருக்குமவர்கள் செய்கிறது. நாளும் என் புகழ்கோ உன சீலமே-காலத்தை முழுதும் [5]ஒருபோகி ஆக்கிப் புகழுகைக்கு எனக்கு உறுப்பு ஆக்கினால்தான், என்னாலே புகழ்ந்து தலைக்கட்டலாய் இருந்ததோ உன்னுடைய சீலகுணம்? உன சீலம் நாளும் என் புகழ்கோ? (10)

---

1. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "நீள்" என்றதன் பொருள், 'தொடங்கின காரியத்தை முடிய நடத்தவற்றான' என்பது.

3 சிவனுக்குத் திருமேனியில் இடம் கொடுத்திருப்பது சீலமோ? என்ன, 'வேறு ஒருவரையும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'தொடை ஒத்த' என்பது, திருப்பள்ளி எழுச்சி. 10.

4. இது சீலத்தின் காரியமோ? என்ன, 'நித்தியசூரிகள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. ஒரு போகி ஆக்கி - ஒரே விஷயத்தில் ஆக்கி.

இப்பாசுரத்தில் உள்ள "தாமரையான்", "வாள்கொள்நீள் மழுவாளி", "அமரர்" என்ற பெயர்கள், அடிமையின் இனிமையை அறியாதவர்கள் என்பதனைக் காட்டுகின்றன.

915.

சீலம் எல்லை இலான் அடிமேல் அணி
கோலம் நீள் குருகூர்ச் சடகோபன் சொல்
மாலை ஆயிரத்துள் இவை பத்தினின்
பாலர் வைகுந்தம் ஏறுதல் பான்மையே.

பொ - ரை :—எல்லை இல்லாத சீலகுணத்தையுடைய இறைவனுடைய திருவடிகளின்மேலே, மிகுந்த அழகினையுடைய திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீசடகோபராலே அணியப்பட்ட பாமாலை ஆயிரத்துள் இப் பத்துப் பாசுரங்களையும் வல்லவர்கள் ஸ்ரீ வைகுண்டத்தை அடைதல் இயல்பு என்பதாம்.

வி - கு :—சடகோபன், அடிமேல் அணி சொல் மாலை என்க. அணி - அணிந்த. அன்றிக்கே, 'அணி' என்பதனைக் 'குருகூர்'க்கு அடை ஆக்கலுமாம். பாலர் - பான்மையையுடையவர்கள். அண்மையில் உள்ளவர்கள் எனலுமாம்.

ஈடு:—முடிவில், [1]இத்திருவாய்மொழி கற்றார் பரமபதத்தே செல்லுதல் ஆச்சரியம் அன்று; தக்கது என்கிறார்.

சீலம் எல்லை இலான் அடி மேல் - எல்லை இல்லாத சீல குணத்தையுடையவனுடைய திருவடிகளிலே. இதனால், இத் திருவாய்மொழியில் சொல்லப்பட்டது, சீலகுணத்தின் மேம் பாட்டினை ஆயிற்று; அதனை முடித்துக் காட்டுகிறார் '**சீலம் எல்லை இலான்**' என்று. அணி கோலம் நீள் குருகூர்ச் சடகோபன் சொல் மாலை - அழகு மிக்கிருந்துள்ள திருநகரியையுடைய ஆழ்வார். அன்றிக்கே, 'கோலம் நீள்' என்ற சொற்கள் இருப்பதனாலே, 'அணி' என்பதனை 'அடி மேல் அணி மாலை' என்று மாலைக்கு அடையாகக் கோடலுமாம். ஆயிரத்துள் இவை பத்தினின் பாலர் - இப் பத்தின்பக்கத்திலே உளராமவர்கள். என்றது, இப்பாசுரங்களை ஒருகால் சொல்லுதல், இவற்றைப் பாடம் செய்தல், இவற்றைப் பொருள் அறிவோடு படித்தல் என்னும் இவற்றில் ஒரு வழியாலே இதில் சம்பந்தமுடையவர்கள் என்றபடி. வைகுந்தம் ஏறுதல் பான்மையே - பரமபதத்திலே செல்லுதல் இயல்பாக இருக்கும். யாங்ஙனம்? எனின், "மாகம் வைகுந்தம் காண்பதற்கு ஏகம் எண்"ணினார் இவர்; இப் பாசுரங்களில் யாதாயினும் ஒருவகையில் சம்பந்தம்

1. "பத்தினின்பாலர் வைகுந்தம் ஏறுதல் பான்மையே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்தார்.

உள்ளவர்களுக்குப் பிரார்த்தித்துப் பெறவேண்டுவது இன்று, தானாகவே கிடைக்கும் என்பதாம்.[1] தமப்பன் செல்வம் மகனுக்குத் தாய பாகமாக அடைய வேண்டியதாகவே இருக்கும் அன்றோ. (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

ஓரா நீர் வேண்டினவை உள்ளதெல்லாம் செய்கின்றேன்
நாராயணன் அன்றோ நான் என்று — பேருறவைக்
காட்ட அவன் சீலத்தில் கால்தாழ்ந்த மாறன் அருள்
மாட்டிவிடும் நம் மனத்து மை. (83)

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. அது எப்படி? என்ன, 'தமப்பன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

நான்காம் திருவாய்மொழி — "மையார்"

முன்னுரை

ஈடு :—[1] இறைவனுடைய சுவாதந்திரியத்துக்கு அடி, அவன் தானாய் இருக்கும்; அவனுடைய சீலம் முதலான குணங்களுக்கு அடி பிராட்டியாக இருக்கும். சீலம் முதலான குணங்களிலே வந்தவாறே [2] சுவாதீனம் இன்றிக்கே ஒழிகிறதோ? என்னில், நிரூபித்தால், அந்தச் சுவாதந்திரியத்தைப் போன்று இவளுடைய சேர்த்தி நித்தியமாய் இருக்கையாலே, [3] அங்ஙனமாய் இராது. [4] பாஷ்யகாரர், மேலே "ஸ்ரீவல்லப:"என்ன நினைத்து, சொரூபத்தை நிரூபிக்கிற இடத்திலே, ஞானம் ஆனந்தம் இவற்றுக்கு முன்னே "ஸ்ரிய: பதி:" என்றாரே அன்றோ.

---

1. மேல் திருவாய்மொழியிலே, சீல குணத்தையும், அதற்கு அடியான திருமகள் கேள்வனாக இருக்கும் தன்மையையும் அருளிச்செய்தார்; சீல குணத்துக்கு அடி பிராட்டி; அங்ஙனமாயின், அந்தச் சீலகுணம் பிராட்டி காரணமாக வந்தது ஆகையாலே அநித்யம் ஆகாதோ? என்று சங்கித்து, அச் சங்கைக்கு விடை அருளிச்செய்கிறார் 'இறைவனுடைய' என்று தொடங்கி. 'இறைவனுடைய சுவாதந்திரியத்துக்கு அடி, அவன் தானாய் இருக்கும்' என்ற இதனை இங்கே அருளிச்செய்கிறது, சுவாதந்திரியம் தனக்கு உரியது ஆகையாலே, அதனை அநித்யம் என்று கூறுவதற்குக் காரணம் இல்லை என்று தோற்றுகைக்காக.

2. 'சுவாதீனம் இன்றிக்கே ஒழிகிறதோ' என்றது, இயல்பாகவே உள்ளது ஒன்று அல்லாமையாலும் ஒரு காரணம் பற்றி வந்ததாதலானும் நித்தியம் இன்றிக்கே ஒழிகிறதோ? என்றபடி.

3. 'அங்ஙனமாய் இராது' என்றது, காரணம் பற்றி வந்ததானாலும் அநித்தியமாய் இராது என்றபடி.

4. நித்தியமாகைக்கு அடி இறைவனுடைய சொரூபத்தை இவளைக் கொண்டு நிரூபிக்கவேண்டும்படி இவள் இருத்தலாலே என்று கூறத் திருவுள்ளம் பற்றி, அப்படி இறைவனுடைய சொரூபத்தை இவளைக் கொண்டு நிரூபிக்கும்படி இவள் இருக்கிறாளோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பாஷ்யகாரர்' என்று தொடங்கி. 'என்றாரே அன்றோ' என்றது, கீதா பாஷியத்தில் அருளிச்செய்தார் என்றபடி. பாஷ்யகாரர் - எம்பெருமானார். "ஶ்ரிய: பதி: நிகில ஹேய ப்ரத்யநீக கல்யாணைகதாநாநந்த ஜ்ஞாந ஆநந்தைக ஸ்வரூப:" என்று தொடங்கி, "ஸ்வாபிமத அநுரூப நித்ய நிரவத்ய ஸ்வரூப ரூப குண விபவைஶ்வர்ய ஶீலாத்யநவதிக அதிஶய அஸங்க்யேய கல்யாண குணகண ஸ்ரீவல்லப:" என்று கீதாபாஷ்யத்தில் அருளிச்செய்தபடியை அறிவித்தவாறு.

[1] இப்படி இருக்கிறவனுடைய சீல குணத்தையும், அதற்கு அடியான திருமகள் கேள்வனாக இருக்கும் தன்மையையும் அருளிச்செய்தார் மேல் திருவாய்மொழியிலே; [2] கடுகப் பெற வேண்டும்படி குணங்களால் மேம்பட்டவனுமாய்ப் பெறுவிப்பாரும் அருகே உளராய் இருக்கையாலே, இப்போதே பெற வேண்டும்படியான ஆசை பிறந்தது; அப்போதே பெறக் காணாமையாலே விஷயத்துக்குத் தகுதியாக விடாய்த்தார். [3] பெறவேண்டும்படி குணங்களால் மேம்பட்டவனுமாய், பெறுவிப்பாரும் அருகே உளராய் இருக்கப் பெறாவிட்டால் ஆறி இருக்கப் போகாதே அன்றோ. [4] ஆகையாலே, "முடியானே" என்ற திருவாய்மொழியின் வாசனையாலே, அறிவுடைப் பொருள்களைப் போன்று, தனித் தனியே கரணங்களும் விடாய்க்க, தாமும் விடாய்த்தார். [5] இதுதான் எல்லாத் திருவாய்மொழிகளோடும் கூடி இருப்பது ஒன்றாயிற்று. என்றது, [6] "முடியானே", "வீற்றிருந்துஏழுலகு", "என்றைக்கும்என்னை", "செஞ்சொற்கவிகாள்" என்னும் திருவாய்மொழிகளில் ஓடுகிற எண்ணங்களையுடைத்தாய் ஆயிற்று இருப்பது என்றபடி.

---

1. பிராசங்கிகமாக (இடைப்பிறவரலாக) உண்டான சங்கைக்கு விடை கூறி, இனி, மேல் திருவாய்மொழிக்கும் இத் திருவாய்மொழிக்கும் இயைபு அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி. 'திருமகள் கேள்வனாக இருக்கும் தன்மையையும்' என்றது, மேல் திருவாய்மொழியில் "அடைவதும் அணியார் மலர்மங்கை தோள்" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி.

2. சீலம் முதலான குணங்களும், திருமகள் கேள்வனாக இருக்கும் தன்மையும் இத் திருவாய்மொழியில் இவர்க்கு ஓடுகிற விடாயை அதிகரிக்கச் செய்கின்றன என்கிறார் 'கடுக' என்று தொடங்கி.

3. விடாய்க்கிறது என்? ஆறி இருக்க ஒண்ணாதோ? என்ன, 'பெற வேண்டும்படி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. மேலே கூறிய பொருளை முடித்துக் காட்டத் திருவுள்ளம்பற்றி விடாயினுடைய எல்லையை அருளிச்செய்கிறார் 'ஆகையாலே' என்று தொடங்கி.

5. விடாய் மாத்திரமேயோ? மகிழ்ச்சி இல்லையோ? என்ன, 'இது தான்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "முடியானே" என்ற திருவாய்மொழியில் சொல்லப்பட்ட பொருளை, இத் திருவாய்மொழியில் முதல் ஐந்து பாசுரங்களிலும், "வீற்றிருந்து" என்ற திருவாய்மொழியில் சொல்லப்பட்ட பொருளை மேல் மூன்று பாசுரங்களிலும் (6, 7, 8.), "என்றைக்கும்" என்ற திருவாய்மொழியில் சொல்லப்பட்ட பொருளை ஒன்பதாம் பாசுரத்திலும், "செஞ்சொற் கவிகாள்" என்ற திருவாய்மொழியில் சொல்லப்பட்ட பொருளைப் பத்தாம் பாசுரத்திலும் அருளிச்செய்கிறார் என்றபடி.

6. அதனை விவரணம் செய்கிறார் 'முடியானே' என்று தொடங்கி.

[1]"இப்படி இந்திரியங்களும் தனித்தனியே விடாய்க்க, தாமும் விடாய்த்தபடி தான், ஸ்ரீ கஜேந்திராழ்வானுடைய துயரத்துக்குத் தோற்றின அதுதான் காலம் தாழ்த்து வந்தான் என்னலாம்படி, ஆற்றாமைக்குக் காலம் தாழ்த்துத் தோற்றாமல் தூணிலே வந்து தோற்றினாற் போலே தோற்ற வேண்டும்படி ஆயிற்று.

[2]இப்படிப்பட்ட தம் நிலையையும், அதற்கு அடியான விடாயையும், விடாய் அறிந்து அதற்கு உதவ வந்து அவன் முகம் காட்டினபடியையும் நினைத்து உவகையினராய், "நான் கிருதக் கிருத்யன் ஆனேன்; அடிமை செய்யப்பெற்றேன்; வாழ்ந்தேன்; ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் எல்லாம் நான் உபகாரகனும்படி ஆனேன்; இது ஒருவன் பெறும் பேறு இருந்தபடியே!" என்று தமக்குப் பிறந்த லாபத்தை நினைந்து இனியராய், அதனைப் பேசித் தலைக்கட்டுகிறார்.

916.

மையார் கருங்கண்ணி கமலமலர் மேல்
செய்யாள் திருமார்வினில் சேர் திருமாலே!
வெய்யார் சுடர்ஆழி சுரி சங்கம் ஏந்தும்
கையா! உன்னைக் காணக் கருதும் என் கண்ணே.

---

1. இவர்க்கு இத்திருவாய்மொழியில் பிறந்த விடாயினுடைய உறைப்பு எவ்வளவு? என்ன, 'இப்படி' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இத் திருவாய்மொழியில் வருகிற "கண்ணே", "என் கருத்தே", "உன்னை உள்ளும் என் உள்ளம்" என்பன போன்றவைகளைத் திருவுள்ளம் பற்றித் 'தனித் தனியே' என்கிறார். "நான் அழைப்பன்", "பேதுறுவன்" என்பன போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றித் 'தாமும் விடாய்த்து' என்கிறார். "நரசிங்கமதாய்" என்றதனைத் திருவுள்ளம்பற்றித் 'தூணிலே வந்து தோற்றினாற் போலே' என்கிறார்.

2. இத் திருவாய்மொழியில் உள்ள பத்துத் திருப்பாசுரங்களின் பொருளையும் திரட்டிப் பிண்டமாக அருளிச்செய்கிறார் 'இப்படிப்பட்ட' என்று தொடங்கி. "என் உள்ளம் உகந்தே" என்றதனை நோக்கி 'உவகையினராய்' என்றும், "கண்டு கொண்டேன்" என்றதனை நோக்கி 'நான் கிருதக்கிருத்யன் ஆனேன்' என்றும், "தொண்டர்க்கு அமுது உண்ண" என்பன போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றி 'ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும்' என்று தொடங்கியும், "உய்ந்தவாறே" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'இது ஒருவன்' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

பொ - ரை:—அஞ்சனம் பொருந்திய கரிய கண்களையுடையவளும் தாமரைமலரில் எழுந்தருளியிருக்கின்ற செய்யாளுமான பெரியபிராட்டியார் திருமார்பினில் சேர்ந்திருக்கின்ற திருமாலே! வெம்மையையுடைய ஒளிபொருந்திய சக்கரத்தையும் உள் சுரிந்த சங்கையும் ஏந்துகின்ற திருக்கைகளையுடையவனே! என் கண்கள் உன்னைக் காணுவதற்கு எண்ணுகின்றன என்கிறார்.

வி - கு:—கருங்கண்ணி: இகர ஈற்றுப் பெண்பாற்பெயர். என் கண் உன்னைக் காணக் கருதும் என்க.

இத் திருவாய்மொழி, கலிவிருத்தம்.

ஈடு:—முதற்பாட்டு. [1] "திருமகள் கேள்வனானவனைக் காண வேண்டும்" என்று தம்முடைய கண்களுக்குப் பிறந்த அவாவினை அருளிச்செய்கிறார்.

மை ஆர் கரும் கண்ணி—[2] "அவனைப் பெறவேண்டும்" என்று இருப்பார் ஆசைப்படுவதும் அவள் முன்னாகவாய், பெற்றால் பின்னை கைங்கரியம் செய்வதும் இருவருமான சேர்த்தியிலேயாய் இருக்கும் அன்றோ. மை ஆர் கரும் கண்ணி - [3] வேறு ஒரு பொருளைக் கொண்டு அழகு செய்ய வேண்டாதபடி இயல்பான அழகினையுடைத்தாய் ஆயிற்றுத் திருக்கண்கள் இருப்பன. [4] இனி, மங்களத்தின் பொருட்டுத் தரிக்குமித்தனையேயாம் அஞ்சனம். [5] 'கரும் கண்ணி' என்னாநிற்கச் செய்தே 'மையார்' என்னும்போது, மங்களத்தின் பொருட்டுத் தரிக்கப் படுதல் என்பது தானே போதரும் அன்றோ. கமல மலர்

---

1. முன் இரண்டு அடிகளையும் நான்காம் அடியையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "கமலமலர் மேல் செய்யாள் திருமார்வினில் சேர் திருமாலே" என்று பிராட்டியின் சேர்த்தியைக் கூறியதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அவனை' என்று தொடங்கி. 'ஆசைப்படுவதும்' என்றது, உபாயமாக வேண்டுவதும் என்றபடி. இது, த்வயத்தில் முன் வாக்கியத்தைத் திருவுள்ளம் பற்றி அருளிச்செய்தது.

3. "கருங்கண்ணி" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'வேறு ஒரு' என்று தொடங்கி.

4. ஆயின், "மையார்" என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இனி' என்று தொடங்கி.

5. மங்களத்தின் பொருட்டு என்பான் என்? அழகுக்காக என்றால் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கருங்கண்ணி' என்று தொடங்கி.

மேல் செய்யாள் - [1]இது ஆயிற்று மிருதுத்தன்மை இருக்கும் படி. திரு மார்வினில் சேர் திருமாலே - [2]தாமரைப் பூவில் வாசனையும் தாதும் அடிக் கொதித்தால் உன் மார்விலே அடி மாறி இட வேண்டும்படி மார்பு படைத்தவனே! [3]இவள் இவ் ஏற்றம் எல்லாம்கொண்டும் அம் மார்விற்கு அவ்வருகு போகமாட்டாள். [4]அவ் அகலம் எல்லாம் இனிமையாக இருக்கையாலே அவ்வருகு போகவேண்டாவே.

திருமாலே-[5]இவள், மார்பில் படும் பாட்டினை இவளுடைய எல்லாஉறுப்புக்களிலும் பிச்சுஏறி இருக்குமாயிற்று அவனும். [6]அவனுடைய திருக்கண்கள் சிவந்தனவாய் அன்றோ இருப்பன; அவன் இவளை எப்பொழுதும் பார்த்துக்கொண்டே இருப்பதனால், அவன் கண்களின் சிவப்பு இவள்மேலே ஊறி இவள் திருமேனி சிவந்திருக்கும்; இவள் அவனை எப்பொழுதும் பார்த்துக்கொண்டே இருக்கையாலே, இவள் கண்களின் கருமை அவன் திருமேனியிலே பரந்து அவன் திருமேனி கரு

---

1. மேலே அழகு சொல்லிற்று; இதனால் மிருதுத் தன்மை சொல்லுகிறது என்கிறார் 'இதுவாயிற்று' என்று தொடங்கி. என்றது, மலர் மேலே இருப்பதத்தனை போக்கி, மற்றை இடம் பொறாத மிருதுத் தன்மை.

2. "திரு" என்ற அடைமொழிக்கு விசேடம் அருளிச்செய்கிறார் 'தாமரைப் பூவில்' என்று தொடங்கி.

3. "சேர் திருமாலே" என்ற நிகழ்கால வினைத்தொகைக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இவள்' என்று தொடங்கி. 'இவ் ஏற்றம் எல்லாம்' என்றது, மேலே கூறிய அழகு, மிருதுத் தன்மைகளை.

4. போக மாட்டாமைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'அவ் அகலம்' என்று தொடங்கி. 'அகலம்' என்றது சிலேடை: மார்பு என்பது நேர்பொருள்; விரிந்திருப்பது என்பது வேறும் ஒரு பொருள்.

5. பிராட்டியினுடைய திருமேனியில் யாதாயினும் ஓர் அவயவத்தைக் கூறி அதிலே பிச்சு ஏறி இருக்குமவன் என்னுது, வாளா "திரு மாலே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவள்' என்று தொடங்கி. திரு - பெரிய பிராட்டியார். மால் - மயக்கம் கொண்டவன். மையால் அலங்கரிக்கப் பட்டனவாய், இயல்பிலே கருமையை யுடையனவான திருக்கண்களையுடையளாய், தாமரைப் பூவின்மேலே இருப்பாளாய், தாமரையின் நிறத்தையுடையளாகையாலே சிவந்த நிறத்தையுடைய பெரிய பிராட்டியாரானவர் அழகிய மார்பிலே சேரும்படியாய், திருவினிடத்தில் மயக்கம் கொண்டவனே! என்பது முன் இரண்டு அடிகட்குப் பொருள்.

6. "மையார் கருங்கண்ணி", "செய்யாள்" என்ற பதங்களைத் திருவுள்ளம்பற்றி, ஒருவர்க்கு ஒருவர் பார்த்துக்கொண்டே இருப்பதனால் இருவருடைய திருமேனிகட்கும் நிறங்கள் வந்தனவாக ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கி.

மையாக இருக்கும். [1] இவளுக்குத் திருக்கண்கள் குளிர்ந்திருக்கும்; அவனுக்கு வாத்சல்யம் விஞ்சி இருக்கும். [2] அவனுடைய சேர்க்கையாலே ஆயிற்று இவளுக்குத் தண்ணளி விஞ்சி இருப்பது; இவளுடைய சேர்க்கையாலே ஆயிற்று அவனுக்கு வாத்சல்யம் விஞ்சி இருப்பது. [3] ஆக, காதலாலே இருவர்க்கும் இரண்டும் குறைவு அற்று இருக்கும். [4]வரவிட்ட ஆள் அழியச் செய்யப் புக, [5]"யார் குற்றம் செய்யாதவர்" என்னும் இவள்; "என் அடியார் அது செய்யார்" என்று அவ்வளோடே மறு தலைக்கும்படி ஆயிற்று அவன் இருப்பது. ஆகையாலே, இருவருமான சேர்த்தியிலே இவை இருவர்க்கும் குறைவு அற்று இருக்கும் என்றுமாம். [6] பிரிந்திருக்கும் காலத்திலும் தனித் தனியே குறைவு அற்று இருக்கும் என்றுமாம். 'திருமார்வி

---

1. இருவருடைய திருமேனிகளில் சிவப்பும் கருமையும் ஒருவர்க்கு ஒருவர் பார்த்துக் கொள்ளுவதனால் வந்த அளவே அன்று; பிராட்டிக்குக் கிருபையும், இறைவனுக்கு வாத்சல்யமும் இருவருடைய பார்வைகளாலே வந்தன என்கிறார் 'இவளுக்கு' என்று தொடங்கி. கருமைநிறம் குளிர்ச்சியைக் காட்டிக் கிருபையைச் சொல்லுகிறது.

2. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கி.

3. ஒருவர்க்கு ஒருவர் சேர்த்தியாலே கிருபையும் வாத்சல்யமும் இருவர்க்கும் உளவானால், காரணம் பற்றி வந்தன ஆகையாலே அநித்தியம் ஆகாதோ? எனின், பார்த்துக்கொண்டிருத்தலாகிய காரணம் நித்தியம் ஆகையாலே அநித்தியம் ஆகாது என்கிறார் 'ஆக' என்று தொடங்கி.

4. இப்படி இருவர்க்கும் இரண்டும் விஞ்சி இருக்கும் என்கைக்கு ஆதாரம் என்? என்ன, இருவருடைய கூற்றுக்களும் என்கிறார் 'வரவிட்ட' என்று தொடங்கி. வரவிட்ட ஆள் - மாருதி.

5; பாபாநாம்வா ஶுபாநாம்வா வதார்ஹாணாம் ப்லவங்கம
கார்யம் கருணம் ஆர்யேண நகஶ்சித் ந அபராத்யதி.

என்பது, ஸ்ரீராமா, யுத். 116 : 45.

"என்னடியார்" என்பது, பெரியாழ்வார் திருமொழி, 4. 9 : 2.

6. சேர்த்தியாலே பிராட்டிக்குக் கிருபையும், பெருமாளுக்கு வாத்சல்யமும் வந்தனவாக இதுகாறும் அருளிச்செய்தார்; பிராட்டி கரிய கண்களை யுடையளாயிருத்தலும், பெருமான் புருஷோத்தமனும் தன்மைக்கு உரியதான தாமரைக் கண்ணனாயிருத்தலும், இருவர்க்கும் இயல்பிலே அமைந்தவை ஆகையாலே, கிருபையும் வாத்சல்யமும் பரஸ்பரம் சேர்த்தியால் வந்தன அன்றிக்கே, இயல்பாகவே உள்ளவை என்கிறார் 'பிரிந்திருக்கும் காலத்திலும்' என்று தொடங்கி.

னில் சேர்' என்கிறதனால், 'எப்பொழுதும் அநுபவித்துக் கொண்டு இருக்கச் செய்தேயும், "அகலகில்லேன் இறையும் என்று" இன்று வந்து கிட்டின புதியார் படுவதனை எல்லாம் படா நிற்பாள் என்பதனைத் தெரிவித்தபடி. 'சேர் திருமாலே' என்ற நிகழ்கால வினைத்தொகை இதனைக் காட்டுகிறது.

வெய் ஆர் சுடர் ஆழி சுரி சங்கம் - [2]இவள் கையில் உள்ள விளையாட்டுத் தாமரைப்பூ அவனுக்கு இனிதாக இருக்குமாறு போலே ஆயிற்று, அவன் கைகளில் திவ்விய ஆயுதங்கள் இவளுக்கு இனிதாய் இருக்கிறபடி. [3]இவள் உகப்புக்காக அடியார்களுடைய பகைவர்களை அழியச் செய்கைக்குக் காரணமாய், காட்சிக்கு இனிதாய் இருக்குமாயிற்று. [4]பகைவர்கள் மேலே மிக வெம்மையையுடைத்தாய்ப் புகரோடு கூடி இருக்கிற திருவாழி, இருக்கும் தோற்றப் பொலிவே அமைந்து வேறு ஒரு காரியம் கொள்ளவேண்டாதே வைத்த கண் வாங்காதே கண்டு கொண்டு இருக்க வேண்டும்படியான ஸ்ரீ பாஞ்சஜன்யம். ஏந்தும் கையா-[5]வெறும் ஆயுதங்களையே அன்று, வெறும் திருக்கரங்களையே அன்று: இரண்டினுடையவும் சேர்த்தியை ஆயிற்று

---

1. இவள் அம் மார்வினை விட்டு அவ்வருகு போகமாட்டாமையின் எல்லையை அருளிச்செய்யாநின்றுகொண்டு, இது "சேர்" என்ற சொல் காட்டுகிறது என்கிறார் 'எப்பொழுதும்' என்று தொடங்கி.

"சேர் திருமாலே" என்னும் இவ்விடத்தில்,

"மானேய் நோக்கி மடவாளை மார்பில் கொண்டாய்! மாதவா!" (திருவாய்மொழி, 1. 5 : 5.) என்றதன் வியாக்கியானத்தையும்,

வெருவும் ஆலமும் பிறையும் வெவ் விடையவற்கு ஈந்து
தருவும் வேறுள தகைமையும் சதமகற்கு அருளி
மருவுதொல் பெருவளங்களும் வேறற வழங்கித்
திருவும் ஆரமும் அணிந்தனன் சீதர மூர்த்தி.

என்ற செய்யுளையும் நினைவு கூர்க. கம்பரா. பாலகாண். அகலிகைப் பட. செய். 26.

2. பிராட்டியைக் கூறி, அதன் பின்னர் ஆயுதங்களைக் கூறுதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இவள் கையில்' என்று தொடங்கி. இவ்விடத்தில், ஸ்ரீ குணரத்நகோசம் 47-வது சுலோகம் நினைவு கூர்க.

3. ஆயின், "வெய்யார் சுடர் ஆழி" என்று விசேடிப்பான் என்? என்ன, 'இவள் உகப்புக்காக' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். வெம்மை - விருப்பம், "வெம்மை வேண்டல்" என்பது, தொல்காப்பியம், சொல். சூ. 334.

4. பதங்கட்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'பகைவர்கள்' என்று தொடங்கி.

5. "ஏந்தும் கையா" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'வெறும் ஆயுதங்களையே' என்று தொடங்கி.

இவர் ஆசைப்படுகிறது. [1] "கூர்ஆர் ஆழி வெண்சங்கு ஏந்தி வாராய்" என்னுமவர் அன்றோ. உன்னை -[2] பிராட்டி சம்பந்தத்தோடும், திவ்விய ஆயுதங்களோடும், திவ்விய விக்கிரஹத்தோடும் கூடி இருக்கிற உன்னை. [3] இவருடைய உத்தேசிய வஸ்து இருக்கிறபடி இது காணும். காணக் கருதும் - [4] "சங்கையும் சக்கரத்தையும் கதையையும் தரித்திருப்பவனே! பெரிய பிராட்டியாரையும் ஸ்ரீ வத்சத்தையும் மார்பில் உடையவனே!" என்கிற உன் வடிவைக் காண ஆசைப்படாநின்றது.

[5] அவனை ஆசைப்படுவார் ஆசைப்படுவது ஒரு காரியம் கொள்ள அன்று; காண ஆயிற்று. [6] திருவேங்கடத்தானைக் காண அன்றோ. காரார் திருமேனி காணும் அளவும் அன்றோ. [7] நித்திய சூரிகளும் எப்பொழுதும் பார்த்துக்கொண்டே இருப்பர்கள் இத்தனை அன்றோ. [8] "அணி அரங்கன் என் அமுதினைக் கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணுவே" என்று

1. தாம் கூறியதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'கூர்ஆர் ஆழி' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 6. 9 : 1.

2. மேலே போந்த எல்லாவற்றையும் திருவுள்ளம்பற்றி "உன்னை" என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'பிராட்டி' என்று தொடங்கி. "ஏந்தும் கையா" என்றதனைத் திருவுள்ளம்பற்றித் 'திவ்விய விக்கிரஹத்தோடும்' என்கிறார்.

3. இவர் அநுபவிக்கிற பொருள் இப்படிப்பட்டது என்கிறார் 'இவருடைய' என்று தொடங்கி.

4. "காண" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'சங்கையும்' என்று தொடங்கி.

தமஸ: பரமோ தாதா ஸங்க சக்ர கதா தர:
ஸ்ரீ வத்ஸ வக்ஷா நித்யஸ்ரீ: அஜய: ஸாஸ்வத: த்ருவ:.

என்பது, ஸ்ரீராமா. யுத். 114 : 15. இது, இராவணனைக் கொன்ற பின்னர் மண்டோதரி கூறியது.

5. "காண" என்பது என்? அவனால் கொள்ள வேண்டிய காரியம் இன்றோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவனை' என்று தொடங்கி.

6. காண்பதற்கே ஆசைப்பட்டிருப்பர் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'திருவேங்கடத்தானை' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி. 'காரார்' என்று தொடங்குவது சிறிய திருமடல், 69.

7. பரமபதத்திலும் அப்படியே என்கிறார் 'நித்திய சூரிகளும்' என்று தொடங்கி.

8. மேலே கூறிய இரண்டற்கும் முறையே பிரமாணம் காட்டுகிறார் 'அணி அரங்கன்' என்று தொடங்கியும், 'தேவர்கள்' என்று தொடங்கியும். 'அணி அரங்கன்' என்பது, அமலனாதிபிரான், செய். 10.

இவ்வளவிலே தேக்கிட்டு விடுவர்கள் இங்குள்ளார்.[1] "தேவர்கள் உண்பது இல்லை; இந்த அமிர்தத்தைப் பார்த்தே திருப்தி அடைகிறார்கள்" என்று இவ்வளவிலே தேக்கிட்டு விடுவர்கள் அங்குள்ளார். என் கண்ணே - [2]சம்சாரிகளில் தமக்கு உண்டான ஆசையோபாதியும் போருமாயிற்று, இவரைக் காட்டிலும் இவருடைய திருக்கண்களுக்கு. இவருக்கு முக்கியமானவர்களாக இருக்கும் ஏற்றம் உண்டே அன்றோ அவற்றுக்கு. (1)

917.

கண்ணே! உன்னைக் காணக் கருதி என் நெஞ்சம்
எண்ணே கொண்ட சிந்தையதாய் நின்று இயம்பும்
விண்ணோர் முனிவர்க்கு என்றும் காண்பு அரியாயை
நண்ணுதொழியேன் என்று நான் அழைப்பனே.

பொ - ரை:—எனக்குக் கண்ணாக இருப்பவனே! உன்னைக் காணுவதற்கு நினைத்து என் மனமானது பலவகையான எண்ணங்களையுடையதாகி நின்று அலற்றாநிற்கும்; தேவர்களாலும் சனகன் முதலான முனிவர்களாலும் எஞ்ஞான்றும் காண்பதற்கு அரியவனை நான் கிட்டாமல் விடேன் என்று கூப்பிடாநிற்பேன் என்கிறார்.

வி - கு:—நெஞ்சம் கருதிச் சிந்தையதாய் நின்று இயம்பும்; நான் காண்பு அரியாயை நண்ணுது ஒழியேன் என்று அழைப்பன் என்க.

ஈடு:—இரண்டாம் பாட்டு. [3]தமக்கும் தம்முடைய மனத்துக்கும் உண்டான காதற்பெருக்கை அருளிச்செய்கிறார்.

கண்ணே - எனக்குக் கண் ஆனவனே! உன்னைக் காணக் கருதி - எல்லை இல்லாத இனியனான உன்னைக் காண ஆசைப்பட்டு. [4]கண்ணைக் கொண்டே கண்ணைக் காண இருக்குமாறு

---

1. நவை தேவா அஶ்நந்தி நபிபந்தி
ஏத தேவாம்ருதம் த்ருஷ்ட்வா த்ருப்யந்தி.
என்பது, சாந்தோக்யம், 3: 10.

2. "என்" என்ற விசேடணத்துக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'சம்சாரிகளில்' என்று தொடங்கி. ஆசையோபாதியும் - ஆசையைப் போல. இவ்வழக்குப் பண்டைய உரைகளில் காணலாம். பதிற்றுப்பத்து, பழைய உரை.

3. "என் நெஞ்சம் எண்ணே கொண்ட சிந்தையதாய் நான் அழைப்பன்" என்பதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

4. ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'கண்ணைக் கொண்டே' என்று தொடங்கி.

போலே காணும் இவர் இருக்கிறது. [1] காண்பதற்குக் கருவியான கண்களும் காணப்படும் விஷயமும் அவன் என்கிறார். [2] "பார்க்கின்ற கண்களும் பார்க்கப்படுகிற பொருள்களும் நாராயணனே" என்னக் கடவது அன்றோ. [3] அவனாலேயே அவனைப் பெறுமவர் அன்றோ இவர். [4] பேற்றிலே உள்ள நியதியைப் போன்றே அதனைப் பெறுதற்கு உரிய வழியிலும் இவர்க்கு உள்ள நியதியும். என்நெஞ்சம் -[5] நல்வினை தீவினைகட்குக் காரணமாய்க்கொண்டு, விஷயங்களிலே 'பரகுபரகு' என்று வாராநிற்கும் அன்றோ சம்சாரிகளுடைய மனம்; "மயர்வு அற மதி நலம்" அருளப்பெற்றவர் மனம் அன்றோ, "தொழுது எழு" என்பது. எண்ணே கொண்ட சிந்தையதாய் - [6] எண் கொண்ட எண்ணத்தையுடையதாய்: என்றது, பல விதமான எண்ணங்களை எண்ணி. என்றது, "காணவேண்டும், காணாதே பட்ட துக்கத்தைப் போக்கவேண்டும், அடிமை செய்யவேண்டும்" என்று எண்ணி என்றபடி. நின்று இயம்பும்-எப்பொழுதும் கூப்பிடாநிற்கும். [7] கூப்பிடுதலாகிற செயலையும் தானே ஏறிட்டுக்கொள்ளாநிற்கும். [8] 'கண்ணே' என்கையாலே, வழியும்

---

1. மேலே கூறியதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'காண்பதற்கு' என்று தொடங்கி.

2. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'பார்க்கின்ற' என்று தொடங்கி.
சக்ஷுஶ்ச த்ரஷ்டவ்யஞ்ச நாராயண:
ஶ்ரோத்ரஞ்ச ஶ்ரோதவ்யஞ்ச நாராயண:.
என்பது, சுபாலோபநிடதம்.

3. வேறு உபாயங்களாலும் அவனைப் பெறலாமே? என்ன, 'அவனாலேயே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. இத்தகைய நிர்ப்பந்தத்திற்குக் காரணம் யாது? என்ன, 'பேற்றிலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. "என்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'நல்வினை' என்று தொடங்கி. 'பரகு பரகு' என்றது, பரபரப்பினைக் காட்டுகிறது.

6. 'எண் கொண்ட' என்றது, எண்ணிக்கையைக் கடந்த என்றபடி. விவரணம் செய்கிறார் 'பலவிதமான' என்று தொடங்கி.

7. மனம் நினைக்கும், கூப்பிடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'கூப்பிடுதலாகிற செயலையும்' என்று தொடங்கி.

8. முன் இரண்டு அடிகளாலே, ஒருவன் அறிய வேண்டிய பொருள்கள் மூன்றும் போதருகின்றன என்கிறார் "கண்ணே" என்று தொடங்கி. அதாவது, தத்வம் ஹிதம் புருஷார்த்தம் என்னும் மூன்றையும் கூறுகின்றார் என்றபடி. தத்வம்-அதிகாரி; ஹிதம்-உபாயம்; புருஷார்த்தம்-பேறு. "கண்ணே" என்கையாலே உபாயம்; "உன்னைக் காண" என்கையாலே பேறு; "எண்ணே கொண்ட" என்கையாலே அதிகாரி.

அவனே என்பதனைச் சொல்லிற்று. 'உன்னைக் காண' என்கை யாலே பேறும் அவனே என்பதனைச் சொல்லிற்று. 'எண்ணே கொண்ட,' என்கையாலே, அந்த வழியைக் கொண்டு இந்தப் பேற்றினைப் பெறவேண்டும் என்று இருக்கும் அதிகாரியி னுடைய வாழ்க்கை இருக்கிறபடி சொல்லிற்று.

விண்ணோர் முனிவர்க்கு என்றும் காண்பு அரியாயை நண்ணுது ஒழியேன் என்று நான் அழைப்பன் - இதனால், இது தான் மனத்திற்கேயாய் நான் செயல் அற்று இருக்கிறேனே? என்பதனைத் தெரிவித்தபடி. பிரமன் முதலான தேவர்களுக் கும் சனகன் முதலான முனிவர்களுக்கும் என்றும் ஒக்கக் காண அரியையாய் இருக்கிற உன்னை நான் கிட்டாதொழிவனே? "பெற்றே முடிப்பன்" என்று நான் கூப்பிடாநின்றேன். இவர் [1] 'பெற்றே முடிப்பன்' என்கிறது என்கொண்டு? என் னில், [2] வேறுபட்ட சிறப்பினையுடைய தேசங்களிலே வாழ் கின்றவர்களாய், தங்களுக்கு என்ன ஒரு கைம்முதல் உண்டாய் இருக்குமவர்கள் ஆகையாலே, விளம்பத்திற்குக் காரணம் உண்டு அவர்களுக்கு; அங்ஙன் ஒரு கைம்முதல் இல்லாதவர் களுக்கு விளம்பத்திற்குக் காரணம்உண்டோ? இல்லையே என் னும் உறுதியைக்கொண்டு கூப்பிடாநின்றார்என்க. நண்ணுது ஒழியேன்என்பதற்கு,அவனைக் கிட்டாதபோது நான்தரியேன் என்றுபொருள் அருளிச்செய்வர் [3] ஆய்த்தான். [4] "நண்ணுதொழி யேன்' என்கிறஇடம், மஹாவிஸ்வாசம் சொல்லுகிறது. [5] தேவர்

---

1. 'பெற்றே முடிப்பன்' என்றதற்குக் கருத்து, பிரமன் முதலானவர் களாலும் அடையமுடியாத பொருளைக் கிட்டுவேன் என்பது என்ன காரணத் தைக் கொண்டு என்பது.

2. மேலதற்கு விடை அருளிச்செய்கிறார் 'வேறுபட்ட' என்று தொடங்கி.

அதாவது, இன்பப் பொருள்கள் எல்லாவற்றாலும் குறைவற்ற தேசத்தில் இருப்பவர்கள் ஆகையாலே, 'இப்போதே அவனைப் பெற வேண்டும்' என்ற எண்ணம் பிறவாது ஆகையாலும், தாங்கள் தொடங்கி செய்து வருகின்ற சாதனங்கள் முற்ற முடிந்த பின்னரே காரியம் பலிக்கவேண்டும் என்னும் எண்ணமுடையவர்கள் ஆதலாலும் அவர்களுக்கு விளம்பம் உண்டு என்றபடி.

3. 'ஆய்த்தான்' என்பவர் பட்டருடைய மாணக்கர். பக். 80: பார்க்கவும்.

4. அவனைக் கிட்டாதபோது தரியேன், கிட்டியே விடுவேன் என்ற தனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'நண்ணுதொழியேன்' என்று தொடங்கி.

5. "விண்ணோர்.........காண்புஅரியாயை" என்று விசேடித்ததனால் போதரும் மறுதலைப் பொருளைக் காட்டுகிறார் 'தேவர்கள்' என்று தொடங்கி.

கள் வேறுபட்ட சிறந்த தேசத்திலே இருக்கையாலே கிரமத்திலே எடுக்கலாம்; அங்ஙன் அன்றிக்கே, இவ் உலகத்திலே அகப்பட்டு நிற்கிற இவரை அன்றோ கடுக எடுக்க வேண்டுவது. [1] எடுக்க வேண்டும் நிலத்திலே இருந்தேன்; எடுக்கவேண்டும் என்று இருந்தேன்; எடுப்பான் தானாய் இருந்தான்; எடுத்தால் பெறுவது தன்னையாய் இருந்தது; ஆனபின்பு, எனக்கு என்ன கண்ணழிவு உண்டு? (2)

918.

அழைக்கின்ற அடி நாயேன் நாய் கூழை வாலால்
குழைக்கின்றது போல என் உள்ளம் குழையும்
மழைக்கு அன்று குன்றம் எடுத்து ஆநிரை காத்தாய்!
பிழைக்கின்றது அருள் என்று பேதுறுவனே.

பொ - ரை:—அக்காலத்தில் மழையைத் தடுப்பதற்காகக் கோவர்த்தனம் என்னும் மலையை எடுத்துப் பசுக் கூட்டங்களைப் பாதுகாத்தவனே! நாயானது தன்னுடைய கூழை வாலால் தன் நினைவினைக் காட்டுமாறு போன்று, உன்னைக் கூப்பிடுகின்ற அடியேனாகிய நாயேனுடைய மனமானது குழையாநிற்கின்றது; உன் திருவருள் கிடைக்கவில்லையே என்று கலங்காநிற்கின்றேன் என்கிறார்.

வி - கு:—அழைக்கின்ற அடிநாயேன் என் உள்ளம் நாய் கூழை வாலால் குழைக்கின்றது போலக் குழையும் எனக் கூட்டுக. அருள் பிழைக்கின்றது என்று பேதுறுவன் என்க.

ஈடு:—மூன்றாம் பாட்டு. [2] இப்படிக் கூப்பிடச்செய்தேயும் வரக் காணாமையாலே, துன்பத்தையே கைம்முதலாகக் கொண்டு காப்பாற்றுகின்ற உன் குணத்துக்குப் புறம்பு ஆனேனோ? என்கிறார்.

அழைக்கின்ற அடி நாயேன் நாய் கூழை வாலால் குழைக்கின்றது போல என் உள்ளம் குழையும் - [3] தகுதி அற்றவனாய் அற்பனாய் இருந்து வைத்து, துயரத்தாலே கூப்பிடாநின்

1. இப் பாசுரத்தால் போதரும் பொருளை முடித்துக் காட்டுகிறார் 'எடுக்கவேண்டும்' என்று தொடங்கி. இது, "விண்ணோர்" என்றதற்குக் கூறிய மறுதலைப் பொருளிலும், "அழைப்பன், கண்ணே, உன்னைக் காண" என்ற பதங்களிலும் நோக்கு. கண்ணழிவு - விளம்பமும், குறையும்.

2. "பிழைக்கின்றது அருள் என்று பேதுறுவனே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. "நாயேன்" என்ற பதத்தைத் திருவுள்ளம்பற்றித் 'தகுதியற்றவனாய் அற்பனாய்' என்று பொருள் அருளிச்செய்கிறார்.

றேன். [1]ருசியாலே தவிரமாட்டார். கிட்டினல் அத்தலைக்குக் குற்றம் ஆம்படி ஆயிற்றுத் தம்முடைய நிலை. [2]நாய், தன் தலைவனுக்குத் தான் விரும்பிய பொருளில் ருசியைத் தெரிவிப்பது வாலாலே ஆயிற்று; அவ் வால்தான் கூழை ஆனல் தெரிவிக்கை அரிதாகும் அன்றே; அது போலே, என் மனமானது நோவுபடாநின்றது. [3]இதனல், தமக்கு ஓடுகிற துயரம் பேச்சுக்கு நிலம் அன்று என்பதனைத் தெரிவித்தபடி. அன்றிக்கே, சாதனம் ஒன்றும் இல்லாதவனாய் வைத்தும் ஆசைப்படாநின்றேன் என்கிறார் என்னுதல். மழைக்கு அன்று குன்றம் எடுத்து ஆநிரை காத்தாய்- இந்திரன் கல் மழையைப் பெய்த அளவிலே, மலையை எடுத்து ஆயர்களையும் பசுக்களையும் துயரமே கைம்முதலாகப் பாதுகாத்தவனே! அருள் பிழைக்கின்றது என்று பேதுறுவன்-[4]"'வரையாதே காத்த மஹாகுணம் எனக்கு உதவாமையாலே அதனை இழக்கப் புகாநின்றாய்' என்று [5]பேகணியாநின்றேன்" என்று ஆளவந்தார் அருளிச்செய்யும்படி. அதனை எம்பெருமானர் கேட்டருளி "இது பொருள் அழகிது; ஆனல், இப்போது [6]இவர்க்கு ஓடுகிற நிலைக்குச் சேராது; ஆனபின்பு,'பசுக்களும் ஆயர்களும் மழையிலே நோவு

1. தகுதி அற்றவர் ஆனல், கூப்பிடுகிறது என்? தவிரலாமே? என்ன, 'ருசியாலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. "கூழை" என்று அடை கொடுத்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'நாய்' என்று தொடங்கி.

3. "கூழை வாலால்" என்ற எடுத்துக்காட்டுக்குத் தகுதியாக இரண்டு வகையில் கருத்து அருளிச்செய்கிறார் 'இதனல்' என்று தொடங்கியும், 'அன்றிக்கே' என்று தொடங்கியும்.

4. ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாகத்துக்கு, அவ் அருள் உன்னைத் தப்பிப் போகிறது என்று பேதுறுவன் என்று, 'உன்னை' என்னும் சொல்லைக் கூட்டுக. எம்பெருமானர் நிர்வாகத்துக்கு, அவ் அருள் என்னைத் தப்பிப் போகிறது என்று, 'என்னை' என்னும் சொல்லைக் கூட்டுக.

5. பேகணித்தல் - வருந்துதல்.

தன் கன்று கண்ட அன்ன தன்மைய தறுகண் பேழ்வாய்
மின் கன்றும் எயிற்றுக் கோண்மா வேங்கை என்றினையவேயும்
பின் சென்று காதல்கூரப் பேழ்கணித்து இரங்குகின்ற
என் கன்றுகின்ற எண்ணில் பற்பல இவரை அம்மா.

என்பது, கம்பரா. கிட்கிந். மராமரப். செய். 12.

"பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற்கரியன் பெருமானே" என்பது, திருவாசகம், 611.

6. 'இவர்க்கு ஓடுகிற நிலைக்குச் சேராது' என்றது, இறைவன் திருவருள் தமக்குக் கிடையாமையாலே நோவுபடாநிற்க, 'அந்த அருளை இழந்தவன் ஆகிறான் இறைவன்' என்று அவன் இழவுக்கு நோவுபடுகை சேராது என்றபடி.

படாதபடி மலையை எடுத்து மறித்த இம் மஹா குணத்துக்கு நான் புறம்பு ஆகிறேனே!' என்று பேதுறுகின்றேன்" என்கிறார் என்று அருளிச்செய்தார். (3).

919.

உறுவது இது என்று, உனக்கு ஆட்பட்டு, நின்கண்
பெறுவது எதுகொல் என்று, பேதையேன் நெஞ்சம்
மறுகல் செய்யும்; வானவர் தானவர்க்கு என்றும்
அறிவது அரிய அரியாய அம்மானே!

பொ - ரை :—தேவர்களுக்கும் தானவர்களுக்கும் எக்காலத்தும் அறிதற்கு அரிய நரசிங்கமாகிய அம்மானே! உனக்கு அடிமை செய்வது தான் சொரூபத்திற்குத் தக்கது என்று உனக்கு அடிமைப்பட்டு, உன்னிடத்தில் பெறுவது எதைத்தான் என்று பேதையேனுடைய மனமானது கலங்காநிற்கும் என்கிறார்.

வி - கு :—அம்மானே! இது உறுவது என்று ஆட்பட்டு, பெறுவது எது என்று, நெஞ்சம் மறுகல் செய்யும் என்க. உறுவது - தக்கது. மறுகல் - சுழலுதல்.

ஈடு :—நாலாம் பாட்டு. [1]"நீர் இங்ஙன் அஞ்சுகிறது என்?' என்ன, 'தேவர்கள் முதலாயினோர்க்கு அரியை ஆகையாலே எனக்கும் அரியை ஆகிறாயோ?' என்று என் நெஞ்சு கலங்காநின்றது என்கிறார்.

உறுவது இது என்று - சீரியது அடிமை செய்யும் இது என்று. உனக்கு ஆள்பட்டு - உனக்கு அடிமை புகுந்து. [2]"ஆத்மா பகவானுக்கு அடிமைப்பட்டது" என்று அறிந்தால் பின் சீரிய பயன் கைங்கரியமே அன்றோ. நின்கண்பெறுவது எதுகொல் என்று-நின்கண் பெறுவது எதுவோ? என்று: ஆத்மாவின் தன்மையும் உணர்ந்து, 'சீரியதும் கைங்கரியமே என்று அறிந்து, ஈஸ்வரன் வேறு ஒன்றையும் விரும்பாதவர்கட்கு வேறுஒன்றைக்கொடுப்பான் ஒருவன் அல்லன் என்றும் அறியும் இவர்,'உன்பக்கல் பெறுவதுஎதுகொல்?'என்கைக்குக்

---

1. "பேதையேன் நெஞ்சம் மறுகல் செய்யும் வானவர் தானவர்க்கு என்றும் அறிவது அரிய அரியாய அம்மானே" என்பதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. சீரியது என்று அறிந்தபடி யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆத்மா' என்று தொடங்கி,

காரணம் என்? என்னில், [1]'கிரமத்திலே செய்கிறோம்' என்று சொல்லிக்கொண்டே இருந்து சம்சாரத்தில் இருக்கும் இருப்பையே கொடுத்துவிடப்போகின்றாயோ? அன்றி, என்விரைவு அறிந்து சடக்கு என முகம் காட்டுகிறாயோ? என்கைக்காகச் சொல்லுகிறார் என்பது. பேதையேன் நெஞ்சம் மறுகல் செய்யும் - 'நாம் விரும்பியபடியே பலிக்கும்' என்னும் அறிவு இன்றிக்கே இருக்கிற என் நெஞ்சம் கலங்காநின்றது. இங்ஙனம் கலங்குகைக்கு அடி என்? என்னில், மனத்தினுடைய அறிவின்மையே இதற்குக் காரணம்;[2]நீயும்கூட இதற்குக் காரணம். வானவர் தானவர்க்கு என்றும் அறிவது அரிய அரியாய அம்மானே - [3]"தேவர்களுக்கும் தானவர்களுக்கும்" சர்வேஸ்வரனாய் இருந்து வைத்து, தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் என்றும் ஒக்க அறிய அரியையாய், அந்நிலையிலேயே ஒரு சிறுக்கனுக்கு உன்னை உள்ளபடி அறியலாம்படி இருந்தாய்: அதில் நான் [4]'எக்கோடியில் ஆகிறேனோ? என்ற அறியாமை. [5]தேவர்களையும் அசுரர்களையும் பிரித்த பின்னர், அருச்சுனன் "நான் எக்கோடியிலே ஆகிறேனோ?" என்று அஞ்சினாற் போலே. பின்னை அவன் [6]இதற்குச் செய்த மாற்று என்? என்னில், [7]தன் சௌலப்பியத்தைக் காட்டுகையே அன்றோ.

---

1. 'கிரமத்திலே செய்கிறோம்' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து, ஸ்ரீ கஜேந்திராழ்வானுக்கு உதவியது போன்று சடக்கு என உதவுகிறாயோ? ஸ்ரீ பரதாழ்வானுக்கு உதவியதுபோலே கிரமத்திலே செய்கிறாயோ? என்பது.

2. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'நீயுங்கூட' என்று தொடங்கி. இதற்கு - அறிவு இன்மைக்கு.

3. "அம்மான்" என்ற பதத்தைத் திருவுள்ளம்பற்றி 'தேவர்களுக்கும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

தேவாநாம் தாநவாநாம்ச ஸாமாந்யம் அதிதைவதம்
ஸர்வதா சரணத்வந்த்வம் வ்ரஜாமி ஶரணம் தவ,

என்பது, ஜிதந்தா. 1 : 2.

4. 'எக்கோடியில் ஆகிறேனோ?' என்றது, தேவாசுர கோடியில் ஆகிறேனோ? என்றபடி.

5. 'தேவர்களையும்' என்று தொடங்கும் வாக்கியம், ஐயப்பட்டதற்கு மாத்திரம் மேற்கோள்.

6. இதற்கு - மறுகல் செய்வதற்கு.

7. "உகந்தே உன்னை உள்ளும் என் உள்ளம்" என்னும் ஏழாம் திருப்பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி, 'தன் சௌலப்பியத்தை' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

என்றது,[1]எளியோமாகையும் ஒரு கோடி உண்டாக நீர் சொன்னீராகில், நீர்தாம் அக் கோடியிலே உள்ளார் ஒருவராய் இருந்தீராகில் உமக்கு இனி நாம் கைப்புகுந்தோம் என்று இருக்கை அமையாதோ? என்கிறான் என்றபடி. (4)

920.

அரியாய அம்மானை அமரர் பிரானைப்
பெரியானைப் பிரமனை முன் படைத்தானை
வரி வாள் அரவின் அணைப் பள்ளி கொள்கின்ற
கரியான் கழல் காணக் கருதும் கருத்தே.

பொ - ரை :—நரசிங்கமாய் வந்து தோன்றிய அம்மானும், தேவர்களுக்கு உபகாரகனும், பெருமையையுடையவனும், பிரமனை ஆதிக்காலத்தில் உண்டாக்கினவனும், வரியையும் ஒளியையுமுடைய பாம்பாகிய படுக்கையின்மேல் யோகநித்திரை செய்கின்ற கரியவனுமான எம்பெருமானுடைய திருவடிகளைக் காணுவதற்கு என் மனமானது நினைக்கின்றது என்கிறார்.

வி - கு: —அரி - நரசிங்கம், அடியார்களுடைய பாவங்களை அழிக்கின்றவன் எனலுமாம். கருத்து காணக் கருதும் என்க.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [2] நாம் எளியோமான கோடியிலே அன்றோ? உமக்குப் பேறு கைபுகுந்திருக்க நீர் இங்ஙன் படுகிறது என்? என்ன, என் நெஞ்சு காண்கையிலே விரையா நின்றது என்கிறார்.

அம்மானை - சர்வேஸ்வரனை. அமரர் பிரானை - நித்திய சூரிகளுக்குத் தன்னைக் காட்டிக் கொடுத்து அநுபவிப்பிக்கும் உபகாரகனை. பெரியானை - அவர்களுடைய சொரூபம் இருப்பு முதலானவைகள் தனக்கு உரிமைப் பட்டவையாய், தன்னை அவர்களால் அளவிட்டு அறியமுடியாமல் இருப்பவனை. பிரமனை முன் படைத்தானை - பிரமனை முன்னே உண்டாக்கினவனை. அரி ஆய - படைக்கப்பட்ட உலகத்திலே, அடியவன் பொருட்டு அவன் சூளுறவு செய்த அச் சமயத்திலேயே தன்னை அழிய மாறி வந்து அவதரித்தவனை. வரி வாள் அரவின் அணைப்

1. அதனை விவரணம் செய்கிறார் ‘எளியோமாகையும்’ என்று தொடங்கி.

2. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

பள்ளி கொள்கின்ற - [1] அடியார்கட்கு உதவுகை அன்றிக்கே, அவர்களோடு கலந்திருக்கும் தன்மையனே. வரி வாள் அரவு - வரியையும் ஒளியையுமுடைய அரவு. வரி-அழகுமாம். கரியான்- [2] வெளுத்த திருநிறத்தையுடைய திருவனந்தாழ்வான் மேலே ஒரு காளமேகம் சாய்ந்தாற் போலே ஆயிற்றுக் கண்வளர்ந்தருளுவது. கருத்து காணக் கருதும் - என் மனமானது காண வேண்டும் என்று விரையாநின்றது. [3] படுக்கைக்குப் பரபாகமான வடிவும், அதற்குப் பரபாகமான திருவடிகளும் ஆகிய இவற்றை ஆயிற்றுக் காண ஆசைப்படுகிறது. (5)

921.

கருத்தே! உன்னைக் காணக் கருதி, என் நெஞ்சத்து
இருத்தாக இருத்தினேன்; தேவர்கட்கு எல்லாம்
விருத்தா! விளங்கும் சுடர்ச் சோதி உயரத்து
ஒருத்தா! உன்னை உள்ளும் என்உள்ளம் உகந்தே.

போ - ரை :—எனக்குக் கருத்தாக இருப்பவனே! உன்னைக் கண்டு அநுபவிக்கவேண்டும் என்று நினைத்து என் மனத்திலே பெயராதபடி இருக்கச் செய்தேன்; நித்தியசூரிகட்கு எல்லாம் தலைவனே! விளங்குகின்ற ஒளிப் பிழம்பாக உள்ள பரமபதத்திலே எழுந்தருளியிருக்கின்ற ஒருவனே! என்மனமானது விரும்பி உன்னை நினையாநின்றது என்கிறார்.

வி - கு :—கருத்து - மிடுக்கு. இருத்தாக இருத்தல் - பெயராதபடி இருத்துதல். விருத்தன் - மேம்பட்டவன். சுடர்ச் சோதி உயரத்து - பரமபதத்திலே.

ஈடு :—ஆறும் பாட்டு. [4] காண ஆசைப்பட்ட அளவிலே அவன் தம்முடைய திருவுள்ளத்திலே புகுந்தருள, தம்முடைய மனம் உகந்து அநுபவிக்கிறபடியை அருளிச்செய்கிறார்.

---

1. "அரி ஆய" என்றதன்பின், "வரிவாள் அரவின்அணைப் பள்ளி கொள்கின்ற" என்றதனைக் கூறியதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அடியார் கட்கு' என்று தொடங்கி.

2. "அரவின்அணைப் பள்ளி கொள்கின்ற கரியான்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வெளுத்த' என்று தொடங்கி.

3. "கரியான்" என்றதனைக் கடாக்ஷித்து, பாவம் அருளிச்செய்கிறார் 'படுக்கைக்கு' என்று தொடங்கி. பரபாகம் - பல நிறங்கள் கலப்பதால் உண்டாகும் அழகு.

4. "என் நெஞ்சத்து இருத்தாக இருத்தினேன், உன்னை உள்ளும் என் உள்ளம் உகந்து" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்

கருத்தே உன்னைக் காணக் கருதி - எனக்கு மிடுக்கான உன்னைக் காண ஆசைப்பட்ட அளவிலே [1] முகங் காட்டினாய்; [2] இவ் இறைவனை அடைவதற்கு ருசியே அமையும் என்றபடி. [3] "கண்ணே உன்னைக் காணக் கருதி" என்றார் மேல்; 'கருத்தே உன்னைக் காணக் கருதி' என்கிறார் இங்கே. இதனால், இவர்க்குக் [4] கண்ணும் கருத்தும் அவனே ஆயினமையைத் தெரிவித்தபடி. [5] அநுபபத்தியைக் கொண்டு அர்த்தாபத்தியாலே கல்பித்தல், அநுமானத்தாலே அதீந்திரியம் என்று அறிதல் செய்யும் பொருளை நேரே காணவேண்டும் என்று எண்ணுகிறார் என்க. என் நெஞ்சத்து இருத்தாக இருத்தினேன் - மறுகல்செய்த நெஞ்சிலே, மறுகல்இல் ஈசனைப் பரமபதத்திலே இருக்குமாறுபோலே இருத்தினேன். [6] "இவர்பக்கல் இசைவு பெற்றிலோம்" என்று இருக்கிறவன், இத்தனை இசைவு பெற்றால் பின்னைத் தள்ளிக் கதவு அடைத்தாலும் போகானே

1. "இருத்தாக இருத்தினேன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'முகங் காட்டினாய்' என்கிறார்.

2. ஆசைப்பட்ட அளவில் முகங்காட்டினாய் என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'இவ் இறைவனை' என்று தொடங்கி.

3. தம்முடைய அறிவின்மையையும் அசக்தியையும் முன்னிட்டுக் கொண்டு பெற இருக்கிற தமக்கு, அவனுடைய ஞானமும் சக்தியுமே பேற்றுக்கு முடிந்த நிலம் என்னுமிடம் தோன்ற அருளிச்செய்கிறார் "கண்ணே" என்று தொடங்கி.

4. 'கண்ணும் கருத்தும்' என்றது, ஞானத்தையும் சக்தியையும்.

5. "உன்னைக் காணக் கருதி" என்கையாலே, அடைதற்கு அரியனான இறைவனைக் காண ஆசைப்படுகிறார் என்னுமிடம் தோன்றுகிறது என்கிறார் 'அநுபபத்தியை' என்று தொடங்கி. அநுபபத்தியைக் கொண்டு அர்த்தாபத்தியாலே கல்பித்தலாவது, உலகம் உலகத்தைத் தாங்குகிற மலைகள் முதலான விசித்திரமான காரியங்களைக் கண்டு, 'இவற்றை எல்லாம் உண்டாக்குகைக்கு விசித்திரமான ஞான சக்திகளை உடையான் ஒருவன் கர்த்தாவாக வேண்டும்' என்று ஓர் இறைவனைக் கற்பித்தல். அநுபபத்தி - பொருத்தம் இன்மை. அர்த்தாபத்தி - அர்த்தத்தாலே கிடைத்தல்; பகல் உண்ணான் பருத்திருப்பான் என்றால், இரவிலே உண்பான் என்பது போதருதல். இங்ஙனம் கூறுகின்றவன் பிரபாகரன். அநுமானத்தாலே அறியும் பொருளை என்றும், அதீந்திரியம் என்று அறியும் பொருளை என்றும் தனித் தனியே கூட்டுக. அதீந்திரியம்-கண்களாலே காணமுடியாதது; அருவப் பொருள். நிலைத்திருக்கிற உலகமாகிய காரியத்தாலே (அநுமானத்தாலே) இவற்றைப் படைப்பதற்குத் தக்க விசித்திர ஞான சக்திகளுடைய அருவமான ஈஸ்வரனைக் காரணத்தைக் கொண்டு கற்பிக்குமவன் என்பதாம். இங்ஙனம் கற்பிக்குமவன் தார்க்கிகன்.

6. அறப் பெரிய இறைவன் பரமபதத்தில் இருக்குமாறு போலே இவர் திருவுள்ளத்தில் இருக்கக் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவர் பக்கல்' என்று தொடங்கி.

அன்றோ. [1] "குற்றம் இல்லாத சீதையே! உன்னோடும் இலக்குமணனோடும் பல வருடங்கள் இங்கே வசிப்பேனாகில் என்னைச் சோகம் வந்து அடையாது" என்றார்; மற்றும், [2] "இலக்குமணா! இவ்விடம் புண்ணியத்தைக் கொடுக்கக் கூடியது, பரிசுத்தமானது, மிருகங்களோடும் பறவைகளோடும் கூடியது, இந்த ஜடாயுபறவையோடு நான் வசிக்கப் போகிறேன்" என்றும் அருளிச்செய்தார் அன்றோ பெருமாள். என்றது, "ஐயர் கண் வட்டத்திலே வசிக்கவேண்டும் என்று நினைத்திருந்தோம்; நடுவில் ஆய்ச்சிக்குப் பிரியம் செய்ய வேண்டுகையாலே அது செயப் பெற்றிலோம்; இனி, இவர் சிறகின் கீழேயாகிலும் வசிக்கப் பாராநின்றோம் என்கிறார் என்றபடி. [3] இனி, இருத்தாக என்பதற்கு, சிநேகபாவமே அன்றோ என் பக்கல் உள்ளது என்கிறார் என்னுதல்.

தேவர்கட்கு எல்லாம் விருத்தா- "இனி அவ்வருகு இல்லை" என்னும்படி உயர்ந்தவர்கட்கும் அவ்வருகானவனே! [4] தலைமகனையும் தலைமகளையும் - "கிழவனும் கிழத்தியும்" என்று தமிழர் சொல்லுவர்கள். அவளையும் [5] "மலர்க்கிழத்தி" என்றார்கள் அன்றோ. விளங்கும் சுடர்ச் சோதி உயரத்து ஒருத்தா - "இந்தப் பிரகிருதி மண்டலத்துக்கு மேலே உள்ள பரமபதத்

---

1. அறப் பெரிய இறைவன் இப்படிச் சுலபனான இடம் உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'குற்றம் இல்லாத' என்று தொடங்கி.

யதீஹ ஶரத: அநேகா: த்வயா ஸார்த்தம் அநிந்திதே
லக்ஷ்மணேந ச வத்ஸ்யாமி நமாம் ஶோக: பிரதக்ஷ்யதி.

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 94 : 15.

2. இதம் புண்யம் இதம் மேத்யம் இதம் பஹு ம்ருகத்விஜம்
இஹ வத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்தம் ஏதேந பக்ஷிணா.

என்பது, ஸ்ரீராமா. ஆரண். 15 : 19.

மேலே காட்டிய சுலோகத்தில் சடாயுவை அண்டஜோ என்னுமல், "பக்ஷிணா" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஐயர்' என்று தொடங்கி.

3. "இருத்தாக" என்பதற்கு, இருக்கவேண்டும் என்னும் நினைவு மாத்திரத்தாலே என்று வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'இனி' என்று தொடங்கி.

4. "விருத்தன்" என்பது, முதன்மையானவன் என்ற பொருளைத் தருமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தலைமகனையும்' என்று தொடங்கி.

'கிழவனும்கிழத்தியும்' என்பது, தொல்காப்பியம், பொருளதி. களவு. சூத்.2.

5. 'மலர்க்கிழத்தி' என்பது, திருச்சந்த விருத்தம், 55.

6. அத யதத: பரோ திவோ ஜ்யோதிர் தீப்யதே.

என்பது, சாந்தோக்யம்.

தில் சோதிமயமான பரம்பொருள் விளங்குகிறுன்'' என்கிற படியே, [1] எப்போதும் ஒக்க விளங்காநிற்பதாய், எல்லே இல்லாத ஒளி உருவமாய் இருக்கிற பரமபதத்திலே எழுந்தருளியிருக்கிற ஒப்பற்றவனே! [2] பிரகாரத்திலே அன்றே பல வகை உள்ளது; பிரகாரி ஒருவனே ஆம். உன்னே என் உள்ளம் உகந்து உள்ளும்-சடக்கெனமுகம் காட்டினஉன்னேக் கண்டு கலங்கின என் நெஞ்சம் உகந்தே அநுபவியாநின்றது. 'தேவர்கட்கு எல்லாம் விருத்தா! விளங்கும் சுடர்ச் சோதி உயரத்து ஒருத்தா!' என்று சொல்லுகிற இவ் விசேடணங்கட்குக் கருத்து, மேலானுர்க்கும் மேலாய்ப் பரமபதத்திலே எழுந்தருளியிருந்து அவர்களே அநுபவிப்பிக்குமாறு போலே, தன்னே அநுபவிப்பிக்க அநுபவித்த என் நெஞ்சம் உகந்தது ஆகாநின்றது என்கை. (6)

922.

உகந்தே உன்னே உள்ளும் என் உள்ளத்து அகம்பால்
அகந்தான் அமர்ந்தே இடம் கொண்ட அமலா!
மிகும் தானவன் மார்வு அகலம் இருகூரு
நகந்தாய்! நரசிங்கமது ஆய உருவே!

பொ - ரை:—மனத்திலே பொருந்தித் தங்கியிருக்கின்ற அமலனே! செருக்கு மிக்க இரணியனுடைய பெரிய மார்வானது இரண்டு கூறு ஆகும்படியாகச் செய்த நகத்தையுடையவனே! நரசிங்கமாகிய உருவத்தையுடையவனே! என் மனத்தின் உள்ளிடமானது உன்னே உகந்தே நினேயாநிற்கும் என்கிருர்.

வி - கு:—உருவே! என் உள்ளத்துஅகம்பால் உகந்து உன்னே உள்ளும் என்க. உள்ளும்: முற்று. இனி, இதனே எச்சமாகக் கொண்டு உள்ளுகின்ற என் உள்ளத்தகம்பால் என்று பொருள் கோடலுமாம். கூறு ஆக என்பது, கூரு என வந்தது; விகாரம்.

---

1. "விளங்கும்" என்ற நிகழ்காலத்தைத் திருவுள்ளம்பற்றி 'எப்போதும் ஒக்க விளங்காநிற்பதாய்' என்கிருர்.

2. அங்கு இவன் ஒருவனேயோ இருக்கிருன்? நித்தியசூரிகள் இலரோ? "ஒருத்தா" என்றல் பொருந்துமோ? என்ன, 'பிரகாரத்திலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர். பிரகாரம் - விசேஷணம். என்றது, பிரகாரியான அவன் ஒருவனேயாம் என்பது கருத்து.

ஈடு:—ஏழாம்பாட்டு. [1]தூணிலே தோற்றிப் பிரஹ்லாதனுடைய துன்பத்தைத் தீர்த்தாற் போன்று, தம் துன்பத்தைத் தீர்த்தபடியை நினைந்து ஏத்துகிறார்.

உகந்தே உன்னை உள்ளும்-[2]பிரிந்த துயரத்தோடே தலைக்கட்டும் உகப்பு அன்றிக்கே, ஒரே தன்மையாக உன்னை அநுபவிக்கும்படி. என் உள்ளத்து-"எண்ணே கொண்ட சிந்தை"யையுடைத்தான என் உள்ளத்து. அகம்பால் அகம் தான்-உள்ளுக்கும் உள்ளே. என்றது, [3]"உள் உள் ஆவி" என்னும்படியே, கமர் பிளந்த இடம் எங்கும் மறு நனையும்படி என்றவாறு. அமர்ந்து-தன் பேறாக மிக்க காதலைச் செய்து. இடம் கொண்ட-இடமுள்ள எங்கும் தானே ஆம்படி நிறைந்த. அமலா-[4]இவ் இருப்புக்கு அவ்வருகு ஒரு பயனைக் கணிசித்து அன்றிக்கே, ஒரு காரணத்தைப் பற்றியும் அன்றியே இருக்கை. [5]"எண்ணே கொண்ட சிந்தையதாய்" என்றதனை ஒரு சாதனமாக நினைத்திலர். மிகும் தானவன்-[6]பகைமையில் ஓர் அளவில் நில்லாத தானவன். என்றது, தன்னை இல்லை செய்கை அன்றிக்கே, தன் உயிர் நிலையிலே நலிந்தவன் என்றபடி. [7]"ஞானியானவன் என் உயிர்" என்னக் கடவது

1. "இரு கூறு நகந்தாய், நரசிங்கமதாய உருவே" என்றதனைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2 "உகந்தே" என்ற ஏகாரத்தின் பொருளினை விளக்குகிறார் 'பிரிந்த' என்று தொடங்கி.

3. "உள் உள் ஆவி" என்பது, திருவாய். 2. 4 : 7.

4. "அமலா" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இவ் இருப்புக்கு' என்று தொடங்கி. குற்றம் அற்றவனாய் இருத்தலாவது, ஸ்வயம் பிரயோஜனமாகவும் நிர்ஹேதுகமாகவும் இருத்தல் என்றபடி.

5. நன்று; "எண்ணே கொண்ட சிந்தையதாய்" என்றது, சாதனம் அன்றோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எண்ணே' என்று தொடங்கி.

6. "மிகும்" என்றதன் மிகுதியை விளக்குகிறார் 'பகைமையில்' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'தன்னை' என்று தொடங்கி. உயிர் நிலை - பிரஹ்லாதன்.

7. பிரஹ்லாதன் உயிர்நிலை என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'ஞானியானவன்' என்று தொடங்கி.

உதாராः ஸர்வ ஏவ ஏதே ஜ்ஞாநீது ஆத்மா ஏவ மே மதம்
ஆஸ்திதः ஸஹியுக்தாத்மா மாமேவ அநுத்தமாம் கதிம்.

என்பது, ஸ்ரீ கீதை. 7 : 18.

அன்றே. மார்வு அகலம் இரு கூறுஆ நகந்தாய் - அகன்ற மார்வானது இரண்டு கூறு ஆகும்படி செய்யவல்ல நகத்தை யுடையவனே! நகத்தாய் என்பது, நகந்தாய் என வந்தது, மெலித்தல் விகாரம். நரசிங்கமது ஆய உருவே-[1]"என்றும்ஒரே தன்மையையுடைய உருவம்" என்கிற விக்கிரஹத்தையே இப் படிக் கொள்வது! இரண்டு வடிவைக் கொள்வதே![2] இத்தால் சொல்லிற்றாயிற்று என்? என்னில், அடியார்கள் சூளுறவு செய்த காலத்திலே வந்து தோற்றுமவனுகையாலே, தூணிலே தோற்றினாற் போலே வந்து தோற்றி, மனத்தின் இடமெல் லாம் புகுந்து, கமர் பிளந்த இடம் எங்கும் நீர் பாய்ச்சுமாறு போலே, நிரம்ப என்னை அநுபவிப்பித்தான் என்கிறார் என்பது. (7)

923.

உருவாகிய ஆறு சமயங்கட்கு எல்லாம்
பொருவாகி நின்றான் அவன் எல்லாப் பொருட்கும்
அருவாகிய ஆதியைத் தேவர்கட்கு எல்லாம்
கருவாகிய கண்ணனைக் கண்டு கொண்டேனே.

பொ - ரை :—உருவாகிய ஆறு சமயங்களுக்கு எல்லாம் தடை யாகி நிற்கின்றவனும், எல்லாப் பொருள்கட்கும் அந்தராத்மாவாக நிற்கின்ற முதல்வனும், எல்லாத் தேவர்களுக்கும் காரணனாய் இருக் கின்றவனுமான கண்ணபிரானை நான் கண்டுகொண்டேன் என்கிறார்.

வி - கு :—'உருவாகிய' என்றதன் கருத்து, ஒரு மதம் என்று சொல்லக்கூடிய நிலை இல்லாதிருந்தும் மேலெழுந்த பார்வையில் ஒரு மதம் போலே தோன்ற நிற்பது என்பது. பொரு - தடை. என்றது, அம் மதங்களால் தனக்கு ஒரு தடையும் நேரப் பெறாதவன் என்றபடி. 'ஆறு சமயங்கட்கு எல்லாம் பொருவாகி நின்றான்' என்பதற்கு, "வேதபாஹ்யமான ஷட்சமயங்களில் நான் புகாதபடி பரிஹரித்து" என்று பொருள் அருளிச்செய்வர் **பிள்ளான்.**

1. "நரசிங்கமதாய உருவே" என்று விளிக்கிறவருடைய மனோ பாவத்தை அருளிச்செய்கிறார் 'என்றும் ஒரே தன்மையை' என்று தொடங்கி.

ஸதைக ரூப ரூபாய விஷ்ணவே ஸர்வ ஜிஷ்ணவே.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா.

2. பாசுரத்தால் போதரும் கருத்தினை அருளிச்செய்கிறார் 'இத்தால்' என்று தொடங்கி.

ஈடு:—எட்டாம் பாட்டு. [1] எல்லாப் பொருள்களுக்கும் அந்தராத்மாவாய், பிரமன் முதலாயினார்க்கு எல்லாம் காரணனானவனைக் காணப்பெற்றேன் என்று இனியர் ஆகிறார்.

உருவாகிய ஆறு சமயங்கட்கு எல்லாம்-[2]மேல் எழுந்த பார்வையில் ஒன்றுபோலே இருக்க, சிலவற்றை விதிப்பது, சிலவற்றை விலக்குவது, விலக்கியனவற்றை ஒழிதலைச் சொல்லுவதாய்க்கொண்டு உபதேசிப்பாரும் கேட்பாருமாய்ப் போருகிற புறச்சமயங்கள் எல்லாவற்றாலும்.பொருவாகி நின்றான் அவன்-பொரு-தடை. அவற்றால் தன்னை இல்லை செய்ய ஒண்ணாதபடி [3] தடையற்றவனாய் நின்றான். எல்லாப் பொருட்கும் அருவாகிய [4] ஆதியை - எல்லாப்பொருள்கட்கும் அந்தராத்மாவாய், அவற்றை எல்லாம் நியமிப்பதில் முதன்மையன் ஆனவனை. தேவர்கட்கு எல்லாம் கருவாகிய - பிரமன் முதலான தேவர்களுக்கு எல்லாம் காரணனாக உள்ளவனை. கண்ணனை-[5] காரியங்களிலே ஒன்றுக்குத் தான் காரியமானவனை. கண்டுகொண்டேன்-அவதாரத்திற்குப் பிற்பாடராய் இருக்க,'**கண்டுகொண்டேன்**' என்கிறார். இதற்குக் கருத்து என்? என்னில், அன்பினாலே நினைந்த மனத்தினர்க்கு என்றும் காணலாம்;அவதார சமகாலத்திலும் காண ஒண்ணாது சிசுபாலன் முதலாயினார்க்கு.

[6] புறச் சமயங்களால் அசைக்க முடியாதவனாய், எல்லாப் பொருள்கட்கும் அந்தரியாமியாய்க் கொண்டு எல்லாரையும்

---

1. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. உரு - அழகு; பொய்ப் பொருள்களைக் கூறுகிற ஏனைச் சமயங்கட்கு அழகாவது யாது? என்னும் ஆசங்கையிலே பொருள் அருளிச்செய்கிறார் 'மேல் எழுந்த' என்று தொடங்கி.

3. தடை அற்றவனாய் நிற்கையாவது, வேதம் முதலான உறுதிப் பிரமாணங்களால் அறுதியிடப் பட்டவனாய் நிற்றல்.

4. பின் அடியில் "கருவாகிய" என்று காரணனாய் இருக்கும் தன்மையைச் சொல்லுகையாலே ஈண்டு "ஆதி" என்னும் சொல் முதன்மையைச் சொல்லுகிறது.

5. காரணனாக இருந்தால் சௌலப்யம் இராதே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'காரியங்களிலே' என்று தொடங்கி. 'ஒன்று' என்றது, வசுதேவரை.

6. பாசுரத்தின் பொருளை எல்லாம் சேர்த்து முடித்துக் காட்டுகிறார் 'புறச் சமயங்களால்' என்று தொடங்கி.

நியமிக்கின்றவனாய், பிரமன் முதலாயினார்கட்கும் காரணனாய் இருந்து வைத்து, அடைந்தார்கட்குச் சுலபனானவனைக் காணப்பெற்றேன் என்கிறார். (8)

924.

கண்டு கொண்டு என் கண்ணிணை ஆரக் களித்துப்
பண்டை வினை ஆயின பற்றோடு அறுத்துத்
தொண்டர்க்கு அமுது உண்ணச் சொன்மாலைகள்
சொன்னேன்
அண்டத்து அமரர் பெருமான் அடியேனே.

பொ - ரை :—பரமபதத்திலே இருக்கிற நித்தியசூரிகளுக்குத் தலைவனான எம்பெருமானுக்கு அடியேனாகிய யான், என்னுடைய இரண்டு கண்களாலே கண்டுகொண்டு அதனாலே மிகமகிழ்ந்து, தொன்று தொட்டு வருகின்ற நல்வினை தீவினைகள் அனைத்தையும் வாசனையோடே போக்கி, அடியார்கட்கு அமுது உண்ணும்படியாகச் சொற்களாலாய மாலைகளைப் பாடினேன் என்கிறார்.

வி - கு :—அடியேன் கண்டு கொண்டு களித்து அறுத்து அமுது உண்ணச் சொன்மாலைகள் சொன்னேன் என்க. ஆர என்பதனைக் கண்டு கோடலுக்கு அடை ஆக்கலுமாம்.

ஈடு :—ஒன்பதாம் பாட்டு. [1] தன்னை அநுபவிக்கப்பெற்று, அதற்கு மேலே, ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அமுதாம்படி திருவாய்மொழி பாடவும் பெற்றேன் என்கிறார்.

கண்டு கொண்டு - [2] "நான் அழைப்பன்" என்ற விடாய் எல்லாம் கெடக் கண்களாலே காணப்பெற்று. என் கண் இணை ஆர - "காணக் கருதும் என் கண்ணே" என்ற கண்கள் விடாய் கெட. கலியர் "வயிறு ஆர உண்டு" என்னுமாறு போலே, 'ஆரக் கண்டு கொண்டு' என்கிறார். களித்து - மறுகின நெஞ்சு களித்து. பண்டை வினை ஆயின பற்றோடு அறுத்து - இவ் உகப்புக்கு இடைச் சுவரான பழைய கர்மங்களை வாசனையோடே போக்கி. தொண்டர்க்கு அமுது உண்ணச் சொல் மாலைகள் சொன்னேன் - என்னளவும் அன்றிக்கே, வைஷ்ண

---

1. முதல் அடியையும் மூன்றும் அடியையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "கண்டுகொண்டு" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நான்' என்று தொடங்கி.

வர்களுக்கும் உபகாரகன் ஆகப் பெற்றேன். [1]"நானும் உண்டு என் வேலையாட்களும் ஜீவித்து, என் உறவினர்களுக்கும் விருந்திட வல்லேன் ஆனேன்" என்பாரைப் போலே, சொல் மாலைகள் சொன்னேன்-அடியார்கட்கு அடிமையாதலை எல்லையாகவுடைய பேற்றினைப் பெற்றேன்.[2]பெற்ற பேற்றின் கனம் இருந்தபடியாலே, இது தான்தோன்றியான கைப்பற்று அடியாக வந்தது ஒன்று அன்று. அண்டத்து அமரர் பெருமான் அடியேன்-சர்வேஸ்வரனாலே அடியவனாக அங்கீகரிக்கப்பட்டவன் ஆனேன். (9)

925.

அடியான் இவன் என்று எனக்கு ஆர் அருள் செய்யும்
நெடியானை நிறை புகழ் அம் சிறைப் புள்ளின்
கொடியானைக் குன்றாமல் உலகம் அளந்த
அடியானை அடைந்து அடியேன் உய்ந்தவாறே!

பொ - ரை:—இந்தச் சடகோபன் அடியவன் என்று எனக்குப் பேரருளைச் செய்த நெடியவனும், நிறைந்த புகழினையும் அழகிய சிறகுகளையுமுடைய கருடப்பறவையினைக் கொடியிலே உடையவனும், ஒரு பொருளும் தவறாதபடி உலகத்தை எல்லாம் அளந்த திருவடியை உடையவனுமான எம்பெருமானை அடைந்து அடியேன் உஜ்ஜீவித்தபடி என்னே! என்கிறார்.

வி - கு:—'நிறைபுகழ்' என்பதனைக் கொடியானுக்கு அடை ஆக்கலுமாம்.

ஈடு:—பத்தாம் பாட்டு. [3]இப்படி அவனைப் பெற்றுக் கிருதார்த்தன் ஆனேன் என்கிறார்.

---

1. "கண்டு கொண்டு" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'நானும் உண்டு' என்கிறார். "என் கண்ணிணை ஆரக் களித்து" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'என் வேலையாட்களும் ஜீவித்து' என்கிறார். "தொண்டர்க்கு அமுது உண்ண" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'என் உறவினர்களுக்கும் விருந்திட வல்லேன்' என்கிறார்.

2. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'பெற்ற' என்று தொடங்கி. 'தான் தோன்றியான கைப்பற்று' என்றது, தன் முயற்சி காரணமாக வந்த சாதனத்தை.

3. "அடைந்து அடியேன் உய்ந்தவாறே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். கிருதார்த்தன் - செய்யவேண்டுமவற்றை எல்லாம் செய்து முடித்து மனம் நிறைவு பெற்றவன்.

அடியான் இவன் என்று - [1] "மேல் செய்யப் புகுகிற கொடை தக்கதே" என்று சொல்லுகைக்காக, 'அடியான்' என்று ஒரு பெயரை இட்டாயிற்றுக் கொடுத்தது. எனக்கு ஆர் அருள் செய்யும் நெடியானை - [2] கொள்ளுகிற என் அளவு அன்றிக்கே, தன் அளவிலே அருள்செய்த சர்வேஸ்வரனை. [3] அருள்பெறுவார் அடியாரே அன்றோ: புத்திரர்களுக்கு அம்சமே அன்றோ உள்ளது; எல்லாவற்றிலும் கூறு உண்டாய் இருக்கும் அன்றோ அடியார்க்கு. [4] பிள்ளை அகளங்க பிரமராயர், பட்டரைச் சமாதானம் செய்ய வேண்டும் என்று, பட்டர் திருவுள்ளத்திற்கு உகந்த 'இருகை மத வாரணம்' என்கிறவனைப் பட்டர்பக்கல் வர விட, அவனும் வந்து சிலவார்த்தைகளை விண்ணப்பம் செய்து, திருவுள்ளமும் மகிழ்ச்சியையுடையதாய் இருக்கிற அளவிலே, 'இவனுடைய வைஷ்ணவத்வம் இருக்கும்படி திருவுள்ளம்பற்றியிருக்கை உண்டே' என்றருளுக, 'சொல்ல வேண்டுமோ, கர்ப்பதாசர்கள் அன்றோ' என்றது தொடக்கமாக, இப் பாசுரத்தை அருளிச்செய்தார் பட்டர். ஆர் அருள் செய்யும் நெடியானை - [5] பெறுகிற என் அளவிலே அன்றிக்கே, தருகிற தன் அளவிலே தந்தான். தனக்கு அளவு தான் என்? என்ன, நெடியானை - 'சர்வேஸ்வரன்' என்னுமித்தனை.

நிறை புகழ் அம் சிறைப் புள்ளின் கொடியானை - [6] இது தான் நான் இன்று இருந்து விரித்துக் கூறவேண்டி இருந்

---

1. "அருள் செய்யும்" என்னாமல், "அடியான் இவன்" என்று விசேடித்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'மேல்செய்ய' என்று தொடங்கி.

2. "அருள் செய்யும்" என்றதன்பின் "நெடியான்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'கொள்ளுகிற' என்று தொடங்கி.

3. அடியார்க்குத் தான் அருள் செய்யவேண்டுமோ? என்ன, 'அருள் பெறுவார்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. இறைவனுடைய திருவருள் அடியார்களிடத்தில் மிக்கிருக்கும் என்பதற்கு ஐதிஹ்யம் காட்டுகிறார் 'பிள்ளை யகளங்க பிரமராயர்' என்று தொடங்கி. 'இருகை மதவாரணம்' என்பவன், நம்பெருமாளிடத்தில் பரமபக்தி வாய்ந்த ஒரு கைக்கோளன்; பரமவைஷ்ணவன். கர்ப்ப தாசர்கள் - கருவிலே திருவுடையவர்கள்; பிறந்தது முதற் கொண்டே அடியவர்களாக உள்ளவர்கள் என்றபடி.

5. 'கொள்ளுகிற என் அளவு அன்றிக்கே' என்று தொடங்கி மேலே அருளிச்செய்த வாக்கியத்தின் விவரணம், 'பெறுகிற' என்று தொடங்கும் வாக்கியம்.

6. 'இதுதான்' என்றது, சர்வேஸ்வரனாக இருக்கும் தன்மை தான் என்றபடி.

ததோ? கட்டிக்கொண்டிருக்கிற கொடியிலே தெரியாதோ? சூரம் வீரம் முதலிய குணங்களின் பிரசித்தியையுடையனாய், பகவானை எப்பொழுதும் அநுபவித்துக்கொண்டே இருக்கிற அநுபவத்தாலே காட்சிக்கு இனிய வேஷத்தையுடையனாய் இருக்கிற பெரிய திருவடியைக் கொடியாக உடையவனை. பெரிய திருவடியை அங்கீகரித்தாற் போலே என்னை அங்கீகரித்தவனை. [1] இப்படி அங்கீகரித்ததற்கு இத் தலையில் என்ன நன்மை உண்டு? என்னில், குன்றுமல் உலகம் அளந்த அடியானை - [2] குணத்தையும் குணம் இல்லாமையையும் நிரூபணம் செய்யாதே திரு உலகு அளந்தருளினாற் போலே, ஒரு காரணமும் இல்லாமல் அங்கீகரித்தான் என்கிறார். ஓர் அடியும் குறையாமல் பூமிப் பரப்பை அளந்துகொண்ட திருவடிகளையுடையவனை. [3] தன் பெருமையையும், சௌலப்பியத்தையும் என்னை அநுபவிப்பித்தான். அடைந்து அடியேன் உய்ந்தவாறே - [4] அடிமைத் தன்மையே காரணமாக உஜ்ஜீவித்தபடி என்? [5] அடிமைப்பட்டு இருக்கும் ஞானத்திற்கு இத்தனை பிரயோஜனம் உண்டோ? (10)

926.

ஆறு மத யானை அடர்த்தவன் தன்னைச்
சேறு ஆர் வயல் தென் குருகூர்ச் சடகோபன்
நூறே சொன்ன ஓர் ஆயிரத்துள் இப் பத்தும்
ஏறே தரும் வானவர்தம் இன் உயிர்க்கே.

---

1. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி. "ஆர் அருள் செய்யும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'இப்படி அங்கீகரித்ததற்கு' என்கிறார்.

2. தாத்பர்யத்தாலே சித்தித்த பொருளை அருளிச்செய்கிறார் 'குணத்தையும்' என்று தொடங்கி. பதத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஓர் அடியும்' என்று தொடங்கி.

3. "நெடியானை" என்றது முதல் "உலகம் அளந்த அடியானை" என்றது முடிய உள்ளனவற்றை, இறைவன் திருவருள் புரிதற்குக் காரணமாக்கிப் பொருள் அருளிச்செய்தார் மேலே. இப்பொழுது அவற்றைப் பரத்துவ சௌலப்யங்கள் பரமாக்கி வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'தன் பெருமையையும்' என்று தொடங்கி.

4. முதல் அடியில் "அடியான்" என்றவர், மீண்டும் நான்காம் அடியிலும் "அடியேன்" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அடிமைத் தன்மையே' என்று தொடங்கி.

5. அதனை விவரணம் செய்கிறார் 'அடிமைப்பட்டு இருக்கும்' என்று தொடங்கி.

பொ-ரை :—ஒரு நாளும் மாருத மதத்தையுடைய குவலயாபீடம் என்னும் யானையைக் கொன்றவனுன இறைவன் விஷயமாக, சேறு பொருந்திய வயல்களையுடைய அழகிய திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபராலே நூறு நூருக அருளிச்செய்த ஒப்பற்ற ஆயிரம் திருப்பாசுரங்களுள் இந்தப் பத்துத் திருப்பாசுரங்களும் நித்தியசூரிகளுடைய இனிய உயிர்க்கு ஏறுபோன்றவனுன எம்பெருமானைத் தரும் என்றபடியாம்.

வி-கு :—ஆரு என்பதற்கு, ஆற்றினைப் போன்று பெருக்கு எடுத்து ஓடுகிற என்னவுமாம். தென் - திசையுமாம். இப்பத்தும் இன் உயிர்க்கு ஏற்றினைத் தரும் என இரண்டாம் வேற்றுமைத் தொகையை விரிக்க. ஏறு - ஏற்றினை என்றபடி. ஏறு : உவமை ஆகுபெயர்.

ஈடு :—முடிவில், [1] இத் திருவாய்மொழி, தன் இனிமையாலே நித்தியசூரிகள் மனத்தினைப் புண்படுத்தும் என்கிருர்.

ஆரு மத யானை அடர்த்தவன் தன்னை-ஒரு நாளும் மாருத மதத்தையுடைய குவலயாபீடத்தை அழித்தவனை. [2] அதனை அழித்தாற்போலே என் விரோதியைப் போக்கினவனை. சேறு ஆர் வயல் - [3]குவலயாபீடமோதான், திருநகரியில் வயலை உழுவது நடுவதாக ஒட்டாதே கிடந்தது! நூறே சொன்ன ஓர் ஆயிரம் - கிழி கிழியாகக் கொடுப்பாரைப் போலே, நூறு நூருக்ச் சொன்னபடி. [4]பாரதம் இராமாயணம் முதலியவைகளில் உள்ள காண்டம் பர்வம் முதலிய பேதம் போலே, தரிப்பார்க்கு எளிதாம்படி செய்தார் என்கை. வானவர் தம் இன் உயிர்க்கு

---

1. நான்காம் அடியைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிருர்.

2. "அடர்த்தவன் தன்னை" என்கிறவருடைய மனேபாவத்தை அருளிச்செய்கிருர் 'அதனை' என்று தொடங்கி.

3. "யானை அடர்த்தவன் தன்னைச் சேறுஆர் வயல்" என்ற பதச் சேர்த்திக்குக் கருத்து அருளிச்செய்கிருர் 'குவாலயாபீடமோதான்' என்று தொடங்கி. இது வியாக்யொதாவின் ரசோக்தி. என்றது, இறைவனுக்கு ஒரு தீங்கு வரில் ஆழ்வார் உளராகமாட்டார்; ஆழ்வார்க்கு ஒரு தீங்கு வரில் திருநகரியில் உள்ளார் உளராகமாட்டார்; அங்ஙனம் உளராகமாட்டாமையாலே அவ் ஊரில் வயல்களை உழுவார் இலர்; ஆகையாலே, விரோதி கழிந்தவாறே நிறைந்த வயலையுடைய தாயிற்றுத் திருநகரி என்றபடி.

4. நூறு நூருகச் சொன்னதற்குக் கருத்து அருளிச்செய்கிருர் 'பாரதம்' என்று தொடங்கி. "ஐந்திேைடு ஒன்பதோடு ஒரு பத்து என்னுமவை போலே நூறே சொன்ன பத்து நூறு ஓராயிரம் என்றதும் ஸாபிப்பிராயம்" என்பது ஆசார்ய ஹ்ருதயம், திருநீயப் பிரகரணம், சூ. 66. 'முதலியவை' என்றதனுல் 'பாகவதம்' கொள்க. 'முதலிய' என்றதனுல் 'ஸ்கந்தம்' கொள்க.

ஏறே தரும் - இத் திருவாய்மொழி நித்தியசூரிகள் மனத்தினைப் புண்படுத்தும் என்னுதல். அன்றிக்கே, நித்தியசூரிகளுக்கு ஏறுன சர்வேஸ்வரனைத் தரும் என்னுதல். (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

மையார்கண் மாமார்பில் மன்னும் திருமாலைக்
கைஆழி சங்குடனே காண எண்ணி — மெய்யான
காதலுடன் கூப்பிட்டுக் கண்டுஉகந்த மாறன்பேர்
ஓத உய்யுமே இன் உயிர். (84)

—: o :—

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

ஐந்தாந் திருவாய்மொழி "இன்னுயிர்"

முன்னுரை

ஈடு :—[1] "தொண்டர்க்கு அமுது உண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்று களித்தவர், தம்முடைய உயிரைப் பாதுகாப்பதற்குப் பறவைகளின் காலிலே விழும்படி ஆயிற்று. [2] "தேவர்கட்கு எல்லாம் கருவாகிய கண்ணனைக் கண்டுகொண்டேனே" என்னும்படி தெளிவு பிறந்தபோதே புறத்திலே காணவேண்டும் என்னும் ஆசை பிறந்தது. [3] 'இவர்க்கு இன்னம் விடாயைப் பிறப்பித்து முகம் காட்டவேண்டும்' என்று இவர் விருப்பத்தைச் சடக்கு என முடித்திலன் இறைவன். நினைத்தபோதே விரும்பியது பெறுமையாலே தளர்ந்தார்; தளர்ந்தவர் உலகப் பொருள்களிலே கண் வைத்தார். பரமவிரக்தராக இருக்கிற இவர் உலகப் பொருள்களிலே கண் வைப்பான் என்? என்னில், உலகப் பொருள்களை நினைக்கும் நினைவாலே மனத்தினை வேறு ஒன்றிலே செலுத்தித் தரிப்போம் என்று கண்வைத்தார். அன்றிக்கே, அவனுக்குப் போலியான பொருள்களைக் கண்டாகிலும் தரிப்போம் என்று கண் வைத்தார் என்னுதல். [4] அவை தரிப்புக்குக் காரணம் ஆகாமல், அவனுடைய நினைப்பினை ஊட்டுவனவாய்த் துன்பினைத் தரப்புக்கன. [5] யாதானும் ஒரு பொருள் தோற்றிலும் அப்பொருளின் உளதாம் தன்மை அவனை ஒழிய இல்லாமையாலே, அவனைக் காட்டிக் கொண்டே அன்றோ தோற்றுவது. ஆக, உலகத்துப் பொருள்கள் அவனை நினைப்பு ஊட்டுவனவாய் நலிய, அவற்றால் நோவுபடுகிறபடியை அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

---

1. மேல் திருவாய்மொழியில் சொல்லப்பட்ட பொருளையும், இத்திருவாய்மொழியில் சொல்லப்படும் பொருளையும், நினைந்து வியாக்கியாதா ஈடுபடுகிறார் 'தொண்டர்க்கு' என்று தொடங்கி.

2. மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் உள்ள இயைபினை விரித்து அருளிச்செய்கிறார் 'தேவர்கட்கு' என்று தொடங்கி.

3. ஆயின், இறைவன் அநுபவிப்பியாது ஒழிவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவர்க்கு' என்று தொடங்கி.

4. போலியான பொருள்கள் துன்பத்தைத் தந்த படியைக் காட்டுகிறார் 'அவை தரிப்புக்கு' என்று தொடங்கி.

5. மனத்தினை வேறு பொருள்களில் செலுத்தித் தரிக்கப் போகாமையைக் காட்டுகிறார் 'யாதானும்' என்று தொடங்கி.

[1] எம்பெருமானோடே கலந்து பிரிந்தாள் ஒரு பிராட்டி, தன் ஆற்றாமையாலே 'அவனுக்குப் போலியான பொருள்களைக் கண்டாகிலும் தரிப்போம்' என்று, அவ் ஆற்றாமை கைகொடுக்க உபவனமாகிய பூஞ்சோலைக்குப் புறப்பட, அங்கு உண்டான குயில் மயில் தொடக்கமானவை அவனுடைய பேச்சினையும் வடிவினையும் நினைப்பு ஊட்டுவனவாய் நலிய, இவை நலிகைக்கு இவற்றோடு நமக்கு ஒரு பகை இல்லை; இவை நலிகைக்கு ஒரு காரணம் உண்டாகவேண்டும்; அது, அவன் நம்மை 'முடிக்கவேண்டும்' என்று பார்த்தான்; 'அதற்குத் தக்க வழி நம்மைப் பிரிவதே' என்று நினைந்து, பிரிவு கலவியை ஒழியக்கூடாமையாலே நம்மோடு கலந்தான், கலந்து நம்மைப் பிரிந்தான், பிரிந்த இடத்திலும் நாம் முடியாதிருந்தோம், பிரிந்து நோவுபட்டு இருக்கும் சமயத்திலே 'நம்மோடு போலியாக இருக்கிற பொருளைக் காட்டி முடிப்போம்' என்று பார்த்து வரவிட்டான் இத்தனையேயாம் என்று கொண்டு, 'உங்களுக்கு நினைவு இதுவாகில் இப் பாரிப்பு எல்லாம் வேண்டுமோ?' என்று அவற்றைப் பார்த்துக் கூறி, [2]'நம்மைப் பார்த்தால் அன்றோ இப்படி நோவு பட வேண்டுவது? அவனைப் பார்த்தால் நோவு பட வேண்டா அன்றோ' என்று [3] அவனுடைய கல்யாண குணங்களை ஏத்துகையாலே, வருந்தித் தரித்துத் தலைக்கட்டுகிறதாய் இருக்கிறது.

927.

இன் உயிர்ச் சேவலும் நீரும் கூவிக்கொண்டு இங்கு எத்தனை
என் உயிர் நோவ மிழற்றேன்மின், குயிற்பேடைகள்!
என் உயிர்க் கண்ணபிரானை நீர் வரக் கூவுகிலீர்;
என் உயிர் கூவிக் கொடுப்பார்க்கும் இத்தனை வேண்டுமோ?

---

1. அந்யாபதேசத்தாலே பேசும் விதத்தை விரித்து அருளிச்செய்கிறார் 'எம்பெருமானோடே' என்று தொடங்கி. குயில் - பேச்சுக்கும், மயில் - வடிவுக்கும் உவமைகள்.

2. 'நம்மைப் பார்த்தால்' என்றது, நம்முடைய தீவினைகளைப் பார்த்தால் என்றபடி. 'அவனைப் பார்த்தால்' என்றது, தயை முதலான குணங்களோடு கூடியிருக்கிற அவனைப் பார்த்தால் என்றபடி.

3. 'அவனுடைய கல்யாண குணங்களை ஏத்துகையாலே' என்றது, இத் திருவாய்மொழியில் வருகிற "தன்புகழ் ஏத்த" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி.

இது, எம்பெருமானார் உகந்த திருவாய்மொழி என்று ஆழ்வார் திருவரங்கப்பெருமாள்அரையர் அருளிச்செய்வர்.

பொ - ரை :—பெண் குயில்களே! உமக்கு இனிய உயிர் போன்ற ஆண் குயிலும் அதற்கு உயிர் போன்ற நீரும் ஒருவரை ஒருவர் அழைத்துக்கொண்டு, என் உயிரானது மிகவும் துன்புறும்படி என் முன்னிலையில் கூவாதீர்கள்; என் உயிரான கண்ணபிரான் இங்கு வரும்படி நீர் கூவுகின்றிலீர்; என் உயிரைக் கொள்ளை கொண்டு அவனுக்குக் கொடுக்கப் பார்க்கிற உங்களுக்கும் இவ்வளவு செயல்கள் வேண்டுமோ? வேண்டாவே என்றபடி.

வி - கு :—குயிற் பேடைகாள்! கூவிக் கொண்டு இங்கு என் உயிர் எத்தனை நோவ மிழற்றேன்மின் என்று கூட்டுக. எத்தனை கூவிக் கொண்டு இங்கு என் உயிர் நோவ மிழற்றேன்மின் என்று கூட்டலுமாம்.

ஈடு :—முதற்பாட்டு. [1] சில குயிற் பேடைகளைக் குறித்து, என்னை முடிக்கைக்கு இத்தனை பாரிப்பு வேண்டுமோ? என்கிறாள்.

இன் [2] உயிர்ச் சேவலும்-நல் உயிரான சேவலும். என்றது, புறத்தே உலாவுகின்ற உயிரைப் போலே கண்வட்டத்திலே திரிந்துகொண்டு இருக்கிற சேவலும் என்றபடி. [3] பிரிந்து படுகுலை அடிக்கும் சேவலைப் போல் அன்றிக்கே, பேடைக்குத் தாரகமாய் இருக்கும் சேவலும் உண்டாய்இருப்பதே என்பது அவளுடைய உட்கோள்! அன்றிக்கே, [4] பேடைக்கு இனியதுமாய் உயிருமாய் இருக்கும் சேவலே! என்றலுமாம். நீரும் - சேவலுக்கு இனிய உயிரான நீரும். கூவிக்கொண்டு - சேர்த்தியைக் காட்டி நலிவதற்கு மேலே, [5] கலவி காரணமாக ஒன்றுக்கு ஒன்று அழைத்துக் கொண்டு பேச்சாலும் நலியவேண்டுமோ? இங்கு எத்தனை - [6] இங்கு அத்தனைக்கு விஷயம்

---

1. "குயிற் பேடைகாள் என் உயிர் கூவிக் கொடுப்பார்க்கும் இத்தனை வேண்டுமோ?" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. பேடையின் கண்வட்டத்தை விடாமல் வசிக்கிறமையைப் பற்றி "உயிர்ச்சேவல்" என்கிறாள் என்றபடி.

3. இங்ஙனம் கூறுகின்றவளுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'பிரிந்து' என்று தொடங்கி. படுகுலை அடித்தல் - துன்புறுத்துதல்.

4. "இன் உயிர்ச் சேவல்" என்பதற்கு வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'பேடைக்கு' என்று தொடங்கி.

5. பேச்சு நலிகின்ற படியைக் காட்டாநின்றுகொண்டு, சொற்களுக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'கலவி காரணமாக' என்று தொடங்கி.

6. "இங்கு எத்தனை" என்பதற்கு, இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். அவற்றுள், 'இங்கு அத்தனைக்கு' என்று தொடங்குவது முதற் பொருள். 'அத்தனை' என்றது, உங்களுடைய சேர்த்திக்கும், கலவி

உண்டோ? என்றது, இங்குப் பிரிவாலே என் உயிர் சென்றற்றது, உங்கள் பாரிப்புக்கு விஷயம் உண்டோ? என்றபடி. [1]"பம்பா நதியானது இனிமையாகப் பாடுகின்ற பறவைகளால் மிகவும் அழகாக விளங்குகின்றது; பல விதமான பறவைகளும் களிப்புடன் இருந்துகொண்டு என்னுடைய காமத்தை அதிகப்படுத்துகின்றன போலும்" என்னுமாறு போலே நலியாநிற்கின்றது.

[2]அன்றிக்கே, எத்தனை என்பதனை 'மிழற்றேல்மின்' என்பதனோடு கூட்டி, என் உயிர் நோவ எத்தனை மிழற்றேல்மின் என்று கொண்டு, பிரிவினாலே தளர்ந்திருக்கிற என் உயிர் நோவக் காதலைத் தெரிவிக்கிற ஒலியைப் பண்ணாதேயுங்கள் என்று பொருள் கூறலுமாம். 'உயிர் நோவ' என்கையாலே, உடல் பண்டே சென்றற்றது என்கை. அன்றிக்கே, [3]இராம பாணம் போலே உயிரிலே புக்கு வருத்தவும் வற்றாயிற்று இந்த ஒலி என்னுதல். இவற்றினுடைய பேச்சினைக் கேட்கத் தளிர்க்கும் அவனின்றும் வேறுபடுத்தி 'என் உயிர்' என்கிறாள். மிழற்றுதலாவது, நிரம்பா மென்சொல். என்றது, புணர்ச்சிக் காலத்தில் சொல்லத் தொடங்கித் தலைக்கட்டாத பேச்சுக்கள் என்றபடி. [4]இப் பேச்சு இவள் செவிப்படில் முடியும் என்று அறிந்து, பேசாதிருக்க வேண்டாவோ? என்பாள் 'நோவ

காரணமாக ஒருவரை ஒருவர் அழைத்தலுக்கும் என்றபடி. இங்கு - என்னிடத்தில்; எத்தனை என்பதற்குச் சிறிதும் என்பது பொருள்; ஆக, உங்கள் பாரிப்புக்கு என்னிடத்தில் சிறிதும் விஷயம் இல்லை என்பது முதற் பொருளின் கருத்து. இக் கருத்தினையே 'என்றது' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

1. இவை, தன்னை நலிகையாவது, அவனை நினைவூட்டித் துன்புறுத்துவது ஆகையாலே, அதனை ஓர் உதாரணம் மூலம் தெரிவிக்கிறார் 'பம்பா நதியானது' என்று தொடங்கி.

அதிகம் ஶோபதே பம்பா விகூஜத்பிঃ விஹங்கமைঃ
தீபயந்தீவ மே காமம் விவிதா முதித த்விஜாঃ.

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 1 : 100.

2. "இங்கு எத்தனை" என்பதற்கு, இரண்டாவது பொருளை அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. இப்பொருளில், இங்கு என்பதற்கு இந்த இடத்திலே என்பதும், எத்தனை என்பதற்கு, மிகுதியும் என்பதும் பொருள்.

3. "உயிர் நோவ" என்றதற்கு, வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'இராமபாணம்' என்று தொடங்கி. என்றது, உடல் குறி அழியாதிருக்க உயிரிலே நலியவற்று என்றபடி.

4. எங்களுக்கு இயல்பான மிழற்றுதலைத் தவிரப் போமோ? என்ன, 'இப் பேச்சு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

மிழற்றேல்மின்' என்கிருள். என்றது, பெண் கொலை என்று அறிந்தால் மீளவேண்டாவோ? என்றபடி. குயிற் பேடைகாள் - [1] ஆண்கள் செய்வதை நீங்களும் செய்ய வேண்டுமோ? [2] சேவலைக் கொண்டு காரியம் கொள்ள நினைத்தாலும் பேடையின் காலை அன்றோ பிடிப்பது.

என் உயிர்க் கண்ணபிரானை நீர் வரக் கூவுகிலீர்-[3] 'எங்களைக் கொலைஞரைச் சொல்லுமாறு போலே சொல்லுகிறது என்?' என்றினவாகக் கொண்டு, எனக்குத் தாரகனான கண்ணபிரானை வரக் கூவுகிறிலிகோள் என்கிருள். [4] தாரகங்கள் பொருள்கள் தோறும் வேறுபட்டவைகளாய் அன்றே இருப்பன. [5] விலங்கினங்களுக்குத் தாரகம் புல் பூண்டு முதலானவைகள், மனிதர்களுக்குத் தாரகம் சோறு, தேவர்களுக்குத் தாரகம் அமுதம், இவளுக்குத் தாரகம்கிருஷ்ணன்; இவளுக்கு [6] "எல்லாம் கண்ணன்" அன்றே. பிறர் நலத்திற்காகவே தன்னை ஒக்கி வைப்பவன் ஆதலின் 'பிரான்' என்கிருள். நீர் - [7] கலவியின் சுகத்தை அறியும் நீங்கள், பிரிவின் நோவும் அறிய வேண்டாவோ? வரக் கூவுகிலீர் - [8] நீங்கள் அவன் முன்னே சென்று கூவினீர்களாகில், தானே செல்லாமையை

---

1. "பேடைகாள்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிருர் 'ஆண்கள்' என்று தொடங்கி.

2. சேவலைக் கொண்டு காரியம் கொள்ள நினைத்தமை தோற்ற முந்துற "இன் உயிர்ச் சேவல்" என்று எடுத்தவர், இங்குப் "பேடைகாள்" என்று இதனைப் பிரதானமாகச் சொல்லுவான் என்? என்ன; 'சேவலை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

3. "கூவுகிலீர்" என்றதற்கு, அவதாரிகை அருளிச்செய்கிருர் 'எங்களை' என்று தொடங்கி. என்றினவாக - என்று கூறியதாக.

4. கிருஷ்ணன் இவளுக்குத் தாரகமாம்படி என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர் 'தாரகங்கள்' என்று தொடங்கி.

5. வேறுபட்டவைகளாய் இருப்பதனைக் காட்டுகிருர் 'விலங்கினங்களுக்கு' என்று தொடங்கி.

6. இவளுக்குத் தாரகம் கிருஷ்ணன் என்னுமதற்குப் பிரமாணம் காட்டுகிருர் 'எல்லாம்' என்று தொடங்கி.

> "உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம்
> கண்ணன் எம்பெருமான் என்று என்றே தளரும்"

என்பது, திருவாய். 6. 7 : 1.

7. உனக்குத் துன்பம் தருவது என்பது எங்களுக்குத் தெரியுமோ? என்ன, 'கலவியின்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

8. நாங்கள் கூவினுல் அவன் வருவானே? என்ன, 'நீங்கள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

நினைத்து வாரானோ? அதுசெய்கிறிலீர்கோள். என்றது, என்னை நலிய வேண்டுவன செய்கிறீர்கோள் இத்தனை; நானும் அவனும் சேருகைக்கு வேண்டுவன செய்திலீர்கோள் என்றபடி. [1] அழிக்க வல்லவை சேர்க்கவும் வற்று என்று இருக்கிறாள். என்றது, இவற்றின் வாயது வாளுள் என்று இருக்கிறாள் என்றபடி.

என் உயிர் கூவிக் கொடுப்பார்க்கும் இத்தனை வேண்டுமோ- [2]என்னையும் அவனையும் சேர்க்கின்றிலீர்கோள் அல்லாதபின்பு, இனி, என்னை முடிக்கையாய் இருந்ததே அன்றோ உங்களுக்குக் கருத்து; அதற்கு இப் பாரிப்பு எல்லாம் வேண்டுமோ? [3] பண்டே சென்றற்ற என் உயிரை வாங்கி அவன் கையிலே கொடுக்கை அன்றோ கருத்து, அதற்கு இவை எல்லாம் வேண்டுமோ? என்றது, [4] நீங்கள் சேர இருக்கையும், கலக்கையும், ஒன்றை ஒன்று அழைத்தலும், காதலைப்புலப்படுத்துகிற மழலை ஒலியும் இவை எல்லாம் வேண்டுமோ? என்றபடி. [5]நொந்தாரைப் பிழைப்பிப்பது அன்றோ அரிது? முடிக்கையில் பணி உண்டோ? (1)

928.

இத்தனை வேண்டுவது அன்று அந்தோ! அன்றிற்பேடைகாள்!
எத்தனை நீரும் நும் சேவலும் கரைந்து ஏங்குதிர்?
வித்தகன் கோவிந்தன் மெய்யன் அல்லன் ஒருவர்க்கும்;
அத்தனை ஆம், இனி என் உயிர் அவன் கையதே.

---

1. பறவைகள் சேர்ப்பிக்க வல்லவோ? என்ன, 'அழிக்க வல்லவை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

"உன்னுடைய,
வாயுடைய தென்னுடைய வாழ்வு என்றான் வெங்காமத்
தீயுடைய நெஞ்சுடையான் தேர்ந்து"

என்பது, இங்கு நினைவு கூர்க. (நளவெண்பா.)

2. நாங்கள் உன்னை முடிக்க வந்தோம் என்று நீ நினைப்பதற்குக் காரணம் யாது? என்ன, 'என்னையும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. பதங்கட்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'பண்டே' என்று தொடங்கி.

4. அதற்கு இவை எல்லாம் வேண்டுமோ? என்றதனை விவரணம் செய்கிறார் 'நீங்கள்' என்று தொடங்கி.

5. "வேண்டுமோ" என்ற ஓகாரத்திற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'நொந்தாரை' என்று தொடங்கி,

பொ - ரை ;—பிரிவில் தரிக்கமாட்டாத அன்றிற் பேடைகாள்! சேவலின் நினைவு அறிந்து பழகும் நீரும், உம்முடைய நினைவு அறிந்து பழகும் சேவலும் ஆகிய நீவிர் இருவீரும் எத்துணைக் காலம் அகம் கரைந்து வருந்துகிறீர்கள்; என்னை முடிப்பதற்கு இவ்வளவு பாரிப்பு வேண்டுவது அன்று; ஐயகோ! வித்தகனும் கோவிந்தனும் ஆன அவ் இறைவன் எத்தகையோர்க்கும் மெய்யன் அல்லன்; இனி என் உயிரானது அவன் கையில் உள்ளதே ஆம் என்றவாறு.

வி - கு :—அன்றிற் பேடைகாள்! நீரும் நும் சேவலும் எத்தனை கரைந்து ஏங்குதிர் என மாற்றுக. கரைதல் - கூவுதலுமாம். இனி, என் உயிர் அவன் கையது அத்தனையே ஆம் என்று கூட்டுக.

ஈடு :—இரண்டாம் பாட்டு. [1] சில அன்றிற் பேடைகளைக் குறித்து, உங்கள் சேவல்களும் நீங்களுமாய்க் காதல் குரல்களாலே என்னை நலிகிறது என்? என்கிறாள்.

இத்தனை வேண்டுவது அன்று - என்னை முடிப்பதற்கு இத்தனை வேண்டுவது இல்லை. [2] குயில்களைப் பார்த்து, 'இத்தனை வேண்டுமோ?' என்னுநிற்கச்செய்தே, இடையில் அன்றிலினுடைய ஒலி நலிய, அப் பாசுரமே இவற்றுக்கும் சொல்ல வேண்டும்படி அன்றோ பிறந்த நிலை. என்றது, [3]மஹாராஜரும் வாலியும் பொராநிற்க நடுவே ஒளி அம்பாகப் பெருமாள் விட்டாற்போலே, குயில்களும் இவளுமாகக் 'கூவாதே கொள்ளுங்கோள்'என்பது, அவை உயரக் கூவுவது ஆகாநிற்கச்செய்தே, நடுவே அன்றிலானது, செவிவழியே நெருப்பை உருக்கி வார்த்தாற் போலே ஒலிசெய்ய, புரிந்து பார்த்து, 'இவையே அமையாதோ! நீங்களும் வேண்டுமோ!' என்கிறாள் என்றபடி. [4]இவள் இப்படிச் சொல்லச் செய்தேயும் கூவத் தொடங்கிற்று.

---

1. "அந்தோ அன்றிற் பேடைகாள்! எத்தனை நீரும் நும் சேவலும் கரைந்து ஏங்குதிர்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. மேலே குயில்களுக்குச் சொன்ன மாற்றத்தையே அன்றில்களுக்கும் சொல்லுவான் என்? என்ன, 'குயில்களை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, ஆற்றாமையின் மிகுதியாலே சொல்லுகிறாள் என்றபடி.

3. மேலே கூறியதனைத் திருஷ்டாந்தத்தோடு விவரணம் செய்கிறார் 'மஹாராஜரும்' என்று தொடங்கி.

4. "அந்தோ" என்றதற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இவள்' என்று தொடங்கி.

அந்தோ - 'அடைக்கலம்' என்ற வாயினை அம்பாலே நிறைப்பாரைப் போலே, உங்கள் படி இருந்த படி என்! ஐயகோ! என்கிறாள்.

அன்றில் பேடைகாள்-[1]குயில் பேடைகளைக் காட்டில் உங்களிடத்தில் ஒரு வேற்றுமை கண்டிலோம். [2]உங்கள் சேவலைக் காட்டில் ஒரு வேற்றுமையும் கண்டிலோம். நலிகைக்கு, [3] சஜாதீயரிலும் விஜாதீயரிலும் அவ்வருகாய் இருந்தீர்கோள். 'நாங்கள் என்ன செய்தோம்?' என்ன, எத்தனை - மிகவும். நீரும் நும் சேவலும் - சேவலின் கருத்து அறிந்து நடக்கிற நீரும், உங்கள் கருத்து அறிந்து காரியங்களைச் செய்கிற சேவலும், [4]"அந்தப் பிராட்டியினுடைய மனத்தில் ஸ்ரீராமபிரான் விருப்பத்தோடு வீற்றிருக்கிறார்; ஆதலால், பிராட்டியின் மனத்தின் எண்ணங்களை எல்லாம் நன்றாக அறிகிறார்" என்னுமாறு போலே, பேடையின் கருத்து அறிந்து காரியங்களைச் செய்யா நின்றதாயிற்றுச்சேவல். கரைந்து ஏங்குதிர்-[5]பிறரை நலிகைக்காகத் தந்தாமை அழித்துக் கொள்வார் உளரே அன்றோ! கலவியிலே தான் அழிந்தமை தோற்றப் பேசுகின்றன. என்றது, இருவர் கூடக் [6]கலக்கும் சமயமோ இது? கலந்தால்தான் உங்கள் நிலை தோற்ற வாய் விடவேண்டுமோ? என்றபடி.

---

1. மேலே, உங்கள்படி இருந்தபடி என்? என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'குயில் பேடைகளை' என்று தொடங்கி. என்றது, அன்றில் வாயலகு சிறிது நெகிழினும் அந்தப் பிரிவினையும் பொறுக்கமாட்டாது இறக்குமாதலின் அந்த வேற்றுமையைக் கண்டிலோம் என்றபடி.

2. "பேடைகாள்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உங்கள் சேவலை' என்று தொடங்கி. என்றது, சேவல் ஆண் ஆகையாலே வல்நெஞ்சினை யுடையதாய்ப் பெண்ணினுடைய துயரத்தை அறியாதே இருக்கும்; பெண்கள் படும் துயரம் பெண்கள் அறிவார்கள்; அங்ஙனம் அறியக் கூடியவர்களாய் இருந்தும் இப்போது அருள் அற்றவர்களாய்க் கதறுகையாலே அந்த வேற்றுமையும் கண்டிலோம் என்றபடி.

3. ஸஜாதீயர் - குயிற்பேடைகள். விஜாதீயர் - சேவல்கள்.

4. பேடையின் கருத்து அறிந்து சேவல் காரியங்களைச் செய்வதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'அந்தப் பிராட்டியினுடைய' என்று தொடங்கி.

தஸ்யா: ச ராமோ த்விகுணம் ஹ்ருதயே பரிவர்த்ததே
அந்தர் ஜாதம் அபிவ்யக்தம் ஆக்யாதி ஹ்ருதயம் ஹ்ருதா.

என்பது, ஸ்ரீராமா. பால. 77 : 2.

5. "ஏங்குதிர்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பிறரை' என்று தொடங்கி. ஏங்குதல் - இன்பத்தின் மிகுதியாலே, வார்த்தை சொல்லப் புக்குத் தலைக் கட்டமாட்டாதே நடுங்குதல்.

6. 'கலக்கும் சமயமோ இது' என்றது, தன் நிலையை நோக்கி.

வித்தகன் - 'பரமகாதலனாய் எல்லாரையும் காக்கின்றவனை அவன் ஒரு கணம் தாழ்க்கும் அளவில் எங்களை விட்டு நலிகிறானைச் சொல்லவேண்டுமோ?' என்ன, அவன் படிகளை உட்புக்க என் பக்கலிலே கேளுங்கோள்! ஆச்சரியப்படத் தக்கவன். [1] இப்போது, அநுகூலர்க்கு அரிய வித்தகன். கோவிந்தன்-எல்லாப் பொருள்களையும் காப்பவன். [2] இதனால், எல்லாப் பொருள்களையும் பாதுகாப்பவன் போலே இருந்து தீங்கு இழைப்பவன் என்றபடி. [3] பாதுகாப்பவன் என்று பற்றப்போகாது, தீங்கு இழைப்பவன் என்று விடப்போகாது. மெய்யன் அல்லன் ஒருவர்க்கும் - [4] "பரமகாதலன், எல்லாரையும் காப்பவன்" என்று நினைத்து அவன் காரியம் செய்யப் போந்த உங்களுக்கும் பொய்யே பலித்தது. [5] "இராமன் இரண்டு விதமாகப் பேசுகிறவன் அல்லன்" என்றும், [6] "அவனை நான் விடமாட்டேன்" என்றும், [7] "அவ்வாறு செய்தல் எனக்கு

1. "வித்தகன்" என்றதனாலே அவன் வஞ்சனை சொல்லப்பட்டதோ? என்ன, 'இப்போது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, பிறர்கட்கு அரிய வித்தகன் அன்றிக்கே, இப்போது அநுகூலர்க்கு அரிய வித்தகன் என்றபடி. திருவாய்மொழி, 1 3: 1. பார்க்கவும்.

2. "கோவிந்தன்" என்றதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'இதனால்' என்று தொடங்கி. பின்னே வருகின்ற "மெய்யன் அல்லன் ஒருவர்க்கும்" என்றதிலே நோக்காக, "வித்தகன்" என்பதற்கும், "கோவிந்தன்" என்பதற்கும் இங்ஙனம் பொருள் அருளிச்செய்கிறார்.

3. 'பாதுகாப்பவன்' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து, காப்பவன் என்று பற்றப் போகாது, இப்போது தீங்கினைச் செய்கையாலே; தீங்கு இழைப்பவன் என்று விடப் போகாது, முன்பு பசுக்களைக் காத்தவன் ஆகையாலே என்பது.

4. "ஒருவர்க்கும்" என்ற உம்மைக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பரமகாதலன்' என்று தொடங்கி. "வித்தகன்" என்றதனை நோக்கி, 'பரமகாதலன்' என்கிறார்.

5. "கோவிந்தன் மெய்யன் அல்லன்" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'இராமன்' என்று தொடங்கி.

தத் ப்ரூஹிவசநம் தேவி ராஜ்ஞோயதபி காங்க்ஷிதம்
கரிஷ்யே ப்ரதிஜாநேச ராமோ த்விः நாபிபாஷதே.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 18 : 30. இது கைகேயியைப் பார்த்து ஸ்ரீராமபிரான் கூறியது.

6. மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சந
தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேதத் அகர்ஹிதம்.

என்பது, ஸ்ரீராமா. யுத். 18: 3. இது, வானர முதலிகளைப் பார்த்து ஸ்ரீராமபிரான் கூறியது.

7. ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே
அபயம் ஸர்வ பூதேப்யோ ததாமி ஏதத் வ்ரதம் மம.

என்பது, ஸ்ரீராமா. யுத். 18; 33.

விரதம்" என்றும் கூறிய இராமாவதாரம் போலே அன்றோ நீங்கள் நினைத்திருக்கிறது; [1] பகலை இரவு ஆக்குவது, ஆயுதம் எடேன் என்று ஆயுதம் எடுப்பது என்பவை போன்றனவே அன்றோ இவ் அவதாரத்தின் செயல். [2] "இராமாவதாரத்தில் மெய்யும், கிருஷ்ணவதாரத்தில் பொய்யும் அன்றோ அடியார்கட்குத் தஞ்சம்; ஆகையாலே, அவன் பொய்யன் ஆகில் என்? மெய்யன் ஆகில் என்? இருந்தபடி உகப்போம் அத்தனை அன்றோ நாங்கள்" என்று [3] தொடங்கின காரியத்திலே முதிர நின்றன. இனி என் உயிர் அவன் கையது அத்தனையே ஆம் - இனி அவ்வளவே அன்றோ! [4] இவற்றின் ஒருப்பாடு இருந்தபடியால், அவன் நினைவே தலைக்கட்டிவிட்டதே அன்றோ! என்கிறாள். [5] என் உயிர் அவன் கைப்பட்ட பின்பு, என்னைப் பாதுகாப்பதற்கு உங்கள் கால் பிடிக்க வேண்டாவே? (2)

929.

அவன் கையதே எனது ஆர் உயிர், அன்றிற் பேடைகாள்!
எவன் சொல்லி நீர் குடைந்து ஆடுதிர் புடை சூழவே?
தவம் செய்திலா வினையாட்டியேன் உயிர் இங்கு உண்டோ?
எவன் சொல்லி நிற்றும்? நும் ஏங்கு கூக்குரல் கேட்டுமே?

பொ - ரை:—பெண் அன்றில்களே! என்னுடைய அரிய உயிர் அவன் கையில் சிக்கிக்கொண்டது; பலப் பல வார்த்தைகளைப் பேசிக்கொண்டும், என் பக்கத்தில் சூழ இருந்துகொண்டும், நீங்கள் ஒருவரோடு ஒருவர் புணர்ந்து விளையாடுகின்றீர்கள்; முற் பிறவியில் புண்ணியத்தைச் செய்யாத தீவினையாட்டியேனுடைய உயிர் இங்கு உளதோ? உங்களுடைய ஏங்குகிற கூக்குரலைக் கேட்டும் எதனைச் சொல்லித் தரித்திருப்போம்?

---

1. கிருஷ்ணன் வஞ்சகன் என்னுமதை அவன் செயல்களே காட்டா நிற்கும் என்கிறார் 'பகலை' என்று தொடங்கி.

2. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இராமாவதாரத்தில்' என்று தொடங்கி.

3. 'தொடங்கின காரியத்தில்' என்றது, இவளை நலியும் காரியத்தில் என்றபடி.

4. 'அவ்வளவே அன்றோ' என்றதனை விவரணம் செய்கிறார் 'இவற்றின்' என்று தொடங்கி. ஒருப்பாடு - முயற்சி.

5. "என் உயிர் அவன் கையதே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'என் உயிர்' என்று தொடங்கி.

வி - கு :—எனது ஆர் உயிர் அவன் கையதே என்றும், நீர் எவன் சொல்லிப் புடைசூழக் குடைந்து ஆடுதிர் என்றும், நும் ஏங்கு கூக்குரல் கேட்டும் எவன் சொல்லி நிற்றும் என்றும் மாற்றுக. நிற்றும் - தரித்து நிற்போம்.

ஈடு :—மூன்றும் பாட்டு. [1] அவ் அன்றிற் பேடைகளையே பார்த்து, மீண்டும், தன் செயல் அறுதியாலே இரக்கிறாள்.

அவன் கையதே எனது ஆர் உயிர் - என் உயிர் அவன் கையதே. [2] நாயக நாயகிகள் இருவரும் கூடி இருந்தால் உயிர் கள் மாறாடி அன்றோ இருப்பது? உங்களுக்கு இது அறியப் படாததோ? அன்றிற் பேடைகாள் - [3] கலவியின் ரசம் அறி வார், பிரிந்தார் படுவதும் அறியவேண்டாவோ? எவன் சொல்லி- எவையேனும் சிலவற்றைச் சொல்லி. [4] அவை சொல்லுகிற வார்த்தைகளைச் சொல்லில் தன் வாய் வேம்போலே காணும்; ஆதலின், 'எவன் சொல்லி' என்கிறாள். நீர் குடைந்து - ஒன் றிலே ஒன்று மூழ்கி. ஆடுதிர்-கலந்து விளையாடுகின்றீர்கோள். புடை சூழவே - சுற்றிலும் திரியாநின்றீர்கோள். [5] அடை மதிள் படுத்துவார் சுற்றிலே விட்டுக் கொண்டு இருக்குமாறு போலே. [6] செவியைப் புதைத்துப் பிழைப்பேனோ! கண்களைப் புதைத் துப் பிழைப்பேனோ! [7] பெருமாளும் சேனைகளும் இலங்கையை அழிக்கைக்குச் சூழப் போந்தாற் போலே காணும் இவளுக்கு இவை இருக்கின்றன.

---

1. மீளவும் அவ் அன்றிற் பேடைகளை இரப்பான் என்? என்ன, 'அவ் அன்றிற் பேடைகளையே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய் கிறாள்.

2. அவன் கையது என்று அறியும்படி என்? என்ன, 'நாயக நாயகிகள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். மேற் பாசுரத்தில் "அவன் கையதே" என்றது, நிராசையால் சொன்ன வார்த்தை; இப்பா சுரத்தில் "அவன் கையதே" என்றது, காதலாலே கூறிய வார்த்தை.

3. நாங்கள் செய்வன எல்லாம் உனக்குத் துன்பத்தைத் தருகின்றன என்கிறாய்; இதனை நாங்கள் அறியும்படி யாங்ஙனம்? என்ன, 'கலவியின்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. இன்ன வார்த்தைகள் என்னுமல் "எவன்" என்பான் என்? என்ன, 'அவை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. சுற்றிலும் திரிதலுக்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'அடைமதிள்' என்று தொடங்கி. அடைமதிள் படுத்துகை - முற்றுகை இடுதல்.

6. "எவன் சொல்லி", "புடைசூழ" என்னும் இரண்டாலும் தனக்கு வந்த நலிவினைத் தப்ப விரகு இல்லை என்கிறார் 'செவியை' என்று தொடங்கி.

7. மேலே 'அடைமதிள் படுத்துவார்' என்றதனை விவரணம் செய் கிறார் 'பெருமாளும்' என்று தொடங்கி.

[1] பாவியேன் ! உங்கள் பாரிப்புக்கு இங்கு விஷயம் உண்டாகப் பெற்றது இல்லை; தவம் செய்தில்லா வினையாட்டியேன்-உயிரை இங்கே வைத்து உங்களுக்கு உதவி செய்யப் புண்ணியம் பண்ணிற்றிலேன். அன்றிக்கே, " அவனைப் போலே பிரிவுக்குச் சிளையாதபடி புண்ணியம் பண்ணப் பெற்றிலேன் " என்று பிள்ளான் பணிக்கும். உயிர் இங்கு உண்டோ-[2]வல்லடிக்காரர்க்கு விளக்கு ஏற்றிக் காட்டுமாறு போலே காணும், 'இங்கு உண்டோ!' என்று காட்டுகிறபடி. எவம் சொல்லி நிற்றும் - எதனைச் சொல்லித் தரிப்பது? நும் ஏங்கு கூக்குரல் கேட்டும் - காதல் வசப்பட்டிருக்கின்ற உங்களுடைய கூக்குரலைக் கேட்டும் [3]பிரிவிற்குத் தரித்திருக்கிலும், [4] உங்கள் கூக்குரலுக்குப் பிழைத்திருக்க வல்லேமோ! உங்கள் கூக்குரல், கேட்டாரை முடிக்குமது அன்றோ! [5] உங்கள் செவியைப் புதைத்தோ நீங்கள் கூப்பிடுகிறது? [6] " ஆண்களோடு கூடத் திரிகின்ற சக்கரவாகப் பேடுகளின் இனிய குரலைக் கேட்டுத் தாமரை போன்ற நீண்ட கண்களையுடைய இந்தச் சீதை எப்படி இருப்பாளோ?" என்றார் பெருமாள். (3)

930.

கூக்குரல் கேட்டும் நம் கண்ணன் மாயன் வெளிப்படான்;
மேல் கிளை கொள்ளேன்மின்; நீரும் சேவலும்,கோழிகாள்!
வாக்கும் மனமும் கருமமும் நமக்கு ஆங்கதே;
ஆக்கையும் ஆவியும் அந்தரம் நின்று உழலுமே.

---

1. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'பாவியேன்' என்று தொடங்கி.

2. "இங்கு" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வல்லடிக்காரர்க்கு' என்று தொடங்கி. வல்லடிக்காரர் = கொலைஞர்.

3. " ஏங்கு கூக்குரல் " என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் ' பிரிவிற்கு ' என்று தொடங்கி.

4. என்? பிழைக்கப் போகாதோ? என்ன? 'உங்கள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. தனக்குத் துன்பத்தைத் தருகையாலே அவற்றுக்கும் இது துன்பத்தைத் தருவதாம் என்று நினைத்து, பாவம் அருளிச்செய்கிறார் 'உங்கள் செவியை' என்று தொடங்கி.

6. தனக்குத் துன்பத்தைத் தருவதைக் கொண்டு இப்படி நினைத்த பேர் உளரோ? என்ன, 'ஆண்களோடு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

நிஸ்வநம் சக்ரவாகாநாம் நிஶம்ய ஸஹசாரிணாம்
புண்டரீக விஶாலாக்ஷீ கதம் ஏஷா பவிஷ்யதி.

என்பது, ஸ்ரீராமா, கிஷ். 30 : 10.

பொ - ரை :—மயில்காள்! நீங்கள் கூவுகிற குரலைக் கேட்டும் கூட, நம் கண்ணனாகிய மாயன் தோன்றான்; நீரும் உம்முடைய சேவலும் மேலும் மேலும் திரளாகக் கூவாதீர்கள்; என்னுடைய மனமும் வாக்கும் காயமும் அவன் பக்கலிலே தங்கி இருக்கின்றன; சரீரமும் உயிரும் நடுவே நின்று சுழலாநிற்கின்றன என்கிறாள்.

வி - கு :—கோழிகாள்! நீரும் சேவலும் மேல் கிளை கொள்ளேன்மின் என்று மாற்றுக. கோழிகாள் என்பது, ஈண்டுப் பெண் மயில்களைக் குறித்தது. கோழி - மயில்.

ஈடு :—நாலாம் பாட்டு. [1] சில மயில்களைப் பார்த்து, நீங்கள் உச்சக் குரலிலே கூவி என்னை நலியாநின்றீர்கோள் என்கிறாள்.

கூக்குரல் கேட்டும் - நீங்கள் கூவுகிற குரலைக் கேட்டு வைத்தும். [2] இவற்றின் ஒலி செல்லாத இடம் இல்லை என்று இருக்கிறாள். நம் கண்ணன் - [3] ஆலமரத்தில் பேய் உண்டு என்னும் பிரசித்திபோலே காணும் அடியார்க்கு எளியவன் என்னும் இது. மாயன்-ஆச்சரியமான குணத்தையுடையவன். என்றது, [4] கலக்கும் சமயத்தில் மெய்போலே காரியங்களைச் செய்ய வல்லவன் என்றபடி. வெளிப்படான் - [5] 'இவள் பிழையாள்' என்று தோற்றுகின்றிலன். [6] "அந்த ஆயர் பெண்களுக்கு மத்தியில்

---

1. "நீரும் சேவலும் கோழிகாள் மேல் கிளை கொள்ளேன்மின் என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. பரமபத நாதனுக்கும் இது கேட்குமோ? என்ன, 'இவற்றின்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "மேல் கிளை கொள்ளேன்மின்" என்றதனை நோக்கி, 'செல்லாத இடம் இல்லை' என்கிறார்.

3. "நம்" என்றதற்குப் பொருள் 'ஆலமரத்தில்' என்று தொடங்கும் வாக்கியம். "நம்" என்றது, பிரசித்தியைக் காட்டுவது. இதனால், 'எளியவன்' என்கிறது, பிரசித்தி மாத்திரம் ஒழிய அநுஷ்டானத்தில் இல்லை என்றபடி.

4. ஆச்சரியத்தை விவரணம் செய்கிறார் 'கலக்கும்' என்று தொடங்கி.

5. 'இவள் பிழையாள்' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து, 'இதன் ஒலி இவளுக்குத் துன்பத்தைத் தருவதாம்' என்றால் ஓடி வரவேண்டி இருக்க, அது செய்கிறான் இலன் என்பது.

6. நன்று; பிரிந்து துன்புறும் நிலையில் தோன்றுவானோ? என்ன, தோன்றுவான் என்பதற்குப் பிரமாணம் அருளிச்செய்கிறார் 'அந்த ஆயர் பெண்களுக்கு' என்று தொடங்கி.

தாஸாம் ஆவிரபூத் சௌரிঃ ஸ்மயமாந முகாம்புஜঃ
பீதாம்பரதரঃ ஸ்ரக்வீ ஸாக்ஷாத் மந்மத மந்மதঃ.

என்பது, பாகவதம்.

வந்து தோன்றினன்" என்னப்படுமவன்காண். [1] ருஷியும், "தோன்றினன்" என்றான்; இவளும், 'வெளிப்பட்டான்' என்கிறாள். மேல் [2] கிளை கொள்ளேன்மின் - மேல் கிளை - உச்சமான குரல். உங்கள் இனத்திற்குப் பொருத்தமாய்க் காதலால் உண்டாகின்ற உச்சமான ஒலியைச் செய்யாதீர்கள். இவள் ஈடுபடப்பட, ஒரு தானம் எழவைத்துக் கூவாநின்றன ஆதலின் 'மேல்' என்கிறாள். நீரும் சேவலும் - [3] ஒன்று தொடங்கின காரியத்தைத் துணையானதும் தொடங்கிக் குறையும் கூட முடியாநின்றது. கோழிகாள் - [4] பெண்கொலை புரிதற்கு ஒரு கூட்டமாக ஒருப்பட வேண்டுமோ? கோழி என்றது. மயிலை.

"'நீங்கள் நலியாதே கொள்ளுங்கோள்' என்னுமளவும் பார்த்து அன்றோ நாங்கள் இருக்கிறது? எல்லா உறுப்புக்களையும் கொள்ளை கொள்ள வந்த நாங்கள் தவிருவோமோ? தொடங்கின காரியம் தலைக்கட்ட வேண்டுமே, எங்களுக்கு" என்பது கருத்தாக, அங்ஙனமாயின், பின்னை அங்கே செல்லுங்கோள் என்கிறாள் மேல்: நமக்கு வாக்கும் மனமும் கருமமும் ஆங்கதே - என்னுடைய எல்லா உறுப்புக்களும் அவன் பக்கலின. 'அங்கே சென்று இவை கூவ, அவனுக்குத் தரிப்பு அரிதாய் வந்து முகம் காட்டும்' என்னும் நினைவாலே சொல்லுகிறாள். அங்கே ஆகில், [5] இப் பேச்சும் செயல்களும் கூடினபடி என்? என்ன, ஆக்கையும் ஆவியும் அந்தரம் நின்று உழலுமே - துக்கத்தின் வாசனையாலே, ஆக்கையும் ஆவியும் நடுவே நின்று கிலேசப்படுகின்றன இத்தனை. [6] பிடித்து விட்ட,

---

1. சொல்லும் ஒத்திருக்கிறது என்கிறார் 'ருஷியும்' என்று தொடங்கி. என்றது, ஆயர் பெண்களுக்கு அண்மையில் இருந்தும் தோற்றாதிருந்தான் என்றாற்போலே, இவளும் அண்மையில் இருந்து வைத்தே வெளிப்பட்டான் என்கிறாள் என்றபடி.

2. கிளை - பறவைகளின் ஒலி; 'ஆந்தை கிளைக் கூட்டிற்று' என்னக் கடவது அன்றோ என்பர் அரும்பத உரைகாரர். 'உங்கள் இனத்திற்குப் பொருத்தமாய்' என்ற வியாக்கியானமும் காண்க.

3. "நீரும் சேவலும்" என்று இரண்டையும் கூறி, "கிளை" என்று ஒருமையாகச் சொன்னதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஒன்று' என்று தொடங்கி.

4. "கோழிகாள்" என்ற பன்மைக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பெண் கொலை' என்று தொடங்கி.

5. "மேல் கிளை கொள்ளேன்மின்", "உழலும்" என்பனவற்றைத் திருவுள்ளம்பற்றி 'இப் பேச்சும் செயல்களும்' என்கிறார்.

6. சரீரமும் உயிரும் நடுவே நின்று உழலுவதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'பிடித்துவிட்ட' என்று தொடங்கி.

கொம்பு போலே வாசனையே உள்ளது. [1] நோவுபட வேண்டுவதற்கு உண்டு, நலியப்படுதற்குப் பொருள் இல்லை. (4)

931.

அந்தரம் நின்று உழல்கின்ற யானுடைப் பூவைகாள்!
நும் திறத்து ஏதும் இடை இல்லை, குழறேன்மினோ;
[2]*இந்திர ஞாலங்கள் காட்டி, இவ் ஏழ் உலகும் கொண்ட*
நம் திரு மார்வன் நம் ஆவி உண்ண நன்கு எண்ணினான்.

பொ - ரை :—நடுவே நின்று ஒரு பயனும் இல்லாமல் உழன்று கொண்டிருக்கிற என் பூவைகாள்! என்னை வருத்துவதற்கு உங்களுக்குச் சிறிதும் இடம் இல்லை; ஆதலால், கூவாதீர்கள்; இந்திர ஞாலங்களைக் காட்டி, இந்த ஏழ் உலகங்களையும் கைக்கொண்ட நம் திருமார்பன் என்னுடைய உயிரை முடிப்பதற்கு நல்ல விரகு பார்த்தான் என்கிறாள்.

வி - கு : —ஏழ் உலகும் கொண்ட திரு மார்வன் என்க. திருமார்வன் - ஸ்ரீதரன். நம் என்பது, தனித் தன்மைப் பன்மை.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [3] தன் உடைமையாய் இருந்து நலிகிற பூவைகளைக் குறித்து, அவன்தான் என்னை முடிக்கைக்கு நல்ல விரகு பார்த்தான்; இனி உங்களுக்கு இங்கு விஷயம் இல்லை என்கிறாள்.

அந்தரம் நின்று உழல்கின்ற - உங்களுக்கு இங்கு நலியப் பொருள் இன்றிக்கே இருக்க, நடுவே நின்று பயன் இல்லாமலே வருந்துகின்றீர்கள் அத்தனை. *யான் உடைப் பூவைகாள்* - என்னுடைய பூவைகாள்! [4] எல்லாருக்கும் பொதுவாய் இருப்பார் செய்வனவற்றை, சிலர்க்கு உடைமையாய் இருப்

---

1. "உழலும்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'நோவுபட' என்று தொடங்கி.

2. "இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்" என்பது, திருவாசகம்.

3. "யானுடைப் பூவைகாள்! நம் ஆவி உண்ண நன்கு எண்ணினான் நும் திறத்து ஏதும் இடை இல்லை; குழறேன்மினோ" என்பனவற்றைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

4. "யானுடை" என்று விசேடணம் கொடுத்துச் சொல்லுகிறவளுடைய உட்கருத்தை அருளிச்செய்கிறார் 'எல்லாருக்கும்' என்று தொடங்கி. 'எல்லார்க்கும் பொதுவாய் இருப்பார்' என்றது, காட்டிலே வசிக்கையாலே சர்வ சாதாரணமான மேலே கூறிய மயில் முதலான பறவைகளை. அன்றிக்கே, மேற்பாசுரத்தில் கூறிய "நம் கண்ணன்" என்கிற கிருஷ்ணனையாகவுமாம்.

பார் செய்யலாமோ? [1] நான் என்னுடைமை என்று நினைக்க அமையுமே அன்றோ துன்புறுத்துகைக்கு? அவனும் என் உடையவன் ஆதலால் அன்றோ நலிந்தான்! நும் திறத்து ஏதும் இடை இல்லை - உங்களுக்கு என்னை நலிகைக்கு ஓர் இடம் இல்லை. [2] அன்றிக்கே, உங்கள் பாரிப்புக்கு என் பக்கல் ஓர் இடம் இல்லை என்றுமாம். குழறேல்மின் - எழுத்துக்கள் இன்றிக்கே இருக்கும் ரசமான சொற்களைக் காட்டி முடியாதே கொள்ளுங்கோள்!

[3] அவன் தான் செய்வதற்கு ஒருப்பட்ட காரியத்தில் நெகிழ நின்றான் ஆகில் அன்றோ, நீங்கள் இப்படி முதிர நிற்க வேண்டுவது? அதற்கு உங்களுக்கு இடம் வைத்தானோ அவன்! என்கிறாள் மேல்: இந்திர ஞாலங்கள் காட்டி - [4] கண்டார்க்கு விட ஒண்ணாத வடிவையும், சீலத்தையும், செயலையும் காட்டி. அன்றிக்கே, இவை நிலை நில்லாமையாலே 'பொய்கள்' என்கிறாள் என்னுதல். இந்திர ஞாலம் என்பதும், பொய் என்பதும் ஒரு பொருட் சொற்கள். ஏழ் உலகும் கொண்ட - [5] பிறருடைய பொருளைக் கவரப்புக்கால், அவர்கட்கு ஒன்றும் இல்லாதபடி கவர்கின்றவன். நம் திருமார்வன் - [6] காதலையுடையவன் என்பதால் வந்த ஒரு பிரசித்தியை எனக்குக் காட்டி என்பார் 'நம்'

---

1. "யானுடை" என்ற அடைமொழிக்கு, "நம் திருமார்வன்" என்றதனைக் கடாக்ஷித்து, என்னுடைய சம்பந்தமே காரணமாகத் துன்புறுத்துகின்றீர்கள் என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'நான் என்னுடைமை' என்று தொடங்கி.

2. இரண்டாவது பொருளில், "திறம்" என்பது கூட்டத்தைக் காட்ட, அது பாரிப்பினைக் காட்டுகிறது.

3. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'அவன் தான்' என்று தொடங்கி. என்றது, இடம் வையாமல் அவன் செய்த செயல்களைச் சொல்லுகிறாள் என்றபடி.

4. "இந்திரஞாலங்கள்" என்ற பன்மைக்குப் பொருளையும், அவற்றை இந்திரஞாலமாக அருளிச்செய்கைக்குக் காரணத்தையும் அருளிச்செய்கிறார் 'கண்டார்க்கு' என்று தொடங்கி. என்றது, இந்திரஞாலமாவது, கண்டு அல்லது நிற்க ஒண்ணாதபடி மனத்தைக் கொள்ளை கொள்ளும்படியானதொரு செயல் அன்றோ; அப்படியே இறைவனுடைய வனப்பு முதலானவைகளும் அநுபவித்தால் ஒழிய நிற்க ஒண்ணாதபடி மனத்தைக் கவருகின்ற தன்மையை நோக்கி, இவற்றை "இந்திரஞாலங்கள்" என்கிறாள் என்றபடி.

5. "எழுலகும்" என்ற உம்மைக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'பிறருடைய' என்று தொடங்கி.

6. 'காதலையுடையவன்' என்று தொடங்கும் வாக்கியத்துக்குக் கருத்து, பிராட்டியினுடைய சேர்த்தியைக் காட்டி என்னை அகப்படுத்திக் கொண்டவன் என்பது.

என்கிறார். [1]பிராட்டியோடே பழகிற்றும் காதலையுடையவனாய் அன்று; அதனைக் காட்டிக் கண்டாரை அகப்படுத்திக் கொள்ளுகைக்காக என்பார் 'திருமார்பன்' என்கிறார். நம் ஆவி உண்ண நன்கு எண்ணினான் - [2]சில பொய்களைப் பேசிப் பூமியைக் கொண்டாற் போலே, நம்மோடு கலவியைச் செய்கிறான் என்று தோற்றும்படி சில பொய்யான காரியங்களைச் செய்து, பிரிதல் இவளை முடித்தற்கு உபாயம் என்று நம்மை முடித்தற்கு நல் விரகு பார்த்தான் என்னுதல். [3]அன்றிக்கே, உங்களுக்கு இங்கு இடம் இல்லை; நம்மை முடிக்கப் பார்த்த பார்வை அழகிதாகப் பார்த்தான் என்று தன்னிலே நொந்து சொல்லுகிறாள் என்னுதல். [4]ஸர்வசக்தி செய்வதாக ஒருப்பட்ட காரியத்திலே குறை கிடப்பதாய், அதிலே நீங்களும் துணைபுரிகின்றீர்களோ! (5)

932.

நன்கு எண்ணி நான் வளர்த்த சிறு கிளிப் பைதலே!
இன் குரல் நீ மிழற்றேல்; என் ஆர் உயிர்க் காகுத்தன்,
நின் செய்ய வாய் ஒக்கும் வாயன், கண்ணன், கை காலினன்,
நின் பசும் சாம நிறத்தன் கூட்டு உண்டு நீங்கினான்.

பொ - ரை:—நன்றாக ஆலோசித்து நான் வளர்த்த சிறிய கிளிப் பிள்ளையே! உனது சிவந்த வாயைப் போன்ற திருவாயினையுடையவனும் திருக்கண்களையுடையவனும் திருக்கரத்தை உடையவனும் திரு

---

1. "திருமார்வன்" என்பதற்கு வெறுப்பிலே நோக்காகப் பொருள் அருளிச்செய்கிறார் 'பிராட்டியோடே' என்று தொடங்கி.

2. பின் இரண்டு அடிகட்கு, பறவைகளைப் பார்த்துச் சொல்லுகிறாள் என்றும், தனக்குள்ளே நொந்து சொல்லுகிறாள் என்றும் இருவகையாகக் கருத்து அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, முதல் கருத்தை அருளிச்செய்கிறார் 'சில பொய்களைப் பேசி' என்றுதொடங்கி.

3. "இரண்டாவது கருத்தினை அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. நன்கு என்பதற்கு இருபொருள். ஒன்று, நன்றாக என்பது. மற்றொன்று, கொடுமையாக என்பது. இரண்டாவது பொருளில் நன்கு என்பது குறிப்புமொழி; கற்கறித்து, 'நன்கு அட்டாய்' என்பது போன்று. இவ் இரு பொருள்களையும் முறையே காட்டுகிறார் 'நல்விரகு பார்த்தான்' என்றும், 'அழகிதாகப் பார்த்தான்' என்றும்.

4. 'அவனும் செய்து போகிறான்; அவன் செய்யாமல் கிடக்கும் குறைகளை நாங்கள் முடிக்கிறோம்' என்று அவைகள் கூற, அவற்றிற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஸர்வசக்தி' என்று தொடங்கி. ஸர்வசக்தி - வரம்பில் ஆற்றலையுடைய இறைவன்.

வடிவை உடையவனும் உனது பசிய சாம நிறத்தைப் போன்ற நிறத்தை உடையவனும் ஆன என் அரிய உயிராகிய காகுத்தன் என்னோடு கலந்து நீங்கினான் ; ஆதலால், நீ இனிய குரலைக் காட்டிக் கூவாதே என்கிறாள்.

வி - கு :—கிளிப்பைதலே! சாம நிறத்தனாகிய காகுத்தன் கூட்டு உண்டு நீங்கினான் ; இன்குரல் நீ மிழற்றேல் என்க.

ஈடு :—ஆறும்பாட்டு. [1] தனது நிலையை அறியாதே திருப்பெயரைச் சொல்லுகிற கிளிப்பிள்ளையைக் குறித்து, என்னால் பொறுக்கக் கூடாத நிலையிலே சொல்லவோ உன்னை வளர்த்தது? என்று, திருப்பெயரை இப்பொழுது சொல்ல வேண்டாம் என்கிறாள்.

நன்கு எண்ணி - [2] திருப்பெயரைச் சொன்னால் பொறுக்கும் நிலை அறிந்து சொல்லுதற்கும், பொறுக்க முடியாத நிலையில் திருப்பெயரைச் சொல்லாதிருத்தற்கும் அன்றோ உன்னை வளர்த்தது? நான் வளர்த்த - [3] ஒரேமகனையுடையவளைப் போலே ஆயிற்று வளர்த்தது. [4] நான் ஒன்றனை ஆதரித்தலே போதியதாம் அன்றோ வேறுபடுகைக்கு? [5] அவனும் கிளியைப் போன்று பவ்யனாய் அன்றோ இருந்தது. சிறு கிளிப் பைதலே- [6] சிறுமை - பருவம். பைதல் - வயதிற்குத் தக்க பக்குவம் இன்றிக்கே இருத்தல். உன் இளமைப் பருவம் அன்றோ நலிகைக்கு அடி. இன்குரல்-கூரிய வேல் என்னுமாறு போலே கொடுமையிலே நோக்கு. நீ மிழற்றேல் - நிரம்பா மென்சொற்களால் என்னை முடிக்காதே ! [7] **தாயைக் கொலை செய்வதற்கும் முயல்வார் உளரோ ?**

---

1. "நான் வளர்த்த சிறு கிளிப் பைதலே ! இன்குரல் நீ மிழற்றேல்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. வளர்ப்பதில் நன்றாக எண்ணி வளர்க்கையாவது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'திருப்பெயரை' என்றுதொடங்கி.

3. "கிளிப் பைதலே" என வருகின்ற ஒருமைப் பிரயோகத்தைத் திருவுள்ளம்பற்றி, பாவம் அருளிச்செய்கிறார் 'ஒரே மகனை' என்றுதொடங்கி.

4. "நான் வளர்த்த" என்பதில் உள்ள "நான்" என்பதிலே நோக்காக, பாவம் அருளிச்செய்கிறார் 'நான் ஒன்றனை' என்று தொடங்கி.

5. நீ விரும்பியவர்களில் உன் விருப்பத்துக்கு வேறுபட்டார் உளரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவனும்' என்று தொடங்கி. அவனும்-கண்ணபிரானும். பவ்யன் - அடங்கினவன் ; எளியன்.

6. சிறுமையும் பைதலும் ஒரு பொருளன அன்றோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சிறுமை' என்று தொடங்கி.

7. "யான் வளர்த்த" என்றதனைக் கடாக்ஷித்து, "மிழற்றேல்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தாயை' என்று தொடங்கி.

என் ஆர் உயிர்க் காகுத்தன் - [1] பிரிவில் தரித்திருத்தல் அரிதாம்படி அன்றோ கிட்டினபோது கலந்தது. "தயரதற்கு மகன் தன்னை அன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" என்றே அன்றோ இவர் இருப்பது. நின் செய்ய வாய் ஒக்கும் வாயன் - உன்னுடைய வாய் போலே இருக்கும் திருவாயினை உடையவன். [2] உபமானத்தைச் சொல்லிச் சேர்த்துவிடும் அத்தனை ஒழிய, உபமேயத்தைப் பேச முடியாது. கண்ணன் கை காலினன் - உன் வாயினைப் போலே சிவந்த திருக் கண்களையும் திருக்கைகளையும் திருவடிகளையும் உடையவன். நின் பசும் சாம நிறத்தன்-உன்னுடைய [3] குளிர்ந்த நீலநிறத்தையுடையவன். நீலநிறத்தையுடையதாய் எரித்திருக்கை அன்றிக்கே, குளிர்ந்திருத்தலின் 'பசும் சாமம்' என்கிறாள். [4] ஓர் உடம்பிலே இத்தனை பகைதேடி வைக்கலாமோ? கூட்டு உண்டு நீங்கினன் - கலந்து என் தன்மையை அறிந்து வைத்துப் பிரிந்தான்; [5] அவன் கூட இருந்தால் அன்றோ உன்படிகள் அநுகூலமாய் இருப்பன? [6] தனி இருப்பில் நலிவார் இராவணன் முதலியோர்கள் அலரோ? அநுகூலரும் நலிவரோ? (6)

933.

கூட்டு உண்டு நீங்கிய கோலத் தாமரைக் கண் செவ்வாய்
வாட்டம்இல் என் கருமாணிக்கம், கண்ணன், மாயன்போல்
கோட்டிய வில்லொடு மின்னும் மேகக் குழாங்கள்காள்!
காட்டேன்மின் நும் உரு என் உயிர்க்கு அது காலனே.

பொ - ரை:—கலந்து பிரிந்த, அழகிய தாமரைமலர் போன்ற திருக்கண்களையும் சிவந்த திருவாயினையும் உடைய, வாட்டம் இல்லாத

---

1. கூட்டு உண்டு நீங்கினவனை "என் ஆர் உயிர்" என்பான் என்? என்ன, 'பிரிவில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. செய்ய வாயன் என்றால் போதாதோ? "செய்ய வாய் ஒக்கும்" என்பான் என்? என்ன, 'உபமானத்தை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. பசுமை, ஈண்டுக் குளிர்த்தியின் மேற்று.

4. "நின் செய்ய வாய் ஒக்கும்" என்பது போன்றவைகளால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'ஓர் உடம்பிலே' என்று தொடங்கி.

5. இவை பகையோ? அவனுடைய உறுப்புக்களை நினைப்பூட்டுவனவாய் இருப்பதனால் அநுகூலமாய் அன்றோ இருப்பன? என்ன, 'அவன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. "நீ மிழற்றேல்" என்றதற்குச் சேர, பாவம் அருளிச்செய்கிறார் 'தனி இருப்பில்' என்று தொடங்கி.

கருமாணிக்கமும் மாயனும் ஆன என் கண்ணபிரான் போன்று, வளைத்த வில்லோடும் மின்னுகின்ற மேகக் கூட்டங்களே! நம்முடைய வடிவத்தை என் முன் காட்டாதீர்கள்; உங்களுடைய வடிவமாகிய அது என் உயிர்க்குக் கூற்றுவன் ஆகும்.

வி - கு:—நீங்கிய கண்ணன், செவ் வாயினையுடைய கண்ணன், கருமாணிக்கமாகிய கண்ணன் என்க. காலன் - காலத்தைக் கூறு செய்பவன்; யமன்.

ஈடு:—ஏழாம்பாட்டு. [1] அவன் வடிவிற்குப் போலியான மேகங்களின் வரிசையைக் கண்டு, உங்கள் வடிவினைக் காட்டி என்னை முடிக்காதீர்கள் என்கிறாள்.

கூட்டு உண்டு நீங்கிய கோலம் தாமரைக் கண் செவ் வாய் கண்ணன் - [2] 'ஒரே பொருள்' என்னும்படி கலந்து பிரிந்த பின்பு அவனுடைய உறுப்புக்களின் வனப்பு இருந்தபடி. அன்றிக்கே, இவளுடைய கலவியால் வந்த வனப்பு என்னுதல். கோலம் தாமரைக் கண் செவ் வாய் - அழகிய தாமரை போலே இருக்கிற திருக்கண்களையும், சிவந்த அதரத்தையும் உடையவனாய். வாட்டம் இல் என் கருமாணிக்கம் - [3] கலந்த பொழுது உண்டான செவ்வி, பிரிந்த காலத்திலும் தலைச் சாவி வெட்டிவிடப் போகிறது இல்லை காணும். அன்றிக்கே, இத் தலையை வெறுந்தறை ஆக்கினபின்பு இரட்டித்த படி என்னுதல். [4] பிரிந்த பின்பும் மறக்க ஒண்ணாதபடி நலிகிற நீலஇரத்

1. "கண்ணன் மாயன் போல் கோட்டிய வில்லொடு மின்னும் மேகக் குழாங்கள்காள்!" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "கோலம் தாமரைக்கண் செவ்வாய்" என்று அவயவசோபை கூறியதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஒரே பொருள்' என்று தொடங்கி. முதல் பாவம், வெறுப்பிலே நோக்கு.

3. மேலே "கோலம் தாமரைக்கண் செவ்வாய்" என்றதற்கு அருளிச்செய்த இருவகைக் கருத்துக்களுக்குத் தகுதியாக, "வாட்டம் இல் என் கருமாணிக்கம்" என்பதற்கும் இருவகையான பாவம் அருளிச்செய்கிறார் 'கலந்த பொழுது' என்று தொடங்கி. தலைச்சாவி வெட்டுகையாவது, பயிர்கள் மதாளித்துப் போனால் நுனிகளை அறுத்துப் போகடுதல். தலைச்சாவி வெட்டிவிடப்போகிறது இல்லை—எழுச்சி அறுக்கப்போகிறது இல்லை. இதனால், கலந்தபோதைச் செவ்வியின் மிகுதியைச் சொல்லுகிறது.

4. "என்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பிரிந்த பின்பும்' என்று தொடங்கி. "என்செய்ய" என்ற திருப்பாசுரத்தின் வியாக்கியானம் பார்க்க. திருவாய்மொழி, 35.

நிறம் போலே இருக்கிற திரு நிறத்தை உடையனாய். [1] "மேலே தங்கி இருக்கிற காட்டு ஈக்கள் கொசுக்கள் முதலானவற்றையும் ஓட்டமாட்டார்" என்கிறபடியே, அவன் இருக்க, அரைக் கணம் தாழ்த்தான் என்று இவ் வார்த்தையைச் சொல்லுகிறாளே! ஐயகோ!

கண்ணன் மாயன் போல் - ஆச்சரியத்தையுடையனான கிருஷ்ணனைப் போலே; [2] கலக்கிறபோது காலைக் கையைப் பிடித்துக் கலந்து பவ்யனாய் இருந்தான் ஆதலின் 'மாயன் கண்ணன்' என்கிறாள். கோட்டிய வில்லொடு மின்னும் மேகக் குழாங்கள்காள் - வளைத்த வில்லோடே கூடி மின்னுகின்ற மேகக் கூட்டங்காள்! [3] கௌஸ்துபம், திருமேனிக்கு ஒளியை உண்டாக்குமாறு போலே இராநின்றது மின்னல். நும் உரு காட்டேல்மின் - கூற்றுவனை ஒத்ததான உங்கள் வடிவைக் காட்டாதீர்கள்! [4] அவ் வடிவைக் கொண்டு அகல இருந்தவனோடு உங்களோடு வேற்றுமை இல்லாது இருந்ததே! [5] அது என்? என்னில், என் உயிர்க்கு அது காலன்-விரஹம் தின்று பண்டே [6] தற்பு அற்ற என் உயிருக்கு அது கூற்றுவனாக இருக்கின்றது. 'குழாங்கள்காள்! நும் உரு' என்று முன்னிலை ஆக்கினவள், பின், 'அது' என்று படர்க்கையிலே கூறுவது என்? என்னில், காணமாட்டாமையாலே, முகத்தை மாற வைத்துச் சொல்லுகிறாள். (7)

---

1. "சீதையைப் பிரிந்து ஒரு கணமும் தரித்திருக்கமாட்டேன்" என்றிருக்குமவனை, பிரிவினாலே ஒளியுடையனாய் இருக்கிறான் என்பது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மேலே' என்று தொடங்கி. என்றது, ஆற்றாமையாலே சொல்லுகிறாள் என்றபடி.

"நைவதம்ஸாந் ந மஸகாந் ந கீடாந் ந ஸரீஸ்ருபாந்"

என்பது, ஸ்ரீராமா. சுந். 36 : 42. இது பிராட்டியைப் பார்த்துத் திருவடி கூறியது.

2. ஆச்சரியத்தை விவரணம் செய்கிறார் 'கலக்கிறபோது' என்று தொடங்கி. மாயன் - ஆச்சரியத்தையுடையவன்.

3. மேகத்திலே உள்ள மின்னுக்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'கௌஸ்துபம்' என்று தொடங்கி. கோட்டிய வில்லுக்குத் திருஷ்டாந்தம், ஸ்ரீசார்ங்கம் என்னும் வில்.

4. "நும் என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவ் வடிவை' என்று தொடங்கி.

5. 'அது என்? என்னில்,' என்றது, நும் உருவைக் காட்டாதே கொள்ளுங்கோள் என்கைக்கு அடி என்? என்னில் என்றபடி.

6. தற்பு - வலி.

934.

உயிர்க்கு அது காலன் என்று, உம்மை யான் இரந்தேற்கு,நீர்
குயிற் பைதல்காள்! கண்ணன் நாமமே குழறிக் கொன்றீர்;
தயிர்ப் பழஞ்சோற்றோடு பால் அடிசிலும் தந்து, சொல்
பயிற்றிய நல்வளம் ஊட்டினீர்! பண்பு உடையீரே!

பொ - ரை:—இளம் குயில்களே! கண்ணபிரானுடைய திரு நாமம் ஆகிய அது என் உயிர்க்குக் கூற்றுவனாகும் அதனைக் கூறுதீர்கள் என்று உம்மைக் கேட்டுக்கொண்ட எனக்கு, கண்ணபிரானுடைய திருப் பெயர்களையே சொல்லி என்னை நீங்கள் வருத்தி விட்டீர்கள்; தயிர் சேர்ந்த பழஞ் சோற்றோடு பாற் சோறும் உங்களுக்குத் தந்து, திருப் பெயர்களாகிய சொற்களைக் கற்பித்ததற்குக் கைம்மாறாகச் சிறந்த நலத்தினை அநுபவிப்பித்தீர்; ஆதலால், நல்ல நீர்மையினை உடையீராய் இருந்தீர் என்கிறாள்.

வி - கு:—குயில் பைதல்காள்! அது உயிர்க்குக் காலன் என்று உம்மை யான் இரந்தேற்கு நீர் கண்ணன் நாமமே குழறிக் கொன்றீர் எனக் கூட்டுக. பண்புடையீரே என்பது, குறிப்பு மொழி.

ஈடு:—எட்டாம் பாட்டு. [1] சில குயில்களைக் குறித்து, திருப் பெயர்களைச் சொல்ல வேண்டா என்று நான் இரக்க, அதனையே சொல்லி நலிந்தீர்கோள்; உங்களை வளர்த்ததனால் ஆய பயன் பெற்றேன் என்கிறாள்.

உயிர்க்கு அது - [2]தோல்புரையே போமது அன்று; அது என்கிறாள், தன் வாயாலே சொல்லமாட்டாமையாலே. காலன் என்று - நலிகை அன்றிக்கே முடிக்கும் என்று. உம்மை - என் காரியத்தை இரந்து செய்கின்ற உங்களை. நான் - மறுக்க ஒண்ணாதவாறு, உங்களுக்குத் தாயான நான். இரந்தேற்கு - என் செல்லாமையாலே புகல் புகுந்த எனக்கு. தாயாக இருந்தும் உங்களை நியமிக்கவில்லை என்கிறாள். நீர் - என்னால் ஏவப்படுகின்ற நீங்கள். [3] புகல் புகுந்தவர்களைக் கொன்றவர்கள் ஆனீர்

1. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். 'வளர்த்ததனால் ஆய பயன் பெற்றேன்' என்றது, வெறுப்பிலே நோக்கு.

2. "உயிர்க்கு" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'தோல் புரையே' என்று தொடங்கி. "அது" என்றதற்கு, பாவம், 'தன்வாயாலே சொல்லமாட்டாமையாலே' என்பது. "அது" என்றது, கண்ணபிரானுடைய திருப்பெயரை.

3. "இரந்தேற்குக் கொன்றீர்" என்று கூட்டி, பாவம் அருளிச்செய் கிறார் 'புகல்புகுந்தவர்களை' என்று தொடங்கி.

கோள். குயில் பைதல்காள் - [1] உங்கள் இளமைப் பருவம் என் உயிரோடே போயிற்று! அன்றிக்கே, பருவம் நிரம்பாவிட்டாலும் தாய் என்ற வேறுபாட்டினை அறிய வேண்டாவோ? என்னுதல். 'நாங்கள் செய்தது என்?' என்ன, கண்ணன் நாமமே குழறிக் கொன்றீர் - [2] மாற்றாலே தீராதபடி நெஞ்சினைப் புண்படுத்தி வைக்கும் கிருஷ்ணன் திருப்பெயர்களையே விளங்காதவாறு சொல்லி முடித்தீர்கோள். மிருத சஞ்சீவனமான இராம குணங்களையும் ஒருகால் சொன்னால் ஆகாதோ என்பாள் 'கண்ணன் நாமமே' என்கிறாள்.

தயிர்ப் பழஞ் சோற்றொடு பால் அடிசிலும் தந்து சொல் பயிற்றிய நல்வளம் ஊட்டினீர் - தயிரும் பழஞ்சோறும், பாலும் சுடுசோறும் அவ் அவ் காலங்களிலே தந்து திருப்பெயர்களைக் கற்பித்த அதற்குக் கைம்மாறு செய்தீர்கோள்! நல்வளம் ஊட்டினீர் - நல்ல சம்பத்தை அநுபவிப்பித்தீர்கோள். என்றது, நான் காலந்தோறும் உங்களுக்கு வேண்டிய உணவுகளைக் கொடுத்துப் போந்தேன்; நீங்களும் இவ்விடங்களிலே வந்து நலிந்து போந்தீர்கோள் என்றபடி. [3] இக் குயில்களுக்கு அன்னதோஷம் பலித்துவிட்டதோ? என்கிறாள். பண்புடையீரே - சம்பந்தமும் அடக்கமும் கிடக்க, சால நீர்மை உடையீராய் இருந்தீர்கோள்! [4] காப்பாற்றுகிறவர்கள் விஷயத்தில் அருள் இல்லாதவர்களாய் இருந்தீர்கோள். (8)

935.

பண்புடை வண்டொடு தும்பிகாள்! பண் மிழற்றேன்மின்;
புண் புரை வேல் கொடு குத்தால் ஒக்கும் நும் இன் குரல்
தண் பெரு நீர்த் தடம் தாமரை மலர்ந்தால் ஒக்கும்
கண் பெரும் கண்ணன் நம் ஆவி உண்டு, எழ நண்ணினான்.

---

1. "பைதல்காள்" என்றதற்கு, இரண்டுவகையாகக் கருத்து அருளிச் செய்கிறார் 'உங்கள்' என்று தொடங்கியும், 'பருவம்' என்று தொடங்கியும். கேட்டினை அறியாத பருவம் என்பது முந்தியதற்குக் கருத்து. தாய் என்னும் வேறுபாடு அறியாத பருவம் என்பது இரண்டாவதற்குக் கருத்து

2. மாற்று - வியாதியை நீக்குவதற்குக் கொடுக்கும் மருந்து.

3. ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'இக்குயில்களுக்கு' என்று தொடங்கி. நான் இட்ட சோறு விஷமாய் விட்டதோ? என்பது பொருள். பலிபுக்கினுடைய அன்னத்தை உண்ணும் என்பது வேறும் ஒரு பொருள்.

4. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'காப்பாற்றுகிறவர்கள்' என்று தொடங்கி.

பொ - ரை:—பண்பையுடைய வண்டுகளோடு கூடிய தும்பிகளே! இசையைப் பாடாதீர்கள்; என்னை? எனின், நம்முடைய இனிய குரலானது புண்ணின் தொளையிலே வேலைக்கொண்டு குத்தினாற்போலே இராநின்றது; குளிர்ந்த பெரிய தண்ணீர் நிறைந்த குளமானது தாமரைகள் மலர்ந்தாற் போன்று இருக்கின்ற பெரிய திருக்கண்களையுடைய கண்ணபிரான் என் உயிரை முடித்துவிட்டுப் பிரிந்து போனான்.

வி - கு:—பண்பு - குணம். வண்டும் தும்பியும் வெவ்வேறு இனத்தைச் சார்ந்தவை. புரை - தொளை. எழநண்ணினான்: ஒரு சொல். பிரிந்தான் என்பது பொருள்.

ஈடு:—ஒன்பதாம் பாட்டு. [1] தேனைக் குடித்து மயங்கிப் பாடுகின்ற சில வண்டுகளையும் தும்பிகளையும் குறித்து, உங்கள் இசை எனக்குப் பொறுக்க ஒண்ணாததாய் இருந்தது; நீங்கள் பாடாதே கொள்ளுங்கோள்! என்கிறாள்.

பண்புடை வண்டொடு தும்பிகாள் - [2] நீர்மையுடைய வண்டோடு கூடின தும்பிகாள்! பண் மிழற்றேன்மின் - பண்மிக்க [3] ஆளத்தி வையாதே கொள்ளுங்கோள். 'பண்புரை' என்று பாடமானபோது, பண்பான உரையாய், முரலுதலைச் சொல்லுகிறது. அன்றிக்கே, பண்ணை முரலாநின்ற என்றுமாம். புண்புரை வேல் கொடு குத்தால் ஒக்கும் நும் இன் குரல் - [4] முன்னரே மற்றையவற்றின் குரல்களாலே புண்பட்டு அன்றோ இருக்கிறது: அதிலே வேலைக்கொடு குத்தினாற்போலே இராநின்றது உங்கள் குரல். தண் பெரு நீர்த் தடம் தாமரை மலர்ந்தால் ஒக்கும் பெரும் கண் கண்ணன் - குளிர்ந்த பெரிய நீரையுடைய பொய்கையிலே தாமரைப்பூ மலர்ந்தாற்போலேயாய்

---

1. முதல் இரண்டு அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. நீர்மையாவது, கானத்திற்குத் தகுதியான ஸ்தான மூர்ச்சனங்களை அறிகை என்பர் அரும்பதஉரைகாரர்.

3. ஆளத்தி - ஆலாபம்.

4. இவளுக்குப் புண் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'முன்னரே' என்று தொடங்கி.

"எண்ணிலா அருந்தவத்தோன் இயம்பிய சொல் மருமத்தில் எரிவேல் பாய்ந்த
புண்ணிலாம்பெரும்புழையில்கனல் நுழைந்தால்எனச்செவியில்புகுதலோடும்"
என்பது, கம்பராமாயணம் பாலகா. கையடைப் படலம்.

"வெந்ததோர் புண்ணின்கண் வேல் கொண்டு நுழைப்பான் போல்"
என்பது, கலித். 120.

அவ்வளவு அன்றிக்கே பெரிய கண்களையுடைய கிருஷ்ணன். நம் ஆவி உண்டு எழ நண்ணினன் - அவ் வடிவழகைக் காட்டி என்னை முடித்துப் பிரிந்து போனன். (9)

936.

எழ நண்ணி, நாமும் நம் வானநாடனோடு ஒன்றினோம்;
பழன நல் நாரைக் குழாங்கள்காள் ! பயின்று என் இனி ?
இழை நல்ல ஆக்கையும் பையவே புயக்கு அற்றது;
தழை நல்ல இன்பம் தலைப்பெய்து எங்கும் தழைக்கவே.

பொ-ரை :—வயல்களிலே தங்கி இருக்கிற சிறந்த நாரைக் கூட்டங்களே ! நாமும் இப் பூவுலகினை விட்டுப் புறப்பட்டு நம் பரமபத நாதனோடு சேர்ந்து பொருந்திவிட்டோம் ; ஆதலால், இனி, நீங்கள் கூட்டம் கூடி ஆலோசிப்பதனால் பயன் யாது ? ஆபரணங்களால் அழகு வாய்ந்திருக்கிற இந்தச் சரீரமும் நாளடைவில் பசை அற்று விட்டது; உலகம் எல்லாம் தழைத்த சிறந்த இன்பத்தைப் பெற்று வாழ்க என்கிறார்.

வி - கு :—எழ நண்ணி ஒன்றினோம் என்க. பைய - மெதுவாக ; முறையாக என்றபடி. தனீழ - தழைத்த.

ஈடு :—பத்தாம் பாட்டு. [1] திரள இருக்கிற நாரைக் குழாங்கள் தன்னை முடிப்பதற்கு ஆலோசிக்கின்றனவாகக் கொண்டு, 'நான் முடிந்தேன் : இனி, நீங்கள் திரண்டு பயன் என் ?' என்கிறாள்.

எழ நண்ணி - [2] போக்கிலே ஒருப்பட்டு. நாமும் நம் வான நாடனோடு ஒன்றினோம் - கடலைக் குளப்படியிலே மடுத்தாற்போலே தன்னை இலக்கு ஆக்கி, இத் தலையை வெறுந்தரை ஆக்கித் தன்னைக்கொண்டு அகன்றான். நாமும் அயர்வு அறும் அமரர்கள் அதிபதியோடே ஒரு மிடறு ஆனோம். [3] நித்தியசூரிகளும் அவனுமாக இருந்து நம்மை முடிக்க எண்ணினபடியே

1. "நாமும் நம் வான நாடனோடு ஒன்றினோம், நாரைக் குழாங்கள்காள் பயின்று என் இனி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். "பயின்று என் இனி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'ஆலோசிக்கின்றனவாகக் கொண்டு' என்கிறார்.

2. 'போக்கிலே ஒருப்பட்டு' என்றது, திருவடிகளைச் சார்வதிலே ஒருப்பட்டு என்றபடி.

3. "வான நாடு" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நித்திய சூரிகளும்' என்று தொடங்கி.

நாமும் இசைந்தோம். [1]அவன் முடிக்க நினைக்க, நாம் பிழைக்க எண்ணி, இடக்கைப்புரி முறுக்குகை தவிர்ந்து, நாமும் முடிகையிலே துணிந்தோம். [2]நித்தியசூரிகளும் அவன் நினைவினையே பின்பற்றுமவர்கள் ஆகையாலே, அவன் கருத்தே தங்கட்கும் கருத்து ஆக இருப்பர்கள் அன்றோ.

பழனம் நல் நாரைக் குழாங்கள்காள் - நீர் நிலங்களிலே வாழ்வனவாய்த் [3]தொடங்கின காரியம் முடிக்கவல்ல ஆற்றலையுடைத்தான நாரைக்குழாங்கள்காள்! பயின்று என் இனி - இனி நீங்கள் திரண்டு பயன் என்ன? [4]நான் அவன் கருத்தைப் பின் செல்லாத அன்று அன்றோ உங்கள் ஆலோசனைக்குப் பயன் உள்ளது? [5]முதலிகள் திரள் திரளாக இருந்து பெருமாளையும் பிராட்டியையும் சேர்ப்பதற்கு விரகு பார்த்தாற்போலே, இவை திரள் திரளாக இருந்து அவனையும் தன்னையும் பிரிப்பதற்கு விரகு பார்க்கின்றன என்று இருக்கிறாள். [6]'அவன் வேண்டுவாரைச் சேர்க்கையும், வேண்டாதாரை முடிக்கையும், திரியக்குக்களுக்குப் பணி' என்று இருக்கும் அன்றோ, இராமாவதாரத்தில் வாசனையாலே.

'வான நாடன், நாரைக் குழாங்கள்காள்!' - என்கையாலே [7]உபய விபூதியும் வேண்டுமோ ஓர் அபலையை முடிக்கைக்கு

1. "ஒன்றினோம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவன் முடிக்க' என்று தொடங்கி. இடக்கைப் புரி முறுக்குகையாவது, வலக்கை புரிமுறுக்குகைக்கு எதிராக இடக்கைப்புரியாக முறுக்குகை. அதாவது, மாறுபட்ட காரியத்தைச் செய்தல் என்றபடி.

2. நன்று; அருளுக்கு ஆழி போன்றவர்களான நித்தியசூரிகள் துன்புறுத்துவதற்கு ஒருப்படுவர்களோ? என்ன, 'நித்தியசூரிகளும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. 'தொடங்கின காரியம் முடிக்க வல்ல' என்றது, "நல்" என்ற சொல்லின் பொருள்.

4. பயன் இல்லையோ? என்ன, 'நான் அவன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. திரளாக இருந்து ஆலோசிக்கிறபடியைத் திருஷ்டாந்த மூலமாகக் காட்டுகிறார் 'முதலிகள்' என்று தொடங்கி.

6. பறவைகளாலே பிரிக்க முடியுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன் வேண்டுவாரை' என்று தொடங்கி. வடமொழியில் 'திரியக்கு' என்பது, விலங்குகளையும் பறவைகளும் குறிப்பதாம்.

7. உபய விபூதி - நித்தியவிபூதியும், லீலா விபூதியும் ஆகிய இரண்டு உலகங்கள். நித்திய விபூதி - பரமபதம்; லீலா விபூதி - சத்திய லோகம் முடிவாக உள்ள இவ் உலகங்கள். அபலை - பலம் இல்லாத பெண்.

என்பது தோற்றுகிறது. இழை நல்ல ஆக்கையும்-[1] ஆபரணத்தாலே அழகிதான சரீரம் என்னுதல்; ஆபரணம் பூண்டாற்போலே இருக்கிற சிறந்த சரீரம் என்னுதல். பையவே புயக்கு அற்றது-முறையாகப் பசை அற்றது என்னுதல்; முறையாகவே போகத் தொடங்கிற்று என்னுதல். புய்த்தல் - போதல் ஆதல்; புயக்கு என்று கவர்ச்சி ஆதல். தழை நல்ல இன்பம் தலைப்பெய்து எங்கும் தழைக்க - [2] ஈஸ்வர விபூதி நிறைவுற்று இருக்க வேண்டும் என்கிறாள். இதற்கு,[3] "'தாம் தாம் முடிய நினைப்பார் நாடு வாழ்க' என்பாரைப் போலே சொல்லுகிறாள்" என்று ஆளவந்தார் அருளிச்செய்வர். "நான் பட்ட பாடு நாடு படாது ஒழிய வேண்டும்" என்று எம்பெருமானார் அருளிச்செய்வர். "நான் முடிய என் துக்கம் கண்டு நோவுபடாதே உலகம் அடங்கப் பிழைக்கும் அன்றோ" என்று பட்டர் அருளிச்செய்வர். (10)

937.

இன்பம் தலைப்பெய்து எங்கும் தழைத்த பல் ஊழிக்குத்
தன் புகழ் ஏத்தத் தனக்கு அருள்செய்த மாயனைத்
தென் குருகூர்ச் சடகோபன் சொல் ஆயிரத்துள் இவை
ஒன்பதோடு ஒன்றுக்கும் மூஉலகும் உருகுமே.

பொ - ரை :— இன்பம் உண்டாகும்படியாக எல்லா இடங்களிலும் பரந்திருக்கின்ற தன்னுடைய கல்யாண குணங்களை, காலம் என்னும் ஒரு பொருள் உள்ளவரையிலும் துதிக்கும்படியாக எனக்குத் திரு அருள் புரிந்த மாயப்பிரானை, அழகிய திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபரால் அருளிச்செய்யப்பட்ட ஆயிரம் திருப்பாசுரங்களுள் இவை பத்துத் திருப்பாசுரங்கட்கும் மூன்று உலகங்களும் உருகாநிற்கும் என்றவாறு.

வி - கு :— தலைப்பெய்து - தலைப்பெய்ய; எச்சத்திரிபு. தழைத்த புகழ் என்றும், பல் ஊழிக்குப் புகழை ஏத்த, தனக்கு அருள்செய்த மாயன் என்றும் கூட்டுக.

---

1. 'ஆபரணத்தாலே அழகிதான சரீரம்' என்றது, முன் நிலையை நோக்கி.

2. 'ஈஸ்வர விபூதி நிறைவுற்று இருக்கவேண்டும் என்கிறாள்' என்பது, கருத்துப் பொருள்.

3. தான் முடிகிறவள், 'உலகம் இன்பம் நிறைந்து வாழவேண்டும்' என்பது என்? என்ன, இதற்கு மூன்றுவகையாக, பர்வம் அருளிச்செய்கிறார். அவற்றுள்; பட்டர் நிர்வாஹம், வெறுப்பிலே.

ஈடு:—முடிவில், [1] இத் திருவாய்மொழியின் பாசுரங்கள் நெஞ்சிலே படில், ஆரேனுமாகிலும் தரியார் என்கிறார்.

[2]எங்கும் தழைத்த இன்பம் தலைப்பெய்து-உலகம் எல்லாம் வெள்ளம் இட்ட எல்லை இல்லாத பிரீதியையுடையராய்க் கொண்டு. பல் ஊழிக்குத் தன் புகழ் ஏத்த-காலம் உள்ள தனையும் குணங்களை ஏத்தும்படி. தனக்கு அருள்செய்த-உலக மக்களில் வேறுபட்டவரான தமக்கு மயர்வுஅற மதி நலம் அருளிச்செய்தபடி. மாயனை - இவ் உலக மக்கள் நடுவே என்னை ஒருவனையும் விசேட கடாக்ஷம் செய்த ஆச்சரியத்தை உடையவனை. அங்ஙன் அன்றிக்கே, [3] இன்பம் தலைப்பெய்து எங்கும் தழைத்த தன் புகழ் ஏத்த பல் ஊழிக்குத் தனக்கு அருள் செய்த மாயனை என்று கொண்டு கூட்டி, அநுபவிப்பார்க்கு எல்லை இல்லாத ஆனந்தத்தை விளைப்பதாய் எங்கும் ஒக்கப் பரம்பின தன் கல்யாண குணங்களை, காலம் என்னும் ஒரு பொருள் உள்ளவரையிலும் நான் அநுபவிக்கும்படி செய்த மாயன் என்று பொருள் கூறலுமாம். இவர் "**குணங்களை அநுபவிக்கும் அநுபவத்தால் தரித்தார்**" என்கிறது, '**தன் புகழ் ஏத்தத் தனக்கு அருள்செய்த**' என்ற இதனைக் கொண்டே அன்றோ. [4] நித்திய சூரிகள் அநுபவத்தையும், தமக்கு அவர்களோடு ஒத்த சம்பந்தத்தையும் நினைந்து நோவுபட்டார்; என்றும் ஒக்க இழந்திருக்கிற இவ் உலக மக்கள் படியைப் பார்த்தவாறே, இந் நோவுதானே பேறாய்த் தோற்றிற்று.

---

1. நான்காம் அடியைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. முதல் அடியை ஆழ்வார்க்கு அடைமொழி ஆக்கியும், புகழ்க்கு அடைமொழி ஆக்கியும் இரண்டு வகையாக அருளிச்செய்கிறார். ஆழ்வார்க்கு அடையாகும் போது "எங்கும் தழைத்த இன்பம் தலைப்பெய்து" என்று சொற்களைப் பிரித்துக் கூட்டுக. புகழ்க்கு அடையாகும் போது, சொற்களை நின்ற முறையிலேயே வைத்துப் பொருள் கொள்க. முதலில் ஆழ்வார்க்கு அடை ஆக்கிப் பொருள் அருளிச்செய்கிறார் 'எங்கும் தழைத்த' என்று தொடங்கி.

3. இரண்டாவது பொருளை அருளிச்செய்கிறார் 'இன்பம் தலைப்பெய்து' என்று தொடங்கி.

4. "தன் புகழ் ஏத்தி" என்பதற்கு, அவனோடு கலந்து குறையும் செய்தாரோ? என்ன, 'நித்திய சூரிகள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

[1]'சடகோபன் சொல்' என்று படர்க்கையில் வைத்துக் கூறுகையாலே, 'தனக்கு அருள்செய்த' என்று படர்க்கையில் கூறலாம் அன்றோ; [2]"பகவானாகிய வால்மீகி ருஷி" என்னுமாறு போலே. ஒன்பதோடு ஒன்றுக்கும் - [3]'மேல் ஒன்பது பாசுரங்களிலும் உண்டான துக்கம் சுகம்' என்னும்படி துக்கம் மிக்க பத்தாம் பாசுரத்தையுடைய இவை. நினைப்பு ஊட்டுகிற பொருள்களாலே பிழைப்பில் நசையோடு நோவுபட்ட ஒன்பது பாசுரங்களோடே, பிழைப்பில் நசை அற்ற ஒரு பாசுரத்திற்கும். மூ உலகும் உருகும் - ஆரேனும் ஆகிலும் தரியார். [4]"என்னுடைய துக்க ஒலியைக் கேட்டு நாடு அழியலாகாது' என்றவர்க்கு, பின்னையும் நாட்டிலுள்ளார்க்கு நலிந்து வருந்துவதே பலித்துவிட்டது. 'எங்கும் தழைத்த இன்பம் தலைப்பெய்து பல் ஊழிக்குத் தன்புகழ் ஏத்த, தென்குருகூர்ச் சடகோபன், தனக்கு அருள்செய்த மாயனை, சொல் ஆயிரத்துள் இவை ஒன்பதோடு ஒன்றுக்கும் மூஉலகும் உருகும். (11)

—:o:—

திருவாய்மொழி நூற்றந்தாதி

இன் உயிர்மால் தோற்றினதிங் கென்நெஞ்சில் என்றுகண்ணால்
அன்றவனைக் காண எண்ணி ஆண்பெண்ணாய்—பின்னைஅவன்
தன்னை நினைவிப்பவற்றால் தான்தளர்ந்த மாறன்அருள்
உன்னுமவர்க்கு உள்ளம் உருகும்.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. 'எனக்கு அருள் செய்த' என்னுமல், "தனக்கு அருள் செய்த" என்றது, என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "சடகோபன் சொல்" என்று தொடங்கி.

2. அதற்கு மேற்கோள் காட்டுகிறார் 'பகவானாகிய' என்று தொடங்கி. "வால்மீகிः பகவாந் ருஷிः" என்பது. ஸ்ரீராமா.

3. "ஒன்பதோடு ஒன்றுக்கும்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'மேல் ஒன்பது பாசுரங்களிலும்' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'நினைப்பு ஊட்டுகிற' என்று தொடங்கி.

4. மேல் பாசுரத்தில் "தழை நல்ல இன்பம் தலைப்பெய்து எங்கும் தழைக்கவே" என்ற ஈற்றடிக்கு அருளிச்செய்த மூவர் நிர்வாஹத்திலே பட்டருடைய நிர்வாஹத்தை அடி ஒற்றி இங்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'என்னுடைய' என்று தொடங்கி.

ஆறாந் திருவாய்மொழி — "உருகுமால்"

முன்னுரை

ஈடு :—[1]" எழ நண்ணி நாமும் நம் வான நாடனோடு ஒன்றினோம்" என்று தம் இருப்பில் நசை அற்றுச் சொன்ன வார்த்தை அன்றோ, மேல்; [2] இவ்வளவில் வந்து முகங்காட்டி இவரைப் பெறுதல், இல்லையாகில் இழத்தல் செய்யவேண்டும் படியான நிலை ஆயிற்று. [3] இந் நிலையிலே, திருவடி சென்று கிட்டினபோது, முன்பு பலநாள் பட்ட துக்கமும் கிடக்கச் செய்தே, பெருமாளும் வாராது இருக்க, [4]"நான் அங்கு ஸ்ரீராம பிரானுடைய திருமாளிகையில் பன்னிரண்டு வருடங்கள் முடிய மனிதர்களுக்கு உரிய இன்பங்களை அநுபவித்தவளாய் எல்லா வித விருப்பமும் நிறையப் பெற்றவளாய் இருந்தேன்" என்கிறபடியே, பன்னிரண்டு ஆண்டு பெருமாளும் தானும் ஒரு படிப்படக் கலந்த கலவி வந்து பிராட்டியின் நினைவிற்கு விஷயமானாற் போலே, " இருத்தும் வியந்து" என்ற திருவாய்மொழியில் தலைதடுமாறாகப் பிறந்த கலவி வந்து நினைவிற்கு விஷயம் ஆயிற்று. [5] அதற்கு அடி, இவர் மேற்கொண்ட கைங்கரியத்தை முடியச்செய்து தலைக்கட்டுகைக்குத் தகுதியான ஜீவன அதிருஷ்டமாவது; அன்றிக்கே, இவர் சொல்லக் கேட்கையிலே பாரித்துக்கொண்டு இருக்கிற ஈஸ்வரனுடைய பாக்கியமாவது; அன்றிக்கே, பகவானை அநுபவிக்கிற அநுபவத்தால்

---

1. மேல் திருவாய்மொழியில் கூறிய பொருளை அநுவதித்துக்கொண்டு இயைபு அருளிச்செய்கிறார் ' எழ நண்ணி ' என்று தொடங்கி.

2. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் ' இவ்வளவில் ' என்று தொடங்கி. என்றது, மேல் திருவாய்மொழியில் இவர்க்கு உண்டான வியசனம் சொல்லும் தரம் அன்று என்றபடி.

3. இத் திருவாய்மொழியில் கூறப்படும் பொருளை அருளிச்செய்கிறார் ' இந்நிலையிலே ' என்று தொடங்கி.

திருவடியைக் காண்கையாலே மேலே போந்த விஷயங்கள் பிராட்டிக்கு நினைவு வரக் கூடும்; இவர்க்குக் கூடும்படி என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் ' நான் அங்கு ' என்று தொடங்கி.

4. ஸமா த்வாதஶ தத்ர அஹம் ராகவஸ்ய நிவேஶநே
புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாம ஸம்ருத்திநீ.

என்பது, ஸ்ரீராமா. சுந். 36 : 11.

5. இவ்விடத்தில் அதிர்ஷ்டம் நினைவிற்குக் காரணம் என்று கூறத் திருவுள்ளம்பற்றி, அதனை மூன்று வகையாகக் காட்டுகிறார் ' அதற்கு அடி ' என்று தொடங்கி.

உண்டான பிரீதி உள்ளடங்காமை வழிந்து புறப்பட்ட இவர் சொற்களைக் கேட்டுப் பகவத் விஷயத்திலே ருசிபிறக்க இருக்கிற மக்களுடைய பாக்கியமாவது. இப்படி, "இருத்தும் வியந்து" என்ற திருவாய்மொழியில் பேசப்பட்ட கலவி வந்து நினைவிற்கு விஷயம் ஆயிற்று.

[1]ஸமா த்வாதஸ - பிள்ளாய்! இன்று இங்கே வெறுந்தறையாய் இருக்கிற நான், எங்கள் மாமனார் மாளிகையிலே பன்னிரண்டு ஆண்டு ஒருபடிப்பட இராம குணங்களை விளைநீர் அடைத்துக் கொண்டேன்காண்! என்றாள் அன்றோ.

[2] இங்கு, "இருத்தும் வியந்து" என்ற திருவாய்மொழியில் "மூ உலகும் தன் நெறியா வயிற்றிற்கொண்டு, சிறியேனுடைச் சிந்தையுள் நின்றொழிந்தான்" என்கிறபடியே, புறம்பு எங்கும் முறையிலே காரியம் செய்தவன், இவர் ஒருவர் அளவிலும் அன்றோ [3] முறைகெடக் காரியம் செய்தது; [4] அப்படிப்பட்ட அக் கலவிதான், இப்பொழுது ஒரு நினைவின் அளவிலே இருக்கை அன்றிக்கே, அப்பொழுது உண்டான அக் கலவி இன்பத்தை இப்பொழுதும் அநுபவிப்பதாக ஒரு புத்தி பிறந்தது; என்றது, [5]அப்படியே, மேன்மையுடையவன், அம்மேன்

---

1. மேலே காட்டிய இராமாயண சுலோகத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஸமா த்வாதஸ' என்று தொடங்கி.

2. "வீற்றிருந்து" என்பது முதலான திருவாய்மொழிகளிலும் கலவியைப் பற்றிக் கூறி இருக்க, "இருத்தும் வியந்து" என்ற திருவாய்மொழியில் அநுபவம் நினைவிற்கு விஷயம் ஆயிற்று என்பதற்குக் காரணம் என்? என்ன, அங்குக் கூறியதும் இங்குக் கூறியதும் ஒரே பொருள் ஆகையாலே என்கிறார் 'இங்கு, இருத்தும் வியந்து' என்று தொடங்கி.

3. 'முறைகெடக் காரியம் செய்தது' என்றது, இவரைத் தலைவராக வைத்துத் தான் அடியவனாக இருந்து காரியம் செய்தான் என்பதனைத் தெரிவித்தபடி. அத் திருவாய்மொழியிலும் முறை கெடக் காரியம் செய்தான் என்றார்; அப்படியே, இங்கும், "அறிகிலேன் தன்னுள் அனைத்து உலகும் நிற்க" என்று தொடங்கி, "சிறிய என் ஆர் உயிர் உண்ட" என்கிறார்; ஆகையால், அங்கே சொன்னதும் இங்கே சொல்லப்படுவதும் ஒரே பொருள் ஆகையாலே "இருத்தும் வியந்து" என்ற திருவாய்மொழியில் அநுபவம் இங்கு நினைவிற்கு விஷயமாயிற்று என்றபடி. இது, இத் திருவாய்மொழியில் வருகிற "நினைதோறும்" என்றதிலே நோக்கு.

4. "இருத்தும் வியந்து" என்ற திருவாய்மொழியின் அநுபவம் நினைவிற்கு விஷயமானால் சுகரூபமாகக் கூடுமோ? என்ன, 'அப்படிப்பட்ட' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. மேற்கூறியதனை விவரணம் செய்கிறார் 'அப்படியே' என்று தொடங்கி. 'அம்மேன்மையும்' என்றது, "இருத்தும் வியந்து" என்ற திருவாய்மொழியில் கூறப்பட்ட மேன்மையும் என்றபடி. இத் திருவாய்மொழி

மையும் கிடக்கச் செய்தே தாழ நின்று கலந்த குணத்தையும் வடிவழகையும் சொல்லி, அதுதான் 'இப்பொழுதைய அநுப வமே' என்னும்படியாய் இருப்பது ஒரு புத்தி பிறந்து, அவ னுடைய சீலகுணத்தை நினைக்கும் நினைவாலே உருகுகிறார் என்றபடி.

[1]'கடலைத் தறை காண்பாரைப் போலே, "இருத்தும் வியந்து" என்ற திருவாய்மொழியின் அநுபவத்தை இதிலே கொண்டு வந்து சேர்ப்பதே நம் முதலிகள்!' என்று ஈடுபட்டு அருளிச்செய்வர் நஞ்சீயர். [2]அப்ராப்தியும் கிடக்கச்செய்தே சீலகுணத்தை நினைக்கும் நினைவாலே உருகுகிறார் ஆயிற்று. [3]'பிரீதி இன்மையை உட்கொண்ட குண அநுசந்தானம் காண்' என்று இதற்கு ஆளவந்தார் அருளிச்செய்யும் சந்தை.

[4]"பஹவோ ந்ருப - அரசனே! (குணங்கள்)பல" - [5]சக்ர வர்த்தி, 'பெருமாளுக்குத் திருமுடி சூட்டவேண்டும்' என்று கோலி, 'நாம் அறுபதினாயிரம் ஆண்டுகூட ஒருதலை மிதிக்க, ஒருதலை கிளர இப்படி வருந்தி அடிப்படுத்தின இராச்சியத்தை இன்று சிறியவன் தலையில் வைத்தால் இது பொறுக்குமோ?'

யில் வருகிற "நான் உனக்கு ஆட்செய்யும் நீர்மை" என்றதனைத் திருவுள்ளம் பற்றித் 'தாழ நின்று கலந்த குணத்தையும்' என்கிறார். "கார்முகில் வண்ணன்" என்பது போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றி 'வடிவழகையும் சொல்லி' என்கிறார்.

1. "இருத்தும் வியந்து" என்ற திருவாய்மொழியிற் கூறப்பட்டது இத் திருவாய்மொழியில் நினைவிற்கு விஷயமாயிற்று என்று அருளிச்செய்த தற்கு ஆப்த சம்வாதம் காட்டுகிறார் 'கடலை' என்று தொடங்கி.

2. மேல் திருவாய்மொழியிலே தன்னைக் காணவேண்டும் என்று விசனப்பட்டவர்க்கு, இங்குத் தன்னை அநுபவிப்பித்தானோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அப்ராப்தியும்' என்று தொடங்கி. 'அப்ராப்தி' என்றது, மேல் திருவாய்மொழியாகிய "இன் உயிர்ச் சேவலில்" கூறிய வியசனமும் கிடக்கச் செய்தே என்றபடி. அப்ராப்தி - பெறாத தன்மை.

3. மேலே கூறியதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'பிரீதி இன்மையை' என்று தொடங்கி. இதற்கு - இத் திருவாய்மொழிக்கு.

4. குணங்கள் ஈடுபடுத்தும் என்பதற்குப் பிரமாணங்கள் காட்டுகிறார் 'பஹவோ ந்ருப' என்று தொடங்கி.

> தே தம் ஊசுः மஹாத்மாநம் பௌர ஜாநபதைः ஸஹ
> பஹவோ ந்ருப கல்யாண குணாः புத்ரஸ்ய ஸந்தி தே.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 2: 26.

5. இச் சுலோகத்திற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'சக்ரவர்த்தி' என்று தொடங்கி.

என்று பார்த்து, 'இதனை நாட்டோடே சேர விசாரித்துச் செய்வோம்' என்று, அரசர்கள் கூட்டத்தோடே கூட்டின இடத்து, [1]"மக்கள் ஆரவாரித்த ஆரவாரமானது அரண்மனையைக் கிடுகிடுகச் செய்தது" என்கிறபடியே, சக்ரவர்த்தி மாளிகை அழித்துச் செய்யவேண்டும்படி ஆரவாரிக்க, அதனைக் கேட்டு, 'நாம் நினைத்த காரியம் நன்கு பலித்தது; ஆனாலும், இவர்கள் நினைவினை இவர்கள் வாக்காலே சொல்லக் கேட்டால் ஆகாதோ?' என்று நினைத்து, "வாரீர்கோள்! [2]"நான் அற நெறியிலே தேசத்தை ஆண்டு வரும்போது இளவரசனைப் பார்க்கவேண்டும் என்று எவ்வாறு விரும்புகிறீர்கள்?" என்கிறபடியே, அறுபதினாயிரம் ஆண்டு சிறியதைப் பெரியது நலியாதபடியாகப் பூமிப்பரப்பு அடைய நோக்கிக்கொண்டு, [3]"எல்லா உலகங்கட்கும் நன்மையைச் செய்கிற என்னால் இந்த உடல் வெண் கொற்றக் குடையின் நிழலில் கிழம் ஆக்கப் பட்டது" என்கிறபடியே, "முத்தின் குடை நிழலிலே திரிந்து எனக்கு என்று ஒரு சுகம் கோலாதே உங்களைப் பாதுகாக்கும் தர்மத்தையே செய்துகொண்டு போந்தேன்: நான் ஒரு வார்த்தை கேட்ட இடத்து 'இப்போது நீ இருக்கச்செய்தே வேண்டுமோ? செய்யவேண்டிய காலத்திலே செய்து கொள்ளுகிறோம்' என்னுதல்; அன்றியே, 'காரியம் ஆகில் செய்யலாகாதோ?' என்று வார்த்தை சொல்லுதல் அன்றிக்கே, [4]படுகொலை அடித்தவனைத் தப்ப ஓர் அறவன் கீழே ஒதுங்க நினைப்பாரைப் போலே, என்னைவிட்டு என் மகனே அமையும் என்று நீங்கள் விரும்புகைக்கு நான் உங்களுக்குச் செய்த தீங்கு என்?" என்ன, நீ எங்களுக்குச் செய்த தீங்கு ஒன்றும் இல்லை; உன் மகனுடைய குண அபராதங்கள் காண் இதற்கு அடி; நீ நோக்கிக்

1. ஸ்நிக்தோ நுநாதஃ ஸஞ்ஜஜ்ஞே தேத்ர ஹர்ஷ ஸமீரிதஃ
ஜநௌகோத்குஷ்ட ஸந்நாதோ விமாநம் கம்பயந்நிவ.
என்பது, ஸ்ரீராமா. அயோத். 2: 18.

2. கதம்நு மயி தர்மேண ப்ருதிவீம் அநுஶாஸதி
பவந்தோ த்ருஷ்டும் இச்சந்தி யுவராஜம் மமாத்மஜம்.
என்பது, ஸ்ரீராமா. அயோத். 2: 25.

3. இதம் ஶரீரம் க்ருத்ஸ்நஸ்ய லோகஸ்ய சரதா ஹிதம்
பாண்டரஸ்ய ஆதபத்ரஸ்ய சாயாயாம் ஜரிதம் மயா.
என்பது, ஸ்ரீராமா. அயோத். 2: 7.

4. படுகொலை அடித்தவனை - கொலையிலே பட்டு விழும்படி அடித்தவனை; கொலைஞனை,

கொண்டு போந்த படிகளில் ஒரு குறை இல்லை; குணவானாய் இருப்பான் ஒரு புத்திரனைப் பெற்று நாட்டினைப் படுகுலை அடித்தாய் காண்! பஹவ:- உன் அளவு அன்றுகாண் காக்கும் தர்மத்தில் அவர்க்கு உண்டான பாரிப்பு. [1] "பொன் முதலிய தாதுக்களுக்கு இமயமலையைப் போன்று, சௌலப்யம் முதலான குணங்களுக்கு எல்லாம் இருப்பிடமாக இருப்பவன்" என்கிறபடியே, நாட்டிலே சிலரைக் குணம் இல்லாதவர் என்று பழித்தும், சிலரைக் குணவான்கள் என்று கொண்டாடுகிறதும் 'இன்ன ஆகரத்தின் பொன்' என்று விலை பெறுமாறு போலே, 'இன்னார் இடத்திலே கிடக்கிற குணம்' என்று ஆயிற்றுப் புறம்பு விலைபோவது. [2] "சிறந்த குணம் உள்ளவர் ஆகையாலே மக்களின் மனத்தினைக் கடைந்தவர் போன்று ஆனார்" என்பது ஸ்ரீராமாயணம்.

938.

உருகுமால் நெஞ்சம் உயிரின் பரம் அன்றி;
பெருகுமால் வேட்கையும் என்செய்கேன் தொண்டனேன்;
தெருவு எல்லாம் காவி கமழ் திருக்காட்கரை
மருவிய மாயன்தன் மாயம் நினைதொறே?

பொ - ரை :—தெருவுகளில் எல்லாம் நீலோற்பல மலர்களின் வாசனை வீசுகின்ற திருக்காட்கரை என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளி இருக்கின்ற இறைவனுடைய மாயங்களை நினைக்கும்போது எல்லாம் மனம் உருகுகின்றது; உயிராலும் பொறுக்க அரிதாம்படி ஆசையும் பெருகுகின்றது; அடியேனாகிய யான் என் செய்வேன்?

---

1. ஜ்ஞாந விஜ்ஞாந ஸம்பந்ந: நிதேஸே நிரத: பிது:
தாதூநாமிவ ஸைலேந்த்ரோ குணாநாம் ஆகரோ மஹாந்.

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 13 : 20. இது, வாலியைப் பார்த்துத் தாரை கூறியது.

2. குணம் ஈடுபடுத்தும் என்பதற்கு வேறும் ஒரு பிரமாணம் காட்டுகிறார் 'சிறந்த குணம்' என்று தொடங்கி.

விராஜயந் ராஜ ஸுத: ராஜமார்க்கம் நரை: வ்ருதம்
ஹ்ருதயாநி ஆமமந்தேவ ஜநஸ்ய குண வத்தயா.

என்பது ஸ்ரீராமா. அயோத். 26 : 2.

இங்குக் கம்பராமாயணம் அயோத்யாகாண்டம் மந்திரப்படலத்து 32-முதல் 47-முடிய உள்ள செய்யுட்களைப் படித்து இன்புறல் தகும்.

வி - கு :—நினைதொறும் நெஞ்சம் உருகும்; உயிரின் பரம் அன்றி வேட்கை பெருகும்; தொண்டனேன் என் செய்கேன்? என்க. தெருவு எல்லாம் - எல்லாத் தெருவுகளிலும் என்னலுமாம்.

ஈடு :—முதற்பாட்டு. [1] திருக்காட்கரையில் எம்பெருமானுடைய ஆச்சரியங்களான செயல்களை நினைதொறும் என் மனம் உருகாநின்றது என்கிறார்.

உருகுமால் நெஞ்சம்-[2] அநுபவத்துக்கு முதல் கருவியான மனம் உருகாநின்றது. [3] அநுபவத்துக்கும் அநுபவித்துச் சுகம் பெறுதற்கும் மனம் வேண்டும் அன்றோ. என்றது, [4] நீந்தப் புக்கவனுக்கு வாய்கரையிலே தெப்பம் ஒழுகுமாறுபோலே, கருவியான மனம் உருகாநின்றது என்றபடி. [5] "தொழுது எழு" என்கைக்கும், "நீயும் நானும் இந் நேர் நிற்கில்" என்கைக்கும் மனம் வேண்டுமே. [6] எதிர்த்தலையை உண்டாக்கிக் கலக்க அறியான் காணும்! கலப்பதற்கு இரண்டு தலையும் வேண்டும் என்று இரான். உயிரின் பரம் அன்றிப் பெருகுமால் வேட்கையும் - உயிரால் பொறுக்க ஒண்ணாதபடி ஆசை பெருகாநின்றது. பிள்ளாய்! அணு அளவினதான இவ் உயிரின் அளவு அன்று; ஆற்றுப்பெருக்குப் போன்று மேன்மேல் எனப் பெருகாநின்றது என்பார் 'பெருகும்' என நிகழ் காலத்தால் கூறுகிறார். ஆல் என்பது, துக்கத்தின் மிகுதியைக்

---

1. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. மற்றை உறுப்புக்களும் உருகாநிற்க, மனத்தை மாத்திரம் விதந்து கூறுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அநுபவத்துக்கு' என்று தொடங்கி.

3. மனத்திற்கு, முதல் கருவியாம் தன்மை யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அநுபவத்துக்கும்' என்று தொடங்கி.

4. அநுபவத்திற்குக் கருவியான மனம் உருகினால் அநுபவிக்க விரகு இல்லை என்பதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'நீந்தப் புக்கவனுக்கு' என்று தொடங்கி. வாய்கரை - ஆற்றின் அருகு

5. அநுபவத்துக்கும் அநுபவித்துச் சுகம் பெறுவதற்கும் முறையே இரண்டு பிரமாணம் காட்டுகிறார் 'தொழுது எழு' என்றும், 'நீயும்' என்று தொடங்கியும். 'தொழுது எழு' என்பது, திருவாய்மொழி, 1. 1 : 1. 'நீயும்' என்பது, திருவாய்மொழி, 1. 10 : 6.

6. "உருகும் ஆல்" என்பதிலே உள்ள "ஆல்" என்பதற்கு, கருத்து அருளிச்செய்கிறார் 'எதிர்த்தலையை' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'கலப்பதற்கு' என்று தொடங்கி.

காட்டுகிறது. என்றது, [1] 'நெஞ்சம் உருகுமால், வேட்கையும் பெருகுமால்' என்று, தம்மால் அடக்க ஒண்ணாத துக்கம் தோற்றச் சொல்லுகிறார் என்றபடி.

என் செய்கேன் - [2] மனத்தினை உருகாமல் கரை கட்டுவனோ? வேட்கை பெருகாமல் தகைவனோ? இவற்றுக்கு அடியான அவன் குணங்களைத் தவிர்ப்பனோ? தொண்டனேன் - அதற்கு அடியான என் ஆசையின் மிகுதியைத் தவிர்ப்பனோ? [3] ஆசை, எட்டாதது என்று கைவாங்க ஒட்டுகிறது இல்லை; [4] அவன் அழகு முதலிய மிக உயர்ந்த குணங்கள், மறந்தும் தரித்திருக்க ஒட்டுகிறது இல்லை. தெருவு எல்லாம் காவி கமழ் - [5] நெஞ்சு உருகுவதற்கும் வேட்கை பெருகுவதற்கும் காரணம் சொல்லுகிறது: குறுந்தெரு என்று அணைகட்ட ஒண்ணாதபடி குறுந்தெருவோடு நெடுந்தெருவோடு வாசி அறச் செங்கழுநீர் மலர்களின் வாசனை பரக்கிறபடி. அன்றிக்கே, [6] ஊரோடு சேர்ந்த பொய்கைகள் ஆகையாலே, உள்ளோடு புறம்போடு வாசி அற வாசனை அலை எறிகிறபடி என்னுதல். தெருவில் ஒரு வாசனை, உள்ளே "ஸர்வகந்தః". கந்தம் - வாசனை. திருக்காட்கரை மருவிய - இதனால், [7] பரத்துவத்திலும் அவதாரத்திலும்

---

1. "நெஞ்சம் உருகுமால்" என்று தொடங்கும் வாக்கியத்திற்குக் கருத்து, ஒரு சீலம் இருந்தபடி என்? என்று ஈடுபட்டு மனம் உருகுதலையும், இந்தச் சீலம் முதலான குணங்களை மேலும் மேலும் அநுபவிக்க வேண்டும் என்று ஆசை பெருகுதலையும் தம்மால் அடக்க முடியாமையால் துக்கம் மிகுகின்றது என்பது.

2. இதற்கு, தம்மால் செய்யக்கூடிய மாற்று, தம்மிடத்தில் ஒன்றும் இல்லை என்பதனை மூன்று வாக்கியங்களால் விவரணம் செய்கிறார் 'மனத்தினை' என்று தொடங்கி. "மாயன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அவன் குணங்களை' என்கிறார்.

3. ஆயின், கைவாங்கினாலோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆசை' என்று தொடங்கி.

4. ஆயின், மறந்தாலோ? என்ன, 'அவன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'நெஞ்சு' என்று தொடங்கி. "தெருவு" என்பதற்குக் குறுந் தெருவு என்றும், "எல்லாம்" என்பதற்கு நெடுந் தெருவு என்றும் பொருள்.

6. "தெருவு எல்லாம்" என்பதற்கு வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'ஊரோடு' என்று தொடங்கி. இப் பொருளில், தெருவு என்பதற்கு, புறம் என்றும், எல்லாம் என்பதற்கு, உள் என்றும் பொருள். ஆக, உள்ளும் புறம்பும் வேற்றுமை அற வாசனை வீசுகிறது என்றபடி. "ஸர்வகந்தః" என்றது, இறைவனை.

7. "காட்கரை" என்றதனாலே பரமபதத்தில் வேறுபாடு. "மருவிய" என்றதனாலே அவதாரத்தில் வேறுபாடு.

ஏற்றம் சொல்லுகிறது. [1] பரத்துவம், நெடுங்கை நீட்டு; அவதாரம், காலாவதி உடைத்து. மாயன் - அழகு, சீலம் முதலியவைகளாலே பிறரைப் பிச்சு ஏற்ற வல்லவன். மாயம் - கிட்டின போது தாழ நின்று செயல்களைச் செய்தபடி. என்றது, [2] குறைவாளர் நிறைவாளரைப் பற்றிப் பின் தொடருமாறு போலே ஆயிற்றுத் தான் செயல்களைச் செய்தபடி என்றவாறு.

நினைதொறே-[3] ஊரை நினையும்தோறும், அழகினை நினையும் தோறும், ஓர் ஊரும் வடிவும் இல்லாதாரைப் போலே தாழ நின்ற சீலத்தன்மையை நினையும்தோறும். அன்றிக்கே, நினைதொறே - [4] எத்தனை காலம் நினைக்கப்புக்கார்? எத்தனை காலம் மீண்டார்? [5] ஒன்றோடு ஒன்று சேராதன நூறாயிரத்தை அநுபவிப்பிக்க வல்லன் அவன்; ஒரு குணத்தையே காலம் என்னும் ஒரு பொருள் உள்ளவரையிலும் கால் தாழ்ந்து கணம்தோறும் புதுமை பிறந்து அநுபவிக்க வல்லர் இவர்; [6] "அப்பொழுதைக்கு அப்பொழுது என் ஆரா அமுதம்" என்னுமவர் அன்றோ. (1)

---

1. பரத்துவத்திற்கும் அவதாரத்துக்கும் குற்றம் சொல்லுகிறார் 'பரத்துவம்' என்று தொடங்கி.

2. தாழ நின்று செய்வதன் எல்லையின் முடிவினைக் காட்டுகிறார் 'குறைவாளர்' என்று தொடங்கி.

3. "நினைதொறும்" என்பதற்கு, நினைவில் வேறுபாடு யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஊரை' என்று தொடங்கி. 'தொறும்' என்பது, காலப் பன்மையையும், இடப் பன்மையையும் காட்டும் ஓர் இடைச்சொல்.

4. "நினைதொறும்" என்பதற்கு, மேலே, விஷயங்களின் வேறுபாட்டாலே வந்த நினைவின் வேறுபாடுகள் என்று பொருள் அருளிச்செய்தார்; இங்கே, "மாயம் நினைதொறும்" என்ற பதங்களைத் திருவுள்ளம்பற்றி, ஒரு விஷயத்தையே அன்பின் பாரவஸ்யத்தாலே நினைக்கப் புகுவது, மாட்டாது ஒழிவது, பின்னையும் நினைக்கப் புகுவது, ஈடுபாட்டாலே மாட்டாதொழிவதாய் இப்படி வருகின்ற நினைவு வேறுபாடுகளை என்று கூறத் திருவுள்ளம்பற்றி "நினைதொறும்" என்கிறார் என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'எத்தனைகாலம்' என்று தொடங்கி.

5. இப்படி முடியச் செல்லுகைக்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒன்றோடு' என்று தொடங்கி.

6. அப்படி அநுபவிப்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'அப்பொழுதைக்கு' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 2. 5 : 4.

939.

நினைதொறும் சொல்லும்தொறும் நெஞ்சு இடிந்து உகும்;
வினை கொள் சீர் பாடிலும் வேம் எனது ஆர் உயிர்;
சுனைகொள் பூஞ்சோலைத் தென்காட்கரை என் அப்பா !
நினைகிலேன் நான் உனக்கு ஆள்செய்யும் நீர்மையே.

பொ-ரை :—தடாகங்களையுடைய அழகிய சோலைகள் சூழ்ந்த அழகிய திருக்காட்கரையில் எழுந்தருளியிருக்கின்ற என் அப்பனே! பாபங்களைப் போக்குகின்ற உன் கல்யாண குணங்களை நினைக்கும்தோறும் மனமானது கட்டுக் குலைந்து, சொல்லும் தோறும் நீராய்க் கரைகிறது; பாடும்போது எல்லாம் என் அரிய உயிரானது வேகாநின்றது; ஆதலால், நான் உனக்கு அடிமையைச் செய்யும் தன்மையை நினைக்க முடியவில்லை.

வி-கு:—அப்பா! வினைகொள் சீரை நினைதொறும் நெஞ்சு இடிந்து, சொல்லும் தொறும் நெஞ்சு உகும்; பாடிலும் எனது ஆர் உயிர் வேம்; ஆதலால், ஆட்செய்யும் நீர்மையை நினைகிலேன் என்க.

ஈடு :—இரண்டாம் பாட்டு. [1] திருக்காட்கரையில் எம்பெருமானைக் குறித்து, உன்னோடு நான் கலந்த கலவியை நினைக்க முடியாதவனாக இருக்கிறேன் என்கிறார்.

நினைதொறும் - [2] நினைக்க என்று தொடங்குவர்; அந்நினைவு மாறாதே செல்ல ஒண்ணாதபடி பலக்குறைவு மிகும், ஆனாலும் மறக்கமாட்டார்; மீண்டும் நினைக்க என்று தொடங்குவர்; தலைக்கட்டமாட்டார்; எத்தனைகாலம் நினைக்கப் புக்கார்? எத்தனை காலம் மீண்டார்? சொல்லும் தொறும் நெஞ்சு இடிந்து உகும் - நினைக்கவே முடியாத பொருளைச் சொல்ல ஒண்ணாது என்னுமிடம் சொல்லவேண்டா அன்றே. பின்னைச் சொல்லும்படி என்? என்னில், [3] "மனம் முன்னே வார்த்தை பின்னே" என்னும் கணக்கு இன்றிக்கே, "குறளாகிய, வஞ்சனே! என்னும் எப்போதும் என் வாசகம்" என்கிறபடியே, இவருடைய

1. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. "நினைதொறும்" என்பதற்கு, நினைவில் வேறுபாடு யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'நினைக்க' என்று தொடங்கி.

3. "மநঃ பூர்வோ வாக் உத்தரঃ" என்பது, பிரமாணம்.
'குறளாகிய' என்பது, திருவாய்மொழி, 3. 8 : 2.

நாவானது எப்போதும் பேசா நிற்குமே; அந்த வாசனையாலே மனத்தொடு படாமலே சொல்லாநிற்பர்; [1] அதுதான் செவி வழியாலே உள்ளே புக்கு ஊற்றிருந்து, குணங்களால் மேம்பட்ட இறைவனுடைய விஷயமாகையாலே மனத்தினை அழிக்கும். நெஞ்சு இடிந்து உகும் - மனம் கட்டு அழிந்து நீர் ஆகாநின்றது. என்றது, [2]பெருக்காற்றின் கரை இடிந்து பின் நீராய்க் கரைந்துபோமாறு போலே, ஓர் உருவம் ஆக்கிக் காண ஒண்ணாதபடி உக்குப் போகாநின்றது என்றபடி.

வினை கொள் சீர் பாடிலும் எனது ஆர் உயிர் வேம்-[3]பாபங்களைப் போக்குகின்ற கல்யாண குணம். எல்லாருடைய துக்கங்களையும் போக்குகின்ற குணங்கள், என் ஒருவனையும் அழியாநின்றன. அன்றியே, சீர் என்று சீலமாய், வினை என்று செயலாய், அதாவது, சீலத்தின் காரியமாய்த் தாழ நின்று செய்த செயல்கள் என்னுதல். [4] "சுக்கிரீவனை நாதனாக விரும்புகிறார்" என்னக்கடவது அன்றோ. பாடிலும் - [5]அடைவுபடப் பேசுமது ஒழிய, அன்பினாலே பாடுவது ஒன்று உண்டு; அதனைச் செய்யிலும். வேம் எனது ஆர் உயிர் - மனத்தினை அன்றிக்கே, எரிக்க முடியாத உயிரையும் எரிக்கின்றது. [6] எல்லாவற்றுக்கும் குளிர்த்தியைப் பண்ணக்கடவதான பனி, தாமரை ஒன்றையும் கருகப் பண்ணுமாறுபோலே, எல்லாத் துக்கங்களையும் போக்கக் கூடியனவான குணங்கள் என் ஒருவனையும் அழிக்கின்

---

1. அங்ஙனமாயின், நெஞ்சு இடிந்துகுமாறு யாங்ஙனம்? என்ன, 'அதுதான்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2 அதனைத் திருஷ்டாந்தமூலம் விவரணம் செய்கிறார் 'பெருக்காற்றின்' என்று தொடங்கி.

3. "வினைகொள்" என்பதற்கு, வினையை ஜயித்தல் என்பது பொருள்; வினையை ஜயித்தலாவது, பாவத்தைப் போக்குதல்.

4. தாழ நின்று செய்த செயலுக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'சுக்கிரீவனை' என்று தொடங்கி.

ஏஷ தத்வா ச வித்தாநி ப்ராப்யச அநுத்தமம் யஶঃ
லோகநாதঃ புரா பூத்வா ஸுக்ரீவம் நாதம் இச்சதி.

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 4 : 18.

5. "மேல் சொல்லும் தோறும்" என்றதற்கும், இங்குப் "பாடிலும்" என்பதற்கும் வேறுபாடு காட்டுகிறார் 'அடைவுபட' என்று தொடங்கி.

6. "எனது ஆர் உயிர்" என்றதன் பொருளைத் திருஷ்டாந்தத்தோடு விவரணம் செய்கிறார் 'எல்லாவற்றுக்கும்' என்று தொடங்கி,

றன: [1]"எரிக்கப்படாதது" என்றது, நெருப்பிற்கு; பகவா னுடைய குணங்கள் புக்கு அழிக்கமாட்டாதன இல்லை.

சுனை கொள் பூஞ் சோலைத் தென்காட்கரை என் அப்பா - [2] தம்மைக் குமிழி நீர் ஊட்டின இடங்கள். சுனைகளையும் காட்சிக்கு இனிய சோலைகளையுமுடைத்தாய் இருக்கிற திருக்காட்கரையிலே காரணம் பற்றி வாராத உறவினனாய் அண்மையில் இருப்பவனே! நினைகிலேன் நான் உனக்கு ஆள்செய்யும் நீர்மையே - நான் உனக்கு அடிமை செய்யும்வகை நினைக்க மாட்டுகிறிலேன். [3]"வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்" என்று இருந்தமையைத் தெரிவிப்பார் 'நான்' என்கிறார். வகுத்த சேஷியானவன் இறைவன் ஆதலின் 'உனக்கு' என்கிறார். [4]அவன் தாழ நின்று புரிந்த செயல்களை, விநயத்தாலே 'ஆள் செய்யும் நீர்மை' என்கிறார். [5]அவன், தமக்கு ஆள் செய்த நீர்மையைத் 'தாம் ஆள்செய்யும் நீர்மை நினைகிலேன்' என்கிறார், இச் சொலவையும் இழக்க ஒண்ணாது என்று. [6]"நான் உனக்கு ஆள்செய்யும் நீர்மை' என்பான் என்? 'நீ எனக்கு ஆள்செய்யும் நீர்மை என்னாமல்' என்ன, 'இச் சொலவையும் இழப்பரோ பாவியார்' என்று பணிப்பர் எம்பார். (2)

---

1. எரிக்கக் கூடாத உயிர் எரிக்கப்படுதல் யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எரிக்கப்படாதது' என்று தொடங்கி.

அச்சேத்யஃ அயம் அதாஹ்யஃ அயம் அக்லேத்யஃ அஶோஷ்ய ஏவச
நித்யஃ ஸர்வகதஃ ஸ்தாணுஃ அசலஃ அயம் ஸநாதநஃ.

என்பது, ஸ்ரீ கீதை. 2 : 24.

2. சுனையையும் சோலையையும் ஊரையும் கூறியதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தம்மை' என்று தொடங்கி.

3. திருவாய்மொழி, 3. 3 : 1.

4. அவன் தாழ நின்று புரியும் செயல்களைக் கூறும் இவ்விடத்தில் 'நீ எனக்கு ஆட் செய்யும் நீர்மை' என்னாமல், "நான் உனக்கு ஆட் செய்யும் நீர்மை" என்பான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன் தாழ நின்று' என்று தொடங்கி. விநயம் - அடக்கம்.

5. அங்ஙனம் கூறியதற்குப் பயன் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன்' என்று தொடங்கி.

6. இதற்கு, சம்வாதம் காட்டுகிறார் 'நான் உனக்கு' என்று தொடங்கி,

940.

நீர்மையால் நெஞ்சம் வஞ்சித்துப் புகுந்து, என்னை
ஈர்மைசெய்து, என் உயிராய், என் உயிர் உண்டான்;
சீர் மல்கு சோலைத் தென்காட்கரை என் அப்பன்,
கார்முகில் வண்ணன்தன் கள்வம் அறிகிலேன்.

பொ - ரை :—என் நெஞ்சினை வஞ்சித்து அதனுள் புகுந்து, என்னைத் தன் குணங்களாலே ஈடுபடுத்தி, எனக்குத் தாரகனாய் என் உயிரை அநுபவித்தான்; சிறப்பு மிகுந்த சோலைகள் சூழ்ந்த அழகிய திருக்காட்கரை என்னும் திவ்விய தேசத்தில் எழுந்தருளி இருக்கின்ற கரிய முகில் போன்ற நிறத்தையுடையனான அன் அப்பனுடைய வஞ்சனையை அறிகிறேன் இல்லை என்கிறார்.

வி - கு :—நெஞ்சம் வஞ்சித்துப் புகுந்து நீர்மையால் என்னை ஈர்மை செய்து என்க. ஈர்மை செய்தல் - பிளத்தல்; ஈடுபடுத்தல். கார் - கார்காலமும் ஆம். வண்ணம் - தன்மையும் ஆம்.

ஈடு :—மூன்றாம்பாட்டு. [1]அடிமைகொள்ள என்று புகுந்து, தன் படிகளைக் காட்டி எல்லாவற்றையும் கொள்ளை கொண்ட தன்மைகளை நினைக்க முடியாதவனாக இருக்கிறேன் என்கிறார்.

நீர்மையால் நெஞ்சம் வஞ்சித்துப் புகுந்து என்னை ஈர்மை செய்து - [2]அவன் தலைவனும் நான் அடியவனும் ஆன முறையிலே காரியங்களைச் செய்யவேண்டும் என்று மனத்தினை இசையச் செய்து, வஞ்சித்துப் புகுந்தான்; [3]முறைகெடப் புகுர என்னில் இசையார் அன்றோ. [4]வஞ்சித்தலாவது, ஒன்றைச் சொல்லி மற்று ஒன்றைச் செய்தலே அன்றோ. நன்று; மற்றொன்றனைச் செய்தல்தான் இங்கு யாது? என்னில், நீர்மையால் என்னை ஈர்மை செய்து - நீர்மையாவது, தாழ நின்று கலத்தலும், அதற்கு அடியான சீலமும். என்னை - 'முறையிலே செயல்புரிவோம் வாரும்' என்றதனை மெய் என்று இருந்த

1. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. வஞ்சித்துப் புகுந்த வகையைக் காட்டுகிறார் 'அவன்' என்று தொடங்கி.

3. வஞ்சிக்கவேண்டுமோ? நேரே சொல்லின் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'முறைகெட' என்று தொடங்கி.

4. வஞ்சித்தல் என்பதனை விளக்குகிறார் 'வஞ்சித்தலாவது' என்று தொடங்கி.

என்னை. ஈர்மை செய்து - ஈரும் தன்மைகளைச் செய்து. [1] தன் தாழ்ந்த செயல்களாலே ஈடுபடுத்தி என்னுதல். அன்றிக்கே, ஈரப்பாட்டினை விளைத்து என்னுதல்; என்றது, என்னை நீராகும் படி செய்து என்றபடி. என் உயிராய் என் உயிர் உண்டான் - [2] எனக்குத் தாரகனைப் போலே புகுந்து என்னை அழித்தான். [3] அழிக்குமவனாகப் புகுரில் இவர் இசையாரே! [4] இருவரும் கூட உண்ணப் புகுந்து உண்பவன் தானே ஆனான். [5] அன்றிக்கே, என் உயிராய் என் உயிர் உண்டான் என்பதற்கு, தன்னால், அல்லது செல்லாதபடி என்னைச் செய்து என்னை உண்பதும் செய்தான் என்றுமாம்.

சீர் மல்கு சோலை - அழகு மிக்க சோலை. [6] என்னோடு கலந்த கலவியால் அவனுக்கு உண்டான அழகின் நிறைவினை அவ் ஊரில் சோலையே கோட்சொல்லித் தாராநின்றது. தென் காட்கரை என் அப்பன் - [7] சுலபனுமாய்க் காரணம் இல்லாத உறவினனும் ஆனவன். [8] என்காரியத்துக்குத் தானே கடவனாக இருக்கிற உறவு தோற்ற அண்மையில் இருக்கிறவன். கார்முகில் வண்ணன் - [9] என்னுடைய சேர்க்கையாலே, கடலை முழுக்கப்

1. 'ஈருந்தன்மைகளைச் செய்து' என்றதனை விவரணம் செய்கிறார் 'தன் தாழ்ந்த' என்று தொடங்கி. ஈர்தல் - பிளத்தல்.

2. "ஈர்மை செய்து" என்பதற்கு அருளிச்செய்த இருவகைப்பொருள்களுள், முதற்பொருளுக்குத் தகுதியாக, பாவம் அருளிச்செய்கிறார் 'எனக்கு' என்று தொடங்கி. 'போலே' என்றது, "ஆய்" என்ற சொற்குப் பொருள்.

3. தாரகனைப் போலே புகுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அழிக்குமவனாக' என்று தொடங்கி.

4. "உண்டான்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இருவரும்' என்று தொடங்கி.

5. "ஈர்மை செய்து" என்றதற்கு அருளிச்செய்த இருவகைப் பொருள்களுள், இரண்டாவது பொருளுக்குத் தகுதியாக, பாவம் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

6. "உண்டான்" என்றதன்பின், "சீர்மல்கு" என்று சோலையை விசேடிப்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'என்னோடு' என்று தொடங்கி.

7. "தென் காட்கரை" என்றதனை நோக்கிச் 'சுலபனுமாய்' என்றும், "அப்பன்" என்றதனை நோக்கி 'உறவினனும் ஆனவன்' என்றும் அருளிச்செய்கிறார்.

8. மேல் வாக்கியத்திற்கு, எதிர் நிரல் நிறையாக அருளிச்செய்கிறார் 'என் காரியத்துக்கு' என்று தொடங்கி.

9. "என் உயிர் உண்டான்" என்றதற்குத் தகுதியாக, "கார்முகில் வண்ணன்" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'என்னுடைய' என்று தொடங்கி.

பருகின காளமேகம்போலே ஆயிற்று, அவன் வடிவிற் செவ்வி இருப்பது. [1]"தூ நீர் முகில் போல் தோன்றாயே" என்று இவர் ஆசைப்பட்டபடியே தோற்றி அநுபவிப்பித்துப் பேர நின்ற பின்பு, அத்தலையிற் செவ்வி இருந்தபடி. தன் கள்வம் அறிகிலேன்-[2]முகப்பில் ஒன்றாய் முடிவில் ஒன்றான செயல்கள் தெரிகிறது இல்லை. என்றது, அடிமைகொள்ள என்று புகுந்து அச்செயலைத் தான்செய்து நின்ற நிலை எனக்கு ஒன்றும் தெரிந்திருக்கிறது இல்லை என்றபடி. [3]அறப்பெரியவன் இப்படித் தாழ நின்று செயல்களைச் செய்தல் கூடாது; நான் மயங்கினேனோ? [4]கலவியில் "மருள்தான் ஈதோ" என்றதனைச் சொல்லுகிறார் 'அறிகிலேன்' என்று. (3)

941.

அறிகிலேன் தன்னுள் அனைத்து உலகும் நிற்க,
நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான்,
வெறி கமழ் சோலைத் தென்காட்கரை என் அப்பன்,
சிறிய என் ஆர் உயிர் உண்ட திரு அருளே.

பொ-ரை:—எல்லா உலகங்களும் தன்னிடத்திலே தங்கி இருக்க, அவ் உலகத்து உயிர்களுக்குள்ளே முறை தப்பாதவாறு தானும் தங்கி இருக்கிற உபகாரகன்; வாசனை வீசுகின்ற சோலைகள் சூழ்ந்த அழகிய

---

1. நன்று; "மாயக் கூத்தன்" என்ற திருவாய்மொழியில் ஆசைப்பட்டபடியே "இருத்தும் வியந்து" என்ற திருவாய்மொழியில் அநுபவித்ததை இத்திருவாய்மொழியில் நினைக்கிறாராகில், அது நினைவு மாத்திரமாய் இராமல் அநுபவமாய்த் தோற்றுவதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "தூநீர்முகில்" என்று தொடங்கி. என்றது, அங்கே அநுபவித்ததைப் போன்று இங்கும் அநுபவிப்பதாக எண்ணம் உண்டான தன்மையாலே என்றபடி. "தூநீர்" என்பது, 8. 5: 3.

2. கள்வத்தை விவரணம் செய்கிறார் 'முகப்பில்' என்று தொடங்கி. 'முகப்பில்' என்று தொடங்கும் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'அடிமைகொள்ள' என்று தொடங்கி.

3. "கள்வம்" என்று கூறிய பின் "அறிகிலேன்" என்கிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அறப் பெரியவன்' என்று தொடங்கி.

4. "இருத்தும் வியந்து" என்ற திருவாய்மொழியில் உண்டான அநுபவம், இத் திருவாய்மொழியில் நினைவிற்கு விஷயமாயிற்று என்றதனைக் குறிப்பிக்கிறார் 'கலவியில்' என்று தொடங்கி. "மருள்தான்" என்பது, திருவாய்மொழி, 8. 7: 3.

திருக்காட்கரையில் எழுந்தருளி இருக்கின்ற என் அப்பன், சிறியேனுகிய என்னுடைய அரிய உயிரை அழித்த திரு அருளை அறிகிலேன் என்கிருர்.

வி - கு :—திரு அருளை அறிகிலேன் என்க. பூட்டு விற்பொருள்கோள். பிரானுகிய என் அப்பன் உண்ட திரு அருள் என்க. 'சிறிய' என்பதனை உயிருக்கு அடை ஆக்கலுமாம்.

ஈடு:—[1] நாலாம் பாட்டு. [2] தான் தலைவன் ஆன முறை தப்பாமலே எல்லாரோடும் கலக்கிறவன், மிகச் சிறியேனை என் பக்கல் செய்த காதல் எனக்கு அறிய நிலம் அன்று என்கிருர்.

அறிகிலேன் - உகப்பாலே செய்தானே? இவ் உயிரை அழிக்கைக்குச் செய்தானே? அறிகிலேன். தன்னுள் அனைத்து உலகும் நிற்க - [3] என்னை ஒழிந்தவர்கள் விஷயத்தில் அவன் உபகாரமே அன்றோ செய்து போருவது! என்றது, எல்லா உலகங்களும் தன் நினைவினைப் பற்றிக் கிடக்க, தான் அவற்றினுள்ளே தன் சேஷியாம் தன்மையின் முறையாலே நிற்குமவன், இவர் ஒருவர் விஷயத்திலும் அன்றோ இப்படி முறைகெடச் செயல்களைச் செய்தது என்றபடி. [4] "மூ உலகும் தன் நெறியா வயிற்றிற் கொண்டு, சிறியேனுடைச் சிந்தையுள்

---

1. மாநிலம் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கை ஆக
விசும்பு மெய்யாகத் திசை கையாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர் கண்ணாக
இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதுஅற விளங்கிய திகிரி யோனே.

என்ற செய்யுள், இப்பாசுரத்தின் முதல் இரண்டு அடிகளோடு ஒப்பு நோக்கல் தகும். நற்றிணை. 1.

2. "நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான், சிறிய என் ஆர் உயிர் உண்ட திருவருள் அறிகிலேன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிருர்.

3. "பிரான்" என்றதனைக் கடாக்ஷித்துக் கருத்து அருளிச்செய்கிருர் 'என்னை' என்று தொடங்கி.

4. "இருத்தும் வியந்து" என்ற திருவாய்மொழியின் அநுபவம் இத்திருவாய்மொழியில் நினைவிற்கு விஷயமாயிற்று என்றதனைச் சூசிப்பிக்கிருர் "மூ உலகும்" என்று தொடங்கி. இது, திருவாய். 8. 7 : 8.

நின்றொழிந்தார்" என்றதனைச் சொல்லுகிறார். [1] பிரளய ஆபத்திலே உலகங்கள் முழுதினையும் காத்தவன், என்னை ஒருவனையும் அழித்தான். [2] பகைவர்களை அம்பாலே அழிக்கும், அடியார்களைக் குணத்தாலே அழிக்கும். நடுநிலையரைப் போலே அன்றோ அவன் பாதுகாப்பது! [3] அம்பு பட்ட புண் மருந்து இட்டு ஆற்றலாம், குணத்தால் வந்த புண்ணுக்கு மாற்று இல்லை அன்றோ.

வெறி கமழ் சோலை - [4] அவ் ஊரை உடையவனுக்கு ஒரு பொருள் உத்தேசியம் ஆவதே! வாசனை அலை எறியாநிற்பதான சோலை. என் அப்பன் - [5] தமப்பன் அன்றோ அழித்தான்! சிறிய என் ஆர் உயிர் உண்ட - சிறியேனுடைய நல் உயிரை. என்றது, மிக்க அல்பனான என்னுடைய ஆத்மாவை என்றபடி. [6] அவனுடைய மேன்மைக்கு எல்லை காண ஒண்ணாததைப் போன்று, தம்முடைய சிறுமைக்கும் எல்லை இல்லையாக நினைத்திருக்கிறார். ஆர் உயிர் - [7] இவர், தம்மைச் சிறுக

---

1. "தன்னுள்" என்பதற்குத் 'தன் நினைவு' என்று பொருள் அருளிச்செய்தார் மேல்; 'தன் வயிற்றிலே' என்று வேறும் ஒரு பொருள் அருளிச்செய்கிறார் 'பிரளய ஆபத்திலே' என்று தொடங்கி. "ஆர் உயிர் உண்டான்" என்றதனைக் கடாக்ஷித்து 'என்னை ஒருவனையும் அழித்தான்' என்கிறார்.

2. பகைவர்களை யன்றோ அழிப்பான்? அடியார்களை அழிப்பானோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பகைவர்களை' என்று தொடங்கி.

3. குணத்தால் வந்த அழிவு, அழிவு ஆகுமோ? எனின், அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அம்பு' என்று தொடங்கி.

4. ஊரை வர்ணிப்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அவ் ஊரை' என்று தொடங்கி. 'ஒரு பொருள்' என்றது "சிறிய என் ஆர் உயிர்" என்றதனை நோக்கி.

5. "என் அப்பன்" என்றதனை "ஆர் உயிர் உண்டான்" என்றதனோடும் கூட்டிக் கருத்து அருளிச்செய்கிறார் 'தமப்பன்' என்று தொடங்கி.

6. சிறுமைக்கு முடிவின் எல்லையைக் காட்டுகிறார் 'அவனுடைய' என்று தொடங்கி. "தன்னுள் அனைத்து உலகும் நிற்க" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அவனுடையமேன்மைக்கு எல்லைகாண ஒண்ணாததைப்போன்று' என்கிறார்.

7. "சிறிய" என்று வைத்து, "ஆர் உயிர்" என்றல் பொருந்துமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவர்' என்று தொடங்கி. ஆர்தல் என்பது மிகுதியாய், சிலாக்கியமான உயிர் என்றபடி.

நினைத்திராநின்றார்; அவன் இவரை நித்தியசூரிகட்கும் அவ்வருகாக நினைத்திராநின்றான். 'இவர் தம்மைச் சிறுக நினைத்தால் பயன் என்? இவர் தம்மைத் தாம் அறிந்தாரோ?' என்று மேல் விழாநின்றான். திரு அருள் அறிகிலேன் -[1] இது முன்னம் சொரூப ஞானத்தாலே செய்தது ஒன்று அன்றே; [2]சொரூப ஞானத்தாலே விரும்பில் அன்றோ சொரூபத்து அளவிலே நிற்பது? கழிபெரும் காதல் முறையை அழிக்கும் அன்றோ. (4)

942.

திரு அருள் செய்பவன் போல என் உள் புகுந்து
உருவமும் ஆர் உயிரும் உடனே உண்டான்;
திரு வளர் சோலைத் தென்காட்கரை என் அப்பன்,
கரு வளர் மேனி நம் கண்ணன் கள்வங்களே!

பொ - ரை :—திரு அருளைச் செய்கின்றவன் போன்று என் மனத்திற்குள் புகுந்து, என் சரீரத்தையும் என் அரிய உயிரையும் ஒருசேர அழித்துவிட்டான்; அழகு வளர்கின்ற சோலைகள் சூழ்ந்த அழகிய திருக்காட்கரையில் எழுந்தருளியிருக்கின்ற என் அப்பனாகிய, கருமை வளர்கின்ற திருமேனியையுடைய கண்ணபிரானுடைய வஞ்சனைகள் இருக்கும் விதம் என்னே!

வி - கு :—உள்புகுந்து உண்டான் என்க. என் அப்பனாகிய கண்ணன் என்க. 'கள்வங்களே' என்றது, கள்வம் இருந்தபடி என்னே! என்றபடி.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [3]என்னை அடிமை கொள்பவனைப் போலே புகுந்து, என் உடலையும் உயிரையுங்கூட உண்டான்; ஒருவனுடைய கழிபெரும் காதல் இருந்தபடி என்! என்று ஆச்சரியப்படுகிறார்.

---

1. "திரு அருள்" என்பதற்கு, முறைகெடச் செயல்களைச் செய்தல் என்று கருத்துக் கூறத் திருவுள்ளம்பற்றி, தலைவன், அடிமை இடத்தில் முறைகெடப் பரிமாறுவான் என்பது என்? என்ன, 'இது முன்னம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, கழிபெரும் காதலால் செய்தான் என்றபடி.

2. சொரூப ஞானத்தாலே செய்தது இல்லை என்பதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'சொரூப ஞானத்தாலே' என்று தொடங்கி.

3. பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

திரு அருள் செய்பவன்போல-[1]எல்லாவற்றையும் கொடுத்து அடிமை கொள்வாரைப் போலே ஆயிற்றுப் புகுந்தது. என்றது, துயர்அறு சுடர்அடி தொழுது எழுகைக்கு மயர்வுஅற மதிநலம் அருளுவாரைப்போலே புகுந்தான் என்றபடி. ஆயின், தம் திறத்தில் செய்தது அங்ஙன் அன்று, திருஅருள் தான் பெற்றானாய் இராநின்றான் ஆதலின், 'போல' என்கிறார். என் உள் புகுந்து - விழுவிலா அடிமை செய்யப் பாரித்த என் பக்கலிலே புகுந்து. உருவமும் - [2] முதலிலே "அழுக்கு உடம்பு" என்றத்தை விரும்பாநின்றான்: [3] அவன் அங்கீகாரத்துக்கு முன்பு இவர் சரீரத்தையே விரும்பிப் போந்தார்; அவன் இவரை அங்கீகரித்த பின்பு, இவர் சரீரத்தை அவன் விரும்பப் புக்கான். [4] இவர்க்கு அவனுடைய சேர்க்கை சொரூப ஞானத்துக்கு உடல் ஆயிற்று; அவனுக்கு இவருடைய சேர்க்கை, உடலை உயிராக விரும்புவதற்கு உடல் ஆயிற்று. இவர் தாம் வேண்டுமோ, இவர் 'என்னது' என்று ஆசைப்பட்டது ஒன்று அமையாதோ என்று இராநின்றான் ஆதலின், 'உருவமும்' என்று சிறப்பும்மை கொடுத்து ஓதுகிறார். ஆர் உயிரும்-[5]அபர்யவஸாந விருத்தியால் ஆத்மா அளவும் செல்லுதல். இச் சரீரம் தான் உயிரை விட்டுத் தனித்து இராமையாலே அவ் ஆத்மா அளவும் செல்ல அவ் ஆத்மாவையும் விரும்பினான் என்றபடி.

---

1. அருள்தல் - கொடுத்தல். இதனை நோக்கியே எல்லாவற்றையும் கொடுத்து என்கிறார்.

2. உருவத்தை முன்னே கூறியதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'முதலிலே' என்று தொடங்கி. முதலிலே என்றது, சிலேடை. திருவிருத்தத்திலே என்னுதல், ஆத்மாவுக்கு முதலிலே என்னுதல். "அழுக் குடம்பு" திருவிருத்தம், செய். 1.

3. "யாதானும் ஓர் ஆக்கையிற் புக்கு" என்கிறபடியே, இவர் அன்றோ அழுக்குடம்பை விரும்பினார்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன்' என்று தொடங்கி.

4. மேலே கூறிய வாக்கியங்களால் பலித்த அர்த்த விசேடத்தை ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'இவர்க்கு' என்று தொடங்கி. 'இவர்க்கு அவனுடைய சேர்க்கை' என்றது, மயர்வு அற மதி நலம் அருளியதனை. 'அவனுக்கு இவருடைய சேர்க்கை' என்றது, இவருடைய மனத்திலே புகுந்திருந்ததனை.

5. "ஆர் உயிரும்" என்ற உம்மை அமுக்கியப் பொருள் காட்டுகிறது என்று திருவுள்ளம்பற்றிப் பொருள் அருளிச்செய்கிறார் 'அபர்யவசான விருத்தியால்' என்று தொடங்கி. அபர்யவசான விருத்தியாவது, விசேஷணத்தைக் காட்டுகிற சொல் விசேடியத்தளவும் சென்று விசேடியத்தையும் காட்டுவது.

உடனே உண்டான் - [1] அங்ஙனம் உண்ணும்போதும், வாசி வைத்து உண்டிலன். தமக்கு இடம் வையாமல் அவனே உண்டான் ஆதலின் 'உண்டான்' என அவன் தொழிலாக அருளிச்செய்கிறார்.

திரு வளர் சோலைத் தென் காட்கரை என் அப்பன்-[2] தானே உண்பானாக உண்டமை, அவ் ஊரிற் சோலையும் வடிவும் கோட் சொல்லித் தரும். அழகு வளராநின்றுள்ள சோலை. கரு வளர் மேனி - கருமை வளராநின்றுள்ள வடிவு. [3] "எப்பொழுதும் ஒரே தன்மையான வடிவம்." என்றது, இவ் வளவில் கண்டிலோம். நம் கண்ணன்-அடியார்கட்கு எளியவனான கண்ணன். கள்வங்கள் - முகப்பில் ஒன்றாய், முடிவில் ஒன்றாய் இருக்கும் செயல்கள்; [4] அடிமை கொள்வாரைப் போலே புகுந்து தான் ஏவப்படுகின்றவனாய்த் தாழ நிற்கையும், விரோதியான சரீரத்தைக் கழித்துத் தர என்று புகுந்து உடலையும் உயிரையும் வேறுபடுத்து உணர்தலைச் செய்யாது ஒழிகையும், இனிய பொருளாகப் புகுந்து தான் அநுபவிக்கின்றவன் ஆகையும், என் பேறாகப் புகுவானாகப் புகுந்து தன்பேறாகத் தலைக்கட்டுகையும், இவை முழுதும் வடிவில் வேறுபாட்டாலே தோற்றி இருக்கையும் ஆம். இத் தலையில் ஆத்ம அபகாரத்தைத் தவிர்த்தது, தன் ஆத்ம அபகாரத்தாலே ஆயிற்று. (5)

---

1. "உடனே" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அங்ஙனம் உண்ணும்போதும்' என்று தொடங்கி. உடன் - ஒரு சேர.

2. "திருவளர்" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'தானே' என்று தொடங்கி.

3. "வளர் மேனி" என்ற வினைத்தொகைக்குக் கருத்து அருளிச் செய்கிறார் 'எப்பொழுதும்' என்று தொடங்கி.

"ஸதைக ரூபம்" என்பது சுருதி.

'இவ்வளவில்' என்றது, இவரோடே கலக்குமிடத்தில் என்றபடி.

4. "கள்வங்கள்" என்ற பன்மையின் பொருளை விரித்து அருளிச் செய்கிறார் 'அடிமை கொள்வாரைப் போலே' என்று தொடங்கி. "உருவமும் ஆர் உயிரும் உடனே" என்றதனை நோக்கி, 'உடலையும் உயிரையும் வேறுபடுத்து உணர்தலைச் செய்யாது ஒழிகையும்' என்கிறார். "உண்டான்" என்ற பதத்திலே, அநுபவிக்கின்றவனாகையும், தன் பேறாகத் தலைக்கட்டுதலும் தோற்றுகின்றன. "கரு வளர் மேனி" என்றதனை நோக்கி 'இவை முழுதும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார். "நம் கண்ணன்" என்று அடியார்கட்குப் பவ்யப்பட்டிருத்தலைக் கூறியதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இத் தலையில்' என்று தொடங்கி. என்றது, தன் சுவாதந்திரியத்தை அழிய மாறி, இத்தலையின் சுவாதந்திரியத்தைப் போக்கினான் என்றபடி.

943.

எம் கண்ணன் கள்வம் எனக்குச் செம்மாய் நிற்கும்;
அம் கண்ணன் உண்ட என் ஆர் உயிர்க் கோது இது;
புன்கண்மை எய்திப் புலம்பி இராப் பகல்
என் கண்ணன் என்று அவன் காட்கரை ஏத்துமே.

பொ - ரை :—என் கண்ணபிரானுடைய வஞ்சனைகள் எனக்குச் செவ்வியனவாகவே தோன்றாநிற்கும்; மிக்க காதலனான அந்தக் கண்ணபிரான் அநுபவித்த சாரம் அற்றதாய் இருக்கின்ற என் ஆர் உயிராகிய இது, சிறிது அறிவை அடைந்து என் கண்ணன் என்று இரவும் பகலும் புலம்பிக்கொண்டு அவன் எழுந்தருளி இருக்கின்ற திருக்காட்கரையை ஏத்தாநிற்கும்.

வி - கு :—கோதாய் இருக்கின்ற ஆர் உயிரான இது புன்கண்மை எய்தி என் கண்ணன் என்று இராப் பகல் புலம்பி அவன் காட்கரை ஏத்தும் என்க. புன்கண்மை - புல்லிதான அறிவு; சிறிது அறிவை என்றபடி. கண் - அறிவு.

ஈடு :—ஆறும் பாட்டு. [1] 'அவன் வஞ்சகன் என்று அறிந்தால் அதிலே கிடந்து நெஞ்சாறல் படாமல் நீர் அகன்றாலோ?' என்ன, 'அவனைக் கண்டவாறே, அவ் வஞ்சனைகளை மெய் என்று இருப்பன்' என்கிறார்.

எம் கண்ணன் கள்வம் எனக்குச் செம்மாய் நிற்கும் - [2] எனக்கு அடங்கினவனைப் போலே இருக்கிற கிருஷ்ணனுடைய வஞ்சனைகள் எனக்குச் செவ்விதாகத் தோற்றும்.[3] ஒரு நாள் அவன் களவிலே அகப்பட்டால் பின்னை மீளமாட்டேன். [4] அவன் முகத்திலே விழித்தவாறே அவன் செய்யுமவை

---

1. முதல் அடியைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். 'அவனைக் கண்டவாறே' என்று தொடங்கும் வாக்கியம்,

காணுங்கால் காணேன் தவறாய காணக்கால்
காணேன் தவறல் லவை.

என்னும் திருக்குறளை நினைவூட்டுகின்றது.

2. "கள்வம்" என்று மேலே வருகையாலே, "எங் கண்ணன்" என்பதற்கு, 'எனக்கு அடங்கினவனைப் போலே' என்று பொருள் அருளிச்செய்கிறார்.

3. கள்வம் என்று அறிந்தால் பின் மீளுதற்கு என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒருநாள்' என்று தொடங்கி.

4. மாட்டாமைக்குக் காரணம் என்? என்ன, 'அவன் முகத்திலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

அடைய மெய்யாக இருக்கும் எனக்கு. 'எனக்குச் செம்மாய் நிற்கும்' என்றதற்கு 'எனக்குச் சேமமாக இருக்கும்' என்று ஒரு [1] தமிழ்ப் புலவர் பொருள் கூறினர். நன்று; "நம் கண்ணன் கள்வங்கள்" என்று மேல் திருப்பாசுரத்திலே முடிய, 'எம் கண்ணன்' என்று தொடங்குவான் என்? எனின், நாம் என்பதும், யாம் என்பதும் ஒரு பொருட் சொற்கள் ஆகையாலே பொருளிசை அந்தாதி ஆக இருக்கிறது. மேல் பாசுரத்தின் ஈற்றடியில் "எம் கண்ணன் கள்வங்கள்" என்று பாடமாகில் நேரே கிடக்கும்.

அம் கண்ணன் உண்ட - மிக்க காதலையுடையனை கிருஷ்ணன் நுகர்ந்த. [2] மிக்க காதலரை 'அங்கண்ணர்' என்னக் கடவது அன்றே. கோது என் ஆர் உயிர் இது - கோதான என் ஆத்மா ஆன இது. ஆத்மா கோது ஆம்படி காணும் செயல் புரிந்தது. புன் கண்மை - பேகணிப்பு; [3] பொல்லா நோக்கை உடைத்தாய் என்கை. [4] "மீள உயிர்ப் பெய்து" என்றாயிற்று இதனை நிர்வஹித்துப் போருவது. 'இதுதான் சொல்லோடே சேர்ந்திருக்கிறது இல்லை, [5]கேட்கப்பட்ட இந்தப் பொருளோடே சொல்லும் சேரப் பொருந்தி வழக்காரும்படி எங்ஙனே?' என்று ஆராயாநிற்கச்செய்தே, 'கோதான இது

---

1. தமிழ்ப் புலவர் கூறும் பொருளுக்கும், வியாக்யாதா அருளிச்செய்யும் பொருளுக்கும் பொருளால் வேற்றுமையின்று; சொல் வேற்றுமையே ஆம்.

2. "அங் கண்ணன்" என்பது, மிக்க காதலையுடையவனைக் காட்டுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மிக்க காதலரை' என்று தொடங்கி.

3. 'பொல்லா நோக்கை யுடைத்தாய்' என்றது, அறிவை உடைத்தாய் என்றபடி. புன்கண் - புல்லிய அறிவு; கண் - அறிவு; ஞானம்.

4. பட்டர், இதற்கு 'மீளவும் அறிவை அடைந்து' என்று அருளிச்செய்வர் என்கிறார் 'மீள உயிர்ப்பெய்து' என்று தொடங்கி. 'நிர்வஹித்துப் போருவது' என்றது, பட்டர் சம்பிரதாயமாக அருளிச்செய்வர் என்றபடி. 'இதுதான்' என்றது, 'மீள உயிர்ப் பெய்து' என்னும் இது தான் என்றபடி. 'சொல்லோடே' என்றது, "புன்கண்மை எய்தி" என்னும் சொல்லோடே என்றபடி.

5. 'கேட்கப்பட்ட இந்தப் பொருளோடே' என்றது, பட்டர் அருளிச்செய்ய என்னால் கேட்கப்பட்ட இந்தப் பொருளோடே என்றபடி. 'ஆராயா நிற்கச் செய்தே' என்றது, நஞ்சீயர் என்னோடு ஆராய்கையில் என்றபடி. 'நான்' என்றது, நம்பிள்ளையை. 'அருளிச்செய்வர்' என்றது, நம்பிள்ளை அருளிச்செய்வர் என்றபடி.

மீளவும் புன்கண்மை எய்தும்போது மீளவும் உயிர்ப் பெய்தது ஆகவேண்டும் அன்றோ; பொருளின் தன்மையாலே தன்னடையே வரும்' என்று நான் சொன்னேன். சீயர் போர உகந்தருளினர் என்று அருளிச்செய்வர். என் கண்ணன் என்று இராப் பகல் புலம்பி - முன்பு எனக்கு அடங்கியிருந்தவனை கிருஷ்ணன் என்று இரவு பகல் என்ற வேறுபாடு இன்றிக்கே கூப்பிட்டு. அவன் காட்கரை ஏத்தும் - அவன் எழுந்தருளி இருக்கிற திருக் காட்கரையை ஏத்தாநின்றது. [1]"இராகவனுடைய திருமாளிகையில்" என்னுமாறு போலே.(6)

944.

காட்கரை ஏத்தும்; அதனுள் கண்ணா! என்னும்;
வேட்கை நோய் கூர நினைந்து கரைந்து உகும்;
ஆட்கொள்வான் ஒத்து என் உயிர் உண்ட மாயனால்
கோட்குறை பட்டது என் ஆர் உயிர் கோள் உண்டே.

பொ - ரை :—அடிமை கொள்ளுவாரைப் போன்று உள்ளே புகுந்து என் உயிரை உண்ட மாயவனால் என் உயிர் கொள்ளப்பட்டும், கொள்ளப்பட்டதில் குறை உண்டு என்னலாம்படி இருக்கிற என் அரிய உயிரானது, திருக்காட்கரையைத் துதிக்கும்; அத் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கின்ற கண்ணபிரானே! என்று கூப்பிடாநிற்கும்; வேட்கையாலாய நோய் மிக, நினைந்து கரைந்து உருக் குலையாநிற்கும்.

வி - கு :—ஈற்றடியின் விளக்கத்தை வியாக்கியானத்திற் காண்க. கோள் உண்டு, உம்மை தொக்கது. கோள் உண்டும் குறைபட்ட என் ஆர் உயிர் என்க. உயிர் ஏத்தும், என்னும், கரைந்து உகும் எனக் கூட்டுக.

ஈடு :—ஏழாம் பாட்டு. [2]அடிமை கொள்வாரைப் போலே புகுந்து, என் உயிரை நேராக உண்டு, பின்னையும் உண்ணாதாரைப் போலே இருக்கும் என்கிறார்.

---

1. "காட்கரை ஏத்தும்" என்றதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'இராகவனுடைய' என்று தொடங்கி.

ஸமா த்வாதஸ தத்ர அஹம் ராகவஸ்ய நிவேஸநே
புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாம ஸம்ருத்திநீ.

என்பது, ஸ்ரீராமா. சுந். 33: 17.

2. "ஆட்கொள்வான் ஒத்து, என் ஆர் உயிர் கோள் உண்டு கோட் குறை பட்டது" என்ற பதங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

காட்கரை எத்தும் - [1] அவனிலும் அவன் இருந்த ஊரை ஏத்தும். அதனுள் கண்ணு என்னும் - [2] பரத்துவத்தைக் காட்டிலும் அவ் ஊரில் புகுந்த பின்பு உண்டான ஏற்றம். [3] 'என் கண்ணன்' என்னு, காட்கரை ஏத்தும்; அவ் ஊரை ஏத்தா, அவனே ஏத்தும்; இவ் இரண்டற்கும் புறம்பே போகிறது இல்லை. வேட்கை நோய் கூர நினைந்து - ஆசை மிகும்படி நினைந்து. கரைந்து உகும் - உருக் குலைந்து ஓர் அவயவி என்று நினைக்க ஒண்ணுதபடி உகும். ஆள் கொள்வான் ஒத்து என் உயிர் உண்ட மாயனுல்-அடிமைகொள்வாரைப்போலே புகுந்து என்னை வெறும்தறை ஆக்கின ஆச்சரியத்தை உடையவனுலே; [4] மேலே "திருவருள்" என்று மறைத்துக் கூறியதை வெளி இடுகிறுர். [5] கிட்டினபோது தாழநின்று மின்மினி பறக்கச் செயல் புரிந்த ஆச்சரியத்தை நினைந்து 'மாயனுல்' என்கிறுர்.

என் ஆர் உயிர் கோள் உண்டே கோள் குறைபட்டது - [6] என் உயிரைக் குறை இல்லாதபடி உண்ணச் செய்தேயும் அவன் குறைவாளனுய் விருப்பமுள்ளவனுய்ப் போகையாலே, இத் தலையில் இன்னம் சிறிது குறைந்தது உள்ளது என்று இருக்கிறுர். அன்றிக்கே, இப்போது இருந்து துக்கப்படக் காண்கையாலே சிறிது தொங்கிற்று உண்டு என்று இருக்கிறுர் என்னுதல். [7] ஒரு முற்றறிவினன் இல்லாதது ஒன்றிலே இத்தனை காதல் செய்யக் கூடாது என்றிருக்கிறுர். (7)

---

1. இத் திருப்பாசுரத்திலே அவனை முற்கூருது, ஊரை முற்கூறியதற்குக் கருத்து அருளிச்செய்கிறுர் 'அவனிலும்' என்று தொடங்கி.

2. "கண்ணு" என்னுமல் "அதனுள் கண்ணு" என்று விசேடித்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறுர் 'பரத்துவத்தைக் காட்டிலும்' என்று தொடங்கி. கண்ணன் - நிர்வாஹகன்.

3. மேற்பாசுரத்தில் அவனை ஏத்தியவர் மீளவும் துதிப்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறுர் 'என் கண்ணன்' என்று தொடங்கி. மேற்பாசுரத்தில் கண்ணன் பிரதானம். இப்பாசுரத்தில் ஊர் பிரதானம்.

4. மேல் ஐந்தாம் பாசுரத்தில், "திருவருள் செய்பவன் போல" என்று மறைத்துக் கூறியதை "ஆட்கொள்வான் ஒத்து" என்று வெளியிடுகிறுர் என்றபடி.

5. மாயம் யாது? என்ன, 'கிட்டினபோது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறுர்.

6. அவனுல் கொள்ளப்பட்டால் கொள்ளுகையில் குறைபட்டது என்று அறிந்தபடி யாங்ஙனம்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறுர் 'என் உயிரை' என்று தொடங்கி. கோள் குறைபட்டது - கொள்ளுகையில் குறை பட்டது.

7. மேலே 'அவன் குறைவாளனுய்' என்று தொடங்கி அருளிச்செய்ததனை விவரணம் செய்கிறுர் 'ஒரு முற்றறிவினன்' என்று தொடங்கி.

945.

கோள் உண்டான் அன்றி, வந்து என் உயிர் தான் உண்டான்;
நாளும் நாள் வந்து, என்னை முற்றவும் தான் உண்டான்;
காள நீர் மேகம் தென் காட்கரை என் அப்பற்கு
ஆள் அன்றே பட்டது? என் ஆர் உயிர் பட்டதே!

பொ - ரை:—என்பக்கல் ஓர் உபகாரமும் கொள்ளாமலே ஒரு காரணமும் இல்லாமல் தானே வந்து என் உயிரை உண்டான்; நாள் தோறும் வந்து என்னை முற்றவும் தானே உண்டான்; கரிய நீரைக் கொண்ட மேகத்தைப் போன்ற தென்காட்கரை என் அப்பனுக்கு என் உயிர் அடிமைப்பட்டது இத்தனை அன்றோ? என் அரிய உயிர் படும்பாடு என்னேதான்!

வி - கு:—மேகம் அப்பற்கு அடைமொழி. பட்டதே என்பதிலுள்ள ஏகாரம், வியப்பின்கண் வந்தது.

ஈடு:—எட்டாம் பாட்டு.[1] நாள்தோறும் என்னை அநுபவியா நின்றாலும் பெறாப் பேறு பெற்றாற் போலே அநுபவிக்கிற இவனுடைய குணத்தின் தன்மையைப் பொறுக்க ஒண்கிறது இல்லை என்கிறார்.

கோள் உண்டான் அன்றி வந்து என் உயிர்தான் உண்டான் - இதற்குப் பலபடியாக அருளிச்செய்வர்: [2] என்பக்கல் ஓர் உபகாரம் கொள்ளாமலே ஒரு காரணமும் இன்றிக்கே என் உயிரை அநுபவித்தான். அன்றிக்கே, இதற்கு முன்பு இப்படிப்பட்டது ஒரு சரக்கினைப் பெற்று அறியாதானாய் என் பக்கல் காதலை உடையவன் ஆனான் என்னுதல். அன்றிக்கே,

---

1. முன் இரண்டு அடிகளையும் ஈற்றடியையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். "முற்றவும்" என்ற பதத்தைத் திருவுள்ளம்பற்றிப் 'பெறாப் பேறு பெற்றாற் போலே' என்கிறார்.

2. 'என் பக்கல் ஓர் உபகாரம் கொள்ளாமலே' என்றது, நான் சாதன பக்தியைச் செய்யாதிருக்கவும் என்றபடி. இங்கே, "வெறிதே அருள் செய்வர்" (8. 7: 5.), "என்நன்றி செய்தேனா" (4. 5. 9.) என்னும் திருப்பாசுரப் பகுதிகள் நினைவு கூர்தல் தகும். 'இதற்கு முன்பு' என்று தொடங்கும் வாக்கியத்திற்குக் கருத்து, இதற்கு முன்பு ஒரு பொருளையும் இப்படி இனிய பொருளாகக் கொண்டவன் அல்லன் என்பது. இங்கே, "அனந்தன் பாலும்" (பெரியாழ்வார் திருமொழி, 5. 4: 8.), "பக்கம் நோக்கறியான்" (திருவாய். 2. 6: 2.) என்பனவற்றை நினைவு கூர்தல் தகும்.

[1] என்னுல் தான் கொள்ளப்படாதிருக்க, தான் என்னைக் கைக் கொண்டான் என்னுதல். நாள் நாளும் வந்து என்னை முற்ற வும் தான் உண்டான் - ஒருநாள் அநுபவித்து 'இனி இது நாம் அநுபவித்தது அன்றோ?' என்று கைவாங்கி இருந்தானோ? நாள்தோறும் நாள்தோறும் வந்து. அவனுடைய [2] அப்பொழு தைக்கு அப்பொழுது என் ஆராவமுதம் இருக்கிறபடியைத் தெரிவித்தபடி. முற்றவும் தான் உண்டான் - [3] அணு அளவினதான இவ் உயிரை எங்கும் பரந்திருக்கிற தான் விளாக்குலை கொண்டு அநுபவித்தான் என்கிற இது தனக்கு ஏற்றமாம்படி ஆதரியாநின்றுன். [4] "சிறிய என் ஆர் உயிரை" என்ற அது, தம்மைப் பார்த்து; இது, அவனுடைய அநு பவத்தைக் கொண்டு சொல்லுகிருர்.

காளம் நீர் மேகம் தென்காட்கரை என் அப்பற்கு-கறுத்த நீர் கொண்டு எழுந்த காளமேகம் போலே இருக்கிற வடிவை உடையனுய், அம் மேகம்தான் மழைபெய்யும் இடத்திலே படிந் தாற்போலே திருக்காட்கரையிலே வந்து அண்மையில் எழுந் தருளியிருக்கிற நிருபாதிக பந்துவுக்கு. வடிவழகு அது; ஊர் அது; தனக்கு என்ன குறை உண்டாய் இப்படிப் படுகிருன்! ஆள் அன்றே பட்டது - அடிமை அன்ரோ புக்கது? என்றது, இராவணன் முதலியோர்களைப் போன்று எதிர் அம்பு கோத் தேனோ? என்றபடி. என் ஆர் உயிர் பட்டதே - ஓர் உயிர் படும்பாடே இது! [5] எதிர்த்தார் உடம்பு இழத்தல், புண்பட்ட தற்கு மருந்து வைத்து ஆற்றுதல் செய்யுமத்தனை அன்ரோ;

---

1. 'என்னுல்' என்று தொடங்கும் வாக்கியத்திற்குக் கருத்து, நான் பிரபத்தி செய்யாதிருக்கவும் என்னை அடிமை கொண்டான் என்பது. "நான் ஒட்டி என்னுள் இருத்துவம் என்றிலன்" (திருவாய். 1. 7 : 7.) என்பதனை நினைவு கூர்க.

2. "அப்பொழுதைக்கு" என்பது, திருவாய்மொழி, 2. 5 : 4.

3. "முற்றவும்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிருர் 'அணு அளவினதான' என்று தொடங்கி.

4. மேலே "சிறிய என் ஆர் உயிர்" என்று கூறியவர், இங்கே "முற்றவும்" என்று பெருமை தோற்றச் சொல்லுதல் கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர் "சிறிய" என்று தொடங்கி. இது-"முற்ற வும்" என்ற இது.

5. "என் ஆருயிர் பட்டதே" என்று, பகைவர்கள் கையில் அகப்பட்டாற் போன்று சொல்லுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிருர் 'எதிர்த்தார்' என்று தொடங்கி,

இங்கு ஆர் உயிர் அன்றோ நோவுபட்டது; [1]குணத்தால் வரும் நோவு சொரூபத்தோடு சேர்ந்ததாய் அதற்கு மாற்று இல்லை அன்றோ. (8)

946.

ஆர் உயிர் பட்டது, எனது உயிர் பட்டது -
பேர் இதழ்த் தாமரைக் கண் கனி வாயது ஓர்
கார் எழில் மேகம் தென்காட்கரை கோயில் கொள்
சீர் எழில் நால் தடம் தோள் தெய்வ வாரிக்கே.

பொ-ரை :—சிறந்த அழகிய பெருமை பொருந்திய நான்கு திருத் தோள்களையும், பெரிய இதழ்களையுடைய தாமரைமலர் போன்ற திருக் கண்களையும், கொவ்வைக்கனி போன்ற திருவாயினையும் உடையதாகி ஒப்பற்ற கரிய அழகிய மேகம்போன்று தென்காட்கரையிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தெய்வ வாரிக்கு என் உயிர் பட்டது போன்று யார் உயிர்தாம் பட்டது!

வி-கு :—கோயில்கொள் தெய்வ வாரிக்கு எனது உயிர் பட்டது, யார் உயிர் பட்டது என்க. தெய்வவாரி-தெய்வங்கள் எல்லாம் தோன்று வதற்குரிய கடல். வாரி-தண்ணீர்; கடல். தெய்வவாரி-இறைவனுடைய திருப்பெயர்.

ஈடு :—ஒன்பதாம் பாட்டு. [2]'நீரேயோ இப்படிப்பட்டீர்! குண அநுபவத்தையே பொழுது போக்காகவுடைய நித்திய சூரிகளும் படும் பாடு இது அன்றோ?' என்ன, 'அவர்களும் தாம் நான்பட்டது பட்டார்களோ?' என்கிறார்.

எனது உயிர்பட்டது யார் உயிர் பட்டது-நான் பட்ட பாட்டினை நித்தியசூரிகளிலேதாம் பட்டார் உளரோ? [3]பகவானுடைய குணங்களுக்கு நிலம் அல்லாததாய் இருக்கிற இவ் உலகத்திலே நான் பட்ட பாட்டினை நித்தியவிபூதியிலே உள்ளவர்கள்தாம் பட்டார்களோ? என்கிறார். [4]'இங்கு எனது உயிர்

1. அப்படியானல் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'குணத்தால்' என்று தொடங்கி. மேலே கூறிய 'உடம்பு இழத்தல்' என்றதற்கு மறுதலைப்பொருள், 'சொரூபத்தோடு சேர்ந்ததாய்' என்பது. 'மருந்து வைத்து ஆற்றல்' என்றதற்கு மறுதலைப்பொருள், 'மாற்று இல்லை அன்றோ' என்பது.

2. "எனது உயிர்பட்டது, ஆர் உயிர்பட்டது" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. மேற்கூறியதனை விவரணம் செய்கிறார் 'பகவானுடைய' என்று தொடங்கி.

4. இதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'இங்கு' என்று தொடங்கி.

பட்டது அங்கு ஆர் உயிர்பட்டது' என்று அருளிச்செய்வர் எம்பெருமானுர். [1]'எல்லார் செய்வதும் குண அநுபவம்தானே அங்ஙனம் இருக்க, இவர்க்கு இவ் வாசி கூடினபடி என்? என்று நான் கேட்க, திருமணம் ஆன புதுப்பெண்ணுக்கு, கணவனுடைய கைகள் அவள் மேல் பட்டவாறே வேர்ப்பது விடுவது ஆமாறுபோலே, இவர் அநுபவத்தில் புதியர் ஆகையாலே வருகிறது காணும்' என்று சீயர் அருளிச்செய்தார்.

உயிரை அழித்த காரணங்களைச் சொல்லுகிறபடி மேல்: பேர் இதழ்த் தாமரைக் கண் கனி வாயது - பெரிய இதழை யுடைய தாமரைபோலே இருந்துள்ள கண்ணையும் சிவந்த வாயையுமுடையனாய். ஓர் கார் எழில் மேகம் தென் காட்கரை கோயில் கொள் - கறுத்த எழிலையுடைத்தான மேகம்போன்று வடிவையுடையனாய்த் திருக்காட்கரையைக் கோயிலாக உடையனாய். சீர் எழில் நால்தடம் தோள் - வீர ஸ்ரீயையும் எழிலையும் உடைத்தாய், கல்பகதரு பணைத்தாற் போலே நாலாய்ச் சுற்றுடைத்தான தோள்களையுடைய. தெய்வ வாரிக்கு - தெய்வங்கள் படும் கடலுக்கு. வாரி - கடல். தெய்வங்களை எல்லாம் படைத்தவனுக்கு என்றபடி. [2] தம்மைத் தாமே மதித்திருக்கிற தெய்வங்களைப் படைத்தவன் கண்டீர், யான் எனது என்னும் செருக்கு அற்ற என்னை அழித்தான்! [3]வடிவழகையும் அவ் ஊரில் இருப்பையும் காட்டி ஆயிற்று இவரை அழித்தது. (9)

947.

வாரிக் கொண்டு உன்னை விழுங்குவன் காணில் என்று
ஆர்வு உற்ற என்னை ஒழிய, என்னில் முன்னம்
பாரித்துத் தான் என்னை முற்றப் பருகினான்;
கார் ஒக்கும் காட்கரை அப்பன் கடியனே.

---

1. 'இங்கு' என்று அடைகொடாமல், "எனது உயிர் பட்டது" என்று பொதுவிலே இருப்பதனை நோக்கிச் சங்கிக்கிறார் 'எல்லார்' என்று தொடங்கி. 'இவ்வாசி' என்றது, "ஆர் உயிர் பட்டது எனது உயிர் பட்டது" என்ற வேற்றுமை.

2. "தெய்வவாரி" என்ற பதப் பிரயோகத்துக் கருத்து அருளிச்செய்கிறார் 'தம்மைத் தாமே' என்று தொடங்கி.

3. "கார் எழில் மேகம் தென்காட்கரை" என்றதனைக் கடாக்ஷித்து, அழித்த பிரகாரத்தைக் காட்டுகிறார் 'வடிவழகையும்' என்று தொடங்கி.

பொ - ரை :—உன்னைக் கண்டால் அப்படியே விழுங்கிவிடுவேன் என்று ஆசைப்பட்ட என் அளவு அன்றிக்கே, இப்படிச்செய்யவேண்டும் என்று எனக்கு முன்பே தான் எண்ணி என்னை அடியோடு பருகிவிட்டான்; ஆதலால், மேகத்தைப் போன்ற, திருக்காட்கரையில் எழுந்தருளி யிருக்கின்ற அப்பன் கடியனாய் இருந்தான்.

வி - கு :—ஒழிய என்பதற்கு, நான் நிற்க என்னலுமாம். ஒக்கும் அப்பன் என்க. கடியன் - விரைவு உள்ளவன். கடி - விரைவு.

ஈடு :—பத்தாம் பாட்டு. [1] தம்மோடு கலந்த எம்பெருமானுக்குத் தம்மிலும் காதல் மிக்கிருந்தபடியைச் சொல்லுகிறார்.

வாரிக்கொண்டு - [2] 'இந்தப் பொருளில் சிறிதும் பிறர்க்கு இல்லாதவாறு உண்ணக்கடவோம்' என்று இருந்தார் ஆயிற்று. என்றது, [3] "வழுவு இலா அடிமை செய்யவேண்டும்" என்று பாரித்ததனை. இதனால், [4] 'திருவனந்தாழ்வான் திருவடி முதலிய நித்திய சூரிகட்கும் அடிமை செய்ய இடம் கொடேன்' என்று இருந்தார் ஆயிற்று என்பதனைத் தெரிவித்தபடி. [5] "எல்லா அடிமைகளையும் நான் செய்வேன்" என்கிறபடியே. உன்னை - எல்லார்க்கும் தலைவனான உன்னை. விழுங்குவன் - [6] அடியவனுக்குக் கைங்கரியமே அன்றோ தாரகம். காணில் - உன்னைக் காணப் பெறில். என்று ஆர்வு உற்ற - இப்படி ஆசையை அடைந்த. என்னை ஒழிய - [7] என் அளவு பாராதே. என்னில் முன்னம் பாரித்து - நான் பாரித்த அளவும் அன்றிக்கே, நான் பாரித்த

---

1. "என்னில் முன்னம் பாரித்து" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "உன்னைக் காணில், வாரிக்கொண்டு விழுங்குவன் என்று பாரித்த" என்று சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் அருளிச்செய்கிறார் 'இந்தப் பொருளில்' என்று தொடங்கி.

3. "வழுவிலா அடிமை" என்பது, திருவாய்மொழி, 3. 3 : 1.

4. 'சிறிதும் பிறர்க்கு இல்லாதவாறு' என்று மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'திருவனந்தாழ்வான்' என்று தொடங்கி.

5. வழுவிலா அடிமை செய்யப் பாரித்ததற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'எல்லா அடிமைகளையும்' என்று தொடங்கி.

பவாம்ஸ்து ஸஹவைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஃ ஸ்வபதஸ்ச தே.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 31 : 25.

6. "விழுங்குவன்" என்கிறீரே? அடிமை தாரகமோ? என்ன, 'அடியவனுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

7. 'என் அளவு' என்றது, தான் அநுபவிக்கவேண்டும் என்று நினைக்கிற காதலின் மிகுதியை என்றபடி.

காலத்துக்கு முன்பே பாரித்து. [1] ஆசாரியனுடைய அங்கீகாரத்துக்குப் பின்பே அன்றோ இவருடைய பாரிப்பு; [2] சம்பந்தத்தை மறைப்பதற்குக் காரணம் இல்லாமையாலே, அவனுடைய பாரிப்பு உயிரோடு கூடியே உள்ளது அன்றோ.

தான்-எங்கும் பரந்திருப்பவனாய்த் தனக்குத்தானே உரியவனான தான். என்னை - அணு அளவினனாய்ப் பரதந்திரனான என்னை. முற்றப் பருகினான் - [3] தன் குணங்களையும் செயல்களையும் காட்டி என்னை நீர் ஆக்கிக் குறை சிறிதும் இல்லாதபடி பருகினான். ஸ்ரீராமர் [4] "அந்த விபீஷணனுடைய அந்த வார்த்தையைக் கேட்டு, அவனை வார்த்தையால் சமாதானம் பண்ணிக் கண்களால் பருகுவார்போல் நின்று வார்த்தையைச் சொன்னார்" என்கிறபடியே; இத் தலையை அழித்துச் செயல் புரிந்தான் என்றபடி. [5] உண்டபடி சொன்னார் மேல்; உண்டவனுக்குத் தண்ணீரும் வேண்டும் அன்றோ; ஆகையாலே, தண்ணீர் குடித்தபடி சொல்லுகிறார் 'பருகினான்' என்று. [6] அவனுடைய உண்ணும் சோறு பருகு நீர் இருக்கிறபடி அன்றோ இது. கார் ஒக்கும் காட்கரை அப்பன் - பரம

1. முன்னரே இவருக்குப் பாரிப்பு இல்லையோ? என்ன, 'ஆசாரியனுடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. இவர்க்கு முன்னே அவன் பாரிக்கைக்குக் காரணம் யாது? என்ன, 'சம்பந்தம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். சம்பந்தத்தை - சம்பந்த ஞானத்தை.

3. "பருகினான்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தன் குணங்களையும்' என்று தொடங்கி.

4. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'அந்த விபீஷணனுடைய' என்று தொடங்கி.

தஸ்ய தத்வசனம் ஸ்ருத்வா ராமோ வசநம் அப்ரவீத்
வசஸா ஸாந்த்வயித்வா ஏநம் லோசநாப்யாம் பிபந்நிவ.

என்பது, 16 : 65.

"இருந்த குலக் குமரர்தமை இருகண்ணின் முகத்து அழகு பருக நோக்கி
அருந்தவனை அடிவணங்கி யாரை இவர் உரைத்திடுமின் அடிகள்
என்பது, கம்பராமாயணம், மிதிலைக் காட்சிப்ப. 157. [என்ன"

"பருகுவன் அன்ன ஆர்வத்த னாகி" என்பது, நன்னூல்.

5. "பருகினான்" என்பதற்கு, ரசோக்தியாக அருளிச்செய்கிறார் 'உண்டபடி' என்று தொடங்கி. 'மேல்' என்றது, எட்டாம் பாசுரத்தை.

6. இந்த ரசோக்தியால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 6. 7 : 1.

உதாரனாய் அண்மையில் இருப்பவன். கடியனே - இன்ப நிலையில் விரைந்து இருக்கும். [1] இருவராகச் செயல் செய்யப் புக்கால் எதிர்த் தலைக்கு இடம் வையான். (10)

948.

கடியனாய்க் கஞ்சனைக் கொன்ற பிரான் தன்னைக்
கொடி மதிள் தென் குருகூர்ச் சடகோபன் சொல்
வடிவு அமை ஆயிரத்து இப் பத்தினால் சன்மம்
முடிவு எய்தி நாசம் கண்டீர்கள் எம் கானலே.

பொ - ரை :— சீற்றம் கொண்டவனாய்க் கம்சனைக் கொன்ற உபகாரகனைக் குறித்து, கொடிகள் கட்டிய மதிள்கள் சூழ்ந்த அழகிய திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபரால் அருளிச்செய்யப்பட்ட அழகு பொருந்திய ஆயிரம் திருப்பாசுரங்களுள் இந்தப் பத்துத் திருப்பாசுரங்களால் தொடர்ந்து வருகிற நம்முடைய பிறவியானது முடிவை அடைந்து, இந்தச் சம்சாரமும் அழிந்துவிடும் காண் என்கிறார்.

வி - கு :— எம் சன்மம் முடிவு எய்தி, கானல் நாசம் கண்டீர் எனக் கூட்டுக. கானல் - பேய்த்தேர். இங்கே சம்சாரத்தைக் குறித்தது.

ஈடு :— முடிவில், [2] இத் திருவாய்மொழியைக் கற்பார்க்கு, பிறவி முடிந்து, அதற்கு அடியான சம்சாரமும் நசிக்கும் என்கிறார்.

கடியனாய்க் கஞ்சனைக் கொன்ற பிரான் தன்னை - [3]கம்சன் தான் நினைத்த நினைவினை அவன் தன்னோடே போம்படி செய்தான். [4]தன்பக்கல் இல்லாதது, வந்தேறி; ஆதலால் '**கடியன் ஆய்**' என்கிறார். [5]"கொண்ட சீற்றம்" என்னக் கடவது

---

1. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'இருவராக' என்று தொடங்கி.

2. "பத்தினால் சன்மம் முடிவு எய்தி நாசம் கண்டீர்கள் எம் கானலே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. "கடியனாய்க் கஞ்சனைக் கொன்ற" என்கிறவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'கம்சன்' என்று தொடங்கி.

4. "ஆய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தன் பக்கல்' என்று தொடங்கி. "கடியனாய்" என்பதற்குக் கோபத்தைக் கொண்டவனாய் என்பது பொருள்.

5. வந்தேறி என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "கொண்ட சீற்றம்" என்று. இது, பெரிய திருமொழி, 5. 8: 3.

ஒரு காரியத்திற்காக ஏறிட்டுக்கொண்ட சீற்றம் என்றபடி.

"சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக்கு இனியானை" என்பது, திருப்பாவை.

அன்றோ. பிரான் தன்னை - [1]முன்பு உபகாரகன் ஆனவன் கண்டீர் நம்மை அழித்தான்! [2]உகந்தாரை அழித்தல் அன்றோ தீமையாவது; விரோதிகளை அழிக்குமது உபகாரம் அன்றோ. கொடி மதிள் தென்குருகூர் - [3]கம்சனைக் கொன்ற வெற்றிக்குக் கொடி கட்டிற்று திருநகரியிலே ஆயிற்று; [4]ஸ்வாமியின் வெற்றிக்கு, உரிய அடியார் இருந்த இடத்தே அன்றோ கொடி கட்டுவது. வடிவு அமை ஆயிரம் - முழுவதும் அழகினை உடைத்தாய் இருக்கை. என்றது, கட்டுஅடங்க அழகிதாய் இருக்கையைத் தெரிவித்தபடி.

[5]வெற்றி உண்டாகையாலே வெற்றி மாலைகளும் செல்லா நிற்கும் அன்றோ. [6]சன்மம் முடிவு எய்தி - பிறவிகளின் தொடர்ச்சிக்கு முடிவினைப்பெற்று. நாசம் கண்டீர் [7]எம் கானல்-பிறவிகட்கு அடியான சம்சாரமும் நசிக்கும். கானல் - பேய்த்தேர். [8]இன்னம் இங்கே பிறக்க இராமல், பகவானுடைய குணங்களை அநுசந்திக்கும் அநுசந்தானம் பொறுக்கக் கூடிய தேசத்திலே புகுவர்கள் என்றபடி. (11)

—: o :—

திருவாய்மொழி நூற்றந்தாதி

உருகுமால் என்நெஞ்சம் உன்செயல்கள் எண்ணிப்
பெருகுமால் வேட்கை எனப் பேசி—மருவுகின்ற
இன்னுப்புடன் அவன் சீர் எய்ந்து உரைத்த மாறன் சொல்
என் நாச் சொல்லாதிருப்பது எங்கு.

—: o :—

ஆழ்வார் எம்பெருமானர் சீயர் திருவடிகளே அரண்.

---

1. நீராகும்படி அழிக்கிறவனைப் "பிரான்" என்பான் என்? என்ன, 'முன்பு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. "கொன்றபிரான்" என்கிறாரே? கொல்லுதல் உபகாரம் ஆகுமோ? என்ன, 'உகந்தாரை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. பதச் சேர்த்திக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'கம்சனை' என்று தொடங்கி.

4. திருநகரியிலே கொடி கட்டுவான் என்? என்ன, 'ஸ்வாமியின்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. "கஞ்சனைக் கொன்றபிரான் தன்னை வடிவமை ஆயிரம்" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'வெற்றி உண்டாகையாலே' என்று தொடங்கி. வெற்றி மாலைகள் - துதி மாலைகள்.

6. "சன்மம்" என்றது, தொகுதி ஒருமை. "மொழியாய்த் தொடரினும் முன் அனைத்து எழுத்தே" (நன்னூல்) என்புழிப் போன்று.

7. "எம்" என்று, தம்முடைய சம்பந்திகளைச் சொல்லுகிறார்.

8. மேற்கூறியதனால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'இன்னம்' என்று தொடங்கி.

ஏழாந் திருவாய்மொழி — "எங்கானல்"

முன்னுரை

—: o :—

[1]மேல் திருவாய்மொழியில் பிரீதி இன்மையை உட்கொண்ட குணங்களின் நினைவாலே மிகவும் பிரீதியை அடைந்தவர், நல்வினைக் குறைவாலே பிரீதி இன்மையே தலை எடுத்து, அவனைப் பெற்றால் பிழைத்தல், பெறாவிடில் முடிதல்ஆம்படி தமக்கு உண்டான தம்முடைய நிலையினை அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார்.

[2] இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து பிரிந்தாள் ஒரு பிராட்டி, அவன் வடிவழகிலே ஈடுபட்டுத் துயரம் உற்றவளாய், [3] தன் ஆற்றாமை கைகொடுக்கத் தன் உபவனத்திலே சென்று, அங்கு இருக்கிற பறவைகளைக் குறித்து, [4] "பின்னானார் வணங்கும் சோதி திருமூழிக்களம்" என்கிறபடியே, தூது போவார்க்கு வருந்தி அறிவிக்க வேண்டாதபடி திருமூழிக்களத்திலே வந்து நின்றருளினான்; [5] தனக்கு நல்லாரை விடமாட்டாதவன் ஆகையாலே. நம் நிலை அறியாதிருந்தான் அத்தனை; அருளுடையவன் ஆகையாலே நம் நிலையை அறிவிக்க வரும்; 'உம்மைப் பிரிந்தார் தரிப்பரோ?' என்று அறிவிக்க வேண்டும் என்று அவற்றை விநயத்தோடு இரக்கிறாள் ஒரு பிராட்டி பேச்சாலே தம் நிலையை அருளிச்செய்கிறார்.

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இதற்கும் இயைபு அருளிச்செய்கிறார் 'மேல் திருவாய்மொழியில்' என்று தொடங்கி. 'பெறாவிடில் முடிதல் ஆம்படி' என்றது, இத் திருவாய்மொழியில் வருகின்ற "என் அகமேனி ஒழியாமே" என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி.

2. 'அந்யாபதேசத்தாலே' என்றதனை விவரிக்கிறார் 'இயற்கைப் புணர்ச்சி' என்று தொடங்கி.

3. துயரம் உற்றவள் ஆனால் உபவனத்திற்குச் செல்லுதல் எப்படி? என்ன, 'தன் ஆற்றாமை கைகொடுக்க' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. 'பின்னானார்' என்பது, திருநெடுந்தாண்டகம், 10.

5. ஆயின், வாராதிருப்பான் என்? என்ன, 'தனக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இத் திருவாய்மொழியில் வருகின்ற "தமரோடு அங்கு உறைவார்க்கு" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'நல்லாரை விடமாட்டாதவன்ஆகையாலே' என்றும், "தாம் தம்மைக் கொண்டுஅகல்தல் தகவு அன்று" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அருளுடையவன்ஆகையாலே' என்றும், "நும் கால்கள் என்தலைமேல் கெழுமீரோ" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'விநயத்தோடு' என்றும் அருளிச்செய்கிறார்.

[1]“அஞ்சிறைய மடநாராய்” என்ற திருவாய்மொழியிலே “நம் பக்கல் உள்ள குற்றத்தால் வாராதொழிந்தானத்தனை; குற்றங்களைப் பொறுக்கும் அவனுடைய பொறையுடைமையை அறிவிக்க வருவான்” என்று பொறையுடைமையையே பற்றுசாகக்கொண்டு தூதுவிட்டாள். [2]“வைகல் பூங்கழிவாய்” என்ற திருவாய்மொழியில், “நல்லது கண்டால் கால்தாழுமவன் ஆகையாலே திருவண்வண்டூரில் நிறைவினைக் கண்டு கால் தாழ்ந்தானத்தனை; நம் துயரத்தை அறிவித்தால் தன் இனிமையில் நெஞ்சு வைப்பான் ஒருவன் அல்லன்” என்று அது பற்றுசாகத் தூதுவிட்டாள். [3]“பொன்னுலகு ஆளீரோ” என்ற திருவாய்மொழியில், “திருக்கோளூர் ஏறப்போக” என்று தன்னுடைய உபவனத்தளவும் சென்று மேலும் செல்லுவதற்கு வலி இல்லாமையாலே போகமாட்டாதே இருக்கிற பிராட்டி, பின்னையும், அவன் வரக் காணாமையாலே, “வாராதொழிகைக்குக் காரணம், தன் செல்வப் பரப்பாலே; தான் அடியார்களோடு ஒன்றுபட்ட இன்பத்தையுடையன் ஆகையாலே வரும்” என்று ஒன்றுபட்ட இன்பத்தையுடையனாக இருத்தலையே பற்றுசாகத் தூதுவிட்டாள். இதில், “தனக்கு நல்லராய் இருப்பாரை விடமாட்டாமையாலே வாராதிருந்தானத்தனை;

---

1. மேலே தூது விட்ட மூன்று திருவாய்மொழிகட்கும் இப்போது தூதுவிடுகின்ற இத் திருவாய்மொழிக்கும் உள்ள வேறுபாட்டினை அருளிச்செய்கிறார் ‘அஞ்சிறைய மடநாராய்’ என்று தொடங்கி. “அஞ்சிறைய மடநாராய்” என்ற திருவாய்மொழியில் வருகின்ற “என்பிழையே நினைந்தருளி” என்றதனை நோக்கி ‘நம் பக்கல் உள்ள குற்றத்தால்’ என்றும், “என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு” என்றதனை நோக்கிக் ‘குற்றங்களைப் பொறுக்கும் அவனுடைய பொறையுடைமையை’ என்றும் அருளிச்செய்கிறார்.

2. “வைகல் பூங்கழிவாய்” என்ற திருவாய்மொழியில் வருகின்ற “சிறந்த செல்வம்” என்ற பகுதியை நோக்கித் ‘திருவண்வண்டூரில் நிறைவினைக் கண்டு’ என்றும், “என்னையும் உளள் என்மின்கள்” என்றதனைத் திருவுள்ளம்பற்றி ‘அது பற்றுசாகத் தூதுவிட்டாள்’ என்றும் அருளிச்செய்கிறார். ‘அது’ என்றது, அதனை; எதனை எனின், துன்புற்றவர்களைப் பாதுகாத்தலையே தனக்குக் கடமையாகக் கொண்டிருத்தலை.

3. “பொன்னுலகு ஆளீரோ” என்ற திருவாய்மொழியில் வருகின்ற “யாவையும் யாவருமாய்” அல்லது, “முன் உலகங்கள் எல்லாம் படைத்த” என்றதனைத் திருவுள்ளம்பற்றி ‘வாராதொழிகைக்குக் காரணம் தன் செல்வப் பரப்பாலே’ என்றும்; “தண் துழாய் நமக்கு அன்றி நல்கான்” என்றதனைத் திருவுள்ளம்பற்றி ‘அடியார்களோடு ஒன்றுபட்ட இன்பத்தையுடையன் ஆகையாலே வரும்’ என்றும் அருளிச்செய்கிறார்.

[1]தன் வடிவழகு அது; குணங்கள் அவை; ஆனபின்பு, பிரிந்தார்க்குப் பிழைத்திருக்கப் போமோ?" என்று அவன் வடிவழகும் குணங்களும் பற்றுசாகத் தூதுவிடுகிருள்.

949.

எம் கானல் அகம் கழிவாய் இரைதேர்ந்து இங்கு இனிதுஅமரும்
செங்கால மடநாராய்! திருமூழிக்களத்து உறையும்
கொங்குஆர் பூந்துழாய் முடி எம் குடக்கூத்தர்க்கு என்தூதாய்
நும் கால்கள் என் தலைமேல் கெழுமீரோ, நுமரோடே.

பொ-ரை:—எம்முடைய கடற்கரைச் சோலையின்உள்ளே இருக்கின்ற உப்பங்கழியிலே இரையைத் தேடிக்கொண்டு இங்கே இனிதாகத் தங்கியிருக்கின்ற சிவந்த கால்களையும் மடப்பத்தையுமுடைய நாரையே! திருமூழிக்களம் என்ற திவ்வியதேசத்திலே எழுந்தருளியிருக்கின்ற தேன் பொருந்திய அழகிய திருத்துழாயை முடியிலே தரித்த குடக்கூத்து ஆடிய என் கண்ணபிரானிடத்தில் என்னுடைய தூதாகச் சென்று, உன் உறவினர்களோடே உன்னுடைய கால்களை என் தலையின் மேலே சேர்க்கவேண்டும் என்கிருள்.

வி-கு:—நாராய்! கூத்தர்க்கு என் தூதாய் நுமரோடே நும் கால்களை என் தலைமேல் கெழுமீர் என்க. 'நாராய்' என்பது சாதி ஒருமை. எம்: தனித் தன்மைப் பன்மை.

இத் திருவாய்மொழி, தரவு கொச்சகக் கலிப்பா.

ஈடு:—முதற் பாட்டு. [2]சில நாரைகளைக் குறித்து அவன் தன் அழகாலும் குணங்களாலும் தன்னைத் தோற்பித்தபடியைச் சொல்லி, என் நிலையை அவனுக்கு அறிவித்து வந்து உங்கள் திருவடிகளை என் தலைமேலே வைக்கவேண்டும் என்கிருள்.

---

1. இத் திருவாய்மொழியில் வருகின்ற "அக்கமலத்து இலைபோலும் திருமேனி அடிகளுக்கு" என்றதனைத் திருவுள்ளம்பற்றி, 'தன் வடிவழகு அது' என்றும், "தமரோடு அங்கு உறைவார்க்கு" என்றதனைத் திருவுள்ளம் பற்றிக் 'குணங்கள் அவை' என்றும் அருளிச்செய்கிருர்.

2. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிருர். "திருமூழிக்களத்து உறையும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றிக் 'குணங்களாலும்' என்கிருர்.

எம் கானல் - பகவத் விஷயத்தில் உபகாரம் செய்கின்றவர்களோடு வேறுபாடு அறக் கலந்து ஒத்த இன்பத்தினையுடையராகச் செல்லுதல் தக்கதாக இருக்க, 'எம் கானல்' என்று செருக்குத் தோன்றக் கூறுதல் என்? என்ன, ஒன்றனைத் தம்மது ஆக்கிக் கொடுத்து அல்லது, தரிக்கமாட்டாத [1] உபகாரத்தின் நினைவாலே 'எம்' என்று சொல்லுகிறது. [2] பிறர்க்குக் கொடுப்பதற்காக வரும் எனது என்னும் செருக்கு உத்தேசியமாக இருக்கும் அன்றோ. [3] தன்னைப் பகவானுக்கு உறுப்பு ஆக்கினவன்றோ தன்னது அடங்கலும் அங்குத்தைக்கு உரிய பொருளாக இருக்க, உபகாரத்தின் நினைவு அன்றோ இப்படிச் சொல்லுவித்தது. [4] ஆத்மாவை அவன் திருவடியிலே இடுவதற்கும் அடி இதுவே அன்றோ. கானல் - கடற்கரைச் சோலை. அன்றிக்கே, நெய்தல் நிலம் என்னுதல். அகம் கழிவாய் - உள்ளான கழியிடத்து. [5] உள்ளிடத்திலே புகுவதற்கு அநுமதி வேண்டாதபடி அன்றோ இவை அந்தரங்கமாய் இருக்கிறபடி. என்றது, [6] "இரகசியமான சமாசாரங்கள் சொல்லப்பட்டன" என்கிறபடியே, வசிக்கின்றன என்றபடி. இரை தேர்ந்து - இரைதேடி. [7] "கூசுதல் இல்லாமல் வீட்டில் உணவு

1. உபகாரமாவது, இந்த நிலையிலே வந்து முகங்காட்டித் தரிப்பித்தது.

2. எங்ஙனமாயினும், எனது என்னும் செருக்குக் கூடாதே அன்றோ? என்ன, 'பிறர்க்குக் கொடுப்பதற்காக' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. 'பகவத்விஷயத்தில்' என்று தொடங்கி மேலே அருளிச்செய்த வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'தன்னைப் பகவானுக்கு' என்று தொடங்கி. 'அங்குத்தைக்கு' என்றது, பகவானோடு சேர்ப்பிக்குமவர்கட்கு என்றபடி. 'இப்படிச் சொல்லுவித்தது' என்றது, "எங்கானல்" என்று சொல்லும்படி செய்வித்தது என்றபடி.

4. அப்படி உபகாரத்தின் நினைவாலே 'எனது' என்று சொன்ன இடம் உண்டோ? என்ன, 'ஆத்மாவை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இதற்கு, "எனது ஆவி தந்தொழிந்தேன்" (திருவாய். 2. 3: 4.) என்றதிலே நோக்கு.

5. "அகங்கழிவாய்" என்ற பதங்கட்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உள்ளிடத்திலே' என்று தொடங்கி.

6. அந்தரங்கமான காரியத்தைக் காட்டுகிறார் 'இரகசியமான' என்று தொடங்கி.

கதிதானி ரஹஸ்யானி க்ருஹே புக்தம் அஸங்கிதம்
தர்ஸிதானி களத்ராணி ஸௌஹார்த்தம் கிமத: பரம்.

என்பது, பாரதம், உத்யோகபர்வம். இது, கர்ணனுடைய வார்த்தை.

7. 'கூசுதல் இல்லாமல்' என்று தொடங்கும் வாக்கியம், மேலே காட்டிய சுலோகத்திலே உள்ள 'க்ருஹே புக்தம் அஸங்கிதம்' என்றதன் பொருள்.

உண்ணப்பட்டது" என்கிறபடியே: [1] பண்டு தனக்கு உதவி செய்தபடியைச் சொல்லுகிறாள், இப்போது உதவி செய்வதற்காக. இங்கு - இத்தலையை அழித்துத் தூதுவிட வேண்டும்படி அகல இருந்த அவனைப் போல் அன்றியே, அண்மையிலே இருப்பவராகப் பெற்றேன் என்கிறாள்.

இனிது அமரும் - இனிதாக நம்மோடே சேர்ந்து வசிக்கின்ற. அன்றிக்கே, [2]சேவலோடே சிறந்த இன்பங்களை அநுபவித்து வசிக்கிற என்னுதல். செம் கால - சிவந்த கால்களையுடைய. என்றது, [3] என்மடியிலே இருக்கும் கால்போலே இருந்ததே நான் தலையிலே வைத்துக்கொள்ளப் புகுகிற காலும் என்றபடி. மடம் நாராய் - அடக்கத்தோடு இருக்கிற நாரையே!

திருமூழிக்களத்து உறையும் - தூது செல்வார்க்கு அடுத்து அணித்தாகத் திருமூழிக்களத்திலே நிற்கையாலே, பரமபதத்தைக் காட்டிலும் ஏற்றம் இருக்கிறபடி. கொங்கு ஆர் பூந்துழாய் முடி எம் குடக் கூத்தர்க்கு-ஒப்பனையும் மனத்தைக் கவர்கின்ற செயல்களும் ஆகிற இந்த இரண்டனையும் எனக்கு ஆக்கிவைத்தவர்க்கு. 'எம்' என்பதனை, 'கொங்கு ஆர் பூந் துழாய் முடி' என்பதனோடும் கூட்டுக. 'எம்' என்பது, தனித்தன்மைப் பன்மை. என் தூதாய் - அவ் ஒப்பனையிலும் செயலிலும் தோற்று அவனைப் பெற்று உய்தல், இல்லையாகில் முடிதலாய் இருக்கிற எனக்குத் தூது செல்லுதலாகிற தொழிலை மேற்கொண்டு. நும் கால்கள் என் தலைமேல் - உதவி செய்கின்றவர்களான உங்களுடைய கால்களை, நீங்கள் உதவி செய்ய அதனாலே உய்வான் இருக்கிற என் தலைமேலே. [4] மயிர் கழுவிப்

---

1. இவற்றைத் தூது விட நினைக்கிறவள், அவை இரை தேடுவதனைச் சொல்லுவான் என்? என்ன, 'பண்டு தனக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறான். பண்டு உபகரிக்கையாவது, தூது போவதற்கு முன்னே தன் கழியிலே இரைதேடுதல்.

2. இதனால், மேலே காட்டிய சுலோகத்திலே உள்ள "தர்ஸிதாநி களத்ராணி" என்ற பகுதியைச் சொல்லுகிறது என்றபடி.

3. காலின் சிவப்பினைச் சொல்லுகிறவளுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'என் மடியிலே' என்று தொடங்கி. 'மடியிலே இருக்கும் கால்' என்றது, தன் நாயகன் கால்களை.

4. "என் தலைமேல்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'மயிர் கழுவி' என்று தொடங்கி. என்றது, தன் தலை அவற்றின் கால்களுக்குத் தக்கது என்னுமிடம் தோற்றுகைக்காக விசேடிக்கிறது என்றபடி.

பூச் சூட இருப்பாரைப்போலே. [1] அவற்றின் காலாகில் இவள் தலையிலே இருக்கப் படைக்கப்பட்டன; இவள் தலையாகில் அவற்றின் கால்கள் வைக்கப் படைக்கப்பட்டு இருந்தது. இரண்டும் பிறர் பொருட்டு இருந்தபடி. கெழுமீரோ - [2] ஒரு விதிகொண்டு செய்யவேண்டா ஆயிற்று இங்கு; [3] அவனுக்கு ஆக்கினவாறே உங்களதாக இருக்கும் அன்றே. கொடுவந்து சேர்த்தீரோ? நுமரோடே - [4] "புத்திரர்களோடும் பௌத்திரர்களோடும் ஏனை உறவினர்களோடும்" என்னுமாறு போலே உங்கள் கூட்டத்தோடே. [5] "ஆசார்யனைப் போன்று அவனுடைய மகனிடத்திலும் நடந்துகொள்க" என்னக் கடவது அன்றே. (1)

950.

நுமரோடும் பிரியாதே, நீரும் நும் சேவலுமாய்
அமர் காதல் குருகினங்காள்! அணிமுழிக்களத்து உறையும்
எமராலும் பழிப்புண்டு, இங்கு என்? தம்மால் இழிப்புண்டு
தமரோடு அங்கு உறைவார்க்குத் தக்கிலமே? கேளீரே!

பொ - ரை :—உறவினர்களோடும் பிரியாமல் நீரும் உம்முடைய சேவலுமாய்ப் பொருந்திய காதலையுடைய குருகுக் கூட்டங்களே! அழகிய திருமுழிக்களத்திலே எழுந்தருளியிருக்கின்ற தலைவராகிய தம்மாலும் இழிக்கப்பட்டு, எம் உறவினர்களாலும் பழிக்கப்பட்டு இங்கு

---

1. "நும் கால்கள், என் தலை" என்ற பதச் சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவற்றின் காலாகில்' என்று தொடங்கி. இங்ஙனம் கூறியதனால் போதரும் பொருளினை அருளிச்செய்கிறார் 'இரண்டும்' என்று தொடங்கி.

2. "கெழுமீரோ" என்றதில் உள்ள ஓகாரத்துக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஒரு விதி' என்று தொடங்கி.

3. அங்ஙனமாதற்குக் காரணம் யாது? என்ன, 'அவனுக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. ஏதத் ஆக்யாநம் ஆயுஷ்யம் படந் ராமாயணம் நர:
ஸபுத்ர பௌத்ர: ஸகண: ப்ரேத்ய ஸ்வர்க்கே மஹீயதே.
என்றது, ஸ்ரீராமா. பால. 1 : 99.

5. அப்படிப் புத்திரர்களும் உத்தேஸ்யரோ? என்ன, 'ஆசாரியனைப் போன்று' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

ஆசார்யவத் ஆசார்ய தாரே வ்ருத்தி: ததா ஸமாதிஷ்டே
அத்யாபயதி வ்ருத்தஸரேச ஸப்ரஹ்மசாரிணி உச்சிஷ்டாஸந
வர்ஜம்; ஆசார்யவத் ஆசார்ய புத்ரே வ்ருத்தி:.
என்பது, ஆபத்தம்ப தர்மம்.

இருக்கும் இருப்பால் யாது பயன்? தம் பரிஜனத்தோடு திருமூழிக்களத்திலே எழுந்தருளியிருப்பவர்க்கு நாங்கள் தக்கோம் ஆகேமோ? கேளுங்கோள் என்கிறாள்.

வி - கு :—குருகு இனங்காள்! அணிமூழிக்களத்து உறையும் தம்மால் இழிப்புண்டு எமராலும் பழிப்புண்டு இங்கு என்? என்று கூட்டுக. குருகு- நாரையின் ஒரு பிரிவு.

ஈடு :—இரண்டாம் பாட்டு. [1]சில குருகு இனங்களைக் குறித்து, "தாமும் தமக்கு நல்லாருமாய் இருக்கும் இருப்பை நான் இழந்தே போமித்தனையோ?" என்று அறிவியுங்கோள் என்கிறாள்.

நுமரோடும் பிரியாதே - [2]'தமரோடு அங்கு உறைவார்' என்று ஆயிற்று அடையத் தக்கவனை இறைவனைப் பற்றிச் சொல்ல நினைக்கிறது; அப்படியே இவையும் குறைவு அற்று இருக்கிறபடி. [3]குறைவாளர் காரியத்தைக் குறைவு அற்றார் தீர்க்க வேண்டாவோ! [4]உண்டார்க்கு, பட்டினி கிடந்தார் பசியினை நீக்குதல் செய்யத் தக்க காரியம் அன்றோ. நீரும் நும் சேவலுமாய் - சேவல் நினைவு அறிந்து கலக்கும் நீரும், உம்முடைய கருத்து அறிந்து கலக்கும் சேவலுமாய். என்றது, கலவியின் இன்பத்தினை அறியும் நீங்கள், பிரிந்தாருடைய செல்லாமையும் அறிய வேண்டாவோ! என்றபடி. அமர் காதல் குருகு இனங்காள் - ஒன்றற்கு ஒன்று பொருந்தின காதலையுடைய குருகு இனங்களே! என்றது, [5]ஆசையிலே, பிரிவினை உண்டாக்காத ஆசை உண்டே அன்றோ! [6]ஆசையிலும்

---

1. "தமரோடு அங்கு உறைவார்க்குத் தக்கிலமே கேளீர்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. நாரைகளைக் குறித்து "நுமரோடு" என்று சொன்னதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தமரோடு' என்று தொடங்கி.

3. நாரைகள் குறைவு அற்று இருந்தால் தமக்குப் பயன் யாது? என்ன, 'குறைவாளர்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. லௌகிக திருஷ்டாந்தத்தாலே அதனை உறுதிப்படுத்துகிறார் 'உண்டார்க்கு' என்று தொடங்கி.

5. மேலே கூறிய பொருளினை விவரணம் செய்கிறார் 'ஆசையிலே' என்று தொடங்கி.

6. "அமர்காதல்", "நுமரோடும் பிரியாதே", "நீரும் நும் சேவலுமாய்" என்பவற்றால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'ஆசையிலும்' என்று தொடங்கி.

குறைவு அற்று, பிரிவு இன்றிக்கே, கருத்து அறிந்து கலக்கவும் கூடியவர்களாய் இருப்பதே நீங்கள் முன்னம் என்கிறாள்! என்றபடி.

[1] 'குருகு இனங்காள்' என்று விளித்து வைத்து, தொடங்கின வார்த்தை முடியச் சொல்லமாட்டாத பலக் குறைவாலே பாதி வார்த்தையிலேயே அதனை முடித்து, தான் இருக்கிற இருப்பிலே துக்கிக்கிறாள். எமராலும் பழிப்புண்டு அணி மூழிக்களத்து உறையும் தம்மாலும் இழிப்புண்டு - [2] ஒரு காலத்திலே உண்டான கலவியே காரணமாக உறவினர்கள் கைவிட்டார்கள்; ஒரு காலத்திலே உண்டான கலவியளவிலே தாமும் விரும்பவில்லை. என்றது, [3]உறவினர்கள் கைவிட்டதே காரணமாகத் தாம் கைக்கொள்ளவேண்டும்; பிற்பாடர்க்குக் காட்சி கொடுக்க வந்து நிற்கிற நிலை ஆகையாலும் தாம் கைக்கொள்ள வேண்டும்; இவ் இரண்டும் என் அளவில் விரும்பாமைக்குக் காரணமாவதே! என்கிறார் என்றபடி. இங்கு என் - இவ் இருப்புக்கு என்ன பிரயோஜனம் உண்டு? என்றது, [4] தம்மைப் பெற்று இருக்கிறேனே? பந்துக்களைப் பெற்று இருக்கிறேனே? என்றபடி. [5] இங்குள்ளார் கைவிட்டால் பின்பு தம் எல்லைக்குள் ஆக்கிக்கொள்ள வேண்டாவோ? [6] சர்வேஸ்வரனிடத்தில் உட்புக உட்புக, அன்று தொடங்கிக் கைவிடுவார்களே அன்றோ இவ் உலகத்திலுள்ளார்.

---

1. "இங்கு என்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார் "குருகு இனங்காள்!" என்று தொடங்கி. 'முடியச் சொல்லமாட்டாத பலக்குறைவாலே' என்றது, "தக்கிலமே கேளீர்" என்று முடியச் சொல்லமாட்டாத பலக்குறைவாலே என்றபடி.

2. "எமராலும் பழிப்புண்டு, தம்மாலும் இழிப்புண்டு" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஒரு காலத்திலே' என்று தொடங்கி.

3. மேலே கூறிய வாக்கியங்களால் பலித்த பொருளை அருளிச்செய்கிறார் 'உறவினர்கள்' என்று தொடங்கி.

4. என், பிரயோஜனம் இல்லையோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'தம்மை' என்று தொடங்கி.

5. ஆனால், செய்ய அடுப்பது என்? என்ன, 'இங்குள்ளார்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. எப்பொழுதோ ஒரு காலத்து உண்டான கலவியைக் கண்ட மாத்திரத்தில் பந்துக்கள் கைவிடுவார்களோ? என்ன, 'சர்வேஶ்வரனிடத்தில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

[1] அவ்வளவிலே அதனை விட்டு, பின்னையும், தன் செல்லாமையாலே அவற்றைக் குறித்து வார்த்தை சொல்லுகிறாள் மேல்: தமரோடு அங்கு உறைவார்க்கு - தம் பரிஜனங்களோடே அங்கே நித்தியவாசம் செய்கிற தமக்கு. தக்கிலமே கேளீர் - நாங்கள் ஆகேமோ? என்று கேளுங்கோள். என்றது, [2] தாமும் தமக்கு நல்லாருமாய் இருக்கிற இருப்புக்கு, "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ" என்று இருப்பார் ஆகாதோ என்று கேளுங்கோள்? என்றபடி. (2)

951.

தக்கிலமே கேளீர்கள் ; தடம் புனல்வாய் இரை தேரும்
கொக்கினங்காள்! குருகினங்காள்! குளிர் மூழிக் களத்துறையும்
செக்கமலத்து அலர் போலும் கண் கை கால் செங்கனி வாய்
அக் கமலத்து இலை போலும் திருமேனி அடிகளுக்கே.

பொ - ரை :—விசாலமான தண்ணீரிலே இரையைத் தேடுகின்ற கொக்குக் கூட்டங்களே! குருகு இனங்களே! குளிர்ந்த திருமூழிக்களத்திலே எழுந்தருளியிருக்கின்ற, செந்தாமரை போன்ற திருக்கண்களையும் திருக்கைகளையும் திருவடிகளையும் சிவந்து கனிந்த திருவாயினையும் அந்தத் தாமரையின் இலையைப் போன்ற திருமேனியையுமுடைய ஸ்வாமிகளைக் கண்டு இவ் அழகினை அநுபவிப்பதற்கு நாங்கள் தக்கவர்கள் அல்லேமோ? என்று கேளுங்கோள் என்கிறாள்.

வி - கு:—கொக்குஇனங்காள்! குருகுஇனங்காள்! திருமேனி அடிகளைக் கண்டு தக்கிலமே என்று கேளீர்கள் என்க. அடிகளுக்கு: வேற்றுமை மயக்கம்.

ஈடு:—மூன்றாம் பாட்டு.[3] சில கொக்குஇனங்களையும் குருகு இனங்களையும் நோக்கி, தன் அழகு காண்கைக்கு நாங்கள் தகுதியேம் அல்லேமோ? என்று கேளீர் என்கிறாள்.

---

1. மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'அவ்வளவிலே' என்று தொடங்கி. அவ்வளவிலே - துக்கிக்கிற அளவிலே. அதனை - துக்கத்தை.

2. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'தாமும்' என்று தொடங்கி. 'அடியார்கள்' என்றது, திருவாய்மொழி, 2. 3 : 10.

3. "கொக்கு இனங்காள்! குருகு இனங்காள்! திருமேனி அடிகளுக்குத் தக்கிலமே கேளீர்கள்" என்பதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

தக்கிலமே கேளீர்கள் -[1] நாம் ஒன்றிலே துணியும்படி அறுதியாகக் கேட்டுப் போருங்கோள். என்றது, [2] அவன் இன்னம் " இவள் வேண்டும் " என்று இருந்தானாகில் உயிரை வருந்தியாகிலும் நோக்கிக் கொண்டு கிடக்கவும், 'வேண்டா' என்று இருந்தானாகில் நாமும் ஒன்றிலே துணியும்படியும் அறுதியாகக் கேட்டு விடுங்கோள் என்றபடி. தடம் புனல் வாய் இரை தேரும் - மிகுதியாகத் தண்ணீர் நிறைந்திருக்கின்ற பொய்கையில் நீரிலே இரை தேடுகிற அளவாய் இருந்தது உங்களுக்கு. என்றது, [3]" உபவாசத்தாலே இளைத்தவள் " என்கிற படியே, உபவாசத்தாலே இளைத்தவளாக இருக்கிற என்னைப் போல்அன்றியே, இரைமிடற்றுக்குக் கீழ் இழியும்படிஅன்றோ நீங்கள் கூடி குறைவுஅற்று இருக்கும் தன்மை! என்கிறாள் என்றபடி. கொக்குஇனங்காள் குருகுஇனங்காள் - [4] "எந்தப் பிராட்டியை ஆயிரக் கணக்கான குரங்குகள் தேடுகின்றனவோ"என்கிறபடியே, கண்ணால் கண்டவற்றை அடைய ஏவுகிறாள் ; [5] "சிலவற்றைப் போகவிட்டோம், அவை நம் காரியம் தலைக்கட்டும் " என்று ஆறி இருக்கும் விஷயம் அன்றே! கொக்கு - கொய்யடிநாரை.

குளிர் மூழிக்களத்து உறையும்-[6]விரகத்தாலே தபிக்கப்பட்டு இருக்கின்ற எனக்கு, சிரமத்தைப் போக்கக்கூடியதான அங்

---

1. மீண்டும் இப்பாசுரத்தில் "தக்கிலமே கேளீர்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'நாம் ஒன்றிலே' என்று தொடங்கி.

2. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'அவன் இன்னம்' என்று தொடங்கி.

3. மேல் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'உபவாசத்தாலே' என்று தொடங்கி-

தத꞉ மலிந ஸம்வீதாம் ராக்ஷஸீபி꞉ ஸமாவ்ருதாம்
உபவாஸ க்ருஶாம் தீநாம் நிஶ்வஸந்தீம் புந꞉ புந꞉.

என்பது, ஸ்ரீராமா. சுந். 15 : 19.

4. "இனங்காள்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'எந்தப் பிராட்டியை' என்று தொடங்கி.

யாம் கபீநாம் ஸஹஸ்ராணி ஸுபஹூநி அயுதாநி ச
திக்ஷு ஸர்வாஸு மார்க்கந்தே ஸேயம் ஆஸாதிதா மயா.

என்பது, ஸ்ரீராமா. சுந். 30 : 3.

5. முன்னே அனுப்பிய பறவைகள் வருமளவும் ஆறி இராமல் கண்ட பறவைகளை எல்லாம் தூதுவிடுதற்குக் காரணம் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'சிலவற்றை' என்று தொடங்கி.

6. "குளிர்" என்ற அடைமொழிக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'விரகத்தாலே' என்று தொடங்கி.

தத்தேசத்தை அடைதல் அரிது ஆவதே! செக்கமலத்து அலர் போலும் கண் கை கால் செம்கனி வாய்-அந்தக் குளிர்த்துக்கு அடியான உள்ளில் [1]வாசத்தடம் இருக்கிறபடி. சிவந்து அலர்ந்த தாமரை போலே இருக்கிற கண் முதலான திவ்விய அவயவங்களையுடையவன்; [2]முதல் உறவு செய்யும் கண், அந் நோக்குக்குத் தோற்றாரை அணைக்கும் கை, ஊற்று இன்பத்துக்குத் தோற்றார் விழும் திருவடிகள், திருவடிகளிலே விழுந் தாரை நல்வார்த்தை சொல்லித் தரிப்பிக்கும் முறுவல். அக் கமலத்து இலை போலும் திருமேனி - அவயவங்களுக்குப் பர பாகமான செந்தாமரை இலை போலே ஆயிற்றுத் திருமேனி இருப்பது. [3]'வெண்டாமரை' என்னில், வேறுபட்ட இன மாகும் என்று கருதி 'அக்கமலம்' என்கிறது. இதனால், அநு பவிக்கிறவர்களுக்கு உஜ்ஜீவனமான வடிவைக் கூறியபடி. அடிகளுக்கு-[4] அந்த அவயவங்களின் அழகையும் வடிவழகை யும் காட்டி அடிமை கொண்டவருக்கு. [5]இவ் வடிவழகிற்குத் தோற்றுப் பசலையைத் தரித்திருப்பார் அங்குத்தைக்குத் தகா தவரோ என்று கேட்டுப் போருங்கோள். [6]அவன் புருடோத் தமன் ஆனால், இவள் பெண்களுக்குள்ளே உயர்ந்தவள் ஆகும் போது இப்படியே இருக்க வேண்டும் அன்றோ. (3)

---

1. அவயவங்கள் தாமரை ஆனால் அவை இருக்கும் இடம் தடாகம் என்னுமதனாலே 'வாசத்தடம்' என்கிறார். இது, திருவாய்மொழி, 8. 5 : 1.

2. "கண், கை, கால், வாய்" என்ற முறை வைப்பிற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'முதல் உறவு' என்று தொடங்கி.

3. கமலத்து இலை என்னாமல் "அக் கமலத்து இலை" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வெண்டாமரை' என்று தொடங்கி. என்றது, பொதுவிலே 'கமலம்' என்றால், வெண்டாமரையையும் சொல்லுமாகையாலே, அதனை விலக்குவதற்காக "அக்கமலம்" என்று செந்தாமரையை விசேடிக் கிறது என்றபடி.

4. "கண், கை, கால், செங்கனி வாய், திருமேனி" என்றதன்பின் "அடிகளுக்கே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அந்த அவயவங் களின்' என்று தொடங்கி.

5. மேலே கூறிய வாக்கியத்திற்கு, பாவம், அருளிச்செய்கிறார் 'இவ் வடிவழகிற்கு' என்று தொடங்கி.

6. பசலை என்னும் பொருளைக் காட்டும் சொல் பாசுரத்தில் இல்லா திருக்க, 'பசலையைத் தரித்திருப்பார்' என்கிறது என்? என்ன, 'அவன் புருடோத்தமன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

952.

திருமேனி அடிகளுக்குத் தீவினையேன் விடு தூதாய்,
திருமூழிக்களம் என்னும் செழுநகர்வாய் அணிமுகில்காள்!
திருமேனி அவட்கு அருளீர் என்றக்கால், உம்மைத் தன்
திருமேனி ஒளி அகற்றித் தெளி விசும்பு கடியுமே?

பொ - ரை :—அழகிய மேகங்களே! திருமூழிக்களம் என்னும் வளப்பம் பொருந்திய நகரிலே எழுந்தருளியிருக்கின்ற வடிவழகினையுடைய ஸ்வாமிகள் பக்கல், தீவினையேனாகிய நான் விடுகின்ற தூதாகச் சென்று, உம்முடைய திருமேனியை அவட்குத் தந்தருளீர் என்று கூறினால், தன் திருமேனியின் ஒளியைப் போன்று இருக்கின்ற உங்கள் உடலின் ஒளியைப் போக்கி உங்களையும் தெளிந்த ஆகாசத்தினின்றும் நீக்கித் தண்டிப்பானோ? என்கிறாள்.

வி - கு :—முகில்காள்! தூதாய்ச் சென்று திருமேனி அவட்கு அருளீர் என்றக்கால் உம்மை அகற்றிக் கடியுமே என்க. 'திருமேனி அவட்கு அருளல்' என்றது, புணர்ச்சியை.

ஈடு :—நான்காம் பாட்டு. [1] சில மேகங்களை நோக்கி, என் வார்த்தையை அவனுக்குச் சொன்னால் உங்களைத் தண்டிக்குமோ? என்கிறாள்.

[2]திருமேனி அடிகளுக்கு-சொரூபம் குணம் விபூதி என்னும் இவைகளாலே அன்றி வடிவழகாலே எல்லார்க்கும் ஸ்வாமி என்று தோற்றும்படி இருக்கிறவர்க்கு. அன்றிக்கே, வடிவழகாலே உலக முழுதினையும் தோற்பித்து அடிமை கொண்டவர்க்கு என்றுமாம். [3] "கண்ணபிரானைக் கண்டதும் பரவசப்

---

1. பின் இரண்டு அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "திருமேனி அடிகளுக்கு" என்பதற்கு, இருவகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். "கண்டவாற்றால் தனதே உலகு என நின்றான்" (திருவாய்.) என்கிறபடியே, திருமேனியின் அழகாலே எல்லார்க்கும் தலைவர் என்று தோற்றுகிறவர்க்கு என்பது முதற் பொருள். வடிவழகாலே உலகத்தை எல்லாம் தனக்கு அடிமை ஆக்கின தலைவர்க்கு என்பது இரண்டாவது பொருள். இங்கே,

"உருவின் மிக்கதோர் உடம்பது பெறுதலும் அரிதே"

என்பது ஒருபுடை ஒப்பு நோக்கலாகும். (சிந்தா.)

3. அடியார்களைத் தோற்பிக்கலாம்; உலகத்தையே வடிவழகாலே தோற்பிக்கக் கூடுமோ? என்ன, 'கண்ணபிரானை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

பட்டு வந்தனை முதலிய காரியங்களைச் செய்தார்கள்" என்கிற படியே, [1]பகைவர்களுக்கும் மனக்கவர்ச்சியாக அன்றோ வடிவு இருப்பது. தீவினையேன் விடு தூதாய் - [2] எல்லார்க்கும் பொதுவான உடம்பை இழந்து உங்கள் காலிலே விழவேண்டும்படியான பாபத்தைச் செய்த நான் அநுப்புகிற தூதாகச் சென்று. திருமூழிக்களம் என்னும் - [3] துயர் உற்றவர்களைப் பாதுகாப்பதற்காக வந்து நிற்கிற இடம் என்று பிரசித்தமான தேசம். [4] செழு நகர் - பரமபதத்தைக் காட்டிலும் உண்டான ஏற்றம். அணி முகில்காள் - வளப்பம் பொருந்திய நகரத்திலே செல்லுகிற அழகிய முகில்காள். அன்றிக்கே, செழுநகரிலே எழுந்தருளியிருக்கின்ற அடிகள் என்று 'செழுநகர்வாய்' என்பதனை 'அடிகளுக்கு' அடைமொழி ஆக்கலுமாம்.

த்ருஷ்ட்வா க்ருஷ்ணம் ததாயாந்தம் ப்ரதபந்தம் இவ ஓஜஸா
யதார்ஹம் கேஸவே வ்ருத்திம் அவஸா: ப்ரதிபேதிரே.

என்பது, பாரதம் சபாபர்.

'பகைவர்களுக்கும் மனக்கவர்ச்சியாக அன்றோ வடிவு இருப்பது' என்னும் இவ்விடத்தில்,

போய் இனித் தெரிவது என்னே! பொறையினால் உலகம் போலும்
வேய் எனத் தகைய தோளி, இராகவன் மேனி நோக்கித்
தீய் எனக் கொடிய வீரச் சேவகச் செய்கை கண்டால்
நாம்எனத் தகுதும் அன்றே காமனும் நாமும் எல்லாம்.

என்னும் செய்யுள் நினைவு கூர்தல் தகும். இது, இராவணன் கூற்று. கம்பராமா. கும்பகர்ணன் வதைப். செய். 30.

2. "தீவினையேன்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'எல்லார்க்கும்' என்று தொடங்கி.

3. "என்னும்" என்பது, ஈண்டுப் பிரசித்தியிலே நோக்கு. அந்தப் பிரசித்தியை அருளிச்செய்கிறார் 'துயர் உற்றவர்களை' என்று தொடங்கி. "என்னும்" என்ற சொல் பிரசித்தியைக் காட்டுகிறது. "சிறப்பு என்பது எற்றாற் பெறுதும் எனின், 'என' என்னும் சொல்லாற் பெறுதும். அது சிறப்பினைக் கூறுமோ? எனின், கூறும்; என்னை? 'நளி இரு முந்நீர் ஏணியாக' என்னும் புறப்பாட்டினுள்,

'முரசு முழங்கு தானை மூவ ருள்ளும்
அரசுஎனப் படுவதே நினதே பெரும!' எனவும்,
'ஆடு கழைக் கரும்பின் வெண்பூ நுடங்கும்
நாடு எனப்படுவது நினதே யத்தை' எனவும்,

சிறப்புப் பற்றிப் புணர்த்தார் சான்றோராகலானும், 'நாடுஎனப்படுவது சோழநாடு', 'ஊர்எனப்படுவது உறையூர்' என்று பரவை வழக்கினுள்ளும் சிறப்பித்துச் சொல்லுவாராகலானும் எனக் கொள்க." என்பது, யாப்பருங்கல விருத்தி, எழுத்தோத்து, சூ. 1. உரை.

4. "செழு" என்பது, 'பரமபதத்தைக் காட்டிலும் சிறந்த தேசம்' என்பதனைக் காட்ட வந்தது.

திருமேனி அவட்கு அருளீர் - [1] பிறர் பொருட்டே இருக்கிற உடம்பை ஆசைப் பட்டார்க்குக்கொடுக்கலாகாதோ?என்றது, [2] "பக்தர்களுக்காகவே" என்கிறபடியே, இவ் உடம்பு ஆசைப் பட்டார்க்குரியது அன்றோ என்று சொல்லுங்கோள் என்றபடி. [3]காதலிகட்குச் சொரூபம் முதலானவற்றைக் காட்டிலும் வடிவிலே அன்றோ விருப்பம். அருளீர் - காதலே அன்றோ குடிபோயிற்று; திரு அருளும் மறுத்ததோ? என்றக்கால் - [4]"வாக்கால் தருமத்தை அடைவாய்" என்கிறபடியே, உங்களுக்கு ஒரு வார்த்தை அன்றோ நேர வேண்டுவது! உம்மை - இப்படி உதவி செய்தவரான உங்களை. தன் திருமேனி ஒளி அகற்றித் தெளி விசும்பு கடியுமே-உங்கள் வடிவிற் புகரையும் போக்கிக் களங்கம் இல்லாத ஆகாசத்தினின்றும் உங்களை ஒட்டுவானோ? [5] உங்களுக்கு இதற்கு முன்பு இல்லாதவற்றையும் உண்டாக்குமது ஒழிய, பண்டு உள்ளவற்றைத் தவிர்த்து உங்களைத் தண்டிக்குமோ? என்றது, [6]சிறிது ஒப்புமையைத் தவிர்த்து, [7]"மேலான ஒப்புமையை அடைகிறான்" என்கிறபடியே, எல்லா வகையிலும் ஒத்திருக்கும் தன்மையையும் தந்து, ஆகாசத்தில் மாத்திரம் இருத்தலோடு அன்றிப் பரம ஆகாசத்தையும் தாரானோ? என்றபடி. [8] உங்களுடைய வார்த்தை மாத்திரத்தாலே எனக்கும் உங்களுக்கும் பிரயோஜனமாக இருக்க, ஆறி இருக்கக் கடவீர்களோ? (4)

---

1. "பக்தாநாம்" என்றதனைக் கடாக்ஷித்து அருளிச்செய்கிறார் 'பிறர் பொருட்டே' என்று தொடங்கி.

2. இறைவன் திருமேனி பிறர் பொருட்டே இருக்கின்றதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பக்தர்களுக்காகவே' என்று தொடங்கி. இப் பொருளையுடைய சுலோகத்தை மேலே காண்க. பக். 49. கீழ்க் குறிப்பு.

3. இறைவனுக்குச் சொரூபம் குணம் முதலியவைகள் இருக்கத் திருமேனியைக் கூறுவான் என்? என்ன, 'காதலிகட்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இங்கு, கம்பராமாயணம் உத்தரகாண்டம் இராவணன் பிறப்புப் படலம், செய். 60. காணல் தகும்.

4. "வாசாதர்மம் அவாப்நுஹி" ஸ்ரீராமா. சுந். 39: 10.

5. "கடியுமே" என்ற எதிர்மறை ஏகாரத்திற்கு, பாவம் அருளிச் செய்கிறார் 'உங்களுக்கு' என்று தொடங்கி.

6. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'சிறிது ஒப்புமையை' என்று தொடங்கி.

7. "பரமம் ஸாம்யம் உபைதி" என்பது சுருதி.

8. "என்றக்கால்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உங்களுடைய' என்று தொடங்கி.

953.

தெளி விசும்பு கடிது ஓடித் தீ வளைத்து மின் இலகும்
ஒளி முகில்காள்! திருமூழிக்களத்து உறையும் ஒண் சுடர்க்குத்
தெளிவிசும்பு திருநாடாத் தீவினையேன் மனத்து உறையும்
துளி வார் கள் குழலார்க்கு என் தூது உரைத்தல் செப்புமினே.

பொ-ரை:—தெளிவான ஆகாசத்திலே விரைவாக ஓடி, (தீவளைத்தாற்போலே) கொள்ளிவட்டம்போலே மின்னலைத் தோற்றுவித்து விளங்குகின்ற ஒளியோடு கூடிய மேகங்களே! தெளிவிசும்பாகிய பரமபதத்தைப் போன்று, தீவினையேனாகிய என்னுடைய மனத்திலே எழுந்தருளியிருக்கின்ற, துளித்து ஒழுகுகின்ற தேன் பொருந்திய மயிர் முடியையுடைவராகிய திருமூழிக்களத்திலே எழுந்தருளியிருக்கின்ற ஒளிப்பிழம்பான எம்பெருமானுக்கு என் தூது வார்த்தையைச் சொல்லுங்கோள் என்கிறாள்.

வி - கு:—முகில்காள்! குழலாராகிய ஒண்சுடர்க்கு என் தூது உரைத்தல் செப்புமின் என்க.

ஈடு:—ஐந்தாம் பாட்டு. [1] 'எங்கள் வார்த்தையை அவன் அங்கீகரிக்குமோ?' என்று இருந்தனவாக, 'பரமபதத்தில் செய்கின்ற ஆதரத்தை என்பக்கலிலே செய்தவன், அங்கீகரியாதொழியான்; ஆனபின்பு, எனக்காக ஒரு வார்த்தை விண்ணப்பம் செய்யவேண்டும்' என்கிறாள்.

தெளி விசும்பு கடிது ஓடி-குற்றம் இல்லாததாய்ப் [2] பற்றுக்கோடு இல்லாததான ஆகாசத்திலே, பூமியிலே சஞ்சரிப்பதைப் போன்று கடு நடையிலே சஞ்சரித்து. [3] இவற்றின் விரைவு எல்லாம் தன் காரியத்துக்குக் காரணம் என்று இருக்கிறாள். தீ வளைத்து மின் இலகும்-கொள்ளிவட்டம்போலே மின் விளங்கு

---

1. இப் பாசுரத்திலும் மேகங்களையே தூது விடுகையாலே அதற்குத் தகுதியாகத் "தெளி விசும்பு திருநாடாத் தீவினையேன் மனத்து உறையும், துளி வார் கள் குழலார்க்கு என் தூது உரைத்தல் செப்புமினே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். மேற் பாசுரத்தில் "திருமேனி ஒளி அகற்றி" என்பது போன்றவைகளால் அச்சத்தைப் பிறப்பிக்கையாலே, அதனைக் கேட்ட மேகங்கள், எங்கள் வார்த்தையை அவன் அங்கீகரிப்பானோ என்று இருந்தன என்றபடி.

2. "விசும்பு" என்றதன் பொருள், 'பற்றுக்கோடு இல்லாததான' என்பது.

3. "கடிது ஓடி" என்பதற்கு, கருத்து அருளிச்செய்கிறார் 'இவற்றின்' என்று தொடங்கி.

கின்ற. [1] தன் வடிவில் இருட்சிக்குக் கைவிளக்கினைக் கொண்டு திரிவாரைப்போலே ஆயிற்று, மின்னிக்கொண்டு சஞ்சரிக்கிற படி. ஒளி முகில்காள் - [2] பரபாகத்தாலே அழகிதான வடிவை யுடைய மேகங்காள்! திருமூழிக்களத்து உறையும் ஒண் சுடர்க்கு - திருமூழிக்களத்திலே நித்தியவாசம் செய்கையாலே புகர் மிக்கு இருக்கிறவர்க்கு. [3] அவன் வடிவிற்குப் போலியாக அன்றோ உங்கள் வடிவு இருப்பது. [4] தெளி விசும்பு திருநாடாத் தீவினையேன் மனத்து உறையும் - பரமபதத்திற் செய்யும் ஆசையை என் நெஞ்சிலே செய்து வசிக்கின்றான். தீவினை யேன் - [5] மனத்திலே பிரகாசித்துக்கொண்டிருக்க, காண ஒண்ணாதபடி பாபத்தைச் செய்தவள் நான் என்பாள் தன்னைத் '**தீவினையேன்**' என்கிறாள். [6] இதற்கு, "கொம்பது பருத்தியாக அங்காடி பாரித்து, தனக்குப் பரமபதம் கலவிருக்கையாக இருக்க, அதனைக் காற்கடைக்கொண்டு அண்மையில் இருப் பாரைப் போலே இருக்க என் நெஞ்சிலே பிரகாசியாநின் றான்" என்று '**சிற்றாள்கொண்டான்**' பணிப்பர். [7] இதுதான்,

1. "மின் இலகும்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'தன் வடிவில்' என்று தொடங்கி.

2. 'பரபாகத்தாலே' என்றது, மின்னோடு கூடுகையாலே வந்த பர பாகத்தால் என்றபடி.

3. "ஒளிமுகில்", "ஒண்சுடர்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவன் வடிவிற்கு' என்று தொடங்கி.

4. "தெளிவிசும்பு திருநாடாத் தீவினையேன் மனத்துஉறையும்" என்பதற்கு இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார்: முதற் பொருளுக்கு, "தீவினையேன் மனத்தைத் தெள்விசும்பு திருநாடா உறையும்" என்று பதங்களைப் பிரித்துக் கூட்டுக. இது, எம்பெருமானார் நிர்வாஹம்.

5. மனத்தே உறையாநிற்க, "தீவினையேன்" என்பது என்? என்ன, 'மனத்திலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. "தெளிவிசும்பு - உறையும்" என்பதற்கு, இரண்டாவது பொருளை அருளிச்செய்கிறார் 'இதற்கு' என்று தொடங்கி. இப் பொருள் வெறுப்பிலே நோக்கு. 'கொம்பது பருத்தியாக' என்றது, பருத்தி கொம்பிலே இருக்கச் செய்தேயும் என்றபடி. 'அங்காடி பாரித்து' என்றது, அது புடைவை ஆனதாய் அதனை விற்கக் கடை பரப்பி அளப்பது விலை பேசுவது ஆமாறு போலே என்றபடி. 'பாரித்து' என்பதனைப் பாரித்தாற் போலே என்று விரித்துக் கொள்க.

7. தூது விடுகின்ற இடத்தில் வெறுப்பாகச் சொல்லுதல் தக்கதோ? என்னும் சங்கையிலே அருளிச்செய்கிறார் 'இதுதான்' என்று தொடங்கி. 'இதுதான்' என்றது, மனத்து உறைவாரைப் போலே என்று வெறுப்பாகச் சொல்வதுதான் என்றபடி. 'வாக்கியார்த்தத்தோடு சேராது' என்றது, இத் திருவாய்மொழியின் முன்னுரையில் 'வடிவழகும் குணங்களும் பற்றாசாகத் தூது விடுகிறாள்' என்ற வாக்கியார்த்தத்தோடு சேராது என்றபடி.

இத் திருவாய்மொழிக்குச் சொன்ன வாக்கியார்த்தத்தோடு சேராது; [1] ஒவ்வொரு சமயங்களிலே சொல்லிப் போம் வார்த்தை அன்றே.

துளி வார் கள் குழலார்க்கு-துளி ஒழுகும் மதுவையுடைத்தான திருக்குழலை உடையவர்க்கு; [2]வல்லார் பூ முடித்தால் பூத் தோற்றக் கடவது. அன்றிக்கே, மது ஒழுகக்காணுமத்தனை அன்றே. என் தூது உரைத்தல் செப்புமினே - [3] தலையில் பூச் சருகாக இருக்கிற என்னுடைய தூது வார்த்தையை அவர்க்குச் சொல்லுங்கோள். [4] மிகப்பெரிய காதலையுடையராய்த் தாமே வருவாராகச்சொல்லிவைத்து, இப்போது தூதுவிட இருக்கிற படியை அறிவியுங்கோள். (5)

954.

தூதுரைத்தல் செப்புமின்கள் தூமொழிவாய் வண்டினங்காள்!
போதிரைத்து மதுநுகரும் பொழில் மூழிக்களத்துறையும்
மாதரைத் தம் மார்பகத்தே வைத்தார்க்கு என் வாய் மாற்றம்
தூது உரைத்தல் செப்புதிரேல், சுடர் வளையும் கலையுமே.

பொ - ரை:—தூய சொற்களைப் பேசக்கூடிய வாயையுடைய வண்டுக் கூட்டங்களே! ஒலித்துக்கொண்டு மலர்களிலே உள்ள தேனை நுகர்தற்குத் தக்கவாறு சோலைகளாற் சூழப்பட்ட திருமூழிக்களத்திலே எழுந்தருளியிருக்கின்ற, பெரிய பிராட்டியாரைத் தம்முடைய திருமார்பிலே வைத்துக்கொண்டிருக்கின்ற எம்பெருமானிடத்தில் சென்று தூது வார்த்தைகளைச் சொல்லுவீரேயானால் சுடர் வளையலைப் பற்றியும் கலையைப் பற்றியும் தூது வார்த்தைகளாகச் சொல்லுங்கோள் என்கிறாள்.

வி - கு:—வண்டுஇனங்காள்! தூது உரைத்தல் செப்புதிரேல் வளையும் கலையும் தூது உரைத்தல் செப்புமின்கள் என்க. மாதரைத் தம் மார்பகத்தே வைத்தார் என்பது ஒரு சொல் நீர்மைத்து; திருமாலார்க்கு என்பது பொருள். மூழிக்களத்து உறையும் திருமாலார் என்க.

---

1. ஆனால், இது சேரும்படி என்? என்ன, 'ஒவ்வொரு சமயங்களிலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. குழலிலே மலர் ஒழிய மது உண்டோ? என்ன, 'வல்லார்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

3. "துளி வார் கள் குழலார்" என்றதிலே நோக்காக, "என்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தலையில்' என்று தொடங்கி.

4. "தூது உரைத்தல்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'மிகப் பெரிய' என்று தொடங்கி.

ஈடு :—ஆறும் பாட்டு. [1] சில வண்டுகளைக் குறித்து, 'உங்கள் வார்த்தை விலை செல்லும்படி பிராட்டி சந்நிதியிலே சொல்லுங்கோள் என் தூது வார்த்தையை' என்கிறாள்.

தூது உரைத்தல் செப்புமின்கள் - [2] என் தூது வார்த்தையை அறிவிக்க அமையும்; கொண்டு வர வேண்டா. தூ மொழி வாய் வண்டு இனங்காள் - இனிய பேச்சையுடைய வண்டுகாள்! [3] அவன் விரும்பானாகிலும் உங்கள் பேச்சு இனிமையாலே வரவேண்டும்படி அன்றோ பேச்சு இருப்பது. [4] பெருமாளும் இளையபெருமாளும் கையும் வில்லுமாய் வருகிறபடியைக் கண்டு, "இவர்கள் வாலி வரவிட வருகின்றார்களோ?" என்று அஞ்சி மஹாராஜர் நாலு மூன்று யோசனை அவ்வருகே ஓட, மீண்டு வந்து, [5] "இன்பமும் துன்பமும் நம் இருவர்க்கும் ஒன்றே" என்று வெவ்வேறு சாதியினராகிய இருவரும் பொருந்தும்படியாக, [6] "பின்பு சாஸ்திரப் பயிற்சியில் உண்டான பழக்கத்தால் நிறைந்தவரும் அமைச்சர்களில் சிறந்தவரு

---

1. "வண்டு இனங்காள்! மாதரைத் தம் மார்வகத்தே வைத்தார்க்கு" என்பது போன்றவைகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "செப்புமின்கள்" என்றதற்குக் கருத்து, 'என் தூது வார்த்தையை' என்று தொடங்கும் வாக்கியம்.

3. "தூ மொழி வாய்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவன் விரும்பானாகிலும்' என்று தொடங்கி.

4. இப்படிப் பேச்சு இனிமையாலே பொருந்தினார் உளரோ? என்ன, 'பெருமாளும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. த்வம் வயஸ்ய: அஸி ஹ்ருத்ய: மே ஹி ஏகம் துக்கம் ஸுகம் ச நௌ
ஸுக்ரீவம் ராகவோ வாக்யம் இதி உவாச ப்ரஹ்ருஷ்டவத்.

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 5 : 18.

6. அத ஸம்ஸ்கார ஸம்பந்ந: ஹநுமாந் ஸசிவோத்தம:
உவாச வசநம் ஸ்லக்ஷ்ணம் அர்த்தவத் மதுரம் லகு.

என்பது, ஸ்ரீராமா. யுத். 17 : 48. இங்கே, கிஷ்கிந்தா காண்டத்தில் இருவரும் பொருந்தும்படி கூறிய "ஸம்ஸ்கார க்ரம ஸம்பந்ந:" (3: 32.) என்ற சுலோகம் இருக்க, இதனைக் காட்டாது, "அதஸம்ஸ்கார" என்ற இச் சுலோகத்தை மேற்கோள் காட்டியது என்? என்ன, தெளிவாக இருக்கையாலே என்பர் அரும்பத உரைகாரர்.

மாற்றம் அஃது உரைத்தலோடு வரிசிலைக் குரிசில் மைந்தன்
தேற்றம் உற்று இவனினூங்குச் செவ்வியோர் இன்மை தேறி
ஆற்றலும் நிறைவும் கல்வி அமைதியும் அறிவும் என்னும்
வேற்றுமை இவனோடு இல்லையாம் என விளம்பலுற்றான்.

என்பது, முதலாக வரும் செய்யுட்களை இங்கு ஒப்பு நோக்கல் தகும். கம்பரா, கிஷ். மராமரப் படலம், செய். 19-22,

மான அநுமான் வந்து அழகாயும் பொருளோடு கூடினதாயும் இனிமையாயும் சுருக்கமாயும் உள்ள வார்த்தைகளைச் சொன்னார்" என்கிறபடியே, வார்த்தை சொன்னான் அன்றோ.

போது இரைத்து மது நுகரும் பொழில் -[1] பூக்களிலே இரைத்துக் கொண்டு தேனைக் குடிக்கும் பொழில். அன்றிக்கே, மலர்கிற காலத்திலே சென்று தேனைக் குடிக்கும் சோலை என்னுதல். [2]உங்களுக்கு மீட்சியிலே ஆகவும் வேண்டா; ததிமுகன் முதலானோர் காவலும் இல்லை; [3] முன்பு தேனைக் குடிக்கிறவர்களோடே தேனைக் குடிக்க அமையும். மாதரைத் தம் மார்பகத்தே வைத்தார்க்கு - [4] நீங்கள் சொல்லுமத்தனையே வேண்டுவது. உங்கள் வார்த்தை கேட்டிருக்கவும், கேட்டுக் கொண்டாடுகைக்கும் புருஷகாரம் உண்டு என்கை. என் வாய் மாற்றம்[5] தூது உரைத்தல் செப்புதிரேல் சுடர்வளையும்கலையும்- என் வார்த்தையான தூது வார்த்தையைச் சொல்லப் பார்த்தீர்கோளாகில், என்னுடைய அழகிய வளையும் கலையும் சீர்கேடு அடைந்தபடியைச் சொல்லுங்கோள்! அன்றிக்கே, செப்புதிரேயாகில், அதுதானே எனக்குச் சுடர்வளையும் கலையும் 'ஆம் என்னுதல்.[6] அறிவிக்குமதுவே குறை, அவர் வரவு தப்பாது. (6)

---

1. "போது" என்பதற்கு, இருபொருள்: ஒன்று மலர்; (மலர்கின்ற) காலம் மற்றொன்று. இவ் இருபொருள்களையும் முறையே அருளிச்செய்கிறார் 'பூக்களிலே' என்றும், 'மலர்கிற' என்றும் தொடங்கி.

2. "போது இரைத்து மது நுகரும்" என்ற விசேடணத்திற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உங்களுக்கு' என்று தொடங்கி. 'உங்களுக்கு மீட்சியிலே ஆகவும் வேண்டா' என்றது, திருவடி தூது சென்று மீளும் காலத்தில் இடையிலே உள்ள மதுவனத்தில் தங்கி வானர முதலிகள் மது நுகர்ந்ததனைத் திருவுள்ளம்பற்றி. இதன் விரிவை, கம்பராமாயணம் சுந்தரகாண்டம் திருவடி தொழுத படலத்தில் 12-முதல் 27-முடிய உள்ள செய்யுட்களைப் படித்து அறிதல் தகும்.

3. 'முன்பு தேனைக் குடிக்கிறவர்களோடே' என்றது, நித்தியசூரிகளை.

4. "மாதரைத் தம் மார்வகத்தே வைத்தார்க்கு" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நீங்கள்' என்று தொடங்கி.

5. "தூது உரைத்தல்" என்று தொடங்கும் வாக்கியத்திற்கு இரண்டு வகையாகக் கருத்து அருளிச்செய்கிறார். முதல் கருத்து, என் வாய் மாற்றம் தூது உரைத்தல் செப்புதிரேல் சுடர்வளையும் கலையும் செப்புமின்கள் என்பது. இரண்டாவது கருத்தில் செப்புதிரேயாகில், அது தானே எனக்குச் சுடர் வளையும் கலையும் ஆகும் எனச் சில சொற்களைப் பெய்து கோடல் வேண்டும்.

6. செப்புதல் சுடர் வளையும் கலையும் ஆமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அறிவிக்குமதுவே' என்று தொடங்கி.

955.

சுடர் வளையும் கலையும் கொண்டு அருவினையேன் தோள் துறந்த
படர் புகழான் திருமூழிக்களத்து உறையும் பங்கயக் கண்
சுடர் பவள வாயனைக் கண்டு ஒரு நாள் ஓர் தூய் மாற்றம்
படர்பொழில்வாய்க் குருகினங்காள்! எனக்கு ஒன்று பணியீரே.

பொ - ரை:—படர்ந்த சோலைகளிலே தங்கியிருக்கின்ற குருகினங்காள்! ஒளி வளையலையும் கலையையும் கொண்டு, என்னை விட்டு நீங்கிய தாமரைமலர் போன்ற திருக்கண்களையுடைய பரந்த புகழையுடையவனும், திருமூழிக்களத்திலே எழுந்தருளியிருக்கின்ற, ஒளி பொருந்திய பவளம் போன்ற திருவாயினையுடையவனுமான எம்பெருமானைக் கண்டு, ஒப்பற்றதான தூய வார்த்தை ஒன்றினை ஒருநாள் எனக்காகச் சொல்லுங்கோள் என்கிறாள்.

வி - கு:—கொண்டு துறந்த பங்கயக் கண் படர் புகழான் என்க. திருமூழிக்களத்து உறையும் பவளவாயன் என்க. ஒரு நாள் ஓர் தூய் மாற்றம் எனக்கு ஒன்று பணியீர் என்க.

ஈடு:—ஏழாம் பாட்டு. [1] சில குருகு இனங்களைக் குறித்து, "சிலரோடே கலந்து அவர்களைத் துறந்து அதுவே புகழாக இருக்கை போருமோ என்று அறிவியுங்கோள்" என்கிறாள்.

சுடர் வளையும் கலையும் கொண்டு அருவினையேன் தோள் துறந்த-இத்தலையில் தனக்குப் பிரயோஜனமான பாகத்தைக் கொண்டு என்னைப் பொகட்டுப் போனான். என்றது, தனக்குத் தாரகமானவற்றைக் கொண்டு அல்லாதவற்றைப் பொகட்டுப் போனான் என்றபடி. "சங்கம் சரிந்தன" என்ற திருப்பாசுரத்திற் கூறியபடியே, எல்லாப் பொருள்களும் உருக்குலைந்து கிடக்க, 'சுடர்வளையும் கலையும்' என்று விசேடித்துக் கூறியது என்? எனின், [2] கைக்கு அடங்கினதையும் கொண்டு மடிச்சரக்கையும் கொண்டு போனான். என்றது, முக்கியப் பொருள்களை மாத்திரம் கொண்டு போனான் என்றபடி. ஆதரித்து வந்து கலந்தவன் பொகட்டுப் போம்படியான பாபத்தைச் செய்துள்ளேன் என்பாள் தன்னை 'அருவினையேன்'

1. "குருகு இனங்காள்! அருவினையேன் தோள் துறந்த படர் புகழான், எனக்கு ஒன்று பணியீர்" என்பதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. 'கைக்கு அடங்கினது' என்றது, வளையை. 'மடிச்சரக்கு' என்றது, புடைவையை.

என்கிருள். 'தோள் துறந்த' என்றதனல் [1] அவன்தான் அந்தக் காதல் எல்லாம்கொண்டும் தோளுக்கு அவ்வருகு போக மாட்டிலன் போலே காணும் என்பதனைத் தெரிவித்தபடி. படர் புகழான் - [2]'தன்னுல் அல்லது செல்லாதாரை இங்ஙனம் விடவல்லார் இல்லை' என்ற இதுவே புகழாகக் கொடியும் காளமும் எடுத்துப் புகழ்வித்துக் கொண்டிருக்கிருன் ஆயிற்று. திருமூழிக்களத்து உறையும் - [3] சேயன் என்று ஆறி இருக்க ஒண்ணுதபடி திருமூழிக்களத்திலே நித்தியவாசம் செய்கிறவனை. பங்கயம் கண் சுடர் பவள வாயனை - [4] பொகட்டுப் போனுன் என்று பொகட்டு இருக்க ஒண்ணுத அவயவ சோபையையுடையவனை. அன்றிக்கே, என்னை இப் பாடு படுத்துகையாலே புதுக்கணித்த அவயவ சோபையையுடையவனை என்னலுமாம்.

கண்டு - [5] அந் நோக்கையும் முறுவலையும் காண்கையாலே, உங்களுக்கு என்னைக் காட்டிலும் பேறு முற்பட்டே அன்றே இருக்கிறது. ஒரு நாள் - ஒருநாளே அமையும், பிற்றை நாள் சொல்ல வேண்டுவது இல்லை. [6] இரண்டாம் நாள் சொல்லுமது பழி என்று இருக்குமவள் அன்றே. ஓர் தூய் மாற்றம் - ஒப்பற்றதான நல்ல வார்த்தை. [7] முடிகிருள் ஒரு பெண் பிழைக்கச் சொல்லுகிற வார்த்தை அன்றே. படர் பொழில் வாய்க் குருகு இனங்காள் - பரந்த சோலை இடத்திலே வசிக்கின்ற

---

1. "தோள் துறந்த" என்று ஓர் உறுப்பினைச் சொன்னதற்கு, பாவம் அருளிச்செய்கிருர் 'அவன் தான்' என்று தொடங்கி.

2. இத்தகையானுக்குப் புகழ் யாது? என்ன, 'தன்னுல் அல்லது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

3. ஆயின், அவனை விட்டிருக்கலாகாதோ? என்ன, 'சேயன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

4. இப்போது அவயவங்களை வர்ணிப்பதற்கு, இருவகையாகப் பாவம் அருளிச்செய்கிருர் 'பொகட்டுப் போனுன்' என்றும், 'என்னை' என்றும் தொடங்கி. இரண்டாவது பாவம், வெறுப்பிலே நோக்கு.

5. "கண்டு" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிருர் 'அந் நோக்கையும்' என்று தொடங்கி.

6. வேண்டாமைக்கு அடி யாது? என்ன, 'இரண்டாம் நாள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

7. "தூய் மாற்றம்" என்றதிலே உள்ள "தூய்" என்றதன் பொருளை விளக்குகிருர் 'முடிகிருள்' என்று தொடங்கி.

குருகு இனங்காள்! [1]நான் பட்டினியால் மெலிந்து கிடக்க, நீங்கள் உண்டு களித்திருக்கை போருமோ? நான் முடிந்தால் இந்தச் சோலைப்பரப்பு எல்லாம் நோக்கித் தருவார் யாவர்? எனக்கு - [2] என் வடிவு இருக்கிறபடி கண்டீர்கோளே. ஒன்று பணியீர் - இரண்டாம் வார்த்தை சொல்லவேண்டா. 'பணியீர்' என்றதனால், [3] தான் ஜனக குலத்திலே பிறக்கவுமாம், எதிர்த்தலை பறவைகளாகவுமாம், பகவத் விஷயத்தில் சேர்ப்பாரைச் சொல்லும்படி இது என்று தெரிவிக்கிறாள். (7)

956.

எனக்கு ஒன்று பணியீர்கள் இரும்பொழில்வாய்இரைதேர்ந்து
மனக்கு இன்பம் பட மேவும் வண்டினங்காள்! தும்பிகாள்!
கனக் கொள் திண் மதிள் புடை சூழ் திருமூழிக்களத்துறையும்
புனக் கொள் காயா மேனிப் பூந் துழாய் முடியார்க்கே.

பொ - ரை :—பெரிய சோலையிலே இரையைத் தேடி உண்டு மனத்திற்கு இன்பம் பொருந்தும்படியாகத் தங்கி இருக்கின்ற வண்டுகாள்! தும்பிகாள்! கனத்தைக் கொண்டுள்ள திண்ணிதான மதிள்கள் சூழ்ந்த திருமூழிக்களத்திலே எழுந்தருளியிருக்கின்ற, புனத்திலே இருக்கிற காயாம் பூவைப் போன்ற திருமேனியையும் அழகிய திருத்துழாயைத் தரித்த திருமுடியையுமுடைய எம்பெருமானைக் கண்டு எனக்காக ஒரு வார்த்தையைச் சொல்லுங்கோள் என்கிறாள்.

வி - கு :—தேர்ந்து மேவும் வண்டுஇனங்காள்! தும்பிகாள்! திருமூழிக்களத்து உறையும் துழாய் முடியார்க்கு எனக்கு ஒன்று பணியீர்கள் என்க.

ஈடு :—எட்டாம் பாட்டு. [4]சில வண்டுகளையும் தும்பிகளையும் குறித்து, 'அங்குள்ளவனுக்கு என்ன தீங்கு வருமோ? என்று அஞ்ச வேண்டாதபடி காவல் உள்ள இடத்தில் அவன் இருக்

1. "படர்பொழில்வாய்" என்றதற்கு, இரண்டு வகையாக, பாவம் அருளிச்செய்கிறார் 'நான் பட்டினியால்' என்றும், 'நான் முடிந்தால்' என்றும் தொடங்கி.

2. "எனக்கு" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'என் வடிவு' என்று தொடங்கி.

3. சொல்லீர் என்னுமல், "பணியீர்" என்றதற்கு, பாவம் அருளிச் செய்கிறார் 'தான்' என்று தொடங்கி. திருவாய்மொழி 38-ஆம் பாசுரம் வியாக்கியானம் பார்க்கவும்.

4. பின் இரண்டு அடிகளையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். "கனக்கொள் திண்மதிள் புடைசூழ்" என்பதிலே நோக்கு.

கப் பெற்றேம்; இனி எனது துன்பத்தை அறிவியுங்கோள்' என்கிருள்.

எனக்கு ஒன்று பணியீர்கள் - [1] நீங்கள் ஒரு வார்த்தை சொல்லாவிடில் முடியும் நிலையாய் அன்றே என் நிலை இருக்கிறது. இரும் பொழில் வாய் இரை தேர்ந்து - பரந்த சோலை இடம் எங்கும் புக்கு இரை தேடி. மனக்கு இன்பம் பட மேவும்-மனத்திலே இன்பம் பிறக்கும்படி அன்றே நீங்கள் கலக்கிறபடி. [2] விரகத்தால் வரும் கிலேசம் வாராதபடியாகக் கலவாநின்றதாயிற்று. என்றது, பிரிவிலும் வற்றாத ஆனந்தம் உண்டாம்படி கலவாநின்றதாயிற்று என்றபடி. கனம் கொள் திண் மதிள் புடை சூழ் திருமூழிக்களத்து உறையும் - கனத்துத் திண்ணிதான மதிள் சுற்றும் சூழ்ந்துள்ள திருமூழிக்களத்திலே நித்திய வாசம் செய்கிறவர்க்கு. [3] அத் தலையில் அழகினை நினைத்தால் பாதுகாவல் தேட்டமாய் அன்றே இருப்பது. [4] அவனோடே கிட்டிக் கலக்கப் பெறுமையாலே வருவதும் ஓர் ஆற்றுமை உண்டு; அவனுக்கு எங்கே என்ன தீங்கு வருகிறதோ என்றும் ஓர் ஆற்றுமை உண்டு; அவற்றிலே ஒன்று தீரப்பெற்றது முந்தற முன்னம். புனம் கொள் காயா மேனிப் பூந் துழாய் முடியார்க்கு - [5] தன் நிலத்தில் காயாவின் நிறம்போலே ஆயிற்று நிறம் இருப்பது. [6] அவ் வடிவழகிற்கு மேலே ஒப்பனை அழகினையுமுடையவர்க்கு. வடிவழகு அது, ஒப்பனை அழகு அது.

---

1. "எனக்கு" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிருர் 'நீங்கள்' என்று தொடங்கி.

2. "மனக்கு இன்பம் பட" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச் செய்கிருர் 'விரகத்தால்' என்று தொடங்கி.

3. "கனக் கொள் திண் மதிள் புடை சூழ்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிருர் 'அத்தலையில்' என்று தொடங்கி. "புனம் கொள் காயா மேனி" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'அழகினை' என்கிருர்.

4. மேலே கூறியதனை விவரணம் செய்கிருர் 'அவனோடே' என்று தொடங்கி. 'அவற்றிலே ஒன்று தீரப் பெற்றது' என்றது, "கனக் கொள் திண் மதிள் புடை சூழ்" என்றதிலே நோக்கு.

5. "புனம் கொள் காயா" என்று விசேடித்ததற்கு, பொருள் அருளிச் செய்கிருர் 'தன் நிலத்தில்' என்று தொடங்கி.

"மாயோன் மேய மன்பெரும் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்" (தொல். பொருள். சூ. 66.)

என்றுர் ஆசிரியர் தொல்காப்பியனர்.

6. "பூந்துழாய் முடியார்க்கு" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிருர் 'அவ் வடிவழகிற்கு' என்று தொடங்கி.

[1]அவ் வடிவழகினையும் ஒப்பனை அழகினையும் அநுபவித்துப் பிரிந்த எனக்கு ஒரு வார்த்தை சொல்லுங்கோள். (8)

957.

பூந் துழாய் முடியார்க்கு, பொன் ஆழிக் கையார்க்கு,
ஏந்து நீர் இளம் குருகே! திருமூழிக் களத்தார்க்கு,
ஏந்து பூண்முலை பயந்து, என் இணை மலர்க் கண் நீர்ததும்ப,
தாம் தம்மைக் கொண்டு அகல்தல் தகவன்று என்றுரையீரே.

பொ - ரை:—நிறைந்த நீரிலே தங்கி இருக்கின்ற இளம் குருகே! அழகிய திருத்துழாயினைத் தரித்த திருமுடியையுடையவர்க்கு, அழகிய சக்கரத்தைத் தரித்த திருக்கையையுடையவர்க்கு, திருமூழிக்களத்திலே எழுந்தருளியிருக்கின்றவருக்கு, ஆபரணங்களைத் தரித்திருக்கின்ற முலைகள் பசலைநிறத்தையடையவும், என்னுடைய மலர்போன்ற இரண்டு கண்களிலும் நீர் நிறையும்படியாகவும், தாம் தம்மைக் கொண்டு நீங்குதல் தகுதி அன்று என்று கூறுங்கோள் என்கிறாள்.

வி - கு:—குருகே! முலை பசப்ப, கண் நீர் ததும்ப, தாம் தம்மைக் கொண்டு அகல்தல் தகவு அன்று என்று உரையீர் என்க. பயந்து: செயவென் எச்சத்திரிபு.

ஈடு:—ஒன்பதாம்பாட்டு. [2]ஒரு குருகைக் குறித்து, "எல்லை இல்லாத இனியரான தாம் போம்போது தம்மைக் கொண்டு போகை தம்முடைய தகவுக்குப் போருமோ? என்று விண்ணப்பம் செய்" என்கிறாள்.

பூந் துழாய் முடியார்க்கு - திருமுடிக்கு ஒப்பனையான வளையம் இருக்கிறபடி. பொன் ஆழிக் கையார்க்கு - திருக்கைக்கு வளையம் இருக்கிறபடி. ஏந்து நீர் இளம் குருகே - நிறைந்த புனலிலே தறையிலே நடப்பாரைப் போலே நடக்க வல்ல இளங் குருகே! [3]நீ பறந்து செல்லும் ஆற்றலால் உண்டாகும் பயன் நான் பெற அன்றோ புகுகிறது. என்றது, நடுவே தண்ணீர் இடைச்சுவராக இருந்தாலும் தேங்க வேண்டா அன்றோ

1. இரண்டினையும் சொல்லி "எனக்கு" என்கிறவளுடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'அவ் வடிவழகினையும்' என்று தொடங்கி.

2. நான்காம் அடியினைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. 'நடக்கவல்ல' என்றதனால் போதரும் பொருளினை அருளிச்செய்கிறார் 'நீ பறந்து செல்லும்' என்று தொடங்கி, அதனை விவரணம் செய்கிறார் 'நடுவே' என்று தொடங்கி.

உனக்கு என்றபடி. திருமுழிக்களத்தார்க்கு-[1] வளையம்போலே யும் ஆபரணம் போலேயும் அவ் ஊரில் நிலேயும் அழகுக்கு உடலாய் இருக்கிறபடி. [2] அவை விக்கிரஹத்துக்கு ஆபரண மானுற் போலே, சீலம் சொருபத்திற்கு ஆபரணம் அன்றே. [3] அழகும் குணங்களும் ஒரு தலைத்த விஷயம் அன்றே. பூண் ஏந்து முலை பயந்து - [4] ஆபரணங்களைத் தரிக்கக்கூடிய முலைகள் பசலை நிறத்தைத் தரித்து. [5] ஆபரணங்கள் கலவியின்பொருட் டுக் கழற்றுமவை; பசலை நிறம் கலவியால் அல்லது கழலாதே அன்றே. [6] பிரிவில். இப்படி இருக்கையே அன்றே பெண் தன்மையாவது; [7] இங்ஙனம் இராத அன்று ஆண் தன்மை யோடு வேறுபாடு கூடாதே அன்றே. என் இணை மலர்க் கண் நீர் ததும்ப - இணைமலர் போலே இருக்கிற என் கண். [8] தம் அழகினையே இலக்காகவுடைய கண், சோகக் கண்ணீருக்கு இலக்காம்படி. [9] அவன் சொல்லும்படி அறிந்திருக்கையாலே

---

1. "பூந்துழாய் முடியார்க்கு, பொன்னாழிக் கையார்க்கு, திருமுழிக் களத்தார்க்கு" என்ற பதச் சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வளையம் போலேயும்' என்று தொடங்கி.

2. அது அழகிற்குக் காரணம் ஆமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவை' என்று தொடங்கி. 'அவை' என்றது, பூந் துழாயையும் பொன் ஆழியையும்.

3. அதனால் போதரும் பொருளினை அருளிச்செய்கிறார் 'அழகும் குணங்களும்' என்று தொடங்கி.

4. ஆபரணங்களைத் தரிக்கக்கூடிய முலைகள் பசலை நிறத்தைத் தரித்தன என்பது கருத்து.

5. "ஏந்து பூண் முலை பயந்து" என்பதற்கு, ஏந்து பூண் ஆகும்படி முலைகள் பசலை நிறத்தை அடைந்து என்று வேறும் ஒருபொருள் அருளிச் செய்யத் திருவுள்ளம்பற்றி, பசலை நிறம் ஆபரணம் ஆகுமோ? என்ற வினு விற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஆபரணங்கள்' என்று தொடங்கி.

6. பிரிவில் பசலை நிறத்தை அடைந்தவள் ஆகவேண்டுமோ? என்ன, 'பிரிவில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

7. பெண் தன்மைக்குப் பசலைநிறம் ஆபரணம் என்று கொள்ளாதபோது வரும் குற்றத்தை அருளிச்செய்கிறார் 'இங்ஙனம்' என்று தொடங்கி.

> புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
> அள்ளிக் கொள்வற்றே பசப்பு.
> பசப்பு எனப் பேர் பெறுதல் நன்றே நயப்பித்தார்
> நல்காமை தூற்றார் எனின்.

என்ற திருக்குறள்களை ஈண்டுக் கருதல் தகும்.

8. "இணை மலர்க் கண்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தம் அழகினையே' என்று தொடங்கி.

9. "இணைமலர்க்கண்" என்றது, தற்புகழ்ச்சி ஆகாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவன் சொல்லும்படி' என்று தொடங்கி.

சொல்லுகிறுளித்தனை போக்கி அல்லாதபோது தன் கண்ணை இப்படிச் சொல்லக்கூடாதே அன்றே. 'ததும்ப' என்கிறுள், [1] ஆனந்தக் கண்ணீருக்குத் தகுதியான கண் சோகக் கண்ணீராலே நிறைந்திருத்தலின்.

தாம் - [2] பூந்துழாய் முடியார், பொன் ஆழிக் கையார், திருமூழிக்களத்தார் என்று வைத்து, 'தாம்' என்கிறுள் அன்றே, 'பூந்துழாய் முடியார்க்குப் பொன் ஆழிக் கையார்க்கு' என்கையாலே, வடிவழகினைச் சொல்லிற்று; 'திருமூழிக்களத்தார்க்கு' என்கையாலே, குணம் சொல்லிற்று; ஆக, இப்படிப்பட்ட வடிவழகையும் குணங்களையுமுடைய தாம் என்றபடி. தம்மைக் கொண்டு அகல்தல் - [3] தாம் அகல வேண்டினுல் 'இவ்வடிவைப் பிரிந்தார் பிழையார்' என்று அதனை வைத்தே அன்றே போவது. [4] தம்மைக் கண்ணடிப் புறத்திலே கண்டு அறிவரே. [5] தம்மைப் பிரிந்த நிலைக்கு உதவுகைக்கு அன்றே தம்மைக் கண்டது; [6] "இந்த நிலையை அடைந்த நான் இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்த ஸ்ரீராமனை இங்குக் காண்கிறேன் இல்லை" என்கிறபடியே, [7] ஆற்றுமை எல்லாம் சொல்லுவிக்கும் அன்றே.

---

1. 'தம் அழகினையே இலக்காகவுடைய கண்' என்று மேலே அருளிச்செய்ததனுல் போதரும் பொருளை அருளிச்செய்யாநின்றுகொண்டு "ததும்ப" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறுர் 'ஆனந்தக் கண்ணீருக்கு' என்று தொடங்கி.

2. "தாம்" என்ற சொல்லால் யாரைச் சுட்டுகிறுள்? என்ன, 'பூந்துழாய் முடியார்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறுர்.

3. தம்மைக்கொண்டு அகல்தல் தம்முடைய பேருளுக்குப் போராது என்கையாலே, தம்மை வைத்துப் போதல் நல்லது என்று தோற்றுகிறதே அன்றே; அதனை அருளிச்செய்கிறுர் 'தாம் அகல' என்று தொடங்கி.

4. இவ் வடிவினைப் பிரிந்தார் பிழையார் என்கைக்கு, தன் அழகு தனக்குத் தெரியுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறுர் 'தம்மை' என்று தொடங்கி.

5. "தம்மை" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறுர் 'தம்மைப் பிரிந்த' என்று தொடங்கி.

6. இங்ஙனம் கலங்கிக் கூறினுர் உளரோ? என்ன, உளர் என்று அதற்கு மேற்கோள் காட்டுகிறுர் 'இந்த நிலையை' என்று தொடங்கி.

அதஃ நு கிம் துக்கதரம் ஸஃ அஹம் இக்ஷ்வாகு நந்தநம்
இமாம் அவஸ்த்தாம் ஆபந்நஃ ந இஹ பஶ்யாமி ராகவம்.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 59 : 26. இது தசரதன் புலம்பல்.

7. தம்மைப் பிரிந்த நிலைக்குத் தாம் உதவக் கூடுமோ? இங்ஙனம் சொல்லுவான் என்? என்ன, 'ஆற்றுமை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறுர்.

என்றது, [1]எனக்கு ஓர் ஆற்றாமை உண்டான அளவில் கிட்டி நின்று முகம் காட்டி ஈரக்கையாலே தடவி நோக்குகைக்கு அன்றோ தம்மைப் பெற்றது. தம்மைப் பிரிந்து நோவுபடுகிற இற்றைக்கு மேற்பட ஆற்றாமை இல்லை அன்றோ எனக்கு. இவ்வளவில் நான் பெருமாளைக் காண்கிறிலேன் என்கிறான் என்றபடி.

அன்றிக்கே, தாம் தம்மைக் கொண்டு அகல்தல் - [2] தாம் என்னைக் கொண்டு அகலுமதொழியத் தம்மைக்கொண்டு அகலக் கடவரோ? தம்மைக் கொண்டு அகல வேண்டினால் [3] தமக்கு உரிமைப்பட்ட பொருளைப் பொகட்டுப் பிறர்க்கு உரிமைப்பட்ட பொருளையோ கொடுபோவது என்னுதல். என்றது, "பக்தர்களுக்காகவே" அன்றோ அவன் உடம்பு இருப்பது என்றபடி. "தனக்கேயாக என்னைக் கொள்ளவேண்டும்" என்றே அன்றோ இத்தலை இருப்பது என்றவாறு. தகவு அன்று என்று உரையீர் - காதலுக்கும் மிருதுத் தன்மைக்கும் சேராத மாத்திரமே அன்றிக்கே, இது அருளே இல்லாதவர் செய்யும் செயல் என்று சொல்லுங்கோள். [4] பெண் கொலைக்கு அஞ்சாதார் செய்யுமவற்றைச் செய்தீர் என்று சொல்லுங்கோள். (9)

---

1. மேலே காட்டிய சுலோகத்துக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'எனக்கு' என்று தொடங்கி.

2. "தாம் தம்மைக் கொண்டு அகல்தல்" என்றதற்கு, தாம் போக வேண்டினால் தம்மை வைத்தன்றோ போவது; தம்மைக் கொண்டு அகலலாமோ? என்று அருளிச்செய்து, தாம் போக வேண்டினால் என்னையும் கூட்டிக் கொண்டு போகாமல் தம்மை மாத்திரம் கொண்டு அகலலாமோ? என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'தாம் என்னைக் கொண்டு' என்று தொடங்கி.

3. 'தமக்கு உரிமைப்பட்ட பொருள்' என்றது, ஆழ்வாராகிய நாயகியை. 'பிறர்க்கு உரிமைப்பட்ட பொருளை' என்றது, இறைவனது திருமேனியை.

'தமக்கு உரிமைப்பட்ட பொருள்' இன்னது என்பதற்கு மேற்கோள் "தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே" என்பது. இது, திருவாய்மொழி, 2. 9 : 4. 'பிறர்க்கு உரிமைப்பட்ட பொருள்' இன்னது என்பதற்கு மேற்கோள் "பக்தர்களுக்காகவே" என்பது. "பக்தர்களுக்காகவே" என்னும் பொருளையுடைய இந்தச் சுலோகத்தை மேலே காண்க. பக். 49.

4. 'அருளே இல்லாதவர் செய்யும் செயல்' என்றதனை விவரணம் செய்கிறார் 'பெண் கொலைக்கு' என்று தொடங்கி.

958.

தகவன்று என்று உரையீர்கள் தடம்புனல்வாய் இரைதேர்ந்து
மிக இன்பம் படமேவும் மெல் நடைய அன்னங்காள்!
மிக மேனி மெலிவு எய்தி மேகலையும் ஈடு அழிந்து என்
அகமேனி ஒழியாமே திருமூழிக் களத்தார்க்கே.

பொ - ரை :—மிக்க நீர் வெள்ளத்தையுடைத்தான பொய்கையிலே இரையைத் தேடிப் புசித்து இனிமை கரைபுரளும்படி கலக்கின்ற மெல்லிய நடையையுடைய அன்னங்காள்! சரீரம் மிக மிக மெலிந்து, மேலே உள்ள புடைவையும் கட்டுக்குலைந்து, என்னுடைய அகவாயில் சொரூபம் குலைவதற்கு முன்னே, திருமூழிக்களத்தில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானைக் கண்டு இது தக்கது அன்று என்று சொல்லுங்கோள் என்கிறாள்.

வி - கு :—தேர்ந்து மேவும் அன்னங்காள்! திருமூழிக்களத்தார்க்குத் தகவு அன்று என்று உரையீர் என்க. மேனி மெலிவு எய்த மேகலையும் ஈடு அழிந்தது; இனி அகமேனி குலைவதற்கு முன் திருமூழிக்களத்தார்க்கு உரையீர்கள் என்க. மேகலை - ஓர் ஆபரணமுமாம்.

ஈடு :—பத்தாம்பாட்டு. [1] சில அன்னங்களைக் குறித்து, நான் முடிவதற்கு முன்னே அவனுக்கு என் நிலையை அறிவியுங்கோள் என்கிறாள்.

தகவு அன்று என்று உரையீர்கள் - [2] அவனுடைய உண்மையினை அழிக்கைக்குத் 'தகவு இல்லை' என்னுங்கோள். என்றது, அருள் இல்லாதவன் என்று உரையுங்கோள் என்கிறாள் என்றபடி. [3] அவனுக்கு நிருபகம் அருள் ஆகையாலும், அவனுடைய மர்மத்தை அறியுமவள் ஆகையாலும், அதனை இல்லை என்கிறாள். தடம் புனல்வாய் இரை தேர்ந்து-மிக்க நீர்

---

1. முதல்அடியையும் நான்காம்அடியையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. மீளவும் இப்பாசுரத்தில் "தகவு அன்று என்று உரையீர்கள்" என்கிறது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கி.

3. வேறு குணங்கள் இருக்க, 'தகவு இல்லை' என்பதற்குக் கருத்து என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவனுக்கு' என்று தொடங்கி.

வெள்ளத்தையுடைய பொய்கைகளிலே இரை தேடி.[1] இதனால் கலவிக்கு உறுப்பான செய்கையேயாய் இருப்பதனைத் தெரிவிக்கிறாள். இன்பம் மிக பட மேவும் - இன்பம் கரைபுரளும்படியன்றோ நீங்கள் கலக்கிறபடி. [2]பிரிவு தேட்டமாய்த் தலைக்கு மேலே ஏறிய இன்பமாய்ச் செல்லுகிறபடியைத் தெரிவிக்கிறாள் இதனால். என்றது, பிரியாவிடில் இருவரும் அழியும்படி ஆயிற்று இவை கலக்கிறபடி என்றவாறு. மெல் நடைய அன்னங்காள்- [3]கலவியின் மிகுதி நடையிலே தொடைகொள்ளலாம்படி திரிகின்றன ஆயிற்று. மேனி மிக மெலிவு எய்தி - [4]சரசமாகத் திரிவதெல்லாம் குலைந்ததே அன்றோ உங்களுக்கு; [5]கண்டீர் கோளே நான் இருக்கிறபடி; [6]என் நிலையைக் கண்டால் தரித்திருக்கலாய் இருந்ததோ? [7]உங்கள் கலவியின் மிகுதியைப் போன்றதாகும், என் உடம்பின் மெலிவும்.

மேகலையும் ஈடு அழிந்து - புடைவையும் கட்டுக் குலைந்து; [8]மேகலை தொங்கும்போது உடல் நல்ல நிலையில் இருக்கவேண்டுமே. என் அகமேனி ஒழியாமே - புறம்புள்ளன அடையக் கழன்றன; இனி அகவாயில் உள்ள ஆத்மாவும் நீங்குவதற்கு முன்னே; என்றது, நான் முடிவதற்கு முன்னே என்றபடி.

---

1. "தடம் புனல்வாய் இரை தேர்ந்து" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இதனால்' என்று தொடங்கி. 'கலவிக்கு உறுப்பான செய்கை' என்றது, மேலே "மிக இன்பம் பட மேவும்" என்றதனை நோக்கி.

2. "மிக இன்பம் பட மேவும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பிரிவு தேட்டமாய்' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'பிரியாவிடில்' என்று தொடங்கி.

3. "மெல் நடை" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கலவியின் மிகுதி' என்று தொடங்கி. "விதியினால் பெடை மணக்கும் மெல் நடைய அன்னங்காள்" என்ற திருப்பாசுரத்திற்கு எழுதிய வியாக்கியானம் பார்க்கவும். பக். 194.

4. "மிக மேனி மெலிவு எய்தி" என்று அருளிச்செய்வதற்குப் பிரயோஜனம் காட்டுகிறார் 'சரசமாக' என்று தொடங்கி.

5. அதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'கண்டீர்கோளே' என்று தொடங்கி.

6. உனக்குத் துன்பம் உண்டானால், நாங்கள் சரசமாகத் திரிவது குலைய வேண்டுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'என் நிலையை' என்று தொடங்கி.

7. "மிக இன்பம் பட", "மிக மேனி மெலிவு எய்தி" என்ற பதச்சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உங்கள் கலவியின்' என்று தொடங்கி.

8. புடைவை கட்டுக் குலைவதற்குக் காரணம் என்? என்ன, 'மேகலை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

திருமூழிக்களத்தார்க்கு - [1]தம்மை ஒழியச் செல்லாதாருடைய உயிர்களைக் காப்பாற்றுவதற்காக வந்து கிடக்கிறவர்க்கு. திருமூழிக் களத்தார்க்குத் தகவு அன்று என்று உரையீர்கள் - [2]பொரிபுறம் தடவி அத் தலையைப் பேணி வந்தது அமையும்; இனி அவர் படியை நேராகச் சொல்லிப் போருங்கோள். இவள் முன்பு அப்படிப் பேணினளோ? என்னில், [3]"என தவளவண்ணர் தகவுகளே" என்று திருத்தாயார் சொல்லிற்றுப் பொறாமல், "தகவுடையவனே!" என்று, "கெடுவாய்! ஆகரத்தில் தகவு மறுக்குமோ?" என்றாளே அன்றோ; அதனைச் சொல்லுகிறாள் இங்கு. (10)

959.

ஒழிவு இன்றித் திருமூழிக்களத்து உறையும் ஒண்சுடரை
ஒழிவில்லா அணிமழலைக்கிளிமொழியாள் அலற்றியசொல்
வழு இல்லா வண் குருகூர்ச் சடகோபன் வாய்ந்து உரைத்த
அழிவு இல்லா ஆயிரத்து இப்பத்தும் நோய் அறுக்குமே.

பொ - ரை :—திருமூழிக் களத்திலே நீங்காமல் எழுந்தருளியிருக்கின்ற ஒளிப்பிழம்பான எம்பெருமானை, அவனைப் பிரிந்து தரிக்கமாட்டாத, அழகிய மழலை பொருந்திய கிளியின்மொழி போன்ற மொழிகளைப் பேசுகின்ற ஒரு பெண் கூறுகின்ற கூற்றிலே வைத்து, குற்றம் இல்லாத வளவிய திருக்குருகூரிலே அவதரித்த ஸ்ரீ சடகோபர் கிட்டி அருளிச்செய்த அழிவு இல்லாத ஆயிரம் திருப்பாசுரங்களில் இப் பத்துத் திருப்பாசுரங்களும் பகவானைப் பிரிந்திருத்தலாகிற நோயினை அறுக்கும் என்றவாறு.

வி - கு :—ஒழிவு இன்றி உறையும் சுடர் என்க. மழலை - இளமை. அலற்றிய சொல்லாக வைத்துச் சடகோபன் வாய்ந்து உரைத்த இப் பத்தும் என்க.

---

1. 'தம்மை ஒழியச் செல்லாதார்' என்றது, திருமூழிக்களத்தில் வாழ்பவர்களை.

2. 'குணநிகன்' என்று சொல்லுகிற நீ இப்படிக் கூறலாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பொரிபுறம்' என்று தொடங்கி. அதாவது, உள்ளே சுவை இல்லாத பொரிக்குச் சர்க்கரை முதலானவைகளைத் தடவுமாறு போன்று, காதல் குணம் இல்லாத அவனுக்குக் காதல் குணத்தை அவன்மேல் ஏற்றி, "தகவு இல்லை" என்றவர்கள் முன்னே "தகவுடையவன்" என்று சொன்னது அமையும் என்றபடி.

3. திருவாய்மொழி, 2. 4: 5 ஆகரம் - கனி; பொன் முதலிய உலோகங்கள் விளையும் இடம்.

ஈடு :—முடிவில், [1] இத் திருவாய்மொழியைக் கற்பார்க்கு, பிரிவுக்கு அடியான பிறப்பாகிய நோயினை இது தானே அறுத்துக் கொடுக்கும் என்கிறார்.

ஒழிவு இன்றித் திருமூழிக் களத்து உறையும் - ஒரு நாளும் விட நினையாமல் அவ் ஊரில் நித்ய வாசம் செய்யுமவனை. ஒண் சுடர் - [2] "பின்னானார் வணங்கும் சோதி" என்கிறபடியே, [3] அவ் ஊரில் நிலையால் வந்த புகர் இருக்கிறபடி. அன்றிக்கே, அவ் ஊரில் இனிமையால் வந்த புகர் என்னுதல். [4] பிற்பாடர்க்கு முகம் கொடுக்கும் நீர்மையால் வந்த புகர் என்றபடி. ஒழிவு இல்லா-[5] அவன் அவ் ஊரை நீங்கில் தரிக்க மாட்டாதவாறு போன்று, அவனை ஒழியில் தரிக்க மாட்டாதவள் என்கை; [6] "ஸ்ரீராமா! உம்மால் பிரிக்கப்படுகின்ற சீதை பிழைக்க மாட்டாள்" எனப்படுமவள் அன்றோ. [7] அணி மழலைக் கிளி மொழியாள்-அழகிய இளமையான, கிளியின் பேச்சுப்போலே இருக்கிற பேச்சினையுடையவள். அலற்றிய சொல் - தன் ஆற்றாமையாலே முறை பிறழச் சொல்லிய சொல். வழு இல்லா வண்குருகூர்ச் சடகோபன் - பிராட்டிபடியில் ஒன்றும் குறைவு அற்று இருக்கிற ஆழ்வார். வாய்ந்து உரைத்த - கிட்டி உரைத்த; என்றது, பாவபந்தத்தால் சொன்ன என்றபடி. அழிவு இல்லா ஆயிரத்து இப்பத்தும் - [8] கேட்டவர்கள் நெஞ்

1. "இப் பத்தும் நோய் அறுக்கும்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. திருநெடுந் தாண்டகம், 10.

3. "ஒண்சுடர்" என்றதற்கு இரண்டு வகையாக, பாவம் அருளிச்செய்கிறார். 'அவ் ஊரில் நிலையால் வந்த புகர்' என்றதனால் சௌலப்யத்தைத் தெரிவித்தபடி.

4. 'பிற்பாடர்க்கு முகம் கொடுக்கும் நீர்மையால் வந்த புகர்' என்றது, மேலே, "பின்னானார் வணங்கும் சோதி" என்று கூறியதனுடைய விவரணம்.

5. "திருமூழிக்களத்துறையும், ஒழிவில்லா" என்ற பதச்சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவன் அவ் வூரை' என்று தொடங்கி.

6. தரிக்கமாட்டாள் என்கைக்குப் பிரமாணம் காட்டுகிறார் 'ஸ்ரீராமா' என்று தொடங்கி.

நச ஸீதா த்வயா ஹீநா நசாஹம் அபி ராகவ
முகூர்த்தம் அபி ஜீவாவ: ஜலாத் மத்ஸ்யாவிவோத்த்ருதௌ.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 53 : 31.

7. "அணிமழலை" என்பது, மொழிக்கு அடைமொழி.

8. அழிவு இல்லாமையை விளக்குகிறார் 'கேட்டவர்கள்' என்று தொடங்கி. அதன் இனிமையைத் தெரிவித்தபடி.

சினை ஒருநாளும் விடாமல் தங்கி இருக்கிற இப்பத்து. என்றது, [1]இப் பாசுரத்தைக் கேட்டார்க்கு அக்காலத்திற் போலே எல்லாக் காலங்களிலும் இன்பம் பிறக்கும்படி ஆயிற்று இருப்பது என்றபடி. நோய் அறுக்குமே - பகவானைப் பிரிதலாகிற நோயை அறுக்கும். என்றது, [2]கலந்து பிரிந்து துக்கப்பட வேண்டா; பிரிவு இல்லாத தேசத்திலே புகப் பெறுவர் என்றபடி. (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

எங்காதலுக்கு அடிமால் ஏய்ந்த வடிவழகு என்று
அங்காது பற்றுசா ஆங்கு அவன்பால்—எங்கும்உள்ள
புள்ளினத்தைத் தூதாகப் போகவிடு மாறன்தாள்
உள்ளினர்க்குத் தீங்கை அறுக்கும். (87)

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'இப்பாசுரத்தை' என்று தொடங்கி.

2. "நோய் அறுக்கும்" என்றது, விரும்பிய பேற்றினை அடைதற்கும் உபலக்ஷணம் என்கிறார் 'கலந்து பிரிந்து' என்று தொடங்கி.

எட்டாம் திருவாய்மொழி — "அறுக்கும் வினை"

முன்னுரை

ஈடு :—திருவடி சென்று பிராட்டியைத் திருவடி தொழுது மீண்ட பின்னர் பெருமாளை அடைவதற்கு முன்பு பிராட்டிக்குப் பிறந்த [1] எண்ணங்கள் போலே, மேல் திருவாய்மொழியிலே விட்ட தூதுவர்கள் [2] அத்தலைப்பட்டு அவனைக் கொண்டு வருவதற்கு முன்னே நடுவில் இவர்க்குப் பிறந்த எண்ணங்களைச் சொல்லுகிறது இத் திருவாய்மொழியில். [3] இப்படித் தம்முடைய துயரத்தை அறிவிக்கச் செய்தேயும் அப்போதே வரக் காணாமையாலே துயர் உற்றவர், தூது விடுகையாலும், அவன் குணங்களை அநுசந்திப்பதாலும், மனத்தின் தெளிவினாலும் "அவன் வந்து நம்மை அங்கீகரித்து அமர்ந்த நிலமான திருநாவாயிலே கொடுபோகை நிச்சயம்" என்று அறுதியிட்டு, கிரமத்தால் போகப் பற்றாமையாலே பதறி, [4] "அங்கே புக வல்லேனே? புகும் நாள் என்றோ? அங்கே புக்கு என் கண்ணாரக் கண்டு அடிமை செய்யவல்லேனே?" என்று இப்படிப் பலவகையான எண்ணங்களை எண்ணுகிறார்.

---

1. 'எண்ணங்கள் போலே' என்றது, பிராட்டியே! சந்திரனோடு ரோகிணி சேர்வதைப் போன்று, நீ ஸ்ரீராமபிரானோடு சேர்வாய்; அதிவிரைவில் சோகத்தினுடைய முடிவை அடைவாய் என்ற பொருள் அமைந்த

த்வம் ஸமேஷ்யஸி ராமேண ஶஶாங்கேந இவ ரோஹிணீ
க்ஷிப்ரம் ச தேவி ஶோகஸ்ய பாரம் யாஸ்யஸி மைதிலி.

என்ற சுலோகத்தைத் திருவுள்ளம்பற்றி. ஸ்ரீராமா. சுந். 39 : 45. என்றது, திருவடி கூறிய வார்த்தைகளையே எப்பொழுதும் எண்ணிக்கொண்டிருந்தாள் என்றபடி. இங்கே, கம்பராமாயணம் சுந்தரகாண்டம் சூடாமணிப் படலம் 40-முதல் 74-முடிய உள்ள செய்யுட்களைப் படித்து இன்புறுதல் தகும்.

2. அத்தலைப்பட்டு = அங்கே சென்று.

3. பிராட்டிக்குப் பிறந்த எண்ணங்கள் பெருமாள் வருவர் என்று திருவடி சென்று பிராட்டிக்கு அறிவித்த பின்பு ஆகையாலே, 'எப்போது அவரைக் காண்போம்' என்று பிராட்டி பதறக்கூடும்; இவர்க்கு அங்ஙனம் ஒன்றும் இன்றிக்கே இருக்க மனோரதம் கூடினபடி யாங்ஙனம்? என்கிற சங்கையிலே விடை அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி.

4. இத் திருவாய்மொழியில் வருகின்ற "குறுக்கும் வகை உண்டுகொலோ?", "நான் அறியேனே", "அணுகப் பெறுநாள் எவைகொலோ?", "கண்ணாரக் களிக்கின்றது இங்கு என்று கொல்?" என்பன போன்றவைகளைத் திருவுள்ளம்பற்றி 'அங்கே புக வல்லேனே' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

[1]"உபாயமும் உபேயமும் என்னும் இரண்டும் ஈஸ்வரனே" என்று அறுதியிட்டார்க்கு, [2] பிராப்பியத்திலே ருசி கண்ணழிவற்றால் விளம்பத்திற்குக் காரணம் இல்லாமையாலே, பேறு சித்திக்குமளவும் எண்ணம் செல்லாநிற்கும் அன்றே. [3] இவ் எண்ணம் தான் இவனுக்குத் தவிராததுமாய், அதுதான் இனியதுமாய், இவனுடைய சொரூபத்தோடு சேர்ந்திருப்பதுமானது ஒன்றேஅன்றே. [4]பெரிய முதலியார், பேற்றினைப் பெறுவதில் உள்ள விரைவாலே எப்போதும் இத் திருவாய்மொழியினைச் சொல்லிக் கொண்டே இருப்பர்; ஆகையாலே, இத் திருவாய்மொழியினைப் 'பெரிய முதலியார் திருவாய்மொழி' என்றாயிற்றுச் சொல்லுவது. [5]அன்றிக்கே, "விட்ட தூதுவர்கள் தாழ்த்தார்கள் என்று தாமே அவன் எழுந்தருளியிருக்கிற தேசத்து ஏறப் போக ஒருப்படுகிறார்" என்பாரும் உளர்.

960.

அறுக்கும் வினையாயின ஆகத்து அவனை
நிறுத்தும் மனத்து ஒன்றிய சிந்தையினார்க்கு;
வெறித் தண் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய்
குறுக்கும் வகை உண்டு கொலோ கொடியேற்கே?

பொ - ரை:—அந்தச் சர்வேஸ்வரனைத் தங்கள் உள்ளத்திலே நிலைநிறுத்தி வைத்துக்கொள்ளவேண்டும் என்கிற கருத்திலே ஒருமைப்பாடுடைய எண்ணத்தையுடைய அடியார்களுக்கு வினை என்று பெயர்

---

1. உபாயம் அவனே என்று அறுதியிட்டிருக்குமவர் "தத் தஸ்ய ஸத்ருஶம் பவேத் - என்னை அழைத்துக்கொண்டு போவாரேயானால் போகும் அச்செயல் அவருக்குத் தக்கதாம்" என்று இராமல் இங்ஙன் எண்ணுவான் என்? என்ன, 'உபாயமும்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. 'பிராப்பியத்திலே ருசி கண்ணழிவற்றால்' என்றது, பெறும் பேற்றில் ஆதரம் குறைவற உண்டானால் என்றபடி.

3. பெறும் பேற்றில் விரைவு உண்டு என்றால், அதற்காகச் சொரூபத்திற்கு விரோதமானவற்றைச் செய்யலாமோ? என்ன, 'இவ் எண்ணம் தான்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. பேற்றினை விரைவாகப் பெறவேண்டும் என்று எண்ணுகிறார் என்றதற்குச் சம்வாதம் காட்டுகிறார் 'பெரிய முதலியார்' என்று தொடங்கி. பெரிய முதலியார் - ஸ்ரீ ஆளவந்தார்.

5 வேறும் ஒரு வகையால் இயைபு அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

பெற்றவைகள் அனைத்தையும் போக்குவான்; அத்தகையோன் எழுந்தருளியிருக்கிற, வாசனை பொருந்திய குளிர்ந்த மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருநாவாய் என்னும் திவ்விய தேசத்தைக் கொடியேனாகிய எனக்கு அணுகும் வகை உண்டோ?

வி-கு:—சிந்தையினர்க்கு வினையாயின அறுக்கும்; திருநாவாயைக் கொடியேற்குக் குறுக்கும் வகை உண்டு கொலோ? என்க.

ஈடு:—முதற்பாட்டு.[1] திருநாவாயைக் குறுகுகைக்கு எனக்கு உபாயம் உண்டோ? என்கிறார்.

வினையாயின அறுக்கும் - வினை என்று பேர் பெற்றவை அனைத்தையும் போக்கும். என்றது, [2] ருசி விரோதி, உபாய விரோதி, பேற்றினைப் பெறுமிடத்தில் வரும் விரோதிகள், இந்தச் சரீரத்தோடு முடியுமளவு அன்றிக்கே அநுபவிக்கப் படுமவற்றின் எஞ்சியவைகளாய் நின்று அவ்வருகே போம்படி விளம்பிக்கக் கடவனவாய் இருப்பனவற்றைத் தெரிவித்தபடி. [3] நின்ற நின்ற நிலைகள்தோறும் உண்டாய் இருக்குமன்றோ விரோதிகள். [4] புதுப்புடைவை அழுக்குக் கழற்றுமாறு போலே கிரமத்தாலே போக்கவேண்டுவது தான் போக்குமன்றே அன்றோ; பகவானுடைய திருவருளாலே போம்அன்று ஒரு காலே போம். [5] "பாபகர்மங்களின் கூட்டம் மேருமலை மந்தர

1. "கொடியேற்கு, திருநாவாய் குறுக்கும் வகை உண்டு கொலோ?" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. 'வினை என்று பேர் பெற்றவை அனைத்தையும்' என்பதற்கு, வினைகள் பல உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ருசி விரோதி' என்று தொடங்கி. ருசி விரோதியாவது, பகவத் விஷயத்திலே ஆசை பிறக்க வொட்டாதபடி வருகிற விரோதி; அதாவது, வேறு பயன்களைப் பெறுதற்கு முயற்சி செய்தல், வேறு தேவதைகளைத் துதித்தல் போல்வன. உபாய விரோதியாவது, ஸ்வயம் பிரயோஜனம் அவனே என்னும் ருசி பிறந்தாலும், அவனே உபாயம் என்று நினைக்கவொட்டாதபடி வருகிற விரோதி; அதாவது, வேறு சாதனங்களை விரும்புதல். பேற்றினைப் பெறுமிடத்தில் வரும் விரோதிகளாவன, அவனே உபாயம் என்ற எண்ணம் பிறந்தாலும், அவன் திருவடிகளை அடையுமிடத்தில் அவித்யா கர்ம வாசநா ருசிகள், பாகவத அபசாரம் என்பன போன்று வரும் விரோதிகள்.

3. கண்டவற்றுக்கு எல்லாம் விரோதிகள் உளவோ? என்ன, 'நின்ற நின்ற' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. வினைகள் ஒருமுறையிலேயே நீங்கக் கூடுமோ? என்ன, 'புதுப் புடைவை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. ஒரு காலே போம் என்னுமதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'பாப கர்மங்களின்' என்று தொடங்கி.

மேரு மந்தர மாத்ரோபி ராஸிஃ பாபஸ்ய கர்மணஃ
கேஸவம் வைத்யமாஸாத்ய துர்வியாதிஃ இவ நஸ்யதி.

என்பது, விஷ்ணுதர்மம், அத். 78.

மலை இவைகளைப் போன்று உயர்ந்திருந்தாலும் வைத்தியனைக் கிட்டி, கெட்ட வியாதிகள் நாசம் அடைவது போன்று கேசவனைக் கிட்டி அவைகள் நாசத்தை அடைகின்றன" என்றும், [1] "எல்லாப் பாவங்களும் நாசத்தை அடைகின்றன" என்றும், [2] "எல்லாப் பாவங்களினின்றும் உன்னை விடுவிக்கிறேன்" என்றும் கூறப்படுகின்றபடியே ஆகக் கடவன அன்றோ. [3] பிராஹ்மணனைக் கொன்ற பாவத்திற்குப் பிராயச்சித்தம் செய்தால், பசுவைக் கொன்ற பாவத்திற்குத் தனித்துப் பிராயச்சித்தம் செய்யவேண்டிவரும் அன்றோ, அங்ஙனம் வேண்டா அன்றோ பகவானுடைய திருவருள் கொண்டு காரியம் கொள்ளுமிடத்தில்.

யார்க்குத்தான் இப்படிச் செய்வது? என்னில், அவனை ஆகத்து நிறுத்தும் மனத்து ஒன்றிய சிந்தையினார்க்கு - மனத்திலே அவனை நிறுத்தவேண்டும் என்னும் உறுதியிலே ஒருமைப் பட்ட எண்ணத்தையுடையார்க்கு. வெறித் தண் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய் - [4] பாவங்களைப் போக்காமல் அவற்றை விருத்தி செய்தாலும் விட ஒண்ணுதபடி ஆயிற்று, தேசம் இருப்பது. வாசனையையுடையதாய்ச் சிரமத்தைப் போக்கக் கூடியதாய், மலர்கள் நிறைந்த சோலைகளாலே சூழப் பட்ட திருநாவாய். குறுக்கும் வகை உண்டுகொலோ - குறுகச் செய்யும் வகை ஏதோ? அன்றிக்கே, [5] குறுகும் விரகு ஏதோ? என்னுதல்; 'குறுக்கு' என்பது மலையாள நாட்டு வழக்கு. [6] எம்பெருமானார் திருவடிதொழ எழுந்தருளாநிற்க, "திருநாவாய் எத்தனை இடம் போரும்" என்று எதிரே வருகிறார் சிலரைக்

---

1. "ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே" என்பது, சாந்தோக்ய உபநிடதம், 5 : 24.

2. ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வ பாபேப்ய: மோக்ஷயிஷ்யாமி மாஶுச:
என்பது, ஸ்ரீ கீதை, 18 : 66.

3. மேலே அருளிச்செய்த 'புதுப் புடைவை' என்று தொடங்கும் வாக்கியத்தை விவரணம் செய்கிறார் 'பிராஹ்மணனை' என்று தொடங்கி.

4. சோலைகளை வர்ணிப்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பாவங்களை' என்று தொடங்கி. சொற்பொருள் அருளிச்செய்கிறார் 'வாசனையையுடையதாய்' என்று தொடங்கி.

5. இரண்டாவது பொருளில் விரித்தல் விகாரம்.

6. மலையாள நாட்டு வழக்கு என்பதற்கு, ஐதிஹ்யம் அருளிச்செய்கிறார் 'எம்பெருமானார்' என்று தொடங்கி. "குறுகும்" என்பதற்கு, மலையாள மொழியில் அண்மையில் இருக்கின்றது என்பது பொருள்.

கேட்டருள, "குறுக்கும்" என்றார்களாக, அதனைக் கேட்டு "இத் திசைச்சொல்லாலே அருளிச்செய்வதே ஆழ்வார்!" என்று மிகவும் ஈடுபட்டருளினர். கொடியேற்கு - கொடியேனுக்கு. ஆசை சிறிதுடையார்க்கும் அடையக் கூடிய தேசமாக இருக்க, ஆசையும் கண்ணழிவற்று இருக்கப் புகப் பெறாதே நோவுபடுகைக்கு அடியான பாவத்தைச் செய்த எனக்கு.

அவனை ஆகத்து நிறுத்தும் மனத்து ஒன்றிய சிந்தையினர்க்கு வினையாயின அறுக்கும்; வெறித் தண் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய், கொடியேற்குக் குறுக்கும் வகை உண்டு கொலோ? (1)

961.

கொடி ஏர் இடைக் கோகனகத்தவள் கேள்வன்
வடி வேல் தடம் கண் மடம் பின்னை மணாளன்
நெடியான் உறை சோலைகள் சூழ் திருநாவாய்
அடியேன் அணுகப் பெறும்நாள் எவைகொலோ?

பொ - ரை :—பூங்கொடி போன்ற அழகிய இடையையுடைய பெரிய பிராட்டியாருக்குக் கணவனும், கூர்மை பொருந்திய வேல் போன்ற விசாலமான திருக் கண்களையும் மடப்பத்தையுமுடைய நப்பின்னைக்குக் கணவனும், நெடியோனுமான எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற சோலைகள் சூழ்ந்த திருநாவாயை அடியேன் சேரும் நாள் எந்த நாளோ? என்கிறார்.

வி - கு :—கோகனகத்தவள் - தாமரையில் வீற்றிருப்பவள்; பெரிய பிராட்டியார். உறை திருநாவாய் என்க.

ஈடு :—இரண்டாம் பாட்டு. [1] திருநாவாயிலே புகும் நாள் என்றோ? என்கிறார்.

கொடி ஏர் இடைக் கோகனகத்தவள் கேள்வன் - கொடி போலே அழகிதான இடையை உடையளாய் மலரில் மணமே முதற் காரணமாகப் பிறந்த பெரிய பிராட்டிக்குக் கணவனானவன். [2]"யார் குற்றம் செய்யாதார்" என்பாரும் அருகே இருக்க

1. "திருநாவாய், அடியேன் அணுகப் பெறும்நாள் எவை கொலோ" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. ஏர் - அழகு. இந்த அடைமொழிக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'யார் குற்றம் செய்யாதார்' என்று தொடங்கி. இப்பொருளையுடைய சுலோகத்தை மேலே காண்க. பக், 39. கீழ்க்குறிப்பு.

இழக்கவோ? என்கிறார். வடி வேல் தடம் கண் மடம் பின்னை மணாளன் - கூரிய வேல் போன்று [1] ஓர் ஆளும் ஒரு நோக்கும் நேராய், அநுபவிக்கின்றவன் அளவு அல்லாத இனிமையை யுடைய கண்களையுடையவளாய், ஆத்ம குணங்கள் நிறைந்தவளான நப்பின்னைப் பிராட்டியினுடைய செவ்வி நுகர்வதற்கு இட்டுப் பிறந்தவன் ஆயிற்று. நெடியான் - [2] இப்படிப்பட்ட தேவிமார் முதலான பரிகரங்களால் எல்லை காண ஒண்ணாதவன். உறை சோலைகள் சூழ் திருநாவாய்-[3] அவனுக்கும் அவன் உலகிலே உள்ள மக்கட்கும் குறைவு அற வசிக்கலாம்படி இடத்தினையுடைத்தான சோலைகளாலே சூழப்பட்ட திருநாவாயை. அடியேன்-[4] வனவாசத்துக்குப்புறப்பட்டுப் பெருமாளும்பிராட்டியுமாகக் கலக்குமிடத்தில் "பவாம்ஸ்து" என்ற சுலோகத்திற் கூறியபடியே, எல்லா அடிமைகளும் செய்ய இளையபெருமாள் நேர்பட்டாற்போலே ஆயிற்று, இங்குத்தைக்கு அடிமை செய்கைக்கு இவர் நேர்பட்டபடியும். [5] இளையபெருமாளைப் போலே அடிமை செய்வித்துக் கொள்ளுகிற விஷயத்தில் குறை இல்லை ஆயிற்று இவர்க்கு. [6] ஸ்ரீ ஜனகராஜன் திருமகள் ஒருத்தியுமே அன்றே அங்கு. அணுகப்பெறும் நாள் எவைகொலோ - அத்தேசத்தை நான் கிட்டப்பெறும் நாள் ஏதோ? (2)

---

1. 'ஓர் ஆளும் ஒரு நோக்கும் நேராய்' என்றது, ஓர் ஆளுக்கு ஓர் அம்பு போலே, ஒரு நோக்காலே அகப்படுத்திக் கொள்ளுகையைத் தெரிவித்தபடி.

2. பிராட்டியைச் சொன்ன பின்னர் "நெடியான்" என்கையாலே, அதற்குத் தக பொருள் அருளிச்செய்கிறார் 'இப்படிப்பட்ட' என்று தொடங்கி.

3. 'சோலைகள்'' என்ற பன்மைக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவனுக்கும்' என்று தொடங்கி.

4. பிராட்டிமாருடைய சேர்த்தியை மேலே அருளிச்செய்து, அடியில் "அடியேன்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வனவாசத்துக்கு' என்று தொடங்கி.

> பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே
> அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஃ ஸ்வபதஶ்ச தே.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 31 : 25. நீரோ சீதாபிராட்டியோடு கூட மலைத் தாழ்வரைகளில் சேர்ந்து இரும்; நான் பகல் இரவு என்னும் எல்லாக் காலங்களிலும் உமக்கு எல்லா அடிமைகளையும் செய்வேன் என்பது இச் சுலோகத்தின் பிண்டப் பொருள்.

5. இவர் நேர்பட்டால் விஷயம் குறைபட்டு இருக்குமோ? என்ன, 'இளையபெருமாளை' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. இங்கு ஏற்றமும் உண்டு என்கிறார் 'ஸ்ரீ ஜனகராஜன்' என்று தொடங்கி.

962.

எவைகொல் அணுகப் பெறுநாள் என்று, எப்போதும்,
கவை இல் மனம் இன்றி, கண்ணீர்கள் கலுழ்வன்;
நவைஇல் திரு நாரணன் சேர் திருநாவாய்
அவையுள் புகலாவது ஓர் நாள் அறியேனே.

பொ - ரை :—திருநாவாயைச் சேரப் பெறும் நாள் என்றோ? என்று எப்பொழுதும் இரண்டு பட்ட மனம் இல்லாமல் ஒரே தன்மையனாய்க் கண்ணீர்கள் பெருக்காநிற்பன்; குற்றம் என்பது ஒன்றும் இல்லாத திருநாராயணன் வந்து சேர்ந்திருக்கின்ற திருநாவாயிலே உள்ள திரு ஓலக்கத்திலே புகக் கூடியது ஒரு நாளே இன்னது என்று அறிகிலேன்.

வி - கு :—கவை இல் மனம் - ஒரே எண்ணத்தையுடைய மனம்; கவை - இரண்டு பிரிவு. நவை இல் திரு நாரணன் - அகில ஹேயப் பிரத்யநீகன்; நவை - குற்றம். அவை - சபை.

ஈடு :—மூன்றாம் பாட்டு. [1] 'திருநாவாயில் திருவோலக்கத்திலே புகும் நாள் என்று?' என்று அறிகின்றிலேன் என்கிறார்.

அணுகப்பெறும் நாள் எவை கொல் என்று - நான் வந்து கிட்டப் பெறும் நாள் எவை என்று? எப்போதும் - ஒருகால் இதனைச் சொல்லி அல்லாதபோது வேறு ஒன்றில் நோக்காக இருக்கிறேனோ? கவை இல் மனம் இன்றி - [2]அது தன்னிலும் இதுவும் வேறு விஷயமாகச் செல்லுகிறதோ? என்றது, [3]இரு தலைத்த நெஞ்சு இன்றிக்கே என்றபடி. கண் நீர்கள் கலுழ்வன் - கண்ணீர்கள் வெள்ளம் இட இருப்பன். நவை இல் திரு நாரணன் - பற்றுதற்கு அரியன் ஆய் இருக்கை முதலான குற்றம் இன்றிக்கே ஸ்ரீமானான நாராயணன். என்றது, எளிமைக்கு ஊற்றான பிராட்டியோடே கூடத் திருநாவாயிலே வந்து சுலபனானவன் என்றபடி. திருநாவாய் அவையுள் புகலாவது ஓர் நாள் அறியேன் - திருநாவாயிலே பேரோலக்கமாக

---

1. "திருநாவாய், அவையுள் புகலாவது ஓர் நாள் அறியேனே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "கவை இல்" என்ற அடைமொழிக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அது தன்னிலும்' என்று தொடங்கி.

3. 'இருதலைத்த நெஞ்சு' என்றது, இருதலையான மனம் என்றபடி. "கவை இல் மனம் இன்றி - கவையிலேயான மனம் இன்றிக்கே - வேறு ஒன்றிற் பெருகின நெஞ்சு இன்றிக்கே; ஏகாக்ர சித்தனாய்க்கொண்டு என்றபடி. கவை - காரியம்; வேறு விஷயம் என்றபடி." என்பது அரும்பத உரை.

இருக்க, [1] "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ" என்று ஆசைப்பட்ட நான் அத் திரளிலே சென்று கூடப் பெறும் நாள் என்று? என்று அறிகிலேன். (3)

963.

நாளேல் அறியேன் எனக்கு உள்ளன; நானும்
மீளா அடிமைப் பணி செய்யப் புகுந்தேன்;
நீளார் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய்
வாளேய் தடம் கண் மடம் பின்னை மணாளா!

பொ - ரை :—ஓங்கி உயர்ந்திருக்கின்ற மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்திருக்கின்ற திருநாவாயில் எழுந்தருளியிருக்கின்ற, வாள் போன்ற விசாலமான திருக் கண்களையும் மடப்பத்தையுமுடைய நப்பின்னைப் பிராட்டிக்கு மணவாளனே! யானும் பிரிதல் இல்லாத அடிமைப் பணியைச் செய்வதற்கு வந்தேன்; நான் பெறக் கூடியதாக எனக்கு உள்ள நாள் இன்னது என்று அறிகின்றிலேன்.

வி - கு :—மணாளா! பணிசெய்யப் புகுந்தேன்; எனக்கு உள்ளன நாளேல் அறியேன் என்க. 'நாளேல்' என்பதில் ஏல்: அசை நிலை. மணாளன் என்பது, மணவாளன் என்ற சொல்லின் மரூஉ.

ஈடு :—நாலாம் பாட்டு. [2] ஆத்மா உள்ளவரையிலும் செய்ய வேண்டும் அடிமையைச் செய்யும்படி உன்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நான், நப்பின்னைப் பிராட்டியோடே கூட இருக்கிற இருப்பிலே அடிமை செய்யப் பெறும் நாள் என்று? என்று அறிகிலேன் என்கிறார்.

எனக்கு உள்ளன நாளேல் அறியேன் - [3] பெறக் கூடிய நாள் என்று? என்று அறிகிலேன். அன்றிக்கே, நான் பிரிந்திருக்கவேண்டிய நாள் எத்தனை உண்டு என்று அறிகின்றிலேன்? என்னுதல். நன்று; பேறு நிச்சயமான பின்பு பதறுகிறது என்? என்னில், நானும் மீளா அடிமைப் பணி செய்யப் புகுந்தேன் - நித்தியசூரிகள் செய்யும் உயிர் உள்ளவரையிலும்

1. திருவாய்மொழி, 2. 3: 10.

2. "மீளா அடிமைப்பணி செய்யப் புகுந்தேன்; மடப்பின்னை மணாளா! நாளேல் அறியேன்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. இன்ன நாள் என்று விசேடித்து அருளிச்செய்யாமையாலே "எனக்கு உள்ளன நாளேல் அறியேன்" என்பதற்கு, இரண்டு வகையாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'பெறக்கூடிய' என்றும், 'நான் பிரிந்திருக்க' என்றும் தொடங்கி.

செய்யப்படும் அடிமையிலே அன்றோ நானும் அதிகரித்தது; [1] ஒரு பிரயோஜனத்தைக் கொள்ளக்கிட்டினவனாய் ஆறி இருக்கிறேனோ? அடிமைப் பணியினுடைய வாசனையின் இனிமை அறியாதவனாய் ஆறி இருக்கிறேனோ?

நீள் ஆர் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய் - ஓங்கிப் பரப்புமாறப் பூத்த சோலைகளையுடைத்தான தேசம். என்றது, [2] அடிமை செய்கைக்குப் பூக்கள் முதலான சாதனங்கள் குறைவு அற்ற தேசம் என்றபடி. அன்றிக்கே, நப்பின்னைப் பிராட்டியும் தானுமாக மலர்களைப் பறித்துக் குவிக்கலாம் தேசம் என்பதனைத் தெரிவித்தபடி என்னுதல். வாள் ஏய் தடம் கண் - ஒளியை யுடைத்தான பரந்த கண் என்னுதல். வாள் போன்று கண்டாரை அழிக்க வல்ல கண் என்னுதல்; என்றது, அவனைத் தனக்கே உரியவன் ஆக்க வல்ல கண் அழகை உடையவள் என்றபடி. மடம் பின்னை மணாளா-அழகே அன்றிக்கே, ஆத்ம குணங்களாலும் துவக்க வல்லவளுக்குக் கணவன் ஆனவனே! [3] வேறு தேசத்திற்குச் சென்றிருந்த குழந்தை ஊர் அணித்தானவாறே தாய்மாரைப் பலகால் நினைக்குமாறு போன்று, அடையத்தக்க தெளிவிசும்பு அணித்தானவாறே திரளவும் தனித் தனியும் பிராட்டிமாரை அநுசந்திக்கிறார். (4)

964.

மணாளன், மலர் மங்கைக்கும் மண் மடந்தைக்கும்;
கண்ணாளன், உலகத்து உயிர், தேவர்கட்கு எல்லாம்;
விண்ணாளன் விரும்பி உறையும் திருநாவாய்
கண்ணாரக் களிக்கின்றது இங்கு என்றுகொல் கண்டே?

பொ - ரை :—பெரிய பிராட்டிக்கும் பூமிப் பிராட்டிக்கும் கணவனும், மக்களும் தேவர்களுமாகிய எல்லா உயிர்கட்கும் நிர்வாஹகனும், பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவனுமான எம்பெருமான் விரும்பி எழுந்தருளியிருக்கின்ற திருநாவாயைக் கண்ணாரக் கண்டு களிப்பது என்றுதானோ அறிகிலேன்?

---

1. "அடிமைப் பணி" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஒரு பிரயோஜனத்தை' என்று தொடங்கி.

2. "அடிமைப்பணி" என்பதனோடு "மடப்பின்னை மணாளா" என்றதனைக் கூட்டி இருவகையில் பாவம் அருளிச்செய்கிறார் 'அடிமைசெய்கைக்கு' என்றும், 'நப்பின்னைப் பிராட்டியும்' என்றும் தொடங்கி.

3. பாசுரந்தோறும் பிராட்டிமாரை அருளிச்செய்வதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வேறு தேசத்திற்கு' என்று தொடங்கி.

வி - கு :—கண்ணாளன் - கண்ணைப் போன்றவன். விண்ணாளன் - பரமபதத்தையுடையவன். கண்ணாரக் கண்டு களிக்கின்றது என்று? என்க.

ஈடு:—ஐந்தாம் பாட்டு. [1]திருநாவாயைக் கண்ணின் விடாய் தீரக் கண்டு அநுபவிப்பது என்று? என்கிறார்.

மலர் மங்கைக்கும் மண் மடந்தைக்கும் மணாளன் - பெரிய பிராட்டியார்க்கும் ஸ்ரீ பூமிப் பிராட்டிக்கும் கணவனானவன். இதனால், [2]புருஷகாரம் ஆவாரும் பொறைக்கு உவாத்து ஆவாரும் உளராய் இருக்க இழக்கவேண்டுமோ? என்கிறார். உலகத்து உயிர் தேவர்கட்கு எல்லாம் கண்ணாளன் - உலகத்தில் மனிதர்கள் என்ன, தேவர்கள் என்ன, எல்லார்க்கும் நிர்வாஹகன் ஆனவன். இதனால், [3]அவர்களுடைய படுக்கைப்பற்று நோக்குகிறபடியைத் தெரிவித்தபடி. விண்ணாளன் - படுக்கை தான் இருக்கிறபடி. என்றது, [4]பிராட்டிமாரும் தானும் தனக்குத் தகுதியான பரமபதத்தில் திவ்வியமான கட்டிலிலே இருந்து நித்தியசூரிகளை நிர்வஹிக்கிறவன் என்றபடி. விரும்பி உறையும் திருநாவாய் - [5]உபய விபூதிநாதன், பெரும் பேறாக விரும்பி வசிக்கிற தேசம். [6]அவன் விரும்புகிற தேசம் அல்லது அடையத்தக்க பேறு வேறு இல்லை அன்றோ. கண்ணார-காண்கையிலே விடாய்ப்பட்ட கண் வயிறு நிறைய. களிக்கின்றது

1. "திருநாவாய் கண்ணாரக் களிக்கின்றது இங்கு என்று கொல் கண்டே" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. இருவர்க்கும் மணாளன் என்று அருளிச்செய்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'புருஷகாரமாவாரும்' என்று தொடங்கி. பொறைக்கு உவாத்து ஆவார் - ஸ்ரீ பூமிப்பிராட்டி. உவாத்து - ஆசிரியர்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

என்பது, திருக்குறள்.

3. "பிராட்டிமார்க்கு மணாளன்" என்ற பின்னர், "தேவர்கட்கு எல்லாம் கண்ணாளன்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவர்களுடைய' என்று தொடங்கி. படுக்கைப்பற்று-பெண்களுக்குக் கொடுத்த தேசம்; சீதனம்.

4. மேலே கூறியதை விவரணம் செய்கிறார் 'பிராட்டிமாரும்' என்று தொடங்கி.

5. "கண்ணாளன், விண்ணாளன் விரும்பி உறையும்" என்று கூட்டி, பாவம் அருளிச்செய்கிறார் 'உபய விபூதி நாதன்' என்று தொடங்கி. உபய விபூதி - சத்தியலோகத்திலிருந்து இப்பால் உள்ள உலகங்களும், அதற்கு அப்பால் உள்ள பரமபதமும்.

6. "கண்ணாரக்கண்டு" என்கிறது என்? என்ன, 'அவன் விரும்புகிற' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

இங்கு என்று கொல் - [1] "நான் இனியன், நான் இனியன்" என்று ஒரு தேச விசேடத்தே களிக்கை ஒழிய, இங்கே களிக்கப்பெறுவது என்றோ? கண்டே-[2] "காண்பது நிச்சயம்" என்னும் நம்பிக்கையால் களிக்கை அன்றியே, கண்டே களிப்பது என்றோ? (5)

965.

கண்டே களிக்கின்றது இங்கு என்றுகொல் கண்கள்?
தொண்டே உனக்காய் ஒழிந்தேன், துரிசு இன்றி;
வண்டு ஆர் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய்
கொண்டே உறைகின்ற எம் கோவலர் கோவே?

பொ - ரை :—வண்டுகள் பொருந்தி இருக்கின்ற மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருநாவாயை வசிக்கும் இடமாகக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற எம்முடைய ஆயர்கள் தலைவனே! ஒருவிதக் குற்றமும் இன்றி உனக்கே அடிமைப்பட்டேன்; இந்த உலகத்திலே கண்களாலே கண்டு களிப்பை அடைவது எப்போதோ?

வி - கு :—கோவே! துரிசு இன்றி உனக்குத் தொண்டே ஆய் ஒழிந்தேன்; இங்குக் கண்கள் கண்டு களிப்பது என்று? என்க.

ஈடு :— ஆறும் பாட்டு. [3]ஊரை அன்றிக்கே ஊரில் நின்றருளின உன்னைக் கண்டு களிப்பது என்றோ? என்கிறார்.

கண்கள் இங்குக் கண்டே களிக்கின்றது என்று கொல்- [4] நான் செய்தபடியே செய்ய; கண்களின் விடாய் கெடுவது என்றோ? ஒரு நாளிலே காண்கை நிச்சயம்; ஆனபின்பு,

---

1. "இங்கு" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நான் இனியன்' என்று தொடங்கி.

அஹமந்நம் அஹமந்நம் அஹமந்நம்
அஹமந் நாதஃ அஹமந் நாதஃ அஹமந் நாதஃ.

என்பது, தைத்திரீய உபநி. ப்ரு. 10.

2. "கண்டே" என்றதிலுள்ள ஏகாரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'காண்பது' என்று தொடங்கி.

3. முதல் அடியையும் நான்காம் அடியையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

4. மேலே தாம் ஆனந்திப்பது என்றோ என்று வேண்டிக் கொண்டவர், இப்போது கண்களினுடைய ஆனந்தத்தைப் பிரார்த்திப்பது என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'நான் செய்தபடியே' என்று தொடங்கி. என்றது, தனக்கு ஆனந்தம் இல்லாவிட்டாலும் தன்னுடைய குழந்தைக்கு ஆனந்தத்தைப் பிரார்த்திப்பார் போலே வேண்டுகிறார் என்றபடி.

இந் நிர்ப்பந்தத்துக்குப் பலம் என்? என்னில், துரிசு இன்றி உனக்குத் தொண்டே ஆய் ஒழிந்தேன்-வேறு ஒன்றில் பற்று இல்லாமலே உன் திருவடிகளிலே மிக்க காதலன் ஆனேன். [1] அரைக்கணம் இழக்க மாட்டாதபடி அன்றோ என் ஆசை இருப்பது. இங்குத் 'துரிசு' என்றது, உலக விஷயங்களிலே மனம் செல்லுதல். வண்டு ஆர் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய்-வாசனையைப் போன்று வண்டுகளும் படிந்து கிடக்கும்படி மலர்ந்திருக்கின்ற சோலைகளையுடைத்தான தேசம். [2] "மீண்டு வருகிறான் இல்லை" என்கிறபடியே, புக்காரை மீள ஒட்டாதபடி எல்லை இல்லாத இனிமையையுடைய தேசம், கொண்டே உறைகின்ற - [3] நமக்கும் நம்மை உகந்தார்க்கும் நினைத்தபடி செய்து அநுபவிக்கலாம் தேசம் என்று திருவுள்ளத்தாலே ஆதரித்துக்கொண்டு வசிக்கிற தேசமாயிற்று. எம் கோவலர் கோவே - [4] கிருஷ்ணனாய் வந்து அவதரித்து ஆயர்கட்குச் சுலபன் ஆனாற் போலே, திருநாவாயிலே வந்து எனக்குச் சுலபன் ஆனவனே! (6)

966.

கோவாகிய மாவலியை நிலம் கொண்டாய்!
[5] தேவாசுரம் செற்றவனே! திருமாலே!
நாவாய் உறைகின்ற என் நாரண நம்பீ!
ஆ ஆ! அடியான் இவன் என்று அருளாயே.

---

1. மேலே அருளிச்செய்த வாக்கியத்திற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அரைக்கணம்' என்று தொடங்கி.

2. சோலைகளை வர்ணிப்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'மீண்டு வருகிறான் இல்லை' என்று தொடங்கி. "நச புநராவர்த்ததே" என்பது, சுருதி.

3. "கொண்டே" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நமக்கும்' என்று தொடங்கி.

4. "எம் கோவலர் கோவே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கிருஷ்ணனாய்' என்று தொடங்கி.

5. "தேவாசுர ராமாயண மாபாரதம் உள என்று
ஓவாது உரை ஓயும்படி உளது அப் பொரு களமே."

என்பது, கலிங்கத்துப்பரணி, களம். 1.

"தேவாசுரம் இராமாயணம் மாபாரதம் என்கிற போரில் வீரர் புண்படுமாறு போலே" என்பது நச்சினார்க்கினியர் உரை. சீவக சிந். செய். 2353.

"உயிர்த்தொகை உண்டனவாகிய ஆண்டும் மதியும் நாளும் கடிகையும் ஒன்பதிற்றிரட்டி என்று அவற்றோடே கூட்டி எண்ண - தேவாசுரயுத்தம் பதினெட்டு ஆண்டிலும், இராம ராவண யுத்தம் பதினெட்டு மாதத்திலும், பாண்டவ துரியோதன யுத்தம் பதினெட்டு நாளிலும், செங்குட்டவனும் கனக விசயரும் செய்த யுத்தம் பதினெட்டு நாழிகையிலும் முடிந்த என்று எண்ண" என்பது அடியார்க்கு நல்லார் உரை. (சிலப். நீர்ப்படைகாதை, 8-10.)

30

பொ - ரை :—மூன்று உலகங்கட்கும் அரசனாகிய மாவலி பக்கல் சென்று மூஅடி மண் நிலத்தை இரந்து கொண்டவனே! தேவர்களுக்கும் அசுரர்கட்கும் நடந்த போரிலே அசுரர்களை அழித்தவனே! திருமாலே! திருநாவாயில் எழுந்தருளியிருக்கின்ற என் நம்பியாகிய நாராயணனே! அந்தோ! அந்தோ! இவன் அடியான் என்று திருவுள்ளம் கொண்டு திருவருள்புரிவாய் என்கிறார்.

வி - கு :—தேவாசுரம் - தேவாசுர யுத்தம். நம்பி - பூர்ணன். ஆஆ - இரக்கத்தைக் காட்டும் இடைச்சொல்.

ஈடு :—ஏழாம் பாட்டு. [1]அடியார்களுக்காகத் திருநாவாயிலே நித்தியவாசம் செய்கிற தேவர், வேறு ஒரு கதியும் இல்லாதவன் இவன் என்று என் பக்கலிலே கிருபை செய்தருள வேண்டும் என்கிறார்.

கோவாகிய மாவலியை நிலம் கொண்டாய்-[2]சர்வேஸ்வரன் இந்திரனை மூன்று உலகங்கட்கும் அதிபதியாக ஆக்கி வைத்தான்: அவனைத் தள்ளி அந்தப் பதத்தைத் தான் எறட்டுக் கொண்டு "நானே அரசு" என்று இருந்தான் ஆயிற்று. [3]நீ கொடுக்கக் கொள்கை அன்றிக்கே, அவற்றை எல்லாம் தானே நியமிக்கிறவன் என்று செருக்குக்கொண்டு இருந்தானுமிற்று; [4]"வெறும் புறத்திலே, தன்னது அல்லாததைத் 'தன்னது' என்று எறட்டுக்கொண்டு இருக்கக்கூடிய அவன் கையிலே இவ் விஷயமும் கிடக்குமாகில் நாடு குடிக் கிடவாது" என்று பார்த்தருளி, இந்திரனுடைய உலகத்தை அவன் பக்கல் நின்றும் வாங்கினான். தேவாசுரம் செற்றவனே - தேவாசுரர்கள் போரிலே அவர்கள்படுவது இவர்கள்படுவதாய் இங்ஙனே உருவச் செல்லப் புக்கவாறே, அசுர சாதியை அழித்துத் தேவ

1. பின் இரண்டு அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "ஆகிய" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'சர்வேஸ்வரன்' என்று தொடங்கி. என்றது, தனக்கு இல்லாததை எறட்டுக் கொண்டான் என்கிறது, "ஆகிய" என்கிற சொல்லாலே என்றபடி.

3. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'நீ கொடுக்க' என்று தொடங்கி.

4. "மாவலியை நிலம் கொண்டாய்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வெறும் புறத்திலே' என்று தொடங்கி, வெறும் புறத்திலே - காரணம் இல்லாமலே.

சாதிக்குக் குடி இருப்பும் பண்ணிக் கொடுத்தானுயிற்று. திருமாலே-[1] அடியார்களைப் பாதுகாப்பதற்கும் அவர்கள் விரோதிகளை அழிப்பதற்கும் அடி திருமகள்கேள்வன் ஆகை.

நாவாய் உறைகின்ற - இப்படிப் பாதுகாக்குமிடத்தில் அடுத்து அணித்தாக முகம் தோற்றத் திருநாவாயிலே நித்திய வாசம் செய்கிற. என் நாரண நம்பீ - அடியார்களைப் பாதுகாப்பதிலே நோக்காக எல்லாப் பொருள்களிலும் அந்தரியாமியாக இருப்பவன். [2] அதற்கு உறுப்பாக அடியார்களிடத்தில் அன்புள்ளவனுய், அவர்களுக்கு உறுப்பாகப் பெற்றேரும் என்றதனுலே பரிபூர்ணன் ஆனவனே என்பார் 'நம்பீ' என்கிறுர். ஆ ஆ அடியான் இவன் என்று அருளாயே - [3]"கிருபை ஒன்றையே மனத்தின் செயலாகக்கொண்டு எனக்கு இரங்க வேண்டும்" என்கிறபடியே, [4]"ஐயோ! இவன் வேறு கதி ஒன்றும் இல்லாதவன்; இவனுக்கு வேறு ஒரு புகல் இல்லை' என்று என்பக்கலிலே கிருபை செய்தருளவேண்டும். [9] அன்றிக்கே, [5] அவன் அருளுகைக்கும் இவன் அருள் கொள்ளுகைக்கும் சம்பந்தம் சொல்லுகிறது '**அடியான்**' என்ற சொல்லால் என்னுதல். (7)

---

1. மேலே கூறிய இரண்டினையும் திருவுள்ளம்பற்றி, "திருமாலே" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறுர் 'அடியார்களை' என்ற தொடங்கி.

2. "நம்பீ" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறுர் 'அதற்கு உறுப்பாக' என்று தொடங்கி. அதற்கு உறுப்பாக - பாதுகாத்தலுக்கு உறுப்பாக. அன்றிக்கே, மேலே கூறிய அந்தரியாமித்வத்தாலே போதரும் சௌலப்யத்தைச் சொல்லி, இவ்வாக்கியத்தால் வாத்ஸல்யம் சொல்லுகிறது என்னலும் ஆம். நாராயண பதத்துக்கு அன்மொழித் தொகையிலே கூறும் பொருளில் அந்தரியாமித்வமும் வாத்ஸல்யமும் சித்தம்.

3. ஸோஹம் தே தேவதேவேஶ நார்ச்சநாதௌ ஸ்துதௌ நச
ஸாமர்த்யவாந் க்ருபாமாத்ர மநோ வ்ருத்திః ப்ரஸீத மே.

என்பது, ஸ்ரீவிஷ்ணு புரா. 5. 7 : 70.

4. "அடியான்" என்ற சொல்லுக்கு, சொல்லால் கிடைக்கும் பொருள் அநந்யார்ஹசேஷத்வம்; பொருளால் கிடைக்கும் பொருள் அநந்யகதித்வம். இந்த இரண்டு பொருள்களையும் அருளிச்செய்கிறுர் 'ஐயோ' என்று தொடங்கி. ஒருவர்க்கே அடிமை பூண்டு இருப்பாரை வேறு சிலர் ரக்ஷிக்கக் காரணம் இல்லை அன்றே; ஆதலால், அநந்யார்ஹசேஷத்வம் கூறியவதனுல் அநந்யகதித்வம் தானே போதரும் என்க.

5. "அடியான்" என்பதற்கு, வேறும் ஒருவகையில் பாவம் அருளிச்செய்கிறுர் 'அவன் அருளுகைக்கும்' என்று தொடங்கி.

967.

அருளாதொழிவாய்; அருள்செய்து, அடியேனைப்
பொருளாக்கி, உன் பொன்னடிக் கீழ்ப் புக வைப்பாய்;
மருளே இன்றி, உன்னை என்நெஞ்சத்து இருத்தும்
தெருளே தரு தென் திருநாவாய் என் தேவே!

பொ - ரை:—அழகிய திருநாவாயில் எழுந்தருளியிருக்கின்ற என் தெய்வமே! என்பக்கல் அருள் செய்யாது இருக்கிலும் இரு; அன்றி, அடியேனைத் திருவருள் செய்து பொருள் ஆக்கி உன் அழகிய திருவடிகளின் கீழே வைத்துக்கொண்டாலும் வைத்துக்கொள்; அறிவின்மை என்பது சிறிதும் இல்லாதபடி உன்னை என்னுடைய மனத்திலே இருத்தி அநுபவிக்கும்படியான தெளிந்த அறிவினைத் தந்தருள்வாய் என்கிறார்.

வி - கு:—தேவே! அருளாதொழிவாய், அருள்செய்து பொன் அடிக்கீழ்ப் புக வைப்பாய், உன்னை என்நெஞ்சத்து இருத்தும் தெருளே தரு என முடிக்க. தரு = தருக. அன்றிக்கே, 'தெருளே தரு' என்பதனை நாவாய்க்கு அடையாக்கி, தெருளே தரு நாவாய் என் தேவே! அருளாதொழிவாய், புகவைப்பாய் என்று பொருள் கூறலுமாம்.

ஈடு:—எட்டாம் பாட்டு. [1] மேல் பாசுரத்திலே "அருளாய்" என்றார். அப்போதே விரும்பியதைப் பெறுமையாலே, "அருளவுமாம், தவிரவுமாம்; அறிவின்மை சிறிதும் இல்லாதபடி உன்னை என் நெஞ்சிலே இருத்தும்படி தெளிவைத் தர வேண்டும்" என்கிறார்.

அருளாதொழிவாய்- என்பக்கல் திருவருள் செய்யாமல் இவன் பட்டது படுகிறான் என்று இருக்கிலும் இரு. அருள் செய்து-அன்றிக்கே, எனக்கு வேறு கதி இன்மையைக் கண்டு கிருபை செய்து. அடியேனைப் பொருள் ஆக்கி உன் பொன் அடிக்கீழ்ப் புக வைப்பாய்-அறிவில்லாத பொருளைப்போன்று இருக்கிற என்னை, [2] "உள்ளவன் ஆகிறான்" என்கிறபடியே, ஒரு பொருள் ஆகும்படி செய்து, [3] எல்லை இல்லாத இனிமையை

1. திருப்பாசுரம் முழுதினையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. அஸந்நேவ ஸ பவதி அஸத் ப்ரஹ்மேதி வேத சேத்
அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத ஸந்தமேநம் ததோவிது:.
என்பது, தைத்திரீய ஆனந். 6.

3. "பொன்" என்ற பதத்துக்குப் பொருள், 'எல்லை இல்லாத இனிமை' என்பது.

யுடைய உன் திருவடிகளின் கீழே வைத்துக் கொள்ளிலும் கொள். [1] பொருளானுரை வைத்துக்கொள்ளும் இடம் உன் பொன் அடிக்கீழ் போலே காணும். மருளே இன்றி உன்னை என் நெஞ்சத்து இருத்தும் தெருளே தரு-அடியில் மயர்வு அற மதிநலம் அருளினபடியே அறிவின்மை சிறிதும் இல்லாதபடி உன்னை என் மனத்திலே எப்போதும் வைத்துக்கொள்ளும் படி, [2] "தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே" என்கிற தெளிவினைத் தரவேண்டும். தென் திருநாவாய் என் தேவே! தெருளே தரு என்று முடிக்க. அன்றிக்கே, "மருளே இன்றி உன்னை என் நெஞ்சத்து இருத்தும் தெருளே தரு தென் திரு நாவாய் என் தேவே! அருளாதொழிவாய், அருள்செய்து அடியேனைப் பொருள் ஆக்கி உன் பொன்அடிக்கீழ்ப் புக வைப்பாய்: திருவுள்ளமானபடி செய்" என்று பிள்ளான் பணிப்பர். (8)

968.

தேவர் முனிவர்க்கு என்றும் காண்டற்கு அரியன் ;
மூவர் முதல்வன், ஒரு மூஉலகு ஆளி;
தேவன் விரும்பி உறையும் திருநாவாய்
யாவர் அணுகப் பெறுவார் இனி! அந்தோ ?

பொ - ரை :—தேவர்களுக்கும் சனகன் முதலான முனிவர்கட்கும் எப்பொழுதும் காணுதற்கு அரியனும், மூவர்களுக்குள் முதல்வனும், மூன்று உலகங்களையும் ஆள்கின்ற ஒப்பற்றவனும் தேவனுமான எம்பெருமான் விரும்பி எழுந்தருளியிருக்கின்ற திருநாவாயை, இனிச் சேரப் பெறுவார் யாவரோ ? அந்தோ !

வி - கு :—திரு நாவாயை இனி அணுகப் பெறுவார் யாவர் ? அந்தோ ! என்க.

ஈடு :—ஒன்பதாம் பாட்டு. [3] இப்படிச் சொன்ன இடத்திலும் ஒரு விசேஷ கடாக்ஷம் செய்யாமையாலே, "நான் இவ் ஆசையோடே முடியாநின்றேன் ; நான் விரும்பிய பொருளைப் பெறப் புகுகிற மிக்க புண்ணியத்தையுடையவர்கள் யாரோ ?" என்கிறார்.

---

1. ரசோக்தியாக, பாவம் அருளிச்செய்கிறார் 'பொருளானுரை' என்று தொடங்கி. பொருள் = பொருளும், செல்வமும்.

2. 'தனக்கே' என்பது, திருவாய்மொழி, 2. 9 : 4.

3. "யாவர் அணுகப்பெறுவார் இனி அந்தோ" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

தேவர் முனிவர்க்கு என்றும் காண்டற்கு அரியன் - பிரமன் முதலான தேவர்கட்கும் சனகன் முதலான முனிவர்கட்கும் தங்கள் முயற்சியாலே என்றும் ஒக்கக் காண அரியனாய் உள்ளவன். மூவர் முதல்வன் - [1] பிரமன் சிவன் இவர்களுக்கு நடுவே வந்து அவதரித்து, அவர்களுக்கு நிர்வாஹகன் ஆனவன். அன்றிக்கே, பிரமன் சிவன் இந்திரன் என்னும் இவர்களுக்கு நிர்வாஹகன் என்னுதல். ஒரு மூ உலகு ஆளி - [2] இந்திரன் மூலமாக நின்று மூன்று உலகங்களையும் காக்கும்படியைச் சொல்லுதல்; அன்றிக்கே, கீழும் மேலும் நடுவுமான எல்லா உலகங்கட்கும் ஒப்பற்ற நாயகன் என்னுதல். தேவன் - [3] எல்லாருக்கும் வேறுபட்டவன். விரும்பி உறையும் திருநாவாய் - [4] இப்படி எல்லாப் பொருள்கட்கும் நிர்வாஹகன் ஆனவன், தனக்கு என்ன ஒரு குடி இருப்பு இல்லாதான் ஒருவன் குடி இருப்புப் பெற்றாற்போலே, "அடியார்களைப் பாதுகாப்பதற்குப் பாங்கான தேசம்" என்று மிகவும் விரும்பி வசிக்கிற தேசத்தை. இனி யாவர் அணுகப் பெறுவார் - [5] நான் முடியப் புகாநின்றேன்; இனிப் பெற இருக்கிறார் யாரோ! [6] "அவர்கள் மனிதர்கள் அல்லர்" என்கிறபடியே, அவர்கள் மனிதர்களுக்குக் கூட்டு அல்லர். [7] 'இனி' என்ற சொல், நான்

1. "மூவர் முதல்வன்" என்பதற்கு இருவகையாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதற் பொருளில் முதல்வன் என்பதற்குப் பிரதானன் என்பது பொருள். இரண்டாவது பொருளில் காரணமானவன் என்பது பொருள்.

2. "மூவர் முதல்வன்" என்றதற்கு அருளிச்செய்த இருவகைப் பொருளுக்கு ஏற்ப, "மூ உலகு ஆளி" என்பதற்கும் இருவகையாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'இந்திரன் மூலமாக' என்று தொடங்கி.

3. "தேவன்" என்பதற்குக் கூறப்படும் பல பொருள்களில் ஒளியைப் பரப்புகிறவன் என்ற ஒரு பொருளைத் திருவுள்ளம்பற்றி 'எல்லாருக்கும் வேறுபட்டவன்' என்று பொருள் அருளிச்செய்கிறார்.

4. "விரும்பி உறையும்" என்ற அடைமொழிக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி.

5. "இனி" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'நான் முடியப் புகாநின்றேன்' என்று தொடங்கி.

6. பெறுவார் யாவரோ? என்கையாலே, அவர்கள் புண்ணியம் புரிந்தோர்களாகவே இருக்கவேண்டும் என்று திருவுள்ளம்பற்றி, அதற்குப் பிரமாணம் அருளிச்செய்கிறார் 'அவர்கள்' என்று தொடங்கி.

நதே மநுஷ்யா தேவா: தே யே சாரு சுப குண்டலம்
முகம் த்ரக்ஷ்யந்தி ராமஸ்ய வர்ஷே பஞ்ச தசே புந:.

என்பது, ஸ்ரீராமா. அயோத். 64 : 69. இது, தசரதன் புலம்பல்.

7. 'முடியப் புகாநின்றேன்' என்ற பொருளைக் கூறுதற்குப் பாசுரத்தில் சொல் இல்லையே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இனி என்ற சொல்' என்று தொடங்கி.

முடிந்தேன் என்பதனைக் காட்டுகிறது. எனக்கு உள்ளது, அவனுக்கு உண்டாகப் பெறுதொழிவதே! என்பார் 'அந்தோ' என்கிறார்.

நதே மநுஷ்யாః - [1]அவர்கள் செத்துப் பிறக்கிறவர்களுக்குக் கூட்டு அல்லர். தேவாః - அவர்கள் எப்பொழுதும் அநுபவித்துக் கொண்டு இருக்கிற நித்தியசூரிகளுக்குக் கூட்டு ஆவர் அத்தனை. யே சாரு சுப குண்டலம் முகம் த்ரக்ஷ்யந்தி ராமஸ்ய - பதினான்கு யாண்டும் ஒருபடி தப்பிக் கிடந்து அவர் மீண்டு வந்தால் அவ் ஒப்பித்த முகத்தைக் காணப்பெறும் புண்ணியமிக்கவர்கள் யாரோ? [2]இங்கே, யாதாயினும் ஒரு கால விசேடத்திலே பெருமாளை அநுபவிக்கிறவர்கள், எப்பொழுதும் அநுபவித்துக்கொண்டு இருக்கிற நித்தியசூரிகளைக் காட்டிலும் சீரியரே; [3]"விண்ணுளாரிலும் சீரியரே" என்கிற படியே. வர்ஷே பஞ்ச தஶே புநః-[4]பதினான்கு யாண்டும் கழித்துப் பதினையாம் யாண்டைக்கு இருப்பாரே அன்றோ காணப் பெறுவார்? [5]காலம் முடிந்தது என்று இருக்கிறான் ஆயிற்றுச் சக்கரவர்த்தி. (9)

969.

அந்தோ! அணுகப் பெறுநாள் என்று, எப்போதும்
சிந்தை கலங்கித் திருமால்! என்று அழைப்பன்;
கொந்துஆர் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய்
வந்தே உறைகின்ற எம் மா மணிவண்ணா!

பொ - ரை :—பூங்கொத்துக்கள் நிறைந்திருக்கின்ற சோலைகள் சூழ்ந்த திருநாவாயில் வந்து எழுந்தருளியிருக்கின்ற என் மா மணி

1. மேலே கூறிய "நதே மநுஷ்யா" என்ற சுலோகத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'அவர்கள்' என்று தொடங்கி. 'வர்ஷே பஞ்ச தஶே' என்றதனைத் திருவுள்ளம்பற்றி, 'பதினான்கு யாண்டும்' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. இங்கே ஒருகால் பெருமாளைக் கண்டவர்கள் நித்தியாநுபவம் பண்ணும் நித்தியசூரிகளுக்குக் கூட்டுஆவரோ? என்ன, 'இங்கே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'த்ரக்ஷ்யந்தி' என்பதனை நோக்கி 'யாதாயினும் ஒரு காலவிசேடத்திலே' என்கிறார்.

3. சீரியர் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'விண்ணுளாரிலும்' என்று தொடங்கி. இது, திருவிருத்தம், செய். 79.

4. "புநః" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'பதினான்கு யாண்டும்' என்று தொடங்கி.

5. பதினான்கு யாண்டுகளும் கழிந்து, பதினைந்தாம் ஆண்டு வாராதோ? என்ன, 'காலம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

வண்ணனே! அந்தோ! திருநாவாயைச் சேரப் பெறும் நாள் என்றோ? என்பதாக எப்பொழுதும் மனம் கலங்கித் திருவோடு கூடிய மாலே! என்று அழைப்பேன்.

வி - கு :—அணுகப் பெறு நாள் 'என்று' என்று ஒரு சொல் வருவிக்க.

ஈடு :—பத்தாம் பாட்டு. [1] உன்னைக் காணப் பெறுமையால் நெஞ்சு அழிந்து கூப்பிடாநின்றேன் என்கிறார்.

அந்தோ அணுகப் பெறு நாள்-சொல்லத் தொடங்கினது தலைக்கட்டமாட்டாத வலி இன்மையைக் காட்டுகிறது 'அந்தோ' என்பது. [2]"அணுகப் பெறு நாள் என்றுகொல்" என்ன அன்றோ நினைப்பது. என்று எப்போதும் - ஒருகால் சொல்லப்புக்கு இளைத்தால் விடுகை அன்றிக்கே, எல்லாக் காலத்திலும். சிந்தை கலங்கித் திருமால் என்று அழைப்பன் - மனம் கலங்கி, துயர் உற்ற பிள்ளை தாய் தந்தையர்கள் பெயரைச் சொல்லிக் கூப்பிடுமாறுபோலே திருமால் என்று அழைப்பன். கொந்துஆர் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய் - கொத்துக்கள் மிக்க மலர்களையுடைத்தான சோலையாலே சூழப்பட்ட திருநாவாயிலே. [3] எப்பொழுதும் மாறாத மலர்கள் பொருந்திய சோலைகளையுடைத்து ஆகையாலே எல்லை இல்லாத இனிமையையுடைய தேசம் என்றபடி. வந்தே உறைகின்ற எம் மா மணி வண்ணா - [4]ஒரு தேச விசேஷத்திலே சென்று காணக் கூடியதான வடிவினைக் கொண்டு அடியார்களுக்காக வந்து நித்தியவாசம் செய்கிறவனே! [5]அவ் வடிவினை எனக்குக் காட்டாத அன்று உன் வரவு வாராமைக்குச் சமம் என்கை. (10)

---

1. "சிந்தை கலங்கித் திருமால் என்று அழைப்பன்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. சொல்லத் தொடங்கியது யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அணுகப்பெறுநாள்' என்று தொடங்கி. என்றது, 'அணுகப் பெறுநாள் எதுகொலோ அந்தோ' என்ன நினைத்து, பலக் குறைவாலே 'எது கொல்?' என்று முடியச் சொல்ல மாட்டாதே முன்னே அந்தோ! என்கிறார் என்றபடி.

3. சோலைகளைக் கூறியதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'எப்பொழுதும்' என்று தொடங்கி.

4. "மா மணி வண்ணா" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஒரு தேச விசேஷத்திலே' என்று தொடங்கி. தேச விசேஷம் - பரமபதம்.

5. "மா மணி வண்ணா" என்கிறவருடைய மனோபாவத்தை அருளிச்செய்கிறார் 'அவ் வடிவினை' என்று தொடங்கி.

970.

வண்ணம் மணி மாடம் நல் நாவாய் உள்ளானைத்
திண்ணம் மதிள் தென் குருகூர்ச் சடகோபன்
பண் ஆர் தமிழ் ஆயிரத்து இப் பத்தும் வல்லார்
மண் ஆண்டு மணம் கமழ்வர் மல்லிகையே.

பொ - ரை :—அழகிய மாணிக்கங்கள் பதித்த மாடங்களையுடைய சிறந்த நாவாயில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானை, உறுதி அமைந்த மதிள்கள் சூழ்ந்த அழகிய திருக்குருகூரில் அவதரித்த ஸ்ரீ சடகோபராலே அருளிச்செய்யப்பட்ட பண்ணோடு கூடிய திருப்பாசுரங்கள் ஆயிரத்திலும் இப் பத்துத் திருப்பாசுரங்களையும் கற்று வல்லவர்கள் இவ் உலகத்தை ஆண்டு மறுமையில் மல்லிகையின் மணத்தை உடையர் ஆவர்.

வி - கு :—இப் பத்தும் வல்லார் மல்லிகையின் மணம் கமழ்வர் என்க. மல்லிகையைக் கூறியது, எல்லா வாசனைகட்கும் உபலக்ஷணம்.

ஈடு :—முடிவில், [1] இத் திருவாய்மொழி கற்றார், இவ் உலகம் அவ் உலகம் என்னும் இரண்டு உலகங்களிலும் எல்லா இன்பங்களையும் அநுபவிக்கப் பெறுவர் என்கிறார்.

வண்ணம் மணி மாடம் நல் நாவாய் உள்ளானை - பல வகைப்பட்ட நிறங்களையுடைய இரத்தினங்களாலே செய்யப்பட்ட மாடங்களையுடைத்தாய், எல்லை இல்லாத இனிமையையுடைய திருநாவாயிலே நின்றருளினவனை. திண்ணம் மதிள் தென் குருகூர்ச் சடகோபன் - திண்ணிதான மதிளையுடைத்தான திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த. [2] திருநாவாய்க்குக் காவல் திருநகரியின் மதிள் போலே காணும். [3] ஆழ்வார் பரியவே அப் பரிவுதானே அவ் ஊருக்குக் காவல் என்னுதல்; அன்றிக்கே, சர்வேஸ்வரனுக்குச் செல்வம் ஆழ்

1. பின் இரண்டு அடிகளையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "நல் நாவாய் உள்ளானைத் திண்ணம் மதிள் தென் குருகூர்ச் சடகோபன்" என்ற பதச் சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'திருநாவாய்க்கு' என்று தொடங்கி.

3. திருநகரியின் மதிள் திருநாவாய்க்குப் பாதுகாவல் ஆதல் யாங்ஙனம்? என்ன, அதற்கு இரண்டு வகையில் விடை அருளிச்செய்கிறார் 'ஆழ்வார்' என்றும், 'சர்வேஸ்வரனுக்கு' என்றும் தொடங்கி. என்றது, திருநகரியின் மதிள் ஆழ்வார்க்குப் பாதுகாவலாய், ஆழ்வார் பாதுகாக்கப்பட்டவராக இருக்கையாலே, ஆழ்வார் பரிவு திருநாவாய்க்குப் பாதுகாவல் ஆகையாலே, திருநகரியின் மதிள் திருநாவாய்க்குப் பரம்பரையால் காவலாம் என்றபடி. இரண்டாவது பொருளில் "திண்ணம் மதிள்" என்பது ஆழ்வார்க்கு அடைமொழி.

வார் ஆகையாலே செல்வம் கிடக்கிற இடத்திலே அன்றே மதிள் இடுதல் என்னுதல். பண் ஆர் தமிழ்-பண் மிகுந்த தமிழ். ஆயிரத்து இப் பத்தும் வல்லார் மண் ஆண்டு - இவ் உலகத்தில் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயால் நிறைந்தவராய். மணம் கமழ்வர் மல்லிகையே - மல்லிகை மணம் கமழ்வர். மல்லிகையைக் கூறியது எல்லா வாசனைக்கும் உபலக்ஷணமாய், "ஸர்வ கந்தః" என்கிற விஷயத்தோடு ஒத்து இருத்தலைப் பெறுவர். [1]இவருடைய எண்ணம் அவர்கள் பேற்றுக்கு உடலாம். (11)

—:o:—

திருவாய்மொழி நூற்றந்தாதி

அறுக்கும் இடர் என்று அவன்பால் ஆங்கு விட்ட தூதர்
மறித்து வரப் பற்று மனத்தால்—அறப் பதறிச்
செய்ய திரு நாவாயில் செல்ல நினைந்தான் மாறன்
மையலினால் செய்வு அறியாமல். (88)

———

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

———

1. இவர் மநோரதிக்க அவர்கள் பெறும்படி என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவருடைய' என்று தொடங்கி.

ஒன்பதாம் திருவாய்மொழி—"மல்லிகை"

முன்னுரை

ஈடு:—[1]"படைவீட்டில் இருந்தால் மாமனர் மாமியார்கட்கு நாணவேண்டுமாதலின் பெருமாளுடன் நினைத்தபடி கலந்து பேசுதற்கு முடியாது" என்று, காட்டிலே தனியாக அநுபவிப்பதாக எண்ணங்கொண்டு போந்த பிராட்டியை, "மனிதர்கள் இல்லாத காட்டின் நடுவிலே விடப்பட்ட இளம்பெண் போன்று அந்தச் சீதை அழுதாள்" என்கிறபடியே, கூப்பிடச் செய்தாற் போன்று, திருநாவாய் என்ற திவ்வியதேசத்திலே புக்கு அநுபவிப்பதாக எண்ணம் கொண்ட இவர்க்கு, துன்புறுத்துகின்ற பொருள்களுக்கு அஞ்சிக் கூப்பிடும்படியாய் விளைந்தது.

[2] ஒருநாள், நம்பி திருவரங்க நாராயண தாசர் என்பார் ஒருவர் என்பக்கலிலே திருவாய்மொழி கேட்டு, பெற்றி பக்கலிலே செல்ல, பெற்றி "இன்று பிள்ளைபாடு விநோதம் என்?" என்று கேட்க, "அறுக்கும் வினை என்ற திருவாய்மொழியைச் சாற்றினேம்" என்று அவர் விடை பகர, பெற்றி "நாளை **மல்லிகை கமழ் தென்றலும் மாலைப் பூசலும் என்னுய்**" என்று பணித்தாராம்.

[3] "அடையத் தக்க இறைவனைப் பெறும்படியை எண்ணினார் மேல் திருவாய்மொழியிலே; எண்ணினவுடனே பெறக் காணாமையாலே, திருவாய்ப்பாடியில் உள்ள பெண்கள்

---

1. மேல் திருவாய்மொழிக்கும் இத் திருவாய்மொழிக்கும் உள்ள இயைபினை ஒரு திருஷ்டாந்தத்தின் மூலம் சுருக்கமாக அருளிச்செய்கிறார் 'படைவீட்டில்' என்று தொடங்கி.

ஸா ராக்ஷஸீ மத்ய கதாச பீருঃ வாக்பிঃ ப்ருஸம் ராவண தர்ஜிதாச
காந்தார மத்யே விஜநே விஸ்ருஷ்டா பாலேவ கந்யா விலலாப ஸீதா.

என்பது, ஸ்ரீராமா. சுந். 28 : 2.

2. இத் திருவாய்மொழி "மாலைப்பூசல்" என்கைக்குச் சம்வாதம் காட்டுகிறார் 'ஒருநாள்' என்று தொடங்கி. நம்பி திருவரங்க நாராயணதாசர் என்பவர் நம்பிள்ளையினுடைய மாணாக்கர். பெற்றி என்பவர் நஞ்சீயருடைய மாணாக்கர். 'என் பக்கலிலே' என்றது, நம்பிள்ளை பக்கலிலே என்றபடி.

3. மேலே சுருங்க அருளிச்செய்த இயைபினை விரித்து அருளிச்செய்யத் திருவுள்ளம் பற்றி, மாலைப்பூசல் என்பதற்கு, பெரியார்கள் இருவர் அருளிச்செய்த இரண்டுவகைப்பட்ட நிர்வாகங்களை அருளிச்செய்கிறார் 'அடையத்தக்க' என்று தொடங்கி. ஸ்ரீ ஆளவந்தார் நிர்வாகத்திலே மாலை

ஸ்ரீ கிருஷ்ணனைப் பிரிந்து ஓர் இரவிலே பட்ட துன்பத்தை இவர் ஒருவரும் படுகிறார்" என்று ஆளவந்தார் அருளிச்செய்யும்படி. அதனை எம்பெருமானார் கேட்டருளி, "முன்பே ஆற்றாமையாலே தற்புஅற்று இருக்கிறவர் ஆகையாலே அத்தனை ஆடல் கொடுக்கைக்கு உடல் நிலை இடம் தாராது; ஆனபின்பு, அவர்கள் அவனைப்பிரிந்து ஒரு மாலைநேரத்தில் பட்டநோவினை இவர் ஒருவரும் படுகிறார்" என்று அருளிச்செய்வர்.

[1]இத் திருவாய்மொழியில் செய்ததாகிறது என்? என்னில், ஞானம் பிறந்த பின்பு விரோதியான சம்சாரத்தில் நின்றும்

என்பதற்கு இரவு என்று பொருள். எம்பெருமானார் நிர்வாகத்திலே அந்திப் பொழுது என்று பொருள். பூசல் - நோய். என்றது, பிரிந்த தலைவி பிரிவாற்றாது அந்திமாலையில் பட்ட துன்பத்தினைத் தெரிவிப்பது இத் திருவாய்மொழி என்றபடி. பிரிந்தவர்கட்கு மாலைப்பொழுது துன்புறுத்துதலைக் கீழ் வரும் பகுதிகளால் உணர்தல் தகும்.

"வாலிழை மகளிர் உயிர்பொதி அவிழ்க்கும், காலை யாவது அறியார், மாலை என்மனார் மயங்கியோரே.", "நாற்றிசையும் நடுக்குறாஉ மடங்கற் காலைக், கூற்று நக்கது போலும் உட்குவரு மாலை; மாலை நீ, உள்ளங்கொண்டகன்றவர் துணைதாராப் பொழுதின்கண், வெள்ளமான் நிறநோக்கிக் கணை தொடுக்கும் கொடியான்போல், அல்லல்பட்டிருந்தாரை அயர்ப்பிய வந்தாயோ; மாலை நீ, ஈரமில் காதலர் இகந்தருளா இடன்நோக்கிப், போர்தொலைந் திருந்தாரைப் பாடெள்ளி நகுவார்போல், ஆரஞர் உற்றாரை அணங்கிய வந்தாயோ; மாலை நீ, கந்தாதல் சான்றவர் களைதாராப் பொழுதின்கண், வெந்ததோர் புண்ணின்கண் வேல்கொண்டு நுழைப்பான்போல், காய்ந்தநோய் உழப்பாரைக் கலக்கிய வந்தாயோ; எனவாங்கு, இடனின்று அலைத்தரும் இன்னா செய் மாலை" என்பது, கலித்தொகை, நெய்தற்கலி, 2, 3.

ஒன்றே எயிற்றது ஒரு பெரும் பேய் உலகம் விழுங்க அங்காந்து
நின்றாற் போல நிழல் உமிழ்ந்து நெடுவெண் திங்கள் எயிறு இலங்க
இன்றே குருதி வானவாய் அங்காந்து என்னை விழுங்குவான்
அன்றே வந்தது இம் மாலை அளியேன் ஆவி யாதாங்கொல்.

என்பது, சீவகசிந்தாமணி, 1660.

விரிமலர்த் தென்றலாம் வீசு பாசமும்
எரிநிறச் செக்கரும் இருளும் காட்டலால்
அரியவட்கு அனல்தரும் அந்தி மாலையாம்
கருநிறச் செம்மயிர்க் காலன் தோன்றினான்.

என்பது, கம்பரா. மிதிலைக் காட்சிப். 62. மற்றும், திருக்குறளில் "பொழுது கண்டிரங்கல்" என்னும் அதிகாரத்தையும் ஈண்டு உணர்தல் தகும். தற்பு - வலிமை. ஆடல் கொடுக்கைக்கு - துன்பத்தினை அநுபவிப்பதற்கு.

1. இத் திருவாய்மொழிக்குச் சுவாபதேசம் (உள்ளுறைப் பொருள்) அருளிச்செய்கிறார் 'இத்திருவாய்மொழியில்' என்று தொடங்கி. என்றது, "பகல் கண்டேன்" என்கிற விடியலுக்கும், இருள் தரு மா ஞாலமான இரவிற்கும் நடுவில் முமுக்ஷுத்வ நிலையை மாலை என்கிறது என்றபடி. 'ஞானம் பிறந்த பின்பு' என்றது, 'சம்சாரம் இழிந்தது' என்னும் ஞானம் பிறந்த பின்பு என்றபடி.

கால்வாங்கவும் மாட்டாதே இருத்தலாலும், பெறத்தக்க திருநாட்டினைப் பற்றிய சிந்தனையினாலும் துன்புறுத்தும் பொருள்களுக்கு [1] ஈரலாம்படி பதம் செய்தபடி ஆயிற்று. [2] "பொய்ந்நின்ற ஞானம்" என்ற திருப்பாசுரத்தில், "பகவத்விஷயத்தில் ஞானம் பிறந்தபோதே, விரோதியான சம்சாரத்தில் சம்பந்தத்தை அறுத்துத் தந்தருளவேண்டும்" என்று விரும்பச்செய்தேயும், "இவரைக் கொண்டு சில பிரபந்தங்களைச் செய்து முடிக்கவேண்டும்" என்று இருக்கையாலே அப்போதே அப்படிச் செய்திலன். விரோதியான சம்சாரத்தில் ஏற்பட்ட அந்த ருசி இன்மை இவ்வளவும் வர நிலைநின்றபடி சொல்லுகிறது.

நன்று; [3] இத் திருவாய்மொழியிற் சொல்லுகிற இது வேதாந்தங்களில் போகிற கட்டளையில் எங்கே சொல்லிற்று? என்னில், "தஸ்ய (மே) தாவதேவ சிரம் - அப்படிப்பட்ட எனக்கு அத்துணைக்காலமும் நெடுங்காலமாகிறது" என்று கூறி, அதன்பின் "யாவந்நவிமோக்ஷ்யே அதஸம்பத்ஸ்யே - எவ்வளவு காலம் விடுபடாமல் இருக்கின்றேனோ; பின்பு

1. ஈரலாம்படி - துன்புறுத்தலாம்படி.

2. கால் வாங்கமாட்டாமல் படுகிற துன்பத்தினைப் "பொய்ந் நின்ற ஞானமும்" என்ற பாசுரம் தொடங்கி இறைவனுக்கு அறிவித்திருக்க, காரியம் செய்யாதிருப்பான் என்? என்ன, 'பொய்ந்நின்ற ஞானம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'பொய்ந் நின்ற ஞானம்' என்பது, திருவிருத்தம், செய். 1.

3. ஆக, இதனால், இச் சரீரத்தைக் கழித்துத் தரவேண்டும் என்றதாய் அன்றோ இத் திருவாய்மொழி இருக்கிறது; இது, வேதாந்தத்தில் எங்கே சொல்லிற்று என்கிற ஜிஜ்ஞாஸா ப்ரஸ்நத்தை அநுவதிக்கிறார் 'இத் திருவாய்மொழியில்' என்று தொடங்கி. ஜிஜ்ஞாஸா - அறியவிரும்புமவனுடைய, பிரஸ்நம் - வினா.

அதற்குச் சுருதிப் பிரமாணத்தைக் காட்டுகிறார் "தஸ்ய தாவதேவ சிரம்" என்று. இந்தச் சுருதி, "அத் துணைக்காலம் நெடுங்காலம் ஆகிறது" என்று கூறுவதனால், சரீரத்தோடு கூடி இருக்கும் காலத்தை என்னால் சகிக்கமுடியவில்லை என்று தோன்றுதல் காண்க. ஆயின், இந்தச் சுருதியில் "தஸ்ய" என்றல்லவோ இருக்கிறது? "தஸ்ய' என்பதற்கு அவனுக்கு என்பதன்றோ பொருள்? எனக்கு என்ற பொருளைக் காட்டுகிற தன்மைச் சொல் இல்லையே? எனின், அந்தச் சுருதியிலேயே பின்பு வருகின்ற "யாவந் நவிமோக்ஷ்யே, அதஸம்பத்ஸ்யே" என்ற வினைமுற்றுக்கள் தன்மையில் வருவதனாலே, அவ்வாறு வருகின்ற தன்மைப் பயனிலைக்குத் தகுதியாக எனக்கு என்னும் தோன்றா எழுவாயை வருவித்துக் கோடல்வேண்டும் என்கிறார் 'யாவந்ந' என்று தொடங்கி. ஆக, "தஸ்ய" என்ற சொல்லுக்குப் பின் "மே" என்னும் தோன்றா எழுவாயினைச் சேர்த்துக் கொண்டு, "தஸ்ய மே தாவதேவ சிரம் - அப்படிப்பட்ட எனக்கு அத்துணைக் காலமும் நெடுங்காலம் ஆகிறது" என்று பொருள் கோடல் வேண்டும் என்பது நம்பிள்ளையின் திருவுள்ளம்.

அடைகின்றேன்" என்று இவ்வாறே அன்றோ அந்தச் சுருதி கூறுகிறது.

[1] "முடியானே" என்ற திருவாய்மொழியில் தம்முடைய உறுப்புக்களுக்கு உண்டான நிலை வேறுபாட்டினைச் சொன்னார்; இத் திருவாய்மொழியில், அந்த உறுப்புக்களோடே கூட அவற்றுக்கும் நிலைக்களமான அவயவியே ஒன்றாக அழிகிறபடியைச் சொல்லுகிறது. என்றது, [2]ஞானேந்திரியங்களோடு கர்மேந்திரியங்களோடு வேற்றுமை அற ஒன்றாக அழிகிறபடியைச் சொல்லுகிறது என்றபடி. [3] இராமாவதாரத்தில் பதினான்கு ஆண்டுபோலே ஆயிற்று, திருவாய்ப்பாடியிலுள்ள பெண்களுக்குக் கிருஷ்ண விரஹத்தாலே ஒரு மாலைப்போது. [4] குணங்களால் மேம்பட்ட பெருமாளைப் பிரிகையாலே அங்குப் பதினான்கு ஆண்டுகளாய்க் கழியவும் கூடும்; இங்கு இவன் நீர்மையிலே கைஅடி உண்டு இருக்கையாலே, ஒரு பகல் பல கல்ப

1. "மல்லிகை கமழ் தென்றல்" என்ற திருவாய்மொழி பரிச இந்திரியம் முதலானவை அழிகிறபடி சொல்லுகிறது; "முடியானே" என்ற திருவாய்மொழி உறுப்புக்களுக்கு உண்டான நிலை வேறுபாட்டினைச் சொல்லிற்று; இதற்கும் அதற்கும் வேறுபாடு யாது? என்ன, 'முடியானே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'அவயவியே' என்றது, இத் திருவாய்மொழியில் வருகிற "புல்லிய முலைகளும்" என்ற பாசுரப்பகுதியைத் திருவுள்ளம்பற்றி.

2. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'ஞானேந்திரியங்களோடு' என்று தொடங்கி. இத் திருவாய்மொழியில் வருகிற "மல்லிகை கமழ்" என்ற பாசுரப்பகுதியால் மூக்கும், "தென்றல்" என்றதனால் மெய்யும், "குறிஞ்சி இசை" என்றதனால் செவியும், "நன் மேகங்கள்" என்றதனால் கண்ணும், போதருகிற தன்மையாலே 'ஞானேந்திரியங்கள்' என்கிறார். "தோளும் கொண்டு" என்கையாலே கர்மேந்திரியங்கள் என்கிறார். தோளைக் கூறியது மற்றைக் கர்மேந்திரியங்கட்கும் உபலக்ஷணம்.

3. சிறிதுநேரம் நின்று மறையக் கூடிய மாலை நேரத்தில் இப்படி நோவுபடக்கூடுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இராமாவதாரத்தில்' என்று தொடங்கி.

4. மாலைக் காலம் பதினான்கு ஆண்டுபோலே ஆகைக்குக் காரணம் யாது? என்ன, 'குணங்களால்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். நீர்மையிலே - தீம்பனான நீர்மையிலே. கையடி உண்டிருக்கை - ஈடுபட்டிருத்தல். இதனால், குணங்களைக் காட்டிலும் தீம்பு ஈடுபடுத்தும் என்றபடி.

"விளைவான் மிக வந்து நாள் திங்கள் ஆண்டு ஊழி நிற்க எம்மை
உளைவான் புகுந்து இதுவோர் கங்குல் ஆயிரம் ஊழிகளே."

என்பது, திருவிருத்தம், 70.

"ஊழி பல ஓர் இரவு ஆயிற்றோ என்னும்" என்பது, நளவெண்பா.

மாய்த் தோற்றுகிறது. [1] குணங்கள்தாம் காற்கட்டுவன குணங்களாய் அல்லவே; பெருமாளிடத்தில் கிடந்தவையாய் அன்றே. இங்குத் தர்மி அதுவேயாய், அதற்குமேல் தீம்பும் ஆனால் பாடு ஆற்றப் போகாதே அன்றே.

[2] உலகத்தார் இனிமை உண்டு என்று நினைத்திருக்கிற ஐம்புல விஷயங்கள் அனைத்தும் தமக்குத் துன்புறுத்துவனவாக, பெறவேண்டிய பொருளைப் பெறுமல், ஆண் புலியான ஸ்ரீ வீடுமர் அருச்சுனன் கையில் அம்புகளாலே உளைய ஏவுண்டு கிடந்து துடித்தாற்போலே, நடுவே கிடந்து துடிக்கிறார்.

[3] திருவாய்ப்பாடியிலுள்ள பெண்கள், "கிருஷ்ணன் "பசு மேய்க்க" என்று புறப்பட்டால் அவன் வருமளவும் அவர்கள் படும்பாடு சொல்லுகிறது. அதாவது, [4] பிராஹ்மணர்க்குச் சந்தியாவந்தனம் போலே அன்றே ஆயர்கட்குப் பசு மேய்க்கை; அது சாதிக்குரிய தர்மம் ஆகையாலே தவிர ஒண்ணுதிருக்குமன்றே. [5] இப்படியாலே அவனைப் பசுக்களின் பின்னேபுறப்படவிட்டு, அவன் வரும் மாலை நேரத்தைப் பார்த்திருப்பார்களத்தனை ஆயிற்று. [6] ஆக, அவன் பசு மேய்க்கப் போனல் பகல் பொழுதை வருந்தி ஒருபடி ஆற்றினல், அவன் வரும் காலமான மாலைப் பொழுதும் வந்து முகங்காட்டிப் பசுக்களின் முற்கொழுந்து வந்து தலைவைக்கச் செய்தேயும் அவன் வரக் காணவிட்டால் ஆற்றப்போகாதே அன்றே. அதாவது,

---

1. நன்று; குணங்கள்தாம் ஒருவரை ஈடுபடுத்துவதற்குக் காரணம் ஆம்; ஈடுபடுத்துவதற்குத் தீம்பும் காரணமாமோ? என்ன, 'குணங்கள் தாம்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். அதுவேயாய் - குணங்களால் மேம்பட்டதாய். பாடாற்றப்போகாது = துன்பம் பொறுக்கப் போகாது.

2. தென்றல் முதலான பொருள்களுக்குச் சுவாபதேசப் பொருள் அருளிச்செய்கிறார் 'உலகத்தார்' என்று தொடங்கி.

3. 'ஒரு மாலை நேரத்தில் பட்ட நோவினை இவர் ஒருவரும் படுகிறார்' என்று மேலே அருளிச்செய்ததனை விவரணம் செய்கிறார் 'திருவாய்ப்பாடியில்' என்று தொடங்கி.

4. நன்று; இவன்தான் இவர்களை விட்டுப் பசு மேய்க்கப் போவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பிராஹ்மணர்க்கு' என்று தொடங்கி.

5. மேலே கூறியதனை முடிக்கிறார் 'இப்படியாலே' என்று தொடங்கி.

6. பகற்காலம் போலே ஆறி இருக்க ஒண்ணுதோ? அவன் வருகிற மாலைக் காலத்தில் நோவு படுவான் என்? என்ன, அவன் வரும் மாலைக் காலத்தில் அவன் வாராதிருந்தால் ஆறி இருக்கப்போமோ? என்கிறார் 'ஆக, அவன்' என்று தொடங்கி.

[1] அவன்தான் முற்கொழுந்திலே வாராமல் பிற் கூழையிலே நிற்குமாயிற்று, நடுவு படும் அலமாப்புக் காண்கைக்காக.

[2] அவன் வரக்கூடிய காலமான மாலைப்பொழுதும் வந்தது: கூடவரும் பசுக்களும் வந்தன: அவன் தான் வரக் காணு விட்டவாறே, அக்காலத்தில் நல்லகுறிஞ்சி இசை தொடக்கமான இன்பப் பொருள்கள், தென்றல், நிலா, கடல்ஓசை, அன்றில், குழல் ஓசை முதலானவை துன்புறுத்தத் தொடங்கின. [3] குழல்

1. அவன்தான் பசுக்களுக்கு முன்னே வாராது, பசுக்களுக்குப் பின்னே வருவான் என்? என்ன, 'அவன்தான்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

2. மேலே கூறியதை அநுவதித்துக்கொண்டு, மாலைப் பொழுதில் உளதாய துன்பம் அன்றிக்கே, மல்லிகை முதலான பொருள்களும் துன் புறுத்தத் தொடங்கின என்கிறார் 'அவன் வரக்கூடிய' என்று தொடங்கி. இத் திருவாய்மொழியில் வருகின்ற "மாலையும் வந்தது" என்னும் பகுதி யைத் திருவுள்ளம்பற்றி 'மாலைப்பொழுதும் வந்தது' என்றும், "ஆ புகு மாலையும் ஆகின்று" என்ற பகுதியை நோக்கிப் 'பசுக்களும் வந்தன' என்றும், "மாயன் வாரான்" என்ற பகுதியை நோக்கி 'அவன்தான்' என்று தொடங்கியும் அருளிச்செய்கிறார்.

"புலம்பயிர் அருந்த அண்ணல் ஏற்றொடு
நிலம்தூங்கு அணல் வீங்குமுலை செருத்தல்
பால்வார்பு குழவி உள்ளி நிரை இறந்து
ஊர்வயிற் பெயரும் புன்கண் மாலை."

என்பது, குறுந்தொகை, 344.

"கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்
இமிழிசை மண்டை உறியொடு தூக்கி
ஒழுகிய கொன்றைத் தீங்குழல் முரற்சியர்
வழூஉச் சொல் கோவலர் தத்தம் இனநிரை
பொழுதொடு தோன்றிய கார்நனை வியன்புலம்."

என்பது, கலித்தொகை, செய். 106.

"வரிவெண் கோடல் வாங்குகுலை வான்பூப்
பெரிய சூடிய கவர்கோல் கோவலர்
எல்லூப் பெயல் உழந்த பல்லான் நிரையொடு
நீர்திகழ் கண்ணியர் ஊர்வயின் பெயர்தர."

"தாம்பசை குழவி வீங்குசுரை மடியக்
கனையலங் குரல காற்பரி பயிற்றிப்
படுமணி மிடற்ற பயநிரை ஆயம்
கொடுமடி யுடையர் கோற்கைக் கோவலர்
கொன்றையம் குழலர் பின்றைத் தூங்க
மனைமனைப் படரும் நனைபுகு மாலை."

என்பன, அகநானூறு, 54, 106.

3. குழலோசை, துன்புறுத்துமாற்றை விவரணம் செய்கிறார் 'குழ லோசையும் என்று தொடங்கி. 'அன்றில்' இத் திருவாய்மொழியில் கூறப் படவில்லையாயினும், "இன்னுயிர்ச் சேவல்" என்ற திருவாய்மொழியில் "அன்றிற்பேடைகாள்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி அதனையும் உடன் கூட்டி அருளிச்செய்கிறார் என்க.

ஓசையும், அவ்வழியே அவனுடைய குணங்களை நினைவூட்டி நோவுபடுகைக்கு உடலாய் இருக்கும் அன்றோ. [1] அப்படி இருக்கிற துன்புறுத்துகின்ற பொருள்கள் எல்லாம், முன்பு தனித் தனியே இழிசொற்களைப் பேசி நலிந்த ஒற்றைக் கண்ணள், ஒற்றைக்காதள் உள்ளிட்ட அரக்கிகள் பின்பு அவ்வளவில் நில்லாதே எல்லாரும் ஒருசேர மேல் விழுந்து, அதற்கு மேலே சில நலிவுகளைச் செய்ய நினைத்தாற் போலே, துன்புறுத்துகின்ற பொருள்களெல்லாம் தனித் தனியும் திரளவும் மேல் விழுந்து நலிய, அவற்றாலே நலிவுபட்டவர்கள் எல்லாரும் கூப்பிட்ட கூப்பீட்டை இவர் ஒருவருமே கூப்பிடுகிறார்.

—:o:—

971.

மல்லிகை கமழ் தென்றல் ஈரும் ஆலோ!
வண் குறிஞ்சி இசை தவரும் ஆலோ!
செல்கதிர் மாலையும் மயக்கும் ஆலோ!
செக்கர் நன் மேகங்கள் சிதைக்கும் ஆலோ!
அல்லி அம் தாமரைக் கண்ணன் எம்மான்
ஆயர்கள்ஏறு அரி ஏறு எம் மாயோன்
புல்லிய முலைகளும் தோளும் கொண்டு
புகலிடம் அறிகிலம் தமியம் ஆலோ!

பொ - ரை:—மல்லிகையின் வாசனையை மேற்கொண்டு வருகின்ற தென்றற் காற்றானது ஈராநின்றது; அந்தோ! இனிய குறிஞ்சி இசையானது உடம்பைத் தொளைக்கின்றது; அந்தோ! சூரியன் சென்று மறைந்த மாலைக்காலமும் மயங்கச் செய்கின்றது; அந்தோ! செவ்வானத்தில் தோன்றுகின்ற அழகிய மேகங்கள் செதுக்குகின்றன; அந்தோ! மலர்ந்த அழகிய தாமரை போன்ற திருக் கண்களையுடையவனும் எம்மானும் ஆயர்களுக்குள் ஏறு போன்றவனும், அரி ஏறு போன்றவனும் எம் மாயோனுமான எம்பெருமான் தழுவிய தனங்களையும் தோள்களையும் கொண்டு, தனியேனாகிய யான் புகுதற்குரிய ஓர் இடத்தை அறிகின்றிலேன் அந்தோ! என்கிறாள்.

---

1. அப்பொருள்கள் நலியும் வகையினையும், அவற்றாலே அவர்கள் நோவுபடுகிற வகையினையும் விவரித்துக் கொண்டு, மாலைநோத்தில் அவர்கள் பட்ட நோவினை இவர் ஒருவரும் படுகிறார் என்று மேலே அருளிச்செய்த வதனோடு முடித்துக் காட்டுகிறார் 'அப்படி இருக்கிற' என்று தொடங்கி. 'திரளவும்' என்றது, இத் திருவாய்மொழியில் வருகிற "வால் ஒளி வளர் முல்லை கருமுகைகள் மல்லிகை" என்ற பாசுரப்பகுதியைத் திருவுள்ளம் பற்றி.

வி - கு:—ஈர்தல் - அறுத்தல். தவர்தல் - தொளைத்தல். செக்கர் - செவ்வானம். அரி - சிங்கம். ஆல் - அசை. ஓகாரம், துக்கத்தின் மிகுதியைக் காட்ட வந்த இடைச்சொல்.

இத் திருவாய்மொழி எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஈடு:—[1] மாலைக் காலத்தில் தென்றல் தொடக்கமான பொருள்கள் தனித்தனியே தன்னை வருத்துகிறபடியைச் சொல்லுகிறாள்.

[2] 'மல்லிகை' என்றதுமுதல் 'செக்கர் நன் மேகங்கள் சிதைக்குமாலோ' என்பது முடிய இவள் யார் கேட்கக் கூப்பிடுகிறாள்தான்? மல்லிகை கமழ் தென்றல் - [3] வெறும்புறத்திலே நலியவற்றான தென்றல், அதற்குமேலே மல்லிகையின் வாசனையை ஏறட்டுக்கொண்டு வாராநின்றது. கொல்லுதற்குக் கருவியான வாளிலே நஞ்சினை ஊட்டினாற் போலே ஆயிற்று, தென்றல் வாசனையைக் கொண்டு வருகிறபடி. ஈரும்- பண்டே பிரிவாலே சென்றற்று இருக்கிற உடம்பைப் பலகை பலகையாக ஈராநின்றது. அன்றிக்கே, கண்ட இடம் எங்கும் வாயாக இராநின்றது இத் தென்றலுக்கு என்பாள் 'ஈரும்' என்கிறாள் என்னுதல். [4] கிராண இந்திரியமான மூக்கிற்கும் பாதகமாய், பரிச இந்திரியமான உடம்பினையும் அழியாநின்றது என்பாள் '**கமழ் தென்றல் ஈரும்**' என்கிறாள். [5] இராப்படை ஏறுவாரைப்போலே உடம்பிலே படக் காணுமித்தனை போக்கிக் கண்ணுக்குத் தோற்றாதாயிற்று; ஆதலால், கண்டு

1. முதல் இரண்டு அடிகளையும் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார். "ஈருமாலோ, தவருமாலோ, மயக்குமாலோ, சிதைக்குமாலோ" என்பனவற்றைத் திருவுள்ளம்பற்றித் 'தனித் தனியே' என்கிறார்.

2. 'மல்லிகை' என்று தொடங்கும் வாக்கியம் வியாக்கியாதாவின் ஈடுபாடு.

3. "மல்லிகை கமழ்" என்ற அடைமொழிக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வெறும் புறத்திலே' என்று தொடங்கி. அதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'கொல்லுதற்கு' என்று தொடங்கி.

4. "மல்லிகை கமழ் தென்றல் ஈரும்" என்றதனால் போதரும் பொருளினை அருளிச்செய்கிறார் 'கிராண இந்திரியமான' என்று தொடங்கி.

5. தன்புறத்துவன என்று அறிந்தால் தப்பிப் போகலாமே? என்ன, தப்ப முடியாது என்று அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இராப்படை ஏறுவாரைப் போலே' என்று தொடங்கி.

தப்ப ஒண்ணுது.[1] அவன் உடன் இருந்தபோது இன்பத்தைத் தந்த பொருள்கள் அனைத்தும் இப்போது துன்பத்தினைத் தருவனவாக இராநின்றன என்கிறுள்.

இதனை, [2] "சீதையுடன் இருக்கும்போது எந்தப் பொருள்கள் இனியனவாக இருந்தனவோ அந்தப்பொருள்களே அவள் இல்லாமல் இருக்கும்போது எனக்குத் துன்பம் பயப்பனவாக இருக்கின்றன" என்றும், [3] "மலர்களின் வாசனையுடன் கூடியதும் இளமையாக வீசுவதும் குளிர்ச்சியுடன் கூடினதுமான இந்தக் காற்று, அந்தச் சீதையைப் பற்றி நினைத்துக்கொண்டிருக்கிற எனக்கு நெருப்புக்குச் சமானமாக இருக்கிறது" என்றும், "முன்பு நான் சீதையுடன் இருந்த காலத்தில் எந்தக் காற்றைச் சுகத்தைத் தரக்கூடியது என்று நினைத்தேனே அந்தக் காற்றே சீதையைப் பிரிந்திருக்கிற எனக்குச் சோகத்தை அதிகப்படுத்துகிறது" என்றும், வருவனவற்றுல் அறிதல் தகும். [4] "இலக்குமணு! தாமரை முதலியவற்றின் மணங்களை அரித்துக் கொண்டு வருகின்ற தூயதாயுள்ள, துன்பத்தைப் போக்குகின்ற, பம்பையின் சோலையினின்றும் எழுந்த காற்றை மனைவியோடு கூடியுள்ள மாந்தர்கள் எப்பொழுது வருமென்று

---

1. நன்று; சுகத்தைத் தருகின்ற தென்றல் துன்பத்தைத் தருவான் என்? என்ன, 'அவன் உடன் இருந்தபோது' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

2. பிரிந்திருந்த காலத்து இப்படித் துன்பத்தினைத் தந்த இடம் உண்டோ? என்ன, 'சீதையுடன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

யாநி ஸ்ம ரமணீயாநி தயா ஸஹ பவந்தி மே
தாநி எவ அரமணீயாநி ஜீவதோ மே தயா விநா.

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 1: 69.

3. பிரிந்திருக்கும் காலத்தில், தென்றற்காற்றுத் துன்பத்தினைத் தருவதற்குப் பிரமாணங்கள் இரண்டு காட்டுகிருர் 'மலர்களின்' என்று தொடங்கியும், 'முன்பு நான்' என்று தொடங்கியும்.

ஏஷ புஷ்பவஹஃ வாயுஃ ஸுகஸ்பர்ஸஃ ஹிமாவஹஃ
தாம் விசிந்தயதஃ காந்தாம் பாவக ப்ரதிமஃ மம.

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 1: 52.

ஸதா ஸுகம் அஹம் மந்யே யம் புரா ஸஹ ஸீதயா
மாருதஃ ஸ விநா ஸீதாம் ஸோக ஸஞ்ஜநகஃ மம.

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 1: 104.

4. 'இலக்குமணு!' என்று தொடங்கும் பொருளையுடைய சுலோகம் வியாக்யாதாவின் ஈடுபாட்டினைக் காட்ட வந்தது.

பத்ம ஸௌகந்திக வஹம் ஸிவம் ஸோக விநாஸநம்
தந்யா லக்ஷ்மண ஸேவந்தே பம்போபவந மாருதம்.

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 1: 103.

எதிர்பார்க்கின்றனர்" என்கிறபடியே, கூப்பிடுவான் அவன் அன்றோ; அங்ஙனமிருக்க இப்போது இவள் அன்றோ கூப்பிடுகிறாள்; [1]இருவராக இருப்பார் காற்றைத் தேடிப் படுக்கை படாநிற்க, "இக் காலம் இவ் ஊர் பனிப்பு இயல்வு எல்லாம் தவிர்ந்து எரி வீசும்" என்னுமாறுபோலே இவர் ஒருவர்க்குமே ஆயிற்றுப் பாதகம் ஆகிறது.

வண் குறிஞ்சி இசை தவரும் - அழகிய குறிஞ்சி இசையானது தொளையாநின்றது. [2]காற்று ஈர்ந்து பொகட்ட புண்ணின்மேலே தொளைத்துப் பொகடாநின்றது: [3]தென்றல் புறம்பே நலிகிற இத்தனை; இசை, செவி வழியே உள்ளே புகுந்து நலியாநின்றது. [4]இசைக்கு எவ்வளவு செவிப்பாடு உண்டு, அவ்வளவும் பாதகமாம் இத்தனையாதலின் 'வண் குறிஞ்சி' என்கிறாள். என்றது, அவன் உடன் இருந்த காலத்தில் எத்துணை இனிமையாக இருக்கும்? பிரிந்திருக்கும் நிலையில் அத்துணையும் நலியும் என்றபடி. [5]குறிஞ்சியும் தென்றலும் கூடிக் கிருதசங்கேதிகளாய் வந்து, ஒன்று தொடங்கிச் செய்த காரியத்தின் குறையை ஒன்று செய்யாநின்றது. என்றது, நற்கொலையாகக்கொல்ல ஒண்ணாது, உயிர்க் கொலையாகக் கொல்லவேண்டும்: அதில் நீ இவ்வளவு செய், நான் இவ்வளவு செய்கிறேன் என்று கிருதசங்கேதராய் வந்தாரைப் போலே ஆயிற்று இருக்கிறது என்றபடி.

செல் கதிர் மாலையும் மயக்கும் - சென்ற கதிரையுடைத்தான மாலையானது மயங்கச் செய்கிறது. என்றது, சூரியன்

---

1. காற்றுத் துன்புறுத்துவதற்கு இவர் ஸ்ரீ சூக்தியினின்றும் ஒரு மேற்கோள் காட்டுகிறார் 'இருவராக இருப்பார்' என்று தொடங்கி. 'இக் காலம்' என்பது, திருவிருத்தம், செய். 5.

2. "தென்றல் ஈரும்" என்றதனையும் சேர்த்துக்கொண்டு "தவரும்" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'காற்று ஈர்ந்து' என்று தொடங்கி.

3. தென்றலைக் காட்டிலும் குறிஞ்சி இசை கொடிது என்கிறார் 'தென்றல்' என்று தொடங்கி.

4. "வண்" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இசைக்கு' என்று தொடங்கி. செவிப்பாடு - செவியிலே புகுதல்; இனிமை என்றபடி. இதனை விவரணம் செய்கிறார் 'அவன் உடன் இருந்த காலத்தில்' என்று தொடங்கி.

5. "தென்றல் ஈரும், குறிஞ்சி தவரும்" என்றதற்கு, பாவம் அருளிச் செய்கிறார் 'குறிஞ்சியும்' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'நற்கொலையாக' என்று தொடங்கி. கிருதசங்கேதர் - பலர் ஒன்றுகூடி இன்ன காரியத்தை இன்னவாறு செய்யவேண்டும் என்று அறுதியிட்டுக் கொண்டு காரியத்தைச் செய்கின்றவர்கள்.

மறைந்தபின் உண்டாகும் மாலைக் காலமானது மயங்கச் செய்கின்றது என்றபடி. [1] வாயிலே சீரையைத் துறுத்துக் கொல்லுவாரைப் போலே, ஆற்றாமைக்குப் போக்குவிட்டுக் கூப்பிட்டுத் தரிக்கவும் ஒட்டாதபடி மயங்கச் செய்கின்றதாதலின் 'மயக்கும்' என்கிறாள். செக்கர் நல் மேகங்கள் சிதைக்கும் - [2] மாலை நேரத்தின் செந்நிறத்தையும் கருமையான நிறத்தையுமுடைத்தான மேகங்கள் அவனுடைய அவயவங்களின் காந்திக்கும் வடிவிற்கும் போலியாய் 'இவை என் அம்பு செய்தது' என்று அவற்றைப் பழித்துக்கொண்டு, "சரீரம் கிடக்கவோ நலிவது?" என்று வயிரத்தைச் செற்றுநின்றது.

அல்லி அம் தாமரைக் கண்ணன் எம்மான் ஆயர்கள் ஏறு அரி ஏறு எம் மாயோன் புல்லிய முலைகளும் தோளும் கொண்டு புகலிடம் அறிகிலம் தமியம் - [3] நாம் அவற்றை இன்னாதாகிறது என்? அவன்தான் முன்னே நம்மை முடிக்கக் காரியம் பார்த்து வைத்திலனோ? [4] "கலந்து பிரியவே இவள் முடிவாள்" என்றே அன்றோ அவன் பிரிந்தது? [5] இவையானால் போக்குவிட்டே அன்றோ அடித்தன; புகல்அறுத்தான் அவனே அன்றோ? அல்லி அம் தாமரைக் கண்ணன்-[6] முதல்

1. "மயக்கும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'வாயிலே' என்று தொடங்கி.

2. மேகம் துன்புறுத்துவது இன்ன தன்மையாலே என்று காட்டாநின்று கொண்டு, மேலே கூறியவற்றைக் காட்டிலும் இது செய்கின்ற துன்பம் அதிகம் என்று அருளிச்செய்கிறார் 'மாலை நேரத்தின்' என்று தொடங்கி. செற்றுநின்றது - செதுக்குகின்றது.

3. "புல்லிய முலைகளும் தோளும் கொண்டு புகலிடம் அறிகிலம்" என்றதனைக் கடாக்ஷித்து பாவம் அருளிச்செய்கிறார் 'நாம் அவற்றை' என்று தொடங்கி.

4. காரியம் பார்த்துவைத்தலை விவரணம் செய்கிறார் 'கலந்து பிரியவே' என்று தொடங்கி.

5. அவைகள் செய்தனவற்றைக் காட்டிலும் இவன் செய்தது அதிகம் என்கிறார் 'இவையானால்' என்று தொடங்கி.

6. முதலில் கண்களை அருளிச்செய்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'முதல் உறவு' என்று தொடங்கி; அதனை விவரணம் செய்கிறார் 'கண்ணொடு' என்று தொடங்கி.

எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழி
கண்ணொடு கண்ணிணை கௌவி ஒன்றை ஒன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.

உறவு செய்வன கண்களே அன்றே; கண்ணொடு கண்ணிணை கௌவி ஒன்றை ஒன்று உண்ட பின் அன்றே மெய்யுறு புணர்ச்சி உண்டாவது.

எம்மான்-[1]அக்கண்ணழகாலே என்னைத் தனக்கே உரியவள் ஆகும்படி செய்தவன். ஆயர்கள் ஏறு - அவ் அழகாலே ஆயர்களைத் தோற்பித்தாற் போலே. [2]"பும்ஸாம்" - வயிர உருக்காயிற்று அவனுடைய அழகு. [3]தன்னோடு ஒத்தாரை அப்படி நலியாநின்றால், பெண்களை நலியச்சொல்ல வேண்டா அன்றே. அரி ஏறு - [4]கண்களாலே குளிரநோக்கி இவளைத் தனக்கே உரியவள் ஆக்கி, இவளோடே கலந்து, அதனாலே தான் பெரும்பேறு பெற்றானாய் மேனாணிப்புத்தோற்ற நின்ற படி. அரிஏறு சிங்கங்களில் உயர்ந்தது.

எம் மாயோன்-[5]அம்மேன்மையையுடையவன், தாழ்ந்தார் சிலர் உயர்ந்தவர்களோடே கலக்குமாறு போலே, கையைக்

நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேலிணை
ஆக்கிய மதுகையான் தோளின் ஆழ்ந்தன
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்
தாக்கணங்கு அனையவள் தனத்தில் தைத்தவே.

பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்.

என்னும் கம்பராமாயணச் செய்யுட்களை இங்கு நோக்கல் தகும்.

1. மேலே போந்த "தாமரைக் கண்ணன்" என்பதனையும் கூட்டிக் கொண்டு, "எம்மான்" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அக் கண்ணழகாலே' என்று தொடங்கி.

2. பெண்களையே அன்றித் தன்னோடு ஒத்த பருவத்தினையுடைய ஆண்பிள்ளைகளையும் தோற்பிக்கும் என்று அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் "பும்ஸாம்" என்று.

"பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்."
என்பது, ஸ்ரீராமா. அயோத். 3: 28.

"ஆடவர் பெண்மையை அவாவு தோளினாய்"
என்பது, கம்பரா. பாலகாண். தாடகை வதைப்.

3. இதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'தன்னோடு ஒத்தாரை' என்று தொடங்கி.

4. "தாமரைக் கண்ணன் எம்மான்" என்றதனை நோக்கி "அரி ஏறு" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கண்களாலே' என்று தொடங்கி.

5. "மாயோன்" என்பதற்குரிய பல பொருள்களுள் வியாமோகத்தையுடையவன் என்ற பொருளில் இங்கு வியாக்கியானம் அருளிச்செய்கிறார் 'அம் மேன்மையை யுடையவன்' என்று தொடங்கி.

காலைப் பிடித்துத் தாழநின்று பரிமாறினபடி.[1]கலக்கும்போது மின்மினி பறக்கும்படி காணும் கலந்தது. புல்லிய முலைகளும் தோளும் கொண்டு -[2] அவனும் வாராதிருக்கிறான்; நானும் வருந்தி ஒருபடி ஜீவித்துக் கிடக்கிறேன்; அவனுக்காக உண்டான இந்தப் பிள்ளைகளைக் கொண்டு புகலிடம் அறிகிலேன். நான் செய்தபடி செய்ய, இம்முலைகளின் வீக்கம் தீர அநுபவிக்கப் பெறுவது எப்போதோ? [3]பஞ்ச காலத்தில் குழந்தைகள் "சோறு, சோறு" என்னுமாறுபோலே படுத்தாநின்றன. [4]அவன்தானும் கலக்கும்போது எல்லா அங்கங்களிலும் கலப்பதற்கு ஆற்றல் இல்லாதவன்போலே காணும்.[5]அவன் இழிந்த துறையும் இளைப்பாறின இடமும்.

ஆக, 'எம் மாயோன்' என்றது முதல் 'புகல் இடம் அறிகிலம்' என்றது முடிய, [6]கலக்கிற போதை அவனுடைய அலமாப்பையும், தம்முடைய உறுப்புக்களுக்கு உண்டான காதல் மிகுதியையும், அவன் பெருப் பேறு பெற்றானாய் நின்று கலந்தபடியையும், தமக்கு ஒரு புகல் அற்று இருக்கிறபடியையும் சொல்லுகிறது. பிரிந்த காலத்தில் தென்றல் முதலான பொருள்களுக்குத் தப்பிச் சென்று புகுகைக்கு இடம் காண்கின்றிலோம் என்பாள் 'புகலிடம் அறிகிலம்' என்கிறாள்.

---

1. ஆச்சரியத்தையுடையவன் என்ற பொருளில் இங்கு வியாக்கியானம் அருளிச்செய்கிறார் 'கலக்கும்போது' என்று தொடங்கி. 'மின்மினி பறக்கும்படி' என்றது, மின்மினி பறந்தாற் போன்று கணம் தோறும் புதிது புதிதாகத் தோற்றும்படி என்றவாறு.

2. "புல்லிய முலைகளும் தோளும் கொண்டு" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அவனும்' என்று தொடங்கி. 'பிள்ளைகள்' என்றது, முலைகளையும் தோள்களையும். புல்லிய - அவன் தழுவிய. வீக்கம் - ஆசை.

3. அதனை விவரணம் செய்கிறார் 'பஞ்சகாலத்தில்' என்று தொடங்கி.

4. மற்றை உறுப்புக்களைக் கூறாது, முலையையும் தோளையும் மாத்திரம் கூறியதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அவன் தானும்' என்று தொடங்கி.

5. கலந்த விதத்தை விளக்குகிறார் 'அவன்' என்று தொடங்கி. "மெல்லியல் தோள் தோய்ந்தாய்" என்கிறபடியே, இழியும் துறை தோள். "மலராள் தனத்துள்ளான்" என்கிறபடியே, இளைப்பாறின இடம் முலைகள்.

6. "எம் மாயோன்" என்றது முதல் "புகலிடம் அறிகிலம்" என்றது முடிய உள்ளனவற்றிற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கலக்கிற போதை' என்று தொடங்கி. "மாயோன் புல்லிய" என்றதனால் அவன் அலமாப்பையும், "முலைகளும் தோளும்" என்றதனால் உறுப்புக்களுக்கு உண்டான காதல் மிகுதியையும், "அரியேறு" என்றதனால் அவன் பெருப் பேறு பெற்றானாய் நின்று கலந்தபடியையும், "புகலிடம் அறிகிலம்" என்றதனால் தமக்கு ஒரு புகல் அற்று இருக்கிறபடியையும் கூறியவாறு.

தமியம் - இந்நிலையில் இரக்ஷிக்கின்ற அவனும் வாராமை யாலே தனிமைப் படாநின்றோம். [1] இப்படித் தன் உலக முழுதும் துன்புறுத்துவதானால், பகதத்தன் விட்டவேலை அருச் சுனனைத் தள்ளித் தான் மார்விலே ஏற்றாற்போலே, "இவை வரும்" என்று அறிந்தால் தான் கூட இருக்கவேண்டாவோ? [2] அவன் கூட இருந்தானாகில் இவை தாம் இழிதொழில் செய்யத் தொடங்கும் அன்றோ. [3] "இலக்குமணனோடு இருந்த ஸ்ரீராமன்" என்று அவர் தாம் நோவுபட்டுக் கூப்பிடுகிற போது ஒரு தம்பியாராகிலும் கூட உண்டு நோவுபடுகைக்கு; அங்ஙனமும் ஒரு துணை இல்லை எனக்கு என்பாள் 'தமியம்' என்கிறாள்.

[4] ஸ: - பிராட்டியைப் பிரிந்து நடுவே கபந்தன் கையிலே அகப்பட்டு நோவுபட்டு நிற்கிற நிலையைச் சொல்லுகிறது. தாம்-இப் பிரிவும் ஆற்றாமையும் இல்லாதாரையும் அழிக்கவற் றாயிற்று. புஷ்கரிணீம் - பரப்பு மாறப் பூத்த பொய்கைகளும் [5] சோலைகளுமாய், நீர்விளையாட்டுக்குத் தகுதியான தேசமா யிற்று. என்றது, பிரிந்து தனி இருப்பார்க்குக் கண்கொண்டு காணப்போகாது என்றபடி. கத்வா-நினைவின்றிக்கே இருக்கச்

---

1. "ஆலோ" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இப்படி' என்று தொடங்கி.

பெயர்பெற்ற கரி வயவர் பிணமிக்க அமரினிடை பிறகிட்டு முறியும் அளவில்
சயசக்ர தரனைஇவன் வழிபட்ட பொழுதுதரு தழல்உக்ர முடையதொருவேல்
வயமுற்ற சிலைவிசயன் உடலத்தில் எறிவதுதன் வடிவத்தில் உற உதவினான்
அயர்வுற்ற உணர்வினல மெனமுத்தி முதல்வன்என அருகுற்ற ரத வலவனே.
பருமித்த களிறுவிடு பகதத்தன் எறியுமுது பகைசெற்று வரு கொடிய வேல்
மருமத்தினிடைமுழுகு பொழுதத்தில் அதுபுதியமணிவர்க்கமிகுதொடையலாய்
நிருமித்த படிதனது புயவெற்பின் மிசைஒளிர நிகர்அற்ற கருணை வடிவைக்
கருமத்தின் முதலை இமையவர் சித்தமொடு தொழுது கரை அற்ற புகழ்

என்ற வில்லிபாரதச் செய்யுட்கள் இங்குக் கருதல் தகும். [உரைசெய்தார்.

2. அவன் உடன் சேர்ந்திருந்தால் துன்புறுத்த மாட்டாவோ? என்ன, 'அவன் கூட இருந்தானாகில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச் செய்கிறார்.

3. "தமியம்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இலக்குமண னோடு' என்று தொடங்கி.

ஸ தாம் புஷ்கரிணீம் கத்வா பத்மஉத்பல ஜஷாகுலாம்
ராமஃ ஸௌமித்ரி ஸஹிதஃ விலலாப ஆகுலேந்த்ரியஃ.

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 1 : 1.

4. மேலே கூறிய சுலோகத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'ஸஃ' என்று தொடங்கி.

5. 'புஷ்கரிணீம்' என்று பொய்கையைக் கூறியதனால், பொருளாற்ற லால் சோலையும் போதரும்.

செய்தே, கூற்றுவனுடைய வாயிலே புகுவாரைப் போலே வந்து கிட்டிக்கொடு நின்றார். கூற்றுவனாகிற புடைதான் யாது? என்னில், பத்ம உத்பல ஜ்ஷாகுலாம்-பிராட்டியினுடைய முகத்துக்கும் கண்களுக்கும் போலியானவற்றை உடைத்தாய் இருந்தது. [1]"உயர் தாமரை செங்கழுநீர் மாதர்கள் வாண்முகமும் கண்ணும் ஏந்தும்" என்னக் கடவது அன்றோ. ராமஃ - [2]பிறர் கூப்பீடு தவிர்த்துப் போந்தவராயிற்று. ஸௌமித்ரி ஸஹிதஃ- [3]"அரச நீதிகளைச் சொல்லிக்கொண்டும் தனது வலிமையைக் கூறிக்கொண்டும் அந்த ஸ்ரீ இராமனைக் காப்பாற்றினார்" என்கிறபடியே, ஏதேனும் அளவிலும் கூட இருந்து நோக்கிக் கொண்டு போந்தவரும் முன்னாக; [4]ஆறு இழியுமவன் தெப்பம் முன்னாக இழியுமாறுபோலே. விலலாப ஆகுலேந்த்ரியஃ - பல இலக்கணங்களோடே ஆயிற்றுக் கூப்பிட்டது.

[5]இறைவனைப் பெறவேண்டும் என்னும் எண்ணமாய், கீழே இவருடைய எண்ணத்துக்குத் தகுதியாக வந்து கிட்டும்படி அவனும் வாராதே நிற்க, அவனுடைய வரவுக்கு அறிகுறியான வாத்தியத்தின் ஒலி, ஸ்ரீ பாஞ்சஜன்னிய ஒலி, நாண் ஒலி, திருவடி திருச் சிறகு ஒலி, மற்றும் உண்டான நல்ல சகுனங்கள், மனத்தின் தெளிவு என்றாற்போன்று சொல்லுகிறவை ஒன்றும் காணாமையாலே, அநுகூலமான பொருள்கள் துன்புறுத்துகின்றன. [6]உறுப்புக்களும் சரீரமும் கிலேசப்படுகையாகிற இது, விரோதியான சம்சாரத்தினின்றும் கால்வாங்கவும் மாட்டாதே, இங்குப் பொருந்துவதும் செய்யாதே, காண்பன அனைத்தும் பகையாக இருக்கிறபடி.

---

1. அவை போலிப் பொருள்கள் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'உயர் தாமரை' என்று தொடங்கி. இது, திருவாய்மொழி, 5. 9: 7.

2. 'பிறர் கூப்பீடு தவிர்த்துப் போந்தவர்' என்பதற்கு, "ரமயதீதி ராமஃ" என்றதிலே நோக்கு.

3. தம் மத்த மாதங்க விலாஸகாமீ கச்சந்தம் அவ்யக்ரமநா மஹாத்மா
ஸ லக்ஷ்மணோ ராகவம் அப்ரமத்தஃ ரரக்ஷ தர்மேண பலேநச ஏவ.
என்பது, ஸ்ரீராமா. கிஷ். 1: 126.

4. இலக்குமணனோடு கூடித் துக்கப்பட்டார் என்பதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'ஆறு இழியுமவன்' என்று தொடங்கி.

5. இத் திருவாய்மொழியிற் கூறப்படும் பொருளைச் சுருங்க அருளிச் செய்கிறார் 'இறைவனை' என்று தொடங்கி.

6. சுவாபதேசப் பொருளை அருளிச்செய்கிறார் 'உறுப்புக்களும்' என்று தொடங்கி.

[1] ஆக, "இங்குப் பொருந்தாதே அங்குப் புகப் பெறுதே நடுவேநின்று கிலேசப்படுகிற நிலை, மாலைநேரமாகிறது" என்று இங்ஙனே ஒரு கருத்தும் சொல்லக்கடவதாக இருக்கும். (1)

972.

புகலிடம் அறிகிலம் தமியம் ஆலோ!
புலம்புறு மணி தென்றல் ஆம்பல் ஆலோ!
பகல் அடு மாலை வண் சாந்தம் ஆலோ!
பஞ்சமம் முல்லை தண் வாடை ஆலோ!
அகல் இடம் படைத்து இடந்து உண்டு உமிழ்ந்து
அளந்து எங்கும் அளிக்கின்ற ஆயன் மாயோன்
இகலிடத்து அசுரர்கள் கூற்றம் வாரான்
இனி இருந்து என் உயிர் காக்குமாறு என்?

பொ - ரை :—தமியோமாகிய யாம் பாதுகாவலாகப் புகுதற்கு ஓர் இடத்தை அறிகின்றிலோம்; எருதுகளின் கழுத்திலே கட்டப்பட்டு ஒலித்துக்கொண்டிருக்கின்ற மணியின் ஒலியும் தென்றலும் ஆம்பல் குழலின் ஓசையும் வருத்துகின்றன; ஐயோ! பகற்காலம் நீங்க வந்து சேர்ந்த மாலைக்காலமும் வளவிய சந்தனமும் வருத்தாநின்றன; ஐயோ! பஞ்சமம் என்ற பண்ணின் இசையும் முல்லையம் தீங்குழலின் இசையும் குளிர்ந்த வாடைக்காற்றும் வருத்தாநின்றன; அந்தோ! பரந்த உலக முழுதினையும் படைத்தும் ஒருகாலத்தில் இடந்தும் ஒருகாலத்தில் உமிழ்ந்தும் ஒருகாலத்தில் அளந்தும் எல்லா உலகங்களையும் பாதுகாக்கின்ற மாயோனும், போர்க்களத்தில் அசுரர்களுக்குக் கூற்றமானவனும் ஆன ஸ்ரீ கிருஷ்ணன் வருகின்றிலன்; இனிமேல் இருந்து என் உயிரைக் காக்குமாறு யாங்ஙனம்?

வி - கு :—[2] ஆம்பல் முல்லை என்பன, குழல் விசேடங்கள். ஆம்பல் முல்லை - பண்களுமாம்; முல்லை-மாலையுமாம். ஆல் : அசைநிலை. ஓகாரம் : கொடுமையின் மிகுதியைக் காட்ட வந்த இடைச்சொல். கூற்றம் - கூறுபடுத்துகின்றவன்; யமன்.

---

1. "செல் கதிர் மாலை" என்றதற்கு, சுவாபதேசம் அருளிச்செய்கிறார் 'ஆக இங்கு' என்று தொடங்கி. 'இங்ஙனே ஒரு கருத்தும் சொல்லக்கடவதாக இருக்கும்' என்றது, வேறும் ஒரு கருத்து இது என்று கொள்ளற்க. அவதாரிகையில் அருளிச்செய்த அந்யாபதேச சுவாபதேசப் பொருள்களையே அருளிச்செய்தவாறும்.

2. கன்று குணிலாக் கனிஉதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழீ;

ஈடு :—இரண்டாம் பாட்டு. [1] முன்பு தூசி ஏறின பேர்க்கு உரமாக நின்ற பேரணி உறுபூசலானவாறே திரள அமுக்குமாறு போலே, தனித் தனியே நலிந்த பொருள்கள் வலிமை குறையக் குறையப் பல கூடி வந்து நலியாநின்றன என்கிருள்.

புகல் இடம் அறிகிலம் - மேலே வருகின்ற துன்புறுத்துகின்ற மணி முதலான பொருள்களைக் குறித்துச் சொல்லுகிருள்என்னுதல். அன்றிக்கே,முதற்பாசுரத்தில்சொன்னவை தமக்கே அஞ்சிப் பின்னும் அதனைக் கூறுகிருள் என்னுதல். தமியம் - [2] புகலிடம் அற்ருர்க்குத் துணையாமவன் உதவாதொழிந்தால் தனியே இருக்கிற இருப்பே அன்றே. புலம்பு உறு மணி - நாகுகளைத் தொடர்கிற சேக்கள் கழுத்தில் மணியினுடைய ஒலி,அந் நாகுகள் கை புகுராமையாலே கூப்பிடுமாறு போலே இராநின்றது. தென்றல்-[3]“ வெறும் புறத்திலே தென்

பாம்பு கயிருக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலம் தீங்குழல் கேளாமோ தோழி ;

கொல்லையம் சாரல் குருந்து ஒசித்த மாயவன்
எல்லிநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
முல்லையம் தீங்குழல் கேளாமோ தோழி.

என்பது, சிலப்பதி. ஆய்ச்சியர் குரவை.

‘கொன்றை, ஆம்பல், முல்லை என்பன சில கருவிகள். இனி, அவற்றைப் பண் என்று கூறுப எனின், அங்ஙனம் கூறுவாரும் ஆம்பலும் முல்லையுமே பண்ணுதற்குப் பொருந்தக் கூறினல்லது கொன்றை ஒரு பண்ணுதல் இல்லையாதலானும்’ என்பது, அடியார்க்கு நல்லார் உரை.

“ தீங்குழல் ஆம்பலின் இனிய இமிரும்
புதன் மலர் மாலை ” என்பது, ஐங்குறுநூறு, 215.

“ ஆம்பற் குழலால் பயிர் பயிர் எம் படப்பைக்
காஞ்சிக் கீழ்ச் செய்தேம் குறி ” என்பது, கலித்தொகை, 108.

‘ ஆம்பல் என்னும் பண்ணையுடைய குழலாலே குறிசெய்து வருவாயாக ’ என்பது, அதற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரை.

1. மேலே, தனித் தனியாக வந்து துன்புறுத்துவனவாகக் கூறப்பட்ட பொருள்கள் திரளாக வந்து துன்புறுத்துமாற்றைத் திருஷ்டாந்தத்தோடு அருளிச்செய்யாநின்றுகொண்டு, அப்படி அவை நலிகைக்குக் காரணத்தையும் அருளிச்செய்கிருர் ‘ முன்பு ’ என்று தொடங்கி. தூசி - முன்னணி. பேரணி - பெரியபடை. உறு பூசல் - கைகலந்த போர். ‘ பல கூடி வந்து ’ என்றது, மணி, தென்றல், ஆம்பல், மாலை, சாந்தம், பஞ்சமம், முல்லை, வாடை என்பனவாக இப்பாசுரத்தில் கூறப்பட்டனவற்றை.

2. தனிமையை விவரணம் செய்கிருர் ‘ புகலிடம்’ என்று தொடங்கி.

3. “ மல்லிகை கமழ் தென்றல் ” என்றது போன்று விசேடணம் இட வேண்டாவோ ? என்ன, ‘ வெறும்புறத்திலே ’ என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

றல் என்ன அமையும். "மல்லிகை கமழ் தென்றல்" என்ன வேண்டா; [1] வினை முடுகினால் பின்னை உடம்புக்கு ஈடு இடாதே ஏறுவாரைப் போலே. [2] "யார் எதிராக உடம்புக்கு ஈடு இடுகிறது?" என்று இராநின்றது. ஆம்பல் - [3] குழல் என்னுதல். இலைக்குழல் என்னுதல். [4] இவை எல்லாம் மேற்பாசுரத்தில் கூறியதுபோன்று "ஈருமாலோ, தவருமாலோ, மயக்குமாலோ, சிதைக்குமாலோ" என்னவேண்டா; "புலி, புலி" என்பது போன்று இவற்றின் பெயரைச் சொல்லவே அச்சம் உண்டாகிறது. அன்றிக்கே, இவற்றினுடைய நலிவை வாயால் சொல்லில் வாய் வக்குரிக்கும்படியாய் இருக்கையாலே, சொல்லாதொழிந்தாள் என்னுதல்.

பகல் அடு மாலை-[5] பிராட்டியினுடைய விசனத்துக்கு உறுப்பாகப் பெரியஉடையாரை முடித்துக்கொண்டு வந்து இராவணன் தோன்றினாற் போலே, ஆறுதலுக்கு இடமாக இருக்கின்ற பகலை முடித்து வந்து தோற்றிற்று ஆயிற்று மாலை.[6] பகற்காலத்தில் வெவ்வேறு பொருள்களைப் பார்ப்பதனாலே ஆறி இருக்கலாம்; அது இல்லாமையாலே இரவில் உண்டாகும் துன்பம் ஒரு முகம் செய்திருக்கும் அன்றோ. வண் சாந்தம் -

1. வேண்டாமைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'வினைமுடுகினால்' என்று தொடங்கி. வினை - போர். ஈடு - கவசம்; சட்டை.

2. அதற்கே வேறும் ஒரு காரணத்தை அருளிச்செய்கிறார் 'யார் எதிராக' என்று தொடங்கி.

3. 'குழல்' என்பதற்கு, ஆய்க்குழல் என்பர் அரும்பத வுரைகாரர்.

4. "ஈரும், தவரும், மயக்கும்" என்று மேல் பாசுரத்தில் அருளிச்செய்தது போன்று அருளிச்செய்யாமல், வாளா "மணி தென்றல் ஆம்பல்" என்பான் என்? என்ன, அதற்கு இரண்டுவகையாக விடை அருளிச்செய்கிறார் 'இவை யெல்லாம்' என்று தொடங்கியும், 'அன்றிக்கே' என்று தொடங்கியும். வக்குரிக்கும்படி - வேகும்படி.

"ஒலிசினை வேங்கை கொய்குவம் சென்றுழிப்
புலி புலி என்னும் பூசல் தோன்ற
....
குயமண்டு ஆகம் செஞ்சாந்து நீவி
வரிபுனை வில்லன் ஒருகணை தெரிந்துகொண்டு
யாதோ மற்றம் மாதிறம் படர் என
வினவிநிற் றந்தோனே" என்பது அகநானூறு, 48.

5. "பகல் அடு மாலை" என்றதற்கு, திருஷ்டாந்தத்தோடு பாவம் அருளிச்செய்கிறார் 'பிராட்டியினுடைய' என்று தொடங்கி.

6. ஆறுதலுக்குப் பகல் இடமாமோ? என்ன, 'பகற்காலத்தில்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

அழகிய சந்தனம். பஞ்சமம் - பஞ்சமமாகிற பண். முல்லை - முல்லைப் பண். அன்றிக்கே, [1] முல்லைமலர்கள் ஆயர்களுக்கு மாலையாக இருக்குமன்றோ; அதனைச் சொல்லிற்று ஆகவுமாம். தண் வாடை - [2] அவ் வாடையோடு தென்றலோடு வாசி அற்றுப் போயிற்று. என்றது, [3] தென்றல் வருவது ஒரு காலமும், வாடை வருவது ஒரு காலமுமாக இருக்கும் அன்றோ: அவை எல்லாம் அவ் அவ் காலங்களிலே வந்து தோன்றும்படி ஆயிற்றுக் காலம் நெடுகுகிறபடி என்றவாறு. [4] அன்றிக்கே, கேட்டிற்கு அறிகுறியாய் எல்லாக்காற்றும் ஒருகாலே அடித்தன என்னவுமாம். இனித் தென்றலுக்கு அஞ்சி வாடையின் கீழ் ஒதுங்க விரகு இல்லை என்று அதன் கொடுமையின் மிகுதியைக் கூறுவாள் '**தண்வாடை**' என்கிறாள் என்னுதல்.

அகல் இடம் படைத்து இடந்து உண்டு உமிழ்ந்து அளந்து எங்கும் அளிக்கின்ற - பரப்புடைத்தான பூமி உருமாய்ந்து கிடக்க உண்டாக்கி, பிரளயம் கொண்டதனை இடந்து எடுத்து, திரியவும் பிரளயம் வர வயிற்றிலே வைத்து நோக்கி, உள்ளே

---

1. முல்லைத்தார் ஆயர்களுக்கு உரியதாகையாலே கிருஷ்ணனை நினைப் பூட்டுவதாய்த் துன்புறுத்துகிறது என்றபடி.

> "மறித்துரூஉத் தொகுத்த பறிப்புற இடையன்
> தண்கமழ் முல்லை தோன்றியொடு விரைஇ
> வண்டுபடத் தொடுத்த நீர்வார் கண்ணியர்."

என்பது, அகநானூறு, 94.

2. வைகறையில் வரக்கூடிய வாடைக்காற்று மாலை நேரத்தில் வரக் கூடுமோ? ஆதலால், மாலை நேரத்தில் வருந்தும் தலைவி வாடையைக் கூறுதல் பொருந்தாதே? எனின், 'அவ் வாடையோடு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

> சுடர்செல் வானம் சேப்பப் படர் கூர்ந்து
> எல்லறு பொழுதின் முல்லை மலரும்
> மாலை என்மனார் மயங்கி யோரே
> குடுமிக் கோழி நெடு நகர் இயம்பும்
> பெரும்புலர் விடியலும் மாலை
> பகலும் மாலை துணையி லோர்க்கே.

என்ற குறுந்தொகைச் செய்யுள் ஈண்டு ஒருபுடை ஒப்புமையுடைத்து. செய். 234.

3. அதனை விவரணம் செய்கிறார் 'தென்றல் வருவது' என்று தொடங்கி. என்றது, ஒரு மாலைநேரத்திலேயே விடிவதும் சூரியன் மறைவது மாகப் பல வைகறைப் பொழுது கழிந்தது என்றிருக்கிறாள் என்றபடி.

4. அதற்கே, வேறும் ஒரு வகையில் விடை அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

கிடந்து தளராதபடி வெளிநாடு காணப் புறப்படவிட்டு, மிடுக்க ராய் இருப்பார் இருஞ்சிக்கொள்ள எல்லை நடந்து மீட்டுக் கொண்டு, இப்படி வரையாதே நோக்கும் தன்மையன் கண்டீர் இப்போது வாராதொழிகிருன்! என்றது,பொதுவான ஆபத்து வந்தால் வயிற்றிலே வைத்து நோக்குமவன் கண்டீர் தன் தேவியானவள் இப்படித் துன்புறுத்தும் பொருள்களின் கையிலே நோவுபடாநிற்க இப்போது வாராதொழிகிருன்! என்றபடி. ஆயன் - [1] "உலகங்களினுடைய படைப்பும் கிருஷ்ணனே, பிரளயமும் கிருஷ்ணனே, இது பிரசித்தம்" என்கிறபடியே, காரணன். மாயோன் - உலகங்களைப் பாது காப்பதற்குத் தக்கதான ஆச்சரியமான ஆற்றலையுடையவன். இகல் இடத்து அசுரர்கள் கூற்றம் - [2] போர்க் களத்தில் காணும் அசுரக் கூட்டத்துக்கு யமனுக இருப்பவன். "சரணம்" என்ற பிரஹ்லாதன் விபீஷணன் முதலியோரை அழியச்செய் திலன் அன்றே. இராவணன் இரணியன் முதலியோர்களை அன்றே முடித்தது. [3] "இந்திரன் சிவன் பிரமன் என்னும் இவர்களும் கூட இராமதண்டத்திற்குக் காரணமாக இருக்கும் ஒருவனை அத் தண்டத்தினின்றும் காப்பதற்கு ஆற்றலுடைய வர்கள் அல்லர்" என்னக் கடவது அன்றே. வாரான் - இங்கு அம்பு ஏற்கவும் வேண்டா, பகைவர்களும் இலர், முகங்காட்ட அமையும்.

---

1. படைத்து இடந்து உண்டு உமிழ்ந்து அளந்து எங்கும் அளிக் கின்றவன் கிருஷ்ணனே யாவன் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிருர் 'உலகங் களினுடைய' என்று தொடங்கி.

> க்ருஷ்ண ஏவ ஹி லோகாநாம் உத்பத்திః அபி ச அப்யயః
> க்ருஷ்ணஸ்யஹி க்ருதே பூதம் இதம் விஸ்வம் சராசரம்.

என்பது, பாரதம் ராயசூயம், 38.

2. "இகலிடத்து" என்ற அடைமொழிக்குக் கருத்து அருளிச்செய் கிருர் 'போர்க்களத்தில்' என்று தொடங்கி.

3. போர்க்களத்தில் கூற்றமாக இருப்பவன் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிருர் 'இந்திரன்' என்று தொடங்கி.

> ப்ரஹ்மா ஸ்வயம்பூః சதுராநநோவா ருத்ரః த்ரிநேத்ரః த்ரிபுராந்தகோ வா
> இந்த்ரோ மஹேந்த்ரః ஸுரநாயகோ வா த்ராதும் ந சக்தா யுதி [ராம வத்யம்.

என்பது, ஸ்ரீராமா. சுந். 51 : 65. "யுதி ராமவத்யம்" என்றதிலே நோக்கு. இது, இராவணனைப் பார்த்துத் திருவடி கூறியது.

இனி இருந்து என் உயிர் காக்குமாறு என் - [1]வரைந்து நோக்குவான் ஒருவனைய் நான் ஆறி இருக்கிறேனே? வருமிடத்தில் தடை உண்டு என்று ஆறி இருக்கிறேனே? என்னைப் பாதுகாத்துக் கொள்வதில் எனக்குச் சம்பந்தம் உண்டாய்த் தான் ஆறி இருக்கிறேனே? வரையாதே பாதுகாக்கின்றவனுமாய் ஆற்றலுடையவனுமாய்ச் சம்பந்தமுள்ளவனுமாய் இருக்கிறவன் வாராதொழிய, அவனாலே பாதுகாக்கப்படுகின்ற பொருள்களிலே சேர்ந்தவளாய் ஆற்றல் இல்லாதவளாய்த் தகுதி இல்லாதவளாய் இருக்கிற நான் என் உயிரை நோக்குகை என்று ஒரு பொருள் உண்டோ? [2] அன்றிக்கே, வரும் துணையும் ஜீவித்துக் கிடக்கும்படி "இராகவன் உணவுகளையும் உண்பதுஇல்லை" என்று சிலர் சொல்லுதல், "ஜனகராஜன் புத்திரியே! உன்னைக்காணாமையால் மிக்க துன்பத்தினை அடைகிறார்" என்னுதல் செய்துதான் ஆறி இருக்கிறேனே? [3] அன்றிக்கே, வரவுக்கு உடலாகக் 'கரன் பட்டான், கவந்தன் பட்டான், வாலி பட்டான், கடல் அடைப்பது, வந்து புகுந்தாரத்தனை' என்று தான் சிலர் சொல்ல ஆறி இருக்கிறேனே? [4] இப்பொழுது 'இனி இருந்து' என்கையாலே, இதற்கு முன்பு

---

1. "அகலிடம் படைத்து" என்றது முதல் "வாரான்" என்றது முடிய உள்ளனவற்றைக் கடாக்ஷித்து "இனி" என்பதற்கு, மறைமுகத்தாலும் விதிமுகத்தாலும் பாவம் அருளிச்செய்கிறார் 'வரைந்து நோக்குவான் ஒருவனைய்' என்று தொடங்கி. "காக்குமாறு என்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'நோக்குகை என்று ஒரு பொருள் உண்டோ?' என்கிறார்.

2. "வாரான்" என்றதிலே, அவன் வருவான் என்பதற்குரிய அறிகுறிகள் ஒரு சிறிதும் காணாமையையும் திருவுள்ளம்பற்றி, அதனோடே சேர்த்து, "இனி" என்பதற்கு, இரண்டாவதாக வேறும் ஒரு பாவம் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

நமாம்ஸம் ராகவோ புங்க்தே ந சாபி மது ஸேவதே
வந்யம் ஸுவிஹிதம் நித்யம் பக்தம் அஶ்நாதி பஞ்சமம்.

என்பது, ஸ்ரீராமா. சுந். 36 : 41.

காநநாநி ஸுரம்யாணி நதீ: ப்ரஸ்ரவணாநிச
சரந் நரதிம் ஆப்நோதி த்வாம் அபஶ்யந் ந்ருபாத்மஜே.

என்பது, ஸ்ரீராமா. சுந். 35 : 47.

3. மேலதற்கே மூன்றாவதாக வேறும் ஒரு பாவம் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

4. மேலதற்கே நான்காவதாக வேறும் ஒரு பாவம் அருளிச்செய்கிறார் 'இப்பொழுது' என்று தொடங்கி,

எல்லாம் "அவன் சரக்கு அழிய ஒண்ணாது" என்று நோக்கிக் கிடந்தமை தோற்றுகிறது. [1]பிறர் உயிராகத்தான் நோக்கி இருக்கிறேனோ? என்பாள் 'என் உயிர்' என்கிறாள். [2]இவற்றின் கையிலே நோவுபட எனக்குப் பணியாகவோ என்னுடைய உயிரைப் பாதுகாப்பது? என்றபடி. (2)

973.

இனி இருந்து என்உயிர் காக்குமாறு என்?
  இணை முலை நமுக நுண் இடை நுடங்கத்
துனி இரும் கலவிசெய்து ஆகம் தோய்ந்து
  துறந்து எமை இட்டுஅகல் கண்ணன் கள்வன்;
தனி இளம் சிங்கம் எம் மாயன் வாரான்;
  தாமரைக் கண்ணும் செவ்வாயும் நீலப்
பனி இரும் குழல்களும் நான்கு தோளும்
  பாவியேன் மனத்தே நின்று ஈரும் ஆலோ!

பொ-ரை:—இனி இருந்து என்னுடைய உயிரைக் காக்கும் வகை யாங்ஙனம்? முலைகள் இரண்டும் குழையும்படியாகவும் நுண்ணிய இடை நுடங்கும்படியாகவும் வருந்துவதற்குக் காரணமான பெரிய கலவியைச் செய்து சரீரத்திலே தோய்ந்து துறந்து எம்மைவிட்டு நீங்கிய கண்ணபிரானாகிய கள்வனும் ஒப்பற்ற இளம் சிங்கம் போன்றவனும் எம் மாயனுமான எம்பெருமான் வருகின்றிலன்; தாமரை போன்ற திருக் கண்களும் சிவந்த திருவாயும் கரிய குளிர்ந்த பெரிய திருக் குழலும் நான்கு திருத் தோள்களும் தீவினையேனாகிய என்னுடைய மனத்திலே நிலைபெற்று ஈராநின்றன.

வி-கு:—எம்மாயன் வாரான்; ஆனால், தாமரைக்கண் முதலானவை மனத்தே நின்று ஈரும்; ஆதலால், இனி இருந்து என் உயிரைக் காக்குமாறு என்? என்க. 'கலவிசெய்து' என்றது, கண்களின் கலவியை.

---

1. "என் உயிர்" என்பதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'பிறர் உயிராகத்தான்' என்று தொடங்கி. 'பிறர்' என்றது, சர்வேஸ்வரனை. என்றது, அவனுக்கு உறப்பு ஆனால் நோக்கலாமே ஒழிய, அவன் விரும்பாவிட்டால் நோக்கப்போமோ என்றபடி. 'எருளும் இறையோனும்' என்ற திருவாய்மொழி இங்கு நினைவு கூர்தல் தகும்.

2. அதனால் போதரும் பொருளினை அருளிச்செய்கிறார் 'இவற்றின்' என்று தொடங்கி.

ஈடு :—மூன்றாம்பாட்டு. [1]கண்களுக்கு இலக்கான பொருள்கள் முழுதும் துன்புறுத்தப் புக்கவாறே அவற்றுக்கு அஞ்சிக் கண்களைச் செம்பளித்தாள் ; அகவாயிலே அவன் அழகு நினைவிற்கு வந்து நலியாநின்றது என்கிறாள்.

இனி இருந்து என் உயிர் காக்குமாறு என் - என்னது என்று அபிமானித்த [2]உடம்பு பகை ஆயிற்று ; என்னது என்று அபிமானித்த அழகு பகை ஆயிற்று ; இனி இருந்து என்னுடைய உயிரைப் பாதுகாப்பது என்று ஒரு பொருள் உண்டோ ? இணை முலை நமுக - [3] அவன் சேர்த்தி அழகினைச் சொல்லி வாய்வெருவும் முலைகளானவை, **வன் நிலத்தில் மழை பெய்தால் பதமாமாறு போலே,** புணர்ச்சிக் காலத்தில் அவனுடைய சேர்க்கையால் மெல்கிக் குழைந்தபடி. நமுகுகை - குழைதல். நுண் இடை நுடங்க - வெறும் புறத்திலும் அரும் [4]**குலைக் கீழ் விளைநிலம் போலே** நோக்க அரிதான இடை நுடங்கும்படியாகவும். என்றது, கலக்கும்போது எதிர்த் தலையைப் பேண அறிந்திலன் : தன் காதல் தீர்ந்தானத்தனை என்றபடி. துனி இரும் கலவி செய்து - துக்கமே பயனான கலவியைச் செய்து. என்றது, கலவி பிரிவினை முடிவாக உடையதாகையால் துக்கத்தை விளைக்கும் கலவி என்றபடி. கலக்கிறபோது அவன் செய்த காரியங்கள் தன்னளவு அல்லாமல் பெரிதாய் இருத்தலின் ' இரும் கலவி ' என்கிறது. அன்றிக்கே, கலக்கும் அந்நிலையிலே தலை தடுமாறாகக் கலக்கையாலே பொறுக்க ஒண்ணாத

1. மேலே துன்புறுத்தும் பொருள்களைப் பற்றிச் சொல்லி வந்தவள், இப்பாசுரத்திலே, அவனுடைய அழகு துன்புறுத்துவதாகக் கூறுவது என் ? என்ன, ' கண்களுக்கு ' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். " மனத்தே நின்று ஈரும் " என்கையாலே கண்களை மூடினாள் என்பது தானே போதரும். செம்பளித்தல் - மூடுதல்.

> எட்ட இருந்த குருவை இறை அன்று என்று
> விட்டோர் பரனை விருப்புறுதல்—பொட்டெனத் தன்
> கண் **செம்பளித்திருந்து** கைத்தருத்தி நீர்நாவி
> அம்புதத்தைப் பார்த்திருப்பான் அற்று.

என்பது, ஞானசாரம், 33.

2. " இணைமுலை நமுக " என்றது போன்றவைகளைக் கடாக்ஷித்து ' உடம்பு ' என்கிறார். " தாமரைக் கண்ணும் " என்றது போன்றவைகளைக் கடாக்ஷித்து ' அழகு ' என்கிறார்.

3. " இணைமுலை " என்றது, தற்புகழ்ச்சி ஆகாமைக்காக அருளிச்செய்கிறார் ' அவன் சேர்த்தி அழகு ' என்று தொடங்கி.

4. குலை - கரை.

படி துக்கரூப்மான கலவி ஆதலின் 'துனி இரும் கலவி' என்கிருள் என்னுதல். ஆகம் தோய்ந்து - இக் கலவியாலே [1]நீராகச் செய்து. "நான், வெயிற்காலத்தில் குளிர்ந்த மடுவில் படிவது போன்று பரப்ரஹ்மத்தை அடைந்தவனுக ஆகின்றேன்" என்கிறபடியே, இவளோடே கலந்தானுயிற்று; வேனிற் பருவத்திலே மடுவிலே முழுகிக் கிடப்பாரைப் போலே.

துறந்து - [2] இப்படி முழுகிக் கிடந்ததெல்லாம் பொகடுகைக்குக் காரணமாயிற்று. எம்மை இட்டு - [3] இப்படி என் பக்கலிலே விருப்பத்தைப் பண்ணிவைத்து, என்னைக் கைவிட்டு, உயிர் இல்லாத சில பொருள்களைப் பொகடுமாறு போலே பொகட்டோம் என்கிற நினைவையும் கூடப் பொகட்டான் ஆயிற்று. அகல் கண்ணன் - [4] இவனுக்குக் கலவி ஏதோ ஒரு ஒரு காலவிசேடத்தில் உண்டு; அகனுதலே இவனுடைய தன்மை. [5] கலவியால் அல்லது பிரிவு கூடாமையாலே கலந்தானத்தனை. [6]கள்வன்-புணர்ச்சிக் காலத்தில் குளிரநோக்கின நோக்கும், பேசின பேச்சும், செய்த காரியங்களும் எல்லாம் என்னுடைய செல்வமனைத்தையும் கொள்ளை கொள்ளத் தக்கனவாய் இருக்கின்றன. அன்றிக்கே, கலக்கிறபோது செய்தவை முழுதும் தன் ஆற்ருமையாலே செய்தான் என்று தோற்றும்படியாய்ப் பிரிவில் நம்மை வருத்துவதற்காக இவற்றைச் செய்தான் என்னும்படியாய் இருக்கின்றது ஆதலின் 'கள்வன்' என்கிருள் என்னுதல்.

---

1. தோயும்போது தண்ணீராக இருக்கவேண்டும் ஆகையாலே 'நீராகச் செய்து' என்கிருர். அதற்குப் பிரமாணம் காட்டுகிருர் 'நான் வெயிற்காலத்தில்' என்று தொடங்கி.

"ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே ஸீதமிவஹ்ரதம்" என்பது, பாரதம் மோக்ஷதர்மம், 4: 50.

"க்ரீஷ்மே ஸீதமிவஹ்ரதம்" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிருர் 'வேனிற்பருவத்திலே' என்று தொடங்கி.

2. மேலே போந்தவற்றையும் கூட்டிக்கொண்டு, "துறந்து" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிருர் 'இப்படி' என்று தொடங்கி.

3. அஃறிணைப் பொருள்களைச் சொல்லுமாறுபோலே "இட்டு" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிருர் 'இப்படி என் பக்கலிலே' என்று தொடங்கி.

4. "அகல் கண்ணன்" என்று நிருபகமாகச் சொன்னதற்குக் கருத்து அருளிச்செய்கிருர் 'இவனுக்கு' என்று தொடங்கி.

5. ஆயின், கலந்தது எற்றிற்கு? என்ன, 'கலவியால்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

6. "கள்வன்" என்பதற்கு இருவகையாகப் பொருள் அருளிச்செய்கிருர். இரண்டாவது பொருளுக்கு வஞ்சகன் என்பது கருத்து.

தனி இளம் சிங்கம் - [1] "யாவர் ஒருவர்க்கு அந்த ஜனக குலத்தில் பிறந்த பிராட்டி மனைவி ஆக இருக்கிறாளோ, அந்தப் பெருமாளுடைய பராக்கிரமம் அளவிட்டு அறியக் கூடாததாய் இருக்கிறது" என்னுமாறுபோலே, இவளுடைய கலவியாலே ஒப்பற்றவனாய் இருந்தான் என்று தோற்றும்படி இருந்தான். கலக்கக் கலக்கக் கீழ்நோக்கிப் பிராயம் புகாநின்றானாதலின் 'இளம்' என்கிறது. இவளுடைய கலவியாலே பெறாப் பேறு பெற்றானாய் மேனாணித்து இருந்தானாதலின் 'சிங்கம்' என்கிறது. எம் மாயன் வாரான் - பிரிவினை நினைத்துக் கலங்கிப் போகமாட்டாதே என்பக்கல் மிக்க காதலாலே அந்நிலையிலே தடுமாறினவன் இப்போது வருகின்றிலன். [2] அந்நிலையில் இருந்த காதலைப் போன்றது ஒன்றாம் இப்போதை விரக்தியும். அப்போது போகையில் உள்ள அருமை போரும், இப்போது வருகையில் உள்ள அருமையும்.

தாமரைக் கண்ணும் செவ்வாயும் நீலப் பனி இரும் குழல்களும் நான்கு தோளும் பாவியேன் மனத்தே நின்று ஈரும் - [3] அவன், கண்களுக்குத் தோன்றாதொழிந்தால், இவை நெஞ்சுக்குத் தோன்றாதொழிந்தால் ஆகாதோ? தான் போகிறான்; இவற்றை வைத்துப் போகவேண்டுமோ? தாமரைக்கண்ணும் - [4] கலந்தபோது தன்பேறு என்று தோற்றும்படியான திருக் கண்களையுடையவன் என்னுதல். பிரிவினை நினைத்து வாய்விட மாட்டாதே ஆற்றாமை அடங்கலும் நோக்கிலே தோற்றும்படி

1. "தனி" என்ற அடைமொழிக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'யாவர் ஒருவர்க்கு' என்று தொடங்கி.

அப்ரமேயம் ஹி தத்தேஜ: யஸ்ய ஸா ஜநகாத்மஜா
ந த்வம் ஸமர்த்தஸ்தாம் ஹர்த்தும் ராம சாபாஸ்ரயாம் வநே.

ஸ்ரீராமா. ஆரண். 37 : 18. இது, இராவணனைப் பார்த்து மாரீசன் கூறியது.

2. மேலே கூறிய வாக்கியத்தால் போதரும் பொருளினை அருளிச் செய்கிறார் 'அந்நிலையில்' என்று தொடங்கி. இதனை விவரணம் செய்கிறார் 'அப்போது' என்று தொடங்கி.

3. "வாரான்" என்றதனைக் கடாக்ஷித்து மேல் வரும் பதங்கட்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'அவன், கண்களுக்கு' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'தான் போகிறான்' என்று தொடங்கி.

4. மேலே போந்த "கலவிசெய்து, துறந்து" என்ற பதங்களைக் கடாக்ஷித்துத் "தாமரைக் கண்ணும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'கலந்தபோது' என்று தொடங்கியும், 'பிரிவினை நினைத்து' என்று தொடங்கியும்.

நின்ற நிலை என்னுதல். செவ் வாயும் - [1] பிரிவினைச் சொல்லப் புக்கு முடியச் சொல்லமாட்டாத போதைச் சிவந்த திரு அதரமும். [2] இவனுடைய நிமியும் வாயும், கண்களும் இருக்கிறபடி. நீலம் பணி இரும் குழல்களும்-கலவியாலே குலைந்து பிரிவினை நினைத்துப் பேணமாட்டாதபோதைக் கறுத்துக் குளிர்ந்த பெரிய திருக்குழலும். நான்கு தோளும்-இவள் தடுமாற்றத்தைக் கண்டு குழலைப்பேணி வரும்தனையும் தரிக்கைக்காக நெருக்கி அணைத்த நான்கு திருத் தோள்களும். [3]"மறைத்துக்கொள்" என்றது, கம்சன் முதலாயினரைக் குறித்தே அன்றோ; பெண்களுக்கு நான்காகத் தோற்றும். [4]"சங்கையும் சக்கரத்தையும் கதையையும் தரித்த திருக்கைகளை உடையவனே" என்றாளே அன்றோ. பாவியேன் - [5] இவ் அழகுகளை அநுபவித்து இழந்தால், மறந்திருக்கப் பெறுதபடியான பாவத்தைச் செய்த என்னுடைய. மனத்தே நின்று ஈரும் - மனத்திலே எப்பொழுதும் நின்று நலியாநின்றது. [6] அணைக்கும்படி கைக்கு எட்டுதல், நெஞ்சுக்கு எட்டாதொழிதல் செய்யப் பெற்றிலேன். [7] அறிவு அழிந்து மறந்து பிழைக்க ஒண்ணுதபடி செய்தான் ஆயிற்று. (3)

1. "துறந்து" என்ற சொல்லுக்குத் தகுதியாகச் "செவ்வாயும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பிரிவினை' என்று தொடங்கி.

2. "தாமரைக் கண்ணும்" என்றதற்கு அருளிச்செய்த இரண்டாவது பொருளுக்குத் தகுதியாக இவள்படி அவனுக்கும் உண்டு என்கிறார் 'இவனுடைய' என்று தொடங்கி. நிமியும்வாய் - உதடு நெளிக்கிற வாய். இது, திருவாய்மொழி, 6. 5: 2.

3. கிருஷ்ணனுக்குத் தோள்கள் நான்கு உண்டோ? என்ன, உண்டுஎன்று அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மறைத்துக்கொள்' என்று தொடங்கி.

உபஸம்ஹர ஸர்வாத்மந் ரூபம் ஏதத் சதுர்புஜம்
ஜாநாதுமா அவதாரம்தே கம்ஸோயம் திதிஜந்மஜः.

என்பது, ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 3: 13. இது, கிருஷ்ணனைப் பார்த்துத் தேவகி கூறியது.

4. அப்படித் தோற்றியதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'சங்கையும்' என்று தொடங்கி.

ஶங்க சக்ர கதாபாணே த்வாரகாநிலயஅச்யுத
கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் ஶரணாகதாம்.

என்பது, பாரதம் சபாபர்வம் 75: 43. இது, திரௌபதி கூறியது.

5. பாபம் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவ் அழகுகளை' என்று தொடங்கி.

6. "மனத்தே" என்ற ஏகாரத்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'அணைக்கும்படி' என்று தொடங்கி.

7. "நின்று ஈரும்" என்ற நிகழ்காலத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'அறிவு அழிந்து' என்று தொடங்கி.

974.

பாவியேன் மனத்தே நின்று ஈரும் ஆலோ!
வாடை தண் வாடை வெவ் வாடை ஆலோ!
மேவு தண் மதியம் வெம் மதியம் ஆலோ!
மென் மலர்ப்பள்ளி வெம் பள்ளி ஆலோ!
தூவி அம் புள்ளுடைத் தெய்வ வண்டு
துதைந்த எம் பெண்மை அம் பூ இது ஆலோ!
ஆவியின் பரம் அல்ல வகைகள் ஆலோ
யாமுடை நெஞ்சமும் துணை அன்று ஆலோ!

பொ - ரை:—பாவியேனுகிய என்னுடைய மனத்திலே நிலை பெற்று ஈராநின்றது; வடக்கிருந்து வருகிறதாகிய குளிர்ந்த வாடைக் காற்றும் வெப்பமான வாடை ஆகாநின்றது; பொருந்திய குளிர்ந்த சந்திரனும் வெப்பம் பொருந்திய சந்திரன் ஆகாநின்றது; மெல்லிய மலர்ப் படுக்கையும் வெப்பம் பொருந்திய படுக்கை ஆகாநின்றது; சிறகுகளையுடைய அழகிய கருடப்பறவையை வாகனமாகவுடைய தெய்வமாகிய வண்டாலே தேன் உண்ணப்பட்ட எம் பெண்மையாகிய அழகிய பூவானது இத்தன்மைத்தாக நிலைகேட்டினை அடைந்து இருக்கிறது; ஆத்மாவாலே பொறுக்க் கூடும்வகை இல்லாதவாறு அவனுல் செய்யப்பட்ட கலவியின் வகைகளால் என்னுடைய மனமும் எனக்குத் துணையாக இல்லை; என்னைவிட்டு நீங்கிச் சென்றது என்றபடி.

வி - கு:—ஈரும் என்பதற்கு, மேல் திருப்பாசுரத்தில் கூறிய "தாமரைக்கண்ணும்" என்பது முதலானவற்றை எழுவாயாகக் கொள்க. அன்றி, இத்திருப்பாசுரத்திலே உள்ள வாடையைக் கொள்ளினுமாம். தெய்வ வண்டு - இறைவன். பெண்மை அம் பூ - அழகிய பூவினைப் போன்று மெல்லியதான சரீரம். பெண் தன்மைக்கு நிலைக்களமாக இருப்பதனுல் அச்சரீரத்தினைப் பெண்மை என்றே கூறினர்.

ஈடு:—நாலாம்பாட்டு. [1]அகவாயில் நலிகிறது ஒழிய, நேராக வந்துநின்றும் ஸ்பரிசம் முதலியவற்றுல் வந்துநின்றும் நினைப்பூட்டுதலால் வந்து நின்றும் நலிகிற பொருள்களைச் சொல்லுகிறுள்.

---

1. முதல் மூன்று அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறுர். நேரே வந்து நலிவது, பெண்மை; ஸ்பரிசம் முதலியவற்றுல் நலிவன, வாடை தொடக்கமானவை; நினைப்பூட்டுவனவாய் நலிவது, மென்மலர்ப் பள்ளி.

பாவியேன் மனத்தே நின்று ஈரும்-[1]உலகத்தார் இவ் அழகுதன்னை மனத்திலே வலிய வைத்துப் பாவத்தைப் போக்கிக் கொள்ளாநிற்பர் கண்டீர்! இவ் வடிவை அன்றோ பற்றுக் கோடாக நினைத்துத் தாங்கள் விரும்பிய பலன்களைப் பெறுவது. வாடை தண் வாடை வெம் வாடை-[2]உட்பகையேயாய்ப் புறம்புள்ள பொருள்கள்தாம் அநுகூலமாக இருக்கப் பெற்றேனோ? தண்வாடை வெவ்விய வாடை ஆயிற்று. குளிர்ச்சியை இயல்பாகவுடைய காற்றும் நெருப்புப் போன்று நலிகிறது. [3]"ஸ்ரீ சுகமுனிவருக்குத் தந்தையும்" என்னுமாறு போலே, வாடை தண் வாடை என்று புத்திரனை இட்டுச் சொல்லும்படியாய் இராநின்றது. வாயுவின் பிள்ளையன்றோ நெருப்பு. [4]தாய்மார் வார்த்தையைக் கேட்டுத் 'தண் வாடை,' என்கிறாள்; தன் அநுபவத்தாலே 'வெவ் வாடை,' என்கிறாள். மேவு தண் மதியம் வெம் மதியம்-[5]உலகத்தார் வெம்மைக்கு அஞ்சி நிலாவிலே ஒதுங்கக் காண்கையாலே தானும் அதிலே ஒதுங்கப் பார்த்தாள்; அவன் நெருப்பு மயமான சந்திரன் ஆனான்; [6]அவன் நெஞ்சு அறிந்தவன் ஆகையாலே இச்

1. "பாவியேன் மனத்தே நின்று ஈருமாலோ" என்றது, அநுவாதம். இதற்கு மறுதலைப் பொருள் அருளிச்செய்கிறார் 'உலகத்தார்' என்று தொடங்கி. என்றது, உலகத்தார்க்கு விருப்பமில்லாதனவற்றை நீக்குதற்கும் விருப்பமுள்ளவற்றைப் பெறுதற்கும் சாதனமாக உள்ள அழகு எனக்குப் பாதகமாகாநின்றது என்றபடி. மேற்பாசுரத்திற் கூறிய "நான்கு தோளும்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி 'இவ் வடிவை' என்கிறார்.

2. மேலே வருகின்றவற்றிற்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'உட்பகையேயாய்' என்று தொடங்கி. "மனத்தே நின்று ஈரும்" என்கையாலே உட்பகை என்றபடி.

3. வ்யாஸம் வஸிஷ்ட நப்தாரம் ஸக்தேः பௌத்ரம் அகல்மஷம்
பராஸர ஆத்மஜம் வந்தே ஸுகதாதம் தபோநிதிம்.

என்பது, பிரமாணம்.

4. பிரிவினால் வருந்தும் தலைவியானவள் 'வாடை வெவ்வாடை' என்னுது, "தண்வாடை" என்றல் பொருந்துமோ? என்ன, 'தாய்மார்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. "மேவு தண் மதியம்" என்றதற்குப் பிரயோஜனம் அருளிச்செய்யாநின்று கொண்டு, "வெம்மதியம்" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'உலகத்தார்' என்று தொடங்கி.

6. சந்திரன் நெருப்புமயமாக இருப்பதற்குக் காரணம் யாது? என்ன, 'அவன் நெஞ்சு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

சந்திரனும் வேறுபட்டான். [1]"பரம்பொருளின் மனத்திலிருந்து சந்திரன் உண்டானன்" என்னக் கடவது அன்றே. [2]ஆயன் தன் மனம் கல்லானது அறிந்து மதிகேடாய் இருந்தது.

மென் மலர்ப் பள்ளி வெம் பள்ளி - [3]புறம்புள்ள பொருள்கள் துன்புறுத்தியவாறே அவற்றுக்கு அஞ்சிப் படுக்கையிலே சென்று விழுந்தாள்: [4]அது இருவர்க்கும் படுத்த படுக்கையாக இருந்தது. இருவர்க்குப் படுத்த படுக்கை ஒருவர்க்குப் பாதகமாமே அன்றே. மென்மை பொருந்திய மலர்களால் செய்த படுக்கை வெப்பத்திற்குக் காரணமாய் நலியாநின்றது. [5]பழைய வாடையும் நிலாவுமே நன்றும்படி ஆயிற்று. தூவி

---

1. சந்திரன் இறைவனுடைய நெஞ்சு அறிந்தவாறு யாங்ஙனம்? என்ன, இறைவனுடைய மனத்திலே பிறந்தவனுகையாலே என்று அருளிச்செய்யத் திருவுள்ளம்பற்றி, அங்ஙனம் பிறந்தமைக்குப் பிரமாணம் காட்டுகிருர் 'பரம்பொருளின்' என்று தொடங்கி.

"சந்த்ரமா மநஸோ ஜாதஃ" என்பது, புருஷ சூக்தம்.

திண்சுடர் ஆழி அரங்கேசர் திக்குத் திருச்செவியில்
மண்கழலில் சத்யலோகம் சிரத்தில் மருத்து உயிரில்
தண்கதிர் உள்ளத்தில் வான்உந்தியில் செந்தாணி கண்ணில்
ஒண்கனல் இந்திரன் வாழ்முகப்போதில் உதித்தனரே.

என்பது, திருவரங்கத்து மாலை, செய். 8.

"எங்கள் மாதவன் இதய மா மலர் வரும் உதயத்
திங்கள் மாமரபினில்"

"விழியின் நெஞ்சின் வால்நெருப்பின் நீடு உததியின் விதி படைப்பினில் தோன்றிப்
பொழியும் வெண்கதிர் ஐவகை மதியும் அப்பொழுது உதித்தன என்ன"

என்பன வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.

2. அவன் நெஞ்சு வேறுபட்டிருக்கும் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிருர் 'ஆயன்தன் மனம்' என்று தொடங்கி. "ஆயன்தன் மனம் கல்" என்பது, திருவாய்மொழி, 9. 9 : 5. "தண்மதியம் வெம்மதியம்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி ரசோக்தியாக அருளிச்செய்கிருர் 'மதிகேடாய் இருந்தது' என்று. மதியும் கேடாய் இருந்தது - விபரீதமாய் இருந்தது என்றபடி.

3. இப்பொழுது படுக்கையைச் சொல்லுதற்குக் காரணம் யாது? என்ன, 'புறம்புள்ள பொருள்கள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

4. அப் படுக்கைத் துன்புறுத்துவதற்குக் காரணம் அருளிச்செய்கிருர் 'அது' என்று தொடங்கி. பதங்கட்குப் பொருள் அருளிச்செய்கிருர் 'மென்மை பொருந்திய' என்று தொடங்கி.

5. படுக்கை நலிகிற நலிவின் எல்லையை அருளிச்செய்கிருர் 'பழைய வாடையும்' என்று தொடங்கி.

அம் புள்ளுடைத் தெய்வ வண்டு துதைந்த எம் பெண்மை அம் பூ இது - பெரிய திருவடியையுடைய தெய்வமாகிற வண்டாலே எடுக்கப்பட்ட சாரத்தையுடையதான என்னுடைய [1] பெண்மையாகிற பூ, இந்த விதமாய் நலிய நலிவுபடாநின்றது. [2] படுக்கை துன்புறுத்தியவாறே புறம்பே புறப்பட்டாள்; உடல் இருக்கும் வரையிலும் இருப்பதான பெண் தன்மையானது கெடத் தொடங்கிற்று. [3] அழகிய சிறகுகளையுடையனைக் காண்பதற்கு இனியனை பெரிய திருவடி முதுகிலே வந்தாயிற்று, இவளுடைய பெண்மையை அழித்தது. [4] அன்றிக்கே, கருடவாஹனத்தை உடையவனே அன்றோ பரம்பொருள் ஆவான் ஆதலின் 'தூவி அம் புள்ளுடைத் தெய்வம்' என்கிறாள் என்னுதல். தன்பெண்மை அழிந்தபடி பேச்சுக்கு நிலம் அல்லாமையாலே 'இது' என்கிறாள்.

ஆவியின் பரம் அல்ல வகைகள் - [5] கலக்கிறபோது அவன் செய்த தன்மைகள் உயிரால் தாங்கக்கூடியன அல்ல. அன்றிக்கே, துன்புறுத்துகின்ற பொருள்களினுடைய பாரிப்பு ஆன்மாவின் அளவு அன்று என்னுதல். யாமுடை நெஞ்சமும் துணை அன்று- [6] புறம்புண்டானவை பாதகமானால் நெஞ்சு உண்டாகில் உசாவித் தரிக்கலாம் அன்றோ; அதுவும் துணை ஆகிறது இல்லை. (4)

---

1. 'பெண்மையாகிற பூ' என்று பொருள் அருளிச்செய்வதனால் "பெண்மையாம் பூ" என்ற பாடமும் உண்டு போலும். ஈண்டுப் "பெண்மை" என்றது, பெண்தன்மைக்கு நிலைக்களமான சரீரத்தைக் காட்டுகிறது. பெண் தன்மையுமாம்.

2. படுக்கையைக் கூறியதன் பின் "பெண்மை"யைக் கூறியதற்குக் காரணம் அருளிச்செய்கிறார் 'படுக்கை' என்று தொடங்கி.

3. "தூவி அம்" என்று விசேடித்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'அழகிய' என்று தொடங்கி.

4. "தூவி அம் புள்ளுடைத் தெய்வ வண்டு துதைந்த எம் பெண்மை" என்பதற்கு, பெரிய திருவடி முதுகில் இருக்கிற அழகினைக் காட்டி என் பெண்மையைக் கவர்ந்தான் என்று பொருள் அருளிச்செய்தார் மேல்; கருடனை வாகனமாக உடையவனும் தன்மை பரத்துவத்திற்கு அறிகுறி என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி.

5. மூன்றும் அடியைக் கடாக்ஷித்து, பாவம் அருளிச்செய்கிறார் 'கலக்கிறபோது' என்று தொடங்கி. "வாடை தண் வாடை" என்பது போன்றவைகளைக் கடாக்ஷித்து, பாவம் அருளிச்செய்கிறார் 'துன்புறுத்துகின்ற பொருள்களினுடைய' என்று தொடங்கி.

6. "நெஞ்சமும்" என்ற உம்மைக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'புறம்புண்டானவை' என்று தொடங்கி.

975.

யாமுடை நெஞ்சமும் துணை அன்று ஆலோ!
ஆ புகு மாலையும் ஆகின்று ஆலோ!
யாமுடை ஆயன்தன் மனம் கல் ஆலோ!
அவனுடைத் தீம் குழல் ஈரும் ஆலோ!
யாமுடைத் துணை என்னும் தோழிமாரும்
எம்மின்முன் அவனுக்கு மாய்வர் ஆலோ!
யாமுடை ஆர் உயிர் காக்குமாறு என்?
அவனுடை அருள் பெறும்போது அரிதே.

பொ - ரை :—என்னுடைய மனமும் எனக்குத் துணை ஆகாது ஒழிந்தது; அந்தோ! பசுக்கள் ஊரை வந்து அடையும் மாலைக் காலமும் ஆகாநின்றது; அந்தோ! என்னுடைய கோபாலகிருஷ்ணனுடைய மனமும் கல்லாக இராநின்றது; அந்தோ! அந்தக் கோபாலகிருஷ்ணனுடைய இனிய குழலின் ஓசையும் ஈராநின்றது; அந்தோ! எனக்குத் துணைவர்கள் என்று சொல்லப்படுகிற தோழிமார்களும் எனக்கு முன்னே அவன் விஷயத்தில் வருந்தாநின்றார்கள்; அந்தோ! அவனுடைய திருவருளைப் பெறுதலும் அரிதாக இராநின்றது; ஆதலால், இனி, என்னுடைய உயிரைக் காப்பாற்றும் வகை யாங்ஙனம்?

வி - கு :—குழல் - குழல் ஓசை.

ஈடு :—ஐந்தாம் பாட்டு. [1] எல்லாப் பொருள்களும் தம்தம் தன்மைகள் நீங்கி வேறுபட்டனவாக, அவ்வளவிலும் அவனுடைய திருவருள் அரிதானால் தரித்திருப்பதற்கு விரகு உண்டோ? என்கிறாள்.

யாமுடை நெஞ்சமும் துணை அன்று - [2] ‘என்னது’ என்று விரும்ப அமையும் அன்றோ துணை இன்றிக்கே ஒழிகைக்கு: ஆ புகு மாலையும் ஆகின்று - பசுக்களும் வந்து புகுரும் மாலைக்

1. “நெஞ்சம் துணை அன்று, ஆயன்தன் மனம் கல், தீம் குழல் ஈரும், துணை என்னும் தோழிமாரும் மாய்வர்” என்பனவற்றைத் திருவுள்ளம்பற்றி ‘எல்லாப் பொருள்களும்’ என்று தொடங்கியும், “அவனுடை அருள்பெறும் போது அரிது, யாமுடை ஆர் உயிர் காக்குமாறு என்” என்றதனைத் திருவுள்ளம் பற்றி ‘அவ்வளவிலும்’ என்று தொடங்கியும் அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. “யாமுடை ஆயன்”, “யாமுடைத் தோழிமார்” என்பனவற்றைக் கடாக்ஷித்து, “யாமுடை நெஞ்சம்” என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் ‘என்னது’ என்று தொடங்கி.

காலமும் ஆகாநின்றது ; [1]மனம் துணை அன்றிக்கே ஒழிந்தால் ஓரடி தாழ்த்து வர வேண்டாவோ இம் மாலைக்கு. யாமுடை ஆயன் தன் மனம் கல்ஆலோ -[2] நெஞ்சு துணை அன்றிக்கே, மாலையும் வருகிற இது அவன் நெஞ்சிற் படுகிறது இல்லை; [3]எல்லாப் பொருள்கட்கும் தன்மை வேறுபாடு உண்டாவது போன்று, மென்மைத் தன்மையையுடையவன் நெஞ்சு கல்லாயிற்று. நெஞ்சிலும் அண்ணியவன் நெஞ்சு நெகிழ வேண்டாவோ? [4]ஒரு கல்லைப் பெண்ணாக்கினவன் நெஞ்சு கல்லானால் அதனை நெகிழ்க்க வல்லார் இலர் அன்றோ! அவனுடைத் தீம் குழல் ஈரும் ஆலோ -[5] அவனுடைய இனிய குழல் ஓசை, 'அவன் நெஞ்சு கல்' என்று கைவாங்க ஒட்டுகிறது இல்லை. "நான் பகல்-முழுதும் பிரிந்தேன், வரவு தாழ்த்தேன், ஆற்றேன், பரதந்திரனாய்க் கெட்டேன்" என்கிற வகைகளிலே சில பாசுரங்களை வைத்தே அன்றோ குழல் ஊதுவது. அது, "கல் என்று கைவாங்காதே காண், தண்ணீர்காண்" என்னாநின்றது. [6] இப் பாசுரங்களாலே அவனுடைய இனிய குழல் ஓசையானது ஈராநின்றது.

யாமுடைத் துணை என்னும் தோழிமாரும் எம்மின் முன் அவனுக்கு மாய்வர் ஆலோ-[7] மனமும் துணை அன்றிக்கே அவனும் உதவாதபோது, துணையான தோழிமாரும் என் துன்பத்தினைக் கண்டு எனக்கு முன்னே "இவளுக்கு அவன் கணவ

---

1. நீ துக்கிப்பது எற்றுக்கு? வரவேண்டியவை அவ் அவ் காலத்தில் வரவேண்டாவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மனம்' என்று தொடங்கி.

2. மேலே போந்த இரண்டனையும் கடாக்ஷித்து, "கல்ஆலோ" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'நெஞ்சு துணை அன்றிக்கே' என்று தொடங்கி.

3. மேலே கூறிய பொருளால் போதரும் கருத்தினை அருளிச்செய்கிறார் 'எல்லாப் பொருள்கட்கும்' என்று தொடங்கி.

4. அவன் மனத்தினை நெகிழ்த்துக்கொள்ள ஒண்ணாதோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஒரு கல்லை' என்று தொடங்கி.

5. அவன் நெஞ்சு கல் ஆனால் கை வாங்க ஒண்ணாதோ? என்ன, 'அவனுடைய' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். இது, "தீம்" என்ற சொல்லிலே நோக்கு. கை வாங்க ஒட்டாமையைக் காட்டுகிறார் 'நான் பகல் முழுதும்' என்று தொடங்கி.

6. "ஈரும்" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இப் பாசுரங்களாலே' என்று தொடங்கி.

7. "தோழிமாரும்" என்ற உம்மைக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'மனமும்' என்று தொடங்கி.

ஞக வேண்டும்" என்று நோவுபடாநின்றார்கள். "துணை என்னும்" என்றது, [1]மாம்பழ வுண்ணி போலே அன்றோ நீங்கள் தோழிமாரானபடி என்பதனைத் தெரிவித்தபடி. [2] "துக்கமும் சுகமும் நமக்கு ஒன்றே" என்று இருக்குமவர்கள் ஆகையாலே, இவள் ஆற்றாமை பொறுக்கமாட்டாமல் நோவுபடுகிறார்கள். [3] இவர்களுக்கு அவனோடு உண்டான சம்பந்தம் இவள் வழியாக அன்றோ. யாமுடை ஆர் உயிர் காக்குமாறு என் - இத் தனிமையில் ஆத்மாவைத் தரித்துக் கொண்டு இருப்பதற்கு விரகு என்? பிறர் உயிராகில் நோக்கவுமாம் ஆதலின் 'யாமுடை உயிர்' என்கிறாள். அவனுடை அருள் பெறும் போது அரிது - அவனுடைய திருவருள் பெறுகை அரிது ஆயிற்று. அது பெறில், நம் உயிரையும் நோக்கலாம் என்றபடி. (5)

976.

அவனுடை அருள்பெறும் போது அரிதால்
அவ் அருள் அல்லன அருளும் அல்ல
அவன் அருள் பெறும் அளவு ஆவி நில்லாது
அடுபகல் மாலையும் நெஞ்சும் காணேன்
சிவனொடு பிரமன் வண் திருமடந்தை
சேர் திரு ஆகம் எம் ஆவி ஈரும்
எவம் இனிப் புகுமிடம்? எவம் செய்கேனோ?
ஆருக்கு என் சொல்லுகேன்? அன்னைமீர்காள்!

---

1. "என்னும்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'மாம்பழ உண்ணி' என்று தொடங்கி. முதற்பத்து ஈட்டின் தமிழாக்கம் பக். 186. பார்க்கவும். "துணை என்னும்" என்றது, துணை என்று சொல்லப்படுகிற மாத்திரமே என்றபடி. 'மாம்பழ உண்ணிபோலே' என்றது, மாம்பழத்தின் வாசனையை அறியாதவற்றை மாம்பழ உண்ணி என்று சொல்லுமாறுபோலே என்றபடி.

2. அவர்கள் தாம் துணை ஆகாமல் போவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'துக்கமும்' என்று தொடங்கி.

த்வம் வயஸ்யஃ அஸி ஹ்ருத்யஃ மே ஹி ஏகம் துக்கம் ஸுகம்ச நௌ
ஸுக்ரீவோ ராகவம் வாக்யம் இதி உவாச ப்ரஹ்ருஷ்டவத்.

என்பது, ஸ்ரீராமா. கிஷ். 5 : 18.

3. "அவனுக்கு மாய்வர்" என்று சொற்கள் இருக்க, 'இவளுக்கு அவன் கணவனாகவேண்டும்' என்று பொருள்கூறுவது யாங்ஙனம் பொருந்தும்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவர்களுக்கு' என்று தொடங்கி. அவனுக்கு மாய்வர் என்பதற்கு அவன் பொருட்டு வருந்துவர் என்பது பொருள். மாய்தல் - நோவுபடல்.

பொ - ரை :—அவனுடைய திருவருளைப் பெறுகிற காலம் அரிதாக இருக்கிறது ; அவனுடைய திருவருள் அல்லாத மற்றையோர்கள் அருள்களும் அருள்கள் ஆகமாட்டா ; அவனுடைய திருவருளைப் பெறுகிற வரையிலும் உயிர் தரித்திருக்கமாட்டாது ; பகல் நீங்கிய மாலைக்காலமும் வாராநின்றது ; என் மனத்தையும் என்னிடம் காண்கிறேன் இல்லை ; சிவனும் பிரமனும் பெரிய பிராட்டியாரும் சேர்ந்திருக்கின்ற திருமேனியானது என்னுடைய ஆவியை ஈராநின்றது ; புகுதற்குரிய இடம் எங்கே இருக்கிறது ? எதனைச் செய்வேன் ? அன்னைமீர்காள் ! யாருக்கு எதனைச் சொல்லுகேன் ?

வி - கு :—பகல் அடு மாலையும் என மாற்றுக. மாலையும் வாராநின்றது என ஒரு சொல் வருவித்துப் பொருள் உரைக்க.

ஈடு :—ஆறும்பாட்டு. [1] அகலகில்லேன் இறையும் என்று நித்தியவாசம் செய்கிற பிராட்டியோடு வேறு ஒன்றிலே நோக்குள்ளவர்களான பிரமன் சிவன் முதலானவர்களோடு வாசி அற உடம்பு கொடுக்குமவனுடைய சௌசீல்யம் என் உயிரை ஈராநின்றது என்கிறாள்.

அவனுடை அருள் பெறும் போது அரிதால்-[2] கொள்வார் தேட்டமாய் அன்றே அவனுடைய அருள் இருப்பது. [3] தண்ணீர்ப் பந்தலிலே சேர்ந்த விடாயர்க்குக் குளிர்ந்த தண்ணீர் அரிதாய் இருக்குமாறுபோலே அன்றோ, எனக்கு அவன் திரு அருள் அரிதானபடி. அவன் அருள் கிடைக்குமளவும் உறவினர்களுடைய இன்சொற்களைக் கொண்டாகிலும் தரித்தாலோ? என்ன, அவ் அருள் அல்லன அருளும் அல்ல - அந்த அருளை ஒழிய மற்றும் உண்டான அருள்கள் அருள்களும் அல்ல. [4]"நல்லான் அருள் அல்லால், பல்லார் அருளும் பழுது" என்றதே அன்றோ. [5]விடாய்த்தவனுக்கு நெருப்புக்

1. "சிவனொடு பிரமன் வண் திருமடந்தை சேர் திரு ஆகம் எம் ஆவி ஈரும்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "அவனுடை அருள்" என்று விசேடித்ததற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'கொள்வார்' என்று தொடங்கி. "உதாரா:" (ஸ்ரீ கீதை) என்னுமவன் அன்றோ.

3. இங்ஙனம் கூறியதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'தண்ணீர்ப்பந்தலிலே' என்று தொடங்கி.

4. முதல் திருவந்தாதி, 15.

5. "அருளும்" என்ற உம்மைக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'விடாய்த்தவனுக்கு' என்று தொடங்கி.

கூட்டங்களைக் கொண்டு விடாயை நீக்கினாற்போலே அன்றோ பிறருடைய அருள். நீக்க ஒண்ணாமை மாத்திரமே அன்று, தீமையையும் விளைக்கும். அவ் அருள் தப்பாத பின்பு அதனைப் பெறுமளவும் ஆறி இருந்தாலோ? என்ன, அவன் அருள் பெறும் அளவு ஆவி நில்லாது - அவன் திரு அருள் கிட்டும் தனையும் உயிர் தரிக்கிறது இல்லை. [1]கிரமத்திலே அடைகிற வரையிலும் பொறுத்திருப்பது ஒரு உயிரைப் பெற்றோமாகில் ஆறி இருக்கலாயிற்றே.

[2]பகல் அடு மாலையும் நெஞ்சும் காணேன் - பகலை முடித்துக்கொடு வந்து மாலையும் தோற்றாநின்றது; நெஞ்சையும் காண்கின்றிலேன். அன்றிக்கே, மாலையும் காண்கின்றிலேன்; நெஞ்சையும் காண்கின்றிலேன் என்னுதல். என்றது, [3]மேலே வருகிற காலத்தினுடைய கொடுமையைப் பார்த்தவாறே மாலையே தேட்டமாக இருக்கிறது என்றபடி. வழியில் போகாநிற்க வழி தெரியாமல் மயங்கினால் "கையிற் பொருளைக் கொண்டாகிலும் வழிகாட்ட, வல்லடிக் காரரையாகிலும் கிடையாதோ?" என்னுமாறு போன்றும், ஒற்றைக் கண்ணள் ஒற்றைக் காதள் தொடக்கமான அரக்கியர்கள் கையில் காட்டிக்கொடுத்து இராவணன் பேர நின்றாற் போன்றும், ஆற்றலாம்படியான பகலை முடித்துக்கொடு வந்த மாலைநேரமானது தேட்டமாம் படியாய் வந்து விழுந்தது என்றபடி. சிவனொடு பிரமன் வண் திரு மடந்தை சேர் திரு ஆகம் எம் ஆவி ஈரும்-பிராட்டியோடு, வேறு ஒன்றிலே நோக்குள்ளவர்களான சிவன் முதலாயினோர்களோடு வாசி அற உடம்பு கொடுக்கும் சீலத்தை நினைத்த அளவில் அச் சீலத்தையுடைய திருமேனி, நித்தியமான ஆத்மாவை முடியாநின்றது. [4]காபாலி கந்தர்க்கு எளிதானது கண்டீர் எனக்கு அரிதாயிற்று!

---

1. "அருள் பெறும் அளவு ஆவி நில்லாது" என்றதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'கிரமத்திலே' என்று தொடங்கி.

2. "அடு பகல் மாலையும் நெஞ்சும் காணேன்" என்பதற்கு இரண்டு விதமாகப் பொருள் அருளிச்செய்கிறார். முதற்பொருள் எம்பெருமானாருடைய நிர்வாஹம். இரண்டாவது பொருள் ஸ்ரீ ஆளவந்தாருடைய நிர்வாஹம்.

3. துன்பத்தைத் தருகின்ற மாலையைத் தேடுவார் உளரோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'மேலே வருகிற' என்று தொடங்கி. இதற்கு இரண்டு திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'வழியில் போகாநிற்க' என்று தொடங்கியும், 'ஒற்றைக் கண்ணள்' என்று தொடங்கியும்.

4. மேற் கூறியவற்றால் போதரும் கருத்தினை அருளிச்செய்கிறார் 'காபாலி' என்று தொடங்கி. காபாலி - சிவன். கந்தர் - திருநாபீகமலத்திற் பிறந்தவன்; பிரமன். கந்தம் - கிழங்கு.

ஆயின், புறம்பே சென்றாகிலும் தரித்தாலோ? என்ன, இனிப் புகும் இடம் எவம்-[1]எல்லார்க்கும் பொதுவான உடம்பை இழந்து இனி எங்கே புக்குத் தரிப்பது? [2]“அவன் உடம்பு கிட்டிற்று இல்லை” என்று, நலத்தைச் சொல்லுகிற உங்கள் உடம்பைப் பற்றித் தரிக்கவோ? ஆயின், உலக யாத்திரையைப் பற்றித் தரித்தாலோ? என்ன, எவம் செய்கேனோ-அவ்வளவில் தரிக்கலாம் விஷயம் அன்றே. ஆயின், அவனுடைய சீலம் முதலான குணங்களைச் சொல்லிக்கொண்டு தரித்தாலோ? என்ன, ஆருக்கு- [3]வடுகர்க்குத் தமிழர் வார்த்தை சொல்லுமாறுபோலே, சொல்லும் வார்த்தைக்கு அதிகாரிகள் ஆர்? [4]சீலம் முதலான குணங்களைச் சொல்லும் தோழிமார்கள் எனக்கு முன்னே அழிந்தார்கள். என் சொல்லுகேன் - [5]கேட்பாரைப் பெற்றால்தான் சொல்லுகைக்கு வார்த்தைகள் உண்டோ?

அன்னைமீர்காள் - [6]தோழிமார் அழிந்தார்கள், உலகத்தார் வேறு ஒன்றிலே நோக்குள்ளவர்கள், அவர்கள் தவிர நீங்கள் எஞ்சி இருந்தீர்கோள்; உங்களுக்குச் சொல்லவோ? [7]மீனுக்குத் தண்ணீர் வார்த்தாற் போன்று நித்தியசூரிகளுக்குச் சொல்லவோ? “ஈஸ்வரோஹம் - நானே இறைவன்” என்று இருக்கும் பிரமன் முதலாயினோர்கட்குச் சொல்லவோ? விஷயங்களிலே ஈடுபட்டவர்களாய்த் திரியும் சம்சாரிகட்குச் சொல்

1. “சிவனொடு பிரமன் வண் திருமடந்தை சேர் திரு ஆகம்” என்றதனைத் திருவுள்ளம்பற்றி ‘எல்லார்க்கும்’ என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

2. அதனை விவரணம் செய்கிறார் ‘அவன் உடம்பு’ என்று தொடங்கி. ‘நலத்தைச் சொல்லுகிற உங்கள் உடம்பை’ என்றது, “அன்னைமீர்காள்!” என்ற விளிப்பெயரைத் திருவுள்ளம்பற்றி.

3. ‘வடுகர்க்குத் தமிழர் வார்த்தை சொல்லுமாறு போலே’ என்றது, ஒன்றனைக் கூறினால் கூறின அச்சொல்லுக்குரிய நேர் பொருளைக் கொள்ளாது வேறு ஒரு பொருள் கொள்ளுவர் என்றபடி.

4. அதிகாரிகள் அல்லாதபடியைக் காட்டுகிறார் ‘சீலம் முதலான’ என்று தொடங்கி.

5. பிராட்டி பன்னிரண்டு யாண்டு கலந்த கலவியைத் திருவடிக்குச் சொல்லித் தரித்தாற்போலே தரித்தாலோ? என்ன, அப்படித் தரிக்கத்தக்கது ஒன்று இல்லை என்கிறாள் ‘கேட்பாரை’ என்று தொடங்கி.

6. “எவம் இனிப் புகும் இடம் ஆருக்கு” என்ற சொற்களின் பொருள்களை அநுவதித்துக்கொண்டு, “அன்னைமீர்காள்” என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் ‘தோழிமார்’ என்று தொடங்கி.

7. “திருமடந்தை, சிவனொடு பிரமன், எவம் செய்கேன், அன்னைமீர்காள்!” என்ற சொற்களைத் திருவுள்ளம்பற்றி “ஆருக்கு” என்ற பதத்திற்குச் சுவாபதேசம் அருளிச்செய்கிறார் ‘மீனுக்கு’ என்று தொடங்கி.

லவோ? அன்றியே, ஆசாரியனை அடைந்து சொரூபஞானம் பிறந்து, "துறும்பு நறுக்கலாகாது" என்று இருக்கிற [1]செங்கொடு குட்டைகளுக்குச் சொல்லவோ? யாருக்கு எதனைச் சொல்ல? சொல்லுதற்கு வார்த்தை இல்லை; கேட்கைக்கு அதிகாரிகளும் இல்லை. (6)

977.

ஆருக்கு என் சொல்லுகேன் அன்னைமீர்காள்!
 ஆர் உயிர் அளவு அன்று இக் கூர்தண் வாடை
கார் ஒக்கும் மேனி நம் கண்ணன் கள்வம்
 கவர்ந்த அத் தனிநெஞ்சம் அவன்கணஃதே
சீர் உற்ற அகிற்புகை யாழ் நரம்பு
 பஞ்சமம் தண்பசும் சாந்து அணைந்து
[2] போர் உற்ற வாடை தண் மல்லிகைப்பூப்
 புதுமணம் முகந்துகொண்டு எறியும்ஆலோ.

பொ-ரை:—தாய்மார்களே! மேகத்தைப் போன்ற நிறத்தையுடைய நம் கண்ணபிரானுடைய கள்ளச் செயல்களாலும் பேச்சுக்களாலும் கவரப்பட்ட என் தனி மனமானது அவனிடத்திலே இருக்கின்றது; போரிலே நோக்குள்ள இந்த வாடைக்காற்றானது, சீர் உற்ற அகிற்புகையிலும் யாழ்நரம்பின் ஓசையிலும் பஞ்சமம் என்ற பண்ணிலும் தண்ணிய பசிய சந்தனத்திலும் சேர்ந்து, குளிர்ந்த மல்லிகைப்பூவிலே உள்ள புது மணத்தையும் முகந்துகொண்டு என்மேலே நெருப்பினைப்போன்று வீசாநின்றது; ஆதலால், குளிர்ச்சி மிக்க இவ் வாடைக்காற்றின் செயல் என் அரிய உயிரின் அளவிலே நிற்பதாக இல்லை; யாருக்கு எதனைச் சொல்லுவேன்?

1. செங்கொடு குட்டைகள் என்பதற்கு, செவ்வையாகக் கொடுக்கிற நாழி என்பது பொருள். தாம் கொண்ட கொள்கை விடாதவர்கள்; கிருஹீதக்ராஹிகள் என்றபடி.

2. வாரா ராயினும் வரினும் நமக்கு
 யாரா கியரோ தோழி! நீர
 நீலப் பைம்போது உளரிப் புதல
 பீலி ஒண்பொறிக் கருவிளை யாட்டி
 நுண்முள் ஈங்கைச் செவ்வரும்பு ஊழ்த்த
 வண்ணத் துய்ம்மலர் உதிரத் தண்ணென்று
 இன்னாது எறிதரும் வாடையொடு
 என்னா யினள்கொல் என்னு தோரே.

என்பது, குறுந்தொகை. 110. மற்றும், பிரிந்த தலைவி வாடைக்கு வருந்துதல் 'நெடுநல் வாடை' என்னும் நூலானும் உணர்தல் தகும்.

வி - கு :—கூர் : உரிச்சொல், மிகுதிப் பொருளது. போர் உற்ற வாடை அணைந்து முகந்துகொண்டு எறியும் ; ஆதலால், இக் கூர்தண் வாடை ஆர் உயிர் அளவு அன்று என்க.

ஈடு :—ஏழாம் பாட்டு. [1]மேலே கூறிய துன்புறுத்தும் பொருள்கள் எல்லாம் திரண்டு வந்து கண்பாராதே நலியா நின்றன என்கிறாள்.

அன்னைமீர்காள் ஆருக்கு என்சொல்லுகேன் - [2]நெஞ்சும் உங்களதாய், துன்புறுத்தும் பொருள்களை "இனிய பொருள்கள்" என்று அவற்றைத் தேடித் திரிகிற உங்களுக்குச் சொல்லவோ? [3]இதனைச் சொன்னவாறே, "என்! நெஞ்சும் தம்மதாய், தத்தமக்கு என்ன அநுகூலமான பொருள்களையும் தேடக் கடவது அன்றோ?" என்பர்கள் அன்றோ தங்கள் வாசனையாலே ; உங்களுக்குச் சொல்லுவோம் : இக் கூர் தண் வாடை ஆர் உயிர் அளவு அன்று - மிகைத்துக் குளிர்ந்து வருகிற வாடையானது என்னுடைய அரிய உயிரின் அளவில் போமது அன்று. [4]துன்பத்தினை ஊட்டும் பொருள்கள் உறைத்தாலும் தரித்திருக்கலாமே அன்றோ, எனக்கு ஒரு நெஞ்சு பெற்றேனாகில் ; "என் நெஞ்சினாரும் அங்கே ஒழிந்தார்" என்கிறபடியே, அதுவும் மீளா இடத்தே புக்கதே. கார் ஒக்கும் மேனி நம் கண்ணன் கள்வம் கவர்ந்த அத் தனி நெஞ்சம் அவன்கணஃதே - மேகம் போன்று சிரமத்தைப் போக்கக் கூடிய வடிவையுடையனாய், அவ் வடிவைக் காட்டி என்னைத் தனக்கே உரியவளாக்கி எனக்கு உரிமைப் பட்டவனான கிருஷ்ணனுடைய, கள்வம் உண்டு - கலவிக் காலத்தில் பேசிய தாழ்ந்த பேச்சுக்களும், செய்த செயல்களும் ; அவற்றாலே

1. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. "நெஞ்சம் அவன்கணஃதே சீர் உற்ற அகில்" என்பன போன்றவைகளைக் கடாக்ஷித்து, அவற்றிற்கு மறுதலைமுகத்தால் கருத்து அருளிச்செய்கிறார் 'நெஞ்சும்' என்று தொடங்கி. 'உங்களுக்குச் சொல்லவோ?' என்றது, இப்படி நினைத்திருக்கிற உங்களுக்கு என் நிலையைச் சொல்லுவது என் என்றபடி.

3. "ஆர் உயிர் அளவு அன்று" என்பது போன்றவைகளுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'இதனைச் சொன்னவாறே' என்று தொடங்கி.

4. பின் மூன்று அடிகட்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் 'துன்பத்தினை ஊட்டும்' என்று தொடங்கி.

கவரப்பட்ட ஒப்பற்றதான என்மனமானது அவன்பக்கலது. [1]"பேச்சும் செய்கையும்" என்னக்கடவது அன்றோ.

சீர் உற்ற அகில்புகை யாழ்நரம்பு பஞ்சமம் தண் பசும் சாந்து அணைந்து போர் உற்ற வாடை தண்மல்லிகைப்பூப் புது மணம் முகந்து கொண்டு எறியும் ஆலோ - [2]'இங்கே உள்ளது கேவல சரீரமேயாகும்' என்று அறிகின்றன இல்லை அவை. [3]வாடை தானே முதன்மையாய் வருகை அன்றிக்கே, மற்றும் முதன்மை இல்லாதனவற்றையும்கூடக்கொண்டு,[4]"இந்தநீலன் ஒருவனே இலங்கையைத் தனது சேனையால் அழிப்பதற்கு விரும்புகிறான்" என்கிறபடியே, நான் நான் என்று மேல்விழா நின்றதாயிற்று. சீர் உற்ற அகில்புகை - சீர் உறுகையாவது - அழகு மிக்கு இருக்கை; அதாவது, வாசனையேயாய்க் கிராண இந்திரியமான மூக்கினை நலிவதோடு அல்லாமல் கண்களையும் நலியும்படியான அழகிய அகிற்புகை என்றபடி. யாழ் நரம்பு- பண்பட்ட யாழ். பஞ்சமம் - பஞ்சமமாகிற பண். தண் பசும் சாந்து - ஆறிக் குளிர்ந்து வாசனையை உடைய பொருள்களில் செவ்வி மாறாத சாந்து. அணைந்து - இவற்றைக் கூட்டிக் கொண்டு. போர் உற்ற வாடை - [5]"கூடின பரிகரங்கள், பங்களங்கள்" என்னும்படி தனிவீரம் செய்கிற வாடையானது. பொருகையில் சமைந்த வாடையானது. தண் மல்லிகைப் பூ புது மணம் முகந்துகொண்டு - சிரமத்தைப் போக்கக் கூடிய

---

1. அவனுடைய வார்த்தைகளும் செயல்களும் மனத்தினைக் கவர்வன வாக இருக்கும் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'பேச்சும் செய்கையும்' என்று. இது, நாய்ச்சியார் திருமொழி, 2: 4.

2. எல்லாம் ஒரு சேரக் கூடித் துன்புறுத்துவதற்கு இங்கே ஒரு பசை உண்டோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இங்கே உள்ளது' என்று தொடங்கி. 'கேவல சரீரமேயாகும்' என்றது, நெஞ்சம் அவன்பக்க லஃதே என்கையாலே. 'அவை' என்றது, அகிற்புகை தொடக்கமானவற்றை.

3. "போர் உற்ற வாடை சாந்து அணைந்து" என்கையாலே, வாடைக்கு முதன்மை தோன்ற பொருள் அருளிச்செய்கிறார் 'வாடைதானே' என்று தொடங்கி.

4. "சீர் உற்ற, தண் பசும்" என்ற அடைமொழிகளுக்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இந்த நீலன்' என்று தொடங்கி. "சீர் உற்ற" என்றதனை, யாழ், பஞ்சமம் என்பனவற்றிற்கும் கூட்டுக.

"ஏஷைவ ஆஶம்ஸதே லங்காம் ஸ்வேநாநீகேந மர்த்திதும்"

என்பது, ஸ்ரீராமா. யுத். 30: 30.

5. "போர் உற்ற வாடை" என்றதனால் பலித்த பொருளை அருளிச் செய்கிறார் 'கூடின' என்று தொடங்கி. 'பரிகரங்கள்' என்றது, அகிற்புகை முதலாயினவற்றை. பங்களம் - பதர்,

தான மல்லிகைப் பூவின் புதிய வாசனையை முகந்துகொண்டு. [1]முகப்பார் தாழ்வே ஆயிற்று; மணத்திற் குறை இல்லை. எறியுமாலோ-[2] இவளுடைய விரகாக்நி தன்னைக் கதுவாதபடி கடக்க நின்று வீசாநின்றது. அம்பைக் காய்ச்சி எய்வாரைப் போலே. (7)

978.

புது மணம் முகந்துகொண்டு எறியும்ஆலோ!
பொங்கு இளவாடை புன்செக்கர்ஆலோ!
அது மணந்து அகன்ற நம் கண்ணன் கள்வம்
கண்ணனிற் கொடிது இனி அதனில் உம்பர்
மது மணம் மல்லிகை மந்தக் கோவை
வண்பசும் சாந்தினில் பஞ்சமம் வைத்து
அது மணந்து இன்அருள் ஆய்ச்சியர்க்கே
ஊதும் அத் தீம் குழற்கே உய்யேன் நான்.

பொ - ரை :—மேலும் மேலும் பொங்கி எழுகின்ற இளமை பொருந்திய வாடைக் காற்றானது புதிய மணத்தை முகந்துகொண்டு மேலே வீசாநின்றது; அந்தோ! சிறிதுநேரம் நின்று கழிகிற செவ்வானமும் வருத்துகின்றது; அந்தோ! அத்தன்மைதாகச் சேர்ந்து பிரிந்த நம் கண்ணபிரானுடைய கள்ளச்செயல்கள் கண்ணபிரானைக் காட்டிலும் கொடியதாக வருத்துகின்றன; அந்தோ! இனி அதற்கு மேலே, மதுவையும் மணத்தையுமுடைய மல்லிகைப் பூக்களாலே தொடுக்கப்பட்ட மாலையும் வளவிய சாந்தமும் வருத்தாநின்றன; அந்தோ! அந்தச் சாந்தைக் காட்டிலும், அத்தன்மைத்தாகச் சேர்ந்து இனிய அருளைச்செய்த ஆயர்மகளிர் பொருட்டுப் பஞ்சமம் என்னும் பண்ணை வைத்து ஊதுகின்ற அந்த இனிய குழல் ஓசை என்னைவருத்துகின்றது; இனி, நான் பிழைக்கமாட்டேன்.

வி-கு :—புன்செக்கர் ஈரும்; கள்வம் கண்ணனிற்கொடிதாக ஈரும்; கோவையும் பசும் சாந்தமும் ஈரும்; அந்தச் சாந்தைக் காட்டிலும், அது மணந்து இன்னருள் ஆய்ச்சியர்க்கே பஞ்சமம் வைத்து ஊதும் அத் தீம் குழற்கு உய்யேன் என்கிருள் என்க.

---

1. "முகந்துகொண்டு" என்கையாலே வாசனையின் மிகுதி சொல்லுகிறது. இதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'முகப்பார் தாழ்வே ஆயிற்று' என்று தொடங்கி.

2. "எறியும்" என்றதற்குக் கருத்து அருளிச்செய்கிறார் 'இவளுடைய' என்று தொடங்கி. "முகந்துகொண்டு எறியும்" என்பதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'அம்பை' என்று தொடங்கி.

ஈடு:—எட்டாம்பாட்டு. [1]மேலே தனித் தனியாகவும் திரண்டும் வந்து பாதகமான பொருள்கள் ஒன்றற்கு ஒன்று முற்கோலி நலியாநின்றன என்கிருள்.

பொங்கு இள வாடை புதுமணம் முகந்துகொண்டு எறியுமாலோ - பெண்கொலை என்றவாறே கிளர்ந்து இளகிப் பதிக்கிற வாடைக் காற்றானது புது மணத்தை மொண்டு கொண்டு எறியாநின்றது. புன் செக்கர் ஆலோ - [2] செக்கர்வானமும் சென்று மறையும் அளவாயிற்று; என்றது, மேல் வருகிற காலத்தினுடைய தண்மையைப் பார்த்தவாறே, பகலைப் போன்று மாலைப்பொழுதும் தேட்டமாய்வந்துவிழுந்தது. அது மணந்து அகன்ற நம் கண்ணன் கள்வம் கண்ணனில் கொடிது- [3]பேச்சுக்கு நிலம் அல்லாதபடி ஆயிற்றுக் கலந்தது. [4] சோக விஷயமாக இருபத்து நாலாயிரம் கிரந்தம் சொன்னவன் கலவி விஷயமாக ஒன்றும் சொல்லிற்றிலன் அன்றே; பேச்சுக்கு நிலம் அல்லாமையாலே; [5]"சோகவேகத்தால் கூறியது சுலோக இலக்கணங்களோடு கூடியதாயிற்று" என்கிறபடியே, சோக விஷயமாகவே அன்றே சொல்லிற்று. [6] அப்படிக் கலந்து

---

1. பின் இரண்டு அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிருர். "வண் பசும் சாந்தினில் பஞ்சமம் வைத்து" என்றதனைத் திருவுள்ளம் பற்றி 'ஒன்றற்கொன்று முற்கோலி நலியாநின்றன' என்கிருர்.

2. இத் திருப்பதிகத்தில் ஆரும் பாசுரத்தில் "பகல் அடு மாலையும் நெஞ்சும் காணேன்" என்றதற்கு அருளிச்செய்த ஸ்ரீ ஆளவந்தாருடைய நிர்வாகத்தைப் பின்பற்றி, "புன் செக்கர் ஆலோ" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிருர் 'செக்கர்வானமும்' என்று தொடங்கி. எம்பெருமானுர் நிர்வாஹத்தில்,கொடிய செக்கர் வானமும் வாராநின்றது என்றபடி. "புன்மை" ஈண்டுக் கொடுமையின் மேற்று.

3. இன்ன படி என்று கூருமல் "அது" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிருர் 'பேச்சுக்கு' என்று தொடங்கி.

4. பேச்சுக்கு நிலம் அல்லாதபடியைக் காட்டுகிருர் 'சோகவிஷயமாக' என்று தொடங்கி. ஒரு கிரந்தமாவது, முப்பத்திரண்டெழுத்துக்கள் கொண்டது. எழுத்துக்களை எண்ணுங்கால் ஒற்றுக்களை நீக்கிக் கணக்கிடல்வேண்டும். 'சொல்லிற்றிலன்' என்றது, ஸ்ரீ வால்மீகி பகவானை.

5. "ராமஸ்து ஸீதயா ஸார்த்தம்" என்பது போன்றவைகளால் புணர்ச்சி சொல்லப்படவில்லையோ? எனின், 'சோகவேகத்தால்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர். என்றது, தொடக்கத்தின் பிராதாந்யத்தாலே சோகவிஷயம் என்றபடி.

"ஸஃ அநுவ்யாஹரணத் பூயஃ ஶோகஃ ஶ்லோகத்வம் ஆகதஃ"

என்பது, ஸ்ரீராமா. பால: 2 : 40.

6. சொற்களுக்குப் பொருள் அருளிச்செய்கிருர் 'அப்படிக் கலந்து' என்று தொடங்கி.

அகன்ற நம் கண்ணபிரானுடைய கலக்கிறபோதைத் தாழ்ந்த பேச்சுக்களும் செயல்களும் அவன் வருத்துவதைக் காட்டிலும் வருத்தாநின்றன. [1]கலக்கிறபோது நமக்கு உரிமைப்பட்டவன் என்னும்படி இருந்த கிருஷ்ணனுடைய அக்காலத்துச் செயல்கள், அவனைக்காட்டிலும் வருத்தாநின்றன ஆதலின் 'கண்ணனில் கொடிது' என்கிறாள். என்றது, [2] இச்செயல்களைக் காட்டிலும் இன்னமும் அவன் தானே நல்லன் என்றபடி.

இனி அதனில் உம்பர் - பின்னையும் அதற்குமேலே. மது மணம் மல்லிகை மந்தக்கோவை வண்பசும் சாந்து - மதுவையும் மணத்தையுமுடைத்தான மல்லிகையாலே செறியத் தொடுத்த மாலை, அழகிய பசும் சாந்து, இவையும் நலியாநின்றன. அதற்கு மேலே, பஞ்சமம் வைத்து - பஞ்சமமாகிற பண்ணையும் கூட்டிக் கொண்டு குழல் ஓசை துன்புறுத்துகின்றது என்னுதல்; இவற்றிலே பஞ்சமம் என்கிற பண்ணையும் கூட்டிக்கொண்டு என்னுதல். அது மணந்து - அப்படியே கலப்பதற்காக என்னுதல். அன்றிக்கே, அது மணந்த என்றுகொண்டு அப்படிக் கலந்த ஆயர் மகளிருக்காக என்னுதல். இன் அருள் ஆய்ச்சியர்க்கே ஊதும் அத் தீம் குழற்கு - தன் திரு அருளுக்கு இலக்கான ஆயர்பெண்களுக்கே. காவல் காத்துக் கிடக்கிறவர்களைத் தொடை குத்தி உறங்கச் செய்து, ஒரு பருவத்திற் பெண்களை மயிரைப்பற்றி இழுக்குமாயிற்று இக் குழல் ஓசை; ஆதலின், 'அருள் ஆய்ச்சியர்க்கே ஊதும்' என்கிறாள். இன்னார்க்குத் தொடுத்த அம்பு என்னுமாறு போலே. குழற்கே நான் உய்யேன் - துன்புறுத்தும் [3] மற்றைப் பொருள்கட்குப் பிழைத்திருந்தேனாகிலும், இக் குழல் ஓசைக்கு நான் பிழைக்கமாட்டேன். [4]அவை எல்லாம் ஒருபடியும் இது ஒருபடியுமாயிற்று நலிகிறபடி. (8)

---

1. "நம் கண்ணன் கள்வம்" என்றதனையும் அநுவதித்துக் கொண்டு "கண்ணனில் கொடிது" என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'கலக்கிறபோது' என்று தொடங்கி.

2. மேலே கூறியவற்றால் போதரும் கருத்தினை அருளிச்செய்கிறார் 'இச்செயல்களைக் காட்டிலும்' என்று தொடங்கி.

3. "குழற்கே" என்ற ஏகாரத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'மற்றைப் பொருள்கட்கு' என்று தொடங்கி.

4. குழலுக்கு ஏற்றம் யாது? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அவையெல்லாம்' என்று தொடங்கி.

979.

ஊதும் அத் தீம் குழற்கே உய்யேன் நான்
அதுமொழிந்து இடைஇடைத் தன்செய்கோலம்
தூதுசெய் கண்கள்கொண்டு ஒன்று பேசித்
தூமொழி இசைகள் கொண்டு ஒன்று நோக்கிப்
பேதுறு முகம் செய்து நொந்து நொந்து
பேதை நெஞ்சு அறவுஅறப் பாடும் பாட்டை
யாதும் ஒன்று அறிகிலம்; அம்ம! அம்ம!
மாலையும் வந்தது மாயன் வாரான்.

பொ-ரை:—இடை இடையே தன் எண்ணங்களை வெளிப்படுத்துகின்ற சொற்களை வைத்து ஊதுகின்ற அந்த இனிய குழல் ஓசைக்கே நான் பிழையேன்; தனக்குத் தானே செய்யப்பட்ட அலங்காரத்தையுடைய தூது செல்கின்ற கண்களைக்கொண்டு தன் எண்ணத்தை வெளியிட்டு, அழகிய சொற்களோடுகூடின இசையாலே, கண்களாலே நோக்கி ஈடுபடுத்துமாறுபோலே ஈடுபடுத்தி, தன் ஈடுபாடு தன் முகத்திலே தோன்றும்படி வேறுபாடுற்ற முகத்தைக் காட்டி, பெண்கள் என்படுகிறார்களோ என்று அதற்கு மிகவும் நொந்து, பெண்களினுடைய ஊடல் அறும்படியாகப் பாடுகிற பாட்டுத் துன்புறுத்துதலைச் சிறிதும் அறியகில்லோம்; அந்தோ! மாலைப் பொழுதும் வந்தது; கண்ணபிரான் வந்திலன்; என்செய்வேன்!

வி - கு:—இடை இடை அது மொழிந்து ஊதும் அத் தீம் குழல் என மாற்றுக. பேதை - பெண்கள். அன்றிக்கே, நெஞ்சுக்கு அடையாக்கி அறியாமையுடைய மனம் என்றலும் ஒன்று.

ஈடு:—ஒன்பதாம்பாட்டு.[1] பண்டே ஆயர் பெண்கள் நடுவே இவன் குழல் ஊதுகிறபோது நடு நடுவே தன் ஆற்றாமையாலே சில வார்த்தைகளைப் பேசிக்கொண்டும் சில செய்கைகளைச் செய்து கொண்டும் பாடும் பாட்டை நினைத்து ஒன்றும் தரிக்க மாட்டுகின்றிலேன் என்கிறாள்.

ஊதும் அத் தீம் குழற்கே நான் உய்யேன் -[2] "மேலே கூறியவை மிகை" என்னும்படி குழல் இசையே துன்புறுத்து

1. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச் செய்கிறார்.

2. "உய்யேன் நான்" என்னுமளவும் அநுவாதமாக, பாவம் அருளிச் செய்கிறார் 'மேலே கூறியவை' என்று தொடங்கி.

கிறபடி. இடை இடை அது மொழிந்து - [1] "பிரிந்தேன், ஆற்றேன்" என்றாற்போலே சொல்லுகிற இழிசொற்களை இடை இடையே சொல்லி ஆயிற்றுப் பாடுவது. [2] தாழ்ந்த செயலையும் சொற்களையும் தன் வாயாலே சொல்லமாட்டாமையாலே 'அது' என்கிறாள். [3] **எம்பார்** இவ்விடத்தே வந்தவாறே, "மோருள்ள தனையும் சோறேயோ? தேசிகரும் கூடப் பாசுரம் இட்டுச் சொல்லமாட்டாதே 'அது' என்னுநிற்க மத்யஸ்த்தரான நாம் இதற்கு என்ன பாசுரம் இட்டுச் சொல்லுவது!" என்று அருளிச்செய்தாராம். அன்றிக்கே, '**அது ஒழிந்து**' என்று பாடமானபோது அது தவிர்ந்து என்னுதல். அதாவது, நடுநடுவே தாழ்ந்த சொற்களைச் சொல்லிப் பாடுகிற பாட்டைவிட்டு என்றபடி. தன் கோலம் செய் தூதுசெய் கண்கள் கொண்டு ஒன்று பேசி - தனக்குத் தானே ஆபரணமாய்த் [4] தன் கருத்தினை அவர்களுக்கு அறிவிக்கவல்ல திருக்கண்கள். என்றது, மனத்திலே உள்ள மறத்தாலே "கிட்டக் கடவோம் அல்லோம்" என்று இருக்கிற பெண்களுடைய கால்களைச் சென்று பிடியாநிற்கும் கண்கள் என்றபடி. [5] **நம்பி மூத்தபிரான்** செய்வுற்றை

1. "அது" என்ற சுட்டின் பொருளை விளக்குகிறார் 'பிரிந்தேன்' என்று தொடங்கி. 'இடை இடையே சொல்லி ஆயிற்று' என்றது, குழல் ஊதாநிற்க நடுவே நடுவே அக்தக் குழலிலே இட்டுச் சொல்லுதலைக் குறித்தபடி.

2. இன்னது என்னாமல் "அது" என்று சுட்டுகிறது என்? என்ன, 'தாழ்ந்த' என்றுதொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். "அது" என்பது, விடர்கள் பேசும் வார்த்தைகளைக் குறிக்கிறது.

3. சொல்லப் போகாமைக்குச் சம்வாதம் காட்டுகிறார் 'எம்பார்' என்று தொடங்கி. 'மோருள்ளதனையும் சோறேயோ' என்றதன் விவரணத்தைத் "தீர்ப்பாரை" என்ற திருவாய்மொழியின் முன்னுரையிற் காண்க.

4. "தூதுசெய் கண்கள்" என்றதற்குப் பொருள், 'தன் கருத்தினை' என்று தொடங்கும் வாக்கியம். அதனை விவரணம் செய்கிறார் 'மனத்திலே' என்று தொடங்கி.

5. நம்பி மூத்தபிரான்=நம்பிக்கு மூத்தபிரான்; பலராமன். நம்பி-ஸ்ரீகிருஷ்ணன். 'நீர் பொருகின்ற கரையில் நிற்கும் ஒரு பூங்குழையையுடைய நம்பி மூத்தபிரானைப் போலப் பூங்கொத்துக்கள் பொருந்தின வெண்கடம்பும்' என்பது நச்சினார்க்கினியர் உரை. கலித்தொகை, 26. செய். 'வாலியோன் என்றது, நம்பி மூத்தபிரானை' என்பர் புறநானூற்று உரையாசிரியர். செய். 56. பலதேவனை நம்பி மூத்தபிரான் என்பது வைணவப் பெருமக்கள் மரபு.

ஃ "கிருஷ்ணனாலே கவரப்பட்ட மனத்தையுடைய ஆயர் பெண்கள், நல்வார்த்தைகளால் இனியவைகளாயும் அன்பினை அடியாகக் கொண்டவைகளாயும் செருக்கு அற்றவைகளாயும் உள்ள தூய வாக்கியங்களைப் பேசிய பலராமரால் மனம் தெளிந்தார்கள்" என்ற பொருள் அமைந்த

ஸத்தேஸை: ஸாம மதுரை: ப்ரேமகர்ப்பை: அகர்விதை:
ராமேண ஆஶ்வாஸிதா கோப்ய: ஹரிணா ஹ்ருதசேதஸ:.

என்ற சுலோகத்தை (ஸ்ரீ விஷ்ணுபுரா. 5. 24: 20.) நினைத்தல் தகும் இங்கு.

அடையச் செய்யாநிற்குமாயிற்று.[1] குழல் ஊதுகையிலே மூண்டு மீண்டு வார்த்தை சொல்ல ஒண்ணுமையாலே வாக்கின் செயலை எறட்டுக் கொள்ளாநிற்கு மாயிற்று. [2] பேச்சாலே பிறக்கும் தெளிவு நோக்காலே பிறக்கையைத் தெரிவித்தபடி.

தூ மொழி இசைகள் கொண்டு ஒன்று நோக்கி-[3] அழகிய பேச்சுக்களோடே கூடின இசைகளாலே, கண்களாலே நோக்கி ஈடுபடுத்துமாறுபோலே ஈடுபடுத்தி. [4] இசையோடே கூடச் செய்தேயும் இயலும் தெரிந்திருக்கை. அன்றிக்கே, [5] வாக்கின் பேச்சும் கண்களின் நோக்கும் மாருடின படி என்னுதல். பேது உறு முகம்செய்து நொந்துநொந்து - [6] கேட்கிறவர்களிலும் தன் செவி அணித்து ஆகையாலே, "நாம் வருந்துகிறபடி கண்டால் பெண்கள் என்படுகிருர்களோ?" என்று மிகவும் நொந்து. என்றது, "வன்னெஞ்சரான நம்மை வருத்தினபடி கண்டால் பெண்கள் என்படுகிருர்களோ?" என்று மிகவும் நோவுபட்டான் என்பதனைத் தெரிவித்தபடி. [7] பேதை நெஞ்சு அறவு அறப் பாடும் பாட்டை - பெண்களினுடைய நெஞ்சு ஊடலை மறந்து வந்து பொருந்தும் படி பாடுகிற பாட்டை. ஆதும் ஒன்று அறிகிலம் - அது துன்

---

1. வாயாலே பேச ஒண்ணுதோ? கண்கள் கொண்டு பேசுகைக்குக் காரணம் யாது? என்ன, 'குழல் ஊதுகையிலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர்.

2. ஆயின், கண்ணுலே பேசும்படி யாங்ஙனம்? என்ன, 'பேச்சாலே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிருர். இங்கே,

> நினைந்த முனி பகர்ந்தவெலாம் நெறிஉன்னி அறிவனும் தன்
> புனைந்த சடை முடிதுளக்கிப் போரேற்றின் முகம் பார்த்தான்
> வனைந்தனைய திருமேனி வள்ளலும் அம் மாதவத்தோன்
> நினைந்தவெலாம் நினைந்து அந்த நெடும் சிலையை நோக்கினுன்.

என்ற செய்யுள் கருதல் தகும். கம்ப. பால. கார்முகம். 25.

3. "இசைகள் கொண்டு-நோக்கி" என்றதனை விளக்குகிருர் 'அழகிய பேச்சுக்களோடே' என்று தொடங்கி.

4. "தூ" என்ற அடைமொழிக்கு, பாவம் அருளிச்செய்கிருர் 'இசையோடே' என்று தொடங்கி.

5. இறைவன் சர்வசக்தன் ஆகையாலே மாருடுதல் கூடும் என்றபடி.

6 'வேறுபாட்டை யுற்ற (பேதுறு) முகத்தனுய்' என்கையாலே தான் வருந்தியமையும், "நொந்து நொந்து" என்கையாலே பெண்களுக்காகத் தான் நோவுபட்டமையும் சொல்லுகிறது என்றபடி. இதனையே விவரணம் செய்கிருர் 'என்றது' என்று தொடங்கி.

7. நெஞ்சு அறவு - நெஞ்சு அற்று இருத்தல்; பிரணயரோஷம். அற - அது அறும்படி என்பது பொருள்.

புறத்துகிறபடி எனக்கு ஒன்றும் தெரிகிறது இல்லை. அம்ம அம்ம - பூசல் பூசல். மாலையும் வந்தது - மிகவும் துன்புறும்படி மாலைப் பொழுதும் வந்தது. என்றது,[1] இனி இருந்து வருந்த வேண்டாதபடி இது முடித்தே விடும்போலே இருந்தது என்றபடி.[2] மாயன் வாரான் - தன்னைப் பிரிந்தார் நாணமுறும்படி தானே இழவாளனாய் வந்து காலைப்பிடிக்கும் ஆச்சரியத்தை யுடையவன் வருகிறிலன். (9)

980.

மாலையும் வந்தது மாயன் வாரான்
[3]மா மணி புலம்ப வல் ஏறு அணைந்த
கோலம் நல் நாகுகள் உகளும்ஆலோ!
கொடியன குழல்களும் குழறும்ஆலோ!
வால்ஒளி வளர்முல்லைக் கருமுகைகள்
மல்லிகை அலம்பி வண்டு ஆலும்ஆலோ!
வேலையும் விசும்பில் விண்டு அலறும்ஆலோ!
என்சொல்லி உய்வன் இங்கு அவனை விட்டே?

பொ - ரை :—மாலைப் பொழுதும் வந்தது, மாயனாகிய கண்ணபிரான் வருகின்றிலன்; கழுத்திலே கட்டிய பெரிய மணிகள் ஒலிக்கும்படியாக வலிய இடபங்களைச் சேர்ந்த அழகிய நல்ல பசுக்கள் களித்துக் குதித்து ஓடாநின்றன; கொடுமையைச் செய்வனவான வேய்ங்குழல்களும் இசையைச் செய்கின்றன; வெண்மை பொருந்திய ஒளியையுடைய வளர்கின்ற முல்லை, கருமுகை, மல்லிகை இவற்றிலே வண்டுகள் மூழ்கிக் குடைந்து ஒலிக்கின்றன; கடலும் ஆகாசத்தை அளாவி வாய்விட்டு அலறுகின்றது; அந்தோ! அவனைப் பிரிந்த நான் எதனைச் சொல்லிப் பிழைப்பேன்?

வி - கு :—முல்லை, கருமுகை, மல்லிகை என்பன, மலர் விசேடங்கள். விண்டு - வாய்விட்டு.

---

1. "மாலையும் வந்தது" என்பதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இனி' என்று தொடங்கி. 'மாலையும்' என்ற உம்மை கொடுமையிலே நோக்கு.

2. மாயன்-ஆச்சரியத்தையுடையவன்; அந்த ஆச்சரியத்தை விவரணம் செய்கிறார் 'தன்னை' என்று தொடங்கி.

3. "எல்லூர்ச் சேர்தரும் ஏறுடை இனத்துப்
புல்லார் நல்லான் பூண்மணி" என்பது, குறுந்தொகை, 275.
"தேய் பயில் இறும்பின் கோவலர் யாத்த
ஆ பூண் தெண்மணி இயம்பும்
உதுக்காண் தோன்றும் எம் சிறுநல்லூரே." நற்றிணை, 265.
"கறங்குமணி துவைக்கும் ஏறுடைப் பெருநிரை" மலைபடுகடாம், 573.

ஈடு:—பத்தாம் பாட்டு. [1] வருவதாகச் சொன்ன காலம் வந்திருக்க அவன் வருகின்றிலன்; துன்புறுத்துகின்ற பொருள்களின் நடுவில் அவனை ஒழியத் தரிப்பது எங்கே என்கிறாள்.

மாலையும் வந்தது மாயன் வாரான் - [2] மாலையையும் மாலையும் கூடப் பிணைத்துவிட்டாள் போலே காணும். வருவதாகக் குறித்துப் போன காலம் வந்தது, அவன் தான் வருகிறிலன், [3] அவனைக் காணவே, துன்புறுத்தும் பொருள்களெல்லாம் இன்புறுத்தும் பொருள்களாகத் தோற்றும் அன்றோ. மா மணி புலம்ப - பெரிய மணி ஒலிக்க. வல் ஏறு அணைந்த கோலம் நல் நாகுகள் உகளும் ஆலோ - விரும்பிய பொருள் கைபுகுந்தால் அல்லது மீளாத வலிய ஏறுகளோடே கலந்த அழகிய சிநேகத்தையுடைய நாகுகள், அந்தச் சேர்க்கையால் உண்டான உவகையாலே களித்துக் குதித்து ஓடாநின்றன. இதனால், நான் சோகத்தோடே இருந்தேன், இவை உவகைக்குப் போக்குவிடாநின்றன என்கிறாள் என்றபடி. நாகு கைபுகுந்தால் அல்லது மீளாத ஏறுகள் ஆதலின், 'வல் ஏறு' என்கிறாள். பின்னை, அவன் செய்தது என்? என்னில், அவன் இன்னமும் வரவுக்கு முயற்சி செய்யாநின்றான் என்கிறது மேல்:

கொடியன குழல்களும் குழறும் ஆலோ - [4] தூரத்திலே சென்ற பசுக்களை ஓரிடத்திலே திரட்டுகைக்காக அங்கும் இங்கும் சிதறின ஆயர்கள் அடையத் திரண்டு எல்லாரும் ஒருசேரக் குழல்களை வாங்கி மாலை நேரத்திலே தங்கள் வரவை ஊர் அறியும்படியாகவும் பெண்கள் நெஞ்சில் மறம் அறும்படியாகவும் [5] எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி ஒன்றாக விரவி எழும்படி ஊதுவது ஒரு குழல் ஓசை உண்டு; அது

---

1. பாசுரம் முழுதினையும் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "மாலையும் - மாயன்" என்ற பதச்சேர்த்திக்கு ரசோக்தியாகக் கருத்து அருளிச்செய்கிறார் 'மாலையையும்' என்று தொடங்கி. பதங்கட்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'வருவதாக' என்று தொடங்கி.

3. அவன் வந்தால் பெறுகிற பேறு யாது? என்ன, 'அவனைக் காணவே' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. "குழல்கள்" என்ற பன்மைக்கு விளக்கம் அருளிச்செய்கிறார் 'தூரத்திலே' என்று தொடங்கி.

5. "குழறும்" என்ற சொல்லிற்கு விளக்கம் தருகிறார் 'எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி' என்று,

துன்புறுத்தாநின்றது. [1]வால் ஒளி வளர் முல்லைக் கருமுகைகள் மல்லிகை வண்டு அலம்பி ஆலும் ஆலோ - மிக்க ஒளியை யுடையதாய்க் கண்ட இடம் எங்கும் தானேயாம்படி படர்ந்த முல்லை, அப்படி இருக்கிற கருமுகை, மல்லிகை, இவற்றிலே புக்குத் தேனைக் குடித்து ஒலிக்கிற வண்டுகளானவை களித்து விளையாடாநின்றன. ஆக, [2] திரியக்குக்களானவை, கலவியால் வந்த உவகைக்குப் போக்குவிட்டுக் களிப்பனவும், குதித்து ஆடாநின்றனவும் ஆகாநின்றன என்றபடி. வேலையும் விசும்பில் விண்டு அலறும் ஆலோ - கடலும், ஆகாயத்திலே நின்று கூப்பிடாநின்றது. என்றது, புணர்ச்சிக்காலத்திலே பிரிந்து விடுவானோ? என்ற எண்ணம் பிறந்து கூப்பிடுவதற்குப் போலியாக இராநின்றது என்றபடி. இங்கு அவனை விட்டு என் சொல்லி உய்வன் - துன்புறுத்தும் பொருள்களின் நடுவே, அவனை ஒழிய எதனைச் சொல்லிப் பிழைப்பது? இவை மேன் மேலென நலியாநின்றன: அவனோ வந்திலன், நான் பிழைக்க என்று ஒன்று உண்டோ? முடிந்தேன் என்றபடி. (10)

981.

அவனை விட்டு அகன்று உயிர் ஆற்றகில்லா
அணி இழை ஆய்ச்சியர் மாலைப் பூசல்
அவனை விட்டு அகல்வதற்கே இரங்கி
அணி குருகூர்ச் சடகோபன் மாறன்
அவனி உண்டு உமிழ்ந்தவன்மேல் உரைத்த
ஆயிரத்துள் இவை பத்தும் கொண்டு
அவனியுள் அலற்றி நின்று உய்ம்மின் தொண்டீர்
அச் சொன்ன மாலை நண்ணித் தொழுதே.

பொ - ரை :—கண்ணபிரானை விட்டுப் பிரிந்து உயிர் தரிக்கமாட்டாத அழகிய ஆபரணங்கள் அணிந்த ஆயர்பெண்கள் மாலைப்பொழுதிலே பட்ட துன்பத்தினை, அக் கண்ணபிரானை விட்டுப் பிரிவதற்கு இரங்கி, அழகிய திருக்குருகூரில் அவதரித்த மாறனாகிய ஸ்ரீ சடகோப

1. "வால் ஒளி வளர்" என்பதனை ஏனையவற்றிற்கும் அடையாகக் கூட்டிக் கொள்க.

2. 'திரியக்குக்கள்' என்றது, மேலே கூறிய பசக்களையும், ஈண்டுக் கூறும் வண்டுகளையும். 'களிப்பனவும்' என்றது, பசக்களை. 'குதித்து ஆடாநின்றனவும்' என்றது, வண்டுகளை.

ராலே, பூமியை உண்டு உமிழ்ந்த அப் பெருமான்மேலே அருளிச் செய்யப்பட்ட ஆயிரம் பாசுரங்களுள் இப் பத்துப் பாசுரங்களையும் கொண்டு, அடியீர்களே! இந்த உலகத்திலே உகந்து சொல்லி, அத்தகைய காதலை விளைக்க வல்லவன் என்று சொன்ன அக் கண்ணபிரானைக் கிட்டித் தொழுது உய்யுங்கோள் என்கிறார்.

வி - கு :—தொண்டீர்! இவை பத்தும் கொண்டு அலற்றி நின்று அச் சொன்ன மாலை நண்ணித் தொழுது உய்ம்மின் என்க.

ஈடு :—முடிவில், [1] அவன் பக்கல் ஆசையுடையார், இத் திருவாய்மொழியைச் சொல்லி அவனைப் பெறுங்கோள் என்கிறார்.

அவனை விட்டு அகன்று உயிர் ஆற்றகில்லா அணி இழை ஆய்ச்சியர்-அவனைப் பிரிந்து தங்களுடைய உயிர்களைக்கொண்டு தரிக்கமாட்டாதே, [2] அவனுடைய வரவிற்கு உறுப்பாக ஒப்பிக்கப்பட்ட ஆபரணங்களையுடைய ஆயர்பெண்கள். [3] "கொங்கை மேல் குங்குமத்தின் குழம்பு அழியப் புகுந்து" என்கிறபடியே, திருவாய்ப்பாடியில் ஐந்துலக்ஷம் குடியில் பெண்கள் அவன் வரவுக்கு உடலாகத் தங்களை அலங்கரித்திருக்க, வருங்காலத்தில் அவன் வரக் காணுமையாலே, கிருஷ்ணனைப் பிரிந்த விரகத்தாலே ஒரு மாலைப் பொழுதில் கூப்பிட்ட கூப்பீடு ஆயிற்று. அவனைவிட்டு அகல்வதற்கே இரங்கி அணிகுருகூர்ச்சடகோபன் மாறன்-அவர்கள் எல்லாரும் பட்ட துன்பத்தை இவர் ஒருவரும் பட்டார் என்கை. அவனி உண்டு உமிழ்ந்தவன்மேல் உரைத்த-பிரளய ஆபத்திலே பாதுகாத்து அழிந்தவற்றைஅடைய உண்டாக்கின சர்வேஸ்வரன் திருவடிகளிலே ஆயிற்றுச்சொல்லிற்று? 'தொண்டீர் அணி குருகூர்ச் சடகோபன் மாறன், அவனி உண்டு உமிழ்ந்தவன் மேல் உரைத்த ஆயிரத்துள், அவனைவிட்டு அகல்வதற்கே இரங்கி, அவனைவிட்டு அகன்று

1. "தொண்டீர்! இவை பத்தும் கொண்டு உய்ம்மின்" என்றதனைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. அவனைவிட்டு அகன்றிருப்பவர்கள், அணிந்த இழையினையுடையவர்களாய் இருப்பதற்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'அவனுடைய' என்று தொடங்கி.

3. 'அவனுடைய வரவிற்கு உறுப்பாக ஒப்பிக்கப்பட்ட ஆபரணங்களையுடைய ஆயர்பெண்கள்' என்று மேலே அருளிச்செய்த வாக்கியத்தை விவரணம் செய்யத் திருவுள்ளம்பற்றி "மாலைப்பூசல்" என்றதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'கொங்கைமேல்' என்று தொடங்கி. 'கொங்கை மேல்' என்பது, நாய்ச்சியார் திருமொழி.

உயிர் ஆற்றகில்லா அணி இழை ஆய்ச்சியர் மாலைப் பூசல், சொன்ன இப்பத்தும் கொண்டு, அம்மாலை நண்ணித்தொழுது, அவனியுள் அலற்றி உய்ம்மின்' என்று கூட்டுக. [1] இப்போது இது சொல்லிற்று விரஹ பிரளயத்தில் நின்றும் தம்மை எடுக்க வேண்டும் என்கைக்காக.

[2] அச் சொன்ன மாலை நண்ணித் தொழுது, அவனியுள் அலற்றி நின்று உய்ம்மின் தொண்டீர் - அப்படிப்பட்ட காதலை விளைக்கவல்லவனைக்கிட்டி, அவனைத் தொழுது, அவன் பக்கல் ஆசையுடையார், பூமியிலே நின்று அடைவுகெடக் கூப்பிட்டு உய்ந்து போகப் பாருங்கோள். [3] இப்பாசுரத்தைக் கற்பார்க்கு என்னைப் போன்று கூப்பிடவேண்டா; "என் சொல்லி உய்வன்" என்று ஆசைப்பட்ட பேறு பெறுகையில் கண்ணழிவில்லை. (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

மல்லடிமை செய்யுநாள் மால்தன்னைக் கேட்க அவன்
சொல்லுமளவும் பற்றாத் தொல்நலத்தால்—செல்கின்ற
ஆற்றாமை பேசி அலமந்த மாறன் அருள்
மாற்றாகப் போகும் என்தன் மால். (89)

—:o:—

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

---

1. பிரளய ஆபத்திலே ரக்ஷித்தவரைக் கூறுகைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'இப்போது' என்று தொடங்கி. 'இது' என்றது, அவனி உண்டு உமிழ்ந்தவனை.

2. "அச் சொன்ன" என்பதில், அகரம் மாலுக்கு அடைமொழி. இப் பொருள் தன்னையே 'அப்படிப்பட்ட காதலை விளைக்க வல்லவனை' என்று வியாக்கியானத்தில் அருளிச்செய்கிறார்.

3. இப் பாசுரத்தாற் போதரும் பொருளினை அருளிச்செய்கிறார் 'இப் பாசுரத்தை' என்று தொடங்கி,

பத்தாந் திருவாய்மொழி "மாலை நண்ணி"

முன்னுரை

[1] "அறுக்கும் வினையாயின" என்ற திருவாய்மொழியிலே அவனைப் பெறவேண்டும் என்ற எண்ணமேயாய்ச் சென்றது; எண்ணின சமயத்திலே விரும்பியபடி கிடையாமையாலே மிக்க துன்பத்தை அடைந்தபடி சொல்லிற்று, "மல்லிகை கமழ் தென்றல்" என்ற திருவாய்மொழியில். [2] அது தான் இரவில் விசனமாய் நோவுபட்டபடி அன்றோ. இப்படி எண்ணினவாறு பெறாமையாலே நோவுபடுகிற இவருடைய துன்பத்தினை நினைத்து, சர்வேஸ்வரன் "நீரோ இப்படி எண்ணுவீரும் அது கிடையாமல் துன்பப்படுவீரும்? உம்மைப் பெறவேண்டும் என்று எண்ணுவோமும் நாம் அன்றோ? உம்மைப் பெறாமையால் இழவு பட்டோமும் நாம் அன்றோ? உமக்கு ஒரு குறை உண்டோ? [3] கலங்காப் பெருநகரம் கலவிருக்கையாக இருக்க அவ்விடத்தை விட்டுத் திருக் கண்ணபுரத்திலே வந்து நாம் எழுந்தருளியிருப்பதும் உமக்காக அன்றோ? நீர் விரும்பியதை உம்முடைய சரீரத்தின் முடிவிலே செய்யக்கடவோம்" என்று சமாதானம் செய்ய, சமாதானத்தை அடைந்தவராய், இவரும் உவகையர் ஆகிறார்; [4] அவன் "ஒன்று செய்யக்கடவோம்" என்றால் அப்போதே பெற்றதாக நினைத்து உவகையர் ஆகலாம்படி அன்றோ அவன்படி இருப்பது.

---

1. மேலே போந்த "அறுக்கும் வினையாயின" என்ற திருவாய்மொழி தொடங்கி இத் திருவாய்மொழிக்கு இயைபு அருளிச்செய்கிறார்.

2. பட்ட துன்பத்தினை அருளிச்செய்கிறார் 'அதுதான்' என்று தொடங்கி. 'நோவு பட்டபடி அன்றோ' என்றது, எல்லை இல்லாத துன்பமே அன்றோ என்றபடி.

3. இவரைப் பெறவேண்டும் என்ற எண்ணமும், பெறாமையால் வந்த இழவும் தன்னது என்னுமதற்குக் காரணம் காட்டுகிறார் 'கலங்காப் பெருநகரம்' என்று தொடங்கி. கலங்காப் பெருநகரம் - பரம பதம். 'சரீரத்தின் முடிவிலே செய்யக்கடவோம்' என்றது, "மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்" என்று இத் திருவாய்மொழியில் வருகின்ற பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி.

4. அவன் கூறியதனைக் கொண்டு உவகையர் ஆகக் கூடுமோ? என்ன, 'அவன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

[1] இப்படி உவகையராய், "அவன்படி இதுவானபின்பு, சர்வேஶ்வரன் [2] எல்லாராலும் பற்றப்படுமவனைக்கொண்டு திருக்கண்ணபுரத்திலே அணித்தாக எழுந்தருளியிருக்கிறான்: எல்லாரும் ஒருசேர அவனை அடையுங்கோள்; அடையுமிடத்தில் அவன் திருவடிகளிலே பக்தியைப் பண்ணுங்கோள்; பக்திக்குச் சாதனம் இல்லாதார் பிரபத்தியைச்செய்யுங்கோள்; அதற்குத் தகுதியான மனஉறுதி இல்லாதார் [3] 'திருக்கண்ணபுரம்' என்றவார்த்தையை மாத்திரமாகிலும் சொல்லுங்கோள்; [4] அவ்வளவேகொண்டு அவன் தான் கைவிடான்; ஆனபின்னர், எல்லாரும் ஒருசேர அவனை அடையுங்கோள்" என்று பரோபதேசத்திலே மூளுகிறார். [5] மோகித்துக் கிடந்தாராகில் கிடப்பாரித்தனை போக்கி, உணர்ந்தாராகில் பிறர்க்கு நலம் சொல்லி அல்லது நிற்கமாட்டார்.

[6] "'பிராரப்த கர்மங்களின் முடிவிலே மோக்ஷமாகக் கடவது' என்று அன்றோ வேதாந்தங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றது; 'சரீரத்தின் முடிவிலே நீர் விரும்பியதைச் செய்யக்

1. இப்படி உவகையர் ஆனபின்பு, எல்லாரும் இவ் விஷயத்தை இழந்திருப்பது என்? என்று தம்முடைய பரம கிருபையாலே பகவானை அடைவதற்குரிய சாதன விசேடங்களை அவர்களுக்கு அருளிச்செய்கிறார் என்கிறார் 'இப்படி' என்று தொடங்கி. 'அவன்படி இதுவான பின்பு' என்றது, இப்படிக் குணநிகன் ஆனபின்பு என்றபடி.

2. இத் திருவாய்மொழியில் வருகின்ற "சரணமாகும் தன தாள் அடைந்தார்க்கெல்லாம்" என்ற பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'எல்லாராலும் பற்றப்படுமவனைக் கொண்டு' என்றும், "தொழுது எழுமினோ தொண்டர்" என வருகின்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம்பற்றி 'எல்லாரும் ஒரு சேர அவனை அடையுங்கோள்' என்றும், முதல் நான்கு திருப்பாசுரங்களைத் திருவுள்ளம்பற்றிப் 'பக்தியைப் பண்ணுங்கோள்' என்றும், "சரணமாகும்" என்ற திருப்பாசுரத்தையும் அதற்குமேல் உள்ள திருப்பாசுரங்களையும் திருவுள்ளம்பற்றிப் 'பிரபத்தியைச் செய்யுங்கோள்' என்றும் அருளிச்செய்கிறார்.

3. பத்தாம் பாசுரத்தில் வருகின்ற "திருக்கண்ணபுரம் சொல்ல" என்ற பகுதியைத் திருவுள்ளம்பற்றித் 'திருக்கண்ணபுரம் என்ற வார்த்தையை மாத்திரமாகிலும் சொல்லுங்கோள்' என்று அருளிச்செய்கிறார்.

4. திருக்கண்ணபுரம் என்று சொன்ன மாத்திரத்தில் பலம் உண்டோ? என்ன, 'அவ்வளவே கொண்டு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

5. தம்முடைய அநுபவத்தை விட்டுப் பரோபதேசம் செய்வான் என்? என்ன, 'மோகித்து' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. பிராரப்த கர்மங்களின் முடிவிலே அன்றோ மோக்ஷம்? சரீரத்தின் முடிவிலே மோக்ஷம் சித்திக்குமோ என்கிற சங்கையைப் பரிஹரிப்பதற்குத் திருவுள்ளம்பற்றிப் பூர்வபக்ஷ அநுவாதம் பண்ணுகிறார் 'பிராரப்த கர்மங்

கடவோம்' என்று சர்வேஸ்வரன் சொன்ன இடமும், அதனைக் கேட்டு இவர் உவகையர் ஆன இடமும் பொருந்தாது" என்னில், இத் திருவாய்மொழியிலே, "பக்தியைச் செய்யுங்கோள்" என்றும், "அதுமாட்டாதார் பிரபத்தியைச் செய்யுங்கோள்" என்றும் சொல்லிற்றே அன்றோ. [1] வேதாந்தங்களில் உபாசகனுகிற அதிகாரியை நோக்கிச் சொல்லுகிறது; இங்குப் பிரபந்நனுக்குச் சொல்லுகிறது; [2] "தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே' என்கிற வாக்கியம் அன்றோ இவ் அர்த்தத்தைச் சொல்லுகிறது.

"'இந்த உபநிடத வாக்கியந்தான் சரீரத்தின் முடிவில் மோக்ஷம் என்னுமதனைச் சொல்லுகிறதோ, கர்மங்களின் முடிவில் மோக்ஷம் என்னுமதனைச் சொல்லுகிறதோ?' என்று விசாரித்து, கர்மங்களின் முடிவிலே மோக்ஷம் என்னுமதனைச் சொல்லுகிறது என்று [3] சித்தாந்தப்படுத்தியுள்ளாரே அன்றோ? அதனோடு சரீரத்தின் முடிவிலே மோக்ஷம் என்று இங்குச் சொல்லுவது முரண் ஆகாதோ?" என்னில், நியாயத்தோடுகூடிய வாக்கியமன்றோ பொருளை அறிவிப்பதற்கு உரிய

களின் முடிவிலே' என்று தொடங்கி. பிராரப்த கர்மங்கள் என்றது, பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் அளவின்றி ஈட்டப்பட்டனவாய், இறந்த உடம்புகளான் அநுபவித்தனவும் பிறந்த உடம்பான் முகந்து நின்றனவும் இனி எடுக்கும் உடம்புகளால் அநுபவிக்கக் கடவனவுமாய மூவகைப்பட்ட வினைகளுள், பிறந்த உடம்பான் அநுபவிக்கவேண்டி முகந்துகொள்ளப்பட்டனவற்றை. 'வேதாந்தங்களிலே சொல்லப்பட்டிருக்கின்றது' என்றது, "போகேந த்விதரே க்ஷபயித்வா அத ஸம்பத்யதே - மூவகைப்பட்ட வினைகளின் பயனை அநுபவித்த பின்னரே பகவானை யடைதலாகிற மோக்ஷத்தை அடைகிறான்" என்கிற சூத்திரத்தைத் திருவுள்ளம்பற்றி. 4. 1: 19.

1. 'வேதாந்தங்களிலே பிராரப்த கர்ம பலன்களை அநுபவித்த பின்னரே மோக்ஷம்' என்றது. உபாசகன் பிரபந்நன் என்னும் இருவரில் உபாசகனை அதிகாரியை நோக்கிச் சொல்லுகிறது என்றபடி. 'இங்குப் பிரபந்நனுக்குச் சொல்லுகிறது' என்றது, இத் திருவாய்மொழியில் சரீரத்தின் முடிவிலே மோக்ஷம் என்றது, பிரபந்நனுக்குச் சொல்லுகிறது என்றபடி. ஆகையாலே, முரண் இல்லை என்பது திருவுள்ளம். "உபாய பக்திః ப்ராரப்த வ்யதிரிக்த அக நாஶிநீ, ஸாத்யபக்திః து ஸா ஹந்த்ரீ ப்ராரப்த ஸ்யாபி பூயஸீ-சாதன பக்தி பிராரப்த கர்மங்களைப் போக்காது; மற்றைய கர்மங்களையே போக்கும்; அந்தப் பிரபத்தியோ எனின், பிராரப்த கர்மங்களையும் போக்கும்" என்பது இங்கு அநுசந்தேயம். சாத்ய பக்தி - பிரபத்தி.

2. பிரபந்நனுக்குச் சரீரத்தின் முடிவிலே மோக்ஷம் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'தஸ்ய' என்று தொடங்கி. இந்த உபநிடத வாக்கியத்தின் பொருளை மேலே காண்க.

3. 'சித்தாந்தப்படுத்தியுள்ளாரே அன்றோ' என்றது, ஸ்ரீ பாஷ்யகாரர் உறுதிப்படுத்தியுள்ளாரே அன்றோ என்றபடி.

தாவது, [1] உபாசகனுக்குத் தான் பற்றின உபாயம் முற்றுப் பெற்ற பின்னரே பலிக்க வேண்டுகையாலே அவ்வளவும் நியாயம் நடக்கும். பிரபந்நன், முதலடியிலே, "என்னுடைய எல்லாப் பரங்களுக்கும் நீயே கடவாய்" என்றுகொண்டு சர்வேஸ்வரன் பக்கலிலே பரந்யாசம் செய்தவன் அன்றோ; [2] "இவன் தான் இனிச் செய்கிறது ஒன்று உண்டாய் அது முடிந்தபின்பு பெறவேண்டும்" என்னும் காலதாமதத்திற்குக் காரணமும் இல்லை; இவனாலே பரந்யாசம் பண்ணப்பட்ட சர்வேஸ்வரனுக்கு ஆற்றல் இல்லை அதனாலே அது விளம்பத்திற்குக் காரணமாகின்றது என்று சொல்லுவதற்கும் இன்று. ஆக, இப்படி நியாயங்கள் காட்டினவாறே இவனுக்குச் சரீரத்தின் முடிவிலே பேறு கிடைப்பதற்குத் தட்டு இல்லை அன்றோ.

[3] இனித் தான், "அவள் பகவானைச் சரணம் அடைந்தாள்; அவள் பகவானை அடைந்தாள்" என்கிறபடியே, மாதவி சரணாகதி செய்தாள்; உடனே மோக்ஷத்தைப் பெற்றாளாகச் சொல்லப்பட்டுள்ளதே அன்றோ. [4] முத்கல உபாக்கியானத்தில் வந்த

---

1. அந்த நியாயத்தினை விவரிக்கிறார் 'உபாசகனுக்கு' என்று தொடங்கி. அவ்வளவும் - கர்மங்களை அநுபவித்து முடிகிற வரையிலும். பரந்யாசம் - பாரத்தை வைத்தல்.

2. இவன்தான் பரந்யாசம் பண்ணினால் சரீரத்தின் முடிவிலே பேறு கிடைத்து விடுமோ? என்ன, 'இவன்தான்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'நியாயத்தோடு கூடிய' என்று தொடங்கும் வாக்கியம் முதல், 'சரீரத்தின் முடிவிலே பேறு கிடைப்பதற்குத் தட்டு இல்லை' என்ற வாக்கியம் முடிய உள்ளதற்குக் கருத்து என்? என்னில், உபாசகனுக்கு விளம்பத்திற்குக் காரணம் உண்டாகையாலே பிராரப்த கர்மங்களின் பலன்களை அநுபவிக்கின்றவரையிலும் நடக்கும்; பிரபந்நனுக்கு விளம்பத்திற்குக் காரணம் இல்லாமையாலே இந்தச் சரீரத்தின் முடிவிலேயே மோக்ஷமாகக்கடவது; ஆகையாலே, இந்த உபநிடத வாக்கியம் நியாயத்தோடு கூடியதாய்க்கொண்டு அதிகாரி பேதத்தாலே இரண்டுபொருள்களையும் காட்டக் கடவதாகையாலே ஸ்ரீ பாஷியகாரர் திவ்வியசூக்திக்கு விரோதம் இல்லை என்பது.

3. பிரபந்நனுக்கு இந்தச் சரீரத்தின் முடிவிலேயே மோக்ஷம் என்பதற்குப் பிரமாணம் காட்டி, அநுஷ்டானமும் காட்டுகிறார் 'இனித் தான்' என்று தொடங்கி.

அதாத்ர மாதவீஸாபி தபஸ்தப்த்வா ஸுதுஷ்கரம்
பகவந்தம் ப்ரபந்நா ஸா பகவந்தம் அவாப ஸா.

என்பது, காருட புராணம், ஸ்ரீரங்க மாஹாத்மியம், அத். 3.

4. நமனும் முற்கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க
நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி
அவனது ஊர் அரங்கமென்னாது அயர்த்து வீழ்ந்தளிய மாந்தர்
கவலையுள் படுகின்றார் என்று அதனுக்கே கவல்கின்றேனே.

வாறே " நரகத்திலே கிடந்து துக்கத்தை அநுபவிக்கிறவர்கள் பகவானுடைய திருநாமத்தைக் கேட்ட அளவிலே முக்தர் ஆனார்கள்" என்று சொல்லப்பட்டுள்ளதே அன்றோ. [1]"அவதார ரஹஸ்ய ஞானமுடையவன் இந்தச் சரீரத்தின் முடிவிலே பேறு பெறக்கடவன்" என்றே சொல்லாநின்றதே அன்றோ; "இச் சரீரத்தை விட்டால் மறுபிறவியை அடைகிறான் இல்லை; என்னையே அடைகிறான்" என்றும், "எல்லாப் பாவங்களினின்றும் விடுவிக்கிறேன், துக்கப்படாதே" என்றும் சொல்லாநின்றதே அன்றோ என்றபடி.

நன்று; [2] ஆனால், சரணாகதி செய்த உடனேயே பகவானை அடைதல் வேண்டாவோ? 'இந்த விரோதியைப் போக்கி உன் திருவடிகளைத் தரவேண்டும்' என்றே அன்றோ இவன் விரும்புகிறது. பின்பும், தனக்கு விருப்பம் இல்லாத இச் சரீரத்தோடே இருக்கிற இருப்பு கர்மங்கள் அநுபவித்து முடிவுபெறாமையாலே ஆவதோ, சர்வேஸ்வரன் வைக்க இருக்

என்ற திருமாலைப் பாசுரத்தையும் அதன் வியாக்கியானத்தையும் ஈண்டுக் கருதல் தகும். முத்கல உபாக்கியானம், ஸ்ரீவிஷ்ணுதர்மத்திலே தொண்ணூறாவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது.

1. இந்தச் சரீரத்தின் முடிவிலே மோக்ஷம் என்பதற்குத் "தஸ்ய தாவதேவ" என்ற உபநிடதப் பிரமாணத்தை மேலே காட்டி, பகவத்கீதையினின்றும் இரண்டு பிரமாணங்கள் காட்டுகிறார் 'அவதார ரஹஸ்ய ஞானமுடையவன்' என்று தொடங்கி.

அவதாரரஹஸ்ய ஞானமாவது, சர்வேஸ்வரனுடைய பிறவி கர்மங் காரணமாக அன்று; மக்கட்குத் திருவருள் செய்தற்கேயாம் என்று அறியும் அறிவு. அது எங்ஙனே? என்ன, 'இச் சரீரத்தை' என்று தொடங்கியும், 'எல்லாப் பாவங்களினின்றும்' என்று தொடங்கியும் அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

"த்யக்த்வா தேஹம் புநர்ஜன்ம நைதிமாம் ஏதிஸஃ அர்ஜுந."

என்பது, ஸ்ரீ கீதை. 4 : 9.

"அஹம் த்வா ஸர்வ பாபேப்யஃ மோக்ஷயிஷ்யாமி மாஶுசஃ."

என்பது, ஸ்ரீ கீதை. 18 : 66.

"த்யக்த்வா தேஹம்" என்பது, உபாசக விஷயமானாலும், கிம்புநர் நியாயத்தாலே பிரபந்நனுக்கும் சித்திக்கையாலே சரீரத்தின் முடிவிலே மோக்ஷம் என்கிற அளவிற்குப் பிரமாணமாகக் குறை இல்லை என்பர் பெரியோர்.

2. மேலே கூறிய சங்கையை மீண்டும் அநுவாதம் பண்ணுகிறார் 'ஆனால்' என்று தொடங்கி. 'ஆனால்' என்றது, இவன் விளம்பத்துக்குக் காரணம் இல்லையேயானால் என்றபடி.

கிறான் ஆவதோ? என்னில், [1] சர்வேஸ்வரன் வைக்க இருக்கிறனாகில் அவனுக்குச் சில குற்றங்கள் உண்டாகும்; அவன் தான் நம் இருவினைகளையும் நடுவே துண்டித்து அவ்வருகே கொண்டுபோகிறேன் என்று சொன்னதோடும் முரண்படும்; ஆன பின்பு, கர்மங்கட்குக் கட்டுப்பட்டவர்களைப் போன்று இன்ப துன்பங்களை இவனும் அனுபவித்திருக்கையாலே கர்மத்தாலேயாமித்தனை அன்றோ.

நன்று; [2] இனி கர்மம் நடையாடக்கடவது ஆனல் பிராரப்த கர்மங்களை அநுபவித்து முடிகிறவரையிலும் போகத்தட்டுஎன்? என்னில், அதிகாரி விசேடத்தாலே அது வேண்டா. யாங்ஙனம்? எனின், [3] இவன் சரணகதி செய்த அளவிலே முக்தனுமாகில் இது தன்னை நச்சுப்பொய்கையைப் போன்றதாக நினைத்துஅஞ்சுவார்கள்; அதனல், ஆள்பற்ருது; இனி, இவனை இங்கே சிலநாள் வைக்கவே, ஸ்ரீ வீடுமரைக்கொண்டு நாட்டுக்கு வெளிச்சிறப்பைச் செய்து கொடுத்தாற் போலே, இவன் சிலர்க்கு உபதேசித்தும், இவனுடைய ஒழுக்கத்தைக் கண்டு திருந்துவாருமாய் இங்ஙனம் சில நன்மைகளுக்கும் காரணமாக இருக்கும்; இனித் தான், "இவனை நமக்குத் தந்த சரீரம் அன்றோ" என்று [4] இறுதியான இச்சரீரத்தைஈஸ்வரன் தானக

1. மேலே கூறிய சங்கைக்கு விடை அருளிச்செய்கிறார் 'சர்வேஸ்வரன்' என்று தொடங்கி. 'சில குற்றங்கள் உண்டாகும்' என்றது, இவன் சரணகதி செய்த பின்பும் இவன் துக்கத்தை அநுபவிக்கட்டும் என்று இருந்தானாகில் அருள் அற்றவன் இறைவன் என்ற குற்றம் உண்டாகும் என்றபடி. ஆதலால், ஈஸ்வரன் வைக்க இருக்கிறான் என்னப்போகாது என்றபடி.

2. வேறும் ஒரு சங்கையை அநுவாதம் பண்ணுகிறார் 'இனி கர்மம்' என்று தொடங்கி. அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அதிகாரி விசேடத்தாலே' என்று தொடங்கி.

3. பிரபந்நனை ஆர்த்த ப்ரபந்நன் என்றும், திருப்த ப்ரபந்நன் என்றும் இருவகையாகப் பிரித்து, ஆர்த்த ப்ரபந்நனை வைப்பதற்கு மூன்று காரணங்களையும், திருப்த ப்ரபந்நனை வைப்பதற்கு ஒரு காரணத்தையும் ஆக நான்கு காரணங்களை அருளிச்செய்கிறார்,சரணகதி செய்தவுடனே மோக்ஷத்தை அடையாமல் சரீரத்தின் முடிவிலே மோக்ஷத்தை அடைவதற்கு.

4. 'இறுதியான இச் சரீரத்தை ஈஸ்வரன் தானக உபேக்ஷிக்கவுமாட்டான்' என்னு மிவ்விடத்திலே,

"ஸந்தாம் ச யாக் ஸந்ததே ப்ரஹ்மணேஷ:, ரமதே தஸ்மிந் உத ஜீர்ணே
ஶயானே ஏநம் ஜஹாதி அஹஃ ஸுபூர்வ்யேஷு - முதுமை அடைந்த இவன் சரீரத்தை விடாதவனாகி இறைவன் இச்சரீரத்தில் இன்புற்று வசிக்கிறான்" என்கிற (யஜுர்வேதம்-ஆருணம்) சுருதியைப் பிரமாணமாக அருளிச்செய்வர் பெரியோர்.

உபேக்ஷிக்கவும் மாட்டான். [1]இவன் தான் சரணுகதி செய்கிற காலத்தில் "இப்போதே இவ் உடல் நீங்க உன் திருவடிகளைப் பெற வேண்டும்" என்னும் விரைவும் இவனுக்கு உண்டாகக் காரணம் இல்லை; முகம்பழகினது ஆகையாலே 'இச்சரீரத்தை விட' என்ருல் கடுக இசையான்; இனி வேறு ஒரு சரீரத்தை அடைதல் கர்ப்பவாசம் செய்தல் செய்யாது ஒழியவேண்டும் என்னுமளவாயிற்று, இவனுக்கு உண்டாகில் உண்டாவது? ஆகையாலே, தத்க்ரது நியாயத்தாலே அப்படியே பேருக இருக்கும். [2] ஆகையால், இவனுடைய நினைவையும் நோக்கி "இவன் தான் இச் சரீரத்தில் ஆசை வைத்திருந்தானேயாகில் நாலுநாள் இருந்திடுவானுக்கு" என்றிருப்பன் சர்வேஸ்வரன்.

[3] ஆனல், இங்கு இருக்கிற நான்கு நாட்களும் ஆதி வியாதிகளுக்கு இடம் கொடாதபடி மற்றையோரைக் காட்டிலும் வேறுபாடு தோற்ற மிக உயர்ந்த இன்பத்தினை உடையவனுக இவனை வையாதொழிவான் என்? உலகத்து மக்களைப் போன்று ஒன்றனை இழந்தகாலத்தில் துன்புற்றும் விரும்பிய பொருளைப் பெற்ற காலத்தில் இன்புற்றும் போரும்படிக்குத் தகுதியாக வைக்கிறது என்? என்னில், [4] "இவன் தான் இச் சரீரத்தைப் போக்கி உன்னைத் தரவேண்டும்" என்றே அன்ரே விரும்பியது; இச்சரீரம் தான் தண்ணிது என்று அறிந்திருக்கச் செய்தேயும் விடமாட்டாதவன், இச்சரீரத்திலே இன்பத்தையே அனுபவிக்குமாறு வைக்கும் அன்று, "இது

---

1. இதுகாறும் ஆர்த்த ப்ரபந்நன் விஷயமாக மூன்று காரணங்களை அருளிச்செய்து, மேல் திருப்த ப்ரபந்நன் விஷயமாக ஒரு காரணத்தை அருளிச்செய்கிருர் 'இவன்தான்' என்று தொடங்கி. பிருது சக்கரவர்த்தி முதலாயினுர்க்குக் கர்ப்ப வாசம் இல்லாமலே சரீரம் உண்டாகையாலே 'வேறு ஒரு சரீரத்தை அடைதல், கர்ப்ப வாசம் செய்தல்' என்று விகல்பித்து அருளிச்செய்கிருர். தத்க்ரது நியாயமாவது, இவன் எங்ஙனம் நினைத்தானே, அங்ஙனமே பலித்தல்.

2. மேலே கூறிய மூன்று காரணங்களையும் கூட்டி முடிவு அருளிச்செய்கிருர் 'ஆகையால் இவனுடைய' என்று தொடங்கி. 'நினைவையும்' என்ற உம்மை மேலே கூறிய மூன்று காரணங்களையும் தழுவுகிறது. என்றது, 'இவனுடைய நினைவையும் நோக்கி' என்கையாலே மேலே கூறிய மூன்று காரணங்களோடே இவனுடைய நினைவும் ஒரு காரணம் என்றபடி. 'நாலு நாள்' என்பதற்கு, சில காலம் என்பது பொருள். "இல்வினுள் இரண்டு நாளைச் சுற்றமே இரங்கல் வேண்டா" என்ருர் திருத்தக்கதேவர். சிந்தாமணி நாமகளிலம். செய். 270.

3. வேறும் ஒரு சங்கையை அநுவதிக்கிருர் 'ஆனல்' என்று தொடங்கி.

4. இச் சரீரத்தோடே இருக்கிற நாளில் இவனைச் சுகவாசியாக வையாமைக்கு இரண்டு காரணங்களை அருளிச்செய்யாநின்றுகொண்டு, இப்படி வைப்பதும் இவனுடைய நலத்தின்பொருட்டு என்கிருர் 'இவன்தான்' என்று தொடங்கி.

தானே நன்றாய் இருந்ததாகில் இன்னம் சிலநாள் இச்சரீரமே தொடர்ந்து நமக்கு இருந்திடுக" என்று விரும்புவானே அன்றோ; [1] இவனுடைய இச்சைக்கு ஈடாக வைக்கும் அன்று இன்னமும் ஒரு சரீரத்திலே இவனுக்கு ருசி உண்டாகவும் கூடுமே! ஆகையாலே, இவனுடைய நலத்திலே நோக்குடையவனாய் "இவன் இருந்தபடி இருக்கிறான்" என்று இருப்பான் இறைவன். [2] ஆகையாலே, முகம் பழகின இச்சரீரம் தன்னடையே கழிய, இனி வேறு ஒரு சரீரத்திலே இவனுக்கு ருசி பிறப்பதற்கு முன்னே, ஈஸ்வரனுக்குக் காரியம் செய்து தலைக்கட்டலாய் இருக்கும். [3] முகம் பழகின இச்சரீரம் தன்னடையே கழிந்து கொடுநிற்கும்; மேல் வரப் புகுகிறது அறியாமையாலே அச்சரீரத்தில் ருசி இல்லை. [4] "இதுதான் பொல்லாதது" என்று போலியாக அறிந்தும் வைக்குமே. [5] இவன் முதலிலே "இச்சரீரத்தை நீக்கியருளவேண்டும்" என்று ஒருவார்த்தை சொல்லி வைக்கையாலே, அவன் விரும்பாதது ஒன்றனைச் செய்தானாகவும் சொல்ல ஒண்ணாதே அன்றோ.

[6] இனி, இறக்கும் நிலையிலே காஷ்ட்ட பாஷாணங்களைப் போன்று இருப்பானே அன்றோ இவன்தான். [7] ஆகை

1. சுகவாசியாக வைக்கில் இச் சரீரத்தோடே சில நாள் இருக்கவேண்டும் என்று விரும்புவதோடு அன்றி வேறு சரீரங்களையும் விரும்புவான் என்கிறார் 'இவனுடைய இச்சைக்கு ஈடாக' என்று தொடங்கி.

2. ஆகையாலே, மேலே கூறிய இரண்டு காரணங்களாலே சுகவாசியாக வையாமைக்கு விடை பகர்ந்து, மேலே ஈஸ்வரனுக்கும் காரியம் செய்யலாய் இருக்கும் என்கிறார். 'ஆகையாலே' என்றது, மேலே கூறிய இரண்டு காரணங்கள் அடியாகச் சுகவாசியாக வையாமையாலே என்றபடி.

3. கழிந்துகொடு நிற்கும்படியையும் ருசி பிறவாதபடியையும் காட்டுகிறார் 'முகம் பழகின' என்று தொடங்கி.

4. மேலதற்கே வேறும் ஒரு காரணம் அருளிச்செய்கிறார் 'இதுதான்' என்று தொடங்கி.

5. நன்று; இவன் விரும்பாதிருக்கச் சரீரத்தின் முடிவிலே காரியம் செய்யும்போது, புருஷார்த்தம் ஆகாதே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இவன் முதலிலே' என்று தொடங்கி. புருஷார்த்தம் - புருஷனாலே அர்த்திக்கப்படுவது; விரும்பிப் பெறுவது.

6. சத்துவ குணம் தலை எடுத்த காலத்தில் 'இச் சரீரத்தினைத் தவிர்த்துத் தரல் வேண்டும்' என்று சொன்னானேயாகிலும், அந்திம காலத்தில் 'வேண்டாம்' என்று விலக்கினால் இறைவன் அக் காரியத்தினைச் செய்து முடித்தல் தகுதியாமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இனி, இறக்கும் நிலையிலே' என்று தொடங்கி. காஷ்டம் - கட்டை. பாஷாணம் - கல்.

7. 'இவன் முதலிலே' என்று தொடங்கி மேலே அருளிச்செய்த வாக்கியத்தை முடிக்கிறார் 'ஆகையாலே' என்று தொடங்கி.

யாலே முதற்சொன்ன வார்த்தையைக் கொண்டு, இவன் விலக்கமாட்டாத அளவிலே ஈஸ்வரன் காரியத்தைச் செய்து தலைக்கட்டுவான். [1] "அறிவில்லாத பொருளைப் போன்று கிடக்கிறவன் தலையிலே ஒருதேவை இடேன், நானே நினைக்கக் கடவேன்" என்று சொல்லி வைத்தானே அன்றோ. [2] "இந்த இரண்டு சுலோகங்களும் எம்பெருமானுடைய முழுச்செல்வம்" என்று சொல்லக்கடவதன்றோ. [3] மநஸி ஸ்த்திதே - நின்றவா நில்லா நெஞ்சும் ஓரிடத்திலே நிற்பது. [4] பட்டி தின்று திரியும் பசுவுடையவனுக்கு ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குவதற்கு முடியாதே அன்றோ; [5] மனத்தினைக்கொண்டு தொடங்க வேண்டும் அன்றோ புருஷார்த்தத்தைப் பெறும் போதும்; [6] "காற்றினைப் போன்ற அம் மனத்தினை அடக்குதல் என்பது செய்யமுடியாதகாரியம் என்று நான் நினைக்கிறேன்"

---

1. காஷ்ட பாஷாணத்தைப் போன்று கிடக்கிற நிலையிலே, இறைவன் இவன் காரியத்தைச் செய்வானோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'அறிவில்லாத பொருளைப் போன்று' என்று தொடங்கி. அன்றிக்கே, உடம்பினின்று உயிர் நீங்கும் காலத்துப் பரம்பொருள் நினைவு வேண்டாவோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் என்னலுமாம்.

தத꞉ தம் ம்ரியமாணம்து காஷ்டபாஷாண ஸந்நிபம்
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்.

என்பது, வராக சரமம்.

2. மேலே கூறிப் போந்த சுலோகங்கள் இரண்டற்கும் பொருள் அருளிச்செய்வதற்குத் திருவுள்ளம்பற்றி அச் சுலோகங்களின் சீர்மையை அருளிச்செய்கிறார் 'இந்த இரண்டு' என்று தொடங்கி.

3. பொருள் அருளிச்செய்கிறார் 'மநஸி ஸ்த்திதே' என்று தொடங்கி. 'நின்றவா நில்லா நெஞ்சு' என்பது, பெரிய திருமொழி, 1. 1 : 4.

4. நிற்கவேண்டும் என்னும் நிர்ப்பந்தம் எற்றிற்கு? என்ன, 'பட்டி தின்று' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். 'பட்டி தின்று திரியும் பசுவுடையவனுக்கு' என்றது, தன் விருப்பின்படி திரியும் பசுவினைப் போன்று, ஓரிடத்திலே அரைக்கணம் நில்லாத நெஞ்சினையுடையவனுக்கு என்றபடி.

5. நெஞ்சுதான் வேண்டுமோ? என்ன, 'மனத்தினைக் கொண்டு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

6. மனத்தினை அடக்குதல் அரிய காரியமோ? என்ன, 'காற்றினைப் போன்ற' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

சஞ்சலம் ஹி மந꞉ க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம்
தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்.

என்பது, ஸ்ரீ கீதை. 6. 34.

"மனத்தினை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது அரிது" என்றார் தாயுமானவர்.

என்றான் அன்றோ. [1]உலகத்தார், ஊர்வசியின் உலகத்திற்குச் செல்ல விரும்பி அதற்குவேண்டிய சாதனங்களைச் செய்யா நிற்க, அந்த ஊர்வசியே வந்து கிட்டி நிற்க "நீ என்தாய் அன்றோ" என்று கைகூப்பி வணங்கிக் கடக்க நிற்கவல்ல விரக்தன் அன்றோ இவ்வார்த்தை சொல்லுகிறான்.

ஸுஸ்வஸ்த்தே ஶரீரே - வேறுபாட்டினை அடையக்கூடிய தான இந்தச் சரீரமும் ஒரு நிலையிலே நிற்பது. தாது ஸாம்யே ஸ்த்திதே-அதற்கு உறுப்பாகத் [2] தாதுக்களும் ஒன்று முடங்கி ஒன்று நிமிருகை அன்றிக்கே இவை எல்லாமும் சமமாய், சரீரத்திலே ஒரு நொய்மை பிறந்து, சத்துவம் தலை எடுத்த போதாக நம்மை யாவன் ஒருவன் நினைக்கிறான். [3] என்றது, "நாம் யார்? சரீரமாகிற இது அறிவில்லாத பொருளாய் இருந்தது; சரீரத்துக்கு வேறுபட்டதாய் இருக்கும் ஓர் ஆத்மா உண்டு: அவ் ஆத்மாவானது ஈஸ்வரனுக்கு அடிமைப்பட்ட பொருள்; சர்வேஸ்வரனைப் பெறுதல் இவ் ஆத்மாவுக்கு மோக்ஷமாகிறது" என்று நினைக்கிறவன் என்றபடி. [4]விஸ்வ ரூபஞ்ச மாம்-குடல் தொடக்காலே முள் பாய்ந்தால் வரும் துன்பம் ஆத்மாவினது ஆமாறுபோலே, இவற்றுக்கு வந்த இன்ப துன்பங்கள் தனக்கு வந்ததாம்படி எல்லாவற்றையும் சரீரமாக வுடையனாய் இருக்கிற என்னை. அஜம் - இவனைப் போன்று பிறவி காரணமான கலக்கம் இன்றிக்கே இருக்கை அன்றோ.

---

1. வாயுவினைப் போன்ற மனத்தினை அடக்கமுடியாது என்றவன் இன்னான் என்று விளக்குகிறார் 'உலகத்தார்' என்று தொடங்கி.

த்ருஷ்ட்வைவச ஊர்வஶீம் ப்ராப்தாம் லஜ்ஜாவ்ருத விலோசநஃ
பாதாபிவந்தநம் க்ருத்வா குருபூஜாம் ப்ரயுக்தவாந்.

என்கிற பாரத சுலோகம் அநுசந்தேயம்.

எந்தைப் பெயர் புனை யாயு எனும் பேர் முடி இறைவன்
தந்தைக்கு உயிர் நிகராகிய தளவத் திரு நகையாய்!
கொந்து உற்றெழு குழலாய்! குழல் நிகராகிய மொழியாய்!
வந்துற்றது என் என அன்னை மலர்த்தாள்களில் வீழ்ந்தான்.

என்னும் வில்லி பாரதச் செய்யுள் இங்குக் கருதல் தகும். ஆரணிய பருவம், அருச்சுனன் தவநிலைச் சுருக்கம். 160.

2. 'தாதுக்கள்' என்றது, வாத பித்த சிலேஷ்மங்களை.

3. நினைக்கும் வகையைக் காட்டுகிறார் 'என்றது' என்று தொடங்கி.

4. "விஶ்வரூபஞ்ச மாம் அஜம்" என்றது, நாராயணன் என்ற சொல்லின் பொருள். "விஶ்வரூபம் - மாம்" என்று சுவாமித்வ சௌலப்யங்களைச் சொன்னது, வாத்சல்ய சௌசீல்யங்களுக்கும் உபலக்ஷணம். "அஜம்" என்ற சொல், பிறவி காரணமாக வருகின்ற கலக்கம் இல்லாமையைச் சொல்லுகையாலே, ஞானம் சக்தி முதலானவைகளைச் சொல்லுகிறது. என்னை? எனின், பிறவி காரணமாக அன்றோ இவ் ஆத்மாவிற்கு ஞானம் சக்தி முதலானவைகள் ஒளி மழுங்குகின்றன.

[1]ததஃ தம் காஷ்ட்ட பாஷாண ஸந்நிபம் ம்ரியமாணம் அஹம் ஸ்மராமி - நடையாடித் திரியும் அன்று இவனுக்கும் உண்டே அன்றோ இந் நினைவு; அறிவில்லாத பொருளைப் போன்று கிடந்த அன்றும் "இவன் நினைத்திலன்" என்று தேவை இடாதே நான் அவனை எப்போதும் நினைத்தபடியே நிற்பன். மத் பக்தம் - அடைகொடு பாழ்பொகடுமவனையோ அவன் பற்றிற்று? என்றது, பலநாட்கள் பச்சை இடுவித்துக்கொண்டு காரியகாலத்திலே வந்தவாறேபச்சை இடாதநாட்களை எண்ணி அகற்றுமவனையோ பற்றிற்று? என்றபடி. நயாமி பரமாம் கதிம் - [2]"கள்வன் கொல்" என்ற திருமொழியிலே பிராட்டியை அத்தவாளத்தலையை இட்டு மறைத்துக்கொடு போனாற் போலே, தானே கையைப் பிடித்துக்கொடு போமாயிற்று. என்றது, ஆதி வாஹிகரை வரக் காட்டியாதல், பெரிய திருவடியை வரக்காட்டியாதல் கொடுபோகை அன்றிக்கே, ஆதி வாஹிகரில் முதல்வனான தானே கொடுபோம் என்றபடி.

982.

மாலை நண்ணித் தொழுது எழுமினோ வினைகெட
காலை மாலை கமலமலர் இட்டு நீர்
வேலை மோதும் மதிள்சூழ் திருக்கண்ணபுரத்து
ஆலின்மேல் ஆல் அமர்ந்தான் அடி இணைகளே.

பொ - ரை :—கடலினுடைய அலைகள் வந்து மோதுகின்ற மதில்கள் சூழ்ந்த திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கின்றவனும் தண்ணீரின்மீது ஆலிலையில் பள்ளிகொண்டவனுமான திருமாலைக் கிட்டி, அவனுடைய இரண்டு திருவடிகளையும் காலையிலும் மாலையிலும் தாமரைப் பூக்களைக் கொண்டு அருச்சித்து, உங்களுடைய நல்வினை தீவினைகள் எல்லாம் கெடும்படி வணங்கி உய்வுபெறுமின் என்கிறார்.

வி - கு :—ஆலின்மேல் ஆல் அமர்ந்தான் திருக் கண்ணபுரத்து மாலை அடி இணைகள் நீர் காலை மாலை கமலமலர் இட்டு வினை கெடத் தொழுது எழுமின் என்க. மாலை - அறப் பெரியவனை; திருமாலை. எழுதல் — பிறவிப் பெருங்கடலில் நின்றும் கரை ஏறுதல்.

---

1. வராக சரமத்திற்குப் பொருள் அருளிச்செய்கிறார் "ததஃ" என்று தொடங்கி. ததஃ - ஆகையாலே என்றபடி. "மத்பக்தம்" என்றதிலே உள்ள "மத்" என்ற சொல்லுக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அடைகொடு' என்று தொடங்கி. அடைகொடு பாழ்பொகடுகை' என்றதனை விவரணம் செய்கிறார் 'பல நாட்கள்' என்று தொடங்கி.

2. "கள்வன் கொல்" என்றது, பெரிய திருமொழி, 7. 7 : 1.
அத்தவாளத்தலை - முன்தானையின் தலை.

இத் திருவாய்மொழி கலிவிருத்தம்.

ஈடு:—முதற் பாட்டு. இத் திருவாய்மொழியிற் சொல்லப்படும் பொருளாவது 'இறைவனைப் பற்றுமின்' என்பது; அதனை இத் திருப்பாசுரத்தில் சுருங்க அருளிச்செய்கிறார்.

மாலை நண்ணித் தொழுது எழுமினோ - [1] சர்வேஸ்வரன் திருவடிகளைக் கிட்டி அடைந்து உய்வு பெறுதற்குப் பாருங்கோள். மால் - சர்வேஸ்வரன். [2] இனி, மாலை நண்ணி என்பதற்குச் சிநேகத்தின் காரியமான அன்பினைப் பொருந்தி என்று பொருள் கூறலுமாம். என்றது, பக்தியை யுடையவர்களாய் என்றபடி. [3]'தொழுது எழுமினோ' என்கிறார், "தொழுது எழு" என்கிற தம்முடைய வாசனையாலே. என்றது, [4]"அருளினன்" என்று பிரபத்தியைப் பற்றி இழிந்தவர் ஆகையாலே, தம் வாசனை தோற்றச் சொல்லுகிறார் என்றபடி. [5] சர்வேஸ்வரன் இவ் ஆத்மாக்களின் கூட்டத்துக்கு எல்லாம் சேஷியாதலாலும், அவனைக் குறிக்க அடிமையாக இருக்கும் தன்மை எல்லார்க்கும் ஒத்திருக்கையாலும் பலர்க்குமாக 'எழுமினோ' என்கிறார். வினை கெட - [6]பகவானை அடைதற்குத் தடையாக உள்ள வினைகளின் கூட்டம் கெடும்படியாக என்னுதல். அன்றிக்கே, "மல்லிகைகமழ்தென்றல்" என்ற திருவாய்மொழியில் கூறிய பிரிவுத் துன்பம் தீரும்படி என்னுதல்.

---

1. "ஆலின்மேல் ஆல் அமர்ந்தானை மாலினுடைய அடி இணைகளை நண்ணித் தொழுது எழுமினோ" என்று கொண்டு கூட்டி, பிரபத்திபரமாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'சர்வேஸ்வரன்' என்று தொடங்கி.

2. பக்திபரமாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'இனி, மாலை நண்ணி' என்று தொடங்கி.

3. நன்று; சாதனங்களைச் செய்து அதனால் வரக்கூடியதான சாத்தியமான பக்தியைத் "தொழுது எழுமினோ' என்று எளிதாகச் சொல்லுவான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் "தொழுது எழுமினோ" என்று தொடங்கி.

4. அதனை விவரணம் செய்கிறார் 'அருளினன்' என்று தொடங்கி. என்றது, "அருளினன்" என்று நிர்ஹேதுகமான பகவத் கிருபை ஒன்றனையே மேற்கொண்டு பகவானைப் பற்றினவர் ஆகையாலே அந்த வாசனை தோற்றச் செல்லுகிறார் என்றபடி.

5. "எழுமினோ" என்ற பன்மைக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'சர்வேஸ்வரன்' என்று தொடங்கி.

6. "வினை கெட" என்றதற்கு, பக்தி பரமாகவும், பிரபத்தி பரமாகவும் பொருள் அருளிச்செய்கிறார் 'பகவானை' என்று தொடங்கியும், 'மல்லிகை' என்று தொடங்கியும். 'பகவானை'என்று தொடங்குவது பக்திபரம்.'மல்லிகை' என்று தொடங்குவது, பிரபத்திபரம்.

காலை மாலை-[1] இறைவனைப் பற்றுவதற்குக் காலவரையறை இல்லை என்கை. காலை மாலையைக் கூறியது, [2]"ஆதி நடு அந்தி வாய்" என்கிறபடியே, எல்லாக் காலங்கட்கும் உபலக்ஷணம். கமல மலர் இட்டு - [3]எல்லா மலர்களுக்கும் உபலக்ஷணம். என்றது, நீங்கள் விரும்பின இவ் உலகப் பொருள்களே அமையும் என்றபடி. நீர் - அதிகாரிகளும் முன்புத்தை நீங்களே அமையும் என்கை. வேலை மோதும் மதிள் சூழ் திருக்கண்ண புரத்து-கடல் அணித்து ஆகையாலே திரைகள் வந்து மோதா நின்றுள்ள மதிளாலே சூழப்பட்டிருந்துள்ள திருக் கண்ண புரத்திலே. இதனால், சிரமத்தைப் போக்கக் கூடிய தேசம் என்று தெரிவித்தபடி. ஆலின்மேல் ஆல் அமர்ந்தான்-எல்லா உலகங்களையும் வயிற்றிலே வைத்து அப்பொழுது தோன்றியது ஓர் ஆலந்தளிரின்மேலே திருக்கண்வளர்ந்தவன். இதனால், [4]உங்களுடைய விரோதிகளைப்போக்குதல் கூடாத செயல் ஆயினும் அதனைச் செய்து முடிக்கும் வல்லமை உள்ளவன் என்பதனைத் தெரிவித்தபடி. ஆல் - நீரும், இடமும். தண்ணீரின் மேல் இருக்கிற ஆல்என்னுதல். ஆலின்மேலிடத்து என்னுதல். இரண்டாவது பொருளில், 'மேல் ஆல்' என்பதிலே உள்ள [5]'ஆல்' அசைநிலை. அடி இணைகள் - அவனுடைய இரண்டு திருவடிகளை. தொழுது எழுமின் என்க. ஆல்: செய்யுளின்பம். (1)

983.

கள் அவிழும் மலர் இட்டு நீர் இறைஞ்சுமின்
நள்ளி சேரும் வயல் சூழ் கிடங்கின் புடை
வெள்ளி ஏய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரம்
உள்ளி நாளும் தொழுது எழுமினோ தொண்டரே!

---

1. பக்திபரமான போது காலையும் மாலையும் கமல மலர் இட்டுத் தொழ வேண்டும் என்பது பொருள். பிரபத்தி பரமானபோது "காலை மாலை" என்பதற்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'இறைவனை' என்று தொடங்கி.

2. அதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'ஆதி நடு அந்தி வாய்' என்று. இது, இரண்டாந்திருவந்தாதி, 73.

3. "கமல மலர்" என்ற நிர்ப்பந்தம் வேண்டுமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'எல்லா மலர்களுக்கும்' என்று தொடங்கி. அதனை விவரணம் செய்கிறார் 'நீங்கள்' என்று தொடங்கி.

4. "ஆலின் மேல் ஆல் அமர்ந்தான்" என்று சொன்னதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'உங்களுடைய', என்று தொடங்கி.

5. ஆலின் மேலிடத்து என்ற பொருளில் "ஆல்" என்பது அசை நிலை. இதனையே 'செய்யுள் இன்பம்' என்று எழுதுகிறார் வியாக்யாதா.

பொ - ரை :—அடியீர்காள்! நீங்கள், பெண்நண்டுகள் சேர்ந்திருக்கின்ற வயல்கள் சூழ்ந்த அகழியின் அருகில் நக்ஷத்திரமண்டலம் வரையிலும் உயர்ந்து பொருந்தி இருக்கின்ற மதில்கள் சூழ்ந்த திருக்கண்ணபுரம் என்னும் திவ்விய தேசத்தை நாள்தோறும் மனத்தால் நினைத்து, தேனோடு மலர்கின்ற பூக்களைக் கொண்டு அருச்சித்து வணங்கிக் கைகூப்பித் தொழுது பிறவிப் பெருங்கடலில் நின்றும் கரை ஏறுங்கள் என்கிறார்.

வி - கு :—தொண்டீர்! நீர் திருக்கண்ணபுரத்தை நாளும் உள்ளி மலர் இட்டு இறைஞ்சித் தொழுது எழுமின் என்க. இறைஞ்சுமின் - முற்றெச்சம். நள்ளி - பெண் நண்டு. வெள்ளி - சுக்கிரன்; சுக்கிரனைக் கூறியது மற்றைய கோள்களுக்கும் உபலக்ஷணம்.

ஈடு :—இரண்டாம் பாட்டு. [1] "சர்வேஸ்வரனுக்கு என் வருகிறதோ" என்று அஞ்சும் ஆசையுடையார், காவலோடு கூடிய தேசம் என்று அச்சம் இல்லாதவர்களாய் நாளும் தொழுது எழுமின் என்கிறார்.

கள் அவிழும் மலர் இட்டு நீர் இறைஞ்சுமின் - செவ்விப் பூவைக்கொண்டு அருச்சித்து அடி வணங்குங்கோள்.[2] பக்தியையுடையவர்கள் செவ்விப்பூவைத் தேடுவர்கள் அன்றோ; [3] "கள்ளார் துழாயும் கணவலரும்" என்கிறபடியே, பூக்களின் இனத்தைச் சார்ந்தவை யாவும் அமையும் அன்றோ, அவன் படியைப் பார்த்தால். [4] ஆக, பொருள்களின் உயர்வு தாழ்வுகளை நோக்கான், அடைகின்றவனுடைய அன்பினையே பார்க்குமத்தனை. [5] ஸ்ரீ புருஷோத்தமமுடையானுக்கு அரசபுத்திரன் சாத்தின

---

1. பின் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. வாளா 'பூ' என்னாது, "செவ்விப்பூ" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பக்தியை யுடையவர்கள்' என்று தொடங்கி. என்றது, அன்பின் காரியம் என்றபடி.

3. இன்ன மலர்களைக் கொண்டுதான் அருச்சிக்கவேண்டும் என்னும் நிர்ப்பந்தம் இவனுக்கு இல்லையோ? என்ன, இல்லை என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'கள்ளார் துழாயும்' என்று தொடங்கி. இது, பெரிய திருமொழி, 11. 7 : 6.

4. மேற்கூறியவற்றால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'ஆக' என்று தொடங்கி.

5. அன்பினையே பார்க்கும் என்பதற்கு ஐதிஹ்யம் காட்டுகிறார் 'ஸ்ரீ புருஷோத்தம முடையானுக்கு' என்று தொடங்கி. இச் சரிதையினை "ஒழிவில் காலமெல்லாம்" என்ற திருவாய்மொழியின் வியாக்கியானத்தில் காண்க.

செண்பகப்பூ வார்த்தையை நினைப்பது. நள்ளி சேரும் வயல் சூழ் கிடங்கின்புடை - நிறைந்த தண்ணீரையுடைத்தான வயலாலே சூழப்பட்ட அகழியின் அருகே. நண்டுகள் நீர் மாறாத இடங்களிலே ஆயிற்று வாழ்வது; ஆதலின், 'நள்ளி சேரும் வயல்' என்கிறார். [1] நள்ளி - பெண் நண்டு. கிடங்கு - அகழி. [2] வெள்ளி ஏய்ந்த மதிள் - நக்ஷத்திரலோகம் அளவும் ஓங்கின மதிள் என்னுதல். அன்றிக்கே, வெள்ளியாலே செய்யப்பட்ட மதிள் என்னுதல். [3] நமக்கு அங்ஙனம் தோற்றவில்லையேயாகிலும் மிக்க அன்போடு நோக்குவார்க்கு மிக உயர்ந்த பொருளாகத் தோற்றுமே அன்றோ. சூழ் திருக்கண்ணபுரம் உள்ளி - மதிள்கள் சூழ்ந்த திருக்கண்ணபுரம் காவல் மிக்கு இருப்பதனாலே அச்சம் இல்லாத தேசம் என்று அதனை நினைத்து. தொண்டீர் நாளும் தொழுது எழுமின் - சர்வேஸ்வரன் விஷயத்தில் பக்தியையுடையராய் இருக்கும் நீங்கள் நாளும் தொழுது பிறவிப் பெருங்கடலில் நின்றும் கரை ஏறுங்கோள். [4] பருவம் அல்லாத காலத்தில் கடல் தீண்டல் ஆகாது என்னுமாறு போலே சர்வேஸ்வரன் விஷயத்தில் காலவரையறை இல்லை ஆதலின் 'நாளும் தொழுது' என்கிறார். (2)

984.

தொண்டர்! நும் தம் துயர் போக நீர் ஏகமாய்
விண்டு வாடா மலர் இட்டு நீர் இறைஞ்சுமின்
வண்டு பாடும் பொழில்சூழ் திருக்கண்ணபுரத்து
அண்டவாணன் அமரர் பெருமானையே.

பொ - ரை:—வண்டுகள் பாடுகின்ற சோலைகளால் சூழப்பட்ட திருக் கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற அண்டவாழ்நனை நித்தியசூரிகள் தலைவனை, தொண்டர்களே! உங்களுடைய துன்பம் எல்லாம் நீங்கும்படியாக நீங்கள் ஒரே தன்மையராய், மலர்ந்து வாடாமல் இருக்கின்ற மலர்களைக் கொண்டு அருச்சித்து நீங்கள் வணங்குமின்.

---

1. பள்ளிக் கமலத் திடைப் பட்ட பகுவாய் அலவன் முகநோக்கி
நள்ளி யூடும் வயல் சூழ்ந்த நறையூர் நின்ற நம்பியே.

என்பது, பெரிய திருமொழி, 6. 7: 6.

2. வெள்ளி - சுக்கிரன். சுக்கிரனைக் கூறியது, ஏனைய கோள்களுக்கும் உபலக்ஷணமாகக் கொண்டு 'நக்ஷத்திரலோகமளவும்' என்கிறார்.

3. அப்படி நமக்குத் தோன்றவில்லையே? என்ன, 'நமக்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

4. "நாளும்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பருவம் அல்லாத காலத்தில்' என்று தொடங்கி.

வி - கு :—தொண்டர்! நீர், திருக்கண்ணபுரத்து அமரர் பெருமானையே ஏகமாய் நும் தம் துயர்போக மலர்இட்டு இறைஞ்சுமின் என்க. தொண்டர் : அண்மைவிளி. ஏகம் - ஒன்று; ஒரே தன்மையர் என்றபடி. அண்டவாணன் - பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவன். இவ் உலகங்கட்குத் தலைவன் என்னலுமாம்.

ஈடு :—மூன்றாம் பாட்டு. [1] திருக்கண்ணபுரத்தில் நின்றருளினவன் உபயவிபூதிநாதன் ஆயிற்று; உங்கள் துயர்கெட வேறு ஒரு பயனையும் கருதாதவர்களாய் வணங்குங்கோள் என்கிறார்.

தொண்டர்-[2] ஆசை சிறிதுடையரான நீங்கள் என்னுதல். அன்றிக்கே,ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்வதற்கு இட்டுப் பிறந்த நீங்கள் என்னுதல். நும் தம் துயர் கெட - [3] துயர்களும் மேலே கூறிய இவர்களுக்கு வேறுபட்டே அன்றோ இருப்பன; [4]சிற்றின்பத்தில் ஆசையால் உளதாய துயர் என்னுதல். சர்வேஸ்வரனை இறைஞ்சப் பெறாமையால் உளதாய துயர் என்னுதல். நீர் ஏகமாய் - நீங்கள் வேறு ஒரு பயனைக் கருதாதவர்களாய் என்னுதல். அன்றிக்கே, நீங்கள் எல்லீரும் ஒருமிடறாய் என்னுதல். [5] 'தொண்டர்' என்கையாலே, எல்லாரும் ஒரு மிடறு ஆகலாம் அன்றோ. விண்டு வாடா மலர் இட்டு - அலரத் தொடங்கின அளவாய்க் கழிய அலர்ந்து வாடாத பூ. என்றது, செவ்விப் பூவைக் கொண்டு வணங்குங்கோள் என்றபடி. வண்டு பாடும்

---

1. "திருக்கண்ணபுரத்து அண்டவாணன் அமரர் பெருமானை நும்தம் துயர் போக நீர் ஏகமாய் விண்டு வாடா மலர் இட்டு நீர் இறைஞ்சுமின்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. "தொண்டர்" என்பதற்கு, ஆசையுடையவர் என்றும், அடிமை வேலை செய்கின்றவர்கள் என்றும் பொருள் ஆகையாலே அவ் இருபொருள்களையும் அருளிச்செய்கிறார் 'ஆசை' என்று தொடங்கியும், 'ஒழிவில் காலம்' என்று தொடங்கியும்.

3. துயர் என்னாமல், "நும் தம் துயர்" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'துயர்களும்' என்று தொடங்கி. 'இவர்களுக்கு' என்றது, மேலே கூறிய ஆசை சிறிதுடையாரையும், ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்வாரையும்.

4. இவர்களுக்கு உளவாய துயர்களை முறையே விவரணம் செய்கிறார் 'சிற்றின்பத்தில்' என்று தொடங்கியும், 'சர்வேஸ்வரனை' என்று தொடங்கியும்.

5. ஒரு மிடறு ஆகைக்குக் காரணத்தை அருளிச்செய்கிறார் 'தொண்டர்' என்று தொடங்கி.

பொழில் சூழ் திருக் கண்ணபுரம் - வண்டுகள் தேனை உண்டு அதனாலே மயக்கங்கொண்டு பாடாநின்றுள்ள சோலை சூழ்ந்த தேசம். [1] "அந்தச் சாமவேதத்தைப் பாடிக்கொண்டிருக்கின்றார்கள்" என்பது போன்று 'வண்டு பாடும் சோலை' என்கிறார். [2] இதனால் எல்லை இல்லாத இனிமையையுடைய தேசம் என்பதனைத் தெரிவித்தபடி. திருக் கண்ணபுரத்து அண்டவாணன் அமரர் பெருமானை - திருக் கண்ணபுரத்திலே வந்து எளியனாய்இருக்கிறவன்[3]உபயவிபூதிநாதன் ஆயிற்று.என்றது, இவ் உலகத்துக்கு நிர்வாஹகனுமாய், நித்தியசூரிகளுக்கு நிர்வாஹகனுமானவன் என்றபடி. [4] இங்கே இறைவனைப் பற்றி விரோதியைப் போக்கிக்கொண்டு, பூர்ண அநுபவம் பண்ண ஒரு தேசவிசேடம் தேடிப்போக வேண்டா; நித்தியசூரிகளும் இங்கே வந்து அநுபவிக்கும்படி சீலம் முதலான குணங்களின் ஏற்றம் உண்டே அன்றோ இங்கு. [5] குருடர்க்கு வைத்த சாலையில் விழித்திருப்பார்க்குப் பயன் இல்லையே; அப்படி அன்று இங்குத்தை நிலை. [6]"ஞானம் இல்லாதவர்கட்கு உருவங்களில்

1. "வண்டு பாடும்" என்றதற்குத் திருஷ்டாந்தம் காட்டுகிறார் 'அந்தச் சாமவேதத்தை' என்று தொடங்கி.

"ஏதத் ஸாமகாயந் ஆஸ்தே" என்பது, தைத்திரீய. 10.

2. இதனால் பலித்த பொருளினை அருளிச்செய்கிறார் 'இதனால்' என்று தொடங்கி.

3. "அண்டவாணன்" என்கையாலே இவ் உலகத்துக்குத் தலைவனாதலும், "அமரர் பெருமானை" என்கையாலே பரமபதத்துக்குத் தலைவனாதலும் பெறப்படுதலின் 'உபயவிபூதிநாதனாயிற்று' என்கிறார். அதனை விவரணம் செய்கிறார் 'இவ் உலகத்துக்கு' என்று தொடங்கி.

4. 'திருக்கண்ணபுரத்திலே வசிக்கிறவன் உபயவிபூதிநாதன்' என்றதனால் பாவம் அருளிச்செய்கிறார் 'இங்கே' என்று தொடங்கி.

5. பிறப்பு இறப்புக்களிலே உழன்று திரிகின்ற இம் மக்களுக்காக வந்து நிற்கின்ற நிலையிலே நித்தியசூரிகளுக்குச் சம்பந்தம் இல்லையே? என்ன, 'குருடர்க்கு' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார். என்றது, எல்லா ஆத்மாக்களுக்கும் புகலிடம் என்றபடி.

6. நன்று; "ப்ரதிமாஸ்ய அப்ரபுத்தாநாம் - ஞானம் இல்லாதவர்களுக்கு விக்கிரகத்திலே இருக்கிறார்" என்னுமிது சேரும்படி என்? இந்த வாக்கியத்தாலே நித்தியசூரிகளுக்கு இதில் சம்பந்தம் இல்லை என்று தோற்றாநின்றதே? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'ஞானம் இல்லாதவர்கட்கு' என்று தொடங்கி. 'அம்மேடு' என்றது, ஞானம் இல்லாதவரை. 'அப்ரபுத்தாநாமபி' என்பது, ஸ்ரீ ஆளவந்தார் திருவுள்ளம். "ஊன்கணார்க்குப் படிமையினும், அந்தணர்க்கு வேள்வித் தீயினும், யோகிகட்கு உள்ளத்தினும், ஞானிகட்கு எவ்விடத்தும் வெளிப்படுதலால் சுடர்வளப்பாடு கோடலை 'அந்தணர்காணும் வரவு' என்று கூறினார்" என்ற பரிமேலழகர் உரை, 'ஞானமில்லாதவர்கட்கு உருவங்களில்' என்னும் பொருளையுடைய வாக்கியத்தோடு ஒப்புமை யுடைத்தாம். (பரிபாடல், 2.)

(விக்கிரஹங்களில்) இருக்கிறார்" என்ற இதற்கு "அம்மேட்டிலும் ஏறிப் பாயாநின்றால் தேசிகருக்குச் சொல்லவேண்டுமோ?" என்று ஆளவந்தார் அருளிச்செய்யும்படி. [1] இனி, திருக்கண்ணபுரத்துஅண்டவாணன் அமரர் பெருமானை என்பதற்கு, பரமபத நிலையனாய், அயர்வறும் அமரர்கள் அதிபதியுமானவன் என்னலுமாம். (3)

985.

மானை நோக்கி மடப்பின்னைதன் கேள்வனைத்
தேனை வாடா மலர் இட்டு நீர் இறைஞ்சுமின்
வானை உந்தும் மதிள்சூழ் திருக்கண்ணபுரம்
தான் நயந்த பெருமான் சரண் ஆகுமே.

பொ - ரை :—ஆகாயத்தை முட்டுகின்ற மதில்களால் சூழப்பட்ட திருக் கண்ணபுரத்தைத் தானே விரும்பி எழுந்தருளியிருக்கின்ற எம் பெருமான் எல்லார்க்கும் புகலிடம் ஆவான்; ஆதலால், மான் வருந்தும் படியான திருக் கண்களையுடையளான நப்பின்னைப் பிராட்டிக்குக் கேள்வனும் தேன்போன்ற இனியனுமான இறைவனை வாடாத மலர்களைக் கொண்டு அருச்சித்து நீங்கள் வணங்குங்கோள் என்கிறார்.

வி - கு :—மடம் - இளமை. நாற்குணங்களில் ஒன்றுமாம். நோக்கி - நோக்கை யுடையவள்; நோக்கு - கண். 'தேனை' என்பதனை மலர்க்கு அடைமொழி ஆக்கலுமாம். பெருமான் சரண் ஆகும்; ஆதலால், நீர் இறைஞ்சுமின் என்க.

ஈடு :—நாலாம் பாட்டு. [2] அடையுமிடத்தில் நப்பின்னைப் பிராட்டி புருஷகாரமாக அடைமின்; அவன் உங்களைக் காப்பாற்றுவான் என்கிறார்.

மான் நை நோக்கி - மானானது நையும்படியான நோக்கை யுடையவள். என்றது, யான் தோற்று நாணும்படி ஆயிற்று நோக்கு இருப்பது என்றபடி. மடம் பின்னை தன் கேள்வனை - பெண்மை முதலான ஆத்ம குணங்களையுடைய நப்பின்னைப் பிராட்டிக்குக் கேள்வனை. தேனை - எல்லை இல்லாத இனியனை.

---

1. "அண்டவாணன்" என்பதற்கு, லீலாவிபூதிக்குத் தலைவன் என்று பொருள் அருளிச்செய்தார் மேல்: பரமபதநிலையன் என்று பொருள் அருளிச் செய்கிறார் 'இனி' என்று தொடங்கி.

2. "பின்னைதன் கேள்வனை - இறைஞ்சுமின்; பெருமான் சரணாகும்" என்பதனைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

இதனால், இவ் வேப்பங்குடி நீரை அன்றோ நான் உங்களைக் குடிக்கச்செய்வது என்ற குறிப்புத்தோன்றும். வாடா மலர் இட்டு நீர் இறைஞ்சுமின் - செவ்விப் பூவைக் கொண்டு தூவி நீங்கள் அடையுங்கோள். [1] தேனையும் செவ்விப் பூவையும் சேர்க்கைபோலே காணும் பற்றுதலாவது. வானை உந்து மதிள் சூழ் திருக்கண்ணபுரம்-ஆகாசத்தோடே பொருமை கொண்டு அதனைத் தள்ளுமாறுபோலே இருக்கிற மதிளாலே சூழப்பட்ட ஊரை. இதனால், பகைவர்களுக்குக் கிட்ட ஒண்ணாதபடி அரண் அமைந்த ஊர் என்பதனைத் தெரிவித்தபடி. தான் நயந்த பெருமான் - "அடியார்களோடு கூடி இருந்து குளிர்வதற்குப் பாங்கான தேசம்" என்று அதனை விரும்பி வசிக்கிற சர்வேஸ்வரன் ஆனவன். சரண் ஆகும் - உங்களுக்கு இரக்ஷகன் ஆம். [2] அம் மதிள் அவனுக்கு அரண் ஆனாற்போலே உங்களுக்கு அவன் மதிள் ஆம் என்றபடி. (4)

986.

சரணமாகும் தன தாள் அடைந்தார்க்கு எல்லாம்
மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்
அரண் அமைந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரத்
தரணியாளன் தனது அன்பர்க்கு அன்பாகுமே.

பொ - ரை :— தன் திருவடிகளை அடைந்தவர்களுக்கு எல்லாம் தான் பற்றுக் கோடாக இருப்பவனும், இறந்தால் பரமபதத்தினைக் கொடுக்கும் உபகாரகனும், அரணாக அமைந்த மதிள்கள் சூழ்ந்த திருக்கண்ணபுரமாகிய நகரத்தை ஆள்கின்றவனுமான இறைவன், தன்னுடைய அடியவர்கட்குத் தானும் அன்புமயமாகவே இருப்பான் என்கிறார்.

வி - கு :— அரண் - காவல். தரணி - பூமி. தரணியாளன் - பூமிப் பிராட்டிக்குக் கணவன் என்னலுமாம்.

ஈடு:— ஐந்தாம் பாட்டு. [3] இப்படிப் பக்தியோகத்தால் அடைவதற்குத் தகுதி இல்லாதவர்களாகித் தன் திருவடிகளையே

---

1. "தேனை வாடா மலர் இட்டு" என்ற பதச்சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தேனையும்' என்று தொடங்கி.

2. "மதிள்" என்ற அடைமொழி, திருஷ்டாந்தத்தின் பொருட்டு வந்தது என்கிறார் 'அம் மதிள்' என்று தொடங்கி.

3. முன் இரண்டு அடிகளைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார். 'இப்படி' என்றது, மேல் மூன்று திருப்பாசுரங்களிலும் கூறிய முறைப்படி என்றவாறு.

உபாயமாகப் பற்றினர் திறத்து அவன் செய்தருளும்படியை அருளிச்செய்கிறார்.

தன தாள் அடைந்தார்க்கு எல்லாம் சரணம் ஆகும் - [1] பிறப்பு ஒழுக்கம் ஞானம் இவற்றால் குறைய நின்றாரேயாகிலும், தன் திருவடிகளையே உபாயமாகப் பற்றினார்க்கு எல்லாம் பாதுகாப்பவன் ஆம். [2] மேலே சென்ற மூன்று பாசுரங்களாலும் சொன்ன பக்தியோகம் எல்லாரும் செய்யத்தக்கது அன்று. இப்பாசுரத்தில் சொல்லுகிற பிரபத்தி எல்லாராலும் செய்யத்தக்கது என்கிறார்; [3] "நான் எல்லாப் பிராணிகளாலும் அடையப்படும்பொழுது விருப்பு வெறுப்பு இல்லாது எல்லாருக்கும் ஒத்தவனாக இருக்கிறேன்; எனக்கு, தாழ்வு கருதி விடத்தக்கவனும் இலன், உயர்வு கருதிக் கொள்ளத்தக்கவனும் இலன்" என்னக் கடவது அன்றோ. [4] பகவத் விஷயம் தான் பரிசவேதியாக இருக்கும் அன்றோ; [5] கைசிகத்தில் பகவத் சம்பந்தமுடையான் ஒரு சண்டாளனுடைய கூட்டுறவு பிராஹ்மணனுடைய ஒழுக்கக் கேட்டிற்குப் பரிஹாரம் ஆயிற்று; அவ்விடத்தில் எல்லாம் சொல்லுகிற பொருள் இதுவேயாயிற்று.

---

1. "எல்லாம்" என்றதற்கு, கருத்து அருளிச்செய்கிறார் 'பிறப்பு' என்று தொடங்கி.

2. "தன தாள் அடைந்தார்க்கு எல்லாம்" என்ற இதனால் போதரும் பொருளை அருளிச்செய்கிறார் 'மேலே சென்ற' என்று தொடங்கி. முதல் பாசுரம், இத் திருவாய்மொழியின் சுருக்கமாகையாலே, அதனை நீக்கி மற்றை மூன்று பாசுரங்களையுமே 'மேலே சென்ற' என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

3. பிரபத்திமார்க்கம் ஆகிய இது, எல்லார்க்கும் உரியது (சர்வாதிகாரம்) என்பதற்குப் பிரமாணம் அருளிச்செய்கிறார் 'நான் எல்லாப் பிராணிகளாலும்' என்று தொடங்கி.

ஸமஃ அஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யஃ அஸ்தி ந ப்ரியஃ
யே பஜந்தி து மாம் பக்த்யா மயிதே தேஷு சாபி அஹம்.

என்பது, ஸ்ரீ கீதை, 9 : 24. இந்தச் சுலோகத்தால் பிரபத்திக்கு விஷயமாக இருக்கிற சர்வேஸ்வரன் மக்களுடைய உயர்வு தாழ்வுகளைப் பாராமல் அங்கீகரிக்கிறான் என்கையாலே, பிரபத்தியும் சர்வாதிகாரம் என்பது கருத்து.

4. பரிசுத்தம் இல்லாதவர்கள் பகவானை அடைவதற்கு அதிகாரிகள் ஆவர்களோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'பகவத் விஷயம்' என்று தொடங்கி. என்றது, பரிசுத்தம் இல்லாதவர்களையும் பரிசுத்தர் ஆக்கும் என்றபடி. பரிசவேதி என்பது இரும்பு முதலான தாழ்ந்த உலோகங்களைப் பொன்னாகச் செய்யும் மருந்து.

5. அப்படித் தூயர் அல்லாதாரையும் தூயர் ஆக்கின இடம் உண்டோ? என்ன, உண்டு என்கிறார் 'கைசிகத்தில்' என்று தொடங்கி. 'கைசிகத்தில்' என்றது, கோசிகம் என்னும் பண்ணில் என்றபடி. இங்கு நம்பாடுவார் சரிதத்தைக் குறிக்கிறார். 'அவ்விடத்தில்' என்றது, கைசிக புராணத்தில் என்றபடி.

மரணம் ஆனல் வைகுந்தம் கொடுக்கும் பிரான் - [1] இவன், தன் பக்கலிலே பரத்தை வைத்த அன்று தொடங்கி இவனை ஒழியத் தனக்குச் செல்லாமை உண்டாய் இருக்கச் செய்தேயும், இவனுடைய ருசியைப் பின்பற்றி, சரீரம் பிரியும் அளவும் காலத்தை எதிர் நோக்கினவனாய் நின்று, பின்னர் மரணம் உண்டானல் பரமபதத்தைக் கொடுக்கும் உபகாரகன். [2] தன் திருவடிகளைப் பற்றின அன்றே தான் இருக்கிற இடத்திலே இவனைக் கொடுபோய்ச் சேரவைத்துக் கொள்ளவேண்டி இருக்கச் செய்தேயும், நடுவில் இவன் இருக்கும் நான்கு நாட்களும் அவனுக்கு ஒரு பகல் ஆயிரம் ஊழியாய் இருக்கையாலே 'மரணமானல்' என்கிறார். 'மரணமானல்' என்கிறது, தனக்கு ஆற்றல் இல்லாமையால் அன்று, இவன் செய்யவேண்டிய காரியங்கள் அனைத்தையும் செய்து முடிக்கப் பெருமையாலும் அன்று, இவனுடைய ருசியைக் கடாக்ஷித்து நிற்கிறானித்தனை என்றபடியைத் தெரிவிக்கிறது. [3] இப் பாசுரத்தில் 'மரணமானல்' என்றதனைத் திருவுள்ளம்பற்றியேதான் மேலே கூறிய அர்த்த விசேடங்கள் எல்லாம். அரண் அமைந்த - அரணமாம்படி சமைந்த. இதனல், 'நித்தியசூரிகள் பரிய இருக்கிறவன் இங்கே நின்றான் : என் வருகிறதோ?' என்று அஞ்சவேண்டாதிருக்கையைத் தெரிவித்தபடி. தரணியாளன் - பூமிக்கு நிர்வாஹகன். சம்சாரிகளுக்கு இரக்ஷகன் என்கை. தனது அன்பர்க்கு அன்பு ஆகும் - தன்னிடத்தில் அன்பினையுடையார்பக்கல் தானும் பேரன்பினையுடையன் ஆம். [4] 'அன்புடையவன்' என்று பிரிக்க ஒண்ணாதபடி. அன்பு தான் ஒரு வடிவுகொண்டாற் போலே இருத்தலின் 'அன்பாகும்' என்கிறார். (5)

---

1. "ஆனல்" என்றதன் பொருளை விளக்குகிறார் 'இவன், தன் பக்கலிலே' என்று தொடங்கி. பரம் - பாரம்.

2. மேலே கூறியதனையே விவரணம் செய்கிறார் 'தன் திருவடிகளை' என்று தொடங்கி.

3. இத் திருவாய்மொழியின் அவதாரிகையில் கூறிய நிருபணத்துக்கெல்லாம் காரணம், இச் சொற்றொடர் என்கிறார் 'இப்பாசுரத்தில்' என்று தொடங்கி.

4. "அன்பு ஆகும்" என்ற சொல், அன்புடையவன் என்ற பொருளைக் காட்டுமோ? என்ன, 'அன்புடையவன்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

987.

அன்பன்ஆகும் தன தாள் அடைந்தார்க்கு எல்லாம்
செம்பொன் ஆகத்து அவுணன் உடல் கீண்டவன்
நன் பொன் ஏய்ந்த மதிள் சூழ் திருக் கண்ணபுரத்து
அன்பன் நாளும் தன மெய்யர்க்கு மெய்யனே.

பொ-ரை :—தனது திருவடிகளை அடைந்தவர்கள் யாவராயினும் அவர்களுக்கு எல்லாம் அன்புள்ளவன் ஆவான்; பொன்மயமான சரீரத்தையுடைய இரணியனுடைய சரீரத்தை இருபிளவாகப் பிளந்தவனும், சிறந்த பொன்னாலே கட்டப்பட்ட மதில்கள் சூழ்ந்த திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளி இருக்கின்ற அன்பனுமான இறைவன், தன்னிடத்தில் மெய்யான பத்தியையுடையவர்களுக்குத் தானும் நாளும் மெய்யனாகவே இருப்பான்.

ஈடு :—ஆறும்பாட்டு. [1] தன்னை அடைகின்றவர்களுடைய விரோதிகளைப் போக்கி அவர்களுக்கு மிகவும் அன்பன் ஆம் என்கிறார்.

தன தாள் அடைந்தார்க்கு எல்லாம் அன்பன் ஆகும் - தன் திருவடிகளையே உபாயமாகப் பற்றினார்க்கு, [2]"சரணம் புகுந்தவர்களிடத்தில் அன்புள்ளவர்" என்கிறபடியே, அவர்களுடைய குற்றங்கள் தோற்றாதபடி அன்புள்ளவனாக இருப்பான்; [3]"அவனிடத்தில் (விபீஷணன்) குற்றமானது இருந்தாலும் இருக்கட்டும்" என்பவனே அன்றோ. நன்று; இவர்களுடைய விரோதி செய்வது என்? என்னில், பிரஹ்லாதனுடைய விரோதி பட்டது படும் என்கிறார்: செம்பொன் ஆகத்து அவுணன் உடல் கீண்டவன் - இரணியனாகிற அசுர

---

1. "செம்பொன் ஆகத்து அவுணன் உடல் கீண்டவன் தன மெய்யர்க்கு மெய்யனே" என்றதனைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2. புகல் புகுந்தவர்களிடத்தில் குற்றங்களைக் காணாதவன் என்பதற்குப் பிரமாணம் காட்டுகிறார் 'சரணம்' என்று தொடங்கி.

> விதிதஃ ஸஹி தர்மஜ்ஞஃ ஶரணாகதவத்ஸலஃ
> தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதும் இச்சஸி.

என்பது, ஸ்ரீராமா. சுந். 21 : 20. இது, பிராட்டி இராவணனைப் பார்த்துக் கூறியது.

3. மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சந
> தோஷோயத்யபி தஸ்யஸ்யாத் ஸதாமேதத் அகர்ஹிதம்.

என்பது, ஸ்ரீராமா. யுத் 18 : 3. இது பெருமாள் வானரமுதலிகளைப் பார்த்துக் கூறியது.

னுடைய சரீரத்தை வருத்தம் இல்லாமலே கிழித்தவன். நன் பொன் ஏய்ந்த மதிள் - நல்ல பொன்னாலே செய்யப்பட்ட மதிள். என்றது, விரும்பத்தக்க மதிள் என்றபடி. திருக்கண்ணபுரத்து அன்பன் - 'அடியார்களைப் பாதுகாப்பதற்குப் பாங்கான தேசம்' என்று விரும்பி வசிக்கிற ஊர். நாளும் தன மெய்யர்க்கு மெய்யன் - தன் பக்கல் [1] அநந்யப் பிரயோஜனராய் இருப்பார்க்கு, தானும் அவர்கள் பக்கல் என்றும் ஒக்க அநந்யப் பிரயோஜனனாய் இருக்கும். [2] அன்றிக்கே, தன்பக்கல் சிநேக பாவமுடையாரை "விடமாட்டேன்" என்றிருக்குமவன் என்னுதல். (6)

988.

மெய்யன் ஆகும் விரும்பித் தொழுவார்க்கு எல்லாம்
பொய்யன் ஆகும் புறமே தொழுவார்க்கு எல்லாம்
செய்யில் வாளை உகளும் திருக் கண்ணபுரத்து
ஐயன் ஆகத்து அணைப்பார்கட்கு அணியனே.

பொ - ரை :—தன்னையே புருஷார்த்தமாகக் கொண்டு விரும்பித் தொழுகின்றவர்களுக்கு எல்லாம் மெய்யனாக இருப்பான்; வேறு பிரயோஜனங்களைக் கருதி மேல் எழத் தொழுமவர்களுக்கு எல்லாம் பொய்யனாக இருப்பான்; வயல்களிலே வாளை மீன்கள் விளையாடிக் கொண்டிருக்கின்ற திருக் கண்ணபுரத்திலே எழுந்தருளியிருப்பவனான இறைவன், மனத்திலேவைத்துத் தியானிப்பவர்களுக்கு அருகில் இருப்பவன் ஆவான்.

வி - கு :—மெய்யன், பொய்யன் என்னும் சொற்கள், ஈண்டு, இறைவன் தன் தன்மைகளைக் காட்டுதலையும் காட்டாமையையும் குறித்து நிற்கின்றன.

ஈடு:—ஏழாம் பாட்டு. [3]வேறு பிரயோஜனங்களைக் கருதாதவர்கட்குச் சுலபனாய் வேறு பிரயோஜனத்தைக் கருதுகின்ற

---

1. அநந்யப் பிரயோஜனன் - இறைவனைத் தவிர வேறு ஒரு பயனையும் கருதாதவன்.

2. "மெய்" என்பதற்கு, அநந்யப்பிரயோஜனனாகப் பொருள் அருளிச்செய்தார் மேல்; சிநேகத்தை யுடையவனாகப் பொருள் அருளிச்செய்கிறார் 'அன்றிக்கே' என்று தொடங்கி. என்றது, சிநேகபாவம் ஒழிய மெய் கூடாமையாலே, மெய் என்பது, சிநேகபாவத்தைச் சொல்லுகிறது என்றபடி.

3. முதல் இரண்டு அடிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

வர்கட்கு அதனைக் கொடுத்துத் தான் அகல நிற்பான் என்கிறார்.

விரும்பித் தொழுவார்க்கு எல்லாம் மெய்யன் ஆகும் - வேறு பிரயோஜனங்களைக் கருதாதவர்கள் [1] அவர்கள் யாரேனுமாகிலும் அவர்களுடைய விருப்பத்தை முடிய நடத்தும். புறமே தொழுவார்க்கு எல்லாம் பொய்யன் ஆகும் - புறம்பே பிரயோஜனங்களைப் பெற விரும்பி அடைகின்றவர்கட்கு இவ் உலகத்திலே மேலும் மேலும் ஆசையை உண்டாக்கக் கூடிய அந்தப் பேறுகளை விரும்பிக் கொடுத்தவனாய்த் [2] தன்னைக்கொண்டு அகலுவான். [3]"பாண்டவர்கள் கிருஷ்ணனையே சரணமாக அடைந்தவர்கள், கிருஷ்ணனையே தங்கட்குத் துணையாக உடையவர்கள்" என்கிறபடியே இருப்பார்க்கு மெய்யனாய் இருப்பான்; படைத்துணை வேண்டி வந்த துரியோதனனுக்கு நாராயண கோபாலர்களை அடையக் கொடுத்தானாய், தான் பாண்டவர்களுக்காக நின்று அத் தலையை அழியச்செய்கையாலே பொய்யன் ஆகும். செய்யில் வாளை உகளும் திருக்கண்ணபுரத்து ஐயன் - செய்களிலே வாளையானது உகளித்து வசிக்கிற திருக் கண்ணபுரத்திலே நிற்கிற மேலான பந்து. [4] இதனால், மீன் முதலான பிராணிகளும் களித்து வாழும்படியான இனிமையையுடைய தேசம் என்பதனைத் தெரிவித்தபடி. ஆகத்து அணைப்பார்கட்கு அணியன் - தன்னை மனத்திலே

---

1. "எல்லாம்" என்ற சொல்லைக் கடாக்ஷித்து 'அவர்கள் யாரேனுமாகிலும்' என்கிறார். 'யாரேனுமாகிலும்' என்றது, குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ் இழிந்து எத்தனை நலம்தான் இலாத சண்டாளராகிலும் என்றபடி. முடிய நடத்துதலாவது, பேற்றினை அடையும் வரையில் நடத்துதல்.

2. 'தன்னைக் கொண்டகலுவான்' என்றது, அநுபவ கைங்கரியங்களைக் கொடான் என்றபடி.

3. இப்படி எங்கே கண்டோம்? என்ன, 'பாண்டவர்கள்' என்று தொடங்கி அதற்கு விடை அருளிச்செய்கிறார்.

> க்ருஷ்ணாஸ்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாஸ்ச பாண்டவா:
> க்ருஷ்ண: பராயணம் தேஷாம் ஜ்யோதிஷாமிவ சந்த்ரமா:.

என்பது, பாரதம் துரோணபர்வம், 183 : 24.

4. "செய்யில் வாளை உகளும்" என்ற அடைமொழிக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'இதனால்' என்று தொடங்கி.

வைப்பவர்கட்குக் கையாளாய் இருப்பான்; [1] வேறு பிரயோஜனத்தைக் கருதாதவர்கட்கு "முனிபுங்கவரே! நாங்கள் உம்மை அடைந்தவர்களாய் உமக்கு வேலையாட்களாய் இருக்கிறோம்" என்கிறபடியே இருப்பான். (7)

989.

அணியன் ஆகும் தன தாள் அடைந்தார்க்கு எல்லாம்
பிணியும் சாரா பிறவி கெடுத்து ஆளும்
மணி பொன் ஏய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரம்
பணிமின் நாளும் பரமேட்டி தன் பாதமே.

பொ - ரை :—தன்னுடைய திருவடிகளை அடைந்தவர்களுக்கு எல்லாம் சுலபனாக இருப்பான்; நோய்களும் அடையாவாம்; அதற்குக் காரணமான பிறப்பையும் அழித்து அடிமைகொள்ளுவான்; ஆதலால், மாணிக்கமும் பொன்னும் பொருந்தி இருக்கின்ற மதிள்சூழ்ந்த திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளி இருக்கின்ற இறைவனுடைய திருவடிகளை எப்பொழுதும் வணங்குங்கோள்.

வி - கு :—அணியன்-அருகில் இருப்பவன்; சுலபன். பரமேட்டி - பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவன். (பரமே ஸ்தாநே திஷ்டதீதி - பரமேஷ்டீ.)

ஈடு :—எட்டாம் பாட்டு. [2] அவனை அடையுங்கோள்; உங்களுடைய துக்கத்தையும் துக்கத்திற்குக் காரணமான பிறப்பினையும் போக்கியருளுவான் என்கிறார்.

தன தாள் அடைந்தார்க்கு எல்லாம் அணியன் ஆகும் - தன் திருவடிகளை அடைந்தவர்களை [3] இன்னார் இனியார் என்னாதே எல்லார்க்கும் சுலபனும். [4] இன்று அடைந்தது ஒரு

---

1. மேலே கூறியதனை விவரணம் செய்கிறார் 'வேறு பிரயோஜனத்தை' என்று தொடங்கி.

> இமௌ ஸ்ம முநிஶார்தூல கிங்கரௌ ஸமுபஸ்திதௌ
> ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை ஶாஸநம் கரவாவ கிம்.

என்பது, ஸ்ரீராமா. பால. 31 : 4.

2. "பரமேட்டி தன் பாதம் பணிமின்; பிணியும் சாரா; பிறவி கெடுத்தாளும்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. "எல்லாம்" என்றதன் பொருள், 'இன்னார் இனியார் என்னாதே எல்லார்க்கும்' என்பது.

4. அப்படிச் சுலபனோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இன்று அடைந்தது' என்று தொடங்கி.

குரங்காகிய சுக்கிரீவனைக் குறித்து [1]"சீதையால்தான் எனக்குக் காரியம் என்ன இருக்கிறது?" என்றாரே அன்றோ. பிணியும் சாரா - உங்களுடைய எல்லாத் துன்பங்களும் போம். பிறவி கெடுத்து ஆளும் - அந்தத் துன்பங்கட்குக் காரணமான பிறப்பினைப்போக்கி அடிமை கொள்ளும். மணி பொன் ஏய்ந்த மதிள் சூழ் திருக் கண்ணபுரம் - மணியாலும் பொன்னாலும் செய்த மதிளாலே சூழப்பட்ட திருக் கண்ணபுரத்திலே. திருக் **கண்ணபுரம் பரமேட்டி என்று கூட்டுக.** தன் பாதம் நாளும் பணிமின் - [2] பரமபதத்திலிருக்கும்படியில் ஒன்றும் குறையாதபடிஆயிற்று இங்கு இருப்பது. அவன் திருவடிகளிலே சொரூபத்திற்குத் தகுதியான கைங்கரியத்தைச் செய்யுங்கோள். [3] அங்கு நித்தியசூரிகள் பணிய இருக்குமவன் இங்கே வந்த பின்பு, நீங்களும் அவன் திருவடிகளிலே பணியப் பாருங்கோள் என்பார் '**திருக்கண்ணபுரம் பரமேட்டி பாதம் பணிமின்**' என்கிறார். (8)

990.

பாதம் நாளும் பணியத் தணியும் பிணி
ஏதம் சாரா எனக்கேல் இனி என் குறை?
வேத நாவர் விரும்பும் திருக் கண்ணபுரத்து
ஆதியானை அடைந்தார்க்கு அல்லல் இல்லையே.

பொ - ரை:—அவன் திருவடிகளை வணங்க இதற்குமுன் நாள்தோறும் ஈட்டிய நோய்கள் எல்லாம் நீங்கும்; இனி ஒரு நோயும் வாராது; ஆதலால், இப்படியான பின்னர் எனக்கு என்ன குறை உளது? வேதங்களை ஓதுகின்ற பிராமணர்கள் வாழ்கின்ற திருக்கண்ண

---

1. இதாநீம் மாக்ருதா வீர ஏவம்விதம் அசிந்திதம்
த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம்கார்யம் ஸீதயா மம.
என்பது, ஸ்ரீராமா. யுத். 41: 4. சுக்கிரீவனைப் பார்த்து இராமபிரான் கூறியது.

2. "திருக்கண்ணபுரம் பரமேட்டி" என்று விசேடித்ததற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பரமபதத்தில்' என்று தொடங்கி.

3. திருக்கண்ணபுரத்தில் இருப்பவன் பரமேட்டி என்று பொருள் அருளிச்செய்தார் மேல்; அந்தப் பரமபதநாதன் அன்றோ இங்கு வந்திருக்கிறான் என்று வேறும் ஒரு கருத்து அருளிச்செய்கிறார் 'அங்கு' என்று தொடங்கி.

"நாளும் பிணி தணியும்; ஏதம் சாரா" என்னும் இது,
"தததிகம உத்தர பூர்வாகயோ: அஶ்லேஷ விநாசௌ தத் வ்யபதேசாத்" என்னும் சூத்திரத்தின் பொருள் என்று அருளிச்செய்வர். (சாரீ. மீமாம். அதிகர. 130. சூ. 482.

புரத்தில் எழுந்தருளியிருக்கின்ற மூலகாரணனை எம்பெருமானை அடைந்தவர்களுக்கு ஒரு துன்பமும் இல்லையாம்.

வி - கு:—பாதம் பணிய நாளும் பிணி தணியும்; ஏதம் சாரா; இனி எனக்கு என் குறை என்க. 'எனக்கேல்' என்பதில் ஏல், அசைநிலை.

ஈடு:—ஒன்பதாம் பாட்டு. [1] ஒருவருடைய உபதேசமும் இல்லாமலே நான் முன்னம் அவனை அடைந்து இன்பத்தினை அடைந்தவன் ஆனேன் என்று பிரீதர் ஆகிறார்.

பாதம் பணிய நாளும் பிணி தணியும்-அவன் திருவடிகளை அடையவே, அவனை அடைவதற்கு முன்னே பலகாலமாக ஈட்டிய வினைகள் எல்லாம் (பூர்வாகம்) நசிக்கும். [2] இனியது செய்ய விரோதியான பாபம் போம் என்றபடி. ஏதம் சாரா - புகுதருவான் நின்ற வினைகளும்(உத்தராகம்)அடையமாட்டா. எனக்கு இனி என் குறை-அவன் திருவடிகளிலே தலை சாய்க்க எல்லாத் துக்கங்களும் போவதான பின்பு, எனக்கு ஒரு குறை உண்டோ? வேதநாவர் விரும்பும் திருக் கண்ணபுரத்து ஆதியானை - வேதார்த்த வித்துக்கள் விரும்பி வசிக்கின்ற திருக் கண்ணபுரத்திலே எழுந்தருளியிருக்கின்ற உலக காரணனை. **திருமங்கையாழ்வார் போல்வாரை 'வேத நாவர்' என்கிறது.** விரும்புகையாவது, [4] "கண்ணபுரம் ஒன்று உடையானுக்கு அடியேன் ஒருவர்க்கு உரியேனோ" என்கை. [5] பிரமாணம் வேதமாய், பிரமாணத்தால் அறியப்படும் பொருள் உலக காரணனாய் அன்றோ இருப்பது; "காரணமாயுள்ள பொருள்

---

1. 'எனக்கேல் இனி என் குறை" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார்.

2, அவனை அடைவதற்கு முன் உள்ள பாவங்கள் நசிப்பதற்கு அவனை அடைதல் சாதனமோ? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'இனியது' என்று தொடங்கி. இனியது - போகரூபம்.

இங்கே,

"தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும்" என்ற திருப்பாவை அநுசந்திக்கத் தகும்.

4. பெரிய திருமொழி, 6. 9 : 3.

5. "வேதநாவர், ஆதியானை" என்ற பதச்சேர்த்திக்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பிரமாணம்' என்று தொடங்கி.

6. இங்கே, "ஆதியானை" என்று காரணனாக இருக்கின்ற தன்மையை அருளிச்செய்வான் என்? என்ன, அதற்கு விடை அருளிச்செய்கிறார் 'காரணமாயுள்ள' என்று தொடங்கி.

"காரணந்து த்யேயః" என்பது, சுருதி.

தியானிக்கத் தக்கது" என்கிறபடியே, உலக காரணன் அன்றோ தியானிக்கத் தக்கவன். ஆதியானை அடைந்தார்க்கு அல்லல் இல்லை - [1] தாய் மடியிலே சாய்ந்தார்க்குக் கிலேசம் இல்லை என்னுமிடம் உறுதி. (9)

991.

இல்லை அல்லல் எனக்கேல் இனி என் குறை?
அல்லி மாதர் அமரும் திருமார்பினன்
கல்லில் ஏய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரம்
சொல்ல நாளும் துயர் பாடு சாராவே.

பொ - ரை:—துன்பம் இல்லை; எனக்கு இனி என்ன குறை உளது? திருமகள் எழுந்தருளியிருக்கின்ற திருமார்பினையுடைய இறைவன் எழுந்தருளியிருக்கின்ற, கற்களாலே கட்டப்பட்ட மதிள்கள் சூழ்ந்த திருக்கண்ணபுரம் என்று சொன்ன மாத்திரத்தில், துன்பம் என்பது எப்பொழுதும் நம் பக்கத்தையும் சாரமாட்டாது என்பதாம்.

வி - கு:—அல்லிமாதர் - திருமகள். அல்லி - தாமரை. கல் - கருங்கல். பாடு - பக்கம்.

ஈடு:—பத்தாம் பாட்டு. [2] பிரீதியின் மிகுதியாலே மேல் இரண்டு திருப்பாசுரங்களிலே தமது பேற்றினைச் சொல்லி, பக்தி பிரபத்திகளைச் செய்வதற்குத் தகுதி இல்லாதவர்கள் திருக்கண்ணபுரம் என்ற வார்த்தையினைச் சொல்லவே எல்லாத் துன்பங்களும் போம் என்கிறார்.

அல்லல் இல்லை - எல்லாத் துன்பங்களும் போம். எனக்கு இனி என் குறை-இனி எனக்கு என்ன குறை உண்டு? என்றது, [3] பகவானை அநுபவிப்பதற்கு விரோதியான துன்பங்கள் எல்லாம் போனபின்பு, நான் அநுபவிப்பதற்கு ஒருதேசவிசேடம் தேடிப் போகவேண்டி இருந்ததோ? என்றபடி. அல்லி மாதர் அமரும் திருமார்பினன் - பெரிய பிராட்டியார் நித்தியவாசம் செய்கிற திருமார்பினையுடையவன். [4] அவனைப் பற்றுகிற

1. "ஆதியானை அடைந்தார்க்கு அல்லல் இல்லை" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'தாய் மடியிலே' என்று தொடங்கி.

2. "எனக்கேல் இனி என் குறை, திருக்கண்ணபுரம் சொல்ல நாளும் துயர் பாடு சாரா" என்பதனைத் திருவுள்ளம்பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார்.

3. "இனி" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'பகவானை' என்று தொடங்கி.

4. "அல்லிமாதர் அமரும் திருமார்பினன்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'அவனைப் பற்றுகிற காலத்தில்' என்று தொடங்கி.

காலத்தில்நம்மிடத்துஉண்டான குறைகளை அவன் பாராதபடி. [1] "குற்றம் செய்யாதார் யாவர்?" என்பாரும் அருகே உண்டு என்றபடி.கல்லில் ஏய்ந்த மதிள்சூழ்திருக்கண்ணபுரம் சொல்ல-திண்ணிதான மதிளையுடைய திருக் கண்ணபுரத்தை வாயாலே சொல்ல. நாளும் துயர் பாடு சாரா - பக்தியைச் செய்வதற்குச் சாதனம் இல்லாமல் பிரபத்தியைச் செய்வதற்கு மன உறுதி இல்லாமல் இருக்குமவர்கள் 'திருக்கண்ணபுரம்' என்று வாயாலே சொல்லவே எல்லாத் துக்கங்களும் போம். (10)

992.

பாடு சாரா வினை பற்று அற வேண்டுவீர்!
மாட நீடு குருகூர்ச் சடகோபன் சொல்
பாடலான தமிழ் ஆயிரத்துள் இப்பத்தும்
பாடி ஆடிப் பணிமின் அவன் தாள்களே.

பொ - ரை :—வினையின் சம்பந்தம் அடியோடு ஒழியவேண்டும் என்று விரும்புகின்றவர்களே! மாடங்கள் உயர்ந்திருக்கின்ற திருக்குருகூரிலே அவதரித்த ஸ்ரீ சடகோபராலே அருளிச்செய்யப்பட்ட தமிழ்ப் பாசுரங்களான ஆயிரத்துள் இந்தப் பத்துப் பாசுரங்களைக் கொண்டு பாடி ஆடி அவனுடைய திருவடிகளை வணங்குமின்; வணங்கினுல், வினைகள் உங்கள் பக்கங்களிலும் வந்து சேரமாட்டா என்றபடி.

வி - கு :—வினை பற்று அற வேண்டுவீர், அவன் தாள்கள் பணிமின்; வினை பாடு சாரா என முடிக்க. அன்றிக்கே, வினை பாடு சாராத படி பற்று அற வேண்டுவீர்! அவன் தாள்கள் பணிமின் என்று கோடலுமாம்.

ஈடு :—முடிவில், [2] உங்களுடைய துன்பங்கள் எல்லாம் வாசனையோடு போகவேண்டி இருக்கில், இத் திருவாய்மொழியைப் பிரீதி முன்னுகச் சொல்லிக் கொண்டு அவன் திருவடிகளைப் பற்றுங்கோள் என்கிறுர்.

வினை பாடு சாரா பற்று அற வேண்டுவீர் - வினைகள் உங்கள் பக்கத்திலே வந்து கிட்டாதபடி வாசனையோடு போக

1. பாபாநாம் வா ஶுபாநாம் வா வதார்ஹாணும் ப்லவங்கம
கார்யம் கருணம் ஆர்யேண நகஶ்சித் ந அபராத்யதி.

என்பது, ஸ்ரீராமா. யுத். 116 : 45.

2. "பாடு சாரா வினை பற்று அற வேண்டுவீர்! இப் பத்தும் பாடி ஆடி அவன் தாள்கள் பணிமின்" என்றதனைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச் செய்கிறுர்.

வேண்டி இருந்தீர்கோளாகில். மாடம் நீடு குருகூர்ச் சடகோபன் சொல் - அழியாத மாடங்களை உடைத்தான திருநகரியை யுடைய ஆழ்வார் அருளிச்செய்த. [1] ஆப்த தமருடைய உபதேசம் ஆகையாலே, திருவாய்மொழியில் பிறந்தவற்றில் அர்த்தவாதம் இல்லை. பாடல் ஆன தமிழ் ஆயிரத்துள் இப் பத்தும் - [2] நம்பத் தகாதவர்கள் சொல்லிலும் விடஒண்ணாத இனிமையை யுடைத்தான இப் பத்து. [3] மலர் மணத்தோடே மலருமாறு போலே, இசையோடேகூடிப்பாடின தமிழ். பாடிஆடி அவன் தாள்கள் பணிமின் - பிரீதி முன்னாகப் பாடி இருந்த இடத்தில் இராதே ஆடிப் பிரீதியினாலே தூண்டப்பட்டவர்களாய்க் கொண்டு அவன் திருவடிகளிலே விழுங்கோள். [4] இது அன்றோ நான் உங்களைக் குடிக்கச் சொல்லுகிற வேப்பங்குடி நீர்! தேனே மலரும் திருப்பாதத்தை அன்றோ சேரச் சொல்லுகிறது. (11)

திருவாய்மொழி நூற்றந்தாதி

மால்உமது வாஞ்சைமுற்றும் மன்னும் உடம்பின் முடிவில்
சாலநண்ணிச் செய்வன் எனத் தான்உகந்து—மேலவனைச்
சீரார் கணபுரத்தே சேரும் எனும் சீர்மாறன்
தாரானோ நம் தமக்குத் தாள். (90)

ஒன்பதாம்பத்து ஈட்டின் தமிழாக்கம்
முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.
வடக்குத் திருவீதிப்பிள்ளை மலரடி வாழ்க.
நம்பிள்ளை நற்றாள் வாழ்க.
மாறன் மலரடி வாழ்க.

---

1. இங்கே, "சடகோபன்" என்று தம்மைக் கூறியதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'ஆப்த தமருடைய' என்று தொடங்கி. அர்த்தவாதம் - புனைந்துரை.

2. "பாடலான தமிழ்" என்றதற்கு, பாவம் அருளிச்செய்கிறார் 'நம்பத் தகாதவர்கள்' என்று தொடங்கி. பாடல் - இசை.

3. சொற்களுக்குப் பொருள் அருளிச்செய்கிறார் 'மலர்' என்று தொடங்கி.

4. ஆழ்வாருடைய திருவுள்ளக் கருத்தை அருளிச்செய்கிறார் 'இது வன்றோ' என்று தொடங்கி, அதனை விவரணம் செய்கிறார் 'தேனேமலரும்' என்று தொடங்கி,

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மாறன் மலரடி வாழ்க.

பிற்சேர்க்கை I

—: o :—

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

செய்யுள்	பக்கம்
அடியான் இவன்	125
அடைவதும் அணி	90
அணியனாகும்	317
அந்தரம் நின்று	144
அந்தோ அணுகப்	239
அரணமாவர்	14
அரியாய அம்மானை	116
அருளாதொழிவாய்	236
அவனுடை அருள்	275
அவனே அகல் ஞாலம்	82
அவனை விட்டகன்று	290
அவன் கையதே	139
அழைக்கின்ற அடி	112
அறிகிலேன்	172
அறிந்தனவேதம்	84
அறுக்கும் வினை	223
அன்பனாகும்	314
ஆகம்சேர்	93
ஆதுமில்லை	32
ஆருக்கென்	279
ஆருயிர்பட்டது	184
ஆறுமதயானை	127
இத்தனை வேண்டுவது	135
இல்லை கண்டீர்	21
இல்லையல்லல்	320
இனியிருந்து	264
இன்பம் தலைப்பெய்து	156
இன்றிப்போக	94
இன்னுயிர்ச் சேவல்	131
உகந்தே உன்னை	120
உயிர்க்கது காலன்	151
உருகுமால் நெஞ்சம்	163
உருவாகிய ஆறு	122
உறுவதிது வென்று	114
ஊதுமத் தீங்குழல்	285
எங்கள் கண்முகப்பே	61
எங்கானல்	192
எம் கண்ணன் கள்வம்	178
எம்மிடர்கடிந்து	59
எவைகொல்	228
எழநண்ணி	154
எனக்கொன்று	211
என் கண்ணன்	178
ஒழிவின்றி	219
ஓராயிரமாய்	78
கடியனாய்க் கஞ்சனை	188
கண்டுகொண்டு	124
கண்டே களிக்கின்றது	232
கண்ணனல்லால்	30
கண்ணே உன்னை	109
கருத்தே உன்னை	117
கள்ளவிழும் மலர்	305

செய்யுள்	பக்கம்
காட்கரை ஏத்தும்	180
காய்சினப் பறவை	57
கிடந்த நாள்	48
குடிக்கிடந்து.	43
கூக்குரல் கேட்டும்	141
கூட்டுண்டு	148
கூவுதல் வருதல்	70
கொடியேரிடை	226
கொடுவினைப் படைகள்	67
கொண்ட பெண்டிர்	5
கோவாகிய மாவலி	233
கோளுண்டான்	182
சதுரமென்று	17
சரணமாகும்	311
சீலமெல்லையிலான்	99
சுடர்வளையம்	209
தகவன்றென்று	217
தக்கிலமே கேளீர்கள்	198
தாளதாமரை	97
திருமேனியடிகளுக்கு	201
திருவருள் செய்பவன்	175
துணையும் சார்வும்	8
தூதுரைத்தல்	206
தெளிவிசும்பு	204
தேவர் முனிவர்க்கு	237
தொண்டர் நும்தம்	307
தொழுது மாமலர்	96
நன்கெண்ணி	146
நாளேல் அறியேன்	229
நிணதொறும்	167
நீர்மையால்	170
நுமரோடும் பிரியாதே	195
பண்டை நாளாலே	38
பண்புடை வண்டொடு	152
பவளம்போல் கனி	54
பாடுசாராவினை	321
பாதம் நாளும்	318
பாவியேன் மனத்து	269
புகலிடம் அறிகிலம்	258
புதுமணம் முகந்து	282
புளிங்குடிக் கிடந்து	51
பூந்துழாய் முடியார்க்கு	213
பொருள்கையுண்டாய்	10
மணாளன் மலர்மங்கை	230
மருந்தே நங்கள்	86
மல்லிகை கமழ்	249
மற்றொன்றில்லை	23
மனமே உன்னை	88
மாலை நண்ணி	303
மாலையும் வந்தது	288
மானை நோக்கி	310
மெய்யமரும்	315
மையார் கருங்கண்ணி	103
வண்ணமாமணி	241
வாரிக்கொண்டு	185
வாழ்தல் கண்டீர்	26
வீற்றிடங்கொண்டு	64
யாதுமில்லை	28
யாமுடை நெஞ்சமும்	273

செய்யுள் அகராதி முற்றிற்று.

ஆழ்வார் எம்பெருமானார் சீயர் திருவடிகளே அரண்.

—:o:—

ஸ்ரீ:

பிற்சேர்க்கை II

—:o:—

வியாக்கியானத்தில் வந்துள்ள

ஐதிஹ்யங்கள்

திருக்கண்ணமங்கையாண்டான், திருக்கண்ணமங்கை என்னும் திவ்விய தேசத்திலே ஒரு திருமகிழ்அடியிலே இருந்து, சருகைத் திருவலகு இடாநிற்க, கூட வாசித்து நாஸ்திகனாய் இருப்பான் ஒருவன், 'பகவான் உபாயம், நாம் வேறு பயன்களைக் கருதாதவர்கள், இப்போது செய்யும் இப்பணிக்குப் பயன் என்?' என்ன, திருவலகு இட்ட இடத்தையும் இடாத இடத்தையும் காட்டி, 'இவ்விடமும் அவ்விடமும் இருந்தபடி கண்டாய்க்கு ஒருபயன் இல்லை என்று தோற்றி இருந்ததோ?' என்றான். பக். 41.

பிள்ளைதேவப்பெருமாள்அரையர், 'உன் தாமரைக் கண்களால் நோக்காய்' என்று பலகாலும் சொல்ல, ஆழ்வார் திருவரங்கப்பெருமாள்அரையர் எழுந்திருந்து 'பிள்ளாய்! நீ இங்ஙனே எம்பெருமான் திருவுள்ளம் புண்படும்படி பலகாலும் நிர்ப்பந்திக்கிறது என்? அழகிய மிடற்றைத் தந்தாராகில், நல்ல பாட்டைத் தந்தாராகில் என் செய்யாதாராக நீர் இங்ஙனே கிடந்து படுகிறது?' என்று அருளிச்செய்தாராம். பக். 42.

பட்டர், திருநாராயணபுரத்தில் வெறுப்பிலே, 'தேவர் சுவாதந்திரியம் எல்லாம் காட்டினாலும் பின்னையும் பண்ணின நம்பிக்கையில் குலைத்தல் இன்றிக்கே இருக்கும்படி எலும்பு உரமுடைய எம்பெருமானார் போல்வார் பக்கல் செய்யுமதனை, எலி எலும்பனான அடியேன் பக்கலிலும் செய்வதோ' என்றாராம். பக். 52.

பிள்ளைஅழகியமணவாளஅரையரை, பெருமாள் ஒருநாள் அருளப்பாடிட்டு, 'நாம் இங்ஙனே நடக்கிறோம்; அதற்கு ஈடாக நீ ஆடிக்காண்!' என்ன, 'தம்பிரானே! அந்நடைக்கு ஈடாக என்னால் ஆடப்போமோ? "கானகம்படி உலாவி

உலாவி" என்கிறபடியே தேவருடைய குழல் ஓசையைக் கேட்டவாறே, பாடல் தவிர்ந்தார்கள்! தேவர் இயல்பாகவே நடக்கிற நடைக்குப் பயிற்சியின் பலத்தால் உண்டான தங்கள் ஆடல் தவிர்ந்தார்கள்; குரக்குக்கைகொடு கூழ் துழாவி அடியேன் தேவர் திருமுன்னே ஆடவல்லேனோ? என்றாராம். பக். 54.

நூறு பிராயம் புகுவீர், பழம் உண்பீர், பால் உண்பீர், என்பன போன்று சொல்லுகை. வங்கிப்புரத்து நம்பி 'விஜயஸ்வ' என்ன, ஆண்டான் சொன்ன வார்த்தையை நினைவு கூர்வது. பக். 62.

புத்திரன் இறக்க அதனாலே வருந்திய கோயில் ஆய்த்தான், பட்டர் திருவடிகளிலே வந்து தன் சோகமெல்லாம் தோற்ற விழுந்து கிடக்க, அவர் அருளிச்செய்த வார்த்தையை நினைப்பது. பக். 80.

ஒரு திருமுளைத் திருநாளில் இப்பாட்டை அருளிச்செய்து, முன்னாள் "கையார் சக்கரத்து"க்குப் புறப்பட்டருளினபடி திருவுள்ளத்தில் கிடக்க, 'புனம் மேவிய பூந் தண் துழாய் அலங்கல் இனம் ஏதும் இலான்' ஆகையாவது, நேற்றுப் புறப்பட்டருளினபடி அன்றோ' என்று அருளிச்செய்தார். பக். 89.

பிள்ளைஅகளங்க பிரமராயர், பட்டரைச் சமாதானம் செய்ய வேண்டும் என்று, பட்டர் திருவுள்ளத்துக்கு உகந்த 'இருகை மதவாரணம்' என்கிறவனைப் பட்டர் பக்கல் வரவிட, அவனும் வந்து சில வார்த்தைகளை விண்ணப்பம் செய்து, திருவுள்ளமும் மகிழ்ச்சியையுடையதாய் இருக்கிற அளவிலே 'இவனுடைய வைஷ்ணவத்வம் இருக்கும்படி திருவுள்ளம் பற்றி இருக்கை உண்டே' என்றாகை, 'சொல்ல வேண்டுமோ, கர்ப்பதாசர்கள் அன்றோ' என்றது தொடக்கமாக, இப் பாசுரத்தை அருளிச்செய்தார் பட்டர். பக். 126.

கடலைத்தறைகாண்பாரைப்போலே,"இருத்தும் வியந்து" என்ற திருவாய்மொழியின் அநுபவத்தை இதிலே கொண்டு வந்து சேர்ப்பதே நம் முதலிகள்! என்று ஈடுபட்டு அருளிச் செய்வர் நஞ்சீயர். பக். 161.

எம்பெருமானார் திருவடி தொழ எழுந்தருளாநிற்க, 'திருநாவாய் எத்தனை இடம் போரும்' என்று எதிரே வருகிறார் சிலரைக் கேட்டருள, 'குறுக்கும்' என்றார்களாக, அதனைக்

கேட்டு 'இத் திசைச்சொல்லாலே அருளிச்செய்வதே ஆழ்வார்!' என்று மிகவும் ஈடுபட்டருளினர். பக். 225.

ஒரு நாள், நம்பிதிருவரங்க நாராயணதாசர் என்பார் ஒருவர் என்பக்கலிலே திருவாய்மொழி கேட்டு, பெற்றிபக்கலிலே செல்ல, பெற்றி 'இன்று பிள்ளைபாடு விநோதம் என்?' என்று கேட்க, 'அறுக்கும் வினை என்ற திருவாய்மொழியைச் சாற்றினேம்' என்று விடை பகர, பெற்றி 'நாளை மல்லிகை கமழ் தென்றலும் மாலைப் பூசலும் என்னுய்' என்று பணித்தாராம். பக். 243.

ஸ்ரீ புருஷோத்தமமுடையானுக்கு அரசபுத்திரன் சாத்தின செண்பகப் பூ வார்த்தையை நினைப்பது. பக். 306.

ஸ்ரீ:

பிற்சேர்க்கை III

பெரியோர்கள் உரைத்த உரைநயங்கள்

உள்ள இடங்கள் (நிர்வாஹங்கள்)

1. ஆப்பான் திருவழுந்தூர் அரையர் :—பக். 2.
2. ஆய்த்தான் :—பக். 111.
3. ஆளவந்தார் :—பக். 113, 156, 161, 223, 244.
4. எம்பார் :—பக். 169, 286.
5. எம்பெருமானுர் :—பக். 113, 156, 185, 244.
6. சிற்ருள் கொண்டார் :—பக் 205.
7. நஞ்சீயர் :—பக். 185.
8. நடுவில் திருவீதிப் பிள்ளை பட்டர் :—பக். 75.
9. பட்டர் :—பக். 27, 65, 156, 180.
10. பிள்ளான் :—பக். 141, 237.
11. பிள்ளை திருநறையூர் அரையர் :—பக். 12.
12. வேறு புலவர்கள் :—பக். 96, 179.

ஸ்ரீ

பிற்சேர்க்கை IV

வியாக்கியானத்தில் வந்துள்ள உவமைகள்

நீரிலேபுக்கு அழுந்துவாரைப்போலே, பக். 4.

வட்டிக்கு வட்டி ஏறின கடன்போன்று, பக். 4.

குன்றிச்சூடு என்று நெருப்பிலே கைவைக்குமாறு போலே, பக். 13.

உயிர்க்கழுவிலே இருக்கிறவனுக்குத் தண்ணீர் வேட்கையும் பிறந்து, தண்ணீரும் குடித்து, தண்ணீர் வேட்கையும் தணிந்தால் பிறக்கும் இன்பம்போலே, பக். 20.

ஆடுகிற பாம்பின் நிழலிலே ஒதுங்கி, அது அள்ளிக் கொள்ளும் என்று அறியாமல் வெயிலைத் தப்பப்பெற்றோம் என்று மகிழ்ந்திருப்பாரைப்போலே, பக். 20.

சில பூண்டுகள் உண்டாய், தோன்றின இடம் தன்னிலே நின்று தீய்ந்து போமாறுபோலே, பக். 22.

கரும்பு தின்னக் கூலி கொடுப்பாரைப்போலே, பக். 23.

காதினைப் பெருக்கப்புக்குப் பண்டுள்ள நிலையினையும் கெடுத்துக் கூதை ஆக்கினாற்போலே, பக். 29.

பொய்கையைக் கண்செறி இட்ட தாமரைபோலே, பக். 50.

கடல் சலித்தாற்போலே, பக். 55.

இனிய காளமேகம் படிந்தாற்போலே, பக். 58.

இருபத்தைந்து வயதினை யுடையவர்களான முக்தர்களைப் போன்று, பக். 66.

நீரிலே நெருப்பு எழுந்தாற் போன்று, பக். 67.

கரைகட்டாக் காவிரி போன்று, பக். 80.

பெருக்காற்றில் இழிவார் ஒருதெப்பம்தேடி இழிவாரைப் போலே, பக். 80.

கிண்ணகத்தில் இழிவாரைப் போலே, பக். 87.

ஜன்னிசுரம் பிடித்தவர்களைப் போன்று, பக். 87.

பிராட்டி திருவயோத்தியையை நினைத்தாற் போலே, பக். 94.

தமப்பன் செல்வம் மகனுக்குத் தாயபாகமாக அடைய வேண்டியது போன்று, பக். 100.

நாய், தன் வாலாலே, தன் தலைவனுக்குத் தான் விரும்பிய பொருளில் ருசியைத் தெரிவிப்பது போலே, பக். 113.

கமர்பிளந்த இடம் எங்கும் நீர் பாய்ச்சுமாறு போலே, பக். 122.

பாரதம் இராமாயணம் முதலியவைகளில் உள்ள காண்டம் பர்வம் முதலிய பேதம்போலே, பக். 128.

கொலைஞரைச் சொல்லுமாறு போலே, பக். 134.

மஹாராஜரும் வாலியும் பொராநிற்க நடுவே ஒளி அம்பாகப் பெருமாள் விட்டாற்போலே, பக். 136.

நெருப்பை உருக்கிச் செவி வழியே வார்த்தாற்போலே, பக். 136.

அடைக்கலம் என்ற வாயினை அம்பாலே நிறைப்பாரைப் போலே, பக். 137.

அடைமதிள் படுத்துவார் சுற்றிலே விட்டுக்கொண்டிருக்குமாறு போலே, பக். 140.

பெருமாளும் சேனைகளும் இலங்கையை அழிக்கைக்குச் சூழப் போந்தாற் போலே, பக். 140.

வல்லடிக்காரருக்கு விளக்கு ஏற்றிக் காட்டுமாறு போலே, பக். 141.

ஆலமரத்தில் பேய் உண்டு என்னும் பிரசித்தி போலே, பக். 142.

பிடித்துவிட்ட கொம்பு போலே, பக். 143.

ஒரே மகனையுடையவனைப் போலே, பக். 147.

கௌஸ்துபம் திருமேனிக்கு ஒளியை உண்டாக்குமாறு போலே, பக். 150.

புண்ணிலே வேலைக்கொடு குத்தினாற்போலே, பக். 153.

பொய்கையிலே தாமரை மலர்ந்தாற்போலே, பக். 153.

கடலைக் குளப்படியிலே மடுத்தாற்போலே, பக். 154.

முதலிகள் திரள் திரளாக இருந்து பெருமாளையும் பிராட்டியையும் சேர்ப்பதற்கு விரகு பார்த்தாற்போலே, பக். 155.

தாம்தாம் முடிய நினைப்பார் நாடு வாழ்க என்பாரைப் போலே, பக். 156.

பிராட்டியின் நினைவிற்கு விஷயமானாற் போலே, பக். 159.

கடலைத் தறை காண்பாரைப் போலே, பக். 161.

படுகுலை அடித்தவனைத் தப்ப ஓர் அறவன் கீழே ஒதுங்க நினைப்பாரைப் போலே, பக். 162.

இன்ன ஆகரத்தின் பொன் என்று விலை பெறுமாறு போலே, பக். 163.

நீந்தப் புக்கவனுக்கு வாய்கரையிலே தெப்பம் ஒழுகுமாறு போலே, பக். 164.

குறைவாளர் நிறைவாளரைப் பற்றிப் பின்தொடருமாறு போலே, பக். 166.

ஓர் ஊரும் வடிவும் இல்லாதாரைப் போலே, பக். 166.

பெருக்காற்றின் கரை இடிந்து பின் நீராய்க் கரைந்து போமாறுபோலே, பக். 168.

எல்லாவற்றுக்கும் குளிர்த்தியைப் பண்ணக்கடவதான பனி, தாமரை ஒன்றையும் கருகப் பண்ணுமாறு போலே, பக். 168.

கடலை முழுக்கப் பருகின காளமேகம் போலே, பக். 171.

எல்லாவற்றையும் கொடுத்து அடிமைகொள்வாரைப் போலே, பக். 176.

மயிர்கழுவிப் பூச்சூட இருப்பாரைப்போலே, பக். 195.

கைவிளக்கினைக்கொண்டு திரிவாரைப்போலே, பக். 205.

தன் நிலத்தில் காயாவின் நிறம்போலே, பக். 212.

எல்லா அடிமைகளையும் செய்ய இளையபெருமாள் நேர் பட்டாற்போலே, பக். 227.

வேறுதேசத்தில் சென்றிருந்த குழந்தை ஊர் அணித்தானவாறே தாய்மாரைப் பலகால் நினைக்குமாறு போன்று, பக். 230.

தனக்கு என்ன ஒரு குடி இருப்பு இல்லாதான் ஒருவன் குடி இருப்புப் பெற்றாற்போலே, பக். 238.

துயர் உற்ற பிள்ளை தாய் தந்தையர்கள் பெயரைச் சொல்லிக் கூப்பிடுமாறு போலே, பக். 240.

ஆண்புலியான ஸ்ரீவீடுமர் அருச்சுனன் கையில் அம்புகளாலே உளைய ஏவுண்டு கிடந்து துடித்தாற்போலே, பக். 247.

பிராஹ்மணர்க்குச் சந்தியாவந்தனம் போலே, பக். 247.

அரக்கிகள் ஒருசேர மேல்விழுந்து, சில நலிவுகளைச் செய்ய நினைத்தாற்போலே, பக். 249.

இராப்படை ஏறுவாரைப் போலே, பக். 250.

பஞ்சகாலத்தில் குழந்தைகள் சோறு சோறு என்னுமாறு போலே, பக். 255.

பகதத்தன் விட்ட வேலை அருச்சுனனைத் தள்ளித் தன் மார்விலே ஏற்றாற்போலே, பக். 256.

ஆறு இழியுமவன் தெப்பம் முன்னாக இழியுமாறுபோலே பக். 257.

புலிபுலி என்பது போன்று, பக். 260.

வன்நிலத்தில் மழை பெய்தால் பதமாமாறுபோலே பக். 265.

அருங்குலைக்கீழ் விளைநிலம் போலே, பக். 265.

வேனிற் பருவத்திலே மடுவிலே முழுகிக் கிடப்பாரைப் பாலே, பக். 266.

சுக முனிவருக்குத் தந்தையும் என்னுமாறு போலே, பக். 270.

மாம்பழ உண்ணி என்னுமாறுபோலே, பக். 275.

விடாய்த்தவனுக்கு நெருப்புக் கூட்டங்களைக் கொண்டு விடாய் நீக்கினாற்போலே, பக். 276.

வழியில் போகாநிற்க வழிதெரியாமல் மயங்கினால் 'கையிற் பொருளைக் கொண்டாகிலும் வழிகாட்ட வல்லடிக்காரரையாகிலும் கிடையாதோ?' என்னுமாறு போன்று, பக். 277.

வடுகர்க்குத் தமிழர் வார்த்தை சொல்லுமாறுபோலே, பக். 278.

மீனுக்குத் தண்ணீர் வார்த்தாற் போன்று, பக். 278.

ஸ்ரீவீடுமரைக்கொண்டு நாட்டுக்கு வெளிச்சிறப்பைச் செய்து கொடுத்தாற்போலே, பக். 298.

"கள்வன்கொல்" என்ற திருவாய்மொழியிலே பிராட்டியை அத்தவாளத்தலையை இட்டு மறைத்துக்கொடு போனாற்போலே, பக். 303.

பருவம் அல்லாத காலங்களில் கடல் தீண்டலாகாது என்னுமாறுபோலே, பக். 307.

குருடர்க்கு வைத்த சாலையில் விழித்திருப்பார்க்குப் பயன் இல்லாதது போன்று, பக். 309.